
# ஜீவனானந்தம்



இராமகிருஷ்ண குருகுல பழைய மாணவர் மன்றம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவனானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவனானந்தம்

## ஜீவ சேவையில் ஆனந்தித்த ஜீவனின் சிறப்புமலர்

இராமகிருஷ்ண குருகுலப் பழைய மாணவர் மன்றம்

மட்டக்களப்பு

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவனானந்தம்: ஜீவ சேவையில் ஆனந்தித்த ஜீவனின் சிறப்புமலர்

பதிப்புரிமை © 2012


வெளியீடு: இராமகிருஷ்ண குருகுலப் பழைய மாணவர் மன்றம், மட்டக்களப்பு
வெளியீட்டுத் திகதி: 5.8.2012
அச்சு: குமரன் அச்சகம், 39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6
அன்பளிப்பு : 500/=
வடிவமைப்பு : திரு. த. விவானந்தராசா

Jivananandham


© 2012

Published by Ramakrishna Kurukula Past Pupils' Association, Batticaloa
Released on : 05.08.2012
Printed by Kumaran Press (Pvt) Ltd., 39, 36th Lane, Colombo -6, Tel. 011 2364550
Offering Rs. 500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய ஸர்வதர்ம ஸ்வரூபிணே |
அவதார வரிஸ்டாய ராமகிருஷ்ணாய தே நம: ||






நம: ஸ்ரீ யதிராஜாய
விவேகாநந்த ஸூரயே |
ஸத் சித் சுக ஸ்வரூபாய ஸ்வாமிநே
தாப ஹாரிணே ||

ஜனனீம் சாரதாம் தேவீம்
ராமகிருஷ்ணம் ஜகத்குரும் |
பாதபத்மே தயோ: ச்ரித்வா
ப்ரணமாமி முஹுர்முஹு: ||

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தர்



நீ பணித்த செய்கையினைச் செய்வேன்
நாளும் நின்னுரையே என்னுரையாய் உய்வேன்
நீ நடத்தும் பாதையிலே நடப்பேன்
என்றும் நின்னருளால் எத்துயரும் கடப்பேன்
நானென ஒன்றில்லையெனக் கொண்டேன்
எங்கும் நானல்ல நீ நானல்ல நீ கண்டேன்
ஆன இன்பமாக் கடலே தாயே
ஞான அன்புருவே என்முன் வருவாயே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருர் பிரம்மா குருர் விஷ்னு குருர் தேவோ மஹேஸ்வர:
குருர் சாக்ஷத் பரப்ரம்ஹ தஸ்மை ஸ்ரீ குரவே நம:



சுவாமி விரஜானந்தர்
சுவாமி ஜீவனாநந்தரின் குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## ஆசிகளும், முகவுரையும்


1. சுவாமி சர்வரூபானந்தா 3
2. பேரருட்திரு.யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை 4
3. சுவாமி கபாலீசானந்தா 5
4. சுவாமி ஆத்மகனானந்தா 6
5. சுவாமி ஞானமயானந்தா 8
6. க.கணேசு 10
7. நூல் முகவுரை 11


## ஆய்வுகளும் அனுபவப் பகிர்வுகளும்


1. கிழக்கின் சமூக அமைப்பும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனும் 17
   **வெல்லவூர்க் கோபால்**
2. ஆத்மஞானி சுவாமி ஜீவனாநந்தர் 25
   **இரா.நாகலிங்கம் (அன்புமணி)**
3. சுவாமி ஜீவனாநந்தர் ஓர் கர்ம வீரர் 32
   **பொறியியலாளன் கு.குணநாயகம்**
4. Swami Jivanananda Ji the Man of Vedantic Principles 39
   **Dr.T.Varagunam**
5. தியாகச்சுடர் 42
   **செல்வி. வ.கணபதிப்பிள்ளை**
6. சுவாமி ஜீவனாநந்தரின் விந்தை தரும் ஆத்மீக விகசிப்பு 47
   **செல்வி.க.தங்கேஸ்வரி**
7. My life and time with Srimat Swami Jivananandaji Maharaj. 54
   **Mr.C. Pathmanathan**
8. ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் துறவு வாழ்வில் சுவாமி நடராஜானந்தருக்குப்பின் சுவாமி ஜீவனாநந்தர் 57
   **தேசகீர்த்தி மாசிலாமணி திருநாவுக்கரசு**
9. ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தர் 59
   **பேராசிரியர் மா. செல்வராஜா**
10. நினைவில் மிளிரும் சுவாமிஜீ 68
   **செல்வி.வ. இளையதம்பி,**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இல்லமும் ஸ்தாபகரும் 70
திருமதி.அருள்ஞானேஸ்வரி-சண்முகராஜா

12. திருக்குறளுக்கு இலக்கணமாக திகழ்ந்த திருத்தகு ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாஜீ 73
இ.பாக்கியராஜன்.

13. சுவாமி ஜீவனாநந்தாவைப் பற்றியஒருநினைவத் தூறல் 76
காசுபதி நடராஜா

14. கர்மயோகி சுவாமி ஜீவனாநந்தர்: சில மனப்பதிவுகள் 81
கந்தப்போடி விநாயகமூர்த்தி

15. Tribute - Swami JivananandaJi of the Ramakrishna Mission, Batticaloa 90
**Bradman Weerakoon**

16. சுவாமி ஜீவனாநந்தரும் நானும் 92
'ஆசிரிய சிரோமணி' த.செல்வநாயகம்

17. நீங்காத நினைவாக நெஞ்சத்தில் பதிந்த ஜீவகாருண்யர் ஜிவனானந்த மகராஜ் அவர்கள் 95
அல்ஹாஜ் M.M.மஹ்றூப் கரீம் -M.A.JP

18. அன்பு நிறைந்த காலம் அது.... 98
பொ.சீனித்தம்பி (Brother)

19. கர்மயோகி சுவாமி ஜீவனாநந்தாஜி மகராஜ் 102
பேராசிரியர் கு.தெட்சணாமூர்த்தி

20. தமக்கென முயலா தனிப்பெரும் துறவி 105
பெ.சு.மணி

21. தூயதுறவி 108
வே.கணபதிப்பிள்ளை

22. 'தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று' 111
திரு.எஸ்.தில்லைநாதன்

23. உள்ளம் கவர்ந்தஉத்தமர் சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் 116
திரு.க.ஞானரெத்தினம்

24. சுவாமி ஜீவனாநந்தரின் வாழும் சிந்தனைகள் 119
சிவானந்தம் சிறீதரன்

25. ஜீவகாருண்யம் மிகுந்தசுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் 127
ஆலாலசுந்தரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. சுவாமி ஜீவனாநந்தர் அவர்களின் சமூகப்பணி 131
**எஸ்.எதிர்மன்னசிங்கம்**

27. ஜீவசேவையே சிவபூஜையாக் கொண்ட ஜீவனாநந்தஜீ மகராஜ் 133
**க.குருநாதர்**

28. மண்டூர் ஸ்ரீராமகிருஷ்ண மன்றமும் சுவாமி ஜீவனாநந்தஜீயும் 135
**கு.ஜதிஸ்குமார்**

29. அன்பால் அறிவூட்டிய ஆத்மஞானி 138
**திருமதி.யசோதை துஸ்யந்தராசா**

30. என் நினைவில் சிலதுளிகள் 140
**திருமதி.திலகவதி சின்னத்தம்பி**

31. மறைந்தும் மறையாத மகாபுருஷர் 143
**லயன்.க.பாஸ்கரன்**

32. தன்னலமற்ற சேவையால் உயர்ந்த சுவாமி ஜீவனாநந்தர் 145
**கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை**

33. தந்தையுடன் வாழ்ந்தேன் 147
**தங்கவடிவேல்**

34. நான் அறிந்த சுவாமிகள் 150
**க.நமசிவாயம்**

35. ஜீவனாநந்தாஜீ கல்லடிஉப்போடையின் கலங்கரை விளக்கம் 153
**திருமதி.திலகவதி ஹரிதாஸ்**

36. 'அன்பே ஆளுமையாக' 156
**சிவானந்தராஜா**

37. சிவானந்தாவித்தியாலயமும் ஜீவனாநந்தாஜீ மகாராஜும். 159
**திரு.தெ.ரவீந்திரமூர்த்தி**

38. எனக்கு ஓர் தந்தை 162
**அசிறி இந்துனில் அற்புதாநந்தன்**

39. கடமையே கண்ணான கர்மயோகி சுவாமிஜீ 164
**மாஸ்டர் சிவலிங்கம்**

40. ஞானஒளி ஜீவ ஆனந்தம் 166
**திருமதி.எம்.சீவரெட்ணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. ஞானம் பெற்றஎனதுவிளையாட்டுத் தோழன் சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் 167
**நாகமணிவைத்தியன் கணபதிப்பிள்ளை**

42. சுவாமி ஜீவனாநந்தர் காட்டிய வழி 169
**செல்வி. விஸ்வலிங்கம் மலர்விழி**

43. தாயுள்ளம் கொண்டசுவாமிஜீ 171
**தருமரெத்தினம்**

44. மனம் நிறை ஆசி தந்த மாண்பாளர் 175
**திருமதி.அ.நல்லம்மா**

45. ஸ்ரீ விக்கினேசுவரர் திருத்தொண்டர் சபையில் சுவாமிஜீ 177
**திரு.எம். கணேசராஜா**

46. 'துறவும் தூய்மையும் தாயினும் சாலப் பரிந்து.........' 179
**க.மதிவண்ணன்**

47. 'சேவையின் சிகரம்' சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் 185
**பொ.கந்தையா**

48. சுவாமி ஜீவனாநந்தரின் ஜீவகாருணியப் பணியில் எமது பாடசாலை 187
**திருமதி.நே.துரைராசசிங்கம்**

49. என் அனுபவத்தில் சுவாமிகளின் சேவையின் ஆழம் 189
**செல்வி.ந.பரஞ்சோதி**

50. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர் 191
**த.செந்தூரன்**

51. சுவாமிஜீயுடன் சிலகாலம் 193
**திருமதி.சந்திரமதி-தயாகரன்**

52. சுவாமி ஜீவனாநந்தாஜீ ஓர் தெய்வீகப் பிறவி 195
**செல்வநாயகி**

53. முப்பது வருடகால தெய்வீகப் பணியில் சுவாமி ஜீவனாநந்த மகராஜ் 196
**அ.கனகசூரியம்**

54. தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே 199
**சோ. சிவலிங்கம்**

55. நான் கண்ட சுவாமிஜீ 203
**வே.யோகிதாஸ் (J.P)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. 'கர்மமே கருணையாய்' 205
**லயன், தேசபந்து, கலாநிதி.வை.வீரசிங்கம்**

57. குருதேவருக்காக வாழவேணும் என வாழ்ந்த சுவாமிகள் 207
**சுவாமி நீலமாதவானந்தஜி**

58. 'வாழ்வே வழிகாட்டலாய்' 213
**திருமதி.தவதர்ஷினி-சுரேஷ்குமார்**

59. 'ஜீவ நதி' 216
**தொகுப்பு: இ. விஜயகுமார்**

60. அப்பாவும் மகனும் 222
**எஸ். ஏ. ஐ. மத்தியு**

61. என்றும் நான் மறவேன் 227
**திருமதி.தமயந்தி-தவராஜா**

62. சேவையால் உயர்ந்த சிகரம் 229
**மண்டூர் கவிஞர் மு.சோமசுந்தரம்பிள்ளை**

63. தங்கமனச் செம்மல் 230
**கவிஞர் கா. சிவலிங்கம்**


## நேர்காணல்களும் நினைவுத் தூறல்களும்


1. காரைதீவு ஸ்ரீ சாரதா பெண்கள் இல்லப் பொறுப்பாளர் பொன்னையா சிவயோகன் அவர்களுடன் ஒரு நேர்காணல் 233

2. ஓய்வுபெற்றமருத்துவ ஆய்வுகூடப் பரிசோதகர் திரு.இளையதம்பி அரியநாயகம் அவர்களுடனான நேர்காணல் 240

3. தொண்டர். மா. இராஜகோபால் அவர்களுடனான நேர்காணல் 245

4. தொண்டர். சா. செல்வநாயம் அவர்களுடனான நேர்காணல் 248

5. ஓவியச்சிற்பக்கலை நிபுணர் திரு.காசுபதி- கிருஷ்ணபிள்ளை அவர்களுடன் நேர்காணல் 252

6. 'வரம்பை உயர்த்தி வரம் பெற்றேன்' இராமகிருஷ்ண குருகுலப் பழைய மாணவர் நடேசன் அவர்களுடனான நேர்காணல் 255

7. வைத்தியநிபுணர் தெட்சணாமூர்த்தி சுந்தரேசன் அவர்களுடனான நேர்காணல் 261

8. எல்லாம் எனக்கு ஜீவனாநந்தா சுவாமிகளே பொ.செல்வராஜாவுடனான நேர்காணல் 266




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. விபரிக்கமுடியாத உறவு சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் 271
வைத்தியதிலகம் Dr. விவேகானந்தராஜா அவர்களின் மனப்பதிவிலிருந்து

10. கதிர்காமத்தின் கதை 273
திரு. க. பாக்கியராஜாவின் பகிர்விலிருந்து

11. அன்பும் ஆதரவும் அவர் அடையாளம்.செல்வராசா-நடேசமூர்த்தியினுடனான நேர்காணல். 279

## நிழற்படங்களும் நினைவுச் சின்னங்களும் 281

## மாணவரில்லத்து மேலாளர்களும் மன்றத்து நிர்வாகமும்

1. The Swamis-in-charge of the Ashrama and the Managers of the Students' Home, Batticaloa. 323
2. இராமகிருஷ்ண குருகுல பழைய மாணவர் மன்றம், மட்டக்களப்பு. 325
3. மலர்க்குழு 326
4. நன்றிப்பூக்கள் காணிக்கை 327
5. மாணவரில்லப் பாடல் 329



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிகளும், முகவுரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி சர்வரூபானந்தா

*தலைவர், இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு*

'வெள்ளத்தனையது மலர் நீட்டம்-மாந்தர்தம், உள்ளத் தனையது உயர்வு', என்பது வள்ளுவர் வாய் மொழி. உலகில் எத்தனை நாட்கள் ஒருவர் வாழ்ந்தார் என்பதை விட அவர் எப்படி வாழ்ந்தார் என்பதில் தான் அவருடைய பெருமை அமைந்துள்ளது. அந்த வாய் மொழிக்கு ஏற்ப உள்ளத்தால் உயர்ந்து, நிறைவான வாழ்க்கை வாழ்ந்தவர் தவத்திரு சுவாமி ஜீவனாநந்த மஹராஜ் அவர்கள். அவர் வாழ்ந்த உயர்ந்த ஆன்மீக வாழ்க்கையானது, இராம கிருஷ்ண சங்கத்தின் இரு பெரும் கொள்கைகளான துறவும், தொண்டும் என்பதிற்கு ஏற்பவும், இலக்கணமாகவும் அமைந்திருந்தது. மேலும் அவரின் தூய்மையாலும், எளிமை யாலும், அன்பாலும் அனைவரின் அன்பையும் மரியாதையையும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தார்.

மனிதரின் வாழ்க்கையானது, அவரின் சொற்களால் எடைபோடப்படுவதில்லை அது அவரின் வாழ்கையின் மூலமாகவும், செயல்களின் மூலமாகவும்தான் எடைபோடப் படுகிறது. அந்தவகையில் தவத்திரு சுவாமி ஜீவனாநந்த மஹராஜ் அவர்கள் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற நாவுக்கரசர் கூற்றுக்கு ஏற்ப, இராமகிருஷ்ண சங்கத்திற்கும், குறிப்பாக இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்லங்களுக்கும், சமூகத்திற்கும் ஆற்றிய பணிகள் அளவிடற்பாலன என்பது அனைவரும் அறிந்ததாகும். அவரின் நினைவாக வெளியிடப்படும் இந்த மலரும், இதில் உள்ள கட்டுரைகளும் அதற்கு மேலும் ஒரு சான்றாகவும். மெருகூட்டுவதாகவும் அமைந்துள்ளன.

நல்ல விதைகளை தேடிப் பெறுகிறோம். அந்த விதைகளை சரியான முறையில் பாதுகாத்து, தகுந்த நேரம் பார்த்து விதைத்து, வளரும் பயிரை நன்கு பாதுகாத்தால்தான் அந்த விதையின் முழுப் பயனையும் அறுவடைக்காலத்தில் பெறமுடியும்.

தவத்திரு சுவாமி ஜீவனாநந்த மஹராஜ் அவர்கள் உயர்ந்த, தூய தவவாழ்க்கை வாழ்ந்தார், அளப்பரிய செயல்களைச் செய்தார். 'இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்' என்பதற்கேற்ப, தன் தள்ளாத வயதிலும் வாழ்ந்து காட்டி எல்லோருக்கும் தாயன்பைப் பொழிந்தவர். அதனால்தான் இன்றும், என்றும் அனைவரின் மனங்களிலும் குடி கொண்டுள்ளார், குடிகொள்ளுவார். அவருடன் வாழ்ந்த காலத்தில், அவர் வாழ்ந்த வாழ்க்கையையும், கூறிய அறிவுரைகளையும் அன்றாட வாழ்க்கையில் ஒருவர் கடைப்பிடித்து, வாழ்க்கையில் அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வளமானதொரு வாழ்க்கையை வாழ்வோமேயானால் அதுவே அவருடன் வாழ்ந்ததற்கும், தொடர்பு கொண்டதற்குமான அறிகுறியும், அதனால் கிடைக்கும் பலனுமாகும். இவற்றிக் கெல்லாம் மேலாக அதுவே அவருக்கு ஒருவர் செய்யும் நன்றிக்கடனும், அவருடைய ஆத்மா சாந்தி அடைய செய்யும் பிரார்த்தனையும் ஆகும்.

தவத்திரு சுவாமி ஜீவனாநந்த மஹராஜின் ஆத்மா சாந்தி அடைய நான் உளமாரப் பிரார்த்திப்பதோடு, இராமகிருஷ்ண குருகுலப் பழையமாணவ மன்றத்தினர் வெளியிட வுள்ள நினைவு மலர் வெளியீடும் மற்ற நிகழ்வுகளும் சீரும் சிறப்புடன் நிறைவேற வேண்டி தம் அருளையும், ஆசியையும் வழங்குமாறு நம் முப்பெரும் தெய்வங்களையும் வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரருட்திரு.யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

*திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டஆயர்*

நம்மோடு வாழ்ந்து மறைந்த பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய பெரியார் சுவாமி ஜீவனாநந்தா மகாராஜ் அவர்களுக்கு நினைவுமலர் வெளியிட்டு நம் அன்பையும் வணக்கத்தையும் தெரிவிப்பது சாலச் சிறந்தது.

கடவுள் தந்த இவ்வாழ்வு மிகவும் அற்புதமானதாகும். இதனை வாழ்வாங்கு வாழ்ந்து நிறைவு செய்பவர் சிலரே. அவர்களையே நாம் பெரியார், மகான்கள் என்றெல்லாம் போற்றிப் புகழ்கின்றோம். இத்தகைய சிறப்பானவாழ்வை வாழ்ந்தவர் சுவாமிஅவர்கள் என்று கூறுவதுவெறும் புகழ்ச்சிஅன்று. அவரோடுமிகவும் நெருங்கிப் பழகியவர்,சமூகப் பணிகள் பலவற்றில் ஒன்றுபட்டுஉழைத்தவர் என்றமுறையில் இதனைநாம் உறுதியாகக் கூற முடியும்.

மட்டக்களப்பு மக்கள் கடந்தகாலங்களில் சந்தித்த பல்வேறு பிரச்சினைகள், பயங்கர அனுபவங்கள், துயரங்கள், அழிவுகளின் போதெல்லாம் மக்களுக்கு ஆறுதல் கூறவும், திடப்படுத்தவும்,பாதுகாக்கவும் சமயத் தலைவர்கள் என்றமுறையில் நாம் ஒன்றுகூடிப் பணிபுரிந்தகாலங்களை மனநெகிழ்வோடு எண்ணிப் பார்க்கின்றோம். சமயவேலைகளைக் கடந்து ஆன்மீக உணர்வோடும், மனிதநேயத்தோடும் ஒன்றுபட்டுழைத்தசுவாமிகள் அவர்கள் நம் நெஞ்சில் நிலைத்துநிற்கின்றார்.

மட்டக்களப்புப் பிரதேச மக்களின் வாழ்வோடும் உணர்வுகளோடும் தம்மைப் பிணைத்துக் கொண்டு ஆன்மீகத்தில் உயர்ந்தவர் அவர். மட்டக்களப்பு கல்லடியில் உள்ள இராம கிருஷ்ண மிஷன் நிறுவனம்,அதனால் நிர்வகிக்கப்படும் பல்வேறுஅமைப்புக்கள் அனைத்தும் சுவாமியின் உள்ளத்துயர்வையும்,பணிச்சிறப்பையும் பறைசாற்றுவதாகும்.

மட்டக்களப்பு மக்களுக்குக் கிடைத்த மாபெரும் சொத்து அவர். அவரது உயர்ந்த எண்ணங்கள் வருங்காலத் தலைமுறைக்கும் வளஞ்சேர்க்கும். அன்னாரை நன்றியோடு நினைத்துப் போற்றுவோம்.

அவர் இறைவன் திருவடிநிழலில் எஞ்ஞான்றும் இன்புற்றிருக்க இறைஞ்சுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி கபாலீசானந்தா

இராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு

மகா சமாதியடைந்த, எமது பேரன்புக்கு பாத்திரமாயிருந்த, ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தஜீ மஹராஜ் அவர்களது நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பேருவகை கொள்ளுகின்றேன்.

கடவுள் எல்லாரையும் சமமாக நேசித்தாலும் ஒரு சிலரை தன்னுடைய பணிகளைச் செய்வதற்கு தெரிவு செய்கிறார். அந்த வகையில் சுவாமிஜீ அவர்கள், தன் பணிகளைச் செய்வதற்கு இறைவனால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு கருவியாகும்.

'ஆத்மனோ மோக்சார்த்தம் ஜெகத் ஹிதாய ச'

'சொந்த ஆத்ம ஈடேற்றத்திற்காகவும், உலக நன்மைக்காகவும் வாழ்வை அர்ப்பணிப்பாயாக' என்பது இராமகிருஷ்ண சங்க துறவிகளுக்கு சுவாமி விவேகானந்தர் வழங்கிய வாழ்க்கை நெறியாகும். அந்த வகையில் சுவாமிஜீ அவர்கள் சுவாமி விவேகானந்தரின் இந்த மேலான ஆணையைப் பின்பற்றி தியாக வாழ்வு வாழ்ந்தவராவார்.

ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தஜீ மஹராஜ் அவர்களை இந்தியாவில், சென்னை இராம கிருஷ்ண மடத்தில் நான் சேர்ந்திருந்த காலகட்டத்தில், சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. அவர் வயது வேறுபாடில்லாமல் அனைத்து சுவாமிகளையும் 'மஹராஜ்' என்று பரிவோடும், பாசத்தோடும் அழைக்கும் உயரிய பண்பினை நான் அன்று கண்டு கொண்டேன்.

இலங்கையிலிருந்து பல அடியார்களை ஆன்மீக யாத்திரைகளுக்காக அழைத்து வரும்போதெல்லாம், சுவாமிஜி அவர்களே அடியார்களை முன்னின்று வழிநடத்தியதோடு, அவர்களின் ஒவ்வொரு தேவைகளையும், அகமகிழ்வோடு, சலிப்பில்லாமல் அனுசரித்து நடாத்திய விதம் அவரது ஆன்மீகத் தலைமைத்துவத்தை படம் போட்டுக் காட்டியது. இந்நினைவுகளெல்லாம் பசுமரத்தாணிபோல் என் உள்ளத்தில் பதிந்துள்ளன.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனை பொருளாதாரரீதியில் அபிவிருத்தி செய்வதிலும், கட்டட விரிவாக்கம் செய்வதிலும், நலிந்தோருக்கு உதவுவதிலும், ஏழைச் சிறார்களுக்கு கல்வி அறிவு ஊட்டுவதிலும் சுவாமி ஜீவனாநந்தஜீ மஹராஜ் அவர்கள் ஆற்றியுள்ள மகத்தான பாரிய பணி எக்காலத்திலும், எல்லோராலும் நினைவு கூரத்தக்கது.

இராமகிருஷ்ண மிஷனுடன் இரண்டறக் கலந்துள்ள குருகுல பழைய மாணவர் சங்கம், சுவாமிஜீ தொடர்பாக நூல் ஒன்றினைச் சிறப்பான முறையில் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த ஆக்கபூர்வமான செயற்பாட்டில் இணைந்துள்ள அனைவருக்கும் இறைவன் மேலும் அர்ப்பணிப்போடு கூடிய ஆர்வத்தை வழங்கவேண்டுமென பகவான் ஸ்ரீராம கிருஷ்ணரைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஆத்மகனானந்தா

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை

ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தஜி மகராஜ் அவர்களது புனித நினைவைப் போற்றும் வகையில், மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் மாணவரில்லப் பழைய மாணவர்கள் சங்கத்தால் வெளியிடப்படவிருக்கும் மலருக்கு இந்தச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு முறை சுவாமி விவேகானந்தர் தனது சீடர் சிலருக்கு சன்னியாச தீட்சை வழங்கிய பின்னர், துறவி ஒருவர் எங்ஙனம் வாழ வேண்டும் எனப் பின்வருமாறு கூறினார். 'பலரது நன்மைக்காக, பலரது மகிழ்ச்சிக்காக, ஒரு துறவி பிறக்கிறார்.... ஒரு துறவியானவர் பிறருக்காகத் தன்னை மாய்த்துக் கொள்ள இவ்வுலகில் பிறக்கிறார்? அவ்வாறெனில் நாம் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்பதா? சிறிதளவும் அவ்வாறில்லை...அங்ஙன மாயின் சாவை நேசிப்பதின் பொருளென்ன? இறப்பதென்பது நிச்சயம் எனும் போது நாம் ஒரு நல்ல குறிக்கோளுக்காக உயிர் துறப்போம்'. (For the good of the many, for the happiness of the many is the Sannyasin born..The Sannyasin, verily, is born in to this world to lay down his life for others… The Sannyasin is to love death. Are we to commit suicide then? Far from it…What is the love of death then? We must die, that is certain; let us die then for a good cause'.)

சுவாமி விவேகானந்தரது இக் கூற்று ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தஜி மகராஜ் அவர்கள் விடயத்தில் எவ்வளவு பொருந்தியிருந்தது என்பதை அவர்களை அறிந்தவர்கள், அவர்களோடு வாழ்ந்தவர்கள் நன்கு அறிவர். மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனின் பொறுப்பாளராக அவர் பதவியேற்ற சமயத்தில், மிஷன் மூலம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நடத்தப்பட்டு வந்த பாடசாலைகள் அனைத்தும் அரசுரிமை ஆகிவிட்ட நிலையில், கல்லடியில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் மாணவரில்லம் மற்றும் ஸ்ரீசாரதா மகளிர் இல்லம், அவ்வாறே காரைதீவில் அமைந்துள்ள ஸ்ரீசாரதா இல்லம்- இம்மூன்று மட்டுமே சிறிய அளவில் இயங்கி வந்தன. அச்சமயத்தில் மிஷனின் நிதி நிலையும் மிகவும் மோசமாக இருந்தது. இத்தகைய பின்னணியில் இம்மூன்றையும் படிப்படியாக கட்டியெழுப்ப அவர் மேற்கொண்ட தளராத உழைப்பும், சிரமங்களும் அனைவரும் நன்கு அறிந்தவை. அக்குழந்தைகளது நலனிலே அவர் கொண்டிருந்த அக்கறையை வார்த்தைகளில் விபரிக்க இயலாது. அவரது வாக்கும், சிந்தனையும் எந்நேரமும் அம்மூன்று இல்லங்களைக் குறித்ததாகவே இருந்தன. அவர் ஆற்றிய சேவை வெற்றி யுடனும், சிறப்புடனும் அமைய, குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியும், சேவை செய்வதில் அவருக்கிருந்த ஆர்வமும், அனைத்து மக்களுடனும் நெருங்கிப் பழகும் வகையில் அவரிடம் இயற்கையாக அமைந்திருந்த நட்புணர்வும், எளிமையும், ஆதரவு மனப்பான்மையுமே அவருக்குப் பக்கபலமாக இருந்து உதவின எனலாம். மட்டக்களப்பு வாழ் மக்கள் அனைவரும் அவரை நன்கு அறிந்திருந்தனர் என்பதைவிட, அவரது அன்பிற்குப் பாத்திரமாயிருந்தனர் என்று கூறுவதே பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாதி, மதம், இனம், செல்வாக்கு என்ற வேறுபாடுகளைக் கடந்து அனைவரையும் ஒரு சேர நோக்கும் பண்பும், அன்பும் கொண்டவராக விளங்கியதன் காரணத்தினால் எல்லோரும் அவரால் ஈர்க்கப்பட்டனர். யாரேனும் அன்பர் அல்லது பக்தர் நோய்வாய்ப்பட்டு படுத்திருந்தால் உடனடியாகக் சென்று அவரை பார்த்து ஆறுதல் கூறி வருவது அவரது பண்பு. அவ்வாறே, போரினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் மனித அழிவுகள் ஏற்பட்ட காலங்களிலெல்லாம் உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதில் அவர்மிகுந்த வேகத்ததுடன் செயல்பட்டதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். சுருங்கக்கூறின், 'மக்கள் சேவையே மகேசன் பூஜை' என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்றுக்கு செயல் வடிவம் தந்த, சேவைக்கு ஒரு சிறந்த இலக்கணமாக அவர் வாழ்ந்தார் என்று கூறினால் மிகையாகாது. அந்த இறைபணியில் அவருடன் தோளோடு தோள் நின்று உழைத்த அன்பர்கள், தொண்டர்கள் அனைவரையும் இத்தருணத்தில் நினைவு கூர்ந்து பாராட்டுதல் வேண்டும். அவர்கள் அனைவரும் குருதேவரது திருவருளுக்குப் பாத்திரமானவர்கள் என்பதில் ஐயமில்லை.

என்னைப் பொறுத்தவரையில், எளிமையும், அளவற்ற பொறுமையும், தன்னலமற்ற அன்பும், சகோதர வாஞ்சையும், அனைத்திற்கும் மேலாக குருதேவர் மீது ஆழ்ந்த பக்தியும், சிரத்தையும் கொண்ட அத்தகைய ஒரு துறவியோடு சிறிது காலம் வாழக் கிடைத்த வாய்ப்பை நான் பெரிதும் போற்றுகிறேன். வயதிலும், சன்னியாச தீட்சையிலும் அவர் என்னைவிடப் பல ஆண்டுகள் மூத்தவர் எனினும், நான் இலங்கை ராமகிருஷ்ண மிஷனின் பொதுத்தலைவர் என்பதால் விசேட நிகழ்வுகளில் என்னை அவர் முன்னிலைப் படுத்த முயல்வது எனக்கு மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தும். அதற்காக நான் அவரைக் கடிந்து கொண்டதும் உண்டு, இருந்தும், ஒவ்வொரு முறையும் அவர் அவ்வாறே செய்வார். காரணம் பணிவு, தன்னடக்கம், என்பவை அவரது இயற்கைக் குணங்களாக அமைந்து விட்டிருந்தபடியால், அவற்றை மீறி அவரால் செயல்பட முடியவில்லை. அவர் துறவிகளுக்கெல்லாம் என்றும் ஒரு சிறந்த உதாரண புருஷராக விளங்கினார். அவ்வாறே கூற வேண்டும். முடிவாக, 'தெய்வத்திரு மூவராகிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீசாரதாதேவி, சுவாமி விவேகானந்தரது திருப்பாதங்களில் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு ஒப்பற்ற தெய்வ மலர் அவர்' என்று கூறி இதை நிறைவு செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஞானமயானந்தா

*காப்பாளர், ராமகிருஷ்ண மிஷன்*
*கலை அறிவியல் கல்லூரி விடுதி*
*கோயம்புத்தூர், தமிழ்நாடு*

*'தோன்றிற் புகழொடுதோன்றுக அஃதுஇலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று'*

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, பிறக்கும் பொழுது புகழுக்குண்டான காரணங்களோடு பிறந்தவர் தான் சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ். ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்கள், உதகை ராமகிருஷ்ண மடத்தில் சேவை செய்துகொண்டிருந்த காலத்தில், நீலகிரியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் சென்று ஆன்மிக சொற்பொழிவு ஆற்றியுள்ளார். அப்பொழுது நான் சிறுவனாக இருந்தேன். அந்தக் காலகட்டத்தில், உதகை ராமகிருஷ்ண மடத்தில் நடக்கும் குருபூஜை விழாவிற்கு நன்கொடையாக வசூலிக்க ஒவ்வொரு வீடாகச் செல்வார். மஹராஜ் அவர்கள் ஒவ்வொரு வீட்டிலுள்ள குருதேவரின் பக்தர்கள் தரும் காணிக்கையை ஏற்றுக் கொள்வதோடு மட்டுமல்லாமல், அவர்கள் தரும் அன்பு உபசரிப்பையும் ஏற்றுக் கொண்டு அந்த அன்பர்களையும் குருபூஜை விழாவிற்கு அழைப்பார்.

சுமார் பத்தாயிரம் பக்தர்கள் அந்த விழாவில் கலந்து கொண்டு, அந்த திருநாளில் நடைபெறும் தீபாராதனை, பஜனை, சொற்பொழிவு, கலைநிகழ்ச்சிகள் மற்றும் அன்ன தானத்திலும் பங்குபெற்று மனநிறைவோடு குருதேவரின் அருளோடும் வீட்டிற்குத் திரும்புவார்கள்.

நான் ஊட்டியிலே சிறுவனாக இருந்த காலத்தில் அவரைப் பார்த்திருக்கிறேன். அதன் பிறகு பல ஆண்டுகள் கழித்து மதுரை மடத்தில் துறவியாக நான் சேர்ந்த பிறகு ஒருமுறை (1989) அவர் விருந்தினராக அந்த மடத்திற்கு வந்தார். வெகுநாட்கள் கழித்து அவரைப் பார்த்த எனக்கு பெரும்மகிழ்ச்சியாக இருந்தது. பழைய சம்பவங்களையும், பழைய நினைவுகளையும் நினைவு கூர்ந்தோம். அப்பொழுதுதான் நான் அவருடன் நெருங்கிப் பழகினேன்.

1996ஆம் ஆண்டு, நான் பொன்னம்பேட்டை மடத்திலே சேவை ஆற்றிக் கொண்டிருந்த சமயம் மஹராஜ் அவர்கள் மங்களூருக்குச் செல்லவேண்டி இருந்தது. அப்பொழுது அவர் செல்வதற்காக மகிழுந்து (கார்) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவரோ மகிழுந்தில் சென்றால் பணம் அதிகமாக விரயமாகும், அந்தப் பணத்தில் பலருக்கு உணவளிக்கலாம் என்று கூறி பேருந்திலேயே மங்களூர் சென்றுசேர்ந்தார்.

*'யான் எனது என்னுஞ் செருக்கு அறுப்பான் வானோர்க்கு*
*உயர்ந்த உலகு புகும்'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வள்ளுவரின் குறளுக்கும், நான், என்னுடையது என்ற மயக்கத்தை நீக்குபவன் தேவர்களாலும் அடையமுடியாத உணர்ந்த நிலையை அடைவான் என்ற கருத்துக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்த மகான்தான் சுவாமி ஜீவனாநந்தாஜீ மஹராஜ்.

அதன் பிறகு 2004 டிசம்பர் மாதம், இந்தோனேசியா அருகே, கடலுக்கடியில் வெடித்த எரிமலையின் சீற்றத்தினால் உருவான ஆழிப்பேரலைகள், இந்தியத் துணைக் கண்டத்தையே நிலைகுலையச் செய்துவிட்டது. பல லட்சம் உயிர்கள் பேரலைக்கு பலியாகின. இலங்கையிலே சுனாமி என்னும் ஆழிப்பேரலையின் தாக்கத்தால், தன் உறவினர்களையும், உடமைகளையும் இழந்து தவித்துக் கொண்டிருந்த மக்களுக்காகவும், அவர்களின் வளமான எதிர்காலத்திற்காகவும் தன் வாழ்வின் பெரும்பகுதியை செல வழித்தார் மஹராஜ் அவர்கள். அப்பொழுது அவரோடு சேர்ந்து அந்த சேவையை செய்ய நான் இலங்கைக்கு விரைந்தேன்.

அங்கே எனக்கும்,அவருக்கும் இடையே நெருக்கம் மேலும் வலுவானது. காரைதீவி லிருக்கும் சாரதாசிறுமியர் இல்லத்திற்கும், மட்டக்களப்பிலுள்ள சாரதா பெண்கள் இல்லத் திற்கும், அவர் எப்போது சென்றாலும் என்னையும் உடன் அழைத்துச் செல்வார். சுனாமியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் பணியை இராமகிருஷ்ண மடம் ஏற்றுக்கொண்டது. அதற்குண்டான பணிகளை கவனிக்க நான் சென்றுவிட்டு பலமுறை தாமதமாக வருவேன். அதுவரை உணவு உண்ணாமல் எனக்காகக் காத்திருப்பார். அந்த நிமிடங்களையெல்லாம் என்றுமே மறக்கமுடியாது.

ஒருமுறை அவரும், நானும் கதிர்காமம் என்கின்ற முருகன் கோவிலுக்குச் சென்றி ருந்தோம். அங்கே அவர் தன்னுடைய எதிர்காலக் கனவுகளையும், திட்டங்களையும், சிந்தனைகளையும் என்னோடு பகிர்ந்துகொண்டார்.

இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்தில், பல ஆதரவற்ற குழந்தைகளும், மாணவர்களும் தங்கிப் படிக்கின்றார்கள். அவர்களின் செலவுக்குத் தேவையான பணத்தை ஒவ்வொரு நாளும் ஜீவனாநந்தாஜீ மஹராஜ் அவர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று ரூ.5 வசூலிப்பார். ஒருமுறை ஒரு அன்பர் ஒரே நாளில் 50ரூபாய் கொடுத்தார். அதனை மஹராஜ் அவர்கள் நீங்கள் ஒரே நாளில் 50ரூபாவைக் கொடுத்துவிட்டால், நாளை உங்களிடம் பணம் கேட்டு நாங்கள் எப்படி வருவது, எல்லோருடைய பங்களிப்பும் அவசியம். எனவே 5ரூபாய் மட்டும் போதும், அதிகம் வேண்டாம் என்று கூறி 50ரூபாவை திருப்பிக் கொடுத்து, 5ரூபாவை வாங்கிச் சென்றார். இப்படிப் பல ஒழுக்க நெறியோடு தன் வாழ்க்கையை வாழ்ந்தவர்தான் மஹராஜ்.

அவர் இலங்கையில் இறைவனடி சேர்ந்தார். மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற வார்த்தைகளை தன் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியவர் அவர்.

*'அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்*
*புன்கணீர் பூசல் தரும்'*

என்ற குறளிற்கேற்ப அவருடைய அன்பை நினைக்கும் போதெல்லாம் கண்ணீர் வழிகிறது. அவர் இந்த உலகைவிட்டு மறைந்தாலும் அவர் ஆற்றிய சேவையும், அவருடைய ஆசியும் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

குருகுலமாணவர்கள் அனைவருக்கும், எனது அன்பும் ஆசிகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. கணேசு

*தலைவர், மட்டக்களப்பு மத்தியஸ்தர் சபை;*

செயலாளர், சமாதானத்துக்கான சமயங்களின் பேரவை,

மட்டக்களப்பு

ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தா மகராஜ் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவராக இருந்துஆற்றியபணிகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாமகராஜ் வாழ்க்கை வரலாறு இன்றைய இளைஞர் சமூதாயத்துக்கு ஒரு வழிகாட்டாக உள்ள ஒரு கைநூலாகும். இவரின் ஞாபகார்த்தமலர் ஒன்றை ஸ்ரீ இராம கிருஷ்ண குருகுலப் பழையமாணவர் மன்றம் வெளியிடுவதுமிகவும் சிறந்தசெயற் பாடாகும். இச்செயற்பாடும் இவர்களின் எதிர்காலவாழ்வும் மேலோங்கவாழ்த்துவதுடன் இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாமகராஜ் மட்டக்களப்புவலையிறவுகிராமத்தில் வசதி உள்ள குடும்பத்தில் 22.06.1925 பிறந்தார். தான் வாழவேண்டும், தன் குடும்பம் வாழ வேண்டும், தம் கிராமம் வாழவேண்டும் என்ற மனநிலைக்கு அப்பால் இறைவன் படைத்த மக்கள் அத்தனை பேரும் தன்குடும்பம் என்றும் எல்லோரும் தனது சகோதரங்கள் என்றும் உணர்ந்தார். இதற்கு அவர் மேற்கொண்ட வாழ்க்கை அமைப்பு துறவறமாகும். பொதுவாக துறவறம் பூணுபவர்கள் உலக வாழ்வுமாயை என்றும் இவ்வாழ்வில் கிடைக்கும் இன்பம் சிற்றின்பம் என்றும் ஞானமுதிர்ச்சியில் யோகங்களைச் செய்து தியானங்கள், தவங்களை தொடர்ந்துசெய்வார்கள். அதனால் முத்தியும் அடைவர். சுவாமி அவர்கள் உலகை வெறுக்கவில்லை. உலகமக்களுக்கு நல்வாழ்வுக்கும் வழிவகுத்துக் கொடுக்கத் துறவு பூண்டார். அத்துறவுக்கு பொருத்தமான இடம் இராமகிருஷ்ணரின் உபதேசத்தின் கீழ் இயங்கும் இராமகிருஷ்ண மிஷனே எனத் துணிந்து உச்சப்பணியாற்றினார். அவர் சே வைநலம் மக்கள் வாழ்வில் மென்மேலும் வழிநடத்த வாழ்த்துகின்றேன். இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**'இறைவனின் வேதனையை ஏழையின் பட்டினியில் பார், இறைவனின் சிரிப்பை ஏழையின் மகிழ்ச்சியில் பார்'** என்ற கருத்துக்கமைய ஏழைகளின் பங்காளராக விளங்கினார். கல்வி கற்க வசதியற்றோருக்கு கல்வி வசதிசெய்தார். பயங்கரவாதப் பாதிப்புகளின் போதுசமயத் தலைவர்களின் தலைவராகஅஞ்சாதுசெயற்பட்டார். இவரின் வாழ்வு **'வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவர்'** என்ற வள்ளுவர் கருத்துக்கமைய அமைந்ததாக வுள்ளது. அவரின் ஆத்மீக கருத்து மேலோங்க மக்கள் நலம் சிறப்படைய வாழ்த்துவதுடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் முகவுரை

க.மதிவண்ணன்
தலைவர்,
இராமகிருஷ்ண குருகுலப் பழைய மாணவர் மன்றம், மட்டக்களப்பு

*'அறந்தனை நிறுவினை அனைத்தறன் வடிவினை*
*சிறந்தனை பிறந்தபல் பிறவியுள் இறைவ*
*ஸ்ரீ ராமகிருஷ்ண நின் இணைபதம் அடியேன்*
*பராவுவன் யாண்டும் படிமிசைப் பரிந்தே'*

எல்லாம் வல்ல பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரதும், தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியினதும், வீரத்துறவி சுவாமி விவேகானந்தரதும் திருப்பாதக்கமலங்களில் இந்நூலைச் சமர்ப்பிக்கின்றோம்.

மகாசமாதியுற்ற சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்களின் ஜீவன் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சேவையில் ஆனந்தித்தது. அந்த ஆனந்தம் குருகுலங்களில் ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரித்துப் பேணுவதாயும், பரந்துபட்ட இந்து சமூகத்திற்கு சுவாமி விவேகானந்தர் நெறிநின்று சனாதன தர்மத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண பாரம்பரியத்தினூடாக வாரிவழங்குவதாயும் அமைந்தது. அந்த ஆனந்தத்தின் சாரமே 'ஜீவனானந்தம்' ஆயிற்று.

மகாசமாதியுற்ற சுவாமிகளது ஆன்மீகப் பணிகளையும் செய்திகளையும் கொண்ட 'ஜீவனானந்தம்' என்ற நூலை வெளியிடுவதில் மிகுந்த பெருமையடைகின்றோம். அதுவும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தின் பழைய மாணவர் மன்றத்தினரால் வெளியிடப்படுவது மேலும் சிறப்பு. ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் மாதாந்த சஞ்சிகையில் அவ்வப்போது வெளியிடப்படும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் துறவிகளின் வாழ்க்கை மற்றும் செய்திகள் பற்றிய விடயங்கள் எப்போதும் அதன் பக்தர்கள் மத்தியில் ஆன்மீக விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்துவது யாவருமறிந்த உண்மை. இந்த வகையில் சுவாமிகளின் பூதவுடல் மறைவின் பின்னர், அவர் ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கத்தின் பால் ஈர்க்கப்பட்டு இறைபணிக்கெனத் தன்னை அர்ப்பணித்து, துறவுபூண்டு இம்மண்ணிற்கும், சனாதன தர்மத்திற்கும் ஆற்றிய தன்னலமற்ற ஆன்மீகத் தொண்டினை எதிர்கால சந்ததியினர் அறிந்து தெளிந்துகொள்வதோடு அதனைத் தமது வாழ்விற்கு ஆன்மீக வழிகாட்டியாயும் ஆதாரமாயும் கொள்ள வேண்டும் என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடே இந்த நூலாக்கத்திற்கு காரணமே தவிர சுவாமிகள் ஆற்றிய தன்னலமற்ற தொண்டினைக்கூறி பெருமையடைவதற்கல்ல.

அதுமட்டுமல்ல, வெறுமனே தானுண்டு தான் சார்ந்த நெறியுண்டு என்று ஜீவனற்ற ஜடம்போல் உயிரற்ற கொள்கைகளை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு தனது வாழ்க்கையை வாழ்ந்து முடித்தவரல்ல ஜீவனாநந்த சுவாமிகள். தான் சார்ந்த சனாதன நெறியினை தான் சேவைபுரிந்த சமூகத்திற்கும் மண்ணிற்கும் ஏற்றாற்போல் அதன் சாரம் சற்றும் பிசகாமல் தனக்கேயுரிய தன்னலமற்ற பாணியில் வடிவமைத்து சுவாமி விவேகானந்தர் கூறிய மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற தளத்தில் நின்று சேவை செய்து சாதனை புரிந்தமகான் சுவாமிகள். 'கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்'. 'அதிகம் பேசுபவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் சாதிக்கமாட்டான்' என்ற ஆன்றோர் வாக்குகளிற்கேற்ப சுவாமிகளும் அதிகம் பேசமாட்டார், மௌனமே பூண்டார். அலட்டலும் இல்லை. ஆணவம் சிறிதுமில்லை தர்க்கமும் இல்லை குதர்க்கமும் இல்லை. ஆனால் தான் வாழ்ந்த காலத்தில் எதிர்நோக்கிய சவால்களை மிகுந்த துணிச்சலுடன் எதிர்கொண்டு சாதிக்க எது எல்லையோ அதற்கும் அப்பால் சென்று சாதித்தார். அதுவே சாதிப்பவனின் அடையாளம் என்பதுபோல் கூறாமல் கூறிச்சென்றார். சுவாமிகளின் அத்தகைய மாண்பினை எதிர்கால சந்ததியினருக்குத் தெரிவிக்காமற் போவதென்பது நாம் செய்யும் வரலாற்றுத்தவறாகும். இத்தகைய அவப் பெயரை நீக்கும் சிறுமுயற்சியே இந்த நூலாகும்.

சுவாமிகள் மகாசமாதியுற்று எட்டுஆண்டுகள் கழித்த பின்னர் இந்நூல் வெளிவருவ தென்பது அதன் ஆன்மீகக் கனதியை மேலும் அதிகரிக்கும் முயற்சியில் ஏற்பட்ட கால தாமதமேயன்றி யாருடைய தனிப்பட்ட தவறோ அன்றி முயற்சியீனமோ அல்ல என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. சுவாமிகளின் சமாதிக்குப் பின்னர் நெறிப்படுத்துவாரின்றி சற்றுத் தடம் மாறிய எமது குருகுலப்பழையமாணவர் மன்றம், இன்று தனது புதியபாதையில் துணிச்சலுடன் செல்வதற்குத் திடங்கொண்டுள்ளமைக்கு இந்நூல் வெளியீடும் ஒரு சான் றாகின்றது.

சுவாமிகள் பற்றி எம்மால் முடிந்தவரை சேகரிக்கப்பட்ட செய்திகளினதும், ஆவணங் களினதும் தொகுப்பே இந்நூலாகும். இந்த வகையில் சுவாமிகள் பற்றி சுவாமிகளுடன் வாழ்ந்து பழகிய சகோதர சந்நியாசிகள், அவரது அருங்குணம் போற்றிய பிறமதப் பெரியார்கள் ஆகியோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஆசியுரைகள், கட்டுரைகள் மற்றும் சுவாமிகளது பக்தர்கள், அன்பர்கள், நலன்விரும்பிகள், குருகுலப் பழையமாணவ மாணவிகள் ஆகியோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டுரைகள், கவிதைகள், நேர்காணல்கள் ஆகியவற்றுடன் எம்வசம் கிடைத்த சிலபுகைப்படங்கள் மற்றும் ஆவணங்களோடு சுவாமி களின் சமாதியைத் தொடர்ந்து பல்வேறுபட்ட நிறுவனங்களும் அமைப்புக்களும் வெளி யிட்ட அஞ்சலிகளின் சாரத்தொகுப்பினையும் இதனுள் உட்படுத்தி யுள்ளோம். தவிர்க்க முடியாத காரணங்களால் எம்மால் தொடர்பு கொள்ளமுடியாமற் போன சுவாமிகளது அன்பர்கள் மற்றும் தங்கள் ஆக்கங்களும் இடம்பெறவிரும்பி அதனைச் சமர்ப்பிக்க முடியாமற்போன அன்புள்ளங்கள் எம்மை மன்னித்தருள்வதோடு உங்கள் அனைவருக்கும் சுவாமிகளின் ஆசிகள் என்றென்றும் நிறைந்திருக்கும் என்பதில் ஐயம் சிறிதுமில்லை.

அன்றாட உணவிற்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனானது எப்படி ஒரு தூய துறவியின் அயராத முயற்சியினாலும் உழைப்பினாலும் இன்று இந்தளவிற்கு பொருளாதார பலமிக்கதாயிற்று. இதற்கு சுவாமிகள் கையாண்ட பொறிமுறைநுட்பங்கள் என்ன? இதற்கு உதவியவர்கள் யார்? அத்தகையவர்களைச் சுவாமிகள் மதித்துப் போற்றியவிதம் என்ன? பக்தர்களையும், அன்பர்களையும், நலன் விரும்பிகளையும், நன்கொடையாளர்களையும், குருகுலப்பழைய மாணவர்களையும், மற்றும் சமூகத்தின் சகல மட்டத்தினரையும் தனது ஆன்மீகப் பொறிக்குள் சிக்கவைத்து அவர்களை என்றும் குருதேவரின் பணிக்குள் ஈர்த்துவைத்த சுவாமிகளின் அருங்குணங்கள் என்ன? தான் தனித்தே ஒருதுறவியாய் இருந்து கொண்டு மூன்று வெவ்வேறு பிரதேசங் களிலிருந்த இல்லங்கள், ஞாயிறுசமயபாடசாலை, உறுகாமம் வயல் என்பவற்றோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திலும் சனாதனதர்மத்தின் தலைமையையவகித்து, வழிநடத்தி கட்டிக்காத்த சுவாமி களின் முகாமைத்துவம், தலைமைத்துவம், உளவியற்பாங்கு என்பனபற்றி இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மேலும் விரிவான ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு எதிர்கால சமூகத்திற்கு தெளிவுபடுத்தப்பட வேண்டியவிடயங்களாகும்.

அதுமட்டுமன்றி குருகுலமாணவர் வாழ்க்கை நெறிமுறையும் பராமரிப்பும், இந்துச மூகத்தில் சனாதனதர்மத்தின் தலைமை தாங்கிய சுவாமிகளின் நிலைப்பாடு ஆகிய தளங் களில் தமது காலத்தின் தேவைக்கேற்ப சுவாமிகள் நின்று நிலைத்துப் பணியாற்றிய பாங்குகள், தற்கால நவீன சமூகக் கட்டமைப்பிற்கும், தேவைக்கும் ஏற்ப மீள்பரிசீலனை செய்யப்பட்டு அதன் பண்பாடும் ஆத்மீக ஒழுகலாறும் தடம் மாறாமல் எதிர்கால சந்ததியினர்க்கும் கையளிக்கப்படவேண்டியதும் காலத்தின் தேவையாகும். சுவாமி விவே கானந்தர் கூறியதைப்போன்று காலத்தின் எத்தகைய மாற்றத்தையும் எதிர்கொண்டு நீடித்து நிலைக்கவல்ல சக்தி சனாதனதர்மமாகிய இந்துமதத்திற்கு தாராளமாகவே உண்டு என்ற தளத்தில் நின்று சுவாமிகள் ஆற்றிய சேவையைப் போன்று சனாதனதர்மத்தின் ஆன்மீக மணம் மாறாது, சமயப்பொறை, எல்லையற்ற அன்பு, தூய்மையானபக்தி, தன்னலமற்ற சேவை ஆகிய தளங்களில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் பணிகள் தொடர்வதற்கு வேண்டும் போதெல்லாம் ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்கவேண்டியது எமது பங்கும் பணியுமாகும்.

தான் பெற்ற துறவு நெறியை இம்மண்ணிற்கும், மக்களிற்கும் ஏற்றவிதத்தில் சாதுர்யமாக வடிவமைத்து தூய்மை, தியாகம், உண்மையன்பு, பணிவு ஆகிய உயர் விழுமியப்பண்புகளினூடாக தன்னை ஒழுங்குபடுத்தி ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம் கூறும் சனாதனதர்மம், சமயப்பொறை ஆகிய அணிகலன்களைப் பூண்டு சமூகத்தில் இந்துமதத்தின் காவலனாய் விளங்கியதோடுமட்டுமன்றி இல்லத்தின் குழந்தைகட்கெல்லாம் தாயாய், தந்தையாய், குருவாய் நின்றுபேணிக்காத்த பெருந்தெய்வம் சுவாமி ஜீவனாநந்தாவின் வாழ்வியலுண்மைகளை கூறும் ஜீவனானந்தம் வருங்காலசந்ததியினருக்கு வளமான ஆன்மீகச் சொத்தாகும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுகளும் அனுபவப் பகிர்வுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கின் சமூக அமைப்பும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனும்

வெல்லவூர்க் கோபால்

கிழக்கின் சமூக அமைப்பும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனும் எனும் இக்கட்டுரையை மூன்று அம்சங்களாகப் பிரித்துப் பார்ப்பதே பொருத்தமானதாக அமையும் அவை,

1. கிழக்குப் பிரதேச சமூகத் தளம்.
2. இராமகிருஷ்ண மிஷனின் கோட்பாடுகளும் செயற்பாடுகளும்
3. இலங்கையில் ஏனைய பிரதேசங்களைவிட கிழக்குப் பிதேச மக்கள் இராம கிருஷ்ண மிஷனின் கோட்பாடுகளை முழுமையாக அங்கீகரித்தமைக்கான காரணங்கள் என்பவையாகும்.

**1. கிழக்குப் பிரதேச சமூகத் தளம்**

ஈழத்து கிழக்குப் பிரதேசம் நீண்டு பரந்த நிலப்பரப்பைக் கொண்டது. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை என மூன்று மாவட்டங்களை தற்போது இப்பிரதேசம் கொண்டிருப்பினும் அரை நூற்றாண்டுக்கு முற்பட்டதான இதன் வரலாற்றுத் தளத்துள் மட்டக் களப்பை மையப்படுத்தியதான கிழக்குப்பிரதேசத்தின் நிலப்பரப்பானது இலங்கையின் மத்திய மலைப் பகுதிகளை நோக்கியதாக விரிவு பட்டும் பண்டைய புகழுக்குரிய தென்னன் மரவடி தொடக்கம் மாணிக்க கங்கைக்கு அப்பால் கட்டகாமம் வரை நீண்டு இருந்தது.

இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய மதங்களின் சமரசத் தன்மையை கிழக்கிலங்கை கொண்டிருப்பினும் இதன் நீண்ட கால வரலாற்றுத் தளம் இந்துப் பண பாட்டின் வேர்களாலேயே நிலைகொண்டிருந்தது. இந்து மதத்தை 'தமிழ் மதம்' என சிறப்பித்த பெருமையும் இப்பிரதேசத்துக்கே உரித்தானது எனலாம். ஆரியச் சுவடுகள் பதியாத மேற்கத்திய நாகரீகத்தை உள்வாங்காத தமிழரின் பண்பாட்டு நிலைக்களமெனத் திகழ்ந்த பூமியாக இதனைச் சிறப்பித்துக் கூறமுடியும். காலப் போக்கில் ஏற்பட்ட இஸ்லாம், கிறிஸ்தவம். பௌத்தம் ஆகிய மதங்களின் படிநிலை வளர்ச்சியும் இப்பிரதேசத்தே விரிவடைய நேர்ந்தாலும் இது நீண்ட காலமாக தனது கட்டுக் கோப்புக்குள் கட்டிக்காத்து வந்த சமூக சமரசத் தன்மையை இன்னும் இறுக்கமாக்கியது. அதற்கும் மேலாக சமய சமரசத் தன்மையையும் அது பிணைத்துக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்குக் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் கிறிஸ்துவுக்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சிறப்பான வரலாற்றை கிழக்கிலங்கை கொண்டிருப்பது தெரிகின்றது. கி.பி 10ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழராட்சிக் காலத்தே இங்கு சமூகக் கட்டமைப்புகள் தோற்றவிக்கப்பட்டாலும் கட்டுக்கோப்பான சமூகப் பிணைப்பும் ஒற்றுமையும் கி.பி 1215க்குப் பின்னரே இங்கு நிலை நிறுத்தப்படுவதைப் பார்கின்றோம். இது கலிங்க மாகோனின் ஆட்சியை மையப்படுத்தியதாக அமைகின்றது.

இன்று கூட இதன் கட்டமைப்பானது பெரும்பாலும் ஒத்த தன்மையையே கொண்டிருப்பதை நம்மால் அவதானிக்க முடிகிறது. விவசாயமும் மீன் பிடித் தொழிலும் இப்பிரதேசத்தின் நீண்ட கால முக்கிய தொழில்களாக அடையாளப்படுத்தப் படுவதுடன் கூடவே மந்தை வளர்ப்பு, சேனைப்பயிர்ச் செய்கை போன்றவையும் உபதொழில்களாக இங்கு இருந்து வந்துள்ளன. இப்பிரதேச சமூகங்கள் என்ற நிலையிலிருந்து வேறுபட்டு பொதுவாக எல்லாச் சமூகங்களும் தங்களுக்கு ஏற்புடையதான எல்லாத் தொழில்களையும் மேற்கொண்டு வரும் தன்மையினை இப்பிரதேசத்துக்குரிய தனித்துவமிக்க சிறப்பம்சம் எனலாம்.

இப்பிதேசத்தின் அதிமுக்கிய சமூகச் சிறப்பாக **'தாய் வழிபண்பாட்டுப் பேணுகை'**யைக் குறிப்பிடலாம். இதனையே ஒரு உரிமை மிக்க வரன் முறையாக இப்பிரதேசம் நீண்ட காலம் முதலாக தன்னகத்தே கொண்டிருக்கிறது. சொத்துடைமை, வாழ்வியல் கடமைகள், ஆலய நிர்வாகக் கட்டமைப்புகள் மற்றும் ஏனைய சமூகச் சிறப்புரிமைகள் அனைத்துமே தாய்வழி மரபு எனும் வழிமுறை ஊடாக முன்னெடுக்கப்படுவதையே இப்பிரதேசம் இன்றும் கொண்டிருக்கின்றது. வரலாற்று ரீதியாக இதுவே தமிழர் பண்பாட்டின் அடித்தளமாக விளங்கியதெனவும் ஆரிய மயமாக்கலின் பின்னரேயே தந்தை வழி முக்கியத்துவம் தமிழகத்தில் முன்னெடுக்கப்பட்டதெனவும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மேலும் இப்பிரதேசத்துக்குரிய சமூகச் சிறப்பம்சமாக குடி முறைமைகளை குறிப்பிட வேண்டும். நெறி தவறாத சமூகக் கட்டமைப்புகளுக்கு இது ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

இப்பிரதேச சமூக ஒற்றுமைக்கு இன்னுமொரு காரணியாக அமைவது ஆலய வழிபாட்டு முறைமைகளாகும். இதனை இரண்டு பிரிவுகளாகப் பார்க்கலாம். ஒன்று ஒரு சமூகத்தை அல்லது ஒரு கிராமத்தை தளம்பாது இறுக்கமாக்கிக் கொண்டிருக்கும் **'ஒரு சமூக வழிபாட்டு முறைமை'**. மற்றையது பிரதேச சமூகங்களை கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கும் **'பன்முக வழிபாட்டு முறைமை'**. முதலாம் வழிபாட்டு முறைமைச் சிறப்பினை கிராமக் கோவில்கள் கொண்டிருக்க இரண்டாம் வழிபாட்டு முறைமைச் சிறப்பினை தேசத்துக் கோயில்கள் கொண்டிருக்கின்றன. தேசத்துக்குரிய கோயில்களை இப்பிரதேச மக்கள் திருப்படைக் கோயில்கள் என அழைக்கின்றனர். இவை சங்கிலித் தொடர்பு போல் பிரதேச சமூகங்களை ஒன்றிணைத்துச் செல்வதை அவதானிக்க முடியும்.

தக்ஷண கைலாசம் என பண்டைக் காலம் முதலே போற்றப்பட்டுவருகின்ற திருக்கோணேஸ்வரம் ஆலயம், தம்பலகாமம் ஆதிகோணை நாயக்கர் ஆலயம், வெருகல் ஸ்ரீ சித்தி வேலாயுதர் ஆலயம், சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலயம், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம், கோவில் போரதீவு ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலயம், மண்டூர் ஸ்ரீ முருகள் ஆலயம், திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகந்தை முருகன் ஆலயம், என்பவற்றோடு பண்டைய காலத்தே கிழக்குப் பிரதேசத்துக்குரிய தாகவிருந்த கதிர்காமமும் இப்பிரதேச சமூகங்களை ஒன்றோடொன்று பிணைத்து தளம்பலற்ற சமநிலைப்பட்ட சமூகத்தளமாக இப்பிரதேசத்தை ஒரு நிலைப்படுத்தியிருப்பதைக் காணமுடியும்.

கொட்டியாரக்குடா முதல் கட்டக்காமம் ஈறாக கி.பி 15ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 18ம் நூற்றாண்டு வரையான ஒரு நீண்ட காலத்தே தாய்வழி உரிமைப் பேணுகையை முக்கியப்படுத்திய பிரதேச மரபுவழிச் சட்டமான **'முற்குக தேச வழமைச்சட்டம்'** அனைத்துச் சமூகங்களுக்கும் உரித்தான சட்டமாக விளங்கியதோடு இப்பிரதேச சமூக கட்டமைப்பை வலுப்படுத்த உதவியதெனலாம். திருகோணமலையின் தெற்கு மற்றும் மேற்குப் பிரதேச கிராமங்கள் அனைத்தும் மட்டக்களப்பு பிரதேச சாயலிலே தமது மரபு வழிப்பேணுகையை இன்றும் முழுமையாக கொண்டிருக்கின்றன. இன்றைய அம்பாறை மாவட்ட சமூகக் கட்டமைப்புத் தன்மையில் மட்டக்களப்புப் பிரதேசமாக தொடர்ந்தும் அடையாளப் படுத்தப்பட்டு வருகின்றது. திருகோணமலை நகரமும் அதன் வடபகுதியும் காலப்போக்கில் ஓரளவு யாழ்ப்பாண சமூகத்தள கட்டமைப்புக்குள் கலப்புற நேர்ந்தாலும் கிழக்குப் பிரதேசத்துக்குரித்தான சமூகக் கட்டமைப்பை அதனால் முற்றாக உடைக்க முடியவில்லை என்றே கூறவேண்டும்.

ஆலய விழாக்கள், பொது நிகழ்வுகள் மற்றும் சமூகப் பண்பாட்டு விழுமியங்கள் சார்ந்த கடமை என்ற பேரிலான தொழில்சார் பங்களிப்பு மூலம் ஒன்றையொன்று ஒதுக்காமல் அனைத்தும் ஆதரித்தும் வாழ்ந்த சமூகச் சிறப்பு இப்பிரதேசத்தின் நீண்ட காலச்சிறப்பாகும். கிழக்குப் பிரதேசத்தே தமிழருடன் இரண்டறக் கலந்து நிலைபதிகளாகி விட்ட இஸ்லாமியர் கூட பெரும்பாலும் அராபிய-பாரசிக-இந்துப் பண்பாட்டின் அடித் தளத்தின்பால் வளர்ந்தவர்களாகவே உள்ளனர். பௌத்த மக்களைப் பொறுத்தவரை நீண்டகாலமாக இங்கு வாழ்ந்த இந்து மக்களின் பண்பாட்டு பேணுகைக்குள்ளேயே அவர்கள் உள்வாங்கப்பட்டிருந்தார்கள். நாடு சுதந்திரம் அடையும் வரையிலான ஒரு நீண்ட காலத்தே கிழக்குச் சமூகங்களுக்கிடையே குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வகையில் இனமதப் பூசல்கள் ஏற்பட்டமைக்கான தகவல்கள் எதுவும் இதுவரை பெறப்பட வில்லை.

## 2. ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் கோட்பாடுகளும் செயற்பாடுகளும்

'புனிதத் தன்மை, தூய்மை, இரக்கம் ஆகியன குறிப்பிட்ட ஒரு சமயத்தினது உடமையல்ல. தனது மதமொன்றே நிலைபெறுமெனவும் ஏனைய மதங்களெல்லாம் அழிந்துவிடுமெனவும் யாரேனும் பகற்கனவு காண்பாரேல் அவர்களுக்காக நான் பரிதாபப் படுகின்றேன். உதவி செய்யுங்கள்-சண்டையிடாதீர்கள். ஒற்றுமைப்படுத்துங்கள் -அழித்து விடாதீர்கள். சமரசமும் அமைதியும் இங்கு நமக்கு வேண்டியவை. கருத்து வேறுபாடு வேண்டவே வேண்டாம். எழுகின்ற எத்தகைய எதிர்ப்புக்களிடையிலும் இதையே ஒவ்வொரு சமயமும் தமது கொடியில் எழுத வேண்டும்'.

1893 நவம்பர் 27ல் சிக்காக்கோ நகரில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரையின் அடி நாதமே இது. இராமகிருஷ்ண பரமஹம்சரது கோட்பாடுகளின் சாராம்சமே அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைகளாகும். 1836ல் அவதரித்து 1886ல் இவ்வுலக வாழ்வை நீத்த பரமஹம்சரின் புனித சீடரான அவரின் கருத்துக்களுக்கு கொள்கை விளக்கமும் செயல் வடிவமும் கொடுத்த முதன்மையாளராக சுவாமி விவேகானந்தர் விளங்கினார்.

இராமகிருஷ்ணர், காலம் தோற்றுவித்த ஒரு அவதார புருஷர். உயர்சாதி பேணிய பார்ப்பனருக்குள் உயிர்ப்படைந்த மாபெரும் சிந்தனையாளர். சமத்துவமும், சமரசமும் மிக்க உலகைக்காண அவர் அவாக்கொண்டார். ஒரு காளி கோவிலில் பூசை செய்த சாமான்யர், அந்த உலக மகா சக்தியால் உள்வாங்கப்பட்ட போது உயிர்களுக்குச் செய்யும் சேவையே மகத்துவம் மிக்க இறை பூசையெனும் தெளிவினுக்கு வந்தார். இறைபக்தி மூலம் சமூக ஏற்ற இறக்கங்களை இல்லாதொழிக்க முடியும் என்பதில் அவர் உறுதி கொண்டார். தனது காலத்தே இந்திய உபகண்டத்தில் நிலைகொண்ட அனைத்து மதங் களையும் கண்டறிந்த பரமஹம்சர் தனது இந்துமத அத்வைத கோட்பாடுகட்குள் அனைத்து மதங்களும் அங்கீகரிக்கப்படும் தன்மையை உணர்ந்தார். எல்லா மதங்களும் உண்மை மிக்கவை எனவும் எல்லா மக்களும் அவரவர் மதங்கள்பால் தங்களை வழிப்படுத்த உரிமை கொண்டவர்கள் எனவும் அவர் உறுதியாக நம்பினார். இதன் மூலம் உலக மாந்தர்களிடமும் அவர்களது மதங்களிடமும் கொண்ட சமத்துவப் போக்கே இராம கிருஷ்ணரது சமூக சமய சமரசக் கோட்பாடாக மலர்ந்தது சனாதன தர்மத்தின் சாரதியாக அவரை இனம் காட்டியது.

மதம் என்பது கைக்கொள்ளத்தக்க ஒரு தத்துவக் கோட்பாடு மட்டுமோ அன்றேல் பற்றுவைக்கத்தக்க நம்பிக்கை மட்டுமோ அல்ல. அது உலக மாந்தர் அனைவரையும் இறைவனோடு ஒன்றிணைக்கின்ற மார்க்கம். நமது சாஸ்திரங்களை மீண்டும் படிப்பதே கல்வி என்றும் ஆகிவிடாது. கல்வி மூலமாக ஏழை எளிய மக்களை அறிவதும் அவற்றின் ஊடாக விழிப்புணர்வை ஊட்டுவதும் அவர்களிடம் மறைந்து கிடக்கின்ற ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு அவை அவர்களால் உணரப்படவும் அவற்றின் பால் அவர்கள் ஈர்க்கப்படவும் செய்தலுமே உண்மையான கல்வியின் குறிக்கோளாக அமைய வேண்டும் என்பதனை பரமஹம்சர் தனது கோட்பாடாக கொண்டிருந்தார். வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்பவற்றின் சாராம்சமாகவும் அனைத்து மதங்களினது அடிப்படை தத்துவங்களையும் உள்ளபடி விளக்கிக் காட்டுவதுமாகவே அவரது அவதாரம் அமைந்தது. அவரது வாழ்க்கையை அறிந்து கொண்டால் அனைத்து மதங்களையும் அறிந்து கொண்டதாகவே பொருள்படும். எனவேதான் மகாத்மாகாந்தி **'ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாழ்க்கை சமயங்களை நடைமுறைக்கு இட்டுச் சென்ற சரிதை'** எனக் குறிப்பிடுவர்.

கருவறை மூர்த்தியாகவிருந்து தெய்வீகப் பேறடைந்த ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உற்சவ மூர்த்தியாக உலா வந்தவர் சுவாமி விவேகானந்தர். அவரது முழுமையான செயற்பாடே இராமகிருஷ்ண தீபத்தை உலகிற்கு வெளிச்சமாக்கியது. துடிப்பும் பகுத்தறிவுச் சிந்தனையும் மிக்க இளைஞனாக நரேந்திரன் நின்ற போது அவரை முதன் முதலில் பரமஹம்சர் எதிர்கொண்ட விதம் ஆச்சரியத்துக்குரியது. **'பிரபோநாராயணனின் அவதாரமாகிய நாதமுனிவரே! நீ மனித இனத்தின் துயர் துடைக்கவே இங்கு பிறந்துள்ளீர் என்பதனை நான் அறிவேன்'** என இரு கரம் கூப்பியவாறு விவேகானந்தரை ஆட்கொள்வதைப் பார்க்கின்றோம். **'அன்னை பராசக்தி அனைத்தையும் உனக்கு அருளிவிட்டாள். உன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய இந்த **ஆன்மீகஅனுபூதி சிறிது காலத்திற்கு பத்திரமாகப் பூட்டி வைக்கப்பட்டு அதன்** திறவு கோல் **என்னிடம் இருக்கும்'** என குருநாதர் கூறுவது இதன் முழுமையான அங்கீகாரமாகும்.

1897மே மாதம் 1ம் திகதி விவேகானந்தர் இராமகிருஷ்ண மடத்தை தொடங்கிய போது **'இந்தமடத்திலிருந்து அலைபுரண்டு பொங்கியெழும் தெய்வீக வெள்ளம் மனுக் குலத்தை வாரியள்ளி பேரின்ப உலகிற்கு இட்டுச்செல்ல நமது பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி இந்த இலச்சியத்தை எட்ட வரிந்துகட்டிக்கொண்டு பாடுபட வேண்டும்'** என அவர் சூளுரைத்தார். இந்த இயக்கமே பகவானின் திருமேனியாகும். அவரே எப்போதும் இதில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். இதனை வழிபடுபவர்கள் அவரையே வழிபடுகின்றனர். துறவி என்றால் தியானத்திலும் படிப்பிலும் மட்டுமே இருக்க வேண்டும் என்ற நிலை மாறி **'மக்கள் சேவையேமகேசன் சேவை'** எனும் குறிக்கோளுடன் **'உலகநன்மை'** எனும் ஆன்மிக பயணத்தை தொடர வலியுறுத்தி அதற்கான கொள்கைகளையும் அவர் வகுத்தார்.

இராமகிருஷ்ண இயக்கம் வெறுமனே சமுதாய சேவை என்ற பெயரில் புறச்செயலாக மாத்திரம் அதனை மேற்கொள்வதில்லை. தெய்வீகம் நிறைந்த இறைபணியாகக் கருதி அதனை முழு மனதோடு மேற்கொள்ளும் தன்மையால் அச்சேவையின் மூலம் பலனைப் பெறுபவர் முறையான நன்மையினை அடைவதோடு அதை மேற்கொள்பவர் அதன் மூலம் முழுத்திருப்தியையும் அடைகின்றார்.

ஏழை, எளிய மக்களுக்காக கசியும் உள்ளத்தையே மகாத்மா எனவும் அல்லாதவை யனைத்தும் துரோகாத்மா எனவும் வகைப்படுத்தி படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் போதனை செய்வதிலும் ஏழை எளிய மக்களுக்குப் போதனை செய்வதே மேலானது என்பதால் ஆன்மீக போதனை என்பது ஏழையின் பசியைப் போக்க வேண்டும் என வலியுறுத்தும் தன்மையே இதன் தனித்துவமாகக் கொள்ளப்படுகிறது.

எல்லாச் சமயங்களிலும் அன்பு கொள்கின்ற பண்பும் அவற்றின் எல்லா நெறி முறைகளும் உண்மையானவையே என ஏற்றுக் கொள்கின்ற மனோபக்குவமும் இராம கிருஷ்ண சங்கத்திற்கு மட்டுமே உரித்தாகின்றது **'விக்கிரகங்களும் சிலுவைகளும் இளம் பிறைகளும் குறியீடுகளாக ஆன்மீகக் கருத்துக்கள் தாங்கிக் கொள்ளும் கொழுக்களாகவே உள்ளன. இவற்றை தவறென எவரும் கற்பிக்க முடியாது. எதிலும் சமரசத்தையே பேண வேண்டும். சமரசமெனும் கொடியினை நாகரீகத்தின் முன்னணிப் படையில் நாம் உறுதியோடு ஏந்திச் செல்ல வேண்டும்'** எனும் இக்கருத்துக்கள் இதன் தாரக மந்திரமாக ஒலிப்பதைப் பார்க்கின்றோம்.

இலங்கையுட்பட உலகில் நூற்றியைம்பது கிளைகள் வரை இராமகிருஷ்ண நிறுவனங் கள் பரமஹம்சரின் கோட்பாடுகளை முன்னெடுத்து செல்கின்றன. சர்வமத கொள்கையினை இச்சங்கம் அங்கீகரிப்பினும் எந்தவொரு மதத்தையும் குறைவுபடுத்தும் தன்மையில் மதமாற்றம் மேற்கொள்ளப்படுவதை முற்றாகவே அது வெறுக்கின்றது. அது போல் வழிபாட்டு முறைகளிலும் அது மிகுந்த கவனத்தினைக் கொண்டிருக்கின்றது. வழிபாட் டினைச் செய்பவரும், செய்விப்பவரும் அகப்புறத் தூய்மையைக் கொண்டிருந்தால் மட்டும் அது இறைவனால் அங்கீகரிக்கப்படும் என்பதில் இறுக்கமாகவே அது உள்ளது. பாவத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து விட்டு தொடர்ந்து பாவ மன்னிப்பு கோருவதோ, அதனைப் போக்குவதற்காக புனித தலங்களுக்கு யாத்திரை செய்வதோ, புனித நீராடுவதோ, யாகங்கள் வேள்விகளைச் செய்து தூய்மையடைய முயற்சிப்பதோ அர்த்தமற்றவை என்பதை அது உறுதிபட எடுத்துரைக்கின்றது. மனதளவில் தூய்மை பெற முயற்சிப்பதே இறை அங்கீகாரத்திற்கான வழியாக முடியும் என்பதே இதன் அர்த்தப்பாடாகும்.

### 3. இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட கிழக்குப் பிரதேச மக்கள் இராமகிருஷ்ண மிஷனின் கோட்பாடுகளை முழுமையாக அங்கீகரித்தமைக்கான காரணங்கள்.

இந்தியாவைப் போன்று இலங்கையிலும் இராமகிருஷ்ண சங்கம் தடம்பதிக்க காரணமாக இருந்தது சுவாமி விவேகானந்தரின் வரவாகும். 1893இல் சிக்காக்கோ பிரயாணத்தின் போது முதன் முறையாக கொழும்பு நகரில் சுவாமி கால் வைத்தார். 1897 ஜனவரி 15ல் அவரது இலங்கைக்கான வரவு அமைந்திருந்தது. தொடர்ந்தால் போல் ஜனவரி 24ல் சுவாமி யாழ்ப்பாணம் சென்று திரும்பினார். அதன் பின்னர் 1899லும் சுவாமியின் மூன்றாம் வருகை இடம்பெற்றது. இவ்வருகைகளின் போது கொழும்பு, யாழ்ப்பாணம், அநுராதபுரம், கண்டி போன்ற இடங்களில் அவரது ஆன்மீக உரைகள் இடம் பெற்றிருக்கின்றன. எனினும் கிழக்குப் பிரதேச மக்களுக்கு அவரது ஆன்மீக தரிசனம் கிடைக்கும் பாக்கியம் கிட்டாமலே 1902ஜுலை 04ல் அவர் மகாசமாதியடைந்தார். அதன் பின் 1902 ஜுலை 13ல் கொழும்பு நகரில் விவேகானந்த சபை உருவாகியது. 1902நவம்பர் 05ல் யாழ்ப்பாணத்தில் அச்சபை நிறுவப்பட்டது. மட்டக்களப்பிலோ 1915இலே தான் விவேகானந்த சபை நிறுவப்பட்டது. இதனிடையில் இராமகிருஷ்ண மடத் துறவியான சகோதரி அவபாமியா 1912 ஜனவரி 19ல் ஆரையம்பதி சைவப்பாடசாலைக்கு வருகை தந்திருந்த போதும் இராமகிருஷ்ணர் தொடர்பான கருத்துக்கள் அப்போது விரிவாக இங்கு முன்வைக்கப்பட்டதாக அறிய முடியவில்லை.

இவற்றை பார்க்கின்ற போது இராமகிருஷ்ணரின் கோட்பாடுகள் சற்று பின்னோக்கிய தாகவே கிழக்கில் அறிமுகமாகியிருந்தன. எனினும் இலங்கையின் ஏனைய பகுதிகளை விடவும் இப்பிரதேசத்திலேதான் அதன் வேர்கள் விசாலமாக பரந்திருந்தன. இதற்கான காரணங்கள் மிகவும் முக்கியப்படுத்த தக்கவையாகும். சுவாமி விவேகானந்தரால் உறுதியுடனும் உளத் தூய்மையுடனும் பரப்பப்பட்ட பரமஹம்சரின் கோட்பாடுகளை கிழக்கின் விடிவெள்ளியாக உதித்த முத்தமிழ் முனி சுவாமி விபுலானந்தர் முன்னெடுத்த தன்மையும் ஒன்றிலொன்று பிணைப்புற்றதாக அமைந்த கிழக்கின் சமூகக் கட்டமைப்பும் இங்கே கவனத்தில் கொள்ளப்படத்தக்கவையாகின்றன.

சுவாமி விபுலானந்தர் இந்துப் பண்பாடும் தமிழ் உணர்வும் மிக்க சூழலில் பிறந்தார். அவரது காலம் தமிழரும் இஸ்லாமியரும் சகோதரர்கள் போல் மிக்க நெருக்கமாக உறவினைக் கொண்டிருந்த காலம். அவரது கல்விச் செயற்பாடுகள் கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலைகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டதோடு அவரது பணிகளும் அங்கேயே ஆரம்பிக்கப்படுகின்றன. இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என்ற சமரசத் தன்மைக்குள் உயிர்ப்படைந்து பின்னர் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முதல்வராக இருந்த பண்டிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில்வாகனன் துறவுக்குள் புக முன்னரேயே இராமகிருஷ்ண கோட்பாடுகளுக்கு உரிய தன்மை கொண்டவராக மிளிர்ந்திருந்தார். தனது பதவியைத் துறந்து 1922 இராமகிருஷ்ண மடத்தின் சுவாமி விபுலானந்தராக வெளிப்படும் போது ஆளுமையும் நல்லொழுக்கமும் மனவலிமையும், தன்னம்பிக்கையும் மிக்க துறவியாக அவரைக் காணமுடிகின்றது. நல்லாசிரியராக இராமகிருஷ்ண சங்கக் கல்வி நிறுவனங்களின் முகாமையாளராக, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கைப் பல்கலைக்கழகம் என்பவற்றின் முதல் தமிழ் பேராசிரியராக இலங்கையின் கல்வி ஆய்வுக்குழு, பாடவிதான சபை, பரீட்சை சபை என்பவற்றின் முக்கிய உறுப்பினராக அவர் செய்த பெரும் பணிகள் அவர் சார்ந்திருந்த இராமகிருஷ்ண மிஷனுக்கு நன்மதிப்பினையும் பெருமையினையும் சேர்த் திருக்கின்றன.

கிழக்குப் பிரதேச மக்கள் இராமகிருஷ்ணரின் கோட்பாடுகளை முழுமனதோடு உள்வாங்கவும் அதன் மூலம் தங்களது கல்வி மற்றும் சமூக மேம்பாடுகளை வளர்த்துக் கொள்ளவும் அடிப்படைக் காரணமாக அமைந்தவை கிழக்குப் பிரதேச சமூகக்கட் டமைப்பிலும் இராமகிருஷ்ண மிஷன் கோட்பாடுகளிலும் நின்று நிலவிய சமய சமூக சமரசத் தன்மையாகும். வடகிழக்குப் பிரதேசத்தில் இராமகிருஷ்ண மிஷனால் கையேற்றும், நிறுவியும் நடத்தப்பட்ட இருபத்தியொரு பாடசாலைகளில் பத்தொன்பது பாடசாலைகளை கிழக்குப் பிரதேசம் கொண்டிருந்தமை இதனை வலுப்படுத்துவதாக அமையும். இப்பாட சாலைகளில் இப்பிரதேச மாணவர்கள் சாதி மத வேறுபாடின்றி ஒன்றிணைந்து படித்தமையும் அன்றைய சூழலில் கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலைகள் ஏனைய மதங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு வழங்காத வழிபாட்டு உரிமையினை இப்பாடசாலைகள் வழங்கி யிருந்தமையும் வரலாற்றுப் பதிவுகளாகும்.

ஏழை எளிய மக்களை முதன்மைப்படுத்தி சமரசம் மிக்க சமூகத் தளத்தைத் காண விளைந்த இராமகிருஷ்ணரின் கோட்பாடுகள் கிழக்குக்கு முன்னரே வடக்குக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் கிழக்கில் அது பெற்ற செல்வாக்கினை வடக்கில் பெற முடிய வில்லை. ஆறுமுகநாவலரின் சைவப் பாடசாலைகள் செய்த சேவைகள் ஊடாக அவற்றின் வியாபகத் தன்மைக்குள் வளர்க்கப்பட்டு அதுவே இந்துப் பண்பாடாகக் கொள்ளப்பட்ட **'உயர்சாதி ஆசாரம் மற்றும் தீண்டாமை'** கொள்கைகளும் இதற்கு ஒரு காரணமாய் அமைந்தன. மேலும் தமிழும் சைவமும் ஒன்றெனவும் சைவத்தை தமிழ் மதமெனவும் சிறப்பித்து வாழ்ந்த கிழக்குப் பிரதேச இந்து மக்களின் அடிநிலைப் பண்பாட்டிற்கு மாறான கருத்தையே அன்று நாவலர் கொண்டிருந்தார். **'சைவசமயத்தை தமிழ்ச் சமயமென்றும் சைவக் கோயிலை தமிழ்க் கோயிலென்றும் அறிவில்லாத சனங்கள் வழங்குகின்றனர்'** என்ற அவரது கருத்து இதனையே மெய்ப்பிப்பதாக அமைந்தது. நாவலரது கோட்பாடு கள் ஸ்ரீ இராமகிருஷ்ணரது சமரசத் தன்மைக்கு மாறுபட்டுச் செல்வதையே இது காட்டுகின்றது.

இவையனைத்தையும் ஒருங்கே பார்க்கும் தன்மையில் கிழக்குப் பிரதேசத்தே காணப் பட்ட சமூகக் கட்டமைப்பும் இங்கு நிலவிய சாதி மத சமரச பண்பாடும் சுவாமி விபுலானந்தரின் ஆளுமையையும் அவரைப் பின்பற்றி கிழக்குப் பிரதேசத்தே தோன்றி தங்கள் தூய பணிகளை முன்னெடுத்த சுவாமி நடராஜானந்தா, சுவாமி சர்வாதீதானந்தா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ஜீவனாநந்தா மற்றும் சுவாமி அஜராத்மானந்தா என வருகின்ற இராமகிருஷ்ண சங்க துறவிகளின் மனநிறைவான உழைப்பும் அத்தோடு இப்பிரதேச மக்கள் இராம கிருஷ்ண சங்கத்தில் வைத்துள்ள முழுமையான பற்றுதலும் குரு நாதரின் கோட்பாடுகளை தொடர்ந்து நிலைநிறுத்த முக்கிய காரணங்களாய் அமைந்திருக்கும் என நம்பலாம்.

- போதுமென்ற மனநிறைவுக்கு நிகரான செல்வம் எதுவுமில்லை. பொறுமைக்குச் சமமான பண்பு வேறில்லை.
- காலை, மாலை சந்தியா காலமே கடவுள் வணக்கத்திற்கு ஏற்றது. அப்போது மனம் பரிசுத்தமாக இருக்கும்.
- மந்திரம் உடலைத் தூய்மைப்படுத்துகிறது, இறைவனின் மந்திரத்தை உச்சரிப்பதால் மனிதன் தூய்மை அடைகிறான்.
- அஞ்சேல், இறைவன் உன்னைப் பாதுகாத்துக் கொண்டேயிருக்கிறான். அவனுக் குரிய பணிகளைச் செய். தினந்தோறும் சிறிது பணிகளைச் செய்தாலும் மனதி லிருந்து வீணான நினைவுகளை நீக்கிவிடும்.
- உண்மை, அன்பு இவற்றையே கடவுள் விரும்புகிறார். ஆகவே, நீ உன்னுடைய சாதனை, சொல், செயல் அகியவற்றில் உண்மையானவனாக இரு. நீ பேறு பெற்றவன் என்பதை உணர்வாய்.

-தூய அன்னை சாரதா தேவியார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஞானி சுவாமி ஜீவனாநந்தர்

இரா.நாகலிங்கம் (அன்புமணி)
*'தவபதி', ஆரையம்பதி-1*

## 1. ஆத்மீகப் பயணம்

மட்டக்களப்பின் முதலாவது ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் துறவி சுவாமி விபுலானந்தர் ஆவார். அவரைத் தொடர்ந்து சுவாமி நடராஜானந்தா, சுவாமி ஜீவனாநந்தா, சுவாமி அஜராத்மானந்தா ஆகியோர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் துறவிகளாயினர். 1926ல் சுவாமி விபுலானந்தர், மட்டக்களப்பில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் கிளையை நிறுவினார். அவர் (1926-1929) 3வருடங்கள், (1933-1939) 6வருடங்கள் என 9 வருடங்கள் இம்மிஷனை நிர்வகித்தார்.

அவருக்குப்பின் பிரம்மச்சாரி அவ்யக்தானந்தா (1930-1932) 2வருடம், சுவாமி சுந்தரானந்தா (1932-1933) 2வருடம், சுவாமி நிஸ்கமானந்தா (1939-1942) 4வருடம், சுவாமி ரித்தாஜானந்தா (1942-1945) 4வருடம், சுவாமி ஹரிஷ்கேசானந்தா (1945-1946) 2வருடம், சுவாமி நடராஜானந்தா (1946-1953) 8வருடம், (1954-1967) 13 வருடம், சுவாமி கூடஸ்தானந்தா (1953-1954) 2வருடம் இம்மிஷனை நடத்தியுள்ளனர்.

ஆக,1926-1967 வரை 41 வருடங்கள் இத்தனை சுவாமிகளும் இம்மிஷனை நடத்திய பின் 17.3.1967ல் சுவாமி ஜீவனாநந்தா இம்மிஷனைப் பொறுப்பேற்றார். அவர் 4.02.2006ல் அமரராகும் வரை 39வருடங்கள் இம்மிஷனை நடத்தியுள்ளார். அதாவது கடந்த கால 41வருடகாலம் பயணத்தை அண்மித்ததாக இக்காலப்பகுதி (39வருடங்கள்) அமைகிறது.

கடந்த காலங்களில் தளர் நடை போட்டு வளர்ந்த இம்மிஷன், சுவாமி ஜீவனானந் தாவின் காலத்தில் வீறு கொண்டெழுந்து விஸ்தாரமாக விரிந்து பரந்து ஏறு நடை போட் டதை நாம் அறிகிறோம். இவர் காலத்தில் பரந்துபட்ட பல செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டதையும் நாம் அறிவோம்.

## 2. சுவாமி ஜீவனாநந்தாவின் செயற்பாடுகள்

சுவாமி ஜீவனாநந்தாவின் காலத்துப் பணிகள் இம்மிஷனை வலுவாகக் கட்டி எழுப்பியதை நாம் காணலாம். அவை வருமாறு.

1. மட்டக்களப்பு(கல்லடி உப்போடை) மாணவர் இல்லத்துக்காக விசாலமான நிரந்தரக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. 27.05.1972ல் இக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மட்டக்களப்பு சாரதா மகளீர் இல்லத்துக்கான விசாலமான கட்டடம் நிர்மாணிக்கப் பட்டது. இக்கட்டடம் 3.6.1985ல் திறந்து வைக்கப்பட்டது.

3. காரைதீவு ஸ்ரீ சாரதா மகளீர் இல்லத்துக்கான விசாலமான கட்டடம் அமைக்கப் பட்டது. இக்கட்டடம் 27.5.1994ல் திறந்து வைக்கப்பட்டது. (இக்கட்டடங்கள் சகல வதிகளும் கொண்டவை)

4. நூகம் விவசாயப்பண்ணை - அரசாங்கம் வழங்கிய 36 ஏக்கர் காட்டுப்பூமி வெளி யாக்கப்பட்டு 1967இப்பண்ணை அமைக்கப்பட்டது. இதில் ஒரு அணைக்கட்டும் வாய்க்காலும் அமைக்கப்பட்டது. இல்லங்களின் உணவுத் தேவையில் ஒரு பகுதி இவ்விவசாயப் பண்ணை மூலம் பூர்த்தி செய்யப்பட்டது.

5. விவேகானந்தபுரம் குடியிருப்பு - பாதிக்கப்பட்ட நகர சுத்தித் தொழிலாளர் களுக்கென 27 வீடுகள், மின்சாரம் தண்ணீர், பாதை வசதிகளுடன் இக்குடியிருப்பு 3.5.97ல் திறந்து வைக்கப்பட்டது.

6. வீடமைப்புத் திட்டம்- பாதிக்கப்பட்ட மக்களுக்கெனப் பின்வரும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

அ) மட்டிக்கழி கிராமம்- 6.வீடுகள்

ஆ) அக்கரைப்பற்று கிராமம்- 10வீடுகள்

இ) விவேகானந்தபுரம் - 27வீடுகள்

சீலாமுனை- 40வீடுகள் (சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு)

7. மாந்தீவு சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் மாந்தீவில் உள்ள தொழுநோயாளர் களுக்காக அமைத்துக் கொடுக்கப்பட்டது.

## 3. குருகுல மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி

சூதும் வாதும் வேதனை செய்யும் என்பது ஆன்றோர் மொழி. இன்றைய உலகில் பெரும்பாலானவர்களிடம், இத்தகைய சிறுமை காணப்படுகிறது. பல பெரிய மனிதர்கள் பெரிய உத்தியோகம் வகிப்பவர்கள், இத்தகைய சிறுமையில் மூழ்கி இருப்பது கண்கூடு இவர்களுக்கு மத்தியில், நற்பண்புள்ள மக்களாக இல்லக் குழந்தைகள் வாழ வேண்டும் என்பது சுவாமிஜீயின் குறிக்கோள் ஆகும்.

இதற்கு முன்பு அத்தகைய குறிக்கோள் இல்லத்தில் இருந்ததுதான். ஆனால் சுவாமி ஜீவனாநந்தா இவ்வில்லத்தைப் பொறுப்பேற்றபின் இவ்விடத்தில் மேலும் தீவிர கவனம் செலுத்தினார். 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' எனும் குறளுக்கு அமைய இல்லக் குழந்தைகளை ஒழுக்கசீலர்களாக உருவாக்குவதில் சுவாமிஜீ முழுக்கவனம் செலுத்தினார்.

உண்மை, நேர்மை, சத்தியம் ஆகியவையே இத்தகைய வாழ்க்கையின் அடிப்படை யாகும். வறுமையிலும் செம்மை, தன்னலம் ஒழித்தல், ஏழைக்கிரங்கல், இறைபக்தி, நாளாந்தப் பிரார்த்தனை, யோகாசனம் முதலிய அம்சங்கள் இல்லக் குழந்தைகளின் வாழ்க்கைக்கு அத்திவாரமிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு வாழ்க்கைச் சூழல்களிலும், வறுமையிலும் நொந்து வரும் பிள்ளைகளுக்கு இத்தகைய பயிற்சி சற்றுக் கடினமானதுதான். ஆனாலும் மிக புரிந்துணர்வுடனும் மனிதாபிமான சிந்தனையுடனும் சுவாமிஜீ இப்பணியை மேற்கொண்டார்.

**4. உறுகாமம் விவசாயப் பண்ணை**

சுவாமி ஜீவனாநந்தா மேற்கொண்ட பணிகளில், இதுவும் முக்கியமானதாகும். இல்லக் குழந்தைகள் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதுடன், உழைப்பின் மகத்துவத்தையும் அவர்கள் உணர வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் சுவாமிஜீ இம்முயற்சியில் இறங்கினார். இம்முயற்சி தனித்துவமானது.

அவரது தொடர் முயற்சியினால் அப்போது அரச அதிபராக இருந்த திரு.தேவநேசன் நேசையா, சின்னமாவளை பிரதேசத்துக்கு அருகில் 36 ஏக்கர் காட்டுநிலத்தை ஸ்ரீஇராமகிருஷ்ண இல்லத்துக்கு அன்பளிப்பாக, 1967ல் வழங்கினார். இந்நிலம் உறுகாமத்தில் உள்ளது.

இத்தகைய காட்டுநிலத்தை வயல்வெளி ஆக்குவதென்பது லேசான காரியம் அல்ல, மேற்கு ஜேர்மனியில் தர்ம ஸ்தாபனமான 'பட்டினியிலிருந்து விடுதலை' நிறுவனம்(FFHC) வழங்கிய நிதி உதவியால் இக்காட்டு நிலம் வளம் கொழிக்கும் வயல் பிரதேசமாக மாற்றப்பட்டது.

இதில் விவசாயமும், பண்ணைத் தொழிலும் மேற்கொள்ளப்பட்டன. 1990வரை இந்நிலத்திலிருந்து மிஷனுக்குத் தேவையான நெல்லும் பாலும் கிடைத்தன. இல்லத்திலுள்ள சிரேஷ்ட மாணவர்கள் இவ்விவசாயப் பண்ணையில் முழுமூச்சாக உழைத்தனர். தேவையான மரக்கறிகளும் கிடைத்தன. பல நலன்விரும்பிகள் இவ்விவசாயப் பண்ணையை உருவாக்குவதில் பங்களிப்பு செய்தனர். ஒரு சீனப்பழமொழி நினைவுக்கு வருகிறது **'ஏழைக்கு ஒரு மீனைக் கொடுத்தால் அவனுக்கு ஒரு வேளை உணவுதான் கிடைக்கும், ஆனால் அவனுக்கு மீனைப் பிடிப்பதைக் கற்றுக் கொடுத்தால் வாழ்நாள் முழுவதும் அவனுக்கு உணவு கிடைக்கும்'** இதைத்தான் சுவாமிஜி செய்தார். துரதிஷ்டவசமாக இலங்கை அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக இப்பண்ணை 1990ல் நிறுத்தப்பட்டது.

**5. புதிய கட்டடங்கள் அமைத்தல்**

சுவாமி ஜீவனாநந்தாவின் காலத்தில் கல்லடி ஸ்ரீராமகிருஷ்ண இல்லம், காரைதீவு ஸ்ரீ சாரதா பெண்கள் இல்லம், கல்லடி உப்போடை ஸ்ரீ சாரதா பெண்கள் இல்லம் என்பவற்றுக்காக புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டன என்பது யாமறிந்த செய்தி.

இந்த இல்லங்கள் ஒவ்வொன்றும் விசாலமான நிலப்பரப்பில், விடுதி, பிரார்த்தனை மண்டபம், அலுவலக மண்டபம், என்பவற்றைக் கொண்டதாக அமைந்தன. இக்கட்டடத் திறப்பு விழா ஒவ்வொன்றும் முழுநாள் நிகழ்ச்சியாக பிரார்த்தனைப் பாடல்களுடனும் சமய உரைகளுடனும், நடைபெறுவது வழக்கம். இந்நிகழ்வுகளில் ஏராளமான அன்பர்கள் கலந்து கொண்டு தத்தமது பங்களிப்பைச் செய்வர். இந்நிகழ்வுகள் ஒரு பெரும் சமய விழாவாகவே நடந்தேறின. ஒவ்வொரு நிகழ்வின் போதும் இந்தியாவில் இருந்து சிரேஷ்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளும் வருகை நத்து கட்டடத்தைத் திறந்து வைத்து விழா நிகழ்வுகளில் பங்கு கொள்வர். ஒரு நிகழ்வை மட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

1972ல் கல்லடி உப்போடை ஸ்ரீராமகிருஷ்ண மஷன் புதிய கட்டடம் திறந்து வைக்கப் பட்டது. இலங்கை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் உபதலைவர் சுவாமி பிரேமாத்மானந்தா 27.5.1972ல் இக்கட்டடத்தை திறந்து வைத்தார். ஏராளமான அன்பர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். நாள் முழுவதும் அகண்டநாம பஜனை இடம் பெற்றது. அன்பர் களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. பிறமதத் தலைவர்களும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர். அத்தகைய ஒவ்வொரு நிகழ்வின் போதும் நம் மனதில் எழும் எண்ணம் - இது சாதாரண மனித முயற்சியால் நிகழக்கூடியது அல்ல சுவாமி ஜீவனாநந்தாவின் ஆத்ம சக்தியே இதை நிறைவேற்றியது.

### 6. 1978 புயல் பாதிப்புகளும் நிவாரண நடவடிக்கைகளும்

23.11.1978ல் கிழக்கில் வீசிய புயலுக்கு இந்த மிஷனும் தப்பவில்லை. மிஷன் கட்டடங்கள், தளபாடங்கள் நாசமாகின. உறுகாமம் பண்ணையில் வேலை செய்தவர்கள் மிகுந்த சிரமத்தின் பேரில் மிஷனுக்கு வந்து சேர்ந்தார்கள். விபுலானந்தா மணிமண்டபம் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆனாலும் அன்பர்களின் உதவிகள், மிஷனுக்கு வந்து சேர்ந்தன. கிடைத்த உணவுப் பொருட்கள், பாதிக்கப்பட்ட பல்வேறு கிராமங்களுக்கும் விநியோகிக் கப்பட்டன. மிஷன் கட்டடங்களும் படிப்படியாக திருத்தப்பட்டன.

தன்னை எரித்த சாம்பலில் இருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவைபோல இம்மிஷன் உயிர்த்தெழுந்து பழைய நிலைக்கு வந்தது. அதற்குக் காரணம் சுவாமி ஜீவனாநந்தாவின் மன உறுதியும் தன்னம்பிக்கையும் என்றால் மிகையாகாது.

மிஷன் தேவைகளைப் பூர்த்தி செய்யாவிட்டாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவை யான உதவிகளை வழங்குவதற்கு சுவாமிஜீ முன்னுரிமை கொடுத்தார்.

நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தத்தம் ஊரில் உள்ள பாடசாலைகளிலும், ஆலயங் களிலும், தற்காலிக கொட்டில்களிலும் தங்கினர். உணவு ஒரு புறம் இருக்க, மேற்கண்டவாறு அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு தேவைகளிருந்தன. சுவாமி ஜீவனாநந்தா முடிந்தவரை பொருட்களைச் சேகரித்து மேற்படி அகதிகளுக்கு வழங்கினார். இப்புயலினால் மிஷன் உடமைகளுக்கு ஏற்பட்ட இழப்பு 17.5 லட்சம் எனக் கணக்கிடப்பட்டது. அன்பர்கள் ஆதரவாளர்கள் உதவியுடன் மிஷன் சில பேரிழப்பை ஈடுசெய்து தனது பணிகளைத் தொடர்ந்தது. சுவாமி ஜீவனாநந்தா திருப்தி அடைந்தார்.

### 7. மாந்தீவு தொழுநோயாளர்களுக்கான ஆலயம் புனரமைப்பு

மட்டக்களப்பு வாவியின் நடுவில் உள்ள ஒரு தீவு மாந்தீவு. தொழுநோயாளர்கள் ஏனையோருடன் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்பதால் இந்த நோயாளர்களுக் காக மாந்தீவில் ஒரு மருத்துவமனை அமைத்து மேற்படி தொழுநோயாளர்களை அங்கேயே ஒரு விடுதியில் தங்கவைத்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த தொழுநோயாளர்களுக்கென இத்தீவிலேயே ஒரு முருகன் ஆலயம் அமைக்கப் பட்டுள்ளது. இந்து சமய நோயாளிகள் இந்த ஆலயத்துக்குச் சென்று வணங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23.11.1978ல் வீசிய புயலில் இவ்வாலயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அதைப் புனரமைத்துத்தரவேண்டும் என நோயாளிகள் சார்பில் மிஷனுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சுவாமி ஜீவனாநந்தா இக்கோரிக்கையை ஏற்று இவ்வாலயத்தைப் புனரமைத்தார்.

இவ்வாலயம் 11.5 லட்ச ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது. அதன் கும்பாபிஷேகம் 6.5.1983ல் நடைபெற்றது. சுவாமி ஜீவனாநந்தாவும் அன்பர்கள் பலரும் விசைப்படகு மூலம் இத்தீவுக்கு சென்று மேற்படி ஆலய கும்பாபிஷேக வேலைகளைப் பூர்த்தி செய்து திரும்பினர். (அவ்வாறு சென்றவர்களில் இக்கட்டுரை ஆசிரியரும் ஒருவர்)

தொழுநோயாளர்களுக்கு முக்கியத்துவம் அளித்து சுவாமிஜி இப்பணியில் ஈடுபட்டது பற்றி நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். மனித நேயமும், சுவாமியின் பரந்த மனப்பாங்கும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

தொழுநோயாளர்களைத் தவிர வேறு யாரும் இத்தீவில் வசிப்பதில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

## 8. சுவாமி கஹனானந்தா கண்ட நடமாடும் தெய்வம்

கல்லடி ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுக்கு இந்திய ஸ்ரீராமகிருஷ்ண மிஷனிலிருந்து அவ்வப்போது சில சுவாமிகள் வருகை தருவது வழக்கம். கட்டடத்திறப்பு விழா அல்லது ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதா போன்றோரது நினைவு விழாவுக்கு இவர்கள் வருகை தருவார்கள். கோலகலமான வரவேற்பு, ஊர்வலம் முதலியன ஏற்பாடு செய்யப்படும். அவ்வாறு வருகை தந்த ஒரு சுவாமி கஹனானந்தா அவருக்கு கல்லடி ஸ்ரீராமகிருஷ்ண மிஷனில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஊர்வலங்கள் இடம் பெற்றன. பிற ஊர்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டார் (வரவேற்புக் குழுவில் இக்கட்டுரை ஆசிரியரும் ஒருவர்)

சுவாமி கஹனானந்தா ஸ்ரீராமகிருஷ்ண மிஷன், (தலைமையகம்) பொதுச் செயலாளர். அப்போது கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் உபதலைவர் சுவாமி ஆத்மகனானந்தாவும் 16.1.1992ல் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்தார்கள். அவர் கல்லடி மிஷனில் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு சில இடங்களுக்குச் சென்றார். அவர் சென்ற இடமெல்லாம் அவருக்கு பூரண கும்பம் வைத்து மக்கள் வரவேற்றனர்.

அவர் 17.1.92-18.1.92ஆகிய திகதிகளில் மட்/ஸ்ரீராமகிருஷ்ண மிஷனில் தங்கியிருந்தார். மட்டக்களப்பில் சில இடங்களுக்குச் சென்ற பின் கொழும்புக்குப் புறப்பட்டார். அவர்தனது உரைகளில் குறிப்பிட்டவாறு- **'இங்கே உங்கள் மத்தியில் ஒரு நடமாடும் தெய்வம் இருக்கிறது. அவர்தான் சுவாமி ஜீவனாநந்தாஅவருடைய ஆத்மீக சக்தியால் இந்தப் பிரதேசம் முழுவதும் ஆத்மீக அலைகள் செறிந்திருப்பதை நான் உணர்கிறேன்.'** இவ்வாறு சுவாமி கஹனானந்தா கூறினார்.

## 9. விவேகானந்தபுரம்

கல்லடி ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் நிறுவனத்துக்கு அண்மையில் உள்ள ஒரு கிராமம் நாவற்குடா. இங்கே பல நகர சுத்தித் தொழிலாளர்கள் வசிக்கின்றனர். இவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருக்க வீடுகள் இல்லை. வேறு வாழ்க்கை வசதிகள் எதுவும் இல்லை. இந்த பரிதாபம் சுவாமி ஜீவனாநந்தாவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்து. அதன் பயனாக இந்த மக்களுக்கென 27 வீடுகள் கொண்ட ஒரு மாதிரிக் கிராமம் அமைக்கப்பட்டது. இவ்வீடுகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி கிணறுகள், தனித்தனி மலசல கூடம், மற்றும் ஒரு பொது மண்டபம், ஒரு முன்பள்ளிப் பாடசாலை, சிறுவர் பூங்கா, தேவையான வீதிகள், நீர் விநியோகம், ஒரு இந்து ஆலயம் என்பனவும் அமைக்கப்பட்டன. இவ்வேலைத் திட்டத்திற்கான மொத்தச் செலவு 3,373,386 ரூபாவாகும்.

இத்தொகையில் NORAD நிறுவனம், NHDA நிறுவனம் என்பன ரூ1,911,755/-வை வழங்கின. அன்பர்களின் அன்பளிப்பு ரூ92310/-ஆகும். வேலூர் ராமகிருஷ்ண மிஷன் தலைமையகம் ரூ1,207,263/- வழங்கியது. மட்/ராமகிருஷ்ண மிஷன் 162,057/-வை வழங்கியது. இம்மாதிரிக் கிராமம் 1997ல் கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் உபதலைவர் சுவாமி ஆத்மகனானந்தா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. வீடுகளைப் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு குடும்பமும் சுவாமி ஜீவனாநந்தாவைப் பயபக்தியுடன் நினைவு கூர்ந்தனர். ஆலயத்தில் வழிபாடு செய்தனர்.

### 10. சுனாமி வீடமைப்புத் திட்டம்

26.12.2004ல் கிழக்குப்பிரதேசத்தில் ஏற்பட்ட அழிவுகள் கற்பனைக்கு அப்பாற்பட்டவை. 1978நவம்பர் சூறாவளியை விட பன்மடங்கு அழிவுகளை சுனாமி ஏற்படுத்தியது. மிஷனுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டன. மக்கள் அல்லோலகல்லோலப்பட்டன. மக்கள் பாடசாலைகளிலும் கூடாரங்களிலும் தங்கினர். நிவாரண வேலைகள் மந்தகதியில் நடைபெற்றன. (5வருடங்கள் கடந்தும் நிவாரண வேலைகள் பூர்த்தியாக வில்லை)

ஆனால் கல்லடி ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு (குறிப்பிட்ட சில இடங்களில்) புதிய வீடு அமைத்துக் கொடுக்கும் பொறுப்பை ஏற்று, அத்தனை வீடுகளும் 3மாத காலத்துக்குள் பூர்த்தி செய்து கொடுத்தது. பல இடங்களில் மாடி வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது. சுவாமி ஜீவனாநந்தாவே இதற்கு பொறுப்பேற்று வீடமைப்பு வேலைகளை மேற்பார்வை செய்தார்.

ஒவ்வொரு வீட்டுக்கும் அரசாங்கம் வழங்கிய 2 1/2 லட்சம் ரூபாவை வழங்கிக் கொண்டு 'புறாக்கூடு' வீடுகளை பல NGO அமைத்துக் கொடுத்தன. ஆனால் சுவாமி ஜீவனாநந்தா அரசாங்கம் வழங்கிய பணத்துடன் மிஷனிலிருந்தும் பணம் சேர்த்து உருப்படியான வீடுகளை அமைத்துக் கொடுத்தார். ராமகிருஷ்ண மிஷனுக்கும் ஏனைய NGOகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு இச்செயல் மூலம் விளங்கியது.

### 11. அன்பர்களின் நல்லெண்ணமும் நல்லாதரவும்

இத்தகைய பாரிய பணிகளை மெற்கொள்வதற்கு சுவாமி ஜீவனாநந்தாவின் ஆத்ம சக்தியே மூலகாரணமாயிற்று. அதன் மூலம், மக்கள் மத்தியில் அவர் சம்பாதித்துக் கொண்ட நல்லெண்ணமும், நல்லாதரவும் களநிலையில் உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்பல பிரமுகர்கள், அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் அவ்வப்போது இந்த மிஷனுக்கு வருகை தருகின்றனர். அவர்கள் இங்கு நடைபெறும் பணிகளைப் பார்வையிட்ட பின் மிஷனுடன் மிகவும் நெருக்கமாகி விடுகின்றனர். அதன் பயனாக நிதி உதவிகளை வழங்குகின்றனர். மிஷனின் தேவைகள் என்ன என்பதை அறிந்து அத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர். அமரர்களாகிவிட்ட தத்தமது சொந்தங்களின் பெயரால் கொடைகளை வழங்குகின்றனர்.

இம்மிஷனில் உள்ள பார்வையாளர் பதிவேடு நம்மை அசர வைக்கின்றது. ஒவ்வொருவரது குறிப்பும் நம் உள்ளத்தைத் தொடுகிறது. அவர்கள் இந்த மிஷனின் நற்பணிகள் மீதும், அதற்குக் காரணமான சுவாமி ஜீவனாநந்தா மீதும் எத்தகைய மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதை இக்குறிப்புகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

சுவாமி ஜீவனாநந்தாவின் காலத்தில், கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மதத் தலைவர்களும், மிஷனுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தனர். மிஷனில் இடம் பெறும் வைபவங்களில், அதி.வண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை(ஆயர்) முதலியோர் கலந்துசிறப்பித்தனர். மெதடிஸ்த மிஷன் பிரமுகர் வண.ஆனந்தராஜா, மங்களராமய பௌத்த விகாரைத்தலைவர், காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி புகாரி முதலியோரும் இதில் அடங்குவார்.

வண.சகோதரர். S.A.I. மத்தியூ, சுவாமியைப் பற்றி ஒரு நூல் எழுதியுள்ளார். அந்நூல் சுவாமியின் ஆசைப்படி அவரது மறைவிற்குப் பின்பே வெளியிடப்பட்டது.

## 12. நெஞ்சின் அலைகள்

சுவாமிஜீவனாநந்தா கல்லடி ஸ்ரீராமகிருஷ்ண மிஷனைப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து (17.3.1967) நான் அவருடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தேன். இம்மிஷன் மேற்கொள்ளும் பல வைபவங்களிலும், அவ்வப்போது நானும் தொடர்பு பட்டிருந்தேன்.

மனதில் கவலை ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவரிடம் சென்று உரையாடினால் கவலை மறைந்து மன நிம்மதி ஏற்பட்டுவிடும். இவ்வாறு நூற்றுக்கணக்கானோர் மிஷனுக்கு வந்து சந்திப்பார்கள். பல சந்தர்ப்பங்களில் சுவாமியோடு அமர்ந்து மிஷன் செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடும் பேறும் எனக்குக் கிடைத்துள்ளது.

கள்ளம் கபடம் அற்ற அவரது மனமும், வேடிக்கையான பேச்சுகளும் மந்தகாசமான சிரிப்பும் என்றுமே மறக்க முடியாது.

அவர் சுகவீனமுற்றிருந்த காலத்தில் அவருக்கு நெருக்கமான டொக்டர்கள் மிஷனுக்கு வந்து அவருக்கு சிகிச்சைகளை வழங்குவர். அப்போதெல்லாம் தன் வேதனையை பொருட்படுத்தாது எங்களுடன் உரையாடுவார்.

அவர் ஒரு கர்மயோகி, ஆத்மஞானி, அபூர்வ மனிதர், 4.2.2006ல் அவர் மறைந்தார். பிரமாண்டமான அஞ்சலிக்கூட்டம் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. ஆனாலும் அவர் என்றும் எம்முடன் இருப்பது போன்ற உணர்வே மேலோங்கி நிற்கிறது.

அவரைப் பற்றி சொல்வதற்கு இன்னும் ஏராளமான விடயங்கள் உள்ளன. விரிவஞ்சி விடுக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஜீவனாநந்தர் ஓர் கர்ம வீரர்

பொறியியலாளன் கு.குணநாயகம்
மட்டக்களப்பு

யானை பார்த்த குருடர்கள் யானை அப்படியானது, இப்படியானது என விமர்சித்தார்கள். அது போன்றே இந்நூலின் விஜயதாரர்கள் சுவாமிஜீயை பல கோணங்களிலிருந்தும் விமர்சிப்பார்கள். நிர்மாணத்துறையில், அவருடன் அறிமுகமானதிலிருந்து மறையும் வரை தொடர்பு வைத்திருந்ததினால் அவரை ஓர் கர்ம வீரராக நான் கணிக்கின்றேன். இக்கூற்றை உறுதிப்படுத்தச் சில சம்பவங்களைக் குறிப்பிடுவது பொருத்தமாயிருக்குமென எண்ணிக் கீழே குறிப்பிடுகின்றேன்.

செங்கலடி நீர்ப்பாசன இலாகாவில் நான் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் தொண்டன் நமசிவாயம் மாதாமாதம் பணஞ்சேர்க்க வருவது வழக்கம். 1968ம் ஆண்டு முற்பகுதியில் ஒருநாள் தொண்டன் நமசிவாயம் சுவாமி ஜீவனாநந்தருடனும்,அன்பன் நடராசா (இளைப்பாறிய அதிபர்) அவர்களுடனும் காரியாலத்துக்கு வந்து சந்தித்தார். இதுவே அவர்களுடனான முதல் சந்திப்பு.

இச்சந்திப்பின்போது இராமகிருஷ்ண மிஷனுக்கு உறுகாமம் கிராமத்தில் இருப்பத்தைந்து ஏக்கர் விவசாய நிலமிருப்பதாகவும், அதில் செய்யும் விவசாயம் வருடா வருடம் வெள்ளத்தினால் அழிவுறுவதாகவும், அழிவைத் தடுப்பதற்கு வழிமுறை கூறுமாறும் அன்பாக வேண்டிக் கொண்டனர். வேண்டுதல்களை சுவாமிஜீயவர்கள் பணிவோடும் பண்போடும் முன்வைப்பார்கள். அதேநேரம் அன்பன் நடராசாவோ அவற்றை மறுக்க முடியாத முறையில் அன்பாகவும் ஆணித்தரமாகவும் முன்வைப்பார். அக்காரியாலயத்தில் அவர்களுக்கு முன் அறிமுகமான பல பொறியிலாளர்களிருந்தும் அவர்கள் என்னிடம் முறைப்பாடு செய்தது ஆச்சரியமாகவிருந்தது.

அவர்கள் குறிப்பிட்ட இடத்தைச் சென்று பார்வையிட்டபோது உயர்மட்ட அளவுகள் அத்தியாவசியமெனப்பட்டது. நில அளவைக் கருவிகள் மூலம் அக்கணிப்புக்களைச் செய்து படத்தில் போட்டுப் பார்த்ததில் வேளாண்மை நிலத்தின் இருபக்கத்திலும் பாரிய வெள்ளத்தடுப்பு அணைகளைப் போட்டாலே சேதத்தைத் தடுக்க முடியும். ஆனால் அது பெரிய செலவை உண்டுபண்ணும். அப்படிச் செய்தாலும் இது மானாவரிச் செய்கைக்கு மட்டுமே பயன்படும். இதை விடுத்து வெள்ள நீரின் பெரும்பகுதியை சேமிக்க ஓர் குளம் அமைத்தலென்னும் யோசனை உதித்தது. இடமும் பொருத்தமானது போலத்தோன்றியது. எனவே அதற்குரிய அளவைகளைச் செய்து படமும், மதிப்பீடுகளும் தயாரித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றுள்ள அரசாங்கக் கொள்கையின்படி அரசாங்க நிதி இதற்குச் செலவிட முடியாது. 1970,1971களில் நீர்ப்பாசன இலாகா மறுசீரமைக்கப்பட்டது. கிராமிய குளங்களென்ற ரீதியில் இக்குளத்துக்கும் அப்போது சிறிது நிதி பெறக் கூடியதாகவிருந்தது. இப்புதிய குளத்திற்கு இராமகிருஷ்ண குளமெனப் பெயரிட்டு பண ஒதுக்கீடும் பெற்று வேலைகளும் ஆரம்பமாயிற்று. அப்போது ஓர் முக்கிய தேவைக்காகக் கல்கமுவ தொழில்நுட்பசேவா பயிற்சிக் கல்லூரிக்குப் பணிமாற்றம் செய்யப்பட்டேன். இராமகிருஷ்ணக் குளவேலையும் ஆரம்பித்து விட்டது நல்லபடியாகவே நிறைவுறும் என்னும் மனநிறைவுடன் புதிய இடத் திற்குச் சென்று கடமையை ஏற்றுக்கொண்டேன்.

1978ல் களுவாஞ்சிக்குடிக் காரியாலயத்துக்கு ஓர் பிரத்தியேக வேலைக்காக மாற்றஞ் செய்யப்பட்டேன். களுவாஞ்சிக்குடியில் தங்குமிட வசதியின்மையால் ஜீவனாநந்தஜீ சுவாமி மகராஜ் அவர்கள் கல்லடி உப்போடை இராமகிருஷ்ண மிஷனில் தங்க வசதி செய்து தந்தார். அப்பொழுதுதான் இராமகிருஷ்ண குளத்தில் தண்ணீரைச் சேமிக்க முடியாத நிலைபற்றி சுவாமிஜீ அவர்கள் சொன்னார்கள். குளத்தைச் சென்று பார்வையிட்டபோது ஒப்பந்தக்காரர் ஏனோதானோ என்று வேலையை முடித்துவிட்டுக் குளத்தைக் கையளித்துச் சென்றுவிட்டார்கள். அணைக்கட்டில் எங்கும் நீர் வெளியேறும் ஊற்றுக்களிருந்தன. இதனால் நீரைச்சேமிக்கமுடியாமலிருந்தது. சில இடங்களில் மண்சரிவுகளும் ஏற்பட்டன. உடனே செயலில் இறங்க வேண்டியிருந்தது. தொண்டர் சிவயோகம் மூலம் அணைக்க ட்டின் மத்தியில் நீளப்பாட்டுக்கு முழு நீளத்துக்கும் பழைய நிலமட்டத்துக் கீழ் போகும் வரை ஓர் கான் வெட்டி அதனுள் களிமண் போட்டு இறுக்கிய பின்னர் அணைக்கட்டையும் நிரப்பிச் சரி செய்தோம். ஊற்றுக்கள் குறைந்துவிட்டன. குளத்தின் இரண்டு பக்கங்களிலும் நீர்ப்பாசன வாய்க்கால்களையமைத்து அவற்றின் கடைசியில் **'சாரதா குளம்', 'விவேகானந்தர் குளம்'** எனச் சிறிய குளங்களையும் அமைத்தோம். மேட்டு நிலத்திலிருந்தும், வாய்க்கால் களில் வடியும் மேலதிக நீரையும் இவற்றில் சேமித்து மேட்டுப்பயிர்ச் செய்கை, காய்கறிச் செய்கை போன்றவற்றையும் ஆரம்பிக்க முடிந்தது. வலது கரை வாய்க்காலின் மேற் பகுதியிலுள்ள மேட்டுநிலத்தில் தென்னைச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டது. மாணவர் தங்குவதற்கான நிரந்தர கட்டிடங்கள், மாட்டுத் தொழுவங்கள் போன்றனவும் அமைக்கப் பட்டன. இவை எல்லாவற்றையும் சிக்கனமாகவும், திறம்பட முடிப்பதிலும் முன்னின்று உழைத்தவர் தொண்டர் சிவயோகமாவார். சுவாமிஜீ இவற்றிற்கெல்லாம் செலவு செய்ய நிதியை எப்படியோ கண்டுபிடித்து விடுவார். இக்குளம் இரண்டு போக நெல்வேளாண்மை, மரக்கறிச்செய்கை, மாட்டுப்பண்ணை, தெங்குச் செய்கை போன்றவற்றிற்கு உறுதுணை யாயிருந்தது.

பாடசாலை படிப்பை முடித்து வயது கூடிய பின்னரும் வீடு செல்ல முடியாத பலர் தொடர்ந்தும் இல்லங்களில் இருந்தனர். இவர்களைச் சுவாமிஜீ கட்டாயமாக வெளி யேற்றமாட்டார். அப்படியானவர்களை இல்லங்களிலேயே தொண்டர்களாக வைத் திருப்பார். மிஷனுக்கு வருகைதரும் உயர்தர இலாகாத் தலைவர்களுடன் அப்படியான மாணவர்களைப் பற்றிப் பட்டும் படாமலும் பேசி அவர்களுக்கு ஏதாவது தொழில் கொடுக்க முடியுமா என இலேசாக விசாரணை செய்வார். கட்டாயம் உதவி செய்யுங்கள் எனக் கேட்கமாட்டார். அத்தலைவர்களும் எப்படியாவது சிலருக்கு உதவி செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜீயிடம் தொண்டர்களாகப் பணிபுரிந்தவர்களுக்கு எப்படியும் முதலிடம் கொடுப்பார்கள். ஆண்பிள்ளைகளுக்கு மட்டுமன்றிப் பெண்பிள்ளைகளுக்கும் சுவாமிஜீ இப்படியான உதவிகளைச் செய்ய பின்னிற்கமாட்டார். ஆண்கள் விவசாயம், தோட்ட வேலைகள், மந்தை வளர்த்தல் போன்றவற்றிலும் பயிற்சி பெறுவர். பெண்கள் தையல்வேலை, நெசவு, தோட்டவேலை ஆகியவற்றில் தேர்ச்சிபெறுவர். இராமகிருஷ்ண இல்லங்களிலிருந்து வெளியேறும் இளைஞர்கள், யுவதிகள் வாழ்க்கையில் எப்படியும் உயர்நிலையிலேயே இருப்பர். இவற்றிற்குக் காரணம் சுவாமிஜீயின் சீரிய வழிகாட்டலே.

சுவாமிஜீ அவர்கள் ஆண்கள் இல்லத்தில் 1978ல் தென்னந்தும்பின் மூலம் ஓர் தூரிகை உற்பத்தி செய்யும் தொழிலையும் ஆரம்பித்தார். அதற்குரிய தும்பை உள்ளூரில் பெறுவது கஷ்டமாகவிருந்தது. மாணவர்களும் அதில் போதிய நாட்டம் கொள்ளவில்லை. அவ்வாண்டு ஏற்பட்ட சூறாவளியில் அத்தொழில் சின்னாபின்னமாகியது. அதன் பின்னர் அதைக் கைவிடவேண்டியேற்பட்டது.

1978 நவம்பர் 23ம் திகதி ஓர் பயங்கரச் சூறாவளி மட்டக்களப்புப் பிராந்தியத்தையே பாரிய அழிவுக்குள்ளாக்கியது. ஆண்களில்லத்திலுள்ள அத்தனை கட்டடங்களுமே சேதமுற்றன. அன்றிரவு உணவுக்குப் பின்னர் இல்லச் சிறார்கள் தங்குவதற்கெனக் குறிக்கப்பட்டிருந்த படிப்பறை அவர்கள் அதற்குள் செல்ல முன்னரே இடிந்து தரைமட்டமாகிவிட்டது. குருதேவரின் அருளாலும் சுவாமிஜீயின் வழிகாட்டலினாலும் எவருமே எவ்விதப் பாதிப்புமின்றி உயிர் தப்பினர். இரவு உக்கிரமடைந்திருந்த சூறாவளியும், மழையும் விடிந்ததும் நீங்கி விட்டன. விடிந்தபின் பார்க்கும் போது கட்டடங்கள் ஒன்றிலும் கூரைகளிருக்கவில்லை. மரங்களெல்லாம் முறிந்தும் விழுந்தும் காட்சி கொடுத்தன. மின்சாரக்கம்பங்கள், தொலைத் தொடர்புக்கம்பங்கள் யாவும் முறிந்து வீதிகளுக்குக் குறுக்கும் மறுக்குமாக கிடந்தன. சுவாமிஜீயோ எதுவும் நடக்காதது போல் கலவரமடையாமல் இருந்தார். சிவபுரியில் தங்கும் ஸ்ரீமத் சுவாமி சர்வாதிதானந்தஜீ அவர்களும், அன்பன் நடராசாவும் வந்து ஆண்களில்லத்தில் கூடிவிட்டனர். தொண்டர்களும் பிள்ளைகளும் சேர்ந்து வானரசேனைகள் போன்று துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டு விட்டனர்.

மட்டக்களப்பு ஆனைப்பந்தியில் இராமகிருஷ்ண மிஷனின் பெண்களில்லமொன்றிருந்தது. அதிலிருந்த பெண்பிள்ளைகளின் நிலையறியச் சுவாமிஜீ அவசரப்பட்டார். தெருவில் விழுந்த மரங்கள் அகற்றப்பட்டுச் சிறிது போக்குவரத்து ஆரம்பித்தவுடன் சுவாமிஜீ ஓர் மோட்டார் வாகனத்தை ஒழுங்கு செய்து அங்குபோய் அவர்களைப் பார்த்து கூட்டிவரும்படி கேட்டார். நாங்களும் அங்கு சென்று பார்த்தோம் கட்டடத்தில் கூரை ஓடுகள் இல்லை பிள்ளைகளுக்கு எதுவித அசம்பாவிதமும் ஏற்படவில்லை. மட்டக்களப்பில் உறவினர் உள்ள பிள்ளைகளை அவர்கள் வந்து கூட்டிச் சென்றுவிட்டனர். எஞ்சிய பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வந்து சுவாமிஜி அவர்களிடம் ஒப்படைத்தோம். அவர்கள் சில நாட்கள் கல்லடியிலேயே தங்கவேண்டியிருந்தது.

சுவாமிஜீ வெளியில் காட்டிக் கொள்ளாவிட்டாலும் இல்லச் சிறார்களுக்கு உறைவிடமும், உணவும் கொடுக்கும் சிக்கல் இருந்தது. கூரைகளின்மேல் ஏறிப்பார்த்துப் பகுதி பகுதியாக எப்படிக் கூரைகளைச் சீர்செய்யலாமென அன்பன் நடராசாவுடன் ஆலோசித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோம். அவர் கட்டிடவேலைகளில் கூடிய அனுபவமுள்ளவர். அவரே தற்போதுள்ள பிரதான ஆண்களில்லக் கட்டடத்தைப் படங்களின்படி உருவாக்கியவர். அவருடைய சீஷப்பிள்ளைதான் தொண்டன் இராஜகோபால். இருவரும் ஆண்கள் இல்ல அத்தியாவசியத் திருத்தவேலைகளில் உடனடியாகவே செயற்படத் தொடங்கிவிட்டனர்.ஒரு சிறிய தொண்டர் குழாமுடன் சென்று ஆனைப்பந்தியிலுள்ள பெண்கள் இல்லக் கட்டடங்களை ஓரிரு நாட்களில் முன்னிருந்த மாதிரியே சீர் செய்து விட்டோம். சுவாமிஜீக்கு அடுத்த மனக் கஷ்டம் காரைதீவிலுள்ள மிஷனின் பெண்கள் இல்லம் பற்றியது. எங்கள் தொண்டர் குழாம் அங்கும் சென்று அழிவை ஓரளவில் சீர் செய்து விட்டுத் திரும்பியது.

சூறாவளிச் செய்தியைக் கேள்விப்பட்ட உடனேயே சுவாமிஜீயின் சேவையால் ஈர்க்கப்பட்ட வவுனியாவிலுள்ள டாக்டர் இராசசுந்தரமவர்கள் காந்தீயத் தொண்டர்களை ஒரு லொறிவண்டி மூலம் கல்லடிக்கு அனுப்பினார்கள். அவர்கள் வரும்வழியில் மூடப் பட்டிருந்த பாதையை வெட்டித்திறந்து கொண்டே மிஷனுக்கு வந்து திரும்பிப்போனார்கள். பாதை திறக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு போன்ற இடங்களி லிருந்து நிவாரணப் பொருட்கள் கல்லடி மிஷனை வந்தடைந்தன. இல்லத்தேவைகளுக்கு மேலதிகமான பொருட்களைச் சுவாமிஜீ தொண்டர்கள் மூலம் பாதிக்கப்பட்ட கிராமங் களுக்கு அனுப்பி விநியோகஞ் செய்வித்தார்.

ஒரு சில வாரங்களில் சிறுவர் இல்லங்களின் செயற்பாடுகளும் ஓரளவு ஒழுங்கு நிலைக்கு வந்துவிட்டன. சில ஸ்தாபனங்கள் தாங்களாகவும் சுவாமிஜீயின் வேண்டுதல் களின் பேரிலும் சூறாவளி அழிவுகளை நிரந்தரமாகச் சீர் செய்ய முன்வந்தன. அதற்காக அவர்களுக்குக் கட்டடங்களின் படங்கள், திட்டமதிப்பீடுகள் போன்றவற்றை உடனுக்குடன் சமர்ப்பிக்க வேண்டுமே, சுவாமிஜீயின் குறிப்பறிந்து இவை யாவற்றையும் இரவு பகல் பாராமல் செய்து கொடுத்தேன். அன்பன் நடராசாவுக்குச் சிறிது உடல்நலக்குறைவு. எனவே தொண்டன் இராஜகோபாலே வேலைகள் யாவற்றையும் திறம்படச் செய்வித்தார்.

தொழு நோயாளர்களைத் தங்கவைக்கும் மாந்தீவில் ஓர் சித்திரவேலாயுதர் கோவி லுண்டு. அதனையும் இராமகிருஷ்ண மிஷன் சுவாமிஜீயே பரிபாலித்து வந்தார். அக் கோவிலும் சூறாவளியினால் சேதமுற்றிருந்து. அதற்கும் ஆலய அமைப்பு விதிகளின்படி படம் தயாரித்து, ஓர் சிற்பாசாரியாரைக் கொண்டு கர்ப்பக்கிரக விமானத்தையும் மண்டபங் களையுமமைத்து யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியிலிருந்து ஓர் சில விக்கிரகத்தையும் தருவித்துக் கும்பாபிஷேகமும் நிறைவேற்றப்பட்டது. இதற்குச் சுவாமிஜீக்குப் பக்கபலமாய் நின்று செயல்பட்டவர் தொண்டர் சிவயோகமாவார்.

எவ்வளவுதான் வேலைப் பழுவிருந்தாலும் கல்லடி இல்லம், ஆனைப்பந்தி இல்லம், காரைதீவு இல்லம் ஆகிய மூன்றையும் சுவாமிஜீ எதுவித குறைபாடுகளுமில்லாமல் நிர்வகித்து வந்தார். சுவாமிஜீக்கு ஆலோசனையும் ஆறுதலும் கூறக்கூடியவர்களான சுவாமி சர்வாதித்தானந்தர் அவர்களும் அன்பன் நடராசா அவர்களும் வயது மூப்பின் காரணமாகக் கூடிய செயலாற்ற முடியாத நிலையை அடைந்துவிட்டனர். பின்னர் சுவாமி சர்வாதித் தானந்தர் அவர்கள் 1979 ஒக்டோபர் மாதத்தில் காலமாகிவிட்டார்கள். அதன் சொற்ப காலத்தின் பின்னர் அன்பன் நடராசாவும் காலமாகிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் சிறார்கள் நித்திரைக்குச் சென்ற பின்னர் இரவு பதினொரு, பன்னிரண்டு மணிவரையும் காரியாலய வேலைகளைச் செய்து கொண்டிருப்பார். பின்னர் முன் வரவேற்பு மண்டபத்தில் தரையிலேயே படுத்துத் தூங்குவார். மீண்டும் விடியற்காலை நான்கரை மணிக்குச் சிறார்களை எழுப்பித் தொண்டர்களிடம் ஒப்படைத்து விட்டு மீண்டும் காரியாலயப் பணிகளைத் தொடருவார். நேரசூசியின்படி சிறுவர்களோடு பிரார்த்தனையில் ஈடுபட்டுவிட்டு,அவர்களின் சாப்பாட்டையும் மேற்பார்வை செய்துவிட்டு அவர்கள் பாடசாலை செல்லும்போது இடாப்புக் கூப்பிட்டுப் பாடசாலைக்கு அனுப்புவார். இவை அவர் நாளாந்தம் செய்யும் வேலைகளாகும்.

மூன்று சிறுவர், சிறுமியர் இல்லங்களும் தூரத்தூர இருந்தமையினால் சுவாமிஜீக்கு அவற்றை கண்காணிப்பது மிகவும் கஷ்டமாகவிருந்தது. எனவே சிவானந்தா வித்தியாலயத்துக்கு அருகிலிருந்த மிஷனுக்குச் சொந்தமான முந்திரித்தோட்டப் பதினொரு ஏக்கர் நிலத்தில் கட்டிடங்களை அமைத்து இரண்டு சிறுமியர் இல்லங்களிலுமுள்ள பிள்ளைகளை அங்கு தங்க வைத்தால் இலகுவாயிருக்குமெனச் சிலர் சுவாமிஜீக்குக் கூறினோம். சுவாமிஜியின் கூற்றை ஏற்று கொழும்பிலுள்ள தலைவர் ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மாநந்தஜீயிடம் ஆலோசனையை முன்வைத்தபோது அதனை அவர் நிராகரித்து விட்டார். இதுபற்றி இராமகிருஷ்ண மிஷன்சபை உறுப்பினர் திரு.அரசரத்தினம் அவர்களிடம் கூறினேன். அவர் அடுத்த சபைக் கூட்டத்திலே இதுபற்றிப் பேசிக் கட்டட அனுமதியையும் பெற்றுத் தந்தார்.

சுவாமி ஜீவனாநந்தரும் குறிப்பிட்ட நிலத்தின் ஒருபகுதியில் கட்டிடங்களை அமைக்கத் தீர்மானித்து விட்டார். அந்நிலையில் கட்டிடப் படங்களோ. திட்ட மதிப்பீடுகளோ, செயல்படுத்த ஆளணிகளோ இல்லாமல் சுவாமிஜீ அங்கலாய்த்தார். படங்களையும், திட்ட மதிப்பீடுகளையும் செய்து கொடுத்து அன்பன் நடராசாவிடம் சீஷப்பிள்ளையாயிருந்த தொண்டன் இராஜகோபால் கட்டடமமைக்கும் ஆற்றலுடையவரெனச் சிபார்சு செய்தோம். சுவாமிஜீக்கு ஏற்கனவே தெரிந்திருந்தும் பின்னரே ஏற்று கொண்டார்.

பெண்களில்லம் ஆகையால் ஆலயத்தை ஒரே கட்டடத்திலுள் வைப்பது சமயமரபுக்கு ஒவ்வாததெனக்கூறி அதை விலத்தி வைத்துவிட்டுக் கிட்டத்தட்ட கல்லடி ஆண்கள் இல்ல அமைப்பின்படியே படம் தயாரிக்கப்பட்டது. ஆலயத்தை வேறு இடத்தில் அமைக்க ஓர் தனியான வரைபடம் தயாரித்து சுவாமிஜீயும் தொண்டர் இராஜகோபால் மூலம் கட்டட வேலைகளைச் செயற்படுத்தினார். முதலில் செங்கலடியிலிருந்தும் பின்னர் பன்குளத்திலிருந்தும் அதன்பின்னர் களுவாஞ்சிகுடியிலிருந்தும் அம்பாறையிலிருந்தும் இடைக்கிடை வந்து வேலைகளைப் பார்வையிட்டுத் தொண்டன் இராசகோபாலுக்கு சில கட்டிட நுணுக்கங்களைக்கூறுவதுடன் அவரையும் பாராட்டிவிட்டுச்செல்வேன். கட்டடவேலைகள் 02- 09 1982ல் ஆரம்பமாகிப் பூரணமடைந்து 03.06.1985ல் திறப்பு விழாவும் நடந்தது. ஆனைப்பந்திச் சிறுமியர்களை முழுமையாகவும், காரைதீவு இல்லத்திலிருந்து மேல் வகுப்புச் சிறுமியர் சிலரையும் இதில் அனுமதித்துச் சிறப்பாக நடைபெறுகின்றது. ஆறு ஏக்கர் நிலம் இவ்வில்லத்துத்துக்காக ஒதுக்கப்பட்டு நாற்புறமும் சுற்றுமதிலும் அமைக்கப் பட்டுள்ளது. எஞ்சியிருந்த ஐந்து ஏக்கரையும் மட்டக்களப்பு இசைநடனக் கல்லூரி அமைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கால அமைச்சர் செ.இராசதுரை அவர்களின் வேண்டுகோளின் நிமித்தம் சுவாமிஜீ கையளித்து அதுவும் இன்று மேம்பட இயங்கிக் கொண்டிருக்கின்றது.

காரைதீவு சிறுமியர் இல்லத்தைப்பொறுத்தமட்டில் போதிய மிஷன் சுவாமிகள் இல்லாதபடியினால் அதைமூடிவிடும் யோசனையை இராமகிருஷ்ண மிஷன் கொழும்புக் கிளை கொண்டிருந்தது.ஆனால் ஊர் மக்கள் சுவாமி விபுலானந்தர் பிறந்த மண்ணிலிருந்து அதை அகற்றக்கூடாதென பிடிவாதம் பிடித்தனர்.மக்களின் விருப்பத்தினை ஏற்றுக்கொண்ட கொழும்புக்கிளை அவ்வில்லத்தை தொடர்ந்து நடாத்துவதெனத் தீர்மானித்தது.காரைதீவு சிறுமியர் இல்லக் கட்டடங்களோ மிகவும் பழமை வாய்ந்தவை தொடர்ந்து பாவிக்க முடியாத நிலையில் இருந்தன. தொண்டர் சிவயோகம் புதிய கட்டடம் ஒன்றை எப்படி யாவது கட்டவேண்டுமென சுவாமிஜீயை வற்புறுத்தினார். அவர் காரைதீவைப் பிறப் பிடமாகக் கொண்டவர். அவருடைய தகப்பனார் பொன்னையா உபாத்தியாயரும் மிஷன் தொண்டனாக இருந்தவர். புதிய கட்டடத்துக்குச் சுவாமிஜீக்கு வரைபடங்களும் திட்ட மதிப்பீடுகளும் தேவைப்பட்டன. சுவாமியின் சார்பில் தொண்டர் சிவயோகம் என்னை அணுகினார். எழுபத்தைந்து சிறுமியர் தங்கக்கூடிய சகல வசதிகளையும் உள்ளகத்தே கொண்ட ஓர் வரைபடம் தயாரித்துத் திட்ட மதிப்பீட்டையும் கொடுத்தோம். கல்லடியில் சாரதா இல்லம் போன்று பிரார்த்தனை மண்டபத்தை புறம்பாகக் கட்டுவதெனத் தீர்மானித் தோம், ஆனால் அது இன்னமும் கட்டப்படவில்லை.

இக்கட்டடத்துக்கு 22-08-1991ல் அடிக்கல் நாட்டப்பட்டுக் கட்டி முடிந்ததும் 27-05-1994 திறந்து வைக்கப்பட்டது. கட்டடத்தின் முன்பக்கம் வெள்ளம் தேங்கும் நிலம். அதை மண்போட்டு உயர்த்தித் தோட்டச் செய்கை, தென்னை மரங்கள் நாட்டுவதற்குப் பாவிக்கப்பட்டது. முன்னாலுள்ள தோணாவின் கரையில் கிட்ட முட்ட அரை ஏக்கர் நிலம் உயர்த்தி நிரப்பப்பட்டு இராமகிருஷ்ண மிஷன் எல்லைக்குள் கொண்டுவரப்பட்டு விட்டது. பள்ளமாயிருக்கும் போது நாட்டப்பட்ட தென்னங்கன்றுகள் வளர்ந்து தற்போது சோலை யாகிப் பிரயோசனங் கொடுத்து வருகின்றன. கட்டட வேலைகள் நடைபெறும்போது பெரும்பாலும் தினமும் சென்று பார்வையிடுவேன். காரைதீவுச் சிறுமியர் இல்லத்தின் தற்போதைய முன்னேற்றமான நிலைமைக்குச் சுவாமி ஜீவனாநந்தஜீயும் தொண்டர் சிவயோகமுமே முக்கிய பங்காளிகள்.

சுவாமி ஜீவனாநந்தர் அவர்களை 01-07-1990ல் கொழும்புக் கிளைக்கு உபதலைவராக நியமித்தனர் 01-06-1990ல் மட்டக்களப்பு மிஷனுக்கு உதவியாளராக வந்த சுவாமி இராஜேஸ்வராந்தர், சுவாமி ஜீவானாநந்தர் அவர்களிடம் பொறுப்புகளை ஏற்றார். இவரும் ஒரு செயல் வீரன். ஆனால் இவரை விரைவாக மீண்டும் கொழும்புக்கு அழைத்துவிட்டனர். சுவாமி ஜீவனாநந்தர் மீண்டும் 01.06.1991ல் கல்லடிக்கு வந்து பொறுப்பேற்று விட்டார். 23-12-1992ல் சுவாமி அஜராத்மானந்தர் மட்டக்களப்புக் கிளைக்கு வந்து சேர்ந்தார்.

சாரதா சிறுமியர் இல்லம் ஆரம்ப காலத்திலிருந்து கல்லடி உப்போடை இராம கிருஷ்ணபுரமெனப் பெயர் மாற்றஞ்செய்யப்பட்டது. சுவாமிஜீ சாரதா இல்ல மாணவியர் களுக்குத் தையல் பயிற்சி, கலாசார நிகழ்ச்சி போன்றவற்றைப் பழகுவதற்கு ஓர் மண்டபம் அமைக்க வேண்டுமெனக் கருதி ஓர் அரசசார்பற்ற நிறுவனத்திடமிருந்து நிதியுதவி பெறவும் ஒழுங்கு செய்து விட்டார்.அவர்களுக்கு உடனடியாக திட்டமதிப்பீடும்,வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படமும் செய்துகொடுத்தேன். வேலைகளை ஆரம்பித்து துரித கதியில் வேலைகளைத் தொண்டன் இராசபோபால் நிறைவேற்றினார். இக்கலாசாரக் கட்டிடம் 03-12-1993ல் திறந்து வைக்கப்பட்டது. இது கலாசாரத் தேவைகளுக்கு மட்டுமன்றி இல்ல மாணவிகளின் படிப்பகமாகவும் செயல்படுகின்றது.

சுவாமி ஜீவனாநந்தஜீயின் பணிகள் சிறுவர் இல்லங்களோடு மட்டும் நின்றுவிட வில்லை. அவர் இயற்கையின் சீற்றம், செயற்கையின் கொடூரங்கள் முதலியவற்றால் பாதிக்கப்படும் மக்களுக்கு இல்லிடங்கள் போன்றவற்றை அமைத்துக் கொடுத்து அவர்களை வாழவைப்பதிலும் ஈடுபட்டார். இவ்வகையில் விவேகானந்தபுரத்தில் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கான வீடுகள், அக்கரைப்பற்றில் இனக்கலவரத்தினால் பாதிக்கப் பட்டோருக்கான வீடுகள், மட்டிக்களியில் மீனவர்களுக்கான வீடுகள் போன்றவற்றை அமைத்துக் கொடுக்கவும் ஆவன செய்தார்.

இவர் மட்டக்களப்பு வலையிறவில் ஓர் வசதியான நிலச்சுவாந்தார் குடும்பத்தில் 1925ம் ஆண்டு பிறந்தார். ஜீவரெத்தினம் என்னும் இயற்பெயருடைய இவர் தனது மூன்றாவது வயதில் தாயையும், மாணவப்பருவத்தில் தமையனையும் இழந்தார். இடை நிலைக் கல்வியைச் சிவானந்தா வித்தியாலயத்தில் பயின்று தனது இருபதாவது வயதிலே சீனியர் கேம்பிறிஜ் பரீட்சையில் சித்தியடைந்தார். சில ஆண்டுகள் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிவிட்டு 1947ம் ஆண்டு இந்தியா சென்று இராமகிருஷ்ண மிஷனில் துற வறத்தில் பயிற்சி பெற்று 1958ல் சன்னியாசம் பெற்று ஜீவனாநந்தஜீயாகப் பெயர் சூட்டப்பட்டார்.

சுவாமிஜீ அவர்கள் 1966 தொடக்கம் 2006 ஆண்டு வரை மட்டக்களப்பில் பணிபுரிந்து 04-02-2006ல் மகா சமாதியடைந்தார். அவர் பாரமெடுக்கும் போது கல்லடி உப்போடையில் ஒரு சில சிறிய கட்டடங்களோடு மணற்கட்டில் இயங்கியது ஆண்களின் சிறுவர் இல்லம். அதனை இன்று கம்பீரமாகக் காட்சியளிக்கும் கட்டடங்களை அமைத்தும், நந்தவனங் களையும், காய்கறித் தோட்டங்களையும், தென்னந் தோப்பையும் அமைத்தும் கண்கவர் இல்லமாக்கினார்.

முந்திரிகைக் காட்டில் ஓர் பூரணத்துவமான சாரதா இல்லம் என்னும் சிறுமியர் இல்லத்தையும், அழகிய சாரதாதேவியாரின் ஆலயத்தையும், நந்தவனங்கள் போன்ற வற்றையும் அமைத்ததும் சுவாமிஜீயின் அரு முயற்சியினாலேயாம்.

உறுகாமத்தில் இராமகிருஷ்ண குளமென்னும் புதிய குளத்தைக் கட்டுவித்து விவ சாயப்பண்ணை, மாட்டுப்பண்ணை, தென்னந்தோப்பு போன்றவற்றை உண்டுபண்ணினார். இப்பண்ணைகளின் மூலம் முதிய மாணவர்களுக்கு விஞ்ஞான ரீதியான பயிற்சியளிப்பதே சுவாமிஜீயின் சீரிய நோக்கமாகும். இது நாட்டின் அசாதாரண நிலைமையின் காரணமாக தற்போது செயலிழந்துள்ளது. இது கடைசி நாட்களில் சுவாமிஜீயின் மனத்தில் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

சுவாமிஜீயைப் பற்றிக் கூறப்போனால் இன்னும் எவ்வளவோ கூறலாம். இதை மேலும் விரிவடையச் செய்யாமல் இத்துடன் நிறுத்திட்டு இதுகாறும் கூறியவற்றால் ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்த மகராஜ் ஓர் கர்ம வீரரென உறுதிபட விளங்கிக் கொள்வோம். அவரைப் பின்பற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Swami Jivanananda Ji the Man of Vedantic Principles

"Na Hanyate Hanyamane Sarire"

Dr. T. Varagunam

(Former Chanceller, EUSL)

This quotation from the Bhagavad Gita means that consciousness is eternal and it is not vanquished with the destruction of the temporary body. It is a very appropriate theme for describing Swami Jivanananda's life. His consciousness and the results of his work are still with us today although his physical body ceased to exist five years ago.

The Revered Swami was very close to me and to my late mother Mrs. Sellathan-gamThambipillai. Every meeting that I have had with him during the period 1990 to 2005 is clearly etched in my mind. The most significant feature of these meetings was his tranquility and a calmness which I have not observed in any other human being in this world. We rarely discussed spiritual matters; there was no need to do that because his spirituality was shining through in his personal being.

I would like to briefly examine Swami jilvanananda's life in the context of the two main objectives of the Ramakrishna Mission and to see how Swami Jivanananda helped in fulfilling these objectives. The original Ramakrishna Movement was started by Swami Vivekananda in 1897 in Bengal in India.The

Movement was an outcome of the inspiration and insights provided by the great teachings of Sri Ramakrishna Paramahamsa (1836-1886). The two main objectives of the Mission were stated thus:

1. Creation of a band of monks dedicated to Self-Realization and the spreading of the universal principles of Vedanta among all people.

2. Carrying on, in co-operation with lay disciples and workers, service-programmers in various fields of human need, medical, educational, cultural, moral and spiritual - reverently looking upon all men, women and children as veritable manifestation of the Divine.

Swami Jivanananda set out on his mission to contribute to these objectives using Vedantic principles The essence of Vedantic principles is self-knowledge. This quality



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

was very apparent in my discussions with Swami and also in his work during the times of crisis, especially following the tsunami of 2004.. This principle gave him the tranquility which was so noticeable in him. The other Vedantic principles which were apparent in him were clear intentions, awareness, empathy, respect and appreciation of others, making efforts beyond one's own limits and abandoning thoughts which don't contribute to your mission even when you personally like them.

Clear intentions are needed when starting any project. All of us have some idea of what we are after when we take on a project. When Swami became the Manager of Batticaloa Mission in 1967 his 'Sankalpam'(Sanskrit for intention) of improving the services provided by the Mission was apparent to everyone who worked with him. His purusharthas (wishes) were the welfare of the orphans that he was responsible for.

Swami Vivekananda's speeches always exhort listeners to 'arise (Utthistatha), and be awake and aware (Jagritha) and stop not till you reach your goal' (prapthavarannibhodhata). Swami Jivanananda in his talks to the students referred to the philosophy of self awareness and also awareness of the world around you. He used to refer to the Bhagavat Gita which says that when we develop true awareness of self, we begin to understand the true nature of the world also and that we are manifestation of Brahman-the ultimate reality. The Upanishads that reveal the nature of Atman (self) and Brahman are called 'mahavakyas' (great sentences). Each of us approach Brahman from a different perspective while addressing the unification of Atman and Brahman. Swami Jivanananda was an embodiment of this unification of Atman and Brahman. Empathy for other people(have feelings of the other person) was a characteristic that I have frequently observed in Swami's interactions with the people who came for his support. There were many such instances after the cyclone of 1978 when Batticaloa was devastated and Swami had to console many people. Both the Bhagavad Geeta and the Yoga Sutras of Patanjali encourage friendliness (maitri) and kindness/compassion (karuna). Swami used to say when you begin to see yourself in others and feel for others genuinely, you will find that others reciprocate those feelings.

Swami 's appreciation of other people's successes was a sterling quality that he had. Many used to relate their successes in education and in life to the Swami. When he heard these his face lit up with a broad smile and he thanked the almighty for these successes whether they were small or large.

The Vedanta advises us to tell the truth only if it is pleasant to the hearer and not to tell unpleasant truths (satyambhuyat, priyambhuyat, nabhuyatsatyam-apriyam). Swami used to say that it is better for the people themselves to find the unpleasant truths. He stated these truths about the Batticaloa Ramakrishna Mission in the document that he wrote in May 2001. The document is available on the website of the Ramakrishna Mission.

When facing difficult situations the Swami stopped at nothing to get his projects going. I remember he was so touched by the families affected by the tsunami in 2004 he went out of his way to get support for them. remember carrying more than 200 letters individually addressed and signed by him to the devotees and friends in the UK asking for their support for these troubled families. He was not too fond of the 'karma theory'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

which attributed human suffering to 'fate'. His philosophy was if we don't learn from these natural disasters and take actions that stretch us beyond our comfortable situations, we are not using our free will (sveccha) to break out of our karma.

When Swami Jivananda was handed over the Rugam farm land soon after he was appointed as the manager of the Batticaloa Ramakrishna Mission in 1967 he had to do let go of old ways of thinking about the work of the Ramakrishna Mission and develop new ideas. With support from devotees he took a lead in teaching the students about hard work involved in paddy cultivation and he made it a success. This is another instance of his following of the Vedantic principles.

According to the Bhagavad Gita Lord Krishna advises Arjuna to gain control of his mind through Practice (abhyaasa) and detachment (vairaagya).Being a thuravi, abhyaasa and vairaagya came easily to Swami

I have tried to summarise the essential principles of the Vedanta which Swami Jivanandapractised diligently. Such practice is what contributed to his self-discovery which was so apparent in his work and which contributed to the success of his projects. I would like to end this eulogy to Swami Jivananda by recalling a trip that I made with him from Kandy to the Hanuman Temple in Ramboda. Since there were only two of us in the car with me driving I had more than five hours of discussion with him on the journey to and from Ramboda. I was curious about Hanuman worship and about worship of idols in general. After some interesting points that he raised he concluded by saying that it does not matter what you worship or what religion you follow and reminded me of what the Bhagavad Gita said -"As the different streams having their sources in different places all mingle their water in the sea, so, O Lord, the different paths which men take, through different tendencies, various though they appear, crooked or straight, all lead to Thee!"

- This is a great fact. strength is life. weakness is death. Strength is felicity, life eternal, immortal; weakness is constant strain and misery; weakness is death.
- Are you strong/ Do you feel strength/ - for I know it is truth alone that gives strength. I know that truth alone gives life, nothing but going towards reality will make us strong, and none will reach truth until he is string.
- I am responsible for me fate, I am the bringer of good unto myself, I am the bringer of evil. I am pure and Blessed One. We must reject all thoughts that assert to the contrary.

-Swami Vivekananda-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகச்சுடர்

செல்வி. வ.கணபதிப்பிள்ளை
*இராமகிருஷ்ண சாரதா மிஷன்,*
*இலங்கைக்கிளை, கொழும்பு*

'இறைவன் ஒருவனே! அவன் அனைத்து உயிர்களிலும் நீக்கமற நிறைந்து இருக் கின்றான்.' என்ற உயர்ந்த ஞானம் பெற்றவர்கள் தம்முள் உள்ள இறைவனை அனைத்து உயிர்களிலும் பிரத்தியட்சமாகக் காண்பர். பிறர் அடையும் துன்ப துயரங்களை தாமே அடைகின்ற துன்பமென உணர்ந்து அவர் துன்பம் துடைப்பதில் கருத்தாய் இருப்பர். பிறர்க்குரியவராய் வாழ்வர். 'அன்பர் பணி செய்ய ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே எய்தும் பராபரமே' என்ற குறிக்கோளுடன் பிறர் பணி செய்வதையே பெரும் பேறாகக் கொள்வர். உடல், பொருள் ஆவி அனைத்தையும் பிறர் நலனுக்கே பயன்படுத்துவர். சிந்தனை, சொல், செயல் யாவற்றிலும் பிறர் நலன் ஒன்றே நிறைந்திருக்கும். பற்றற்று பயன் கருதாது பணி ஆற்றுவர். இப்படியான ஒரு இளைஞர் கூட்டம் உருவாக வேண்டும் என்ற சுவாமி விவேகானந்தரின் தீர்க்கமான குறிக்கோள் இராமகிருஷ்ண மிஷன் தோற்றத்துடன் நிறைவெய்தியது. மேற்குறிப்பிட்ட பண்பெல்லாம் ஒருங்கே கைவரப்பெற்ற தனித்துவமான இளைஞர் கூட்டத்தை அடக்கிய இந்த மிஷனில் ஒப்பற்ற ஒரு உத்தமனாக இணைந்து உரிய பயிற்சி பெற்று மட்டுநகர் மக்களின் ஆன்மீக, கல்வி, கலாசார வாழ்க்கைத் தரத்தை வளம்படுத்திய பெருமகனார் சுவாமி ஜீவனாநந்தர்.

கிழக்கு மாகாண மக்களின் நலன் பேணும் நோக்குடன் இராமகிருஷ்ண மிஷன் சார்பில் பல ஸ்தாபனங்களையும் பாடசாலைகளையும் நிறுவி பரிபாலித்து வந்தவர் சுவாமி விபுலானந்த அடிகளாவார்.அவருக்குப்பின் அவரது அடியொற்றி பணி புரிந்தவர் சுவாமி நடராஜானந்தா. அவரைத் தொடர்ந்து மட்டுநகர் மாணவ சமுதாயம் உச்ச வளர்ச்சி அடைய உறுதுணை புரிந்த பெருமகனார் சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள். உண்மையிலேயே சுவாமி தியாகத்தின் சின்னம். தன்னலம் என்ற பதமே அவரது அகராதியில் இல்லை. பிறரை வாழ வைப்பதற்கே தான் பிறந்துள்ளேன் என்ற குறிக்கோளுடன் பணி செய்தவர். ஊண், உடை, உறையுள் கிடைக்கப் பெறாது துன்பத்தில் துவண்ட சிறுவர், சிறுமியரை அர வணைத்துக் காத்த பெருந்துறவி.

இராமகிருஷ்ண மிஷன் துறவிகள் பெறும் பயிற்சி மேலான வாழ்க்கைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. சாதி,சமய, இன வேறுபாடோ, செல்வம், கல்வி, செய்தொழில் என்ற தராதரமோ நோக்காது அனைத்து உயிர்களையும் சமமாகக் கருதி அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலோகாயத, பரமார்த்திக வாழ்வு இரண்டிலும் நல்வாழ்வு வாழ வழிகாட்டுதற்கான பயிற்சி அது. துறவு வாழ்வுக்கென மடத்தில் சேருவோருக்கு கழிவறை சுத்தம் செய்வதிலிருந்து அறிவோருக்கு ஆத்மீக வழிகாட்டற்கான அறிவுரை வழங்குதல் ஈறாக அனைத்துத் துறைகளிலும் பயிற்சி வழங்கப்படுகின்றது. தொண்டும் துறவுமே பயிற்சியின் இலட்சியம்.

சுவாமி ஜீவானந்தஜீயை முதன்முதலாக 1960ஆம் ஆண்டு சேலம் ஆச்சிரமத்தில் தரிசிக்கும் பேறுபெற்றேன். அவர் எம்மைச் சந்திப்பதற்கு சமையல் அறையிலிருந்து நேராக வந்தார். அன்று அவர் எந்தக்கோலத்தில் காட்சி தந்தாரோ அதே கோலத்தில் தான் மட்டக்களப்பு ஆச்சிரமத்தில் மடாதிபதியாகப் பார்த்தபோதும் தோற்றமளித்தார். உயர்வு, தாழ்வு பாராது என்றும் ஒன்று போலவே எளிமைக் கோலத்தில் காட்சி தருபவர். மட்டக்களப்புக்கு 1966ம் ஆண்டு பணியாற்ற வந்தபோது அப்போது அங்கிருந்த சுவாமி நடராஜானந்தர் தன்னைக்கட்டி அணைத்துக் கண்ணீர் பெருக்கினார் என்று கூறினார். நோய்வாய்ப்பட்டிருந்த சுவாமி நடராஜானந்தர் தனக்குப்பின் ஆச்சிரமப்பணியைச் செம்மை பெறச் செய்யக்கூடிய திறமையும் துணிவும் வாய்ந்த ஒரு சுவாமியை குரு மஹராஜ் அனுப்பியுள்ளாரே என்று உணர்ச்சி மேலிட கண்ணீர் பெருக்கினார்.

சுவாமிஜீ ஆச்சிரமத்தைப் பொறுப்பேற்றபோது அங்கிருந்த தலைமைச்சுவாமி நடராஜானந்தர் நோய் வாய்ப்பட்டிருந்ததாலும், அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்துக் கொண்டதாலும் ஆச்சிரமத்தின் நிதி நிலைமை மிக மோசமாக இருந்தது. தொடர்ந்து ஆச்சிரமம் நடைபெற முடியுமோ என்ற அச்சம் நிலவியது. இருந்தும் சுவாமி ஜீவனாநந்தஜீ மனம் தளரவில்லை. ஊட்டி ஆச்சிரமத்தில் தான் பணியாற்றிய காலத்தில் அங்கு நிதி நெருக்கடியை எதிர் கொண்டபோது அனைத்துக் கிராமங்களுக்கும் வீடுவீடாகச் சென்று மக்களோடு மக்களாக இரண்டறக்கலந்து நிதி சேர்த்தமையை நினைவு கூர்ந்தார். அச்செயல் நிதியை மட்டுமன்றி மனநிறைவையும் ஆத்மீக பலத்தையும் மக்களுள் ஒரு எழுச்சியையும் கொடுத்தமை நினைவுக்கு வந்தது. குருவருள் உள் நின்று உந்த, திருவருள் துணைநிற்க எக்கருமத்தையும் சாதித்துவிட முடியும் என்ற நம்பிக்கையும் உற்சாகமும் பிறந்தது. மாணவர் வசதி கருதி கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதென உறுதி பூண்டார். 1968ஆம் ஆண்டு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி வீரேஷ்வரானந்தஜீ மஹராஜ் அவர்கள் கல்கத்தாவிலிருந்து வருகை தந்து சிறுவருக்கான கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். நிர்மாண வேலை ஆரம்பமாயிற்று. நிதி சேர்க்கும் வேலையில் இறங்கினார் சுவாமிஜீ.

**சுவாமிஜீயின் வார்த்தைகளிலே பார்ப்போம்**

'காலை 3 மணிக்கே அன்றாடக் கடமைகள் ஆரம்பித்துவிடும். வாகன வசதி எதுவும் இல்லாத அந்தக்காலத்திலே காலையில் ஒரு பக்தரும் நானும் நடக்கத் தொடங்குவோம். வீடு வீடாக ஏறி இறங்குவோம். வீட்டுக்கு ஒரு ரூபாய் சேர்ப்பது தான் எமது திட்டம். யாராவது இரண்டு ரூபாய் தந்தால் ஒரு ரூபாயைத் திருப்பிக் கொடுத்து அடுத்த மாதம் வரும்போது இந்த ஒரு ரூபாயைத் தாருங்கள், மாதம் மாதம் உங்களைத் தேடி வருவோம் என்போம். யாராவது கட்டாயப்படுத்தி கூடிய தொகை தந்தால் எத்தனை ரூபாவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை மாதங்களுக்கான ரசீதைக் கொடுத்து விடுவோம். ஒருமுறை ஒரு அன்பர் தன்னிடமிருந்த 57 சதங்களைக் கொடுத்தார். மிகுந்த நன்றியுடன் அதைப் பெற்றுக் கொண்டோம். பெறுகின்ற ஒவ்வொரு சதத்துக்கும் ரசீதும், நன்றிக் கடிதமும் அனுப்பி விடுவோம். இரவு பதினொரு மணி வரையிலும் சில நாட்களில் அதற்குப் பின்னரும் வேலை தொடரும். இப்படியான நடைமுறையினால் மக்கள் மனம் நெகிழ்ந்தது. இரக்கம் மிகுந்தது, கருணை மேலோங்கிற்று. தம்மால் கொடுக்கக்கூடிய அதிகூடிய தொகையைக் கொடுத்துப் பேராதரவு தந்தனர்' என்பது சுவாமிஜீயின் கூற்று. 1972 ஆம் ஆண்டில் சிறுவர்களுக்கான சகல வசதிகளுடனும் கூடிய விசாலமான கட்டிடம் நிறைவுற்றுத் திறப்புவிழா இடம்பெற்றது. கட்டிடத்தின் மத்தியில் ஆன்ம எழுச்சியூட்டும் குருதேவரின் ஆலயம் அற்புதமாக அமைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து கல்லடியிலே சிறுமியருக்கான எல்லா வசதிகளோடும் கூடிய மிகப்பெரிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 1985 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. அங்கு ஸ்ரீ சாரதாதேவியாருக்கு ஆலயமொன்று தனியான இடத்தில் தனித்துவமான புனிதத்தோடு காட்சி தருகிறது. அதேபோல் காரைதீவிலும் சிறுமியருக்கான ஒரு இல்லம் கட்டப்பெற்று சிறப்பாக இயங்கி வருகிறது. 'ஒரு ரூபாய் ,இரண்டு ரூபாய் வீதம் அறவீடு செய்த தொகையே இந்தப் பாரிய கட்டிடங்களை நிர்மாணித்து முடிப்பதற்கு முழுவதுமாகக் கைகொடுத்து உதவியது' எனக்கூறி குருதேவரின் அருள் பிரவாகத்தை வியந்து உள்ளம் நெகிழ்வார் சுவாமிஜீ.

சுவாமிஜீயின் மேற்பார்வையில் வளர்ந்த குழந்தைகளின் ஒழுக்கம், கல்வி, நம்பிக் கைக்குப் பாத்திரமாதல், வேலைத்திறன், கடமையுணர்ச்சி, கட்டுப்பாடு, நேர்மை, நேரந்த வறாமை, ஆன்மீக வாழ்வில் ஈடுபாடு யாவுமே எல்லோராலும் பாராட்டப்படுபவை. மக்கள் மத்தியில் இவர்களுக்குத் தனி மதிப்புண்டு. எந்தக் காரியாலயத்திற்கு வேலை தேடிச் சென்றாலும் சுவாமிஜீயின் சான்றிதழுடன் சென்றால் நிச்சயம் வேலை பெறலாம் என்ற நம்பிக்கை வீண்போவதில்லை.

மட்டக்களப்புக்குச் செல்லும் அரச அதிகாரிகளோ சமயப்பெரியார்களோ, வெளி நாட்டுப்பிரமுகர்களோ, யாராயிருந்தாலும் இராமகிருஷ்ணமிஷனைப் பார்வையிடத் தவறுவதில்லை.அது பார்வையாளரின் கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய சிறப் போடும் பொலிவோடும் காட்சி தருகிறது. எமது சாரதா சமித்தி உறுப்பினராக இருந்த ஒரு சிங்களச் சகோதரியார் (திருமதி. சூரியபெரும) அந்த ஆச்சிரமத்துக் குச் சென்றபோது தான்பெற்ற அனுபவத்தை இப்படி வர்ணித்தார். 'மட்டக்களப்பு இராமகிருஷ்ண ஆச்சிர மத்துக்குச் சென்றிருந்தேன். அந்த இடத்தின் சுத்தமும், புனிதமும், அமைதியும், தெய்வீ கமும் மனத்துக்கு இதம் தருவதாக இருந்தது. பூத்துப்பொலிவுடன் காட்சி தரும் மலர்ச் செடிகளையும் செழித்து வளர்ந்து காய்த்துப்பயன்தரும் காய்கறித் தோட்டத்தையும் கண்டு களித்தோம். இவை எல்லாம் மாணவர்களது செயற்பாடே. இப்படியான ஒரு சூழலை உருவாக்குவதற்கான பயிற்சி அவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை அறிந்து பேரு வகை கொண்டோம். மாலையில் மாணவர் வெண்ணிற ஆடை அணிந்து ஒழுங்கு குலையாமல் பிரார்த்தனை மண்டபத்திற்குச் செல்வதும் அங்கு அவர்கள் அமர்ந்து மனவொருமைப்பாட்டுடன் பிரார்த்தனை செய்வதும் காண்பவர் உள்ளங்களை உள் முகமாகத் திருப்பவல்லது. மாணவப்பருவத்தில் இவர்கள் பெறும் இப்படியான பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் வருங்கால வாழ்க்கை மிகச்சிறப்பாக அமைவதற்கேற்ற நெறிப்படுத்தல் என்பதை உணர்த்தியது.' இவ்வாறு அந்த இடத்தின் சிறப்பையும் அதை நிர்வகிக்கும் தலைமைச்சுவாமியின் அறிவு, ஆற்றல், அன்பு, ஆளுமைத்திறன், அடக்கம், எளிமை முதலிய மேலாம் பண்புகளையும் விதந்துரைத்து மகிழ்ந்தார்.

சிறுவர் சிறுமியரின் பராமரிப்புடன் மட்டும் சுவாமிஜீயின் பணிகள் கட்டுப்படவில்லை. இதற்கு மேலாக அவர் ஆற்றிய பொதுப்பணிகள் சொல்லுக்கடங்கா. இயற்கையின் சீற்றத்தால் மட்டுமக்கள் பேரின்னலுக்கும் அடிக்கடி ஆளாவதுண்டு. அப்போதெல்லாம் சுவாமிஜீ தனது உணவையும் உறக்கத்தையும் ஒதுக்கி விட்டு உடல் நோயையும் மறந்து பாதிப்புற்ற மக்களுக்கு சமைத்த உணவும் உடைகளும் கொண்டு சென்று கொடுத்து இரவு பகலாக ஓயாது உழைத்த பாங்கு மக்கள் மனதில் என்றும் அழியாத சுவடுகள். முக்கியமாக சுனாமியால் மக்கள் பாதிக்கப்பட்ட காலத்தில் அவர்களுக்கென வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் இருந்து வந்த பண்டங்கள் சேதமடையாதவாறு அவற்றைக் களஞ்சியப் படுத்துவதிலும், பாதிக்கப்பட்டவர்களைச் சரியாக இனங்கண்டு அவர்களிடம் அவற்றைச் சேர்ப்பதிலும் கண்ணும் கருத்துமாய்ச் செயற்பட்டார். பலருக்குத் தரமான வீடுகள் கட்டிக் கொடுத்தார். இப்படி ஒருமுறை அல்ல. அழிவுகள் ஏற்பட்ட ஒவ்வொரு முறையும் அளப்பருஞ் சிரமங்களுக்குள்ளாகி இடருற்றுறோர் துன்பம் துடைப்பதில் தன்னை முற்றுமுழுதாக தியாகம் செய்த பேரருளாளர். சந்தனக்கட்டை தான் தேய்ந்து பூசைக்குரிய புனிதப்பொருளாகப் பயன்படுத்தவது போல சுவாமிஜீயும் தன்னையே தியாகம் பண்ணி மக்கள் நலனுக்கென்றே வாழ்ந்த தியாகச்சுடர்.

'எந்த வேலை தன்னறிவுடனும், ஆழ்ந்த ஈடுபாட்டுடனும் மன ஒருமைப்பட்டுடனும் செய்யப்படுகின்றதோ அந்த வேலை மிகச்சிறந்த பலனைத் தருகிறது' என்ற சாந்தோக்கிய உபநிடத வாக்கியம் சுவாமிஜீயின் செயலாற்றலுக்குப் பொருந்துவதாகிறது.

ஆச்சிரமத்திற்கு வருகை தருகிற இந்துவும், இஸ்லாமியரும், பௌத்தரும், கிருஸ்தவரும் என்று அனைவரையும் மேன்மக்களாக மதித்து ஒரே விதமான அன்போடும் மரியாதை யோடும் வரவேற்று உபசரிக்கிற மேலான பண்புடையவர் சுவாமிஜீ. 'நான் தாசனுக்குத் தாசன்' என்றே எப்போதும் கூறிக்கொள்வார். ஆச்சிரமத்தில் இடம்பெறுகின்ற அனைத்து விழாக்களுக்கும் எல்லா மதப்பெரியார்களுக்கும் அழைப்புண்டு. அவர்களும் வருகை தரத் தவறுவதில்லை. அவ்வாறே சுவாமிஜீயும் அவர்கள் விழாக்களில் தவறாது பங்கு கொண்டு ஒற்றுமைக்கு ஓர் உதாரணபுருஷராக விளங்கினார்.

சுவாமிஜீ பதவியில் எள்ளளவேனும் பற்றின்றி பற்றற்ற பணிபுரிதல் ஒன்றையே பற்றி வாழ்ந்தவர். இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளைத் தலைவர் சுவாமி சம்பிரக்ஞானந்தஜீ 1990 ஆம் ஆண்டில் சமாதி அடைந்த போது சுவாமிஜீயே அப்பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென தலைமைப்பீடம் கேட்டபோது சுவாமிஜீ மறுத்துவிட்டார். அடுத்த தலைவர் வந்து பொறுப்பேற்கும் வரை ஒரு வருடம் அப்பதவியை வகித்து மீண்டும் மட்டுநகர் சென்று தனது பணியை மேற்கொண்டார்.

தாழ்மை, பொறுமை, எளிமை, தன்னடக்கம், தூய்மை, அன்பு, உண்மை, நேர்மை ஆகிய நற்பண்புகள் அனைத்தும் அவரது உடமைகள். அவரிடமிருந்த இறைபக்தி, குருபக்தி, தன்னம்பிக்கை, பூரண தியாகம் என்பனவே வெற்றிகரமாக இத்தனை பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் செய்வதற்கேற்ற ஆற்றலை அவருக்குக் கொடுத்தது. எப்பொழுதும் இன் சொல்லே பேசி எல்லா இதயங்களுக்கும் இதம் அளித்தவர். இத்தனை உன்னத பணி களையும் முக்கரண சுத்தியோடு பற்றின்றிச் செய்து ஆத்ம விடுதலை அடைந்ததே அவர் பெற்ற பெரும் பேறெனக் கொள்வோம்.

இந்தத் தியாகச் சுடரின் ஒளி அந்த ஸ்தாபனத்தின் மீதும் தொடர்ந்து பணிமேற் கொள்ளும் அனைவர் மேலும் பிரகாசித்து மேலும் மேலும் பணி சிறப்புற நடைபெறுவதற்கு அனுக்கிரகம் பண்ணி ஆசி வழங்க வேண்டும் என பிரார்த்தித்து நிறைவு செய்து கொள்வோம்.

- பிறருக்காக செய்கின்ற சிறிய செயல் கூட நம்முள் ஆற்றலை வளர்க்கின்றது. நம்மை சிங்கத்தை ஒத்த வீரர்கள் ஆக்குகின்றது.
- உனக்குள் அளவற்ற ஆற்றலும் அறிவும் வெல்ல முடியாத சக்தியும் குடி கொண்டிருக்கின்றன, என்று நீ நினைப்பாயானால், அந்தச் சக்திகளை உன் னால் வெளியே கொண்டுவர முடியுமானால், நீயும் என்னைப் போல் ஆக முடியும்.
- அளவற்ற பலமும் பெண்ணைப் போல் இரக்கமுள்ள இதயமும் பெற்றவனே உண்மையான வீரன்.
- நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவி செய்தலும், உலகிற்கு நம்மை செய்தலும் தான்.
- நீங்கள் உண்மையிலேயே என் குழந்தைகளானால், எதற்குமே அஞ்சி நின்றுவிட மாட்டீர்கள். நீங்கள் சிங்கக் குட்டிகளைப் போல் திகழ்வீர்கள்.
- இந்த உலகம் கோழைகளுக்கல்ல, ஓட முயலாதே, வெற்றியோ, தோல்வியோ எதிர்பார்க்காதே.

-சுவாமி விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஜீவனாநந்தரின் விந்தை தரும் ஆத்மீக விகசிப்பு

செல்வி. க.தங்கேஸ்வரி
முன்னாள் பா.உ., மட்டக்களப்பு

## 1. காலம் தோறும் அவதாரம்

*'பரித்ராணாய சாதுர்நாம்*
*விநாசாய சதுஷ்க்ருதாம்*
*தர்ம சம்ஸ்தாபனாத்தாய*
*சம்ஹ வாமி யுகே யுகே'*

(பகவத்கீதை)

உலகில் எப்போதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் தலையெடுக்கிறதோ அப்போதெல்லாம் நான் அவதரித்து தர்மத்தை நிலைநாட்டுவேன். காலம் காலமாக இந்நிகழ்வு நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் மக்கள் அதை உள்ளார்ந்து கவனிப்பதில்லை. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் பிறப்பு அத்தகையதொரு அவதாரமாகும். சுவாமி விவேகானந்தர், அன்னை சாராதா தேவி ஆகியோரின் பிறப்பும் அத்தகையதே. இவர்கள் ஒரு புதிய தத்துவத்தை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தனர். அது

'யாதும் ஊரே யாவரும் கேளீர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவதன்றே'

என ஆரம்பமாகும், கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப்பாடலை அடிப்படையாகக் கொண்டது.

## 2. மட்டக்களப்பில் இராமகிருஷ்ணமிஷன்

ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் இன்று உலகெங்கும் பரந்துள்ளது. இலங்கையில் மிக நீண்ட காலமாகச் செயற்பட்டுவருகிறது. மட்டக்களப்பில் அதன் செயற்பாடுகள் பல தரப்பட்டவை.

i. மூன்றுமாணவ, மாணவியர் இல்லங்களைப் பராமரித்தல்.

ii. றூகம் விவசாயப்பண்ணை (தற்போது செயலிழந்துள்ளது)

iii. சமய சமூக நிகழ்வுகள்

iv. இல்ல மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. அறநெறிப் பாடசாலை நடாத்துதல்

vi. குழந்தைகளுக்கான நேசரி பாடசாலை.

இச்செயற்பாடுகள் தொடர்வதற்கு சுவாமி ஜீவனாநந்தர் அவர்களே மூலகாரணம் எனலாம். ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் 17.03.1967 முதல் மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனைப் பொறுப்பேற்றார். அன்று முதல் அவர் அமரர் ஆகும் வரை இம்மிஷன் நடவடிக்கைகளை மிகச்சிறப்பாக உலகம் போற்றும் வண்ணம் மேற்கொண்டார். தன்னுடைய ஆத்மீக பலத்தினால் தனி ஒருவராக பல பாரிய பணிகளை நிறைவேற்றினார். அவற்றுட் சில வருமாறு,

- இவர் காலத்தில் மிஷனுக்குரிய மூன்று இல்லங்களுக்கும் பாரிய விசாலமான புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டன.
- உறுகாமம் விவசாயப்பண்ணை, ஸ்ரீராமகிருஷ்ண குளம் அணைக்கட்டு, வாய்க்கால் என்பன உருவாக்கப்பட்டன.
- விவேகானந்தபுரம் என்ற புதிய குடியிருப்பு உருவாக்கப்பட்டது.
- விபுலானந்த இசைநடனக்கல்லூரி அமைப்பதற்காக மிஷனுக்குரிய பல ஏக்கர் காணி அன்பளிப்புச் செய்யப்பட்டது.
- மாந்தீவில் நோயாளிகளுக்காக ஒரு தனி ஆலயம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

## 3. மாணவரின் குருகுல வாழ்க்கை

பின்வரும் இல்லங்கள் மட்/ஸ்ரீராமகிருஷ்ணமிஷனின் கீழ் இயங்குகின்றன.

i. மட்டக்களப்பு மாணவர் இல்லம்

ii. மட்டக்களப்பு சாரதா மகளீர் இல்லம்

iii. காரைதீவு சாரதா இல்லம்

இம்மூன்று இல்லங்களிலும் உள்ள மாணவ மாணவியருக்கு மனித நேயப்பண்புகள் புகட்டப்படுகின்றன. ஒழுக்க சீலர்களாக அவர்கள் வளர்கிறார்கள்.

மாணவருக்கான செயற்பாடுகள், சுவாமிஜீ அவர்களால் திட்டமிடப்பட்டபடி போதிக்கப் படுகின்றன. காலையில் யோகப்பயிற்சி, பிரார்த்தனை, படிப்பு. அவ்வாறே மாலையில் தோட்டவேலை, விளையாட்டு, பிரார்த்தனை, படிப்பு என வகுக்கப்பட்டுள்ளது.

இந்த இல்லங்களில் தங்கியிருக்கும் மாணவ மாணவியருக்கு சுவாமி அவர்கள் தாயும் தந்தையும் ஆகினார். இந்த இல்லங்களில் தங்கியிருந்து கல்வி கற்ற மாணவ மாணவியர் பிற்காலத்தில் நல்ல பதவிகளில் அமர்ந்தார்கள். அவர்கள் பண்பும் பணிவும் உள்ளவர்களாக விளங்கினார்கள்.

இன்றும் அவர்கள் சமூகத்தில் நல்ல மதிப்புடன் விளங்குகிறார்கள். இதற்கு ஆதார மானது குருகுலத்தில் அவர்கள் கற்றுக்கொண்ட நற்பண்புகள் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ஜீவனாநந்தாவிடமிருந்து வெளிப்பட்ட ஆத்மீக அலைகளே இதற்கு காரணம் ஆகும். ஆத்மீக வாதிகள் ஓடியாடித்திரியாமல் தாம் இருந்த இடத்தில் இருந்தே தமது எண்ணங்களைச் செயற்படுத்துபவர் என்பதற்கு சுவாமி ஜீவனாநந்தாஜீயே பிரத்தியட்ச உதாரணம் ஆகிறார்.

## 4. இலங்கையில் இராமகிருஷ்ண இயக்கம் [நூல் வெளியீடு]

மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் நூல் வெளியீடுகளில் அக்கறை கொள்ளவில்லை. ஆனாலும் ஸ்ரீலங்காவில் இராமகிருஷ்ண இயக்கம் என்ற ஆங்கில நூலை 1978ல் வெளியிட்டது. இந்நூலை எழுதியவர் சுவாமி விருபாக்ஷானந்தர். பதிப்பித்தவர் சுவாமி ஜீவனாநந்தர், வெளியீடு - ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மாணவரில்லம் கல்லடி உப்போடை மட்டக்களப்பு என அந்நூலில் குறிப்பிடப்பட்டது.

இத்தகைய ஒரு நூலில் மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் செயற்பாடுகள் பற்றி அதிகமாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எழுதப்படவில்லை. சுவாமி ஜீவனாநந்தாவின் சுயகட்டுப்பாடும் இதற்கு ஒரு காரணமாகலாம். மட்டக்களப்பு ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் இலங்கையில் உள்ள அனைத்துக் கிளைகளையும் விட மிகச்சிறப்பாக இயங்குகின்றது என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆனாலும் இந்நூலில் மட்டக்களப்பு கிளையின் நடவடிக்கைகள் பற்றிப் பெரிதாக எதுவும் எழுதப்படவில்லை. இந்நூலின் 195ம் பக்கத்தில் ஒரு சிறு குறிப்பு மட்டும் உள்ளது. சுவாமி ஜீவனாநந்தா தன்னைப்பற்றி என்றுமே வெளிப்படுத்திக் கொள்வதில்லை. பிறரையும் எழுத விடுவதில்லை.

*'பணியுமாம் என்றும் பெருமை, சிறுமை*
*அணியுமாம் தன்னை வியந்து'*

எனும் குறள் இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கது.

## 5. மிஷனைப் பார்வை இட்டவர்களின் கூற்று

சுவாமி ஜீவனாநந்தாஜீ மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனை எவ்வளவு கட்டுக் கோப்பாக, எவ்வளவு சிறப்பாக நடாத்தினார் என்பதற்கு சான்றாதாரமாக இம்மிஷனுக்கு வருகை தந்த சுவாமிகளும் பிரமுகர்களும் மிஷனின் பார்வையாளர் குறிப்பேட்டில் எழுதியுள்ள குறிப்புகளைக் கூறலாம்.

இவைவெறும் முகஸ்துதியாக இல்லாமல் உள்ளத்தின் உணர்ச்சி வெளிப்பாடாக அமைந்திருப்பதைக் காணலாம். ஏராளமான குறிப்புகள் உள்ளன. அவற்றுள் மாதிரிக்காக ஒன்றைக்குறிப்பிடுவோம். நல்லை ஆதின ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத சுவாமிகள் குறிப்பிட்ட 02.03.1975 இன்று ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் நிர்வாகத்தினரால் நடாத்தப்பட்டு வரும் குருகுலத்திற்கு விஜயம் செய்யும் பெரும்பேறு பெற்றோம். அங்கு வதியும் மாணவர்களின் கடமையுணர்ச்சி, கட்டுப்பாடு, ஒழுக்கம், யாவும் எம் உள்ளத்தைக் கவர்ந்தன. இன்று தட்டுத்தடுமாறி வாழ்க்கையில் வழிமாறும் இளைஞருலகம் இத்தகைய நிறுவனங்கள் மூலம் பயிற்றப்பட்டவர்களாக இருந்தால், நிச்சயம் பண்பட்ட இளைஞர் சமுதாயம் உருவாகும். இக்குருகுலத்தைச் சிறப்புற நடாத்திவரும் சுவாமிகளின் சேவை மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றத்தக்கது. குறிப்பாக மாணவர்களை அவர்களின் படிப்பு, படுக்கை, உணவுக்குரிய இடம், இல்லங்களை மிகவும் தூய்மையாக வைக்கப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இல்லங்களின் தூய்மை மாணவர்களின் உள்ளத் தூய்மையைப் பிரதிபலிக்கின்றது. 'ஜீவசேவையே சிவசேவையாக நடாத்தும் ஜீவனாநந்த சுவாமிகளின் ஆன்மீக ஒளி மாணவர்களின் இருண்ட இதயத்தில் அருளொளி பரப்பி ஆன்ம நெறி காட்டும். வாழ்க குருகுலம் வாழ்க சுவாமிஜீ வாழ்க அவர் திருத் தொண்டு' என்று இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

### 6. இயற்கை அனர்த்தங்களின் போது உதவிகள்

பொதுவாகவே சுவாமி ஜீவனாநந்தா ஏழைகளுக்கு உதவும் ஒரு திட்டத்தை நடைமுறைப் படுத்தி வந்தார் அவற்றுள் வீடமைப்புத் திட்டம் முக்கியமானது இதில் பின்வரும் வீட்டுத்திட்டங்கள் அடங்கும்.

i. மட்டிக்களி மீனவர்களுக்கான 60 வீடுகள்

ii. அக்கரைப்பற்று இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 வீடு (1993) வழங்கப்பட்டுள்ளன.

iii. விவேகானந்தாபுரம் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு 27 வீடுகள் (1999) இவ்வீட்டுத்திட்டத்தில் அவசியத்தேவைகளான வீதி, மின்சாரம், கிணறுகள், ஆலயம், சமூக நிலயங்கள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன.

இவை பொதுவான சமூக நலத் திட்டத்தில் அடங்குவன. இவைதவிர, கிழக்கு மாகாணத்தை மிகவும் பாதித்த மூன்று இயற்கை அனர்த்தங்கள் பற்றியும் அவ் வேளையில் மிஷன் வழங்கிய நிவாரண உதவி பற்றியும் யாவரும் அறிவர்.

i. 1978 நவம்பர் 23ல் வீசிய சூறாவளி: மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏராளமான குடும்பங்கள் வீடுவாசல்களை இழந்து கைவிடப்பட்ட நிலையில் தவித்தன. அப்போது மிஷனுக்கே பெரும் இழப்பு ஏற்பட்டிருந்தது. மாணவர் இல்லங்கள் மாணவிகளின் இல்லங்கள் பெரும்பாதிப்படைந்தது. இருந்தபோதும் பொது மக்க ளுக்கான நிவாரண வேலைகளுக்கு சுவாமிஜீ முக்கியத்துவம் அளித்தார்.

iii. 26.12.2004 கடல்கோள்:- இதனால் ஏற்பட்ட பாதிப்பு பாரியது. வழக்கம் போல சுவாமிஜீ நிவாரண வேலைகளை மேற் கொண்டதுடன் பல குடும்பங்களுக்கு மாடி வீடு அமைத்துக் கொடுத்தார்.

### 7. ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகள்

சுவாமி விபுலானந்தர் காலத்திலிருந்து ஸ்ரீ ராம கிருஷ்ணமிஷன் பொறுப்பில் பல பாட சாலைகள் இயங்கின. இவற்றுள் மட்/ சிவானந்தா வித்தியாலயம், மட்/கல்லடி பெண்கள் பாடசாலை, மட்/ஆரையம்பதி இ.கி.மி. பாடசாலை என்பன குறிப்பிடத்தக்கன. இவை Model (மாதிரி) பாடசாலைகளாக இயங்கின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 இல் (01.12.1960) அரசாங்கம் தனியார் பாடசாலைகளை சுவீகரித்தபோது மட்/ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் பொறுப்பில் 22 பாடசாலைகள் இருந்தன. இவற்றுள் திருகோணமலையில் உள்ள 3 பாடசாலைகளும் அடங்கும். 1967ல் சுவாமி ஜீவனாநந்தஜீ மட்டக்களப்பு மிஷனைப் பொறுப்பேற்ற போது இவை அரசாங்க பாடசாலைகள் ஆகிவிட்டன.

ஆனாலும் பல கிராமங்களிலிருந்து ஏழைச் சிறுவர்களும், சிறுமியர்களும் மிஷன் விடுதிகளுக்கு வந்து சேர்ந்தனர். அவர்களை நல்லமுறையில் பராமரிக்கும் பொறுப்பை மிஷன் ஏற்றுக் கொண்டு செவ்வனே தன் பணியைச் செய்தது.

பல பாடசாலைகளில் உள்ள ஏழை மாணவ, மாணவியருக்கு அப்பியாசக் கொப்பிகளையும், பாடசாலை உபகரணங்களையும் இனாமாக வழங்கியது.

மேற்படி மிஷன் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதும் மிஷன் நடைமுறைகளிலிருந்து அவற்றின் நடைமுறை மாறுபட்டது. அது தவிர்க்க முடியாது ஒரு நிகழ்வு. ஏனைய சமய நிறுவனப் பாடசாலைகளும் இவ்வாறே 01.12.1960ல் சுவீகரிக்கப்பட்டன. மட் ஸ்ரீராம கிருஷ்ண மிஷனைப் பொறுத்தவரை சமய வேறுபாடு இல்லாமல், அனைத்துப் பாடசாலைகளுக்கும் அவ்வப்போது உதவிகள் வழங்கப்பட்டன. சுவாமி ஜீவனாநந்தாவின் சமய சமரச நோக்கு இதில் வெளிப்பட்டது.

## 8. மிஷனில் நடைபெறும் சமய நிகழ்வுகள்

சமயம் என இந்துக்கள் குறிப்பிடும் பக்திமார்க்க நடவடிக்கைகளிலிருந்து ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் நடவடிக்கைகள் வேறுபட்டவை என்பதை யாவரும் அறிவார்.

சமயம் வேறு ஆத்மீகம் வேறு. எனவே மிஷன் மேற்கொள்ளும் சமய நடவடிக்கைகள் ஆத்மீகத்தின் பாற்பட்டவையாக அமையும். ஆனாலும் ஸ்ரீராமகிருஷ்ண மும்மூர்த்திகளான பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதா தேவி ஆகியோரின் ஜயந்தி தினங்களில் நாள் முழுவதும் பஜனை பிரார்த்தனை என்பவற்றை மேற் கொள்ளும் ஏற்பாடு மட்/ஸ்ரீராமகிருஷ்ண மிஷனில் உள்ளது.

இவற்றிலும் அன்னை சாரதா தேவியார் நூற்றாண்டு விழா, சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜய நூற்றாண்டு விழா என்பன மிகக் கோலாகலமாக கொண்டாடப்பட்டன. இவ்வாறே இம்மிஷனின் பொன்விழா, பவளவிழா முதலியனவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. இக் கொண்டாட்டங்களின் பின்னணியில் ஒரு முக்கியமான சமூக நிகழ்வு இடம் பெறத் தவறுவதில்லை.

சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜய நூற்றாண்டின்போது விவேகானந்தபுரம் என்னும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கான குடியிருப்பு நிறுவப்பட்டது. பல் வேறு நிறுவனங்கள் அதில் பங்களிப்புச் செய்தாலும் அவற்றைக் கூட்டிணைத்து நடைமுறைப் படுத்தும் ஆற்றல் சுவாமி ஜீவனாநந்த மகராஜ் அவர்களுடையதே.

## 9. மாந்தீவு தொழுநோயாளர்களுக்கு ஓர் ஆலயம்

மாந்தீவு என்பது மட்டக்களப்பு வாவியின் நடுவண் அமைந்த ஒரு தீவு. இங்கே தொழுநோயாளர்களுக்கான ஒரு வைத்தியசாலை உண்டு. இந்த நோயாளிகள் வெளியுலகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு அற்றவர்கள். இவர்களுக்கென மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் ஒரு இந்து ஆலயத்தை அமைத்துக்கொடுத்திருந்தது. ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலயம் என்பது அதன் பெயர். 1978 நவம்பரில் வீசிய புயலில் இவ்வாலயம் பெரிதும் பாதிக்கப் பட்டது. மாந்தீவு தொழுநோயாளர் சங்கம் கேட்டுக்கொண்டதன்பேரிலும், இந்துசமய கலாசார அமைச்சின் உதவியுடனும் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டது. ஒன்றேகால் லட்ச ரூபா இதற்குச் செலவானது. இவ்வாலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு 06.05.1983ல் இந்து சமய ஆசார முறைப்படி பூர்த்திசெய்யப்பட்டது. சமய அனுட்டானங்களில் நம்பிக்கைகொள்ளாத ராமகிருஷ்ணமிஷன் இந்தக் கும்பாபிஷேக நிகழ்வை வைதீக முறைப்படி நடாத்தியது ஏன்? இது தொழுநோயாளர்களுக்கான ஓர் ஆலயம். அவர்கள் கோரிக்கைப்படி இது நிகழ்ந்தது. 'மற்றவர்கள் புனிதமாக எதைக் கருதுகின்றார்களோ இதை அறிந்து நீ தலை வணங்கு' என்றார் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர். மிஷனின் சமய சமரச நோக்கம் இதன் அடிப்படையிலேயே அமைந்தது. சுவாமி ஜீவனாநந்தா அன்று முழுவதும் அங்கே இருந்தார். பக்தர்களுடன் மதியபோசனம் உண்டார். மாலையானதும் அனைவரும் இயந்திரப்படகின்மூலம் மட்டக்களப்பிற்குத் திரும்பினர்.

### 10. ஈடு இணையற்ற 39வருடகால ஆத்மீகப்பணி

ஒரு அரச ஊழியர் முழுப் பென்ஷன் பெறுவதற்கு 35 வருடகாலம் சேவை செய்தால் போதும் இளைப்பாறியதும் அவருக்கு ஓய்வூதியம் கிடைக்கும்.

ஆனால் சுவாமி ஜீவனாநந்தா 39 வருடகாலம் (17.3.1967 - 04.2.2006) ஈடு இணையற்ற சமூகப்பணி ஆற்றி உள்ளார். இராப்பகலாக இப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். தன்னலம் இல்லாத பொதுப்பணியில் ஈடுபட்டுள்ளர்ர. அவரை என்னவென்பது ?

தமிழகத்திலிருந்து மட்டக்களப்பு மிஷனுக்கு வரும் சுவாமிகள் அவரை அண்ணாந்து பார்க்கின்றனர். 'கர்மயோகி என்கின்றனர்', 'நடமாடும் தெய்வம் என்கின்றனர்'. தெய்வப் பிறவி என்கின்றனர்.இந்தப் பெருமை அவருக்கு எப்படிக் கிடைத்தது .'மக்கள் சேவையே மகேசன் பூசை' என்ற சுவாமி விவேகானந்தரின் கோட்பாட்டை அவர் கடைப்பிடித்தார். தூய உள்ளத்துடன் அன்பின் சொரூபமாக அவர் வாழ்ந்தார். அனைவரது உள்ளங்களிலும் தெய்வமாக உறைந்தார். அவரிலிருந்து பிரகாசித்த ஆத்மீகஒளி, தெய்வீக ஒளி மட்டக் களப்பு மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்காக மாறியது.

கடைசிக் காலத்தில் அவர் சிறிது நோய்வாய்ப்பட்டிருந்தார். அப்போதும் அவர் தனது மிஷன் கடமைகளைப் புறக்கணிக்கவில்லை. அவர் முகத்தில் உள்ள புன்னகை மாற வில்லை. உடல் வேதனை அவரை வாட்டியது. ஆனாலும் அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. என் கடன் பணி செய்து கிடப்பதே என்றபடி அவர் வாழ்ந்தார்.

### 11. சமூகத் தொடர்பு

மட்டக்களப்பில் நடைபெறும் சமய, சமூக விழாக்களில் ஆசியுரை வழங்க சுவாமி ஜீவனாநந்தாஜீ மகாராஜ் அவர்களையே அழைப்பார்கள். அவரும் எத்தனை வேலைப்பழு இருந்தாலும் இந்த அழைப்புகளை ஏற்று இவ்வைபவங்களுக்கு சமூகம் அளிக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுவதில்லை. அவருடைய பிரசன்னமே இத்தகைய வைபவங்களுக்குச் சிறப்புச் சேர்ப்பது என்பது மறுக்க முடியாத உண்மை.

உரிய நேரத்தில் சுவாமிஜீ சமூகம் அளிப்பார். ஆனால் பல சந்தர்ப்பங்களில் வைப வங்கள் தாமதமாகும். ஆனாலும் சுவாமிஜி பொறுமையுடன் காத்திருப்பார்.

இந்து சமய கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் நாங்கள் பற்பல வைப வங்களை ஏற்பாடு செய்வோம். அறநெறி ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கருத்தரங்கு, பிராமணரல்லாத இந்துக்குருமாருக்கான பயிற்சிக்கருத்தரங்கு, கிராமியக் கலைவிழா, கலாசாரவிழா, அறநெறிப்போட்டிப் பரிசளிப்புவிழா எனப் பலவகையான வைபவங்கள் இடம் பெறும். அத்தனை வைபவங்களிலும் எமது அழைப்பினை ஏற்று சுவாமிஜி கலந்து கொள்வார்.

அவருடைய ஆசியுரை எப்போதும் யதார்த்த ரீதியானதாக அமைந்திருக்கும். மக்களின் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருக்கும். அலங்கார வார்த்தைகள் இல்லாமல் எளிய தமிழில் இலகு மொழியில் அவை அமைந்திருக்கும். அவ்வாறே நூல்கள் சிறப்பு மலர்கள் ஆகியவற்றிக்கான ஆசியுரைகளையும் அவர் ரத்தினச் சுருக்கமாக எழுதிக் கொடுப்பார். அவ்வுரைகள் சம்பந்தப்பட ஆக்கங்களின் மகுடமாக அமைந்திருக்கும். அவ்வப்போது அவர் எழுதும் கட்டுரைகள் ஆணித்தரமாக அமைந்திருக்கும் (உதாரணம்) மட்டக்களப்பு ஸ்ரீஇராமகிருஷ்ணமிஷன் பவளவிழா மலரில் அவர் எழுதியுள்ள 'Sri Ramakrishna Mission Students Home'.

## 12. ஆத்மீக சொரூபம்

கலாசார உத்தியோகத்தர் என்ற முறையிலும், தனிப்பட்ட முறையிலும், அடிக்கடி நான் கல்லடி ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் இல்லத்துக்குச் செல்வது வழக்கம். அப்போதெல்லாம் சுவாமிஜீயின் பாதங்களைத் தொட்டு வணங்குவதற்கும் அவருடன் உரையாடுவதற்கும் வாய்ப்புக் கிடைக்கும். அப்போதெல்லாம் என்னுள் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுவதை நான் உணர்ந்திருக்கிறேன்.

மனதில் எத்தனை சுமை இருந்தாலும் சுவாமிஜீயுடன் உரையாடியபின் அவை எல்லாம் மறைந்து போகும். என்னைப்போல் எத்தனையோ பேர் சுவாமிஜீயைச் சந்திக்க வருவார்கள். அவர்களுக்கும் இதே அனுபவம் கிடைக்கிறது என்பதை அவர்கள் முகங்கள் எடுத்துக் காட்டி விடும். இளைஞர்களுக்கு ஒரு தந்தையாகவும், வளர்ந்தோருக்கு ஒரு நண்பனாகவும் அவர் காட்சி அளிப்பார்; அவ்வாறே உரையாடவும் செய்வார்.

மட்டக்களப்பில் ஸ்ரீ ராம கிருஷ்ணமிஷன் ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றிய தென்றால் அதற்குக் காரணம், சுவாமி ஜீவானந்தாவின் ஆத்மீக சக்தியும், மக்களை அரவணைக்கும் பண்பும் எனலாம். இதன்மூலமே அவர் இந்த நிறுவனத்தைக் கட்டி எழுப்ப முடிந்தது.

ஆத்மீக வாதிகள் அழிவதில்லை எனவே அவரது ஆத்மீக ஒளி நம்முள் நின்று மிஷன் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு உதவும் என்பதில் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Life and Time with Srimat Swami Jivananandaji Maharaj

**Mr. C. Pathmanathan**
**Former Warden, R.K.M. Student's Home, Batticaloa**

My association with Revered Swami began on the 22nd February 1986 and lasted till his demise on the 04th February 2006.

For me Swami epitomized the crux of Sri Ramakrishna Paramahamsa's teachings. Never did he project himself to the limelight but directed all praise and encomia to the Mission. When powerful and veteran personalities in Kallady, Kallady-Uppodai, Nochchimunai and Navatkudah wanted to commemorate the golden jubilee of his work as a Sannyasin, he politely turned down their request and said that he had done nothing wonderful but had only carried out his duties. All praise and thanks he said should go to the Mission. Such was his self-effacement.

Without being hyperbolic, it could be safely said that he put in at least 18 hours of unadulterated, selfless service to the less fortunate children under his care. Even in his sleep he dreamt of ways and means of improving the lot of the children. It is only when his dreams came true, we became aware. He was not interested in statistics to show the academic prowess of the children. Academic ability was not a yardstick for admitting a child to the Homes. Dozens of children from the Eachilampattai, Poonagar, Vakarai areas were admitted because they were destitute and in fear of their life and limb. Most of them have had no formal schooling on account of the disturbed state of affairs in the Muthurarea . Goaded on by His Lordship the Right Reverend Kingsley Swampillai, Swami boldly admitted them. Within the limited and meagre resources at his command he ensured that the children never felt sad. He used to repeat, "These children have had enough grief at home, let us not make them cry here". Adequate emphasis was not placed on academic attainments. Despite the hard, regimented time table and the Spartan meals several children have ended up as graduates, nurses, teachers, horticulturists and artisans. The overall training they got in the Home taught them life skills that no amount of book learning could impart.

Swami was no scholar but he could put his finger on the correct book and quote chapter and verse to support his argument or to counter the contention of another. Many



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

scholars of repute used to come to him to obtain references and clarifications. Patiently and diligently he would rummage through his vast and rich collection and obtain the required information. Though not known for his oratorical skills, whenever he had to make an address, he would most painstakingly jot out the points and ensure that what he spoke was absolutely correct and accurate.

An appreciator of good singing, he encouraged the study and practice of vocal music by employing qualified teachers. Two of his charges ended up with a Master's in Music from the University of Madras.

Hailing from a reputed landed gentry In Valaiyiravu, he divested himself of all his legitimate claims on his ancestral property. Like a true and genuine Sadhu he burnt all his boats and oars behind him before donning the geruva of the Sannyasi. He humbled himself by going from door to door, begging for the upkeep of the Homes. His expectations vis a vis donations was not very high, therefore his disappointments were low. He sincerely appreciated the sacrifice made by the benefactors and prayed for their welfare. His innumerable letters of thanks to donorsexcuded his innermost feelings of gratitude.

Blessed with a Midas touch it was legendary to hear people say that if Swami laid the foundation stone then the structure will certainly be completed. So there were several calls on him to lay foundation stones. From midnight prior to the laying of the foundation stone, Swami would fast, foregoing even the irresistible cup of tea and prepare himself mentally, physically and spiritually for the event. His total and undivided commitment to the job he had to do was evident on Vijayadasami Day when he would sit patiently and lovingly for hours initiating the tiny tots to the alphabet. His self mortification and austerity should be an object lesson to the Sanyasins of today.

Literally born with a silver spoon in his mouth, Swami was extremely careful and thoughtful in spending. He never let down the trust placed on him by his superiors. In fact he took over the administration with a deficit balance. He built up an attractive credit balance that did not deter his successors from stepping into his shoes. Unfortunately his austere, frugal and thrifty life style does not appear to have been emulated by those who succeeded him.

He maintained perfect understanding and harmonious relations with his superiors. Srimat Swami PrematmanandajiMaharaj gave him a free hand to manage Batticaloa affairs. This enabled Swami to build up the Homes to their present state from scratch. Bound by the vow of obedience he always sought advice and received approval for all his ventures from his superiors. Sad to say the same rapport did not prevail after PrematmanandajiMaharaj.

A person who knew his limitations, he never stood in the way of the progress and development of the Mission. Conscious of his inability to perform certain duties satisfactorily, he begged his superiors in Belur Math to send a more suitable person to be the Vice-President in Colombo. He most humbly felt and explained that his educational, oratorical and public relation skills were not adequate for that high office.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Swami's amiable and friendly disposition earned for him the love and respect of all the religious heads in Batticaloa. His immediate presence and short address were highly valued and awaited with great expectation. The Government Agents of Batticaloa fixed important events after ensuring Swami's ability to be present. He respected the Heads of Religions in Batticaloa ained cordial relations with them. The village elders of Kallady-Uppodai, Kallady, Nochchimunai and Navatkudah showered their blessings on him.

May Swami Jivananandaji Maharaj continue to enjoy that unsullied bliss at the Lotus Feet of Bhagavan Sri Ramakrishna!

- The sun lights up the earth, but a small cloud with hide it From our view. Similarly. the insignificant veil of "Maya" prevents us from seeing the omnipresent and all-witnessing 'Sachidananda'-Existence-Knowledge-Bliss.
- The sun can give heat ant light to the whole world, but it can do nothing when the clouds shut out its rays, similarly so long as egotism is in heart, God cannot shine upon it.
- So long as there is egotism neither self-knowledge (Jnana) nor liberation (Mukti) is possible, and there is no cessation of birth and death.
- The consciousness of self is of two kinds; one is ripe, the other unripe. "Nothing is mine, whatever I see, feel. or hear-nay, even this body itself is not mine. I am always eternal, free, and all-knowing" such consciousness as this originates in the ripe ego; while the unripe ego makes man feel himself for ever related to the transitory things of the word. "This is my house, this is my child, this is my wife" consciousness like this is the manifestation of the unripe ego.

-Bhagavan Sri Ramakrishna-

- There is on treasure equal to contentment and on virtue equal to fortitude.
- One who makes a habit of prayer will easily overcome all difficulties and remain calm and unruffled in the midst of the trials of life.
- Certainly you will have doubts, there will be questionings and faith will return again. That is how faith is established.
- God cannot be realized without love, yes, sincere love.
- Even the impossible becomes possible through devotion

-Holy Mother Sri Sarada Devi-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் துறவு வாழ்வில் சுவாமி நடராஜானந்தருக்குப்பின் சுவாமி ஜீவனாநந்தர்

*தேசகீர்த்தி மாசிலாமணி திருநாவுக்கரசு*
*சிவானந்தியன்*

துறவுநிலை ஆன்மீகவாதிகளை உலகிற்கு உவந்தளித்த புண்ணியபூமி மட்டக்களப்பு மாநிலமே.

ஆம், இம்மண்ணின் பெருவிருட்சமாக தழைத்தோங்கி விழுதுவிட்ட இடம் சாந்தினி கேதம் கல்லடிஉப்போடையே. இராமகிருஷ்ண பரமகம்சரின் ஆத்மீகநெறி பரப்ப வியாபித்த இடமும் இதுவே,பெருந்தவசிகள்,ஞானிகள்,சித்தர்கள் மற்றும் பெருமைக் குரியமகான்கள் தடம் பதித்த தலமும் இதுவே, இத்தவத்தின் மங்காப்புகழ் பரப்ப எழுந்து வர கல்லடி உப்போடை ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயமேயாகும்.

சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் அயராத திருப்பணி இம்மடத்திற்கு என்றும் அழியாப் புகழ் சேர்ப்பதாயிற்று. அவரின் ஆன்மீகநெறியும்,சன்மார்க்கபக்தியும் பல்லின மக்களையும் ஈர்த்து இப்பகுதிக்கு மேலும் மகுடம் சூட்டியது. இதனால் மேலும் ஸ்ரீ இராம கிருஷ்ண மடம் புதுப்பொலிவுபெறுவதாயிற்று. இலங்கையில் அதிகீர்த்திபெற்றபாட சாலையாக மட்/சிவானந்தவித்தியாலயம் உருவாவதற்கு சுவாமிவிபுலானந்தரே காரண கர்த்தாவாவார். அவரது அயராதபணியினை முன்னெடுத்துச் சென்றவர்களாக சுவாமி நடராஜானந்தா மற்றும் சுவாமி ஜீவனாநந்தா போன்றோர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் விட்டுச் சென்ற தூய பணியைதொட்டுத் துலக்கும் தூயோர்களாக ஏனைய சுவாமிகள் விளங்குகின்றார்.

சுவாமி நடராஜானந்தாஜீ அவர்களின் செம்மையும்,கருணைவெளித் தோற்றமும் சுவாமி ஜீவனாநந்தரை மிகவும் ஆட்கொண்டது. சுவாமிவிபுலானந்தர் அடிகளாரின் சிந்தனை இவரது வாழ்க்கையைமேலும் புடம் போட்ட தங்கமாகமாற்றியது. துறவறநிலையில் நின்று புண்ணியசேவைசெய்தார். ஏழை,எளியவர் ,மேலோர்,கீழோர்,உயர்ந்தோர்,தாழ்ந் தோர் என்றநிலைபாராது யாவரையும் சமனோடுவழிநடத்தினார். அன்பு இரக்கம் இதுவே இவரதுபக்திமார்க்கத்தின் முத்திரைகளாகும்.

ஸ்ரீ இராமகிருஷ்ணரின் போதனைகளை நித்தம் மனமேற்று மற்றோருக்குபோதித்தார். இதனால் மடத்தின் மேன்மைக்குரியோராகப் பலராலும் போற்றப்பட்டார். இது மட்டு மன்றி மாடமாளிகைகள் என மாணவர்கள் கல்விக்கூடத்தைக் கட்டியெழுப்பலானார். மாணவர்களின் கல்வி வளம் பெருகுவதற்கு பல வளங்களை விரிவாக்கும் பணியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவரும் இவரேயாவார். சீரான நிர்வாகத் தொடர்புகளும் உறவுமுறையும்,தீர்க்க தரிசனச் சிந்தனைச் சிறப்பும் இவரது காலத்தே வளர்ச்சியுற்றதென்லாம். இவ்வாறு தன் புலத்திலிருந்து தக்கோரையும்,தகைசார் மற்றோரையும் வளர்த்தெடுத்த பெருமை இவரையேசாரும்.

பசுஞ்சோலையாகக் காட்சிதரும் செழுமையான நிலப் பரப்பும் சுடராக ஒளிகொடுக்கும் சுற்றுமதிலுள் அமைந்திருக்கும் உயர் கோட்டங்களும்,குன்றாகநிற்கும் துறவுநிலை உருவங்களும்,அழகுசெய்வது மடத்தின் பெருமையைஉலகிற்குபறைசாற்றுவதே.

சுவாமி ஜீவனாநந்தரின் உணர்வும்,அவர் கருணைப் பார்வையும், இன்றும் என்னை ஆட்கொண்டு வழிநடத்துவதை என் மனச்சாட்சிஎன்றும் மறக்காது.

வாழ்க அவர் நாமம், விழுதூன்றிப் பெருகு அவர் தூய பணி.

- நம்பிக்கை வை இறைவனை நம்பியிரு. அந்த நிலையில் நீயே எதையும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. அன்னை காளி உனக்காக எல்லாம் செய்து தருவாள்.
- திரும்பத் திரும்ப மனமே நீ தேவி துர்க்கை பெயர் கூறு. கரும்பின் இனிய அப் பெயரை காலம் முழுவதும் நீ பாடு.
- எல்லா உள்ளத்திலும் இறைவன் இருக்கின்றார். ஆனால், பக்தன் ஒருவன் நல்லாரோடு மட்டும் இணக்கம் கொள்ள வேண்டும்.
- வெறும் ஏட்டுக் கல்வியால் மனிதனுக்கு ஆவதென்ன? பிரார்த்தனையும் ஆத்மச ாதனமும் அவனுடைய முன்னேற்றத்திற்கு அவசியமானவை.
- ஒருவன் எப்போதும் உண்மையையே பேசுகிறவனாக இருந்தால் அல்லாமல் உண்மையே உருவான இறைவனைக் காண முடியாது.

-பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தர்

*பேராசிரியர் மா. செல்வராஜா*

*இ.கி.கு பழைய மாணவர்*

'இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார் பெருமை பிறங்கிற்று இவ்வுலகு' துறவின் பெருமை பற்றிக் கூறவந்த வள்ளுவர் இம்மை மறுமை எனும் இரண்டின் இயல்பு அறிந்து துறவு பூண்டோரின் பெருமையையே இவ்வுலகம் பெரிதாகப் பேசும் என்றார். சுவாமி விபுலாநந்தரை முதலாகக் கொண்ட ஒரு துறவி பரம்பரை ஒன்று மட்டக்களப்பு மண்ணில் தொடர்வது இம் மண்ணிற்குப் பெருமை சேர்ப்பதாகும். சுவாமி விபுலாநந்தர் துறவறம் பூண்டதும் அவரால் இயற்றப்பட்ட கல்வி , சமய , கலாசார சமூகப்பணிகளும் காலத்தால் அழியாதது. அதே மரபில் சுவாமி நடராஜானந்தர் சுவாமி சர்வாதித்தானந்தா, சுவாமி ஜீவனாநந்தர், சுவாமி அஜராத்மானந்தர், சுவாமி மாத்துருகானந்தர் முதலியோர் விபுலாநந்தர் இட்ட ஆரம்பத்தை தொடர்ந்தனர், தொடர்கின்றனர். ஒருவரின் தியாகத்தால் சமூகம், நாடு, உலகு, அடையும் பயன் அளப்பரியது. கௌதம புத்தரின் தியாகமும் யேசு பிரானின் தியாகமும் இவ்வுலகிற்கு அளப்பரிய நன்மையைக் கொண்டு வந்தன. இத்தகைய மகத்தான தியாகத்தால் உலக மக்கள் அனுபவிக்கும் நன்மைகள் அளப்பரியன.

இந்தவகையில் வலையிறவில் சைவ மரபில் தோன்றிய சீவரெத்தினம் அவர்களின் பெற்றோர் தம் பிள்ளை ஒரு சைவச் சூழலில் வாழ்ந்து கற்க வேண்டும் என்று விரும்பினர். இந்நிலையில் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் விபுலானந்தரின் பெரு விருப்புடன் சீவரெத்தினம் சேர்க்கப்பட்டார். இளமையிலேயே ஓர் உயர்ந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்ற எண்ணம் தனக்கு அப்பொழுதே ஏற்பட்டது என்று அவர் பின் னாளில் கூறியதை நான் அறிவேன்.

இந்நிலையில் 1968ம் ஆண்டு இராமகிருஷ்ணமிசனில் தங்கியிருந்து சிவானந்தாவில் கல்விப் பொதுதராதர உயர்தர வகுப்பில் கற்கும் பெரிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இதற்கு வழியேற்படுத்தித் தந்தவர் எனது மதிப்பிற்கும் அன்புக்குமுரிய அதிபர் க. கணபதிப்பிள்ளை அவர்கள். அவர் விபுலானந்தரிடம் பாடம் கேட்ட மாணவர். உயர்ந்த சிந்தனையும், பரந்த எண்ணமும் கொண்டவர். அவரது நெருங்கிய மாணவராக நான் கற்று வந்த காலத்தில் என்னையும் சகமாணவர்கள் அதிபர் [Principal] என்றே அழைத்தனர். அவர்கள் பகிடியாக அழைத்த அந்தப் பதவிக்கு பிற்காலத்தில் நான் 1984ம் ஆண்டு நியமிக்கப்பட்டதை இப்பொழுது நினைவுபடுத்திப் பார்க்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ஜீவனாநந்தர் 1966ல் துறவியாக மட்டக்களப்பிற்கு வருகை தந்திருந்தார். சுவாமி நடராஜானந்தா மகாசமாதி அடைந்தபின்னர் மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசனை பொறுப்பேற்று நடத்தும் பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. சுவாமி ஜீவனாநந்தர் மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசனை பொறுப்பேற்ற போது அதன் பொருளாதார நிலை மிகவும் கஷ்டமான நிலையில் காணப்பட்டதை நாங்கள் அறிவோம். சுவாமிகள் இதனை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டார். மனிதனுக்குச் சந்தர்ப்பங்கள் ஒரு முறைதான் வரும். ஆகவே அதனை ஏற்றுப் பணியாற்றுமாறு அவருடன் நெருக்கமான ஓர் இந்திய நாட்டுத்துறவி கூறியிருந்தார், எனச் சுவாமிகள் என்னிடம் ஒரு முறை கூறியதை நான் ஞாபகப்படுத்துகின்றேன்.

மாணவர் இல்லத்தை நடத்துவது மிகவும் கடினமான காரியமாகத் தென்பட்டது. தினசரிச் செலவுகள் அதிகமாக காணப்பட்டன. சுவாமி ஜீவனாநந்தர் நிதிதிரட்டுவதில் ஓர் செயற்பாங்கான உத்தியினைக் கடைப்பிடித்தார். மாதாந்தம் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் ஒருவரிடம் இருந்து அறவிடுவது என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் தோன்றியது. இதற்கான பற்றுச்சீட்டுக்கள், அட்டைகள் என்பனவற்றைத் தயாரித்து அன்பர்கள் மூலம் நிதி அளவீடுகளை ஆரம்பித்தார்.

'ஜீவனாநந்தர் செல்லும் இடமெல்லாம் மகாலக்ஷ்மியும் செல்வாள்.'என்பது சுவாமி நிஷ்கமானந்தர் சுவாமி ஜீவனாநந்தருக்கு கூறிய வார்த்தையாகும். இது ஓர் ஆசீர்வாதமாகவே ஜீவனாநந்தரைப் பொறுத்தமட்டில் அமைந்துவிட்டது. சுவாமி நிஷ்கமானந்தர் மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷனுக்குப் பொறுப்பாக இருந்தவர். சுவாமி விபுலானந்தர் 'பிரபுத்த பாரதம்' எனும் ஆங்கில மாதாந்த இதலுக்கு ஆசிரியராக 1939ல் இமாலயம் (மாயாவதி) சென்றதால் மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசனின் பொறுப்பு நிஷ்கமானந்தரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசனின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் சுவாமி ஜீவனாநந்தர் சீவரெத்தினம் எனும் பெயரில் சிவானந்தா வித்தியாலயத்தில் மாணவராக இருந்தார். பிற்காலத்தில் நிஷ்க மானந்தர் தென்னிந்தியாவில் நாட்டறம் பள்ளியில் அமைந்துள்ள இராமகிருஷ்ணமிசனின் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செயற்பட்ட காலத்தில் சீவரெத்தினமாக சிவானந்தா வித்தியாலயத்தில் கற்ற மாணவராகிய சுவாமி ஜீவனாநந்தர் துறவறம் பூண்ட பின் சுவாமி நிஷ்கமானந்தரின் கீழ் பணியாற்றும் பாக்கியத்தைப் பெற்றார். அக்காலத்தில் நாட்டறம் பள்ளி இராமகிருஷ்ண மிசனின் அபிவிருத்திப் பணிகளுக்காக சுவாமி ஜீவனாநந்தர் நிதி திரட்டும் பணியில் ஈடுபட்ட போதே இத்தகைய ஆசீர்வாதம் அவருக்குக் கிடைத்தது. மட்டக்களப்பு இராம கிருஷ்ணமிசனின் நிதி நிலைமைகள் படிப்படியாக உயரத்தொடங்கின. மாணவரில்லங்களை நடத்துவது அன்பர்களது ஆதரவினால் சுலபமாகத் தொடங்கியது.

இப்பொழுது புதிய மாணவரில்லங்களை அமைக்க வேண்டிய தேவை எழுந்தது. ஏற்கனவே ஆரம்பகாலத்தில் கட்டப்பட்டிருந்த சிவாலயம் என்றழைக்கப்பட்ட மாணவ ரில்லக் கட்டிடம் எந்த நேரத்திலும் உடைந்து விழக்கூடும் என்ற பொறியியலாளர்களின் கருத்தினை ஏற்ற சுவாமிகள் பல லட்சம் ரூபாய் செலவிட்டு கட்டி முடிக்கப்பட வேண்டிய ஒரு பாரிய பணியை 1967ல் ஆரம்பிக்க முற்பட்டார். மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலய அதிபரது விடுதிக்கு வட புறமாக உள்ள நிலப்பகுதி காயான் மற்றும், விராலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றைகளும் நிறைந்த காடாக இருந்தது. இந்த நிலப்பகுதியே மாணவரில்லம் அமைக்கும் இடமாகத் தெரிவு செய்யப்பட்டது.

சுவாமி பிரேமாத்மானந்தர் அப்பொழுது கொழும்பு இராமகிருஷ்ணமிசன் கிளைக்கு உப தலைவராக விளங்கினார். இவர் இலங்கையைச் சேர்ந்த துறவி. மகாவீர் மகராஜ் என்று அவரது சக துறவிகளால் செல்லமாக அழைக்கப்பட்டவர். மகாவீர் என்றால் அனுமான் என்று அர்த்தம். இவரது காலத்தில் கொழும்பு மிசன் பெரிய வளர்ச்சி கண்டது. இராமகிருஷ்ணகதாமிர்தம் என்ற இராமகிருஷ்ணரின் போதனைகள் அடங்கிய நூலை வங்காள மொழியில் இயற்றிய மகேந்திரநாத் குப்தா என்ற இராமகிருஷ்ணரின் இல்லறச் சீடருடன் நெருங்கிப் பழகியவர் இந்த மகாவீர் என்று அழைக்கப்பட்ட சுவாமி பிரேமாத் மானந்தர். இவரது ஆசியுடனும், அனுசரணையுடனும் புதிய கட்டிடத்திற்குக் கல் வைப்பதற்கு ஸ்ரீசாரதா தேவியின் இறுதிச் சீடரான சுவாமி வீரேஸ்வரானந்தர் கல்கத்தாவில் இருந்து வரவழைக்கப்பட்டார். குறிப்பிட்ட தினத்தில் அன்பர்கள் சகிதம் சுவாமி வீரேஸ்வரானந்த ரால் அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த நிகழ்ச்சி நடைபெற்ற போது கையில் பணத்தை வைத்துக் கொண்டு ஆரம்பிக்கவில்லை. கல் வைத்த தினத்தில் அந்த நிகழ்வு முடிந்த பின்னர் அதே மடுவில் நின்று கொண்டிருந்த துறவிகள் மூவரும் ஒருவரை ஒருவர் நோக்கியதை நாங்கள் கண்டோம். இதன் அர்த்தம் என்ன? பணம் இல்லாமல் தொடங்கப்பட்ட வேலை என்பதா? ஜீவனாநந்தரை நோக்கி இனி உனது வேலைதான் என்பதா? பொருள் அதுதானா தெரியவில்லை.

சுவாமி ஜீவனாநந்தர் ஊர் ஊராகச் சென்று பணம் திரட்டும் திட்டம் ஒன்றை ஆரம்பித்திருந்தார். இதற்காக ஏற்கனவே செய்யப்பட்ட ஒழுங்கின் படி அதிகாலையிலேயே அவர் தனது குழுவினருடன் செல்வது வழக்கமாக இருந்தது. கிராமங்களுக்குள் செல் வதற்காக அவர் துயில் எழும் நேரம் அதிகாலை 3.00 மணியாகும். கிணற்றில் நீராடிய பின்னர் அவர் தனது சிறிய ரோச்லைட்டுடன் பூந்தோட்டத்தில் பூப்பறிப்பதை நான் காணக் கூடியதாக இருக்கும். ஏனெனில் நானும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதற்காக அதிகாலையில் எழுவது வழக்கம். சுவாமி ஜீவனாநந்தரின் நேர அட்டவணை பொதுவாக இவ்வாறுதான் ஆரம்பிக்கும். பணியில் ஒன்றியிருந்த சுவாமி ஜீவனாநந்தருக்கு இரவும் பகலும் ஒன்றாகவே இருந்ததை நாங்கள் கண்டிருக்கின்றோம். எந்த நேரத்தில் துயில்வார் எந்த நேரத்தில் எழுவார் என்பது எல்லாம் எமக்குப் புதிராகவே இருக்கும்.

கிராமம் தோறும் நிதி சேகரித்துச் செல்லும் குழுவில் நானும் ஒரு நாள் இணைந்து கொண்டேன். நான் சென்ற கிராமம் களுதாவளை. அக் கிராமத்தில் ஏறக்குறைய பிற்பகல் ஒரு மூதாட்டி தென்னை ஓலை இழைத்துக் கொண்டிருக்கின்றார். சுவாமிகள் வந்ததை அறிந்த அவர் தனது முடிச்சியில் இருந்து ஐம்பது சதத்தை எடுத்துக் கொடுக்கின்றார். மிகவும் மகிழ்ந்த சுவாமி அதனைப் பெற்றுக் கொள்கின்றார். அவரது உள்ளத்தைப் பாராட்டுகின்றார். பெருந்தொகையை விட இவ்வாறு பூரண உள்ளத்துடன் கொடுக்கும் பணத்திற்கு ஒரு சக்தி உண்டு என்று அவர் அப்பொழுது கூறினார்.

அப்பொழுது நான் பல்கலைக்கழகம் சென்று படித்து முடித்த பின் கொழும்பு டி.எஸ். சேனநாயக்கக் கல்லூரியில் ஆசிரியராகத் தொழில் பார்க்கும் காலம். 1978ம் ஆண்டு கிழக்கிலங்கையில் வீசிய சூறாவளி பாரிய சேதத்தை ஏற்படுத்தியிருந்தது. மரங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடங்கள் என்பன தரை மட்டமாயின. இக்காலத்தில் பெண்கள் விடுதி ஒன்றை அமைக்கும் ஜீவனாநந்தரின் பணி ஆரம்பித்த காலம். சிவானந்தா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்குத் தென் புறமாக இருந்த நிலப்பகுதியில் அதனை அமைப் பதற்கான திட்டம் அவருடையது. இதற்கும் நண்பர்கள் , அன்பர்கள் தயவையே அவர் எதிர்பார்த்தார். இராமகிருஷ்ணமிசன் புயலால் தாக்கப்பட்ட செய்தி உலகு பூராகவுமிருந்த நண்பர்கள், பழைய மாணவர்களது கவனத்தை ஈர்த்தமையால் அதற்கான நிதி பல் திசை களிலும் இருந்து கிடைக்க ஆரம்பித்தது. இதனால் தூய அன்னை சாரதாதேவியின் ஆலயம் மற்றும் மாணவர் விடுதி முதலியனவற்றை இலகுவாக நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. இப்பொழுது இராமகிருஷ்ணபுரம் என்று அழைக்கப்படும் பிரதான வீதிக்கு கிழக்கேயுள்ள பிரதேசம் சுவாமி ஜீவனாநந்தரை எப்பொழுதும் ஞாபகமூட்டிக் கொண்டிருப்பதை பலரும் அறிவர். மட்டக்களப்பிற்கு வருகை தருவோரின் கவனத்தை ஈர்க்கும் பகுதியாக இந்த இராமகிருஷ்ணபுரம் விளங்குவதை நண்பர்கள் அறிவர். இது ஜீவனாநந்தரின் அயரா உழைப்பின் சின்னம் என்றால் மிகையாகா.

1978ம் ஆண்டு சூறாவளியைத் தொடர்ந்து சாரதா மகளிர் இல்லமும், ஆலயமும் தோற்றம் கண்டன. முன்னர் இவ்விடங்கள் சுடலையாகவே இருந்ததை நாங்கள் அறிவோம். இதன் தென் புறமாக அவரால் உருவாக்கப்பட்ட விவேகானந்தபுரம் அமைந்துள்ளது. மட்டக்களப்புக்கு வருகை தருவோர் கல்லடிச் சந்தியிலிருந்து நாவற்குடா வரை பிரதான வீதியின் கிழக்குப் புறத்தை காணில் அதை ஓர் அற்புதமாகவே கருதுவர். இவற்றுக் கெல்லாம் பின்னணியில் ஓர் அற்புதமான அதிசயமான மனிதரின் இரவு, பகல் பாராத உழைப்பு அமைந்திருந்ததை நாங்கள் கண்டிருக்கின்றோம்.

சுவாமி ஜீவனாநந்தர் ஆசி வழங்குவதாயின் முன்னேற்பாட்டின் படி அவர் அதிகாலை யிலேயே எழுந்து தன்னைத் தயார் செய்து கொண்டிருப்பதை நாங்கள் பல முறைகள் கண்டிருக்கின்றோம். அப்பொழுது நான் சிவானந்தா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை புரிந்து கொண்டிருக்கின்ற காலம். பொது நன்மைக்கான கருமம் ஒன்றிற்கு ஆசி பெறுவதற்காக நான் அவரிடம் ஏற்கனவே கூறி ஒழுங்கு செய்தாயிற்று. அவர் கூறியபடி அடுத்த நாட் காலை 05 மணிக்கு அந்நிகழ்வு ஏற்பாடு. நான் எனது இல்லத்தில் இருந்து சுவாமியிடம் செல்வதற்காக உரிய ஆயத்தங்களை மேற்கொண்டு அங்கு சென்றேன். நான் அங்கு செல்வதற்கு ஐந்து நிமிடங்கள் சற்றுத் தாமதமாகின. அப்பொழுது சுவாமி அவர்கள் அதிகாலையிலேயே எழுந்து எல்லா ஆயத்தங்களும் செய்து எனது வருகைக் காகக் காத்துக்கொண்டு இருந்ததை நான் கண்டேன். நான் செல்வதற்கு முன்னமே துயில் எழுந்து வழிபாடாற்றி அவர் காத்துக் கொண்டு இருந்த நிகழ்ச்சி எதனைக் காட்டுகின்றது? எந்தக் காரியத்திற்கும் உள்ளத்தைத் தயார்படுத்தும் உயரிய குணத்தைக் காட்டுகின்றது. எக்காரியத்தை அவர் செய்வதாக இருந்தாலும் முழுமையான மனதுடனேயே செய்வார்.

இப்பொழுது இன்னொரு நிகழ்ச்சி ஞாபகம் வருகின்றது. இது 1967ம் ஆண்டாக இருக்கலாம். நான் அப்பொழுது சிவானந்தா வித்தியாலய உயர்தர மாணவன். பிற்பகல் நான்கு மணியளவில் இருக்கும். இராமகிருஷ்ணருக்காக அக்காலத்தில் அமைக்கப்பட்ட ஆலயத்தின் அருகில் நானும் அவரும் நின்று கொண்டிருக்கின்றோம். 'பழைய சிறைன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[Old shrine] என்று அக் கோயில் அழைக்கப்படுகின்றது. அதற்கு அருகில் மாணவர் களுக்கான சாப்பாட்டு மண்டபமும் அமைந்துள்ளது. அப்பொழுது அவர் என்னை நோக்கி ['You can go up to Amarica'] 'நீ அமெரிக்கா வரை போவாய்' என்று ஆங்கிலத்தில் கூறினார்.

நானோ உயர்தரம் கற்கும் மாணவன். இவர் கூறுவது என்ன? என்று எனது உள்ளத் தில் நினைத்துக் கொண்டேன். இருப்பினும் நான் எதுவும் அவரிடம் கூறவில்லை. காலங்கள் கடந்து சென்றன. ஆசிரியப்பணி, உயர்பட்டப்படிப்புக்கள், கல்லூரிகளின் அதிபர் பணிகள், தேசிய கல்வி நிறுவனங்களின் பணிகள் , பல்கலைக்கழகப்பணிகள் என எனது சேவைகள் விரிந்து சென்றன. நான் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதல் நிலை விரிவுரையாளராகக் கடமையாற்றிய 2003ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஐக்கிய அமெரிக்காவுக்குச் செல்லும் சந்தர்ப்பம் ஒன்று வருகின்றது. இப் பயணத்தை மேற் கொள்வதில் பல தடைகள் காணப்பட்ட போதிலும் பயணம் முற்றுப் பெறுகின்றது. நான் விமானம் ஏறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் நான் சுவாமி ஜீவனாநந்தரிடம் 1967ல் அவர் இது தொடர்பாகக் கூறியதை ஞாபகப்படுத்தினேன். அவர் சாதாரணமாகவே இருந்தார். 36 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் கூறியது 36 ஆண்டுகள் கழித்து பூர்த்தி யாகின்றது. உயர்ந்தவர் ஒருவரின் வாக்கு மிகவும் ஆற்றல் உடையது என்பது என்னைப் பொறுத்தளவில் இதன் மூலம் உண்மையாகின்றது.

செய்வனவற்றை திருந்தச் செய்தல் வேண்டும் என்பது ஜீவனாநந்தரைப் பொறுத்த மட்டில் முற்றிலும் கைக் கொள்ளப்பட்ட ஒன்று, மட்டுமல்லாது எவரையாவது கொண்டு எதையாவது செய்விக்க வேண்டுமானாலும் கூட இத்தகைய பண்பையே அவர்களிடமும் எதிர்பார்ப்பார். இந்தவகையில் அவருடன் பழகி , அவருடன் செயற்பட்டவர்கள் இத்தகைய பயிற்சிகளைப் பெறும் வாய்ப்பு இருந்தது. வேலையைப் பூரணமாகச் செய்து முடிக்கும் வரை சுவாமி ஜீவனாநந்தரிடமிருந்து யாரும் தப்ப முடியாது. சாதாரணமாக உடல் உழைப்பைப் பயன்படுத்திச் செய்யும் வேலையாக இருந்தாலும் சரி, மூளையைப் பயன்படுத்திச் செய்யும் வேலையாக இருந்தாலும் சரி அவற்றைப் பரிபூரணமாகச் செய்து முடிக்க வேண்டும் என்றே ஜீவனாநந்தர் கருதுவார். அது போல் பிறரிடமும் அதையே எதிர்பார்ப்பார்.

ஒரு நிறுவனத்தை நடத்துவது என்பது பெரிய கலை. அதிலும் சேவை நிறுவனம் என்றால் அது இன்னும் அவதானமாகச் செய்ய வேண்டி பணி. வெகுசனத் தொடர்பைப் பேணுவதில் ஜீவனாநந்தருக்கு நிகர் அவரேதான். மட்டக்களப்பில் உயர் பதவியில் இருக்கக் கூடிய அரசாங்க அதிபராயினும் சரி , நீதிபதியாயினும் சரி, சாதாரண பொது மகனாயினும் சரி அவரது விருந்து உபசாரத்தை ஒரு முறை அனுபவித்தார்களாயின் அவரை இறக்கும் வரை மறக்கமாட்டார்கள். மக்களைக் கவரும் ஒரு சிறப்பான ஆற்றல் அவரிடம் இருந்தது. இதனால் நாடு பூராகவும், கடல் கடந்த நாடுகளில் இருந்தும் அவருடைய இறைபணிக்கு வாரி வழங்குபவர்கள் இருந்து கொண்டே இருந்தனர். இதனால் தான் அவரது இறுதி ஊர்வலம் மட்டக்களப்பு வரலாறு காணாத ஒன்றாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் கண்டிப்பானவராக இருந்தார். அதேவேளை அவரது உள்ளம் கருணையால் நிறைந்திருந்ததை நாங்கள் பலமுறை அவதானித்திருக்கின்றோம். ஒரு நாள் ஒரு சிறுவன் செய்த பிழைக்காக அவனை வீடு செல்லுமாறு கூறிவிட்டார். அவனோ மிகவும் சிறுபையன். அவனைப் பராமரிப்பது அவனது பாட்டி மட்டுமே. இப்பொழுது பாட்டி வந்துவிட்டாள். அவனை அழைத்துச் செல்வதற்காக. இவ்வேளையில் ஜீவனாநந்தரிடம் இருந்து பின்வரும் செயற்பாடுகள் வெளிவருகின்றன.

'அவனுக்கு யார் இருக்கின்றார்கள்? அவன் கிழவியோடு சென்று என்ன செய்வான்?' என்று கூறி இல்லத்தில் வேலை செய்யும் ஒருவரிடம் 'அந்த அலுமாரியைத் திறந்து ஒரு புடவை எடுத்து வா தம்பி' என்று கூறுகின்றார். இப்பொழுது புடவையுடன் சேர்த்து கிழவிக்கு கொஞ்சம் பணமும் கொடுக்கப்படுகின்றது. கிழவியிடம் பின்வருமாறு கூறு கின்றார்,'அவன் நிற்கட்டும் நீ போ.' இவ்வாறு ஜீவனாநந்தரைப் பொறுத்தமட்டில் அவரிடம் கருணையுடன் நிறைந்த சம்பவங்களும், செயற்பாடுகளும் ஆயிரம் உள்ளன.

ஒரு துறவிக்கு இறைவனையன்றி வேறு எந்தப் பற்றும் இருக்க முடியாது. அவன் இறைவன் ஒருவனையே சார்ந்து , அவனையே நம்பி அவனுக்காகவே தனது வாழ்நாளில் ஒவ்வொரு நிமிடத்தையும் கழிப்பான். இந்தத் துறவியோ இறைவனுக்காக வாழ்ந்த அதேவேளை இந்த மண்ணிலும், இந்த மக்களின் வாழ்விலும் ஆழமான பற்றைக் கொண்டிருந்தார். ஏன் இவ்வாறான பற்றை அவர் கொண்டிருக்க வேண்டும்? என்று ஒருவர் கேட்கலாம். முற்றாகத் துறந்த ஒருவர் எதிலும் எவரிலும் இறைவனைக் காண்பவர் என்பது ஓர் உயர்ந்த நிலையில் இருந்து கூறக்கூடிய விளக்கமாக இருக்கக் கூடும். ஜீவனாநந்தரைப் பொறுத்த மட்டில் அவர் இத்தகைய மேலான பண்பைக் கொண்டிருந்தமை நம் அனைவருக்கும் ஒரு பாடத்தைப் புகட்ட வேண்டும் என்பதற்காகவே என்றே நாம் கருத வேண்டும். நாம் எத்துறையில் பணியாற்றுவதாக இருப்பினும் இத்தகைய சிறந்த பண்புகளை நாமும் எமது சந்ததியும் கற்றுக் கொண்டு அதைச் செயலில் காட்ட வேண்டும்.

ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் தனது நிறுவனத்தின் வளர்ச்சி, அதன் பாதுகாப்பு என்பனவற்றை இடைவிடாது சிந்தித்த வண்ணம் இருப்பார். நிறுவனத்தின் வெளிச் சூழலால் நிறுவனத்திற்கு ஏற்படும் தாக்கம் பற்றியும் அவர் சிந்திப்பார். இந்த வகையில் இந்திய நாட்டு அமைதிகாக்கும் படைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொழிற்பட்டுக் கொண்டிருந்த வேளை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்கு மிடையே முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. இதனால் ஆங்காங்கே இரு பிரிவினர் களுக்குமிடையே தாக்குதல்கள் இடம் பெற்றதால் மக்கள் பீதியில் வாழ்ந்தனர். உயிர், உடை, உறையுள் போன்றவற்றுக்குச் சேதங்கள் ஏற்பட்டன. இராமகிருஷ்ணமிசனைச் சூழவுள்ள இடங்களில் இரு தரப்பினருக்கும் மோதல்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் இருந்தன. இக்காலத்தில் சிவானந்தா வித்தியாலயத்தில் நான் அதிபராகச் செயற்பட்டுக் கொண்டு இருந்தேன். சிவபுரிதான் காரியாலய வதிவிடமாக விளங்கியது. இங்குதான் இராமகிருஷ்ணமிசனின் தலைமைக் காரியாலயம் அமைந்திருந்தது. இராமகிருஷ்ண மிசன் நடாத்திய ஏறக்குறைய 25 பாடசாலைகளது நிர்வாக தலைமைபீடமாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபுரிதான் விளங்கியது. சுவாமி விபுலானந்தர் தங்கியிருந்து நிர்வாகம் செய்ததும் , யாழ் நூல் ஆராய்ச்சி நடாத்தியதும் இவ் இடத்திலேதான்.

நான் சிவானந்த வித்தியாலயத்தின் அதிபராக இருந்தபோது எனது வசதிக்காக ஒரு அறையைத் திருத்தி தங்குவதற்குரிய ஏற்பாடுகளை சுவாமி ஜீவனாநந்தர் எனக்குச் செய்து தந்தார். சிவபுரியில் இருந்து சிவானந்தா வித்தியாலயத்திற்குச் செல்வதற்கு ஒரு கேற்றும் [Gate] அமைக்கப்பட்டது.

இருபடைகளுக்குமிடையில் யுத்தம் ஏற்படும் போது மக்கள், நிறுவனங்கள், உடைமைகளுக்குப் பாதிப்புக்கள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது. இக்காலத்தில் சுவாமிகளுக்கு மிஷனைப் பாதுகாக்கும் கவலை அதிகரித்தது. சில மறைமுகப் பாதிப்புக்களும் ஏற்பட்டிருந்தன என்று கூறலாம். ஒரு நாள் என்னிடம் நிறுவனத்தின் பாதுகாப்பு தொடர்பான தனது கவலையை வெளியிட்டு நிறுவனத்தின் பாதுகாப்பிற்காக வழிபாடாற்றுமாறு கூறினார். ஒரு பிரிவினரை மற்றப்பிரிவினர் எப்பொழுதும் சந்தேகத்துடன் பார்க்கும் காலமாக அது விளங்கியது. இரவு வேளைகளில் பாடசாலை வளவு, மற்றும் சூழலில் உள்ள வீடுகள் அமைந்திருக்கும் இடங்களிலெல்லாம் இந்தியப் படைவீரர்கள் திரிவது வழக்கமாக இருந்தது. விடுதிப்பக்கம் இரவு வேளைகளில் விடுதலைப்புலிகள் நடமாட மறுபக்கம் இந்தியப் படை வீரர்கள் நடமாடும் நிலைகளில் எப்பொழுது நேருக்கு நேர் சந்தித்து தாக்குதல்கள் ஏற்படும் என்பது தெரியாது. இவ்வாறான நிலையில் சிவானந்தா வித்தியாலயத்தின் மாணவர் விடுதி எனது நிருவாகத்தின் கீழ் இருந்தது. இக்காலங்களில் எல்லாம் நிறுவனங்களுக்கு ஏற்படக் கூடிய இடையூறுகளையிட்டு நானும் சுவாமிகளும் சிந்திப்பவர்களாக இருந்தோம். ஒரு தனிமனிதனுடைய வாழ்நாளில் இன்ப துன்பங்களும், ஏற்ற இறக்கங்களும் காணப்படுதல் போல நிறுவனங்களும் அவ்வாறான ஏற்ற இறக்கங்களைத் தாண்டியே செல்ல வேண்டியிருக்கின்றது. ஒரு மனிதன் எவ்வாறு தனது சூழல் செல்வாக்கில் இருந்து தப்ப முடியாதோ அவ்வாறே நிறுவனங்களும் சூழல் செல்வாக்கில் இருந்து தப்ப முடியாது. செயற்கையான பாதிப்புக்கள், இயற்கையான பாதிப்புக்கள் என்பனவற்றை நிறுவனம் தாங்கிச் செல்ல வேண்டியிருக்கின்றது. இவ்வாறான பாதிப்புக்களை இராமகிருஷ்ணமிஷனின் முகாமையாளர் என்ற வகையில் சுவாமிகள் எதிர் கொண்டார். ஸ்ரீராமகிருஷ்ணரின் இரு கைகளையும் 'காக்கும் கரங்கள்' என்று ஒரு நாள் என்னிடம் சுவாமிகள் கூறினார். தெய்வத்தை மட்டுமே நம்பி அவர் வாழ்ந்தார். நிறுவனம் எதிர் கொண்ட பல்வேறு துன்பங்களையும் தெய்வத்தின் கருணையாலேயே அவர் தாண்டினார் என்று நாம் கூறமுடியும்.

ஒரு முறை முச்சக்கர வண்டி ஒன்றில் சாரதா பெண்கல்வி விடுதிக்குச் சென்று, திரும்பவும் மிஷன் வளவுக்குள் நுழையும் வேளையில் இலங்கைப் படையினரின் கவச வாகனம் ஒன்று எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்தது. அப்பொழுது மயிரிழையில் முச்சக்கர வண்டி விபத்தில் இருந்து தப்பியது. இல்லாவிட்டால் ஏற்பட்டிருக்கக் கூடியது பெரிய விபரீதமே. அவர் கூறிய 'காக்கும் கரங்கள்' என்பது இதன் மூலமும் அர்த்தப் படுவதை காணுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது ஒவ்வொரு செயற்பாட்டிலும் சொல்லிலும் ஒரு பாடம் அடங்கியிருக்கும். ஒரு நாள் அவரோடு அவரது அறையில் உரையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது எதுவித தொடர்பும் இல்லாதவாறு இவ்வாறு கூறினார்.

'மெல்ல மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் உருட்டிக் கொண்டு பாயும்'.இதனை ஏன் கூறினார் என்று அப்பொழுது எனக்குப் புரியவில்லை. ஆனால் அதற்குள் வாழ்க்கைக்கான ஒரு பெரிய தத்துவம் அடங்கியிருப்பதை நான் பின்னர் உணர்ந்து கொண்டேன். ஒரு நதியின் ஆரம்பம் எங்கோ ஒரு மலையின் உச்சியில் ஒரு சிறு ஊற்றாக தான் ஆரம்பிக்கின்றது. பலருக்கு அதன் ஆரம்ப ஸ்தானம் தெரியாது. அது அருவியாக உருவாகி பல மைல் தூரத்தைக் கடந்து மிக வலிமையுள்ள நதியாகப் பாய்ந்து செல்கின்றது. மனித வாழ்க்கையும் இவ்வாறுதான் என்ற அர்த்தத்தைக் காணமுடியும். எதுவும் சிறிதாகவே ஆரம்பமாகி காலம் செல்லச் செல்ல அவ் வாழ்க்கை ஆற்றல் வாய்ந்ததாகவும், பயன் வாய்ந்ததாகவும் உலகில் பல காரியங்களைச் சாதிக்கக் கூடியதாகவும், உலகிற்கும் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் பங்களிக்கக் கூடிய பெரிய வாழ்வாகவும் அமைகின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். இது ஒவ்வொரு மனிதனுக்கும் ஏன் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் பொருத்தமான ஒரு போதனையாகும்.

சுவாமி ஜீவனாநந்தரின் கல்வி தொடர்பான கருத்துக்கள் மிகவும் பிரதானமானவை. முழுமை வாய்ந்த ஆளுமை கொண்டவர்களாக மாணவர்கள் உருவாக வேண்டும் என்பதில் அவர் அக்கறையாகச் செயற்பட்டவர். அவர் உருவாக்கிய மாணவர் பரம்பரை இன்று இந் நாட்டிலும், பிறநாட்டிலும் நல்ல நிலையில் உள்ளார்கள் என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். மாணவர்கள் சாதாரண வேலையிலும், உயர்தரமான வேலையிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். மாணவர்களது முழுமையான விருத்தியில் அவர் மிகவும் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டதை நாங்கள் அறிவோம். கையால் செய்யும் திறனும் , உயரிய செம்மையான உளப்பாங்கும் , சிறந்த மூளை ஆற்றலும் பெற்ற மாணவர் சமூகம் உருவாக வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்து சிந்தித்துச் செயற்பட்டார்.

ஒரு முறை அவரது அறையில் நான் அவருடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது அவரது இறுதிக் காலம் பற்றி என்னிடம் குறிப்பிட்டார். தமிழ் நாட்டில் எதிர்காலம் பற்றிக் கூறக்கூடிய ஒரு மூதாட்டியிடம் சுவாமியின் நண்பர் ஒருவர் சுவாமியின் எதிர்காலம் பற்றிக் கேட்ட போது சுவாமி இன்னும் அதிக காலம் உயிர் வாழ மாட்டார் என்றும் இன்னும் ஆறுமாத காலமளவில் வாழ்ந்து அவஸ்தைப் படாமலே மரணமடைவார் என்றும் அத் தாய் கூறியதாக சுவாமி என்னிடம் கூறினார். அதிலிருந்து அவரை நான் சந்திக்கும் தடவைகள் அதிகரித்தன. விரைவில் எம்மை விட்டுப் பிரிந்து விடுவார் என்ற எண்ணம் எனக்குப் பெரும் கவலையைத் தந்தது. இக்காலப்பகுதி நான் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த காலம். அவர் கூறிய படியே அவரது இறுதிக் காலம் அமைந்தது. அவர் G.V வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். தனக்குப் பணிவிடை செய்து தன்னைப் பராமரித்து வந்த செந்தூரனிடம் 'நீ மிஷனில் இரு உனக்கு எல்லாம் கிடைக்கும் என ஆசி கூறியதுடன்', 'மிஷன் வளர வேண்டும்' எனவும் அவர் கூறியவைகளே அவரது இறுதி வார்த்தைகளாக அமைந்திருந்ததாகவும் 2006ம் ஆண்டு பெப்ரவரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் 04ம் திகதி அதாவது இலங்கை அந்நியராட்சியில் இருந்து விடுதலை பெற்ற அதே நாளில் மாலை 6.35 மணிக்கு அவர் இவ்வுலகை விட்டு நீந்தார் எனவும் G.V வைத்தியசாலையில் அவருடன் தங்கி அவரது தேவைகளைக் கவனித்து வந்த திரு. செந்தூரன் என்னும் இளைஞன் அவர் உயிர் நீத்த சம்பவத்தை விளக்கினார். தமிழ் நாட்டில் இருந்த அந்த மூதாட்டி குறிப்பிட்ட படியே அவர் இலகுவாக இவ்வுலகை நீந்தார். ஒரு மனிதனுடைய வாழ்வில் பிறப்பு, வாழ்வு, இறப்பு என மூன்று கட்டங்கள் காணப்படுகின்றன. பிறப்புக்கு நாம் பொறுப்பாளி யில்லாதது போல இறப்பும் எமக்குத் தெரியாததாகவே அமைந்து விடுகின்றது. ஒருவரது இறப்பு அவர் வாழ்ந்த வாழ்க்கையை எடுத்துக் காட்டும். புத்தர் ஞானம் பெற்ற இடம் புத்த காயா என்று அழைக்கப்படுகின்றது. அங்குள்ள ஒரு தூணில் பின்வருமாறு எழுதப் பட்டுள்ளது.

'ஒருவன் பிறப்பால் அல்லது குடிப்பிறப்பால் உயர முடியாது. அவனது செயலால் தான் உயர்வடைகின்றான்.' சுவாமி ஜீவனாநந்தரின் வாழ்வு இதனுடன் ஒப்பிட வேண்டியது. சுவாமி ஜீவனாநந்தர் என்பவர் யார் என்று ஒருவர் கேட்டால் அவர் செய்த வேலையே சுவாமி ஜீவனாநந்தர் என்று கூறக்கூடியதாக அவர் வாழ்வு அமைந்துள்ளது.

இத்தகைய நல்ல குணங்களும், செயற்பாடுகளும் அமைந்த அற்புதத் துறவி எம்மை விட்டு நீங்கி விட்டார். இவரது வாழ்க்கை ஒரு காவியம். தொடர்ந்து படித்துப் பயன் பெற வேண்டிய பெருங்காவியம். சில தாள்களில் அவரது முழுவாழ்வையும் அடக்கி விட முடியாது. அது முடிவில்லாத அற்புத வாழ்வு. இந்த வாழ்வின் ஒரு பகுதியை நாம் கண்டிருக்கின்றோம். அதில் சில அரிய பாடங்களையும் பெற்றிருக்கின்றோம். அவர் பலரிடமும் பல்வேறு வகையில் பல்வேறு விதமான உரையாடல்களைச் செய்திருப்பார். எத்தனையோ சுவாரஸ்யமான நிகழ்வுகளை அவரிடம் பார்த்திருக்கின்றோம். இவ்வாறான நிகழ்வுகள் சில எழுத்துருப் பெறும் போது அவை எமது எதிர்காலச் சந்ததியினரை நல்ல வழியில் நடத்திச் செல்ல ஊக்குவிக்கும் கருத்துக்களாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அவரது வாழும் சிந்தனைகளை தற்போதைய சந்ததியினர் உள்வாங்கிச் செயற்பட வேண்டும். அடுத்த தலைமுறையினருக்கு பரிமாற்றம் செய்து கொடுக்க வழிவகை செய்ய வேண்டும். இதுவே சுவாமி ஜீவனாநந்தருக்கு நாம் செலுத்தக் கூடிய பெரிய அஞ்சலியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் மிளிரும் சுவாமிஜீ

செல்வி.வ. இளையதம்பி
*அறநெறி வகுப்பு ஆசிரியர்,*
கல்லடி உப்போடை

எண்ணத்தில் கணமேனும் மறந்திடாமல் இறைவன் எழிற் திருவடியைத் தாங்கி இந்த மண்மீதில் வாழ்கின்ற உயிர்களின் பால் மாறாத இரக்கத்தை காட்டிஎன்றும் அருட்பணிகள் ஆற்றிய கடவுளடியார்களுக்கு தொண்டு செய்து புண்ணிய சீலராய் வாழ்ந்த எமது சுவாமிஜீ அவர்களை இறந்தும் இறவாத ஒரு ஞானியாகத்தான் எண்ணத் தோன்றுகின்றது. பரம ஹம்சர் காட்டிய நற்பாதை தன்னில் வாழ்ந்து ஆன்மீக நன்நெறி காட்டி மக்களிடத்தில் அன்புகாட்டி,அவலநிலை,உற்றவர்பால் பரிவுகாட்டி,ஏழைக் குழந்தைகளின் கண்ணீர் துடைத்தஒருமகான்தான் சுவாமிஜீ அவர்கள். மறைந்தசுவாமிஜீ நடராஜா னந்தாஅவர்களின் பின்தான் எமதுசுவாமிஜீ அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் தலைவராக பொறுப்பேற்றார். அவர் பொறுப்பேற்கும் காலத்தில் இருந்த ஆலயம், மாணவர் இல்லங்கள் யாவும் திருத்தி அமைக்கப்பட்டு தற்போதுஅழகான முறையில் காட்சி அளிக்கின்றன. பெண்களுக்கு என ஒரு தனியான இல்லமும்,ஆலயமும் இவரால் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் எல்லாம் எமதுசுவாமிஜீ அவர்களின் அயராத உழைப்பி னாலும்,கடமைஉணர்ச்சியினாலும் எழுந்தகட்டடங்கள் தான். இவர் மட்டக்களப்பில் அவதரித்தஒருஅவதார புருஷர் என்பதால் தான் பிறந்தமண்ணைமேம்படுத்தும் நோக்கில் மக்கள் மத்தியில் சமயப் பணியும்,சமூகப் பணியும் மேற்கொண்டமை நாம் அனைவரும் கண்கூடாக கண்ட உண்மையாகும்.

'அறநெறிஓங்கிடஆன்மீகம் ஓங்கும்' என்ற மொழிக்கிணங்க மக்கள் மத்தியிலே சமயப்பற்றை வளர்க்கும் நோக்கிலே சுவாமி நடராஜானந்தாஜீ மகராஜ் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அறநெறிவகுப்பை தொடர்ந்து சிறப்புற நடாத்தி வருடந்தோறும் ஆண்டு விழாக்கொண்டாடி, மாணவர்களுக்கு பரிசுகளையும் வழங்கி,ஆசிரியர்களையும் கௌரவித்த மகான் அவர்கள் நம்மை விட்டு பிரிந்து விட்டாரே என்பது நினைக்க முடியாத ஒரு நிழலாகும். அவருடைய அன்பான பேச்சுக்கள் அறிவான வாசகங்கள் இன்னும் எங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டு தான் இருக்கின்றன.

சுவாமிஜீ அவர்கள் என்று இராமகிருஷ்ண மிஷனுக்கு வருகைதந்தாரோஅவர் இறக்கும் வரையான காலத்திலும் அவரோடு பழகிஅவருக்குகீ ழ் தொண்டாற்றி வந்தோம். எந்தநேரம் என்ன அலுவல்களுக்குச் சென்றாலும் எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்று 'வாருங்கள் அம்மா இருங்கள்' என்று தான் கூறுவார். ஆனால் என்னைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதும் 'இந்த அம்மா மிஷனுக்கு வருகிறார். ஆனாலும் சாயிபகவானின் ஆச்சிரமத் திற்கும் போய்க் கொள்ளுவார்'என்று கூறிவிட்டு ஒரு சிரிப்புச் சிரிப்பார். இவ்வாறாக பலதடவைகள் கூறியிருப்பார். நானும் சிரித்துவிட்டு பேசாமல் வந்திடுவேன். ஏன் சுவாமிஜீ இப்படிக் கூறினார் என்னைப் பற்றி யார் கூறியிருப்பார்கள், இவர் எப்படி அறிந்துகொண்டார் என நான் மனதில் நினைத்துக் கொண்டு அதன் பின் சாயிபகவானின் ஆச்சிரமத்துக்குப் போகாமல் விட்டேன். அவருடைய கதையும் சிரிப்பும் என்றுமே எனது மனதைவிட்டு அகலாத ஒரு நிகழ்வாகும். அக்காலத்தில் நான் மாணவர் இல்லத்திற்கு ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு செல்வதுண்டு. நான் படிப்பித்துக் கொண்டிருக்கும்போது வருவார். என்னம்மா இந்தப் பையன்கள் படிக்கிறார்களா? குழப்படி செய்தால் என்னிடம் அனுப்பி வையுங்கள் என்று கூறிவிட்டுச் செல்வார். இவர் இக்குழந்தைகளில் வைத்திருக்கும் அன்பையும் எதிர்கால சிந்தனையையும் பற்றி நான் பெருமைப்படுவதுண்டு. அவரின் முயற்சியாலும் நல்லெண்ணங்களாலும் படித்து முன் னேறிய மாணவர் பலர் நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டும் இராமகிருஷ்ண மிஷனுக்கு பணியாற்றிக் கொண்டும் இருப்பதை நினைத்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இப்படியாக இறுதியில் இவரது உபசரிப்பு,அனுசரணை,சொற்களால் விளக்கமுடியாதவை.

காவிநிறப் பெருவானில் உதித்து வந்த களங்கமிலா முழுமதி போல் நேயமுடன் இளைஞர்களை ஊக்குவித்து நேர்மையுடன் நின்றுஒழுக்கம் கற்றுக் கொடுத்து தாயெனவே அன்பு செய்த நம் சுவாமிஜீ அவர்களை நம் நினைவில் இருந்து மறவாது வாழ்வோமாக.

- 'எவனுடைய இதயம் ஏழைக்காக இரங்குகிறதோ அவனை நான் மகாத்மா என்பேன் மற்றவர்கள் துராத்மாக்களே ஆவார். நான் தத்துவ ஞானியுமல்ல, ஆத்ம ஞானியு மல்ல, நான் ஏழை, ஏழைகளையே நேசிக்கின்றேன் அவ்வளவு தான்'
- தீய சொல் பேசுவதை விட மௌனம் சிறந்தது.
- எக்காரணத்தை முன்னிட்டும் மனிதன் பொய் பேசலாகாது. பொய் பேசிப் பழகுபவன் படிப்படியாக பாவம் செய்வதற்கு அஞ்சாத கீழான மனப்பான் மையைப் பெற்றுவிடுவான்.
- நம்பிக்கையும் உறுதியும் அடிப்படை. இவை இரண்டும் இருந்தால் எல்லாம் இருந்த மாதிரித்தான்.
- நீ எந்த இடத்தில் இருந்தாலும், மகிழ்ச்சியுடன் இருக்கும் வகையில் உன் மனத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்.
- குழந்தாய் நம்பிக்கை ஒன்றே முற்று முடிவான நிலையாகும். ஒருவனிடம் நம்பிக்கை இருக்குமானால் அவன் தன்னுடைய குறிக்கோளை அடைந்த மாதிரித்தான்.

-தூய அன்னை சாரதா தேவியார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லமும் ஸ்தாபகரும்

*அருள்ஞானேஸ்வரி-சண்முகராஜா*
*இ.கி.மி பழைய மாணவர்*

ஆன்மீகத்தை பெறவிளைவோருக்குஆலமரமாய் நின்றுஆதரிக்கும் சங்கமாக ஸ்ரீ இராம கிருஷ்ண சங்கம் விளங்குகிறது. இதனை ஸ்தாபித்தவர் வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் ஆவார். சுவாமி விவேகானந்தரின் இவ் அரும் பெரும் பணி சிறப்புப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தவர். அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் ஆவார். இவர்கள் இருவர் மனதிலும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரை மையமாகக் கொண்டு ஒரு சங்கம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்ததிலிருந்து குருதேவரிடம் இடையறாப் பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். இவர்கள் பிரார்த்தனையின் செயல் வடிவமே 1898ம் ஆண்டு கட்டிமுடிக்கப் பட்ட வேலூர் மடம் என்றால் மிகையாகாது. இதனைத் தொடர்ந்து தோன்றிய இடத்தில் மாத்திரமன்றி இந்தியா முழுவதும் அமேரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற பல நாடுகளிலும் பலசங்கங்களும்,மடங்களும் உருவாவதற்கு வாய் வேதாந்தமாக இல்லாது செயல் உருக்கொடுத்து செயல் வேதாந்தமாக மாற்றிக் கொண்டிருந்தார் கர்மவீரர் சுவாமி விவேகானந்தர்.

இவ்வாறுதோன்றிய சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் இலங்கை இராம கிருஷ்ண சங்கம் வெற்றி பெற்றது என்றே கூறலாம். இதன் பலனாக இலங்கையில் சுவாமி விபுலானந்தர் தன்னை இறைபணிக்காக அர்ப்பணித்து சொல்லல்ல,பேச்சல்ல தூய சேவை தான் இன்றுதேவைஎன்றநோக்குடன் யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை மடமும், மட்டக்களப்பில் மாணவரில்லமும் 1926ல் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வில்லங்களானது **'கர்மண்யேவாதிகாரஸ்தேமாபலேஷாகதாசந'**அதாவது கடமையைச் செய் பலனை எதிர் பாராதே என்ற முறையில் இயங்கி இருள் சூழ்ந்த நிலையிலிருந்த மக்களை தனது போதனையாலும்,சாதனையாலும் விழிப்படையச் செய்து ஆன்மீகத்துறை,அறிவியல், ஆக்கப்பணி ஆகிய பல வழிகளாலும் மக்களுக்கு சேவையை மாண்புற செய்து வருகின்றது.

இவ்வில்லமானது இராமகிருஷ்ண மிஷன் சாதுக்களின் வழிகாட்டலில் கீழ் அவர்களது இடையறாச் சேவையின் காரணமாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விருத்தியடைந்து கொண்டேவந்திருக்கிறது. **'நோக்கின்றிக் கருத்தில்லை,கருத்தின்றிச் செயலில்லை,செயல் இன்றி ஆத்மீகம் இல்லை'.** என்ற தொடர்புகளுடன் இல்லமானது உயர் சிந்தனையுடன் தனது இலக்கைநோக்கி நடைபயின்றது எனலாம். இவ்வில்லத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசித்துவரும் மாணவர்களுக்கு 3உயர் நோக்குடன் பயிற்சியளிக்கப்பட்டுவருகின்றது. அவைஉடல் உறுதி, உளஉறுதி, ஆத்மீகஉறுதி என்பனவாகும்.

இவ்வில்லத்தை ஸ்தாபித்து வளர்ச்சி கண்ட சுவாமி விபுலானந்தர் இத்துடன் நின்று விடவில்லை. அக்காலதேவைக்கும்,பெண்ணின் முன்னேற்றத்திற்கும் முக்கியத்துவம் அளித்து பெண்களுக்காக அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு என்னும் பழம்பதியில் இராமகிருஷ்ண மிஷன் சிறுமியர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது இவ்வில்லமானது பாரியவளர்ச்சியுடன் சிறந்ததொரு இல்லமாகமிளிர்கின்றது.

இலங்கையில் சுவாமி விபுலானந்தரை தொடர்ந்து மக்கள் சேவையில் சுவாமி நடராஜானந்தஜீ மகராஜ் அவர்கள் தன்னை இணைத்துக் கொண்டார். இவர் நிருவாகத்தில் தான் 09.09.1951ல் மட்டக்களப்பில் பெண்களுக்காக ஆனைப்பந்தி இல்லம் ஆரம்பிக்கப் பட்டு சுவாமி நடராஜா தலைமையின் கீழ் சிறப்பாக இடம்பெற்றது. இல்லமும் இல்லத்து மாணவிகளும் அன்பர் ஆதரவாளர்களுக்காக தன்னிறைவான சேவையாற்றினர் எனலாம்.

இவ்வாறாக ஈழவளநாட்டில் இராமகிருஷ்ண சங்கத்தின் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் நடராஜானந்தாஜீ அவரின் மறைவினைத் தொடர்ந்து 13.03.1967ல் சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்களின் பொறுப்பில் இராமகிருஷ்ண சங்க நிர்வாக பொறுப்புகையளிக்கப்பட்டது. ஜீவனுக்கு செய்யும் சேவையேமெய்யான பூஜை என்பதனை சிரமேற் கொண்டு அனுபவமுதிர்ச்சியின் சிகரமாக,உறுதியின் உறைவிடமாக ஏற்றுக் கொண்ட பணியினை அடிமுதல் நுனிவரை குருநாதரே துணை என்று முழுமன துடன் எடுத்த காரியத்தை பொன் போல மதித்து பணிபுரிந்தவர். இதற்கு சான்று பகர்பவையாக விளங்குபவையே கல்லடி உப்போடை சாரதா மகளீர் இல்லம் எனலாம்.

ஆரம்பத்தில் பெண்களுக்காக அமைக்கப்பட்ட ஆனைப்பந்தி இல்லமானது இட வசதியின்றி காணப்பட்டதனால் குழந்தைகளின் நிலமையைக் கருத்திற் கொண்டு வசதி களுடன் கூடிய ஓர் இல்லம் அமைக்கவேண்டும் எனும் உறுதியான சபதத்துடன் மிகவும் இன்னலான காலகட்டத்திலும் வீடுவீடாக, ஊர் ஊராக கால் நடையில் சென்றுஅவர்கள் கொடுத்த ஒருரூபாய் பணத்தையும் மனம் கோணாது முழுமனதுடன் ஏற்று 07.02.1982ல் சாரதாமகளீர் இல்லத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தஜீ அவர்களால் நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனையையும், சுவாமி விவேகானந்தரின் ஆற்றல் வீரம்,வலிமை,தளரா முயற்சிஅனைத்தையும் தன்னகத்தே கொண்டு இல்லப் பணியானது வெகுவிரைவாக முடிவுற்றது. 03.06.1985ல் திறப்புவிழாவும் இடம்பெற்றது. இவ்வில்லமானதுஅன்புஆற்றல்,பக்தி,கலை,கலாசாரம் என்றஅடிப்படையின் மூலம் உருவாக்கப்பட்டது. இவ்வில்லமானது **'ஆத்மநோமோக்ஷார்தம் ஜகத்கிதாயச'**என்பதன் அடிப்படையில் ஆன்மீகநன்மையையும் உலகநன்மையையும் அடிப்படையாககொண்டு உருவாக்கப்பட்டது.

ஆதரவு தேடியோருக்கெல்லாம் நன்நெறிகாட்டி நல்வாழ்விற்கு வழிகாட்டும் சிறந்த தொருபணியினை சிறப்புற செய்த பெருமை இல்லத்தை ஸ்தாபித்த சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்களையே சாரும். இன்று நாம் காணும் இல்லங்களின் வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் முன்னோடியாக நின்றுழைத்தவர் சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது இலங்கையில் இல்லங்களின் வளர்ச்சிப் போக்கை எடுத்து நோக்குகையில் சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்களின் சேவைக்காலம் ஒரு பொன்னான காலமாக காணப் படுகிறது எனலாம். ஏனெனில் இக்காலகட்டத்தில் இல்லங்கள் அமைப்பதுடன் இக்கால கட்டத்தில் ஏற்பட்ட சூறாவளி,யுத்தம்,சுனாமி,வெள்ளப்பெருக்கு போன்ற அனர்த்த வேளைகளிலும் மக்களுக்கான பணியினை சிறப்புற செய்து முடித்தவர் என்ற வகையில் சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்களின் அரும்பணிக்கு எமது நன்றிகள் என்றும் காணிக்கை களாகும்.

- இதய பூர்வமான காரியங்களைச் செய்பவனுக்கு இறைவனும் உதவி புரிகிறான். உன்னால் இயன்ற வரையில் நற்செயல்களைச் செய்.
- தூய்மையாக இருப்பதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதுதான் எல்லா வழிபாடுகளினதும் சாரமாகும்.
- உலகில் வாழும் உயிர்களுக்குத் தொண்டு செய்வதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறு இல்லை.

-சுவாமி விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளுக்கு இலக்கணமாக திகழ்ந்த திருத்தகு ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாஜீ

*கலாபூசணம் இ.பாக்கியராஜன்*

அரசர்களின் ஆட்சிக்காலங்கள் சில பொற்காலம் என்று குறிப்பிடப்படுகின்றன. அதே போன்று உன்னத புருக்ஷர்கள் சிலர் வாழ்வாங்கு வாழ்ந்த காலமும் பொற்காலம் எனப் படுகின்றது. மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனைப் பொறுத்தவரையில் ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாவின் காலம் பொற்காலமாகும். முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனை நிறுவினார். அவரின் அடியொற்றி துறவியான சுவாமி ஜீவனாநந்தா இதனை இன்றைய நிலைக்கு உயர்த்திய பெருமைக்குரியவர்.

இந்தியாவின் முதல் பிரதமர் என்ற பெருமைக்குரியவரான ஜவஹர்லால்நேரு ஒருதடவை இவ்வாறு கூறினார். 'THERE ARE TWO KINDS OF PEOPLE ONE THOSE WHO DO THE WORK. ONE THOSE WHO TAKE THE CREDIT', இரண்டு வகையான மனிதர்கள் உள்ளனர். வேலையைசெய்பவர்கள் ஒருவகையினர்; அதற்கான பாராட்டை பெறுபவர்கள் இன்னொரு வகையினர். குருவி கிணறு வெட்ட அணில்பிள்ளை பெயர் பெற்றது என்பதற்கு அவரின் கூற்று ஒப்பானது. போக்குவரத்துவசதிஎதுவும் இல்லை. மக்களிடமும் பொருளாதாரவசதிகுறைவாக இருந்தகாலம் அது. கால் நடையாகச் சென்று கிராமம் கிராமமாக, வீடுவீடாகச் சென்று சதக்கணக்கில் சேர்த்து மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனை இன்று வியக்கும் நிலைக்கு உயர்த்தியவர் சுவாமி ஜீவனாநந்தா ஆவார். மெய் வருத்தம் பாராது கண் துஞ்சாது இப்பணியை அவர் மேற் கொண்டமைக்கு அவரின் தூர நோக்கே காரணமாகும்.

திருக்குறள் ஒரு வேதநூலாகக் கொள்ளப்படுகிறது. அதில் பொதிந்திராத கருத்து எதுவும் இல்லை என்பது பொதுக்கருத்தாகும்.

*'ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை*
*சான்றோன் எனக் கேட்டதாய்'*

என்பது அதில் காணப்படும் கருத்துக்களில் ஒன்று. ஒரு குழந்தையை ஈன்றெடுத்த பொழுது அடையும் இன்பத்தைவிட அக்குழந்தை ஒரு சான்றோனாகிவிட்டான் என்று கேள்வியுற்ற போது பெருமகிழ்ச்சியடைவாள் அக்குழந்தையினுடைய தாய். இக் குறளுக்கு இலக்கணமானவர் சுவாமி ஜீவனாநந்தஜீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிப்பிள்ளை எனப் பெயரிட்டு வளரத்த தன் மகனை ஜீவனாநந்தாஎன உத்தமராக்க வித்திட்டவர் அவரின் தந்தையான வாரித்தம்பி. இவர் ஐயாயிரம் ரூபாபணத்தையும் தன் மகன் தம்பிப்பிள்ளையையும் சுவாமிவிபுலானந்தரிடம் ஒப்படைத்தார். தம்பிப்பிள்ளையை புடம் போட்டு எடுத்தவர் சுவாமிவிபுலானந்தர். தங்கத்தை உருக்க உருக்க அதுமேலும், மேலும் ஜொலிக்கும். சுவாமி விபுலானந்தர் போட்டபுடத்தினால் தம்பிப்பிள்ளை ஜீவனாநந்தாவாக ஜொலித்தார்.

*'தந்தைமகற்காற்றும் நன்றிஅவையத்து*
*முந்தியிருப்பச் செயல்'*

என்பது வள்ளுவர் கூறிய மற்றொரு கருத்து. எனவே தன் மகனை ஜீவனாநந்தாவாக மக்கள் சேவை மூலம் மகேசன் சேவை செய்ய செய்தவர் வாரித்தம்பி. அந்த வகையில் இந்தக் குறளுக்கும் இலக்கணமானவர் சுவாமி ஜீவனாநந்தா.

'கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர்'கடவுளைக் காணவேண்டும் என்ற விவேகானந்தரின் தீராத வேட்கையை தணித்தவர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர். அந்த விவேகானந்தரே.

'கடவுள் ஒவ்வொருவரிடத்திலும் குடிகொண்டிருக்கிறார் இதைத் தவிர தனியாக வேறு ஒரு கடவுளும் இல்லை'என்று கூறினார். 'நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளி ருக்கையில்' என்றார் திருமூலர். உன்னையேநீஅறிவாய் என்றார். சுவாமி விவேகானந்தரின் நேரடிச்சிடரான சுவாமி விரஜானந்தாஜியிடம் ஞானோபதேசம் பெற்று இவ்வாறு தன்னை உணர்ந்து கொண்ட ஜீவனாநந்தா **'நான் பெரிய அறிவாளியுமல்ல பெரிய திறமைகளும் எனக்கில்லை. ஆனால் பணித்த பணிகளை செய்து முடிக்கின்ற பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வேலைக்காரன்'**என்று அடிக்கடி அமரருள் உய்க்கும் வகையில் அடக்கத்துடன் கூறுவார். கல்லடி உப்போடை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன், விபுலானந்த மணிமண்டபம், ஸ்ரீராம கிருஷ்ண ஆலயம்,சாரதா மகளிர் இல்லம்,சாரதாஆலயம் என்பன அவரின் இமயப் பணிகளாகும். 'காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லேல் மிக்கூறும் மன்னன் நிலம்' என்பது வள்ளுவரின் மற்றொருகருத்து. சுவாமியும் காட்சிக்குஎளியவர். கடும் சொல் பேசியறியாதவர். ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் நாடிச் செல்பவர்களை இன்முகத்துடன் வரவேற்பார். அவருடைய கதவுகள் எப்போதும் திறந்தே இருந்தன. அதனால் இக்குறளுக்கும் அவர் இலக்கணமானார்.

ஞானிகள் தாம் மகாசமாதியடைவதை முன்கூட்டியே உணர்ந்துகொள்வர். சுவாமி விவேகானந்தர் உட்படஅனைவரும் இந்தநிலையைஎய்தியவர்களாவர். சுவாமி ஜீவனாநந்தாவும் இதனை உணர்ந்து கொண்டார் என்பதைஅவரின் இறுதி நடவடிக்கைகள் எமக்கு உணர்த்துகின்றன.

உடல் தளர்ந்திருந்த போதிலும் ஜனவரி மாதம் 26ம் திகதி கதிர்காமம் சென்று இருநாள் தங்கியிருந்து கதிர்காமக் கந்தனை தரிசித்தார். வழமையான கைத்தடியுடன் நடப்பவர் கதிர்காமத்தில் அதன் துணையின்றி நடமாடியதுடன் 4 மணித்தியாலம் தன்னை மறந்து தியானத்திலும் ஆழ்ந்தார். இங்கிருந்து மட்டக்களப்பு திரும்பும் வழியில் காரைதீவு சாரதா மகளிர் இல்லத்துக்கு சென்று பிள்கைளுடன் அளவளாவியதுடன் சுவாமி ஞான மயானந்தாவை பஜனை செய்யுமாறு வேண்டினார். **'உற்றார் யாருளரோ உயிர் கொண்டு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போம் பொழுது' என்ற பாடலைப் பாடும் போது அதனைசுவாமி ஜீவனாநந்தா மிக உன்னிப்பாக கேட்டதை சுவாமி ஞானமயானந்தா கவனிக்கத் தவறவில்லை.

மகாசமாதியடையும் தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் போதிலும் சுனாமி வீடமைப்பு வேலைகளின் முன்னேற்றம் குறித்து சுவாமி ஞானமயானந்தாவிடம் விசாரித்தார். இது அவரின் தன்னலம் கருதாத சேவையினை எடுத்துக் காட்டுகின்றது. பின்னர் அந்தமாலை வேளையிலும் சுவாமி ஞானமயானந்தா ஓடோடிச் சென்று வீடமைப்பு பணிகளை பார்வையிட்டு வந்து திருப்தி தெரிவித்தார்.

அதனைக் கேட்டு திருப்தியடைந்த அவர் இல்லக் குழந்தைகளை நன்கு கவனியுங்கள் என்று கூறி சுவாமி ஞானமயானந்தாவை அனுப்பினார். அவர் மகாசமாதியடைவதற்கு ஒரு மணித்தியாலத்தக்கு முன்னர் இச் சம்பவம் இடம் பெற்றது. யாருடைய பாதையில் என் கடன் பணி செய்து கிடப்பதே எனதடம்பதித்தாரோஅப்பாதையை வகுத்தவரை இராமகிருஷ்ணர் என்று கூறியவாறு மகாசமாதியானார். புகழோடு தோன்றி இறவாப் புகழுடன் விளங்கும் சுவாமி ஜீவனாநந்தா வள்ளுவரின்

'தோன்றிற் புகழொடுதோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.'

என்ற மற்றொருகுறளுக்கும் எடுத்துக்காட்டாவார்.

இன்சொல் விளைநிலமாம் ஈதல் வித்தாக
வன்சொல் களைகட்டவாய்மைஎருவிட்டு
அன்புநீர் பாய்ச்சிஅறக்கதிர் ஈன்ற..........

அருளாளரானஅன்னாரின் நாமம் இராமகிருஷ்ண மிஷன் உள்ளவரை நிலைத்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘குழந்தைத் தெய்வம்’

## சுவாமி ஜீவனாநந்தாவைப் பற்றிய ஒரு நினைவுத் தூறல்

*காசுபதி நடராஜா*

### முகப்பு

மட்டக்களப்பு பாரம்பரிய வீடுகளின் முகப்பு வாசல்கள் உயரம் குறைந்ததாக, கதவுகள் கனதியான மரத்தாலான,ஓர் அறையில் இரு துண்டுகளாக மற்றையதில் ஒரே நீளமானதாக திறப்புக்கள் இரும்புத் துண்டங்களாகக் காணப்படுவதுண்டு.

கனமானதிறப்புக்களைக் கொண்டு பாரமான கதவுகளைத் தள்ள **‘கிறீச்’** சத்தத்துடன் அது திறந்துகொள்ளும், நிமிர்ந்து சென்றால் நெற்றிமுட்டும், குனிந்தே செல்ல வேண்டும். உள்ளேயும் கும்மிருட்டு, சற்று நேரத்தின் பின்பு தான் கண்கள் பழக்கப்பட்டுப் போகும். அதன் பின்னே தேடும் பொருட்களைக் கண்டடைந்து விடலாம். சுவாமி ஜீவனாநந்தாவை நினைக்கும் தோறும் என்னுள் எழும் சிந்தனை இது.

### தேடல்

சுவாமிகளைக் கண்டடைவது மிகவும் இலகுவானது அவர் ஒரு குழந்தை. அது தெய்வ மானது ஆயினும் அதன் பூரணத்துவத்தை சென்றடையும் வழிகள் சுலபமன்று. அது மிகமிக ஆழமானது,மிகமிகப் பாரமானது. எனினும் பொறுமையும், தாழ்மையும், முயற்சியும், தொடர்ச்சியும் இருந்தாலே மாத்திரம் தான் சுவாமிகளைக் கண்டடைய முடியும். நம் பாரம்பரிய வீட்டு முகப்பைப் போல.

### தொடுப்பு

சுவாமிகள் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பாரம்பரியத்தையும், மட்டக்களப்பு மானுடவியல், பண்பியல் தொடர்ச்சிகளையும் இணைத்து நிற்கின்ற சங்கிலித் தொடுப்பு.

சுவாமி விபுலானந்தர் மட்டக்களப்பு மண்ணில் ஏற்றி வைத்த ஸ்ரீராமகிருஷ்ண தீபச் சுடரை, அவர் காலத்திலும் அவரைத் தொடர்ந்தும் வந்த துறவிகளுடன், வயல் வெளி நடந்து இரந்து சிறந்து வலுவூட்டி சுவாமி நடராஜானந்தரும் சேர்ந்து அணைந்து விடாமல் பாதுகாத்து வந்தவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ஜீவனாநந்தர் இத்தீபச் சுடரை மட்டக்களப்பில் நிலைத்த கட்டடத் தொகுதி களை உருவாக்கியதன் மூலம் எண்ணெய் ஊற்றிப்பிரகாசப்படுத்திய பெருமைக்குரிய வராகக் காட்சி தருகின்றார்.

சூறாவளி,சுனாமி,வெள்ளம்,வீதிஅகட்டல் மற்றும் போர்க்கால இடர்கள் எதுவும் அசைத்தாட்ட முடியாத வலுவைச் சேர்ந்தபெருமைக்குரியவராக நம் சுவாமிகள் காட்சி தருகின்றார்.

**நிலைப்பு**

மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்தர் மணிமண்டபம் தோற்றம் பெற நீண்ட நெடுங்காலம் பிடித்தது. நிதிபெறுவதில் ஏற்பட்ட தடங்கல் அது. தொண்டு நிறுவனங்கள் கட்டடங்கள் வழங்கி உதவாத காலமது. மக்களிடம் சிறுகச் சிறுகச் சேர்த்தே இதனை உருவாக்க வேண்டி வந்துவிட்டது. சுவாமி நடராஜானந்தர் இதற்காக அரும்பாடுபட்டவர். பண்டிதர் செ.பூபால பிள்ளை,அன்பர் நடராஜா,கணபதிப்பிள்ளை அதிபர்,கந்தசாமிமாஸ்டர், கிஷ்ணபிள்ளை பண்டிதர் K.O.V.கதிர்காமத்தம்பி, திருமதி.செல்லத்தங்கம் அம்மா முதலிய பலரும் இதற்காக உழைத்தவர்களாக நினைவு கூரப்படுகின்றனர்.

இதற்கு எதிர்மாறாக சுவாமி ஜீவனாநந்தா தொட்ட கருமங்கள் எல்லாம் விரைந்து கைகூடியதைக் காணமுடிந்தது. இலட்சுமி கடாட்சம் அவருடனிருந்து விளங்கியது. சிற்றிடங்கள், பேரிடங்களாயின. ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் ஆச்சிரமமும் ,மாணவ ரில்லங்களும் புதியகட்டடங்களில் நிலைமாறின. ஸ்ரீராமகிருஷ்ண தீபம் சுடர் விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கிற்று.

**வாழ்வு**

'முதலில் இறைவன்,பிறகு படைப்பு. அவரைப் பெற்றுவிட்டால்,பிறகுவேண்டுமானால் எல்லாம் பெற்றுக் கொள்ளலாம்'.

குருவின் வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கவேண்டும். குருதான் சச்சிதானந்தம், சச்சிதானந்தமே குரு, அவர் சொல்வதில் நம்பிக்கை வைத்தால், குழந்தையைப் போல் நம்பிக்கை வைத்தால் இறையனுபூதி கிடைக்கும். கபடபுத்தி, கணக்குப் பார்க்கும் புத்தி, ஆராயும் புத்தி இவைகள் இருந்தால் இறைவனைப் பெறமுடியாது. நம்பிக்கையும் எளிய இயல்பும் வேண்டும். கபடம் இருந்தால் சாத்தியம் இல்லை. எளியமனம் படைத்தவனிடம் இறைவன் எளிதில் வருகிறான்.

சுவாமிகளுடன் 07.09.2002 இல் நிகழ்ந்த ஒரு சந்திப்பில் எனக்குச் சுவாமிகள் அன்பளித்த 'ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்' திரட்டிலிருந்து (வங்க மூலம் மகேந்திரநாத் குப்தர், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடர்),தமிழில் சுவாமிதன்மயானந்தர் எழுதியது பதிப்பு 2002) மேற்கூறப்பட்ட அமுதமொழிக் கூற்றுக்களை சுவாமிகளுடன் இணைத்து நோக்குகின்றேன். அவரதுவாழ்வின் அடித்தளம் இங்கு தான் கட்டப்பட்டி ருந்ததைக் கண்டேன். அவருடைய மூச்சு, பேச்சு, சிந்தனை, செயல்கள் யாவும் குருதேவரை முன்னிறுத்தியே வடிவமைக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்பு

1959 இல் ஆரையம்பதியைச் சேர்ந்த ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் குஞ்சித்தம்பி ஆசிரியர் ஊடாக சுவாமி நடராஜானந்தரின் ஆசீர்வாதம் பெற்று, சிவானந்த வித்தியாலயத்தில் ஆங்கிலம் கற்க அதிபர் கணபதிப்பிள்ளை ஐயாவிடம் சேர்க்கப்பட்டேன். ஆங்கிலம் தூர விலகிக் கொள்ள சிவானந்தாவின் முதற் தமிழ் மொழி மூலப்பட்டதாரியாகி விட்டேன். அன்றிலிருந்து ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தொடர்பு எனக்கு ஏற்பட்டுவிட்டது. எனது சகோதரர் காசுபதி கனகரெத்தினம் ஆசிரியர், மாமனார் தம்பிப்பிள்ளை அதிபர் ஆகியோர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனினதும்,சுவாமி விபுலானந்தரினதும் தொடர்புள்ளவர்களாயிருந்ததை எங்கள் வீட்டு களிமண் சுவரில் அலங்கரிக்கப்பட்டிருந்த பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், தூய அன்னை சாரதாதேவி ,சுவாமிவிவேகானந்தரின் படங்கள் கதைகள் கூறின. பூர்வபுண்ணியத்தாற் போலும் நானும் உள்ளீர்க்கப்பட்டுவிட்டேன்.

பட்டதாரியாகி சிலகாலம் சிவானந்த வித்தியாலயத்தில் 1965களில் தொண்டராசிரியராக பணிபுரிந்த போது ஏற்பட்ட இறுக்கம் காலப்போக்கில் மெல்லத் தளர்ந்து 1980இல் மீண்டும் வளரத் தொடங்கியது. இதற்கு உதவியவர்கள் திரு.சோ.சிவலிங்கம்,அமரர் வீ.கணபதிப்பிள்ளை, மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்தில் பணி புரிந்த சாமியார் கணபதிப்பிள்ளை ஐயா முதலானோரைக் குறிப்பிட முடியும். இங்கு அப்போது சிவானந்தாவில் கல்வி கற்பித்துப் பின்னாளில் அதிபராகி இன்று சட்டத்தரணியாக உள்ள எனது பல்கலைக்கழகத் தோழன் கணபதிப்பிள்ளை தியாகராஜா மற்றும் அவரது உறவினர் பு.பாஸ்கரன் அவர்களையும் இணைத்துக் கொள்ளமுடியும்.

இவர்கள் அடிக்கடி ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்வர். நானும் அழைக்கப்படுவேன். சுவாமிகளுடன் நெருக்கம் கூடிவிட்டது. சுவாமிகள் ஆங்கிலத்தில் புலமைமிக்கவர். தமிழிலும் பிழைகள் காணக் கூடியவர். ஆயினும் அவரது ஆசிச் செய்திகளுக்குநான் தமிழ் வடிவம் கொடுப்பவனாக இருந்தேன். இறுதிவரை எம் தொடர்பு இதனால் நீடித்து நிலைத்திருந்தது. இதேபோல் விழாக்கள் ஒழுங்கமைப்பதிலும், கூட்டங்களை நடத்துவதிலும் சுவாமிகளுக்கு நான் உதவிய பேறுபெற்றேன். சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டுவிழா ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பவளவிழா,உள்ளிட்ட ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் இந்தியத் துறவிகளின் மட்டக்களப்பு வருகையும் வரவேற்புநிகழ்வுகளிலும் நான் இணைந்துகொண்டேன்.

## நிகழ்வு

சுவாமிகளுடையஆழ்ந்த ஞானமும் புலமையும் எம்மை மெய்சிலிர்க்கவைப்பவை. எது நடந்தாலும் அவைகள் அனைத்தையும் குருதேவர் செயலாக பழக்கப்படுத்திக் கொண்டார். ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தொண்டர்களும்,பக்தர்களும் இதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

குருதேவரிடமிருந்து விரைந்து நாம் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றால் சுவாமிகளிடம் முதல் நாள் பிற்பகலில் பிரச்சினைகளை அல்லது தேவைகளைக் கூறிப் பூஜைப் பொருட்களையும் வழங்கி விடவேண்டும். அடுத்த நாள் காலைப் பூஜையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் தியானத்தில் ஆழ்ந்துவிடுவார். நம் வேண்டுதலும் சித்தித்துவிடும். நிர்மானுஷமான காலைப் பொழுதும் காலைப் பூஜையும் மிகவும் அற்புதமான சக்தி வாய்ந்ததாக இருப்பதை நான் கண்டுள்ளேன். குருதேவர் சுவாமிகளின் வேண்டுதலுக்குச் செவி கொடுப்பார்.

கல்லடி-உப்போடைநொச்சிமுனை ஸ்ரீசித்திவிநாயர் ஆலய கும்பாபிஷேகத்திற்கு பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அந்நிகழ்வு நடந்து முடிந்த பின்புஆலயக் குருவிடம் 'இன்றிலிருந்து, பிள்ளையார் தனது பழைய இடத்தில் சிறப்புடன் அமரவேண்டு மென்று நீங்கள் தினந்தோறும் அர்ச்சனை செய்யவெண்டும்,கும்பாபிஷேகம் விரைந்து நிறைவேறும்' என்றுஆலோசனை கூறினார். அவ்வாறேவிரைவில் கும்பாபிஷேகம் நிறைவேறத் திருவருள் கூடிவிட்டதைக் கண்டேன்.

இந்துக்கள் இந்தியாவிலுள்ள திருத்தலங்களைக் கட்டாயம் ஒரு தடவையாவது தரிசித்து வரவேண்டும் என்று சுவாமிகள் கூறுவார். அப்படியான ஒரு சந்தர்ப்பத்தை மட்டக்களப்பு அன்பர்களுக்கு ஏற்பாடு செய்தும் தந்தார். சுவாமி அஜராத்மானந்தா தலைமையில் எனக்கும் எனதுகுடும்பத்திற்கும் அப்பாக்கியம் கிடைத்தது. எனது தந்தையார் **'காசிபதியாகப்'** பெயரிடப்பட்டிருந்தும் காசிசெல்லவில்லை. எனக்கு அப்பாக்கியம் கிடைத்துவிட்டது. காசியில் கங்காநதியில் தந்தைக்கும் முன்னோர்களுக்கும் பிதிர்கடன் நிறைவேற்றும் பெரும் பேறுபெற்றேன். குருதேவரின் திருவருளும் சுவாமிகளின் வழி நடத்தலுமே காரணம்.

**'தம்பிநடா, நீ மந்திர தீட்சை பெற்றால் நல்லாயிருக்கும். இப்போது சுவாமி ரங்கனானந்தர் கொழும்பு வரவிருக்கின்றார். தொண்ணூறு கடந்த வயதுஅவருக்கு. இனிமேல் அத்தகைய சந்தர்ப்பம் கிடைக்காது. நீங்களும் மந்திரதீட்சை பெறலாம்'**என்று கூறினார். எனக்குக் கட்டுப்பாடுகளுக்குள் நின்றுஒழுகுவதில் பலசிரமங்கள் இருந்தன. நான் சுவாமிகளிடம் இது பற்றிக் கூறி என்னால் அத்தகைய ஒழுக்கத்துக்குள் நிற்பது இயலாது. ஒன்றைச் செய்தால் அதனை சரியாகப் பின்பற்ற வேண்டும், இல்லாவிடில் அதனை விட்டுவிட வேண்டும். என்று எனக்குள்ள உலகக் கஷ்டங்களைக் கூறினேன். சுவாமி, ஸ்ரீராம கிருஷ்ணமிஷன் ஒழுக்கநெறிகள் மிகவும் இலகுவானவை. போக்கிலும் வரவிலும் பகவானை நினைத்துக் கொண்டு சமூகத்திற்கு அதனைச் செய்தாலே போதும். என்று என்னை ஊக்கப்படுத்தினார். நாங்கள் முப்பது பேர் கொழும்பு சென்று சுவாமி ரங்கனானந்தரிடம் மந்திரதீட்சை பெற்றுக் கொண்டோம். மனதில் தெம்பு, நல்ல உற்சாகம்,போக்கிலும்,வரவிலும் அவனது நாமத்தால் பல்வேறு சங்கடங்களையும்,அவமானங்களையும், தீமைகளையும் குறைக்கவும், நீக்கவும் முடிந்துகொண்டிருப்பதை நினைவு கூருகின்றேன்.

சுவாமிகளின் நடைமுறைத் தத்துவத்தால் அவரிடம் மக்கள் சேர்ந்தனர். சில வேளைகளில் ஏதாவது நிகழ்வுக்கு நாம் செல்லாவிடில் உடனடியாகத் தொடர்பு கொண்டு விசாரிக்கும் பெருந்தகை. 1995 இல் நானும் மனைவியும் மட்டக்களப்புச் சந்தைக் குண்டு வெடிப்பில் அகப்பட்டு விரைந்து குணப்பட குருதேவர் திருவருளும் சுவாமிகளின் பிரார்த்தனையுமே துணை செய்ததையும் மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவு

அவரிடம் சமயசமரசம் இருந்தது. பௌத்த,கிறிஸ்தவ, இஸ்லாமியத் துறவிகளையும், மக்களையும் நேசிக்கத்தவறவில்லை. மட்டக்களப்பில் பணிபுரியஅவாக் கொண்டே இலங்கைத் தலைமைப் பொறுப்பைக் கைவிட்டார். இறுதிவரை அவர் இம்மண்ணிலேயே மகாசமாதியடைந்த புகழையும் பெற்றார். வைத்தியகலாநிதி விவேகானந்தராசாவும், மற்றும் பெயர் குறிப்பிட்டுக் கூறவேண்டியஆனாலும் சுருக்கம் கருதிவிடுபட்ட வைத்தியத் துறைப் பெருமக்களும் அவரது தேகாரோக்கியத்திலே அருங்கவனமெடுத்துச் செயற் பட்டதையும் நன்குஅறிவேன்.

ஸ்ரீராமகிருஷ்ணமிஷனுக்குத் தினையளவுஉதவியவர்களுக்கும் மலையளவு துணை நின்று உதவியவர்.

சுவாமிகளின் வாழ்வியலில் கால்நூற்றாண்டுக்கும் மேலாக எனக்கிருந்த தொடர்பில் அவரதுகுழந்தைமனமும்,நிறைந்த இறைபக்தியும்,வலிந்தமக்கள் சேவையும் என்றும் நிலை நிற்பனவாகின்றன. விழாவெடுத்துச் சுவாமிகளை நினைவுகூரும் செயற்பாட்டாளர்கள் வரலாற்றில் பதியப்படவேண்டியவர்களாகின்றனர். அவர்களைப் பாராட்டுகின்றேன்.

- எத்தகைய கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனை தனது சொந்தக்காலில் நிற்கும் படி செய்கிறதோ அது தான் உண்மையான கல்வி.
- நாம் எல்லோரும் இறைவனுடைய பிள்ளைகள், எதையும் செய்யக்கூடிய ஆற்றல் நமக்கு உண்டு.
- இதயத்தை இறைவனுக்கு அர்ப்பணித்து, கைகளால் காரியங்களைச் செய்து கொண்டு, மனிதர் இந்த உலகில் வாழ வேண்டும்.

-சுவாமி விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்மயோகி சுவாமி ஜீவனாநந்தர்: சில மனப்பதிவுகள்

*கந்தப்போடி விநாயகமூர்த்தி*
*இ.கி.மி பழைய மாணவர்*

காலத்திற்குக் காலம் பல ரிஷிகளும் முனிவர்களும் நம் தாய்த்திருநாடாம் பாரத பூமியின் கண் தோன்றி மனுக்குலத்தின் உய்விற்காக ஆன்மீக வெள்ளத்தினை இவ்வுலகினுக்குப் பாய்ச்சினர். இந்நிகழ்வுகள் பெரும்பாலும் வேதகாலம், இதிகாச காலம் மற்றும் புராண காலங்களை மையப்படுத்துவதாக அமையும். இதன் தொடர்ச்சியாக ஒரு நீண்ட காலத்தின் பின்னர் 1836ல் இப்பிரபஞ்சத்தின் ஆன்மீக சமுத்திரத்தில் வெளிப்பட்ட இராமகிருஷ்ணர் எனும் ஆன்மீகக் கோளொன்று பாரத நாட்டை மட்டுமன்றி இப் பூமிப்பந்தின் நாலா திசைகளையுமே அதிரவைக்கத் தொடங்கியது. இவ்வதிர்வானது பரந்த ஆன்மீக சமுத்திரத் தின் பால் பல்வேறுபட்ட பேரலைகளையும் சிற்றலைகளையும் தோற்றுவிக்கலானது. இவ்வான்மீக அலைகள் துறவிகளை குறிப்பனவாக அமைய அவற்றின் ஒன்றிணைந்த சக்திகளின் வெளிப்பாடாக ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் தோற்றம் பெறலானது.இத் தெய்வீக ஸ்தாபனத்தின் சிறப்பம்சம் என்னவென்றால் அது தோற்றம் பெற்ற நாள்முதலே கர்ம யோகதத்துவத்தின் அடிப்படைக் கொள்கையான 'மக்கள் சேவையே மகேஸ்வர பூசை' எனும் கோட்பாட்டினை முதன்மைப்படுத்தி அதன் ஒப்பற்ற பணியினை மேற்கொண்டு வருவதே. பொதுவாகச் சொன்னால் இவ்வுலகில் எங்கெல்லாம் ஆன்மீக ஒளிக்கீற்று புலப்படுகின்றதோ அங்கெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷனும் தன்னை வெளிப்படுத்துவ தோடு பல்வேறுபட்ட மக்களுக்கும் அவர்களது தேவை மற்றும் இயல்புகளுக்கு ஏற்ப சேவையாற்றிவருகின்றது.அது ஆக்க நிலையில் ஆழமாகவும் ஏற்புடைத்தான சேவை யினை முழுமனதோடு மேற்கொண்டு வருகிறது.

ஆன்மீகம் என்பது ஆர்ப்பரித்து கொக்கரிப்பதன் மூலமோ அன்றேல் மாயாஜால வித்தைகளைக் காட்டி மனித மனங்களை மயக்குவதாகவோ அல்லாமல் அமைதியாகவும் மனித மனங்களைத் தெளிவுறச் செய்வதோடு அங்கே புதையுண்டுகிடக்கின்ற ஆன்மீக உணர்வினை வெளிக்கொணருவதாக அமையவேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணமிஷனும் இப்பணியினையே ஆக்கபூர்வமாக முன்னெடுத்தது. ஈழத் திருநாட்டில் குறிப்பாக கிழக்கிலங்கையில் ஆன்மீக ஒளிக்கீற்றானது பல்லாண்டு காலமாக அதன் வியாபகத் தன்மையினை வெளிப்படுத்த முடியாது மங்கலாகத் தென்பட்டிருந்த சூழ்நிலையில் தான் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் வெளிப்பாடு நிகழ்வதாக அமைந்தது. இந்நிகழ்விற்கு மூல சக்தியின் கருவியாக காலத்தின் கட்டாயப் பிரகாரம் வாய்க்கப் பெற்றவர்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலங்கையின் முதல் இராம கிருஷ்ண மிஷனின் துறவியாக வெளிவந்த முத்தமிழ் மாமுனி ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர் அவர்கள். அதனைத்தொடர்ந்து இப்பிரதேசத்தே சுவாமி நடராஜானந்தர், சுவாமி சர்வதீத்தானந்தர், சுவாமி ஜீவனாநந்தர் போன்றோரின் வெளிப்பாடு நிகழ்வதாக அமைகின்றது. இதில் சுவாமி ஜீவனாநந்தர் அவர்களின் வெளிப்பாடானது நான்காவது நிகழ்வாக அமைகின்றது. இவரைத் தொடர்ந்து இம் மிஷனின் பணிகளை நெறிப்படுத்திய சுவாமி அஜராத்மானந்தா மகராஜ் அவர்களும் இன்றைய சுவாமி மாத்ருகானந்தா மகராஜ் அவர்களும் இம்மண்ணின் கொடைகளே.

முற்றுமுழுதாக தனது துறவு வாழ்க்கையில் பிறர்நல நோக்கொன்றையே உணர்வு பூர்வமாக ஏற்றிருந்த சுவாமி ஜீவனாநந்தர் அவர்களை 1951ல் எனது பத்தாவது வயதில் சிவானந்தா மாணவரில்லத்தில் அனுமதிக்கப்பட்ட நாள் முதற்கொண்டு நான் அறிவேன். அது ஸ்ரீமத் சுவாமி நடராஜாநந்தர் அவர்கள் மிஷனின் பொறுப்பிலிருந்து பணியாற்றிக் கொண்டிருந்த காலம்.தனது உயர்படிப்பை முடித்துக்கொண்டு சுவாமி நடராஜாநந்தரின் திருவடி நிழலில் ஆசிரியப் பணியாற்றிக்கொண்டிருந்த அக்காலகட்டத்தே சுவாமி அவர்கள் துறவு வாழ்கைக்குரிய ஆரம்ப பயிற்சிகளையும் மனப் பக்குவத்தையும் பெறலானார். சுவாமி நடராஜாநந்தாஜியின் ஆன்மீகத் தூண்டலும் உணர்வுபூர்வமான ஆசீர்வாதமுமே சுவாமி அவர்களின் துறவு வாழ்க்கைக்கான மனக் கதவினை திறக்கச் செய்தது.

இக்காலப் பகுதியில் (1951-1954) ஸ்ரீ ராமகிருஷ்னமிஷனின் இலங்கைக் கிளையின் உப தலைவராக சுவாமி நிஸங்காநந்தர் அவர்களும் உதவியாளராக இளம் துறவி சுவாமி பிரேமாத்மாநந்தர் அவர்களும் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷனில் தங்களைத் துறவியாக இணைத்துக் கொண்டு சேவையாற்ற முன்வருபவர்களை கொழும்புக் கிளையின் உப தலைவர் தனது சிபார்சின் பேரில் வேலூர் மடத்திற்கு அனுப்பிவைக்கும் நடைமுறை அப்போது செயற்பாட்டில் இருந்தது. எனினும் ஜீவனாநந்தரை பேலூர் மடத்திற்கு சிபார்சுசெய்யும் விடயத்தில் இலங்கைக் கிளை அக்கறை கொள்ளாத நிலை தென்பட்டதால் சுவாமி நடராஜாநந்தாஜியே நேரடித் தொடர்பினை மேற்கொண்டு 1952ம் ஆண்டின் பிற்பகுதியில் வேலூர் மடத்திற்கு அனுப்பிவைத்தார்.

வேலூர் மடத்தில் இணைந்துகொண்ட சுவாமியவர்கள் சிறிதுகாலம் பிரமச்சரிய வாழ்வை மேற்கொண்ட பின்னர் 1955ல் ஸ்ரீ இராமகிருஷ்னரின் ஜனன தினத்தன்று துறவு வாழ்க்கைக்குள் புகுந்துகொண்டார். சுவாமி அவர்கள் துறவியாக வாழத்தொடங்கினாலும் 'இலட்சுமி கடாட்சம்' என்பது அவருடன் கூடக் குடிகொண்டேயிருந்து. அவர் தொட்ட தெல்லாம் பொன்னாகும் என்பதனை அவருடன் பழகியவர்கள் உணரவே செய்வர். சுவாமியவர்கள் தென்னிந்தியாவில் வாழ்ந்த காலத்தே அவர் சேவையாற்றிய கிளைகள் சில வறுமை நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தமையும் சுவாமியவர்களின் கடின உழைப்பால் அவை மேம்பாடுற்றமையும் நாமறிந்தவையே.

இதனிடையே சுவாமிஜியை துறவு வாழ்க்கைக்கு வழிகாட்டி, நெறிப்படுத்திய சுவாமி நடராஜானந்தரைப் பற்றி இவ்விடத்தில் குறிப்பிடாது விடுவோமானால் அது நமது சுவாமிக்கு செய்யும் மாபெரும் துரோகமாகவே அமைந்துவிடும். சில உண்மைத் துறவி களின் வரலாறு பற்றி நாம் பார்க்கும்போது அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையே அவர்கள் சார்ந்த நிறுவனத்தின் வரலாறாக அல்லது அந்நிறுவனத்தின் வரலாறே அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை வரலாறாகவோ அமைந்துவிடுவதுண்டு. இதன் முழு உதாரணமாக சுவாமி நடராஜானந்தர் வாழ்க்கையை நம்மால் காணமுடியும். அவருடைய கால் நூற்றாண்டுகால வரலாறு மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் வரலாறாகவே அமைந்துவிடுகின்றது. இந்த வரலாற்றின் சின்னமாக வெளிப்பட்டவர் நமது சுவாமி ஜீவனாநந்தாஜி அவர்கள். ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தாஜி பற்றி விளக்குவதாயின் அது ஒரு பெரிய அத்தியாய மாக மாறிவிடும். எனினும் ஒரு சில சம்பவங்களை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்தமே.

சுவாமி நடராஜாநந்தர் எப்போதுமே ஒரு துறவியின் நிலையிலிருந்து மாறியவரல்ல. எளிமை வாழ்வினிற்கு என்றுமே அவர் சொந்தக்காரர். அவரின் உடமைகளெல்லாம் மூன்று சோடி கௌபீனம், மூன்று சோடி வஸ்திரம், ஒருசோடி செருப்பு, ஒரு சவரக்கூடு, ஒரு பிரயாணப்பை மற்றும் ஒரு குடை மாத்திரமே. ஏதேனும் முக்கிய அலுவல் என்றால் உணவைக்கூட மறந்துவிடும் சுபாவம் மிக்கவர் சுவாமிஜி. இதற்கு ஒரு உதாரணத்தைக் கூறலாம். ஒரு நாள் காலையில் சுவாமிஜிக்கு உணவு கொடுப்பதற்காக அவருடைய இருப்பிடத்தில் பார்த்தேன். அவர் அங்கு இல்லாமையால் சுற்று முற்றும் தேடினேன் சுவாமிஜி தென்படவில்லை. வீதிப்பக்கமாக வந்து பார்த்தேன் சுவாமிஜி பஸ்வண்டிக்காக காத்து நிற்பது தெரிந்தது. அவரிடம் ஓடிச்சென்ற நான் காலை ஆகாரம் உட்கொள்ளாமல் வந்துள்ளமையைக் கூறி அவரையழைத்தேன் அவர் சிரித்துக் கொண்டு மறந்து போய் விட்டதாகக் கூறினார். அப்போது பஸ்சும் வந்துவிடவே அவரும் அதில் ஏறிவிட்டார். சுவாமிஜி அணுவளவேனும் தன்னைப்பற்றி சிந்தித்தவரல்ல. இதற்கும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். 1964ன் முற்பகுதியில் சுவாமிஜி மிகுந்த நோய்வாய்ப்பட்டு கொழும்பி லுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட தென்னாசியாவின் புகழ்மிக்க மருத்துவ நிபுணரோ சுவாமிஜியின் உயிருக்கு ஆறு மாத காலமே உத்தரவாதம் வழங்கியிருந்தார். இதனிடையே ஒரு பேரிடியாக மட்டக்களப்பு கொழும்புத் தலைமைப் பீடம், நமது மிஷனை வழிநடாத்த ஆளில்லை என்ற காரணத்தைக்காட்டி பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் இதனை மூடிவிடத் தீர்மானித்தது. இதுவரையில் வந்த மூன்று மூடுவிழாக் கண்டங்களில் இதுவே முதலாவது. உடல் தேறாது மருத்துவ மனையில் படுத்திருந்த சுவாமிஜி கடிதத்தைப் படித்ததும் துடித்துப்போனார். எனினும் அவர் மனம் தளர்ந்துவிடவில்லை. தனக்கு ஆறு மாத கால அவகாசம் மட்டும் தருமாறு ஒரு உருக்கமான வேண்டுகோளினை முன்வைத்தார். கொழும்புப் பீடம் அரைகுறை மனதுடன் ஒப்புதல் அளித்தது. நான்கு மாதமே கடந்திருந்த நிலையில் உடல் தேறியபாதி தேறாத பாதியாக அவர் மட்டக்களப்பிற்கு திரும்பினார். வேலூர் மடத்துடன் உடனடியாகத் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்ட அவர் தனது இக்கட்டான நிலைமையினை விளக்கி சுவாமி ஜீவனாநந்தாவை தன்னிடம் அனுப்பி யுதவுமாறு பணிவான வேண்டுகோளொன்றினை தொடர்ந்தாற்போல் முன்வைத்தார். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் அனுக்கிரகத்தினால் நமது சுவாமி ஜீவனாநந்தாஜியை ஒரு சில மாதங்கள் மட்டுமே பணியாற்ற வேலூர் மடம் இங்கு அனுப்பிவைத்தது. சுவாமிஜியின் வரவு 17.03.1966ல் இவ்வாறுதான் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ஜீவனாநந்தாஜி அவர்கள் ஒரு புனித துறவியாக தான் பிறந்த மண்ணில் மீண்டும் கால் வைத்தார். மட்டக்களப்புப் பிராந்தியம் உற்சாகம் மிக்க உணர்வலைக்குள் திளைத்தது. பொது மக்கள், சுவாமியின் ஆசிரியர்கள் , உடன் படித்த - பழகிய தோழர்கள், சுவாமியிடம் பயின்ற மாணவர்கள், சிவானந்த வித்தியாலய பழைய மாணவர்கள், நகரின் முக்கிய பிரமுகர்கள், பாடசாலை மாணவர்கள் என நூற்றுக்கணக்கில் திரண்டு சுவாமிக்கு மகத்தான வரவேற்பளித்தனர். சுவாமி ஜீவனாநந்தரைக் கண்ட மாத்திரத்திலேயே சுவாமி நடராஜானந்தர் அவர்கள் சிறு குழந்தையைப்போல் விம்மிவிம்மி அழத் தொடங்கினார். எல்லோர் கண்களும் பனித்தன. சுவாமி சர்வதீத்தானந்தரும் அப்போது கூடவேயிருந்தார். இழுத்து மூடப்படவிருந்த நமது ஸ்தாபனத்தை தனது கண்ணுக்குப் பின்னர் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லத்தக்க ஒரு கர்ம யோகியை பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தனது கையில் ஒப்படைத்துவிட்டார் என்ற உள்ளுணர்வின் மேலீட்டால்தான் நமது சுவாமி நடராஜானந்தர் அவர்கள் ஆனந்தக் கண்ணீர் விட்டு அழுதிருக்கவேண்டும். சுவாமிஜிக்கு சத்திர சிகிச்சை மேற்கொண்ட நிபுணர் ஆறு மாதகாலமே சுவாமிஜியின் ஆயுளை மேற்கொண்டு நிர்ணயித்திருந்தபோதும் இறையருளும் குரு மகாராஜின் ஆசீர்வாதமும் கூடவேயிருந்தமையால் 1967ம் ஆண்டு மார்ச் 16ம் திகதிவரை அவர்களின் பணி தொடரவே செய்தது. அன்று அதிகாலை பிரம்ம முகூர்த்த வேளையில் சுவாமிஜி புகழுடல் எய்தினார். மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் தொடர்பு பட்ட வரலாறு ஒன்று எழுதப்படும் போது தான் அதனது ஆன்மீக சக்தியின் வெளிப்பாட்டினூடே ஸ்ரீமத் சுவாமி நடராஜாநந்த மஹராஜின் வியாபகத் தன்மையினை நம்மால் உணர முடியும்.

சுவாமி நடராஜாநந்தாஜி அவர்களது சேவையின் தொடர்ச்சியாகவே நமது கர்மயோகி ஜீவனாநந்த மகாராஜின் பணியினை நாம் கணிக்கவேண்டும். சுவாமியவர்கள் 17.03.1967ல் மிஷனின் பொறுப்புக்களை முழுமையாக ஏற்றுக்கொண்டார். தொடக்கம் முதலே ஒரு ஸ்தாபனம் எப்படி அமையவேண்டும் என்பதில் ஒரு முக்கிய குறிக்கோளினை அவர் இறுக்கமாகவே கொண்டிருந்தார். துறவிகள் மற்றும் இல்ல மாணவர்கள் உட்பட அன்பர்கள்,ஆதரவாளர்கள் பக்தர்கள், படித்தவர்கள், பாமரர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்த மக்கள் நிறுவனமாக ஒரு ஸ்தாபனம் விளங்கவேண்டும் என்பதில் அவர் இம்மியளவும் விலகியவரல்ல. அவரது செயற்பாட்டின் வியாபகத் தன்மையால் பிராந்திய மட்டத்தையும் தாண்டி சர்வதேச மட்டத்திலும் மிஷனின் தொடர்புகள் வளர்ச்சிபெறலாயிற்று. மிஷனின் நிதிநிலையினை உயர்த்திட சுவாமியவர்கள் கிராமம் கிராமமாக பயணித்தார். வடக்கே முறக்கொட்டான் சேனையிலிருந்து தெற்கே தம்பிலுவில்வரை, மேற்கே விவசாயக் கிராமங்களான படுவான்கரைப் பிரதேசம் யாவும் இதில் அடக்கமே. சுவாமியுடன் இணைந்து பழைய மாணவர்களாக எங்களில் சிலரும், ஸ்ரீமான் அன்பர் நடராஜா ஐயா அவர்களும் ஒரு சில வருடங்கள் எம்மாலான பணியினை நல்கினோம். அந்த வாய்ப்பினை இன்றும் பெருமையாகவே கருதுகின்றோம். இதன் போது எமக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றினைக் குறிப்பிடுவது இங்கு சாலப் பொருத்தமாக அமையும். ஒரு முறை நிதி வசூலின் பொருட்டு களுதாவளைக் கிராமத்திற்கு சுவாமி எம்மை அழைத்துச் சென்றார். அங்கு நாம் ஒரு வீட்டிற்கு சென்றபோது அவ்வீட்டிலிருந்த மூதாட்டி ஓடோடி வந்து சுவாமியின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தபின் தனது முந்தானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிச்சியை அவிழ்த்து அதிலிருந்த ஒரு ரூபாயை எடுத்து கலங்கிய கண்களுடன் சுவாமியைப் பார்த்து 'சுவாமி நான் என்ன செய்வேன்? தற்போது என்னிடம் இந்த ஒரு ரூபா மாத்திரம்தானே இருக்கிறது' எனக் கூறி சுவாமியிடம் கொடுத்தார். கண்கள் பனிக்க அதனைப் பெற்றுக் கொண்ட சுவாமி அம்மூதாட்டியின் கரங்களைப் பற்றிக் கொண்டு 'அம்மா என்னுடைய வாழ்க்கையில் எனக்களிக்கப்பட்ட கொடைகளில் இதுவே என்றும் நிறை செல்வமாக இருக்கும்' எனக் கூறினார். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த எங்கள் அனைவரது கண்களும் குளமாகவே செய்தன. பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் இதற்கான ஆன்மீக ரீதியான விளக்கமொன்றினையும் சுவாமி எம்மிடம் கூறியிருக்கின்றார்.

நிதிநிலையினை ஓரளவு பெருக்கிக் கொண்ட சுவாமி தனது செயல் திட்டங்களைப் படிப்படியாக முன்னெடுக்கலானார். இதன் முதல் நகர்வாக மாணவரில்லத்திற்கான புதிய கட்டிடமொன்றினை நிர்மாணிக்கத் திட்டமிட்டார். இதன் போது பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் பன்னிரண்டு சீடர்களும் மறைந்த பின்னர் தூய அன்னையாரின் நேரடித் தரிசனம் பெற்றவர்களில் இறுதியாக வாழ்ந்தவரும் அப்போதைய ஸ்ரீ ராமகிருஷ்ண மிசனின் தலைவருமான ஸ்ரீமத் சுவாமி வீரேஸ்வரானந்த மகாராஜ் அவர்கள் வருகைபுரிந்து தனது திருக்கரத்தினால் மாணவரில்லத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்கள். இவ் வைபவம் ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்ட பெருவிழாவாகவே அமைந்தது. இரண்டு ஆண்டுகளில் பூர்த்திபெற்றமாணவர் இல்லக் கட்டிடம் 27.05.1972ல் ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மாநந்தர் அவர்களது தலைமையில் இனிதே திறப்பு விழாவினையும் கண்டது. தரிசு படிந்துகிடந்த நிலமோ காலப்போக்கில் கண்கவர் பூங்காவாகவும் தென்னம் தோப்பாகவும் காய்கறித் தோட்டமாகவும் வாழைத் தோப்பாகவும் பசுமையுடன் காட்சி யளிக்கலானது. அத்தனைக்கும் மேலாக அனைவரது உள்ளத்திற்கும் இதமான அமைதியை அளிக்கும் தூய இடமாக அவ்விடம் பரிணமிக்கலானது.

சுவாமியின் அடுத்த கட்ட நகர்வாக மாணவிகளுக்கான இல்லமொன்றினை அமைக்கும் பணி தொடங்கியது. நெஞ்சையள்ளும் பிருந்தாவனம் போன்று அமைதியும் தூய்மையும் கோலோச்சும் வண்ணம் அன்னையாரின் நாமத்தை தாங்கிய அழகிய மகளீர் இல்லம் வித்தியாலயத்தை அண்மித்ததாக கல்லடி ஸ்ரீ ராமகிருஷ்ணபுரத்தில் பரிணமிக்கலானது. 02.06.1982ல் அன்றைய இலங்கைக் கிளையின் உபதலைவரான ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மாநந்தர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பின்னர் 03.06.1985ல் அவர் களாலேயே அது திறந்தும் வைக்கப்பட்டது. இதில் எழுப்பப்பட்ட ஆலயமோ ஜெபம் மற்றும் தியானத்தில் நாட்டம் கொண்ட பக்தர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே இன்றும் நின்று நிலைபெறுவதைப் பார்க்கின்றோம். இதில் மேலும் ஒரு தொடர்ச்சியாக கட்டப்பட்ட அழகிய கலாசார மையம் 03.12.1993ல் சுவாமி பிரபாநந்தர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதாகும்.

சுவாமியின் அடுத்த பார்வையானது காரைதீவிலுள்ள சிறுமிகள் இல்லமான பழைய கட்டிடத்தில் படிந்தது. ஏலவே பழுதுற்றிருந்த அக்கட்டிடத்தை முற்றாக அகற்றிவிட்டு சகல வசதிகளையும் உள்ளடக்கியதாக தெய்வீகக்களை கொஞ்சும் வண்ணம் அழகிய இல்லமொன்று உருவாக்கப்பட்டு ஒப்படைக்கலானது. இதற்கான அடிக்கல் 22.08.1991ல் இலங்கைக் கிளையின் உபதலைவராகவிருந்த ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தர் அவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டப்பட்டதோடு கட்டடத் திறப்பு விழா 27.05.1994 ல் ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானந்தர் அவர்களால் (பொதுச் செயலாளர் இ.கி.மடம்) நடைபெறலானது.

சுவாமி தனது செயல்திட்டங்களில் முதன்மைப் படுத்திய முக்கிய உட்கட்டமைப்புப் பணிகள் பெரும்பாலானவற்றை நிறைவுசெய்து, பின்னர் புறப்பணிகளில் தனது நாட்டத்தை செலுத்தலானார். அப்போதைய மட்டக்களப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சர் செ. இராசதுரை அவர்கள் மட்டக்களப்பில் ஒரு இசை நடனக்கல்லூரியை நிறுவ மேற் கொண்ட முயற்சிக்கு உறுதுணையாகி மிஷனுக்கு உரித்தான காணியில் வேண்டிய பகுதியைக் கையளித்து இன்று நாம் பெருமையோடு பார்க்கும் சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் கம்பீரமாகக் காட்சியளிக்க ஆக்கபூர்வமான பங்களிப்பினை நல்கினார். மேலும், இதன் பயனாக கிழக்குப்பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்புரிமையும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனுக்கு கிடைத்தது.

மேலும்,அவரது பெருமுயற்சியின் பயனாக அக்கரைப்பற்றில் பத்து குடியிருப்புகளைக் கொண்ட வீட்டுத்திட்டம் உருவாக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. இந்நிகழ்விலும் சுவாமி ஆத்மகணாநந்தர் பங்கேற்றுக்கொண்டார். பின்னர் இசை நடனக் கல்லூரிக்கு அண்மித்ததாக வணக்க ஸ்தலம், சமூக மண்டபம், பாலர் பாடசாலை, சிறுவர் விளையாட்டரங்கு, சிறுவர் பூங்கா உள்ளிட்ட இருபத்தியேழு குடியிருப்புக்களுடன் கூடிய விவேகானந்தபுரம் வீட்டுத்திட்டத்தை உருவாக்கி ஏழை எளிய மக்களுக்கு கையளித்தார். சுவாமியவர்களால் 01.11.1996ல் அடிக்கல் நாட்டப்பட்ட வீட்டுத்திட்டம் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணாநந்தர் அவர்களாலேயே 03.05.1997ல் திறந்துவைக்கப்பட்டது. சுவாமிகளால் ஏலவே 1967 மே மாதத்தில் பொறுப்பேற்கப்பட்டு பின்னர் மிகச் சிறப்பாக விரிவுபடுத்தப்பட்டு மிஷனுக்கு வருமானத்தை ஈட்டித்தந்த உறுகாமம் விவசாயப் பண்ணை அவரது முக்கிய பணிகளில் மேலுமொரு மைல் கல்லாக அமைந்தது எனலாம். மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனின் பொறுப்புக்களைச் சுமந்துகொண்டு அவர் பணியாற்றிய சுமார் 40 ஆண்டு காலப்பகுதி மிஷனின் வரலாற்றில் பல சிறப்புக்களை உள்ளடக்கியதாகும். இதில் அதன் முற்பகுதி இதமாகவும் பிற்பகுதி போர்ச்சூழல் நிறைந்து இறுக்கமாகவும் அமைந்துவிட்ட போதும் அவரின் பணி தங்கு தடையின்றி தொடரவே செய்தது. எப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலும் ஆரம்பமுதலே அவர் சகலரையும் இணைத்துக்கொண்டு கட்டிக் காத்துவந்த சமூகப்பிணைப்பிலிருந்து ஒரு சிறு துளிகூட மாறினாரல்லர்.

சுவாமியினுடைய வாழ்க்கை நெறியானது தத்துவார்த்த ரீதியில் ஆய்வுசெய்யத்தக்க ஒன்றே. ஆரம்பம் முதலே அவருடன் மிக நெருங்கிப் பழகிய எமக்கு அனுபவ ரீதியாக பல போதனைகளை அது கற்றுத்தந்திருக்கின்றது. சுவாமியவர்கள் ஆன்மீகம் குறித்து அடிக்கடி பெரிதாகப் பேசமாட்டார். ஆனால் அவரது வாழ்வியல் வெளிப்பாடு என்பது ஒரு முழுமைபெற்ற கர்மயோகியின் நெறிதவறாத போக்கினையே வெளிக்காட்டி நின்றமையை நாம் உள்ளூர உணர்ந்திருக்கின்றோம். சுவாமியிடம் அகந்தையோ மமதையோ, அகங்காரமோ சிறு துளியேனும் இருந்ததில்லை.இங்கு ஒரு சம்பவத்தை நினைவுகூருவது பொருத்தமாக அமையும். ஒரு தடவை நான் சுவாமியுடன் பேசிக் கொண்டிருந்தபோது 'தரிசாகக் கிடந்த நிலத்தையெல்லாம் இன்று துவாரகா புரியாக மாற்றிவிட்டிருக்கிறீர்கள். இப்பெருமையெல்லாம் உங்களையே சாரும்' என்று கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டேன். உடனடியாகச் சுவாமியின் முகம் மாறியது. என்னை உற்று நோக்கிய அவர் மிகுந்த கண்டிப்பான குரலில் 'நீயோ இங்கு சில சாதுக்களுடன் பலகாலமாக வாழ்ந்து பழகியவன். நீயா இப்படிக் கூறுவது? உனக்கு தெரியாததா என்ன? பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்கள் என் உள்ளத்து உணர்வினூடாக இட்ட கட்டளையைத்தானே என்னால் நிறைவேற்ற முடிந்திருக்கின்றது. இதில் எனக்கு என்ன பெருமை வந்துவிடப் போகின்றது' என்றார். இங்கே வேதம் கூறும் கர்ம யோக தத்துவத்தின் நெறிமுறைகளுக்கு அமைவாக சுவாமியினுடைய செயல்கள் யாவும் உள்ளுணர்வின் வெளிப்பாடாக புலப்படுவதையே எம்மால் உணர்ந்துகொள்ளமுடிகின்றதல்லவா!.

சுவாமியிடம் எப்போதுமே ஒரு தெய்வீக வாசனை கமழ்ந்து கொண்டேயிருக்கும். அதுகுழந்தையுள்ளம் கொண்ட தாய்மைப் பண்பின் அடையாளமாகவே திகழும். கருணை, அன்பு, அரவணைப்பு, பரிவு, பாசம், பணிவு, உபசரிப்பு, குற்றங்களை மன்னித்து மறந்துவிடும் பெருந்தன்மை அனைத்தும் குடிகொண்ட கோவிலாகவே எம்முன் அவர் வலம் வந்தார். எப்போதும் கலகலப்பாக சிரித்துப் பேசிக்கொண்டிருப்பதில் அவர் அடையும் இன்பத்திற்கு ஈடேயில்லை. இல்லக் குழந்தைகளுடன் குறும்பு பேசி மகிழ்வதும் சின்னக்குழந்தையைப் போல் அவர்களுடன் சண்டையிட்டு பேசாதிருப்பதும், அவருடன் சமாதானமடைய குழந்தைகள் அவரை சுற்றிச்சுற்றி வருவதும் பார்ப்பதற்கு எமக்கு வேடிக்கையாகவேயிருக்கும். எனினும் குழந்தைகளின் நடத்தையில் தேவையான சூழலில் அவர் கண்டிப்பையும் கடைப்பிடிக்கத் தவறியதேயில்லை. இக்கண்டிப்பானது ஒரு தாயின் செயல்பாட்டினை ஒத்ததாகவே அமைந்தது. வரம்பு மீறிச்செல்லும் மாணவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்தும் அவரது மார்க்கமும் தாய் சேயின் பந்த பாசத்தினையே முன்னிறுத்துவதாக அமையும். படிப்பை முடித்துக்கொண்டோ அல்லது வேறு காரணங் களுக்காகவோ இல்லத்தைவிட்டு வெளியேறும் மாணவர்களைத் தடவிக்கொடுத்து இது உங்களது தாய் வீடு. நீங்கள் இங்கிருந்து போனாலும் அடிக்கடி இங்கு வந்து செல்ல வேண்டும். மிஷன் கதவு எப்போதும் உங்களுக்கு திறந்தேயிருக்கும் எனக்கூறுவார். உண்மையில் சொல்லப் போனால் சுவாமி வாழ்ந்த காலத்தே மிஷனின் நான்கு கதவுகளும் அன்னாரது உள்ளக் கதவினைப்போன்று எப்போதுமே திறந்தேயிருக்கும். பழுத்த மரத்தை நாடிவரும் பறவைக் கூட்டம் போல அப் பழுத்த ஞானியின் அப்பழுக்கற்ற அன்பினுக்கும், அரவணைப்பிற்கும் அறிவுரைகளைப் பெற்று மன அமைதிபெறுவதற்குமாக பலதரத் தினரும் ஆவல்மேலிட நாளும்பொழுதும் அவரை நாடிக்கொண்டேயிருந்தனர்.இதனால் குடியிருந்த கோயில் என்ற உண்மையான உணர்வோடும் மிகுந்த பயபக்தியோடும் பழைய மாணவர்கள் பலர் இங்கு வந்துபோவதை இன்றுவரை ஒரு நடைமுறையாகவே கொண்டுள்ளனர்.

சுவாமியிடம் தென்பட்ட ஒரு உயரிய பண்பாடு யாதெனில் எம்மில் யாரேனும் மிஷனுக்கு வந்துபோவதில் நீண்ட நாட்கள் கடந்துவிட்டால் எம்மைத் தெரிந்த யாரை யேனும் காணும்பட்சத்தில் எம்மைப் பற்றி விசாரிக்காமல் விடவேமாட்டார். பின்னர் எம்மில் யாரேனும் அங்கு வந்துவிட்டால் பக்கத்திலிருப்பவர்களைப் பார்த்து 'இங்க பாருங்க இந்தா வாறான் ஒரு கள்ளன்; இத்தனை நாளும் இவன் எங்கதான் போயிருந் தான்?' எனச் செல்லமாய் கடிந்து கொள்வார். அப்போது உண்மையிலே எங்கள் கண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனித்துவிடும். ஏதேனும் சிறு சிறு பிணக்குகளின் நிமித்தம் யாரேனும் வராதிருந்துவிட்டால் சுவாமி பதைபதைத்துப் போவார். எப்படியேனும் எம்மை அழைப்பித்து 'தம்பி ஏனிங்கு நீ வருவதில்லை நான் ஏதேனும் பிழை செய்திருந்தால் என்னை மன்னியும். அதற்காக இங்கு வருவதையோ என்னிடம் பேசுவதையோ நிறுத்திவிடாதே' எனக்கூறுவார். அவருடைய தாயன்பையும் ஆதரித்து அரவணைக்கும் பெருந்தன்மையினையும் நினைந்து நினைந்து நாம் இன்றும் உள்ளூர அழுவதுண்டு. எமது உள்ளார்ந்த உணர்வலைகளில் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற அனைத்தும் ஒன்றிணைந்த தெய்வீக மகா புருஷராகவே உண்மையில் அவர் வியாபித்து நிற்கின்றார்.

சுவாமியவர்கள் தனது பாடசாலைத் தோழர்களைப் பெரிதும் நேசித்தார். அவர்கள் சுவாமியைப் பார்க்க வரும்போதெல்லாம் அவர் அடையும் ஆனந்தத்திற்கு எல்லையே இருக்காது. அவர்களிடம் நீண்ட நேரம் மனம் விட்டுக் கலகலப்பாகப் பேசி மகிழ்வார். அவர்களில் வயதிற்கு மூத்தவர்கள் வந்துவிட்டால் அண்ணா என்று தான் அழைப்பார். அவருக்கு கல்வி போதித்த ஆசிரியர்கள் அவரைப் பார்க்க வந்துவிட்டாலோ தனது இருக்கையைவிட்டு எழுந்து நின்று அவர்களை வரவேற்பார். அவர்கள் அமர்ந்த பின்னர் தான் சுவாமி தனது இருக்கையில் அமர்வார். அவர்களில் எவரேனும் பாத நமஸ்காரம் பண்ண கடைசி வரை அனுமதிக்கமாட்டார். எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்ற மனஉணர்வுடனேயேதான் அவர் என்றுமிருந்தார்.

மிஷனுக்கு வருகைதரும் துறவிகள் தொடக்கம் சமூக மட்டத்தில் உயர்நிலைப் பட்டவர்கள், அரசியல் தலைவர்கள், அன்பர்கள், அனுதாபிகள், பக்தர்கள் யாராயிருப்பினும் விருந்தினர் என்று வந்துவிட்டால் அவர்களை ஆதரித்து உபசரிப்பதிலும் வேண்டியவற்றைச் செய்து கொடுப்பதிலும் அவர் படும்பாட்டைப் பார்த்து சில வேளைகளில் நாம்கூட மனதுக்குள் சலித்து விடுவதுண்டு. அந்த அளவுக்கு ஒரு சேவகனைப்போல் அவர் செயல்படத் தொடங்கிவிடுவார். அவரிடம் காணப்பட்ட மிகப்பெரும் திறமை என்ன வென்றால் எந்தவொரு கருமத்தையும் திட்டமிட்டுச் செயல்படுத்துவது. மிஷன் எடுக்கின்ற பெருவிழாக்களாகட்டும் பொதுக் கூட்டங்களாகட்டும் அடிக்கடி நிகழும் குரு பூசை களாகட்டும் அல்லது ஏதேனும் சிறப்பு பூசைகளுடன் கூடிய விருந்துகளாகட்டும் எவை யாகினும் குறித்த நேரத்தில் தொடங்கவும் குறித்த நேரத்தில் முடிவடையவும் அவரது முழுக்கவனத்தையும் செலுத்திக்கொண்டேயிருப்பார். இதில் ஏதேனும் பின்னடைவு கள் ஏற்பட்டால் அணுவளவும் பொறுத்துக்கொள்ளமாட்டார். இதில் சம்பந்தப்பட்டவர்கள் இல்ல மாணவர்களானாலும் சரி அல்லது பழைய மாணவர்களானாலும் சரி அவரின் கண்டிப்புக்கு ஆளாகியே தீரவேண்டும். எதுவெனிலும் பொறுமையுடன் செயல்படும் சுவாமியிடம் இதில்மட்டும் பொறுமையைக் காணவே முடியாது. இதனால் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் நாம் மிக்க முன்னெச்சரிக்கையுடனும் கவனத்துடனும் செயல்பட எம்மை பெரும்பாலும் பழக்கப்படுத்திக் கொண்டோம்.

சுவாமியவர்கள் மிஷனை வழிநடாத்திய காலம் யாவருக்கும் ஒரு பொற்காலமாகவே கழிந்திருக்கின்றது. சுவாமியவர்களது சேவை தங்கு தடையின்றித் தொடர அவருக்கு உறுதுணை புரிந்தவர்களில் பலர் நம்முன் இருக்கவே செய்கின்றனர். அவர்களில் இரவு பகலென்று பாராது தம்மை சுவாமியுடன் முழுமையாக இணைத்துக்கொண்டு சிலகாலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றிய ஸ்ரீமான் அன்பன் நடராஜா, ஸ்ரீமான் பத்மநாதன், ஸ்ரீமான் சிவயோகன், ஸ்ரீமான் தில்லைநாதன் மற்றும் சுவாமியவர்களின் இறுதிக் காலத்தில் உடல் தளர்ந்து நோய்வாய்ப்பட்டிருந்த சமயம் அவருக்குப் பக்கத்திலிருந்து ஒரு தந்தைக்கு மகனாற்றும் சேவையைப் போல் மருத்துவ சேவை புரிந்த வைத்திய நிபுணரும் பழைய மாணவருமான ஸ்ரீமான் விவேகானந்தராஜா போன்ற சிலரையாவது இவ்விடத்தில் நினைவுகூருதல் பொருத்தமானதாகும்.

உலகியலின் சிறப்பம்சம் யாதெனில் மனம்போல வாழ்தலும் மனம்போல மறைதலு மாகும். இதனை வாழ்க்கைத் தத்துவமாகவும் கொள்ளமுடியும். சுவாமியவர்கள் உடல் தளர்ந்து போனதுவும் நோய்வாய்ப்பட்டதுவும் மிகக் குறுகிய காலமே. 2006 பெப்ரவரி மாதம் 4ம் திகதி நாடு சுதந்திரத்தைக் கொண்டாடிய வேளையில் சுவாமியவர்கள்பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் பாதாரவிந்தங்களில் சங்கமமாகிவிட்டார்.

சுவாமியவர்கள் பூதவுடல் விடுத்து புகழுடல் எய்திய செய்தி ஆழிப் பேரலையாய் அனைத்து இடமும் பரவியது. சுவாமியவர்களின் பக்தர்கள், அன்பர்கள், பழைய மாணவர் கள், கல்விமான்கள், பல்வேறு சமய நிறுவனங்களையும் சார்ந்த பெரியவர்கள், மாணவ சமூகத்தினர், அரசு மற்றும் தனியார் நிறுவன அலுவலகர்கள், பொதுமக்களென சாதிமதம் கடந்து நாட்டின் நாலாதிசைகளிலிருந்தும் கடலெனத் திரண்டு வந்து கண்ணீர் மல்க தங்கள் இறுதியஞ்சலியைச் சுவாமியவர்களுக்குச் செலுத்தினர். மட்டக்களப்புப் பிரதேச வீதிகள் சுவாமியின் அஞ்சலிப் பதாகைகளால் நிரம்பலாயின. அஞ்சலிப் பிரசுரங்கள் நூற்றுக் கணக்கில் குவியலாயின. 2006 பெப்ரவரி 6ம் திகதி சுவாமியின் இறுதி ஊர்வல நிகழ்வு திட்டமிட்டவாறு இடம்பெறலாயிற்று. சுவாமியின் பொன்னுடல்தாங்கிய பேழையினை மிஷன் பழைய மாணவர்கள் உணர்ச்சி பொங்க பனித்த கண்களுடன் பத்துக் கிலோமீற்றர் நீளத்திற்கு தோளில் தாங்கிவந்த காட்சி பார்ப்போரை நெக்குருகச் செய்தது. வீதியில் இருமருங்கிலிருந்து ஆயிரக்கணக்கில் கூடியிருந்த மக்கள் தங்கள் இல்லங்களுக்கு முன்னால் நிறைகுடம் வைத்து குத்துவிளக்கேற்றி மலர் தூவி சுவாமிக்கு அஞ்சலி செலுத்தினர். மிஷன் மண்டபத்திலிருந்து ஆரம்பித்த இறுதி ஊர்வலம் புதிய கல்முனை வீதியூடாக மட்டுநகர் ஆனைப்பந்தி மகளிர் வித்தியாலயம் வரை சென்று திரும்பிப் பின் பழைய கல்முனை வீதியினூடாகவந்து மஞ்சந்தொடுவாய் வீதியினூடாக ஸ்ரீ ராகிருஷ்ண புரம் சாரதா மகளீர் இல்ல வளாகத்தினை அடைந்தது. மஞ்சள் குளித்த மாலைச் சூரியன் காரிருள் சங்கமித்து அமைதிகொள்ள நமது இதயச் சூரியனோ அக்கினியில் சங்கமித்து நிறைவுபெற்றது. அதன் வியாபகம் காலம்தோறும் நம்முன் நிழலாடிக் கொண்டே யிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tribute

# Swami JivanandaJi of the Ramakrishna Mission, Batticaloa

Bradman Weerakoon CCS,
One – Time Government Agent, Batticaloa

In my book of memoirs on my career in the Public Service titled Rendering unto Caesar (2004) I gave a special place to Batticaloa in the seven years I spent in the outstations in the decade of the 1970's. I had been moved out of the Centre where I had been Secretary to several Prime Ministers for a period of 15 years in all, to the periphery as a Government Agent by a regime not particularly well - disposed to me. It ushered in a stage of learning and undiluted joy in my life when along with my wife and son, I believe we began to understand and appreciate more our country and its varied and talented people.

This is how I began the Chapter of my book on my life in Batticaloa at the time (1972 – 1974)

"The people of Batticaloa had learnt to live with a mix of religions and people. On the Christian side were the Jesuit Fathers hard at work training the Tamil boys in English and Technology, woodwork being their speciality. The Hindus, with their Kovils and the famous Ramakrishna Ashram at Kallady, were serving the cause of Hindu-based education.

The Ramakrishna Mission on the road out to Kathankudy in Kallady, was a place we visited often. Swamiji Jeevanananda was a dynamic character and kept his flock of 200 orphans under a very strict regimen. Yoga exercises, studies, meditation and farming seemed to fill their day. But the boys always appeared alert and eager for more whenever I saw them.

It was a miracle that Swamiji had performed on a sandy bed of land leased out to him by the government many years ago. Compared to the surrounding countryside, the Mission gardens looked like an oasis, full of fruit trees. Mangoes and pomegranates seemed to bear fruit at all seasons. The care Swamiji bestowed was as much as he gave to his children. Nothing went to waste and everything possible that could nourish the earth went into it.

While out walking in the garden with him, if Swamiji saw a fallen leaf, he would, with a deft turn of his big toe, push the leaf into the soil. 'Leaf compost', he would call it as we walked on."

Rereading the extract as I write this tribute to a great and good man reminds me of several of the attributes of Swami ji as I knew and associated with him some forty years ago. I first dropped in at the Mission soon after taking over the district in the middle of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972. I was returning from a day's circuit in the south of the district, hot and covered with the thin dust that blows over the area in August and heard the sound of a multitude of young voices in sonorous prayer. I turned into the Mission through the gate on the side of the road to the Kalladybridge and no sooner I alighted from the jeep Swami ji dressed in his usual dark saffron robe was at my side with the most jovial welcome in English and an enchanting smile. He took me into his study for a cup of tea and a platter of sweets and an introduction to the activities that governed his day. They had a great deal to do with his plans for his "boys" – some 200 or more of them, mostly orphans, who were then at their evening prayers. He took me around the many buildings and immaculate gardens where the trees seemed always to bear fruit and the plants were full of blooms. We did this round whenever I visited which was often and it was on one of these walks around the garden that I witnessed the 'leaf compost' incident. He never, unlike others in the presence of government functionaries, asked for favours and monetary help for himself or his institution. He was self - sufficient and had learnt to cope with his resources. He spoke with great satisfaction of the achievements of his wards. They were his pride. To have had the privilege of serving others especially the lowly and dispossessed seemed to me to be his biggest joy. I learned a lot by thinking about that which I later found was one of the central tenets of the Vedanta philosophy which he followed. The nobility of his spirit lay there.

Perhaps the only material help he requested from me was to improve the irrigation facility to the Mission's fields at Rugam which he had begun cultivating in both seasons. This was a project for the senior boys who then, as well as now, found meaningful employment hard to come by. Like most fields in the District cultivation had been possible only during the Maha season from October to February when the North-east monsoon winds brought rain. Swami ji wished to change this pattern of manawari cultivation only, with a second crop, the Yala, from April to July, by the aid of a channel from the Rugam tank. With the help of a sympathetic Irrigation engineer I think I was able to help Swami ji achieve his goal. I recall being invited for the traditional new rice meal after the first harvest in a small shed by the side of the fields at which Swami ji was immensely happy.

My wife, Damayanthi, who was a fervent believer in the Gods of the Hindu pantheon, in addition to being a devout Buddhist, also became a frequent visitor and admirer of the Swami. For years, long after we had left Batticaloa my wife would donate a small sum of money to the Mission on her birthday in March. This was always immediately reciprocated by Swami ji in a little note of thanks accompanied by a small parcel of holy ash which my wife treated with great devotion. It was an association which touched me greatly between two vital souls.

So in many ways Swami Jivananandaji was a special part of my life. He symbolized the many wonderful characteristics of the good people of the Batticaloa District. Their generosity of spirit, the warmth and depth of their feeling, their industry and perseverance against many odds and the fact above all, that they never forget to acknowledge the smallest thing you do for them. Batticaloa represents a large part of the memories that nourish me today.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஜீவனாநந்தரும் நானும்

'ஆசிரிய சிரோமணி' த.செல்வநாயகம்
மட்டக்களப்பு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட உடல், பொருள், ஆவி அத்தனையும் பரமஹம்சதேவரின் பாதங்களில் சமர்ப்பித்து அவரின் பணிகளில் நிம்மதி கண்டு 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என வாழ்ந்து காட்டிய இராமகிருஷ்ண மிஷனைச் சார்ந்த மூத்த துறவியருள் ஒருவரே சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள்.

அவரை நான் 1942ம் ஆண்டில் சிவானந்த வித்தியாலயத்தில் சந்தித்தேன். அப்போது அவர் மாணவர் இல்லத்திலுள்ள சிறுவர்களின் மேற்பார்வையாளராக வாழ்ந்து வந்தார். வித்தியாலயத்தில் படித்துக் கொண்டுமிருந்தார். நான் தமிழ் சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்து, தொடர்ந்து ஆசிரியர் பயிற்சி பெறத் தகுதியான வயது வராதபடியால் அதாவது 15 வயதிலேயே அப்பரீட்சையில் சித்தியடைந்து விட்ட காரணத்தினால் 18 வயதெய்தும் வரை ஆங்கிலம் கற்க விரும்பி சிவானந்த வித்தியாலயத்தில் படித்த காலம்.

இல்லத்தின் தலைவராக சுவாமி நடராஜானந்தர் மகராஜ் பணியாற்றிய காலம். நான் 1946ம் ஆண்டு ஆசிரியர் கலாசாலையில் சேர்ந்து பயற்சி பெற்று, ஆசிரியராக தராதரப் பத்திரம் பெற்று, படிப்பித்தல் தொழிலை ஆரம்பித்து பல இடங்களுக்கும் சென்று சொந்த ஊருக்கு திரும்பியிருந்தேன்.

'எதுவும் தற்செயலாக நடந்துவிடுவதில்லை. எல்லாமே இறைவனால் திட்டமிடப் பட்டுள்ளன'. ஆகவே நான் என்ற மமதை இருக்கக்கூடாது. நான் என்று ஒன்று இல்லை. என்று மனிதர் கூறுவாராயின் அது அவரின் பக்தியின் கடை எல்லையாகும் என்று சுவாமிஜீ அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

சுவாமிஜி அவர்களின் வாழ்வில் இது நடந்ததை கண் கூடாகக்காணக் கிடைத்தது. மட்டக்களப்பின் சேவாசிரமப்பயிற்சி, சிவானந்த வித்தியாலயக்கல்வி, துறவிகளின் அருட்பார்வை, பிறவிப்பயன் முதலானவற்றுடன் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் கிருபை எல்லாம் ஒன்று சேர்ந்து சகோதரர் சீவரெத்தினத்தின் ஆழ்மனதில் புதையுண்டிருந்த ஞானஒளி கிளறப்பட்டு துறவறம் நாடினார்.

1947 இல் சுவாமி நடராஜானந்தவினால் சென்னை ஆச்சிரமத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு ஆச்சிரம ஒழுங்கு விதிகளைக் கற்று இந்துமத ஆச்சிரமதர்மம் காட்டும் நெறியில் நின்று ஒழுகத்தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948இல் இந்தியாவில் வடஆற்காடு மாநிலத்தில் தொலைவிலுள்ள ஒரு கிராமத்தில் வயது முதிர்ந்த சுவாமிஜின் கீழ்பணிபுரிய அனுப்பப்பட்டார். இப்பெரிய சுவாமி ஒரு காலத்தில் மட்டக்களப்பில் பணியாற்றிய சுவாமி கேதாரீஸ்வரர் ஆவார். இவர் பணிபுரிந்த இடம் நாட்டறம் பள்ளி என்பதாகும். இங்கு பணிபுரிந்த காலத்தில் துறவு வாழ்க்கையில் சிறிது தளர்வு ஏற்பட்டது. அவ்வப்போது இங்கிருந்து சுவாமி நடராஜானந்தஜீ சுவாமிகளை வலுவூட்டினார்.

துறவுப்பயிற்சியில் ஆறு வருடங்கள் பூர்த்தியானதும் 1952 இல் இளந்துறவியான சீவரெட்ணம் அவர்களுக்கு மந்திர தீட்சை வழங்கப்பட்டது. இவருக்கு இத்தீட்சையை வழங்கியவரும் ஜீவனாநந்தர் என சந்நியாச நாமம் வழங்கியவரும் சுவாமி விவேகானந்தரின் நேரடிச் சீடர்களில் ஒருவரான சுவாமி விரஜானந்தரே.

இவருக்கு 01.03.1958 இல் சந்நியாசம் வழங்கப்பட்டது. சந்நியாசம் வழங்கப்பட்ட போது இரு பிறப்பாளராகி இரண்டாவது பிறவி எடுப்பதற்கான சடங்குகள் நடைபெற்று இறைவனிடம் சரணாகதி அடைந்தார்.

இதன் பிறகு சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் பல விவசாயக் கிராமங்களுக்கும் சென்று விவசாயப்பயிற்சியுடனும் அதன்பின்னர் வீடுவீடாகச் சென்று யாசகம் செய்து மிஷன் வளர்ச்சிக்கும் உதவினார். இத்துடன் சுவாமிகள் எங்கெல்லாம் சென்று பயிற்சிகள் பெற வேண்டுமோ அங்கெல்லாம் சென்று பயிற்சிகள் பெற்றார். சமையல், வைத்திய உதவிகள், கணக்கெழுதுதல் போன்ற பயிற்சிகளைப் பெற்றார்.

இவரைப்பார்த்து சுவாமிகள் ஒருவர் 'நீ எதிர்காலத்தில் என்ன செய்ய மனம் கொண்டிருக்கிறாய்? என்று கேட்டதாகவும் 'எனக்கு பெட்டிச்சாவி கிடைக்குமாயின் நான் மடம் கட்டுவேன்' என்று கூறியதாகவும் என்னிடம் ஒருநாள் கூறினார்.

நான் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மாற்றம் பெற்று வந்ததும் சுவாமி அவர்களைச் சந்தித்து அவரின் ஆசியைப் பெற்றுக்கொண்டேன். கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் அதிபராக பணியேற்றதும் சுவாமிகளை தரிசித்து அவரின் பூரண ஆசிகளைப் பெற்றுக் கொண்டு பணியை ஆரம்பித்தேன். வித்தியாலயத்தில் நடந்தேறிய எல்லா விழாக்களுக்கும் சுவாமிஜீ அவர்கள் கலந்து கொள்வார்கள். 31.08.1978 இல் பரிசளிப்பு விழாவொன்று நடந்தது. அக்காலத்தில் கல்வித் திணைக்களத்தில் கல்வி அதிகாரியாக கடமையாற்றிய பிரம்மஸ்ரீ லக்ஸ்மண ஐயர் அவர்களும் மனைவி வாலாம்பிகை லக்ஸ்மண ஐயர் அவர்களும் சமூகமளித்தவேளை அவர் அவ்வைபவத்தில் கலந்து ஆசியுரை சிறப்புரை என்பவற்றை ஆற்றி எனக்கு பெருமையூட்டினார்.

நான் ஓய்வு பெற்றதும் அடிக்கடி அவரைச்சந்தித்து உரையாடுவேன். அவ்வாறு உரையாடிய வேளைகளில் பெற்றுக்கொண்ட தகவல்களே நான் மேற்குறிப்பிட்டவை. என்னை அவர் குறிப்பிட்ட நாளில் சந்திக்காவிட்டால் உடனே திரு.நமசிவாயம் மூலம் செய்தி அனுப்புவார். இல்லையேல் தொலைபேசியில் அழைப்பு வரும்.

அங்கு நடைபெறுகின்ற ஜயந்தி வைபவங்கள், பூசைகள், விசேடமாக கற்பகதரு நாளான ஜனவரி முதலாம் திகதி என்பவற்றில் பங்குபற்றி அவரின் ஆசிகளைப் பெற்று மகிழ்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி அவர்களுடன் நானும் நிதிசேகரிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கிறேன். பல இடங்களுக்கும் செல்வோம். கிடைப்பது சிறிதாக இருப்பினும் மனங்கோணாது பெற்றுக் கொள்வார். அவ்வாறு பெற்றுக்கொண்ட நிதியிலிருந்தே இன்று எழுந்துள்ள மாணவரில்லம், சாரதா மகளீர் இல்லம், காரைதீவு மகளீர் இல்லம் என்பன உருவாகின.

இவருடன் உரையாடிக்கொண்டிருந்த நீதி அரசர் 'சுவாமி உங்களுடைய வங்கி மீதி எவ்வளவு? என்று கேட்டதாகவும்' மக்களுடைய அனுதாபமே எங்களுடைய வங்கி மீதி என்று கூறியதாகவும் அவருடன் பழகிய சிலர் கூறியதை கேட்டிருக்கின்றேன். இவ்வாறு எத்தனையோ சங்கதிகள் சுவாமிஜியின் வாழ்விலிருந்து எடுத்துக்கூறலாம்.

இதை நிறைவு செய்ய முதல் அவருடன் எனக்கேற்பட்ட இறுதிச்சந்திப்பைக்கூறி நிறைவு செய்கின்றேன். 2006ம் ஆண்டு கற்பகத்தரு நாளன்று அவரிடம் ஆசி பெறச் சென்றேன். சரியான மழை அவரது தனியறையில் தியானம் செய்து கொண்டிருந்தார். அவரது தியானம் முடியும் வரை நான் காத்திருந்தேன். தியானம் கலைந்து கண் விழித்ததும் வந்து விட்டீங்களா? எங்கே இன்னும் காணவில்லையே! என்று யோசித்துக் கொண்டி ருக்கிறேன். இருங்கள் என்று கூறி ஆசிர்வதித்தார். ஒரு அப்பிள்பழம் தந்தார். அத்துடன் குருதேவர் கையை உயர்த்தி ஆசிர்வதிப்பது போலுள்ள போஸ்றகாட் அளவான படம் ஒன்றும் தந்தார். நான் எனது தாமதத்திற்கான காரணத்தைக் கூறினேன். அதைக் கேட்ட சுவாமிஜீ அவர்கள் இனி ஓடிவரத்தேவையில்லை. ஆறுதலாக வாருங்கள் என்று கூறினார். அன்றுதான் அவர்களுடன் இறுதியாகக் கதைத்த சந்தர்ப்பம் வாழ்வில் என்றும் மறவாத சம்பவம்.

அவர் சமாதியடைந்த செய்திகேட்டு பதைபதைத்த அன்புள்ளங்களில் நானும் ஒருவர். என்னைப் பொறுத்த அளவில் அவரைப் பூஜித்த எல்லோர் உள்ளங்களிலுமே சமாதி யடைந்துள்ளார் என்பதே பேருண்மையென்பேன்.

அவருடைய ஆசிகள் எப்போதும் அவர் அன்பு செலுத்திய இல்லங்களிலே நின்று நிலைத்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவாக நெஞ்சத்தில் பதிந்த ஜீவகாருண்யர் ஜீவனானந்த மகராஜ் அவர்கள்

அல்ஹாஜ் M.M.மஹ்றூப் கரீம் M.A., JP

*காதி நீதிபதி; சிவானந்த வித்தியாலய பழையமாணவர்; ஆசிரியர், காத்தான்குடி*

அன்பிற்கும், பண்பிற்கும் இலக்கணமானவராக, ஆதரவும் ஆன்மீகப் பற்றும் மிக்கவராக, இல்லற இன்பத்தைத் துறந்த இறைபக்தராக, ஈசனருளை என்றும் வேண்டி நிற்பவராக, உண்மை நேர்மைக்கு உதாரணபுருஷராக, ஊக்கமாய் சமய, பொதுப்பணிசெய்பவராக, எல்லார் மனதையும் எளிதில் ஈர்ப்பவராக, ஏழை எளியோரக்கும், அனாதையர்க்கும் உதவு பவராக ஐக்கியமாய் அனைவரையும் அரவணைப்பவராக, ஒற்றுமை மேலோங்க உழைத்தவராக, ஓம் என்ற மந்திரத்தை மறக்காதவராக, ஔடதமானஅருமருந் தாக, அனைத்து இன மக்களை யும் மதிப்பவராக, கல்விக்கும் கடமைக்கும், உயிரூட்டுபவராக, சமத்துவத்திற்கும், சகோதரத்து வத்திற்கும், வலுவூட்டுபவராக, தன்னலம் கருதா தனித் துறவியாக, பற்றையும் பாசத்தையும் பாமரமக்களுக்குபங்கீடுசெய்பவராக, வாழ்வையும் வாழ்க்கையையும் பேணுபவராக, ஞானத்தையும் ஆன்மீகத்தையும் அறிந்தவராக, நல் லதையும் நன்மையையும் செய்பவராக, மக்களின் மதிப்பையும், மரியாதையும் பெற்றவராக, மற்றவர்களுக்காக வாழ்வாங்குவாழ்ந்து மறைந்தவர் தான் மகத்துவமிக்க மனிதர் சிறப்பு மிக்க சீர்மிகு ஸ்ரீமத் ஜீவகாருண்ய ஜீவனாநந்தஜீ மகராஜ் அவர்களாகும்.

धेनुः दुग्धम् परोपकारः
वृक्षः फलति परोपकारः
नदिः क्षीरम् परोपकारः
नरः शरीरम् परोपकाराति

*தேனுஹு துக்தம் பரோபகாரஹ*
*விருக்க்ஷஹ பலதி பரோபகாரஹ*
*நதி ஹி கிறிஹிம் பரோபகாரஹ*
*நரக சரீரம் பரோபஹாராத*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பசு (மற்றவர்களுக்கு) பால் கொடுத்துதவுகிறது
மரம் பழம் கொடுத்து உதவுகிறது
நதிநீர் கொடுத்து உதவுகிறது
மனிதனது சீரம் மற்றவர்களுக்காக உதவவேண்டும்'

இவ் வடமொழிப்பாவலரின் கருத்துக் கொப்பவே வாய்மைப் புலவன் வள்ளுவனும் 'குடம்பைத் தனித்தொழியப் புள் பறந்தற்றே உடம்பொடு உயிரிடை நட்பு' என்று கூறுகின்றான்.

ஆரம்பத்திலே முட்டையினுள் கரு ஒன்றித்திருக்கின்றது. கரு உருப்பெற்று வளர் வதற்குரிய அத்தனை சக்திகளும் முட்டையினுள்ளே பொதிந்திருக்கின்றது. இதைப் பயன்படுத்தி வளரும் கரு பறவையாகி ஒருநாள் ஓட்டை உடைத்துக் கொண்டு வெளியே வந்து பறந்துவிடுகின்றது. தான் பாதுகாப்பாக இருந்து வளர்வதற்கு காரணமாயிருந்த ஓடாயிற்றே என்று ஓட்டையும் தூக்கிக் கொண்டு செல்கின்றதா? அல்லது அந்த சிதைந்த ஓட்டை எப்போதாவது வந்து பார்க்கின்றதா? இல்லை. இதுதான் இந்த உடலுக்கும் உயிருக்குமிடையே இருக்கும் தொடர்பாகும். எனவே உடலாகிய ஓட்டிலே உயிராகிய கரு இருக்கும் போது ஒருமனிதன் தனக்காக மட்டுமன்றி மற்ற மனிதனுக்காக, சமூகத்துக் காக வாழவேண்டும், இவ்வாறு வாழ்ந்தால் அவன் மறைந்தாலும் அவன் சேவை மறையாது மக்கள் மனதில் வாழ்வான்.

இதேபோல் 'மக்களுக்குச் செய்யும் சேவையே மகேசனுக்குச் செய்யும் சேவையாகும்' என்று கூறிய சுவாமி விவேகானந்தரின் வாக்குக்கேற்ப வாழ்ந்து மறைந்த ஜீவன் தான் சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் அவர்கள். விபுலானந்தரின் ஈசன் உவக்கும் இன் மலருக்கு இலக்கணமானவராக வாழ்ந்து மறைந்த மகான்களில் ஒருவரே இவர். சிவானந்த வித்தியாலய ஸ்தாபர் சுவாமி முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின் நெருங்கிய நண்பர் இலங்கை முஸ்லிம் முதல் சிவில் சேவையாளர் DR.A.M.A. அஸிஸ், மாணவர் புலவர்மணி சரிபுத்தீன், கல்வி அபிவிருத்திக்கு அள்ளி வழங்கிய திருமலை நண்பர் இப்றாகீம் ராவுத்தர், இலங்கையிலிருந்து இந்தியா சென்று தமிழ் பேராசிரியராகக் கடமையாற்றிய தன்னை அடுத்த தமது மாணவன் DR.K.K உவைஸ் ஆகிய முஸ்லிம்கள் போல சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் அவர்களும் தமது முஸ்லிம் நெருங்கிய நண்பர்களாக காத்தான்குடிசேர்மன் அஷ்ஷஹீட் அகமதுலெப்பை, ஏறாவூர் அலிகார் அதிபர் U. L. மதாவூத் கவிஞர் திலகம் கலாபூஷணம் சாந்திமுகைதீன், வர்த்தக வள்ளல் தேசகீர்த்தி பிலால் கலீல் ஹாஹியார், பிரஜைகள் குழுத்தலைவர் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர். A.M.அஸிஸ் ஆகியோர் களையும் நண்பர்களாகக் கொண்டிருந்தார். சமூக சேவைகள், சர்வசமய சகோதரத்துவ செயற்பாடுகளில் ஈடுபட்டுழைத்தார் என்பதையும் இன்றும் எண்ணிப் பார்க்கின்றோம்.

சிவானந்த வித்தியாலய விடுதியில் இருக்கும் முஸ்லிம் மாணவர்கள் இங்கு கற்பித்த முஸ்லிம் ஆசிரியர்களுடன் மிகுந்த அன்பைக் காட்டும் ஜீவனாநந்தஜீ அவர்கள் சிவானந்தா மாணவனாக, ஆசிரியனாக இருந்த என்னை பழைய மாணவர் மன்றம் கௌரவிக்கவும், விவேகானந்தர் நூற்றாண்டு விழாவில் கல்லடி விவேகானந்தாக் கல்லூரியிலும், சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாவில் மட்டக்களப்பு ஆசிரியகல்லூரி ,காரைதீவு விபுலானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்திலும் சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்து கொள்ள உந்துசக்தியாகவும் இருந்தார் என்பதை என் வரலாற்றில் என்றும் மறக்கமுடியாது.

இதே போல் மட்டக்களப்பு வளநிலையத்தில் கடமையாற்றி அதிபராகி வஸ்கி புலமைப் பரிசில் பெற்று இந்தியா சென்று PGD முடித்து வந்தபோது சுவாமி ஜீவனாநந்தஜீ அவர்கள் என்னை சிவானந்த வித்தியாலய அதிபராகக் கடமையாற்ற அழைத்தார். சமய இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது எமது இலட்சியம் என்று கூறினார். நான் காத்தான் குடி சென்று ஆண்,பெண் கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த அதிபராகப் போக எண்ணுகிறேன் என்று கூறியபோது அது அவசியம் தான் என்று என்னை ஆசீர்வதித்து வாழ்த்தியவர் சுவாமி ஜீவனாநந்தஜீ அவர்களாகும்.

यथा चित्तम् तथा वाचः
यथा वाचः तथा क्रीयाम्
यथा क्रीयम् तथा शीलम्
यथा शीलम् तथा जीवः
चित्ते वाचि क्रीयाम्
एकरूपम् सः महात्मनः

'எண்ணத்திற்கேற்ப சொல்
சொல்லுக்கேற்ப செயல்
செயலக்கேற்ப ஒழுக்கம்
ஒழுக்கத்திற்கேற்ப வாழ்க்கை அமையும்
எண்ணம், சொல்,செயல் மூன்றிலும் ஒன்றுபோல்
இருப்பவனே உயர்ந்தோன் மகாத்மா வாகும்'

என்பதற்கேற்ப வாழ்ந்து மறைந்த மகாத்மா ஸ்ரீமத் ஜீவனாநந்தஜீ மகராஜ் மறைந்தாலும் அவரது சேவை என்றும் மறக்காது மணம் வீசிக்கொண்டே இருக்கும்.

நன்றி - ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தஜீ
சிலை திறப்பு விழா வெளியீடு
2010. 02. 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நிறைந்த காலம் அது....

பொ.சீனித்தம்பி
*முன்னாள், சிவாநந்தா வித்தியாலய விடுதி மேற்பார்வையாளர்*

1950ம் ஆண்டு தை மாதம் 06ம் திகதி மட்டக்களப்பு கல்லடி உப்போடை ஸ்ரீ இராம கிருஷ்ண மாணவர் இல்லத்தில் சேர்ந்தேன்.சீவரெத்தினம்(சுவாமி ஜீவனாநந்தாஜீ) அப்போது ஆனைப்பந்தி ராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றியதுடன் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் குருகுல இல்லத்தில் Brother ஆக (Warden) பணி புரிந்து கொண்டிருந்தார். நான் 05ம் வகுப்பு கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளையில் என்னைக் கற்பித்த தரும ரெத்தினம் ஆசிரியர் என் குடும்ப நிலையினைக் கருத்தில் கொண்டு சீவரெத்தினம் (சுவாமி ஜீவனாநந்தாஜீ) Brother இடம் என்னைப் பற்றி சொல்ல அவர் எந்த மறுப்பும் இன்றி சுவாமி நடராஜானந்தாஜீயிடம் சொல்லி என்னை குருகுலத்தில் இணைத்துக் கொண்டார். சிவானந்தா வித்தியாலயத்தில் அதிபராக அம்பலவாணர் கடமை புரிந்த காலத்தில் என்னை நேரடியாகக் கூட்டிச் சென்று சேர்த்து விட்டார். நான் ஆங்கில மொழியில் கல்வியினை ஆரம்பித்தேன்.

நான் சிறுவனாக இருக்கும் போது சீவரெத்தினம் இல்லத்தில் இருக்கின்ற எல்லா குருகுல மாணவர்களுடன் மிக அன்பாக பழகுவார். எங்கள் தேவைகளை எங்களைக் கூப்பிட்டு வைத்து கேட்பார். கல்வி கற்க வைப்பதில் மிகுந்த அக்கறை காட்டுவார். அது மட்டுமின்றி எங்கள் தனிப்பட்ட சுத்தத்தையும் பேணுவதில் மிகுந்த அக்கறையுடன் இருப்பார். மாலை வேளையில் எங்களுடன் சேர்ந்து இல்லத்தையும், இல்லம் அமைந்துள்ள சூழலையும் சுத்தம் செய்வார். எங்களுக்கு நோய் ஏற்பட்டால் மிகுந்த அக்கறையுடன் அதனை சுகப்படுத்த முயற்சிப்பார். அதனால் எங்களுக்கு அம்மா அப்பா இல்லையே என்ற கவலை இருக்காது. ஆனால் நான் அவருடைய அரவணைப்பில் நீண்டகாலம் இருக்கவில்லை. சந்நியாசம் பெறுவதற்காக இந்தியா சென்று விட்டார்.

Brother ஆக சென்ற அவர் பதினைந்து வருடங்களுக்கு பிற்பாடு 1967ம் ஆண்டு சுவாமி ஜீவனாநந்தாஜீ என்ற நாமத்துடன் மீண்டும் இலங்கைக்கு வருகை தந்தார். அவர் வருகை தந்த வேளையில் நான் சிவானந்த வித்தியாலய விடுதியில் உதவி மேற்பார்வை யாளராக கடமை புரிந்து வந்தேன்.

1967ம் ஆண்டு சுவாமி நடராஜானந்தாஜீ சிவபதம் அடைந்ததன் பிற்பாடு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு கிளை இல்லத்தின் பொது முகாமையாளராக தமது சேவையினை பொறுப்பேற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒவ்வொரு நாளும் காலையில் எமது விடுதியில் உள்ள கடமைகளை முடித்து விட்டு இராமகிருஷ்ண மிஷன் குருகுல இல்லத்திற்குச் சென்று குருமஹராஜ் தர்சனம் செய்து விட்டு சுவாமி ஜீவனாநந்தாஜீயை சந்திப்பது எனது வழமையான செயற் பாடாகக் கொண்டிருந்தேன்.

நான் ஒவ்வொரு நாளும் சந்திப்பதால் என்னோடு மிகுந்த அன்போடு பழக ஆரம் பித்தார். அப்படிச் சென்றுவரும் நிலையில்தான் அவர் சில விடயங்களை என்னிடம் கூறுவார். நானும் சில விடயங்களை அவரிடம் இருந்து கற்றுக் கொண்டேன்.

சுவாமிஜீ இல்லத்தை பொறுப்பெடுத்த காலத்தில் இல்லத்தில் மிகுந்த கஷ்ரமான நிலையே இருந்தது. இருந்தாலும் அவர் தாய், தந்தையரை இழந்து தவிக்கும் சிறுவர்களை சேர்ப்பதிலும் அவர்களை நல்ல முறையில் வளர்ச்சியடைய செய்வதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

பிள்ளைகளை வளர்ப்பதற்கு தேவையான பணத்தினை மக்களின் ஆதரவு மூலம் சேர்ப்பதே அவரது குறிக்கோளாக இருந்தது. அவரது குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்காக என்னையும் அவரோடு சில வேளைகளில் சேர்த்துக் கொள்வார். என்னைப் போன்று சில நண்பர்கள் அவருக்கு துணையாக நின்றார்கள். அன்பர் நடராஜா, களுதா வளை நமசிவாயம் போன்றோரை குறிப்பிடலாம்.

சுவாமியுடன் நான் பணம் சேர்க்க சென்ற சம்பவம் ஒன்றை இங்கு கூற விரும்புகின் றேன். நானும் குருகுல பழைய மாணவர்கள் ஒரு சிலரும் சுவாமியுடன் களுதாவளைக்கு சென்றிருந்தோம். அங்குள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் நடந்து போனோம். ஒரு வீட்டிற்குச் சென்ற போது அங்கிருந்து வந்த மூதாட்டி ஒருவர் படலையை திறந்து வாங்க சாமி என இருகரம் கூப்பி வரவேற்றார். நாங்கள் கல்லடியிலுள்ள மாணவர்கள் இல்லத்தில் இருந்து வருகின்றோம். தாய் தந்தையரை இழந்த சிறுவர்களுக்கு ஏதாவது உதவி செய்யுங்கள், எனக் கூற உடனே தனது சீலை முடிச்சில் இருந்த ரூபா 3.50 சதத்தை எடுத்து கொடுத்து இவ்வளவுதான் சாமி என்னிடம் உள்ளது எனக் கூறினார். அதனை சுவாமி மிகுந்த சந் தோசத்துடன் பெற்றுக் கொண்டதுடன் அம்மா நீங்கள் தந்தது சிறிதாக இருந்தாலும் நீங்கள் காட்டிய அன்பும் ஆதரவும் 100 வருடங்களுக்கு எங்கள் இல்லம் நிலைத்து நிற்கும் எனக் கூறினார்.

கால மாற்றத்தில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் குருகுல இல்லத்திற்கு மாணவர்களின் வரவும் அதிகரித்தது. அவர்களின் தேவைகளும் கூடுதலாக இருந்தது. அதனால் சுவாமிஜீ அவர்கள் சிறிது நேரத்தைக் கூட வீணாக்காது பொருளாதாரத்தை மேலோங்க செய்வதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார்.

சுவாமிஜீ அவர்கள் பொறுப்புக்கள் அதிகரிக்கவும், பொருளாதாரத்தை அதிகரிக்க கிராமங்கள் தோறும் நேரடியாக செல்வதை குறைத்துக் கொண்டார். அதனால் அறிந்தவர் தெரிந்தவர்களின் மூலம் பெரியோர்களின் முகவரியினைக் கேட்டறிந்து இல்லக் கஷ்ட நிலவரங்களை கூறி தனது கையெழுத்துகளால் கடிதம் எழுதி அனுப்புவார். நான் காலையில் செல்லும் போது யோசித்துக் கொண்டு இருப்பார். என்ன சுவாமி தபால் வரவில்லையா? எனக் கேட்டால் இல்லை சீனித்தம்பி என்று கூறுவார். சில வேளைகளில் தபால் கண்டதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை வாங்கி சந்தோசமாகப் பிரித்துப் பார்ப்பார். அதன் பிறகே என்னையும் கூட்டிச் சென்று காலை உணவு சாப்பிடுவார்.

அடிக்கடி என்னிடம் சொல்வார் நான் இல்லத்தை பொறுப்பெடுக்கும் போது வங்கிக் கணக்கில் 64 ரூபா மட்டுமே இருந்தது: இன்று பாருங்கள். மக்களின் ஆதரவும் குருமஹராஜின் அருளும் முயற்சியும் இருந்தால் எல்லாம் வளம் பெறும் என சொன்னார்.

பொருளாதாரம் மக்கள் ஆதரவின் மூலம் ஓரளவு அதிகரித்து வந்தவேளை சிதைவுற்ற இல்லக் கட்டடங்களை புதிதாக கட்டுவதற்கு அனுமதி கேட்டு சுவாமி பிரேமாத்மானந்தா ஜீக்கு எழுதிய போது அவர் உடனே ஜீவனாநந்தா பெரிய கட்டடத்தைக் கட்டுவதற்கு பணம் உள்ளதா என கேட்டடாராம் உடனே சுவாமிஜீ சொன்னாராம் நீங்கள் அனுமதி யினைத் தாருங்கள் நாங்கள் கட்டுவதற்கு குருமஹராஜின் அருளால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கின்றோம் என நான் கூறினேன். அதே போல் இக்கட்டடம் கட்டப்பட்டது. எனச் சென்னார். அதே போன்று கட்டடம் கட்டி முடித்தால் மாத்திரம் போதாது அது 30 வருடங்களுக்கு மேல் ஒளி விட்டு பிரகாசிக்க வேண்டும் எனவும் சொன்னார்.

சுவாமிஜீ அவர்கள் தாய் தந்தையரை இழந்த சிறுவர்களை மாத்திரமன்றி சிறுமி களையும் இணைத்துக் கொண்டதுடன் மாணவர்களுக்கு எதனை எல்லாம் செய்தாரோ அதனை மாணவிகளுக்கும் செய்தார். அந்த வேளையில் மாணவிகளின் வளர்ச்சியிலே கூடுதல் அக்கறை காட்டுவார். மாணவிகளின் இல்லத்துக்கு செல்லும் போது என்னையும் கூட்டிக் கொண்டு செல்வார்.

சுவாமிஜீ அவர்கள் என்னிடம் கூறுவார் குருகுல மாணவர்களை மட்டும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வது மாத்திரம் எமது வேலை அல்ல. கோயில், சமூக தொண்டு களையும் செய்ய வேண்டும். ஏழைகளுக்கு உதவ வேண்டும் எனவும் சொல்வார். அதற்கு ஏற்றால் போல் மாந்தீவு கோயில் இராமகிருஷ்ண மிஷன் அனுசரணையில் தான் இயங்கி வந்தது. அக்கோயில் சிதைவுற்ற நிலையில் இருந்து அதனை கட்டி கும்பாபிஷேகம் செய்ய வேண்டிய ஆசை அவருக்கு இருந்தது. அவர்காலத்தில் அதனை செய்து முடித்தார். அத்தோடு உற்சவ காலங்களில் என்னையும் கூட்டிக் கொண்டு செல்வது வழக்கம். சுவாமிஜீ கோயிலுக்கு மாத்திரம் செல்லாது அருகாமையிலுள்ள மாந்தீவு வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களையும் பார்வையிட்டு அவர்களின் மன ரீதியான கவலையினை கேட்டறிவதுடன் உணவு பொதிகளையும் கொடுப்பார்.

சுவாமிஜீ அவர்கள் நாவற்குடாவில் உள்ள முத்துமாரியம்மன் கோயிலுக்கும் கூட்டிச் செல்வார். அங்கு சென்று வரும் நேரங்களில் அங்கு வாழ்கின்ற மக்களின் நிலமையினை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வீடுகளைக் கட்டியமைத்து கொடுத்தார்.

சுவாமிஜீ அவர்கள் என்னிடம் அடிக்கடி சொல்கின்ற விடயம் சீனித்தம்பி யார் எங்கிருந்து வந்தாலும் அவர்களை இருப்பாட்டி அவர்களுக்கு தேனீர் கொடுத்து அனுப்ப வேண்டும். அதனால் நமக்கு பெரிய செலவு எதுவும் ஏற்படாது என கூறுவார்.

அத்தோடு சுவாமிஜீ அவர்கள் வரவு செலவு கணக்கில் மிகவும் கவனமாக இருப்ப துடன் அவரே கணக்குகளை எழுதுவார். சிறிய பணத்தைச் செலவு செய்வது என்றாலும் பல தடவைகள் யோசித்துப் பார்த்து செய்வார். ஏன் சுவாமி இப்படி யோசிக்கின்றீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என கேட்டால் 'குரு மஹராஜின் பணம் நெருப்பு அதனை கவனமாக செலவு செய்ய வேண்டும்' என்றே சொல்வார்.

சுவாமிஜீ அவர்கள் மிஷனை மட்டும் நினைக்காது என்னிடம் விடுதி எப்படி போகின்றது பிள்ளைகளுக்கு என்ன சாப்பாடு இன்று கொடுத்தாய். மதியச் சாப்பாடு நன்றாகக் கொடுக்க வேண்டும். எந்த நேரமும் விடுதியை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வரவு செலவு கணக்கில் கவனமாக இரு, பிள்ளைகளின் சுத்தத்தை நன்றாக கவனி, காலையில் எல்லோரும் எழுந்து விட்டார்களா? என்பதைப் பார், படிக்கின்றார்களா என்பதைப் பார் பிள்ளைகளுடன் அன்பாக பழகு, கூடுதலாக அதட்ட வேண்டாம். என அடிக்கடி எனக்கு சொல்வதுடன் பிள்ளைகளின் சாப்பாட்டை ஒவ்வொரு நாளும் கேட்டறிந்து கொள்வார்.

விடுதியில் கட்டடங்கள் சிதைவுற்ற நிலையில் இருந்த போதெல்லாம் என்னோடு அதனைப் பற்றி கதைத்தது மாத்திரமில்லாமல் வித்தியாலய பழைய மாணவர்களை ஒன்று சேர்த்து அவர்களுடன் கதைத்து, வடகிழக்கு மாகாண கல்வி திணைக்களத்திற்கு விண்ணப்பம் செய்தார். அதன் மூலம் உருவானதே தற்போது காணப்படும் 100 இலட்சம் பெறுமதியான விடுதிக் கட்டடம் ஆகும்.

சுவாமிஜீயின் இன்னொரு சம்பவத்தை கூற விரும்புகின்றேன். உன்னிச்சைக்கு செல்வதற்கு கூப்பிட்டார் ஏன் சுவாமி என கேட்க ஒரு பையனுக்கு சுகமில்லை அவரை வீட்டில் விட்டுவிட்டு வருவோம் என கூற நானும் போனேன். அங்கு போய் விட்டு வரும் போது சொன்னார் நான் பிறந்த மண்ணை பார்த்துவிட்டு போவோம் எனக் கூறி அங்கே சென்றோம் தான் வாழ்ந்த வீட்டைக் காட்டினார். அது குட்டை கற்களால் கட்டப் பட்டது. அங்கு எல்லோரும் வாருங்கள் சுவாமி என கூப்பிட்டார்கள். ஒரு இடமும் சுவாமி இருக்க வில்லை இளநீர் கொண்டு வர நாங்கள் அவசரமாக செல்ல வேண்டும் நிறைய வேலை இருக்கின்றது என கூறி விட்டு வெளிக்கிட்டு விட்டார். தமது சொந்தங்கள் ஒன்றையும் இனம் காட்ட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுவாமிஜீயுடன் பழகிய அன்பான காலங்களை கூறுவது என்றால் எவ்வளவு விடயங்களைக் கூறிக் கொண்டே போகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்மயோகி சுவாமி ஜீவனாநந்தாஜி மகராஜ்

*பேராசிரியர் கு. தெட்சணாமூர்த்தி*
*நாவற்குடா, மட்டக்களப்பு*

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தெய்வீக அவதாரங்களில் ஒப்பற்றவர். சமயம் கடந்த அவரது வாழ்க்கையும் ஆன்மீக சாதனைகளும் ஒப்பிடமுடியாதவை. அவரது முதன்மைச் சீடர் சுவாமி விவேகானந்தர் உட்பட பதினாறு சீடர்களின் வரலாறும் தனித்தனியே ஈடிணை யற்றவை. தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி பகவானின் அம்சமாகவே இருந்தார். இவர்களது அற்புத ஆன்மீக சாதனைகளைப் படிக்கும் போது ஸ்ரீராமகிருஷ்ணர் என்னும் மகாச ாகரத்துள் நம்மை அறியாமலே இழுத்துச் செல்லப் படுகிறோம். இவர்களைத் தொடர்ந்து வரும் ராமகிருஷ்ண சாதுக்களும் உலகளாவிய ரீதியில் மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கும் இல்வாழ்விற்கும் வழிகாட்டி வருகிறார்கள். சுவாமி விவேகானந்தரின் நேரடிச் சீடர் சுவாமி விரஜானந்தர்.அவர் மாபெரும் தபசி. அவரின் சீடர் சுவாமி ஜீவனாநந்தர். மட்டக்களப்பு மண்ணில் ராமகிருஷ்ண பரமஹம்சம் எனும் பெரும் சமுத்திரத்தில் ஒரு துளியையேனும் பலரும் பருகி அனுபவிக்க வைத்தவர் இந்த மூத்ததுறவி நமது சுவாமி ஜீவனாநந்த மஹாராஜ். ராமகிருஷ்ண சாதுக்களின் சாதனைகள் பல்வேறுபட்டவை. தத்துவஞானிகள், வேத வேதாந்த விற்பன்னர்கள், சனாதனதர்மத்தை உலகெலாம் பரப்பி வரும் சாதனை யாளர்கள், சமூகத் தொண்டிற்கே தம்மை முற்றிலும் அர்ப்பணித்த கர்மயோகிகள் என்று பல்வேறு தரப்பட்ட சன்னியாச பரம்பரையைக் கொண்டது ராம கிருஷ்ண சங்கம். சுவாமி விபுலானந்தர் மட்டக்களப்பில் அந்தசங்கத்தின் வித்தை விதைத்தார். ஸ்ரீராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர் சுவாமி விஞ்ஞானானந்தர் இந்த மண்ணை ஆசீர்வதித்து புண்ணிய பூமியாக்கினார். அதனைத் தொடர்ந்து சுவாமி நடராஜானந்தர் கல்வி வளர்ச்சிக்கு குறிப்பாக ஏழைக்குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு தம்மை அர்ப் பணித்தார். இதனால் உண்மைக் கல்வி பெற்ற பலமனிதர்கள் உருவாகினார்கள். சுவாமி ஜீவனாநந்தரின் பணிபல இல்லறத்தாரின் ஆன்மீக ஈடேற்றத்திற்கும் அதற்கு அவசியமான சாதனங்களை உருவாக்கு வதிலும் சிறப்புற்றிருந்தது. பல ராமகிருஷ்ண குடும்பங்கள் அவரால் உருவாகி உள்ளதை நாம் காண்கிறோம். அவரின் காலத்தில் மட்டக்களப்பிலிருந்து இரண்டு துறவிகள் உருவாகினார்கள்.

எனது தனிப்பட்ட வாழ்க்கையில் சிவானந்தாவில் மாணவனாக இருந்தபோது ஸ்ரீராமகிருஷ்ணரில் குறிப்பிடத்தக்க ஈடுபாடு இருக்கவில்லை. ஜீவனாநந்தரின் முதலாவது தொடர்பு 80ம் ஆண்டுகளில் எனது விவசாயத் திணைக்களத்தின் பணியுடனே ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமகிருஷ்ண சங்கத்திற்குச் சொந்தமான 25 ஏக்கர் பண்ணை கரடியனாறு றூகம் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதில் சிலபணிகளுக்கான ஆலோசனைகளை வழங்குவதில் அவருடன் எனக்கு அறிமுகம் ஏற்பட்டது. அதுபின்னர் சாதுசங்கமாகமாறி எனது குடும்பமே ராமகிருஷ்ண குடும்பமாக ஈடுபாடு கொள்ள வைத்துவிட்டது. இந்தியா கோயம்புத்தூரில் குடும்பத்துடன் மேற்படிப்பிற்காகத் தங்கியிருந்த போது ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள் முதன் முதலில் தமிழில் வெளிவந்திருந்தது. இதன் மூன்று பாகங்களையும் வாங்கி அனுப்பி வைக்குமாறு எனக்கு சுவாமி அறிவித்திருந்தார். அவற்றை உடனடியாகப் பெற்று அலுமாரியில் வைத்துவிட்டேன். விரித்துக்கூடப் பார்க்கவில்லை.

ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுமொழிகள் இறைவனை நேருக்குநேர் காணுமாறு செய்ய வல்லவை என்று காந்தியடிகள் கூறியதையும், இந்த அமுதமொழிகள் ஆன்மீக தரிசனத்தில் எழுந்தவை என்று மேனாட்டு சரித்திரப் பேராசிரியர் ஏ.டாய்ன்பீ எழுதியதையும் அப்போது அறிந்திருக்கவில்லை. இராமகிருஷ்ண சங்கத்துறவிகள் பெரும்பாலோர் இதனை வாசித்ததன் பின்னர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டதும் தெரிந்திருக்கவில்லை. வீட்டிலிருந்த மனைவிக்கு அதனை வாசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. இந்த அமுதமொழிகளினால் ஈர்க்கப்பட்ட மனைவி என்னையும் வாசித்துப் பார்க்கும்படி தூண்ட அதுவே எங்களை ராமகிருஷ்ண பரமஹம்சம் என்னும் சாகரத்தில் மூழ்கவைத்தது. முன்னைய நல்வினையின் பேறாக இதனை நாம் போற்றுகிறோம். இதன் பின்னர் மட்டக்களப்பிற்கு வந்ததும் ஜீவனாநந்தரின் மீதான அன்பு மேலும் இறுக்கமடைந்தது. தந்தையின் அன்பிற்கு நிகரான அன்பு அவரிடமிருந்து எனக்கு கிடைத்ததாக உணர்கிறேன். அவர் உயிருடன் இருந்ததை விட இப்போது அவரை கூடுதலாக நேசிக்கிறேன். கப்பல் கடலில் சென்ற பின்னர் தான் அது சென்ற தடயம் துலக்கமாகப் புலப்படுகின்றது. இல்லறத்தாருக்கு சாதனைகள் புரிவதும் தவம் செய்வதும் இன்றைய உலகில் இலகுவானதல்ல. இவற்றின் மூலம் பெறக்கூடிய வற்றை சுலபமாகப் பெறுவதற்குரிய இலகுவழி தான் சாதுசங்கம். ஜீவனாநந்த மஹராஜ் மூலம் பலஅன்பர்கள் இதனை அனுபவிக்கும் பேறுபெற்றோர்கள் வார்த்தை மூலம் வெளிப் படாத உள்ளார்ந்த அன்பை அவர் எல்லோரிடமும் பொழிந்தார். பாமர மக்கள் முதல் சமயத் தலைவர்களும் உயர்நிலையிலுள்ளஅரச அதிகாரிகளும், கல்வி மான்களும் அவருடன் நெருக்கமான உறவை வைத்திருந்தார்கள். அவர் நிகழ்த்திய சாதனைகள் அனேகம். அவையெல்லாம் எந்தவித சலனமுமில்லாமல் செய்யப்பட்டவை. எதனையும் செய்யப் போவதாக அவர் சொல்வதில்லை. சிலரிடம் சிலஆலோசனைகளைக் கேட்பார். திட்டம் உருவாகிவிடும். வங்கியில் பணம் எதுவுமில்லாமல் இறைவனை மட்டுமே நம்பிஆரம்பிக்கப்பட்டதிட்டங்கள் பல. மாணவரில்லம்,பின்னர் சாரதா இல்லம், காரைதீவுமாணவர் இல்லம், விவேகாநந்தபுரம் வீட்டுத்திட்டம், றூகம் விவசாயப்பண்ணை என்பன அவற்றுட் சில. அவற்றிற்குரிய நிதி செல்வந்தர்களிடமிருந்து மட்டும் கிடைத்த தல்ல. கிராமங்களி லுள்ளமக்களின் வீடுகளுக்குச் சென்றுஅவர் சிறுகச்சிறுகச் சேர்த்தநிதி இன்று பலவித சேவைகளுக்காவும் பயன்பட்டு வருகிறது. அவரது காலப்பகுதியில் மூத்ததுறவிகள் பலர் இங்குவிஜயம் செய்து ஆன்மீக சொற்பொழிவுகள் நிகழ்த்தி யுள்ளார்கள். பலர் மந்திரதீட்சைபெற்றுப் பயனடைந்தார்கள். வசதியற்ற மக்களுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஏற்படுத்திய நலன்புரித் திட்டங்களும, நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவர் கள் பெற்று வரும் உதவி நன்கொடைகளும் விளம்பரப்படுத்தாமல் நடந்துவருகின்றன.

சுவாமிஜீ எளிமையின் உருவம். தன்னை ஒரு பூஜ்யம் என்றே குறிப்பிடுவார். காலில் செருப்பு இல்லாமலே திரிவார். ஒருசமயம் அவருடைய உடம்பிற்கு பொருத்தமில்லாத காவி அங்கி அணிந்திருந்தார். சட்டை பெரிதாக இருக்கிறதே சுவாமி என்றேன். சிரித்துக் கொண்டே 'இது நல்லகதை' நான் கல்கத்தா போயிருந்த பொழுது ஒரு மூத்ததுறவியிடம் கேட்டுப் பெற்றது என்றார். அதனை அன்பின் சின்னமாக அணிவது அவரது பெருமையாக இருந்தது. காட்சிக்கு எளியவர். வசதிபடைத்த போடியார் குடும்பம் அவரது பூர்வாசிரமம். அப்படியிருந்தும் துறவிவாழ்வின் ஆரம்பத்தில் மிகவும் கடுமையான தவவாழ்வும் வீடுவீடாகச் சென்று பிச்சையேற்று வாழ்ந்த காலப் பகுதியும் தான் தனது வாழ்வின் உன்னதமான ஆனந்தம் நிறைந்த காலப் பகுதி என்று அவர் கூறுவார். எவர் எந்த நேரம் சென்றாலும் மிஷனில் இருக்கும் போது அவரை நிச்சயம் சந்திக்கலாம். சுகவீனமுற்று இருக்கும் போது கூட படுக்கையிலிருந்து அன்பர்களுடன் உரையாடுவார். எதனையும் எதிர்பாராது சாதனைகள் புரிந்த கர்மயோகி. அவர் ஒருபோதும் எவரையும் குறைகூறி நான் கேட்கவில்லை.

துறவிகளுக்கு உடல் என்பது வெறும் மாயையே. மரணத்தின் போது ஜீவன் ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்குச் செல்கின்றது அவ்வளவுதான் என்று கூறுவார்கள். எனவே அவர்களது உலகியல் வாழ்க்கையை விடமக்களின் வாழ்க்கையில் அவர்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் தான் முக்கியம். எந்த இலட்சியத்திற்காக அவர்கள் வாழ்ந்தார்கள் என்பது தான் முக்கியம். நாம் அவர்களுக்காக செலுத்தும் அஞ்சலி, அவர்களின் இலட்சியங் களை அடியொற்றிச் செல்வதுதான். சுவாமிஜீக்கு சிலை நிறுவுவதுடனும் ஞாபகார்த்த மலர் வெளியிடுவதுடனும் நமது பணி நின்றுவிடக்கூடாது. அவரது இலட்சியப்பணியில் நாம் பங்குதாரராக வேண்டும். சுவாமி மகாசமாதி அடைவதற்கு முன்னர் சிலயோச னைகளை வைத்திருந்தார். ஒரு வைத்தியசாலை நிறுவவேண்டும் என்பது அவற்றுள் ஒன்று. அதற்கான வரைபடமொன்றையும் வரைந்து வைத்திருந்தார். ஆனால் அதுநிறை வேறவில்லை. பாரதத்தில் ஆயிரக்கணக்கான தன்னார்வ ராமகிருஷ்ண-விவேகானந்த நிறுவனங்கள் வியக்கத்தக்க வகையில் சமூகத்தொண்டாற்றி வருகின்றன. இவ்வாறான அமைப்புக்கள் இங்கு தோன்றவில்லை என்று அவர் ஆதங்கப்படுவார். ஜீவபூசைதான் சிவ பூசை என்பது ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் முதற்பணி. இந்த முக்கியமான மிஷன் பணிகளைச் செய்வதற்கு மக்கள் முன்வருவதில்லையே என்றும் கவலை கொள்வார். மக்கள் இணைந்தால் மாபெரும் சாதனைகளைப் படைக்கலாம் என்று கூறுவார். இவை யெல்லாம் நமது சிந்தனைக்குரியவை முன்னெடுக்க வேண்டியவை. இராமகிருஷ்ண மிஷன் பணிகளிலிருந்து நம்மில் பலர் தூரவிலகி நிற்பதாகவே எண்ணத் தோன்றுகிறது. அவற்றில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வதுதான் சுவாமி ஜீவனாநந்தருக்கு நாம் செலுத்தக் கூடிய சிறந்த அஞ்சலியாக இருக்கமுடியும்.

**ஓம்.....தத்சத் ஓம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனக்கென முயலாத் தனிப்பெருந்துறவி

*உண்டால்அம்ம, இவ்உலகம்*
*தமக்கு எனமுயலாநோன் தாள்*
*பிறர்க்கு எனமுயலுநர் உண்மையானே - புறநானூறு 182*


பெ. சு. மணி
*தமிழ்நாடு, இந்தியா*


கட்டுரைத் தலைப்பின் இலக்கணத்திற்கு ஓர் ஒளிமயமான இலக்கியமாகத் திகழ்ந்தவர் சுவாமி ஜீவனாநந்தாஜி மகராஜ் அவர்கள்.

மகராஜ் அவர்களிடம் என்னை அறிமுகப்படுத்தியவர் சுவாமி ஆத்மகனானந்தஜி மகராஜ் அவர்கள். அவர் கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் தலைவராக இருந்த பொழுது 1992, 1994, 1996 ஆண்டுகளில் என்னை அன்புடன் அழைத்து குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் மற்றும் ஆன்மிகம், இலக்கியச் சொற்பொழிவு சுற்றுப் பயணத் திற்கு இலங்கையில் ஏற்பாடு செய்தார். என்னுடைய, நூற்றாண்டுவிழாக் காணும் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகள் (1993), இலங்கையில் இராமகிருஷ்ண இயக்கம் (1997), ஆன்மிக வாழ்க்கைக்கான சில வழிகாட்டுதல்கள் (தில்லி ஸ்ரீராம கிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி கோகுலானந்தரின் ஆங்கில நூல் மொழிபெயர்ப்பு) (1997) எனும் மூன்று நூல்களையும் கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் சார்பில் வெளி யிட்டு சிறப்புச் செய்தவர் சுவாமி ஆத்மகனானந்தர்.

இலங்கைச் சுற்றுப்பயணத்தில் சுவாமி ஆத்மகனானந்தர் வழிகாட்டுதலில் நான் மட்டக்களப்பிற்கு மும்முறை சென்ற பொழுது, சுவாமி ஜீவனாநந்தாஜி மகராஜ் அவர்களின் புண்ணியதரிசனம் வாய்த்தது. அங்கு இராமகிருஷ்ண மிஷனில் தங்கிய காலத்தில் நாள்தோறும் தாயினும் சாலப்பரிந்து அவர் விருந்தோம்பியது என் பசுமை நினைவுகளில் குறிப்பிடத்தக்கதொன்றாகும். அவருடைய எளிமை, நலங்கேள் முறுவல், இன்சொல், மேதாவிலாசம் என பல்வேறு நிலைகளில் அவருடைய ஆளுமை என்னை ஆட் கொண்டது.

சுவாமி விபுலானந்தரால் பயிற்றுவிக்கப் பெற்றவர் என்பதை அறிந்து மிக்கப்பரவச முற்றேன். சுவாமி விபுலானந்தர் ஆய்வில் தோய்ந்தவன் நான். மனவலிபடைத்த மாசிலாத் துறவி எனத்தொடங்கும் சுவாமி விவேகானந்தரின் சந்யாசிகீதம், சுவாமி ஜீவனாநந்தாஜி மகராஜ் அவர்களை நினைக்கும் பொழுதெல்லாம் நவில்தொறும் புதிய புதிய விளக்கங் களை வழங்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமகிருஷ்ண மிஷனின் ஒப்பற்ற ஒரு தனித்தன்மை உளங்கொளத்தக்கது. அந்த ஒப்பற்ற தனித் தன்மை யாதெனில், செல்லுமிடங்களில் எல்லாம் அவரவர் சமய, ஆன்மிக ஒழுகலாறைப் போற்றி மதித்து நல்லிணக்கத்துடன் மதங்களிடையே கலந்துரையாடல், இணைந்து செயலாற்றுதல், மதமாற்ற முயற்சியை எண்ணத்தளவில் கூட ஏற்காதது முதலானவற்றின் ஓர் அற்புதக் கலவையாகும்.

இவ்வுண்மையை இலங்கையில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தோற்றத்திற்குரிய காரண கர்த்தாக்களில் ஒருவராக வழிகாட்டிய மகாபுருஷ மகராஜ் சுவாமி சிவானந்தாஜி மகராஜ் அவர்கள் 18-6-1926 ஆம் தேதியிட்டு கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் துணைத் தலைவர் சுவாமி அவினாசானந்தருக்கு எழுதிய கடிதத்தின் பின்வரும் வரிகள் விளக்க வல்லன.

"Yatiswarananda is here. He will be soon leaving for Madras and will carry for joy some used articles of Sri Guru Maharaj to be enshrined there. It reminds us of the expedition of Mahinda, son of Ashoka, who carried with him some relics of Buddha, and converted whole country to Buddhism – which brought new life into the Pearl Island. So we expect you to be the pioneers and may you succeed in permeating through and through the life of the Ceylonese with ideas of Sri Guru Maharaj. But this time they shall not have to be converted, yet the searchlight of Sri Ramakrishna idealism will help the people to live in the true spirit of their own ideal and profession. That is the New Testament."

குருதேவர் பரமஹம்சரின் மேலே குறிப்பிடப்பெற்ற புதிய ஏற்பாட்டை தொண்டாலும் துறவறத்தாலும் பரப்பியவர் சுவாமி ஜீவனாநந்தாஜி மகராஜ் அவர்கள். அவருடைய இந்த வாழ்வியல் பேருண்மையை நேரில் கண்டும் கேட்டும் அனுபவிக்கும் நற்பேறு எனக்குக் கிடைத்தது. ஒரு கிறித்துவ நண்பரிடம் உரையாடிய பொழுது தொண்டில் சுவாமி ஜீவனாநந்தர் ஒரு நூறு கிறித்துவப் பாதிரிமார்களுக்குச் சமமானவர் என்று கள்ளம் கபடமில்லாமல் குறிப்பிட்டார்.

என்னுடைய இராமகிருஷ்ணர் இயக்கம் சில பார்வைகள் (2008) எனும் நூலைப் பின்வரும் அஞ்சலிமொழியுடன், படத்துடன், காணிக்கையாக்கியுள்ளேன்.

இலங்கை மட்டகளப்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவராக நாற்பது ஆண்டுகள் மக்கள் சேவையே மகேசன் சேவை எனும் இராமகிருஷ்ணமிஷன் இலட்சியத்திற்கு ஏற்ப மகத்தான தொண்டாற்றிய ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாஜி மகராஜ் அவர்களுக்கு நினைவஞ்சலியாக இந்நூலைக் காணிக்கையாக்கி வணங்குகின்றேன்.

மட்டக்களப்பிலும், அதனைச் சார்ந்த பிறவிடங்களிலும் என்னுடைய நூற்றாண்டு விழாக்காணும் சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவுகள் எனும் நூல்வெளியீட்டு விழாக்களை மிகச்சிறப்புடன் நடத்தினார், சுவாமி ஜீவனாநந்தர். 3-4-1994 இம்மட்டகளப்பு இராமகிருஷ்ணமிஷன் சார்பில் தம்பெயரிலேயே அழைப்பிதழ் அச்சடித்து நூல் வெளியீட்டு விழா நடத்தி சான்றோர் பலருடைய நல்வாழ்த்துகளை நான் பெறவாய்ப்பளித்தார். 2-4-1994 இல் மட்டக்களப்பு ஆனைப்பந்தியிலும் நூல் வெளியீட்டு விழாவை நடத்தினார்.

30-3-1994 இல் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டுவிழாச் சபை சார்பில் விவேகானந்தரும் விபுலானந்தரும் எனும் தலைப்பில் நான் உரையாற்ற ஏற்பாடு செய்தார், சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவனாநந்தாஜி மகராஜ் அவர்கள். இந்தக் கூட்டங்களில் எல்லாம் சுவாமி ஆத்மகனானந் தரும் கலந்து கொண்டார்.

அவருடன் பயணம் செய்யும் பொழுது நிகழ்ந்த உரையாடல்களில் ஆன்மிகவுணர் வோடு, இலக்கியவுணர்வும் பொங்கித் ததும்பியதை அனுபவித்தேன். அவர் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர். ஆங்கிலச் செம்மொழி இலக்கியங்களைப் பற்றியும் உரையாடினார். அவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரிடம் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாடு பாரதி ஆய்வாளனான என்னை மிகவும் கவர்ந்தது. பாரதியாரை உலக மகாகவி எனப்போற்றி பாரதியாரின் முதல் திறனாய்வாளராகப் புகழ் பெற்ற சுவாமி விபுலானந்தர் தமது இராமகிருஷ்ணமிஷன் அறையில் பாரதியார் படத்தை வைத்திருந்த செய்தியை அவர் மூலம் அறிந்தேன். அந்த அறைக்குச் சென்று பாரதியார் படத்தையும் கண்டு அஞ்சலி செய்தேன்.

அவர் எனக்கு வழங்கிய ஓர் அரிய ஆவணத்தையும் என்னுடைய தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி பன்முகப் பார்வை எனும் நூலில் தெய்வீக இன்னிசையின் வடிவம் எனும் தனியொரு அத்தியாயத்தில் பின்வருமாறு பதிவு செய்துள்ளேன்.

முத்தமிழ் வித்தகர், இராமகிருஷ்ணர் இயக்கத் துறவி சுவாமி விபுலானந்தர் (1892-1947) தமது யாழ்நூல் கையெழுத்துப் படியில் பின்வருமாறு ஓர் ஆங்கிலக் குறிப்பை எழுதியிருந்தார்.

"To the lotus feet of the Holy MOTHER SRI SRI SARADA DEVI, whose life was a symphony of heavenly music."

இந்தக்குறிப்பு, இலங்கை மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷனில் பாதுகாக்கப் பெற்றுவருகிறது. அதன் தலைவர் சுவாமி ஜீவனாநந்தாஜி மகராஜ் கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜி வழியாக என்னிடம் வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த ஆவணத்தை சுவாமி ஆத்மகனானந்தரைப் படியெடுக்கச் செய்து 10-6-1996-ல் அளித்தார். அப்பொழுது நான் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனில் விருந்தினனாகத் தங்கியிருந்தேன்.

இலங்கையில் இராமகிருஷ்ணர் இயக்கம் (கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் வெளியீடு 1997) எனும் நூலில் மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் பற்றி எழுதுவதற்கு, சுவாமி ஜீவனாநந்தாஜி மகராஜ் எழுதிய மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனின் வரலாறும் பங்களிப்புகளும் எனும் ஆங்கிலமொழிக் கட்டுரை கைவிளக்காகப் பயன் தந்தது.

புதுதில்லியில் இராமகிருஷ்ண மிஷனுக்கு சுவாமி ஜீவனாநந்தாஜி வந்த பொழுது நான் புதுதில்லியில் இருந்தேன். புதுதில்லி மிஷன் தலைவர் சுவாமி கோகுலானந்தாஜி மகராஜ், சுவாமி ஜீவனாநந்தாஜி மகராஜ் ஆகியோருடன் சற்றே கலந்துரையாடலுக்குப் பிறகு - சேர்ந்து நான் எடுத்துக் கொண்ட புகைப்படம் மலரும் நினைவாக ஊக்கமளித்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூயதுறவி

வே.கணபதிப்பிள்ளை
ஓய்வுபெற்ற கல்வியதிகாரி
கல்லடி-உப்போடை, மட்டக்களப்பு

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தோராம் ஆண்டின் பிற்பகுதியில் நான் இரு நண்பர்களுடன் தென்னிந்திய சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தேன். 'ஊட்டி'எனச் சுருக்கமாக அழைக்கப்படும் உதகமண்டலத்தில் அன்று ஸ்ரீராமகிருஷ்ண நிலையத்தில் நாங்கள் அவரைச் சந்தித்தோம். ஆம் அன்றுதிகதி 17.12.1961. சுவாமி ஜீவனாநந்தா எனும் அம்மகானின் திவ்யதரிசனம் எங்கள் உள்ளங்களுக்கு இதமளிப்பதாயிருந்தது. அவரது கையொப்பத்தை நான் கொண்டு சென்றிருந்த புத்தகத்தில் மறக்காமல் வாங்கிக் கொண்டேன்.

அவர் மட்/ சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வேளையில் 'ஜீவரெத்தினம்' எனும் பெயர் பூண்டிருந்தார். பின்பு ஜீவரெத்தினம்-brother என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டார். ஆசிரியராயிருந்த அவர் சிலவருடங்களின் பின் துறவு பூண்டு சுவாமி ஜீவனாநந்தர் ஆக இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்புக் கிளையின் தலைவராகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். அவருடைய நிருவாகத்தின் கீழ் இருபத்தாறு பாடசாலைகள் இயங்கின. மட்டக்களப்புப் பட்டணத்தில் சிவானந்த வித்தியாலயம், கல்லடி-உப்போடை, விவேகானந்த மகளிர் மகாவித்தியாலயம், ஆனைப்பந்திப் பெண்கள் பாடசாலை என்பன புகழ்பெற்ற கல்வி நிலையங்களாக விளங்கின. சுவாமி நடராஜாநந்தா அவர்களுக்குப் பின்பு ஜீவனாநந்த சுவாமிகள் மக்கள் மனதில் நிரந்தர இடம் பிடித்த ஒருவராக விளங்கினார். அவர் கடமையைப் பொறுத்தமட்டில் இருபத்துநாலு மணிநேர ஊழியராகச் செயற்பட்டுஎல்லோர் மனத்தையும் தம் வசப்படுத்திக் கொண்டார். 'சிவபுரி' ஆஷ்ரமத்தில் அவருக்குரிய அறை என்றுமே துயில்வதில்லை என்று சொன்னால் அது மிகையாகாது. பாடசாலை ஒன்றை நிர்வகிக்கும் அதிபர் ஒருவருக்கே ஓய்வு ஒழிவு இல்லாமலிருப்பது கண்கூடு. ஆனால் இருபத்தாறு பாடசாலைகளின் நிருவாகத்தைக் கவனிப்பவருக்கு ஓய்வு கிடைப்பது எங்ஙனம்?

பாடசாலைகளின் நிருவாகத்தைப் பொறுத்தமட்டில், முகாமையாளர் கல்வித் திணைக்களத்துக்கும்,பாடசாலைக்குமிடையில் ஒரு இணைப்புச் சங்கிலியாகச் (Link) செயற்பட்டார். அவ்வகையிலும் ஜீவனாநந்தமஹராஜ் கடைப்பிடித்த உறவுமுறை அனைவராலும் சிலாகித்துப் பேசப்பட்ட ஒன்றாகும். அதில் அவர் தமது முன்னோடியாகிய ஸ்ரீமத் சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜாநந்தமஹராஜ் அவர்கள் கடைப்பிடித்த வழியிலேயே சென்று வெற்றி பெற்றார் என்று கூறுதல் மிகையாகாது.

சுவாமிஜீ அவர்களின் உன்னதமான இயல்பு அவரிடம் இயற்கையாய் அமைந்திருந்த காலந்தவறாது செயற்படும் பாங்கு (Punctuality) ஆகும். அவர் என்மேல் காட்டிய பாசம் இலகுவில் வருணிக்க முடியாததாகும். அவருடைய எழுத்து வேலைகளில் தமிழ், ஆங்கிலமொழிகளிலுள்ள சுற்றறிக்கைகள், கடிதங்கள், ஆசிச் செய்திகள் என்பவற்றைக் கையாளும் பணியை என்னிடம் ஒப்படைப்பார். தம்பி, நாளை பிற்பகல் 3.00 மணிக்கு பிந்தாமல் தந்துவிட வேண்டும் என்று கூறுவார். அதற்கிடையில் முற்பகல் 11.00 மணிக்கு ஒருமுறை, பின்பு பிற்பகல் 1.30க்கு ஒருமுறை, பின்பு 2.00 மணிக்கு ஒருமுறை என்று அவரின் அலுவலக உதவியாளர் ஒருவரை அனுப்புவார். பின்பு நான் பத்திரங்கள் எழுதி முடித்துக் கொண்டு வெளிக்கிட்டுச் செல்கையில், இடைவெளியில் அவர் ஒருமோட்டார் வாகனத்தில் வந்துகொண்டிருப்பார். அவரின் கடமையுணர்வை நினைத்து நினைத்துப் பார்க்கிறேன்.

சுவாமி நடராஜானந்தர் பொறுப்பாயிருந்த காலத்தில் மிஷன் தேவையான அளவுக்கு பொருளாதார வசதியின்றி சிரமப்பட வேண்டியிருந்தது. அவர் சிரேஷ்ட வகுப்பு சைவசமய பாடத்தின் பிரதம ஆலோசகராயிருந்தார். அதிலிருந்து பெறப்பட்ட சிறிய தொகையையே வைத்துக்கொண்டு முக்கியமான பணிகளைச் செய்துகொண்டிருந்தார். ஆனால் சுவாமி ஜீவனாநந்த மஹராஜ் அந் நிலையை மாற்றியமைத்தார். இ.கி.மி பழைய மாணவர்கள் ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும், ஏனைய நாடுகளிலும் பணி யாற்றி வந்தமையால், அன்னாரின் முகவரிகளைப் பல சிரமங்களுக்கு மத்தியில் கண்டு பிடித்து அதன் மூலம் சிறப்பான தொடர்பினை ஆக்கிக் கொண்டார். அவர் அவ்வரிசை யில் எனக்களித்திருந்த இலக்கம் (1167) இன்றும் என்னுடன் உள்ளது. வெளிநாட்டு அன்பர்களிடமிருந்து பணம் வந்து குவிந்து மிஷனின் பொருளாதார நிலையை ஸ்திரப் படுத்தியது எனலாம்.

இவ்வாறு சிறிய பணிகளையும் நன்று திட்டமிட்டுச் செயலாற்றியதில் அவருக்கு நிகர் அவரே எனலாம். மட்டக்களப்பு வாவியின் மேற்குக் கரையிலமைந்த படுவான் கரைப்பகுதி நெல்வயற் சொந்தக்காரரின் விபரங்களை நன்கறிந்து, அறுவடை நடந்து முடிந்து 'சூடு போடுதல்' நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில்,அவர் கால்நடையாக வயல்களுக்குச் சென்று நெல் சேகரிப்பார். நான் மட்/கன்னன்குடா மகாவித்தியாலயத்தின் அதிபராகயிருக்கையில் இவ்வனுபவத்தை நானும் பெற்றேன். சுவாமி சில வளர்ந்த மாணவர்களையும் கூட அழைத்து வந்து,வெற்றுச் சாக்குகளை எடுத்துச் சென்று உபகரிப் பாகக் கிடைத்த பலசாக்கு நெல்லை,வாவியின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்கு வள்ளத்தில் கொண்டு வந்து சேர்த்து இல்ல மாணவர்களுக்கு உணவளித்துக் காத்த சுவாமிகளின் பெருமையை என்னென்று வர்ணிப்பது?

2004ம் ஆண்டில் நடராஜாநந்த சுவாமிகளின் பணிகளை நினைவுகூரும் வகையில் 'சேவையின் சிகரம்' என்ற மகுடத்துடன் கூடிய சிறப்பு மலரொன்று காரைதீவுலே அமைந்த நூற்றாண்டு விழாச் சபையால் பிரசுரிக்கப்பட்டது. அம்மலருக்கு ஜீவனாநந்த சுவாமிகளும் ஒரு ஆசிச் செய்தி வழங்கியிருந்தார். அதில் அவர் நடராஜானந்தஜீயைக் குறிப்பிடுகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நன்றேயிங்கறிவுறுத்தும் பரமகுரு
ஞானமென்னும் பயிரைநச்சித்
தின்றே பாழாக்கிடுமைம் புலன்களென்னும்
விலங்கினத்தைச் செகுத்த வீரன்

எனும் சுப்ரமணியபாரதியாரின் கவிதையடிகளைச் சேர்த்திருக்கின்றார்.

சுவாமி ஜீவனானநந்த அடிகளாரின் பணிகளை முற்றாக வர்ணிப்பதாயின் அது மிகவும் சிரமமான ஒருபணியாகும். அவர் நமக்குக் காட்டிச்சென்ற பாதையில் செல்ல முயல்வது ஒரு சிறந்த சாதனையாக அமையலாம்.

அவர் என்றும் நம்முன் உயிரிய ஒளி விளக்காகப் பிரகாசித்துக் கொண்டேயிருப்பார். அவரின் ஆசீர்வாதம் நம்மையெல்லாம் நல்வழிப் படுத்துவதாக!

வாழ்க அவர் நாமம்! வளர்க அவர்கள் விட்டுச் சென்றபணிகள்!

எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மை யாலே
துங்குமிகு நெறிபலவாய் நேராயும்
வளைவாயும் தோன்றி னாலும்
அங்கு அவைதாம் எம்பெருமான்! ஈற்றில் உனை
அடைகின்ற ஆறே யன்றோ!

(சுவாமி விவேகானந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று’

தொண்டர் திரு.எஸ்.தில்லைநாதன்
தெய்வானை அம்மன் ஆலயம், கதிர்காமம்

அது 1968 மாசி 12, நான் மட்டக்களப்பிலுள்ள பொது நிறுவனம் ஒன்றில் நிருவாக பதவியில் கடமையாற்றி வந்தேன். அந்நிலையில் அன்று ஒரு காவி அணிந்த புனிதமான துறவியும், கௌரவமிக்க மனிதரொருவரும் அவர்களுடன் இளைஞர் ஒருவரும் அந்நிறு வனத்திற்கு வந்தனர். அப்புனிதமான துறவியையும் அவருடன் வந்தோரையும் இருத்தி, வரவேற்ற பின்னர் அவர்கள் தாம் வந்ததன் நோக்கத்தை சொல்ல முற்பட்டனர். தாம் மட்டக்களப்பில் கல்லடியிலுள்ள மாணவர் இல்லத்தின் பொருட்டு நிதி சேர்ப்பதற்காக வந்தோம் என்றனர்.

நான் மட்டக்களப்பு கல்லடி மாணவர் இல்லத்தைப் பற்றி நன்கறிந்தவன். அங்கு ஏழைப் பெற்றோரின் பிள்ளைகளும், தாயையோ அல்லது தந்தையையோ அல்லது இருவரையும் இழந்த பிள்ளைகளும் படிக்கும் பள்ளிக் கூடத்தையும் மாணவர் இல்லத்தையும் கொண்டு சிறப்புடன் இயங்கி வருவதை நன்கு அறிந்திருந்தேன். சுவாமிஜீ தமது வருகையின் நோக்கத்தைச் சொல்லியதும் எனது உள்ளத்தில் பெரும் மகிழ்ச்சி ஒன்று தோன்றி மறைந்தது. பெருந் தொகைப் பணத்தை அளிப்பதற்கான வாய்ப்பு என்னிடத்தில் இருக்கவில்லை. அன்றைய ஐந்து ரூபாவுக்கு இன்றைய ஐந்நூறு ரூபாவுக்கான மதிப்பு இருந்தது. நான் சுவாமிகளிடம் மாதந்தோறும் ஒரு சிறு தொகைப் பணத்தை நன்கொடையாகத் தருவதாகக் கூறி ஐந்து ரூபாவை அன்பளிப்பாகக் கொடுத்தேன். அதனை வாங்கிய சுவாமிகள் என்னை ஒரு கால் ஏற இறங்கப் பார்த்து விட்டு, தம்பி இது ஒரு பெரிய தொகை நீங்கள் மாதந்தோறும் ஒரு ரூபாய் மட்டும் தந்தால் போதும் என்று கூறிவிட்டு ரூபா ஐந்தை ஏற்க மறுத்தார். மீண்டும் யான் சுவாமிஜீ நீங்கள் இப்பணத்தை வைத்துக் கொள்ளுங்கள் இனி நான் மாதந்தோறும் ஒரு ரூபாய் தருவதாகக் கூறினேன். சுவாமிக்கு மிகுந்த மகிழ்ச்சி. சுவாமிகள் பெரும் தொகை நிதியை எதிர்பார்ப்பவர் அல்லர். சிறு தொகைப் பணம் மாதந்தோறும் கிடைத்தால் போதும் என்று திருப்திப்படுவார் என்பதை யான் அறிவேன். இதனால்தான் நான் சிறு தொகைப் பணத்தைக் கொடுத்தேன் என்பது இதற்குப் பொருளல்ல. எனது நிலை அப்படி. சுவாமிகளும் திறனறிந்தும் வரம் அளிப்பதில் வல்லவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் மாணவர் இல்லத்தைச் சிறப்பாக நடத்தும் பொருட்டு பல்வேறு வழிகளை கையாண்டார். அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வீடுகளின் இயல்பறிந்து செயற்படல், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள அன்பர்களிடம் வேண்டுதல், மட்டக் களப்பு பிரதேசங்களில் வயல் அறுவடைக் காலங்களில் தம்பிமார் நமசிவாயம், ஜெயராஜ் ஆகியோருடன், ஊர் முக்கியத்தர்களுடன் களங்களுக்குச் சென்று நெல் பெற்றுக் கொள்ளல், முதலான செயற்பாடுகள் மூலமும் மாணவர்கள் மகிழ்ச்சி அடையும் வகையிலும். பிறர் மகிழ்ச்சி அடையும் வகையிலும் அவர் மகிழ்வுடன் இல்லத்தை நடத்தி வந்தமையை யான் அறிவேன்.

அத்துடன் இவ்வாறு சிறு சிறு தொகையாகச் சேகரித்த பணத்தில் கல்லடி உப்போடை மாணவர் இல்லம், கல்லடி உப்போடை சாரதா மகளிர் இல்லம், காரைதீவு சிறுவர் இல்லம் ஆகிய இந்த மூன்று இல்லங்களையும் கட்டி எழுப்பினார். அது அவரது அயராத முயற்சியையும் திறமையையும் காட்டும்.

வார நாட்கள் தோறும் தபால்கள் திறக்கும் போது, சில நாட்களில் காசோலையோ, காசுக் கட்டளையோ கிடைக்க வில்லையானால் உடனே அங்கு சுவாமிகளுக்கு உதவியாக இருக்கும் ஜெயராஜ் கவலையுடன் சுவாமிகளைப் பார்த்து 'சுவாமி இன்றைக்கு நன்கொடையொன்றும் கிடைக்கவில்லைப் போலும்' என்பார். அப்பொழுது சுவாமிகள் 'தம்பி கவலைப்படாதே இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளை குருமஹராஜ் அனுப்பி வைப்பார்' என்பார். அவர் குருமஹராஜிடம் அளவற்ற அன்பும் பக்தியும் கொண்டவர்.

1972ஆம் ஆண்டு முதல் கல்லடி உப்போடை இராமகிருஷ்ண மிஷன் கணக்குகளை சுவாமியின் பணிப்பின் பெயரில் யானே எழுதி வந்தேன். வருடா வருடம் எண்பார் வைக்குத் தேவையான பரீட்சை மீதி ஐந்தொகை யானே தயாரித்துக் கொடுத்து வந்தேன். 1983ஆம் ஆண்டிற்கான பரீட்சை மீதி தயாரித்த போது, பரீட்சை மீதி இணங்கவில்லை. எண்பார்வைக்காக கணக்குப் புத்தகங்கள் கொழும்பிலுள்ள தலைமைப்பீடத்திற்கு எடுத்துச் செல்வது வழக்கமாகும். சுவாமிகள் எண்பார்வையாளரிடம் ஒரு குறித்த தேதியில் எண் பார்வை செய்வதற்குக் கணக்குப் புத்தகங்களைக் கொண்டு வருவதாக அறிவித்து விட்டார். மறுநாட்காலையில் கொழும்புக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்து முடிந்து விட்டன. இரவு 11.30மணி சுவாமிகள் என்னிடம் வந்து தம்பி காலையில் கொழும்புக்குப் புறப்படலாமா? என்று மிகுந்த வாஞ்சையோடு கேட்டார். நான் ஏற்கனவே முருகேசையா, சந்தானம் ஐயா இருவருக்கும் பரீட்சை மீதி இணங்கவில்லை என்று தெரிவித்து இருந்தேன். சுவாமிகள் கேட்டதும், நான் சற்று மௌனித்துவிட்டு, கொழும்பு பயணம் சாத்தியமாகாது சுவாமிஜீ என்றேன். இதனைக் கேட்டதும் சுவாமிகள் கவலை தோய்ந்த மேனியானார். சற்று நேரத்திற்குள் தன்னை சுதாகரித்துக் கொண்டு எனதருகே அமர்ந்து விட்டார். சுவாமி களின் இந்நிலையை என்னால் பார்க்க முடியவில்லை. என்னை அறியாது நான் அழுது விட்டேன். வாழும் உயர் மனிதனுக்காக நான் அழுதது அன்றுதான். சுவாமியின் இயல்பான குணங்களை அறிந்தவன் நான். எடுத்த காரியம் முடியும் வரை உணவு உண்ணமாட்டார். உறங்க மாட்டார்; தண்ணீர் குடிப்பதுடன் ஆத்மாவின் இருப்பை நிலைநிறுத்திக் கொள்வார். சுவாமிகளின் இவ்வுணர்வுகள் என்னுள்ளத்தில் திடீரென மேலோங்கி நின்றதால், நான் முதலில் குருமஹராஜை வணங்கி விட்டு, அடுத்து சுவாமிகளின் காலைத் தொட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி விட்டு, நேரம் எதனையும் பார்க்காது பரீட்சை மீதியைத் தயாரிக்கத் தொடங்கினேன். மிகுந்த அவதானத்துடன் தொடங்கினேன். குருமகராஜினதும். சுவாமிகளினதும் ஆசியால் பரீட்சை மீதி சரியாக அமைந்துவிட்டது. அதை யான் சுவாமிகளிடம் கூறியதும், அவர் கவலைகள் சூரியனைக் கண்ட பனிபோல் கரைந்திற்று. மகிழ்ந்தார். என்னைப் பாராட்டினார். பின்பு கொழும்பு புறப்பட ஆயத்தமானார். மகிழ்ச்சியுடன் புறப்பட்டுச் சென்றார். இவர்களது ஆசீர்வாதத்தை எண்ணி யான் சந்தோசம் அடையாத நாள் இல்லை. இது எனது வாழ்வில் கிடைத்த பெரும் பேறென்றே நினைக்கின்றேன்.

சுவாமிகள் எந்த விடயமும் சுத்தமும், தெளிவும், அழகும் உடையதாக இருக்க வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டவர். கடிதம் எழுதுவதில் கூட தெளிவும் அழகும் இருக்க வேண்டும் என்பதில் பெரு விருப்பம் உடையவர்.

சுவாமிகளுக்கு அன்பர்கள், நண்பர்கள், பக்தர்கள் முதலானோர் கடிதம் எழுதுவர். அக்கடிதங்களுக்கு தவறாது பதில் எழுதுவது அவர் வழக்கம். கடிதம் எழுதும் பொழுது தானே முதலில் பதிற் கடிதங்களை எழுதுவார். பின்னர் அதில் திருத்தங்கள் செய்யும் பொருட்டு வி.கணபதிப்பிள்ளை ஐயா அவர்களுக்கு அனுப்புவார். இவர் சுவாமிகளின் சக வகுப்பு மாணவர். அன்புக்குரிய நண்பர். இவர் ஆசிரியராக அதிபராக பதவி வகித்தவர். உரிமையோடு சுவாமியின் பொருட்டு மிஷனுக்கு பற்றற்று ஊழியம் புரிந்தவர். அவர் தன்னிடம் அனுப்பப்படும் கடிதங்களைப் பார்வையிட்டு திருத்தங்கள் இருப்பின் திருத்தி சுவாமிகளுக்கு அனுப்புவார். சுவாமிகள் அதைச் சரியாகப் பார்வையிட்டு திருத்தங்கள் இருப்பின் தானும் திருத்தி மேலும் திருத்தங்களுக்காக அதிபர் கணபதிப்பிள்ளை ஐயா அவர்களுக்கு அனுப்புவார். அதிபர் கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் சிவானந்தாவின் பழைய மாணவர். விபுலானந்த சுவாமிகளின் மாணவர் விசுவாசி, சுவாமிகளது ஆசிரியர். சுவாமிகளுடன் நட்புடன் பழகுவார். நட்புப் பாராட்டுவார். அவரும் சுவாமிகளால் அனுப்பப்படும் கடிதங்களை நன்கு பார்வையிட்டு, அவற்றினுள் பிழைகள் இருப்பின் அவற்றைத் திருத்தி அனுப்புவார். சுவாமிகள் இவரால் அனுப்பப்படும் கடிதங்களை தானும் நன்கு மீண்டும் மீண்டும் பார்வையிட்டு அவற்றினுள் பிழைகள் இருப்பின் அவற்றை திருத்தி தனது மனதிற்கு திருப்தி என்ற விடத்தே அனுப்ப வேண்டிய அன்பர்களுக்கோ. நிறுவனங்களுக்கோ அனுப்பி வைப்பார். சுவாமிகள் எதையும் நுண்ணியமாகப் பார்ப்பதில் கருசனையுடையவர். இது எனது நேரடி அனுபவம்.

அத்துடன் கடிதங்களை தட்டச்சு செய்வதிலும் இத்தகைய கவனத்தையே செலுத்துவார். சுவாமிகள் தம்மால் பார்வையிட்ட கடிதங்களை தம்பி செல்வநாயகம் அவர்களிடம் தட்டச்சு செய்யுமாறு கொடுப்பார். அதில் பிழைகள் இருப்பின் அப்பிழைகளை தானே திருத்துவார். அத்திருத்தங்களின் பின் என்னை அழைத்து தட்டச்சு செய்யும்படி கேட்பார். நான் தட்டச்சு செய்த பின்னர் அதைத் தானே பார்வையிட்டு அதில் பிழைகள் இருப்பின் தானே திருத்தி விட்டு மீண்டும் அதனைத் தட்டச்சு செய்யம்படி தம்பி செல்வநாயகத்திடம் கொடுப்பார். அவர் அதனைத் தட்டச்சு செய்து கொடுப்பார்.

சுவாமிகள் எழுதும் கடிதங்களில் எழுதப்படும் எழுத்து அழகுடையனவாகவும், கடிதம் புலப்படுத்தும் கருத்துத் தெளிவுடையதாகவும் இருத்தல் வேண்டும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். இதனால் தான் சுவாமிகள் அனுப்பும் கடிதங்கள் யாவும் அழகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவும் உடையனவாக எழுதி தட்டச்சு செய்யப்பட்டு அனுப்பப்படுகின்றன. சுவாமிகளின் கடிதங்கள் என்றும் அழகுடையன என்பதால் சுவாமிகளை அன்பர்கள் 'அழகான கடித எழுத்தாளர்' என்றே அழைத்தனர். போற்றினர். எண்ணும் எழுத்தும் இதன் பாற்பட்டது. சுவாமிகள் தன்னை வளர்த்துக் கொண்டது இதன் அடிப்படையில் போலும்.

எதையும் கோணல் இன்றி செய்யவேண்டும் என்பதில் பொதுவானவர். கோணல் இன்றி செய்வதென்பது அதன் செம்மையை, அழகைப் பிரதிபலிப்பதாகும். இதனால் தான் 'முதற் கோணம் முற்றும் கோணும்' என்ற தொடர் அழகினதும் நேர்த்தியினதும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கும் . சுவாமிகள் இந்த மகா வாக்கியத்தில் நம்பிக்கையுடையவர். சுவாமிகள் தனது கட்டுப்பாட்டிலுள்ள கட்டடங்களிலே தொங்க விடப்பட்டிருக்கும் படங்களோ, பிற பொருட்களோ ஒரு நூலளவு கூட சரிந்திருப்பதை பொறுத்துக் கொள்ளமாட்டார். அப்படி இருக்குமேயானால் தானாகச் சென்று சரி செய்வார். அத்தோடு தாம் வாழ்ந்து வரும் மிஷன் வளாகத்தை நிழல் மரங்களாலும், பூந்தோட்டங்களாலும் மா, பலா, வாழை மற்றும் மரக்கறித் தோட்டங்களாலும் அழகு படுத்தியிருந்தமை இங்கு பார்ப்போரை கண் கொள்ளாக் காட்சிக்கு உட்படுத்தியது. சுவாமிகளின் அழகுணர்ச்சிக்கு இதொரு சாட்சியாகும்.

சுவாமிகள் மட்டக்களப்பிலுள்ள ஒரு பெரிய செல்வச் செழிப்புள்ள உயர் குடும்பத்தில் பிறந்தவர். உயர் கல்வி கற்றவர், தமிழ், ஆங்கிலம் முதலான மொழிகளில் புலமையுடையவர். வாழ நினைத்திருந்தால், பல வழிகளில் சீரும் சிறப்புடனும் மற்றையோர் போற்றும் வகையில் வாழ்ந்திருக்கலாம். அவர் இல்வாழ்வில் நாட்டம் கொள்ளாது, இராமகிருஷ்ண மடத்தின் இலட்சியங்களை உள்வாங்கி அதற்கு கட்டுப்பட்டு, மதிப்பளித்து துறவியானார். இத் துறவி மற்றோருக்கு மதிப்பளிக்கும் சுபாவம் உடையவர். சிறியோர், பெரியோர் என்ற பாகுபாடின்றி எல்லோரையும் மிகவும் அன்புடனும் கௌரவத்துடனும் வரவேற்பார். அனைவரையும் கண்ணியமாகவும் கவனிப்பார்.

**'அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்'**

இக்குறளில் மிக விருப்பம் கொண்டவர். வெளி ஊர்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் துறவிகள். பக்தர்கள், அன்பர்கள் முதலானோர் மிஷனுக்கு வந்தால் அவர்களுக்குக் குடிப்பதற்குக் குளிர் பானங்களும், பசியாறுவதற்கு உணவும் அளித்து வரவேற்பது சுவாமிகளுக்குப் பெரு விருப்பமானதாகும்.

துறவிகள், அன்பர்கள், நண்பர்கள், பக்தர்கள், முதலானோர் மிஷனுக்கு வருவதாக தகவல் கிடைத்ததும் கல்லடி உப்போடை கிராமத்திலுள்ள அன்பர் நடராஜா ஐயா வீடு. தட்சாணாமூர்த்தி ஐயா வீடு, சாந்தா அக்கா வீடு, சாரதா இல்லம் முதலான இல்லங்களில் வசிப்போருக்கு அவர்களது வருகை பற்றி அறிவிப்பார். அதே சமயம் சுவாமிகள் மாணவர்கள் இல்லத்தில் பால் பாயாசம், கேசரி போன்ற பண்டங்களை தாமே தயாரிப்பார். அன்பர்கள் இல்லங்களில் இருந்து வரும் உணவு பண்டங்களையும் தாம் தயாரித்த உணவுப் பண்டங்களையும் விருந்தினர்களுக்கு அளித்து விருந்தோம்புவார்.

தானத்தில் சிறந்த தானம் அன்னதானம் என்பது சமய மரபு என்பதை அவர் நன் கறிந்தவர். விவேகானந்த சுவாமிகளது போதனைகளிலும் மகாகவி பாரதியாருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களிலும் ஏழைகளுக்கு உணவு அளிப்பதே உயர் போதனையாக அமைந்திருந்தது. என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது. இவர்களது இந்தப் போதனைகளில் மிக விருப்பம் கொண்டவர் சுவாமிகள். இல்லத்துப் பிள்ளைகளைப் பார்க்க வரும் ஏழை பெற்றோர், பாதுகாவலர் முதலானோருக்கும் மற்றும் மிஷனுக்கு வரும் ஏழைகளுக்கும் உணவளித்து மகிழ்வார்.

இத்தகைய பெருமை வாய்ந்த, போற்றுதற்குரிய கர்ம யோகியாகிய சுவாமிஜி அவர்கள் பெப்பரவரி 04.2006 அன்று இறைவனது திருவடிப் பேற்றைப் பெற்றார்.

**ஓம் அமைதி அமைதி அமைதி**

## விவேகானந்த பஞ்சகம்

வாழியநின் றிருநாமம்! வாழியவிந் நாடு
வையகமே சிறந்ததென வானகத்தோர் வழுத்த
ஆழியிறை யுலகிருந்தோ அரனுலக மிருந்தோ
அருமுனிவ ருலகிருந்தோ அவனிமிசை யடைந்தாய்?

அடைந்ததுவும் அருட்டிறத்தின்
சிறப்பையுரைப் பதற்கோ?
ஆண்மையிது வெனக் காட்டிக்
கீழ்மையகற் றுதற்கோ?
முடிந்தமுடி பாகியவே
தாந்தத்தின் பொருளை
மொழிந்தவித்தை தனையகற்றி
முத்திநிலை தரற்கோ?
நிலையிழந்த பாரதத்தின் குறையனைத்து நீக்கி
நிலைநிறுத்தும் பொருட்டோவிந் நிலவுலகின் மாந்தர்
கலைமொழிந்த பொருளனைத்துங் கடந்து நின்ற வுண்மைக்
கந்தழியைச் சார்வதற்கோ வந்தனைசீர்க் குருவே!

சீர்மருவு காசினியில் ஞானவொளி பரப்பத்
தேயத்துட் பாரதமே சிறந்தென விசைப்ப
ஈரிருபா னாண்டுறைந்தா யெமது தவக் குறையோ
இளவயதி லெமைவிடுத்தா யளவிலருட் கடலே!
அருட்செல்வஞ் செல்வமென அருந்தமிழ் வள்ளுவனார்
அறைந்த மொழிப் பொருளுணர்ந்தோய்!
அருந்துறவோர்க் கரசே!
பொருட்செல்வம் மனைசுற்றம் புகழ்துறந்த நினக்குப்
புவியனைத்துஞ் சுற்றமே, புகழனைத்தும் நினதே.
வாழியநின் றிருநாமம்! வாழிய விந்நாடு!

-சுவாமி விபுலானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் கவர்ந்த உத்தமர் சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ்

திரு.க.ஞானரெத்தினம்
*விரிவுரையாளர்,*
*திறந்த பல்கலைக்கழகம்*

1972ம் ஆண்டு நான் 7ம் வகுப்பு படிப்பதற்காக மட்டு சிவானந்தா விடுதியில் சேர்க்கப் பட்டேன். குழந்தைப் பருவம் என்பதால் இது மிகவும் கசப்பாகவே எனக்கு இருந்தது. பெற்றோரைப் பிரிந்திருப்பதும், தனிமை உணர்வுகளும் எனக்கு மிக வேதனையைத் தந்துகொண்டேயிருந்தது. ஆனால் ஒருசம்பவம் மாத்திரம் மனதிற்கு மகிழ்ச்சியை தந்தது. அதுதான் இராமகிருஷ்ண மிஷனுக்கு வெள்ளி தோறும் சென்றுவருவது. விபுலானந்தர் மணிமண்டபத்தில் நடைபெறுகின்ற பஜனை, வழிபாடு, நற்சிந்தனை, பிரசாதம் அனைத்தும் எனக்கு மிகப் பிடித்தவையாகவே இருந்தன. அவ்வேளைகளில் சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் அவர்களே நற்சிந்தனை வழங்குவார்கள். தனிமனிதனாக இருந்து. மாணவர் களை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தி அனைத்தையும் அவர்களே செய்துவந்தார்கள். நற்சிந்தனையின் போது **'நல்லவன் பெரியவன் நான்குபேர் இருந்தால் எல்லாம் சிறப்பாக இருக்கும்'** என சுவாமிஜீ அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். சுவாமியின் தோற்றம் செயற் பாடுகள் அனைத்தும் சிறுவயதிலேயே என் உள்ளத்தைக் கவர்ந்திருந்தன. இதன் காரணமாக சிறுவயதில் இருந்தே எனக்கு இராமகிருஷ்ண மிஷனோடு நெருங்கிய தொடர்பும் ஏற்பட்டிருந்தது.

சுவாமிஜீயின் சேவைக்காலத்தில் மக்கள் சேவை, சமூகசேவை, ஆத்மிகசேவைகள் எல்லாம் பரவலாக்கப்பட்டன. தற்போதைய மாணவர் இல்லம். மகளிர் இல்லம் போன்றவை பிரமாண்டமாக வளர்ச்சி பெறுவதற்கு காரணகர்த்தாசுவாமி ஜீவனாநந்தஜீ அவர்கள் என்றால் அதனை மறுப்பதற்கு யாருமே இல்லை. ஒவ்வொரு பிரதேசமாக வீடுவீடாகச் சென்று நிதிசேகரித்து பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தியவர் சுவாமிஜீ அவர்கள்.

தற்போதைய மாணவர் இல்லம் மக்கள் வழிபாட்டிற்காக எப்போதும் திறந்தே இருக்கவேண்டும் என்பது சுவாமிஜீயின் பேரவா ஆகும். இல்லத்தில் நுழைந்தவுடன் முதலாவது அறையில் சுவாமிஜீ அவர்கள் கம்பிரமாக இன்முகத்துடன் வீற்றிருப்பார்கள். காலை 6.00 மணி முதல் இரவு 8.00மணிவரை சுவாமிஜீ அவர்களை மக்கள் சந்தித்துத் ஆசிர்வாதம் பெறமுடியும். இனம், மதம், சாதி. பிரதேசம் என்ற வேறுபாடின்றி அனை வரையும் குருதேவரின் குழந்தைகளாகவே சுவாமி ஜீவனாநந்தர் நேசித்தார்கள். அதுமட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்ல இராமகிருஷ்ண மிஷன் கோட்பாட்டிற்கு அமைவாக பல்மத பெரியார்களுடனும் சுவாமி உறவுகளை மேம்படுத்திவந்தார்கள்.

1985ம் ஆண்டு நான் கார்மேல் பார்த்திமாக் கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப் பட்டேன். அப்போது அருட்சகோதரர் S.A.I..மத்தியூ அவர்கள் அங்கு அதிபராக கடமை யாற்றினார். அக்காலத்தில் கல்லூரியில் நடைபெறுகின்ற வாணிவிழா, பரிசளிப்புவிழா, கல்லூரி தினம், அனைத்திற்கும் சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் அவர்கள் ஆத்மிக அதிதிகளாக கலந்து கொள்வார்கள். மட்டு-திருமலை ஆயர் அதிவணக்கத்துக்குரிய கிங்ஸ்லிசுவாம்பிள்ளை. சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் இருவரும் கல்லூரியில் நடை பெறுகின்ற அனைத்து வைபவங்களிலும் கலந்து சிறப்பித்து ஆசி வழங்குவார்கள். இதன் காரணமாக அதிபர் அருட்சகோதரர் மத்தியூ அவர்களுக்கும் சுவாமிஜீ அவர்களுக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. இந்நட்பு சுவாமி மகாசமாதி அடையும் வரை தொடர்ந்தது. அதிபர் அருட்சகோதர் மத்தியூ அவர்கள் மட்டுநகர் வரும் போதெல்லாம் இராமகிருஷ்ண மிஷனுக்கு விஜயம் செய்து சுவாமியை தரிசித்தே திரும்புவார்கள். சுவாமிஜீ நோய்வாய்பட்டிருந்த காலப்பகுதியில் இவர் பணியை சுவாமி அஜராத்மானந்தஜீ அவர்கள் தொடர்ந்தார்கள். இவர்களும் சமாதியாகும் வரை கமு/கார்மேல் பாத்திமாக் கல்லூரிக்கு சென்று விழாக்களை சிறப்புறச் செய்து வந்ததை நாம் அறிவோம். சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் மிகவும் கண்டிப்பானவர் என்பதும் அளவிற்கு அதிகமாக யாரு டனும் சிரித்து கதைக்கமாட்டார் என்பதும் அனைவருக்கும் தெரிந்த விடயம். இவர் நோய்வாய்ப் பட்டிருந்தகாலத்தில் ஒருநாள் தனது அறையில் ஒருவருடன் மிகவும் அதிகமாக சிரித்து கதைத்து இருந்ததை, அடுத்த அறையில் இருந்த சுவாமி அஜராத்மானந்தஜீ அவர்கள் அவதானித்தாராம். ஆச்சரியத்துடன் அஜராத்மானந்தாஜீ அவர்கள் அறைக்குச் சென்று பார்த்தபோது அதிபர் மத்தியூ அவர்களுடன் தான் இவ்வாறு மகிழ்ந்திருந்ததாக என்னிடம் சுவாமி அஜராத்மானந்தஜி அவர்கள் பின்னர் தெரிவித்திருந்தார்கள். இருவரின் மனம் நிறைந்த நட்புக் காரணமாகவே அதிபர் மத்தியூ அவர்கள் சுவாமிஜீ பற்றி ஒரு நூலை எழுதிவெளியிட்டார்கள். அதுமட்டுமல்ல சுவாமிஜியின் பெயரில் ஒரு புலமைப் பரிசிலையும் ஆரம்பித்துள்ளார்கள். இந்தப் புலமைப்பரிசில் இவ்வருடம் 2012 முதல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தில் வருடாந்தம் அதிகூடிய பரீட்சைப் பெறுபேற்றினைப் பெறும் (Batch வழி) மாணவனுக்கு வழங்கப்படவுள்ளது.

என்னுடைய தந்தையார் குருக்கள் மடம் கலைவாணி ம.வி. இல் அதிபராக இருந்த வேளையில் சுவாமிஜீயோடு மிக்க உறவைப் பேணிவந்தார்கள். இதன் காரணமாகவும் சுவாமிஜீ அவர்கள் குருக்கள்மட கிராமத்திற்கு அடிக்கடி விஜயம் செய்வார்கள். இக் கிராமத்திற்கு சுவாமிஜீ அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பும் பேணப்பட்டு வந்தது. சுவாமிஜீயைநான் சந்திக்கும் வேளைகளில் எல்லாம் என் தந்தையினதும், அதிபர் அருட்சகோதரர் மத்தியூ அவர்களினதும் நலம் விசாரிக்க சுவாமிஜீ அவர்கள் தவறு வதேயில்லை.

2003இல் சுவாமிவிவேகானந்தரின் ஜனன தினத்தில் இராமகிருஷ்ண மிஷனில் நற்சிந்தனை ஆற்றுமாறு சுவாமி அஜராத்மானந்தஜீ அவர்கள் என்னைக் கேட்டிருந்தார்கள். இதனை ஓர் அரியபேறாக நான் கருதி பிரார்த்தனை மண்டபத்தில் பஜனை முடிவடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நற்சிந்தனையைத் தொடர்ந்தேன். நோய்வாய்ப்பட்டிருந்த சுவாமி ஜீவனாநந்தஜீ அவர்களும் நாற்காலியில் இருந்தபடி இதனைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நான் பேசிக்கொண்டிருக்கும் போது எனக்குள் ஏதோசக்தி இருந்து என்னை இயக்குவதை நான் உணர்ந்து கொண்டேன். பேச்சை ஆரம்பித்ததுதான் எனக்குத் தெரியும் குருதேவரே என்னுள் இருந்து பேசினார்கள். பேச்சுமுடிந்தபின் சுவாமி ஜீவனாநந்தஜீ என்னை 'வீரத்துறவி விவேகானந்தர் போன்றே வீரமாகப் பேசினீர்கள்' என்று பாராட்டியது என் வாழ்வில் எனக்கு கிடைத்த மிகப் பெரிய புகழாரமாகும்.

2006ம் ஆண்டு கல்பகதருதினத்தில் வழிபாட்டிற்காக நானும் எனது குடும்பத்தாரும் மிஷனுக்குச் சென்றிருந்தோம். குருதேவரை வழிபாடு செய்துவிட்டு சுவாமியைச் சந்திப்பதற்காக அவர் தங்கியிருந்த இடத்திற்கு சென்றோம். சுவாமி கட்டிலில் படுத் திருந்தார்கள். என்னைக் கண்டதும் அருகில் அழைத்து குருதேவரின் அமுதமொழிகளை வாசிக்கும்படி கூறினார்கள். சிறிதுநேரம் வாசித்துவிட்டு நான் நிறுத்தினேன். தொடர்ந்தும் வாசிக்கும் படி சுவாமி அவர்கள் என்னைக் கேட்டார்கள். நான் தொடர்ந்து நீண்ட நேரம் வாசித்து கொண்டே இருந்தேன். சுவாமிஜீ அவர்கள் அதனைகேட்டு மகிழ்ந்திருந்தது என்மனதில் என்றும் மகிழ்ச்சியைத் தந்துகொண்டே இருக்கும்.

22.01.2006 அன்று மாலை எனது தந்தையார் இறைவனடி சேர்ந்தார்கள். இதனைக் கேள்வியுற்ற சுவாமிஜீ மறுநாள் அதிகாலை 6.00மணியளவில் சுவாமி அஜராத்மானந்தஜீ உடன் குருக்கள் மடத்திற்கு எங்கள் வீட்டிற்கு வருகைதந்தார்கள். தனது உடல் நிலையை பொருட்படுத்தாமல் வருகைதந்திருந்தது அங்குள்ளவர்களை வியப்பில் ஆழ்த்தியது. அவ்வேளையில் கல்வியற் கல்லூரி உப பீடாதிபதி திரு.த.துரைராஜா அவர்களும் வருகை தந்து பஞ்சபுராணம் பாடியதை சுவாமிஜீ அவர்கள் கேட்டு இன்புற்றார்கள். பின்னர் திரு.த.துரைராஜா அவர்களை **'மிக்க நன்றாக பொருத்தமாக பாடினீர்கள்'** என சுவாமிஜீ அவர்கள் பாராட்டினார்கள். மற்றவர்களை பாராட்டுவதில் சுவாமிஜீ அவர்கள் எப்பொழுதும் நிறைவுகண்டவர்.

இது நடந்த இரு வாரங்களின் பின்னர் 04.02.2006ம் திகதிசுவாமிஜி அவர்கள் மகாசமாதி அடைந்துவிட்டார்கள். சுவாமிகளது மரணசடங்கிலும் பஞ்சபுராணம் பாடும் பாக்கியத்தை திரு.த. துரைராஜா அவர்களுக்கு சுவாமி அஜராத்மானந்தஜீ அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

மகா துறவி சேவையின் சிகரம், மிஷனின் ஆணிவேர் தமது பணியை நிறைவு செய்து குருதேவரின் பாதங்களில் சங்கமமாகியது. இந்த நிகழ்வுகளில் பங்குகொண்ட அளவிட முடியாத மக்கள் கூட்டம் இவரின் மகத்தான சேவைக்கு சாட்சியாகும். என்னைப் போன்ற பல உள்ளங்களில் சுவாமிஜியின் சிந்தனைகள் என்றும் வாழ்ந்துகொண்டே இருக்கும் அதுவே எம்மையும் ஆசிர்வதிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஜீவனாநந்தரின் வாழும் சிந்தனைகள்

*சிவானந்தம் சிறீதரன் (SLEAS)*
*குருகுலப் பழைய மாணவன்*
*பிரதிக் கல்விப்பணிப்பாளர்*

'அறிவு, செயற்பாடு ஆகிய இரண்டினுள் செயற்பாட்டின் வழியாகவே அறிவு பெருகுகிறது என்பது ஜோன் டூயியின் கல்விச்சிந்தனையின் மையக்கருத்தாகும்.இதனையே சுவாமி ஜீவனாநந்தர் செயற்பாடு-பயிற்சி-அறிவு-அனுபவம் என்றவாறு கூறினார் என்பதுடன் தொலைதூரச் சிந்தனைப்போக்காகவும் கொண்டவர். அதாவது வாழும் நாட்களில் பிள்ளைகளை வாழ்க்கைக்கு பயன்படக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதனூடாக அவர்களை, அனுபவங்களைப் பெறச் செய்யத் தூண்டவேண்டும். அதனூடாக அவர்கள் தமது வாழ்வாதாரத்துக்குத் தேவையான அறிவையும் திறனையும் பெற்றுக் கொள்வார்கள் என்று அடிக்கடி கூறுவார். அறிவு(K), மனப்பாங்கு(A), திறன்(S), பயிற்சி(P) என்று இன்றைய கல்விச்சிந்தனைப்போக்கின் பரிணாம வளர்ச்சியினை அவர் தனது வாழ் நாட்களில் வாழ்ந்து காட்டியதுடன் மட்டுமல்லாது ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனில் கல்வி கற்ற ஒவ்வொரு பிள்ளைக்கும் நாள்தோறும் ஊட்டினார் என்றே கூறவேண்டும். மேலும் KASP என்ற சிந்தனையின் அடுத்தபடியான அனுபவம்(E) பற்றியும் அவர் தனது சிந்தனையை விரிவுபடுத்தியிருக்கின்றார் என்றே கூறவேண்டும். மொத்தத்தில் அவர் KASPE என்பதனை தனது சிந்தனையாகக் கொண்டு எமது வாழ்விற்கு இலக் கணம் கொடுத்திருக்கின்றார் எனக்கூறலாம்.

மாணவர்களின் எதிர்கால இருப்பிற்கும் வாழ்க்கைக்கும் **தன்னம்பிக்கையையும் ஆற்றலையும்** வழங்கவேண்டும் என அனைத்து சந்தர்ப்பங்களிலும் எதிர்பார்த்து நின்றார். எதிர்கால சுயமான வாழ்க்கைக்கு தன்னம்பிக்கையும் ஆற்றலும் இரு மிக முக்கியமான கூறுகள் என வலியுறுத்தினார். இவ்விரு கூறுகளையும் மனிதனில் நிலைப் படுத்தும் கல்வியே சமூகத்திற்குத் தேவையான கல்வியாகும் என்றார். இவற்றுக்குச் சான்றாக குருகுல வாழ்க்கைக் காலத்தில் **காய்கறித்தோட்டம் அமைத்தல்- பூந்தோட்டம் அமைத்தல்-விவசாயப்பண்ணை வைத்திருந்தமை(றூகத்தில்)-தொழில் பயிற்சி வழங்குதல்** என்பவற்றை என்போன்ற மாணவர்களுக்கூடாக சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் செய் திருந்தார். இதனூடாக அவர் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கினார். இப்பயிற்சிகளுக்கூடாக மாணவர்கள் பெற்ற திறன்கள் வெளியிலே வளர்க்கப் பட்ட எந்தவொரு பிள்ளைக்கும் இருக்காது என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடயத்தையே இக்குருகுலத்தை தரிசிக்கும் ஒவ்வொருவரும் கூறிக்கொள்வார்கள். இத்திறன்களினூடாக மாணவர்கள் தமது எதிர்கால வாழ்விற்கு தன்னம்பிக்கையைப் பெற்றுக்கொண்டதன் ஊடாக எதிர்கால வாழ்வுபற்றிய நேரான மனப்பாங்கினையும் பெற்றுக்கொண்டார்கள் என்றே கூறவேண்டும். இவர் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கு மிகவும் பிடித்த **'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'** என்ற வாக்கியத்தை அடிக்கடிகூறுவார். இதனூடாக பாட சாலைக்கல்வி மட்டும் குழந்தைகளின் வாழ்க்கைக்கு பயன்படாது என்ற சித்தாந்தத்தை தனக்குள் புதைத்துக் கொண்டவர் சுவாமி ஜீவனாநந்தர். இதனால் குழந்தை கள் ஒவ்வொரு வரும் தத்தமது வாழ்க்கையை பிறரில் தங்கியிராது தாமே அமைத்துக் கொள்வதற்குத் தேவையான பயன்பாட்டுவாதச் சிந்தனையைக் கொண்டவர்.

மாணவர்களுக்கு கல்வி வழங்கும் ஸ்தாபனங்களில் அமெரிக்க நாட்டு உற்பத்தியான பயன்பாட்டுவாதச் சிந்தனையை சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் காணவிரும்பினார். அதற்கேற்றாற் போலேயே எங்களைப் பயிற்றுவித்தார்.

சுவாமிகளுக்கு பாடசாலைக் கல்வியானது மனிதர்களின் வாழ்க்கைக்கு பயன் செய்யும் என்பதில் அதிகளவு நம்பிக்கை இருக்கவில்லை. ஆனாலும் பாடசாலைகள் மாணவர்களை வளம்படுத்த வேண்டும் மற்றும் அவர்களது நடைமுறை வாழ்க்கைக்கு பயன்படுவதாக அமையவேண்டும் என்பதில் அதிகளவு நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இருந்தது. குறிப்பாக இவருக்கு கணிதக்கல்வியில் அதிகளவு ஆர்வம் இருந்தது. அவ்வப்போது மாணவர்கள் தவணைப்பரீட்சைப் பெறுபேற்றை சுவாமிஜியிடம் காண்பித்து பாராட்டுப் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அவ்வேளைகளில் அவர் கணிதம் விஞ்ஞானம், விவச ாயம், தாவரவியல், விலங்கியல் தொடர்பாக மாணவர்களின் ஆர்வத்தை தூண்டுவதில் அக்கறையாகவிருந்தார். அதனால் உந்தப்பட்டவர்களுள் நானும் ஒருவன்.

கல்வியில் **'பயன்கொள்வாதமானது'** அனுபவத்தை மையப் பொருளாகக் கொண்டது. ஆகவே அனுபவம் பெறவேண்டி சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் எங்களுக்காக செய்திருந்த ஏற்பாடுகள் ஏராளமானவை என்றே கூறலாம்.

- குருகுலத்திற்குத் தேவையான காய் கறிகளை மாணவர்களே உற்பத்தி செய் வதற்குப் பயிற்சி கொடுத்தார். அத்துடன் மேலதிகமாக கிடைக்கும் கீரை, கத்தரிக்காய், வெண்டி, புடோல் போன்ற காய்கறிகளை எங்களைக் கொண்டு விற்பனை செய்து வருமானம் சேர்க்கும் வழிமுறைகளைக் கற்பித்தார்.
- இவ்வாறே 1983ம் ஆண்டு காலப்பகுதிகளிலிருந்து றூகம் விவசாயப் பண் ணையிலிருந்து குருகுலங்களுக்குத் தேவையான அரிசி பெறப்பட்டது.
- பூந்தோட்டங்களும் அமைக்கப்பட்டு பூக்கன்றுகள் பதியம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

இவற்றுக்கூடாக நோக்குகின்ற பொழுது இக்குருகுலத்தில் வாழ்ந்த மாணவர்களுக்கு அனுபவம் பெற தேவையான பல பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. இவற்றின் பேறாக இன்று இக்குருகுலச் சூழலில் வாழ்ந்த எந்தவொரு மாணவனும் ஒவ்வொரு சமுதாயத்திலும் சமூக முன்னோடிகளாகவும் பிறருடன் பிரச்சினைகளில் ஈடுபடாதவர் களாகவும் தான் வாழும் குடும்பம், கிராமம், சமூகம், நாடு என்பற்றின் சமாதான முயற்சிக்காகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்ற போக்கும் , சமுதாய நலனில் அக்கறை கொண்டவனாகவும் தன்வாழ்க்கையை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும், கொண்டு செல்கின்ற ஒருவனாகவும், பிறருக்கு வழிகாட்டியாகவும் வாழ்ந்து வருகின்றான். மேலும் அரச உத்தியோகங்களில் பதவி வகிப்பவர்கள் உயர்பதவிகளிலும் குறிப்பாக பல்கலைக்கழக பேராசிரியர்கள், கல்விப்பணிப்பாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், வங்கி முகாமையாளர்கள், கணக் காளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், நூலகர்கள் சமூக அபிவருத்தி உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்,முகாமைத்தவ உதவியாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் போன்ற இன்னும் பல பதவி நிலைகளில் பலர் இருப்பதனையும் மறுபுறம் தான் ஒரு அரச உத்தியோகத்தனாக இல்லாவிடினும் குருகுலத்தில் பெற்றுக்கொண்ட பயிற்சிகளினூடகத் தனது ஜீவனோபாயத்தை திருப்தியாகக் கொண்டு செல்லக்கூடியவனாக வாழ்ந்து வருவதும் ஆராய்ந்து பார்க்கத் தக்கது.

மேலும் சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் குருகுல மாணவர்களின் அனுபவத்தை விருத்தி செய்வதற்காக வேண்டி,

- **தொழில் பயிற்சி** வழங்கினார் என்று ஏற்கனவே குறிப்பட்டதன்படி, தச்சு வேலைப்பயிற்சி நெறி, மின்இணைப்பு பயிற்சிநெறி, கணினிப்பயிற்சிநெறி, முதலியவற்றில் மாணவர்கள் பயிற்சி பெறச் சந்தர்ப்பங்கள் பல வழி வகுக்கப் பட்டன.

- அத்துடன் **கலைநிகழ்ச்சிகளுக்கூடாகவும் பயிற்சிகள்** வழங்கப்பட்டன. இக்குரு குலத்தால் நடாத்தப்படும் முக்கிய வைபவங்களில் இக்குருகுலக் குழந்தைகள் வழங்கும் நிகழ்ச்சிகள் முக்கிய இடத்தையும் அனைவரது பாராட்டுக்களையும் பெற்றிருந்தன மட்டுமல்லாமல் இளைஞர் சேவைகள் மன்றம், கல்வித்திணைக் களம், மற்றும் ஏனைய திணைக்களங்கள் மற்றும் திணைக்களங்களால் நடாத்தப் படும் போட்டி நிகழ்சிகளில் மாணவர்கள் பங்குபற்றி அகில இலங்கை மட்டங் களில் சாதனை படைக்கின்ற அளவுக்கு திரு.திருமதி.மாஸ்டர் சிவலிங்கம் போன்ற துறைசாந்த வல்லுனர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டு சாதனைபடைக்கின்ற சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன.

- அது மட்டுமல்லாது **சமய-சமூக நிகழ்வுகளும்** நோக்கற்பாலது. பகவான் ஸ்ரீ ராம கிருஷ்ணர், ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரது நினைவு தினங்கள் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றன. இவற்றையெல்லாம் கடந்து இனமத பேதங்கடந்த மனிதநேயத்தினை சுவாமிஜி அவர்கள் இச்சிறார்களுக்கு ஊட்டினார். இக்கொள்கையை செற்பாடுகளாக்கி சுவாமிஜி நெறிப்படுத்தினார். தெளிவாகக்கூறின் இந்து-பௌத்த-கிறிஸ்தவ-இஸ்லாமிய விசேட தினங்கள் இங்கு வருடந்தோறும் அனுஷ்டிக்கப்படுவதைக் காணலாம். இதனூடாக **'எம்மதமும் சம்மதம்'** என்ற ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தத்துவார்த்த சிந்தனையுடன் **'ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி'** என்னும் பகவத்கீதையின் சாரத்தையும் ஒவ் வொரு சிறாருக்கும் ஊட்டி வளர்த்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவத்தினூடாக ஒருவர் நிறையக் கற்றுக்கொள்ளலாம் அனுபவங்கள் உணர்வதன் அடிப்படையில் பெறப்படுகின்றன. எந்தவொரு செயலின் முடிவும் எழுந்தமானத்திலே கூறப்படுவதல்ல. அவற்றை விளைவுகளின் அடிப்படையில் வைத்துக் கவனித்தல் வேண்டும். இதன் அடிப்படையிலே சுவாமிகள் குருகுலச் சிறார்களை செற்பாடுகளின் பயன் அடிப்படையில் ஈடுபடுத்தினார் எனலாம். பயனுள்ள விடயங்கள்தான் பெறுமதி யுள்ளவை.இல்லையென்றால் அவை காலத்தை வீணடிக்கின்ற செயல்களாகிப்போய்விடும். சமயசெயற்பாடுகளும், நம்பிக்கைகளும் பயனுள்ளவைகள் என்று நம்பியிருக்கின்றார். அதனால் சமய செயற்பாடுகளுக்கூடாகவும் சிறார்களை பயனடையச் செய்தார் என்று கூறலாம்.

மேலும் '**மனிதனது அறிவும் சிந்தனையும் செயலோடு இணைந்து காணப்படுகின்றன. எண்ணம் எப்போதும் எண்ணமாக இருக்கக்கூடாது, எண்ணத்தைச் செயல் வடிவமாக ஆக்க வேண்டும், எண்ணத்தை விட செயல் வடிவம் உயர்ந்தது, எண்ணமும் செயலும் ஒன்றுக் கொன்று தொடர்புபட்டதாக அமைய வேண்டும்**' என்பதற்கமைய எண்ணத்தை செயல் வடிவமாக்கும் விந்தையை சிறார்களுக்கு கற்றுக்கொடுத்தார் என்றே கூறலாம். சுவாமியின் ஒவ்வொரு செயல் அணுகுமுறையும் யுக்திகளும் சிறார்களை திறன் கொண்டவர்களாக, நல்ல சக்தி உடையவர்களாக, தாம் ஈடுபடும் கருமங்களில் சிரத்தை உள்ளவர்களாக வளர்த்தெடுக்கும் இயந்திரங்களாகவே இருந்தன என்று கூறலாம்.

மனித வளர்ச்சி என்பது வெறும் புத்தக அறிவு மட்டுமல்ல, **அறிதல்-உணர்தல்-செயற்படுதல்** ஆகிய மூன்று நிலைகளிலும் ஏற்படுகின்ற மனத்திறன்களின் வளர்ச்சியைக் குறித்து நிற்கின்றது. மனவளர்ச்சியின் மூலம்தான் மனிதவாழ்க்கையின் வெற்றியுள்ளது. மனிதனது வாழ்க்கைப் போராட்டத்தில் அவன் வெற்றியடைய வேண்டுமானால் அவனுக்கு மனவளர்ச்சி முக்கியமாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே மனித வாழ்க்கையின் வெற்றி தோல்வி தங்கியுள்ளது எனும் சிறப்பான சிந்தனைப்போக்கை சுவாமிஜி கொண் டிருந்தர். இதனால் இவர் குருகுலச் சிறார்களுக்கு விழுமியக்கல்வியை போதனை செய்வதில் கரிசனையுடன் செயற்பட்டார். இன்றைய கல்வித்திட்டத்தில் தனியான கலைத்திட்டமாகச் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்ற விழுமியக் கல்வி(Value Education)-ஒழுக்கக்கல்வி (Moral Education)பற்றி அன்றே சுவாமி ஜீவ னானந்தரால் எதிர்வு கூறப்பட்டது எனலாம். **விழுமியம்** என்பதற்கு **ஆளுமைப்பண்புகள், மனிதப்பெறுமானங்கள், நற்குணங்கள்** என்பனவும் சமமான சொற்களாகக் காணப்படு கின்றன.மேலும் 'தனிமனிதனாலும் சமூகத்தினாலும் வாழ்க்கையைச் செழிப்பாக்கும், ஊட்டம் பெறச் செய்யும், கருத்துள்ளதாக்கும் மானிடப்பண்பு விழுமியம் ஆகும்'. சுருங்கக் கூறின் வாழ்க்கையை செழுமையடையச் செய்வது விழுமியமாகும்.

இவ்வாறே **ஒழுக்கம்** என்பது **கொலின்ஸ் அகராதியில்** பின்வரும் மூன்று வரை விலக்கணங்களினூடாக விளக்கப்பட்டுள்ளது.

- தனிப்பட்ட அல்லது சமூக அடிப்படையில் சில நடத்தைகள் சரியானவை. ஏற்புடையவை, பொருத்தமானவை, சில நடத்தைகள் பிழையானவை, பொருத்த மற்றவை, ஏற்கமுடியாதவை என்று சிந்தித்தல், முடிவு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு சந்தர்ப்பத்தில் ஒருவர் செய்யும் செயலின் தரம் ,பொருத்தப்பாடு, பிழை யின்மை.
- சாதாரண சமூகத்தில் அல்லது ஒரு மக்கள் குழுவினால் தனிமனித நடத்தை தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்படும் நடத்தைக் கோட்பாடுகள் அல்லது விழுமியத் தொகுதி.

இவ்வாறு விழுமியமும் - ஒழுக்கமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதை விளங்கிக்கொண்ட சுவாமி இவ்விரண்டையும் குருகுலச் சிறார்களுக்கு தினந்தோறும் செயற்பாடு ஒழுங்கு என்பவற்றுக்கூடாகப் போதிக்கத் தவறவில்லை.

இதனால் இக்குருகுலத்தில் தினந்தோறும் பஜனை, தியானம், யோகாசனம் ஆகிய வற்றின் மூலம் சிறார்களின் உள்ளங்களை அமைதிப்படுத்தினார்.அதனூடாக பிறர் மீது அன்பு செலுத்துதல், பெரியோரைக் கனம் பண்ணுதல், பிறரை மரியாதை செய்தல், பிறரை இன்முகத்தோடு வரவேற்றல், விருந்தோம்பல் செய்தல், பிற சமயத்தை மதித்தல், பிறர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் என்பவற்றுடன் பின்வரும் விழுமிய விருத்தி வெளிப் பாடுகளையும் மாணவர்களித்திலே விருத்திசெய்தார்.

| | | | |
|---|---|---|---|
| • மகிழ்ச்சி | கருணை | நேர்மை | தைரியம் |
| • சமாதானம் | அழகியல் | நன்மை | நியாயம் |
| • துணிவு | அர்ப்பணிப்பு | உண்மைவார்த்தை | நம்பிக்கை |
| • அகிம்சை | பொறுப்பு | களவைத் தவிர்த்தல் | செழிப்பு |
| • அபிமானம் | உறுதிப்பாடு | எளியவாழ்க்கை | உணர்வு |
| • ஞானம் | நட்பு | விளைதிறன் | மாண்பு |
| • சீலம் | கட்டுப்பாடு | பயமின்மை | இன்சொல் |
| • முறைமை | நகைச்சுவை | வீழ்ச்சியடையாமை | விமர்சனம் |

ஆகிய அனைத்தையும் இக்குருகுலத்தில் போதித்தார் எனலாம்.

மொத்தத்தில் சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் விழுமியக்கல்வி(Value Education) -ஒழுக்கக்கல்வி (Moral Education) என்பவற்றுக்கூடாக பின்வரும் மாற்றங்களை குருகுலச் சிறார்களில் கண்டார் என்றே கூறலாம்.

1. சிறார்களினது உள்ளம் ஊட்டம் பெற்றமையும் உயர்வான எண்ணங்கள் தோற்று விக்கப்பட்டமையும்.
2. மனப்பாங்குகளும் சிந்தனைகளும் செழுமையாக்கப்பட்டமை.
3. மனவெழுச்சி முதிர்ச்சிக்கு வித்திட்டமை.
4. மாணவர்கள் தாம் நடந்து கொள்ளவேண்டிய விதம் பற்றிய மதிப்பீட்டை மேற்கொள்ளக்கூடியவர்களாக மாற்றமடைந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கலாசார இரசனையையும் ஒழுக்கத்தையும் மாணவர்கள் பின்பற்றியமை.

6. சமூக ஒருமைப்பாடு பற்றிய மனப்பாங்கை உருவாக்கியமை.

மேலும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனை, அறிவையும் பண்பையும் வளர்க்கும் ஒரு ஸ்தாபனமாக மட்டும் நாம் கருதிவிட முடியாது. இங்கு நல்லதொரு முகாமைத்துவ நிர்வாக நடைமுறைகள் பின்பற்றப்பட்டன என்றே கூறலாம். இங்கு **முழுமைத் தர முகாமைத்துவம்**(Total Quality Management) சிறப்பாக நடைபெற்று இருக்கின்றது என்பதற்கு பல நிகழ்வுகளை எடுத்து நோக்கலாம். தரமேம்பாட்டு விதிமுறைகளும் கோட்பாடுகளும் சுவாமி ஜீவனாநந்தரின் சிந்தனையில் பரந்திருந்ததை எம்மால் ஆராய்ந்தறியமுடியும். வழங்கப் படும் சேவையானது தரநிர்ணயம் செய்யப்பட்டிருந்ததை இங்கு பின்பற்றப்பட்ட நிர்வாக நடைமுறைகளும் வெளியீடுகளும் அடையாளப்படுத்தி நிற்கின்றன எனக்கூறலாம். தரமேம்பாட்டுலகத்தை அறிந்த ஓர் தனித்த விசேடித்த பண்புடைய நல்ல நிர்வாகியாகவும் சிறந்த முகாமையாளராகவும் சுவாமியைக் காண முடியும். முகாமைத்துவத்தில் அனைவராலும் பேசப்பட்டுவரும் 'தரம்(Quality)' என்பது பின்வரும் நான்கு பகுதிகளுக்கூடாக எய்தப்படும்.

- பரிசோதனைக்காலம்(Inspection)
- தரக்கட்டுப்பாடு(Quality Control)
- தர உறுதிப்படுத்தல்(Quality Assurance)
- முழுமைத் தர முகாமைத்துவம் (TQM)

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனால் வழங்கப்பட்ட சேவையானது தரமானதா? இல்லையா? என்பது பற்றி ஆராய்ந்து அடிக்கடி பல மாற்றங்களைக் கொண்டுவந்தார்.அவற்றுள்ளே நிர்வாகத்திற்கென தனியாக ஒரு சில தொண்டர்களையும், நிதிநடைமுறைகளைக் கவனிக்க வென இன்னும் சில தொண்டர்களையும், நேரமுகாமைத்துவத்திற்கும் ஒழுங்குபடுத்தல் களுக்குமென இன்னும் சில தொண்டர் அலுவலர்களையும், வெளி முகவர்களை இணைத்து சேவைகளைப் பெறுவதெற்கென மேலும் சில தன்னார்வத்தொண்டு புரியும் அலுவலர்களையும் இணைத்துக்கொண்டு முகாமைத்துவ நடைமுறைகளைச் செவ்வனே செய்வார் என்பது நான் கண்டு கொண்ட உண்மையாகும். இவ்வாறு நிர்வாக-முகாமைத்துவ நடைமுறைகள் சரியான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்ததனால் இந்நிறுவனத்தால் வழங்கப்பட்ட சேவையானது தரம் மிக்கது என பலராலும் பாராட்டப் பட்டதனைக் காணலாம். தான் எடுத்துக்கொண்ட எந்தப்பணியாயினும் சரியாக திருப்தி யானதாக தரம் மிக்கதாக அமைய வேண்டும் என்பதில் சுவாமி அவர்கள் கடும் அக் கறையாக இருந்ததைப் பலரும் அறிவார்கள். **தரமேம்பாட்டுலகத்தினால்** 'Big Four' என்று மரியாதையுடன் அழைக்கப்படுகின்ற முகாமைத்துவக் கோட்பாட்டாளர்கள் நால்வருள் ஒருவரான எட்வார்ட் டெமிங்கின்(W Edward Deming)முழுமைத் தர முகாமைத்துவம் (TQM) தொடர்பான பதினான்கு கட்டளைகளும் சுவாமிஜியின் வழிகாட்டலினால் இக்குருகுலத்தில் பின்பற்றப்பட்டிருக்கிறதென்பது புலனாகின்றது. அவற்றினுள்ளே......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கடின உழைப்புடன், கூடவே சரியான கண்காணிப்பும் அவசியம் -அதை மனிதர்கள் செய்தாலும் சரி, இயந்திரம் செய்தாலும் சரி' என்பதுவும்

'எதைச் செய்வதற்கும் பயிற்சி அவசியம், பயிற்சிக்கு நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்' என்பதுவும்

'எந்த வேலையைச் செய்தாலும் அனுபவித்து, மகிழ்வோடு ,பெருமையோடு செய்கின்றவர்கள்தான் நமக்குத்தேவை' என்பதுவும்

என்னை நன்கு கவர்ந்தவைகளாகும்.

அது மட்டுமல்லாமல் எட்வார்ட் டெமிங்கின்(W Edward Deming)முழுமைத் தர முகாமைத்துவம் தொடர்பான சிந்தனைக்கும் சுவாமி ஜீவனாநந்தரின் குருகுல நிர்வாக -முகாமைத்துவ நடைமுறைகளுக்கும் நெருக்கமான ஓர் உறவினை ஆய்வாளன் என்ற வகையில் காணமுடிகின்றது. இக்குருகுலத்தில் நடைபெறும் எந்த நிகழ்வாயினும் மிகவும் சிறப்பாக நடைபெற்று முடிவதற்கு காரணம் இவரது வழிகாட்டலும் அதனைப் பின் பற்றுற்றுகின்ற குருகுலச் சிறார்களின் திறனும்(Skillfulness)உம் ஆகும். 'PDCA சுழல்' எனப்படுகின்ற PDCA Cycle பின்பற்றப்பட்டிருக்கின்றதும் குறிப்பிடத் தக்கது. 'Plan-Do-Check-Act என்னும்' நான்கு படிகளும் மீண்டும் மீண்டும் சுழன்று வருவதன் மூலம் ஒரு சேவை வழங்கும் நிறுவனம் தனது சேவையின் தரத்தை உறுதி செய்து கொள்ள முடியும். அவ்வாறே சுவாமிஜி அவர்கள் அடிக்கடி இச்சிறார்களுக்கு பல பொறுப்புக்களை ஒப்படைப்பார். அவற்றிலிருந்து ஒவ்வொரு பிள்ளையினதும் திறன்களை இனங்கண்டு அவர்களுக்கேற்றாற்போல திறன்பெறுகை நிகழ்ச்சித்திட்டங்களை(Skill Acquiretition Programme) வழங்கினார். இதற்கு காரணம் அவரிடமிருந்த முகாமைத்துவ ஆற்றலே யாகும். இங்கிருந்து உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி பொருளான மாணவர்கள் நல்ல ஆற்றல் மிகுந்தவர்களாக பண்பாடுள்ளவர்களாக தரம் மிக்கவர்களாக சிறந்த மொழியாற்றல் உள்ளவர்களாக சமூகத்திற்கு வெளியீடு செய்யப்படுவது தரமான சேவை வழங்கும் நிறுவனத்தின் அடையாளமாக எம்மால் காணமுடிகின்றது.

அத்துடன் முகாமைத்துவ படிமுறைகளான பின்வருவன சிறப்பாக இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டமையினால் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் ஏனைய சேவை வழங்கும் நிறுவனங்களிலும் பார்க்க பாராட்டுப்பெற்று தலைநிமிர்ந்து நிற்கின்றது என்பது நாம் அனைவரும் அறிந்ததே! அவையாவன..

- திட்டமிடல்(Planning)
- ஒழுங்கமைத்தல்(Organizing)
- நெறிப்படுத்தல்(Directing)
- கட்டுப்பாடு(Control)

சிறப்பாக வெளிநாட்டு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் கிளைகளிலிருந்து வரும் துறவி களாயினும் சரி வேறு சந்நியாசிகளாயினும் சரி, பக்தர்களாயினும் சரி, இங்கு சில நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்து விட்டு செல்லும் பொழுது பல நற்சான்றுகளைப் பல இடங்களிலும் வெளிப் படுத்தியிருப்பது சான்றாகின்றது.

அது மட்டுமல்லாது மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஒரு கண்காட்சியகம் போன்றே ஆகிவிட்டதனைக் கண்டு கொள்ளலாம். அவ்வாறே வெளிமாவட்டங்களிலிருந்து கல்விச்சுற்றுலாவுக்கு வருகை தருகின்ற மாணவர்கள் இங்குள்ள பிரபல்யமான பாடசா லைகளைப் பார்வையிடுகின்றார்களோ இல்லையோ இக்குருகுலத்தைப் பார்வையிடு வார்கள் அந்த அளவுக்கு இங்கு ஒழுங்கமைப்புக் கலாசாரமானது அமைந்திருந்தது. இது சுவாமிஜியின் காலத்தில் அவரது அடுத்த சிந்தனையாக பரிணமித்திருந்ததைக் காணலாம். இவர் தனது சிந்தனைகளை ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் என்னும் அழகிய பண்படுத்திய தோட்டத்திலே விதைத்து விட்டதன் காரணமாக இன்று பல கனிதரும் மரங்களும் வாசம் வீசும் மல்லிகைகளும் ஏன் ரோஜாக்களும் கூட மலர்ந்திருக்கின்றன என்பதுடன் எவரும் வீணாகிப்போகாது சமுதாயத்தின் விலை மதிக்கமுடியாத இரத்தினங்களாக மிளிர்கின் றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சுவாமி ஜீவனாநந்தரின் சிந்தனைகள் அன்றும், இன்றும், என்றும் உயிர்வாழும் என்பதில் ஐயமில்லை.

- எதையும் சுலபமாக சாதிக்க முடியும் என்ற நம்பிக்கைக்கு இறைவனிடம் நாம் கொண்டிருக்கும் பக்தியே ஆணிவேராகும்.
- பிரார்த்தனை, நாமஜெபம், இறைவனைப் பற்றிச் சிந்தித்தல் முதலியவை தீவினைப்பயனை அழித்து விடுகின்றன.
- காலையில் ஒருமுறை மாலையில் ஒருமுறை என்று ஒரு நாளிற்கு இருமுறை களாவது இறைவழிபாடு செய்தல் வேண்டும்.

-தூய அன்னை சாரதா தேவி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவகாருண்யம் மிகுந்த சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள்

ஆலாலசுந்தரம்
*முன்னாள் தலைவர்,*
*மங்கையர்க் கரசியார்மகளிர் இல்லம்,*
*தாமரைக்கேணி, மட்டக்களப்பு*

கிழக்கிலங்கை பெற்றெடுத்த தவப்புதல்வர் சுவாமி ஜீவனாநந்தா. அவரது ஆத்மீக, சமூக சேவையினை மட்டக்களப்பு தமிழகம் நன்கு அறியும். சுவாமி ஜீவனாநந்தஜீ அவர்கள் மட்டக்களப்புப் பட்டணத்திற்கு அருகாமையிலுள்ளதும் மட்டுநகர் வாவியினால் சூழப் பட்டதுமான அமைதியும், அழகும் நிரம்பிய வலையிறவு எனும் கிராமத்திலே மிகவும் செல்வாக்கு மிக்க நிலச்சுவாந்தர் குடும்பத்திலே 1925.06.22 சுவாமிஜீ அவர்கள் அவதாரம் செய்தார். இவர் தமது ஓராண்டு கால ஆரம்பக்கல்வியை மட்டக்களப்பு கன்னியர் மடத்தில் கல்வி பயின்ற பின்னர் சிவாநந்தா வித்தியாலயத்திலேயே தம் கல்வியை தொடர்ந்தார். தனது மூன்று வயதுப் பருவத்திலே தன் தாயை இழந்த இவர் சூழ்நிலை காரணமாக கல்வியை தொடர்வதற்காக இராமக்கிருஷ்ணமிஷன் விடுதியிலே அவரது தந்தையாரினால் சேர்க்கப்பட்டார். அங்கு தனது கல்வியை முறையாக மேற்கொண்ட சுவாமிஜீ அவர்கள் 1945ம் ஆண்டு தமது 20வது வயதில் சீனியர் கேம்பிரிஜ் பரீட்சையிலே சித்தியடைந்தார். சிவானந்தா வித்தியாலய விடுதியிலே தொடர்ந்தும் இருந்தசுவாமிஜீ அவர்கள், சுவாமி விபுலாநந்தர் அவர்களினதும் அக்காலப்பகுதியில் இல்லத்துக்கு பொறுப்பானவராக இருந்த சுவாமி நிஸ்கமானந்தர் அவர்களினதும் நன்மதிப்பை பெற்றிருந்தது மட்டு மல்லாமல் ஸ்ரீ இராமக் கிருஷ்ணரின் ஆத்மீககொள்கைகளில் ஈடுபாடும்,ஈர்ப்பும் உள்ளவராகதிகழ்ந்தார். இவ் வேளையில் சுவாமிநிஸ்கமானந்தாஜீ அவர்கள் இந்தியாவிற்கு மாற்றலாகிச் சென்று இந்தியாவில் தனது சேவையை தொடர்வதற்கு பணிக்கப்பட்டிருந்தார். அவ்வேளை உலகின் பொய்மையுணர்ந்து மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனில் சேவை யாற்றிக் கொண்டிருந்த சுவாமி ஜீவனாநந்தாவும் இராமகிருஷ்ண துறவியர் சங்கத்தில் இணைவதற்கானஆசீர்வாதத்தை பெற்றவராக, இந்தியாவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இராமகிருஷ்ண துறவியர் சங்கத்தில் இணைந்து ஆத்மீகப் பணி புரிவதற்கான கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டார். இது தனது துறவிவாழ்க்கையில் தான் பெற்றுக் கொண்ட ஓர் அரியபயிற்சிஎன்றேசுவாமிஜீ அவர்கள் அடிக்கடி கூறுவார். அத்தகைய பயிற்சிகளும், கஷ்டங்களும், சேவை செய்த குருமார்களின் ஒழுங்கும், கண்டிப்புமாக தான் பெற்ற பயிற்சிகளும், குருதேவர் ஆசியும், மக்களின் ஆதரவும் தான் மட்டக்களப்பு இராமக்கிருஷ்ண மிஷனில் சிறந்த சேவையையும், மக்கள் சேவையையும் நீண்டகாலமாக செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்தது என்று சுவாமிஜீ அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜீ அவர்கள் 1952ல் பிரமச்சரியத்தையும், துறவியாவதற்குரிய சத்தியப் பிரமாணத்தையும் எடுத்திருந்தார். இதன் மூலம் இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஆத்மீகக் கொள்கைகளை முற்று முழுதாக ஏற்று இராமகிருஷ்ண மிஷனின் பூரணமான ஓர் துறவியாகவும், சேவையாளராகவும் தன்னை ஆக்கிக்கொண்டார். இதன் பின் 1972 ம் ஆண்டு மட்டக்களப்பு இராமகிருஷ்ண ஆச்சிரமத்தை சுவாமிஜீ அவர்கள் பொறுப்பேற்று இருந்தார்கள். இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஆத்மீகக் கோட்பாடுகளை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டவர் என்ற வகையில் தான் இராமகிருஷ்ண ஆச்சிரமங்களில் பெற்றுக் கொண்ட பயிற்சிகள் காரணமாகவும் மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டவர் என்ற வகையில் அவர் இந்த மண்ணின் மீதும், மக்கள் மீதும் கொண்டிருந்த வாஞ்சைகாரணமாகவும் மட்டக்களப்பு மண்ணிலே மிகுந்த மகிழ்ச்சியுடனும் இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஆசியுடனும் தனதுஆத்மீக சமுதாயப் பணிகளைத் தொடர்ந்தார். அவருடைய 33 வருட புனிதசேவையிலேமட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் பெற்றுக் கொண்ட வளர்ச்சி அளப்பெரியதாக இருந்தது. அதற்காகசுவாமிஅவர்கள் செய்ததியாகங்கள் அதைவிடப் பெரியது எனலாம்.

சுவாமி விபுலானந்தர் அவர்களால் உருவாக்கப்பட்ட இராமகிருஷ்ணமிஷன் செயற்பாடுகள் சுவாமி நடராஜாநந்தஜீ அவர்களாலும் அதைத்தொடர்ந்து சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்களாலும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வந்தது. மட்டக்களப்பு செய்த தவப்பலனாலும் ஸ்ரீ இராமக்கிருஷ்ண பகவானின் அருளாலும் இவர்கள் மூவருமே மட்டக்களப்பு மண்ணைச் சேர்ந்தவர்கள் என்பதையிட்டு நாம் மகிழ்ச்சி கொள்ளலாம். மட்டக்களப்பில் இராமக்கிருஷ்ண மிஷனின் பணி முக்கியமாக வருங்கால இளம் சந்ததியினரை ஒழுங்கும், கட்டுப்பாடும், ஆத்மீகமும், கண்ணியமும், கருணைசிந்தையும், கல்விவளமும் உள்ள ஒரு சமுதாயமாக உருவாக்கப்பட வேண்டும் என்பதே. அத்துடன் சமுதாயப் பணிகளையும் முடிந்தளவு மேற்கொள்வதும் அதன் நோக்கமாகும். இத்தகைய பணிகளை நீண்டகாலப் பணியினை 33 வருடங்களுக்கு செவ்வையாகவும், சிறப்பாகவும் செயற்படுத்திய பெருமை சுவாமி ஜீவனாநந்தஜீ அவர்களையேசாரும்.

சுவாமிஜீ அவர்கள் சுவாமி விபுலானந்தரால் ஆரம்பிக்கப்பட்டதும் அவருடைய காலத்தில் அவரால் உருவாக்கப்பட்டதுமான பல கல்விக்கூடங்களை சிறப்புற நிர்வகித்து வந்தார்கள். குறிப்பாக மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ணமிஷன் ஆச்சிரமம், ஆண்கள் விடுதி, பெண்களுக்கான விடுதி, காரைதீவில் புதிதாக அமைக்கப்பட்ட பெண்களுக்கான இல்லம் ஆகியவற்றை நல்ல முறையில் செயற்படுத்தியதன் மூலம் திக்கற்ற பல குழந்தைகளை பட்டதாரிகளாகவும், வைத்தியர்களாகவும், கணக்காளர்களாகவும், பொறியியலாளர்களாகவும் மொத்தத்தில் கல்வியிலும், ஒழுக்கத்திலும், சமய, கலைகலாசார விழுமியங்களிலும் மேம்பட்ட ஒரு சமுதாயத்தையே உருவாக்கியுள்ளார். அப்படியான வர்களை நிதர்சனமாக இன்று நாம் காணக் கூடியதாகவுள்ளது. இவர்கள் மூலம் சுவாமிஜீ இந்த நாட்டிற்கு என்ன நன்மைகள் கிடைக்க வேண்டும் என்று கனவு கண்டாரோ அவர் உருவாக்கியவர்கள் இன்று அதை நாட்டிற்கு அளித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய செயற்பாடுகள் சுவாமிஜீக்கு காணிக்கையாக சமர்ப்பணம் செய்யப்படுகின்றன என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சுவாமிஜீயினுடைய நிருவாகக் காலத்திலே கிழக்கில் நடந்த நீண்டகால போர்ச்சூழலிலும், ஏனைய இயற்கை அழிவுகளிலும் மக்கள் பட்ட துன்பங்களை சுவாமிஜீயும் அவர்களுடன் சேர்ந்து பகிர்ந்து கொண்டு அவர்களது சகோதரர் போலவும், உறவினர் போலவும் தன்னால் முடிந்த உதவிகளையும் அவர்களுக்கான ஆறுதல் வார்த்தைகளையும் மக்கள் மத்தியில் பகிர்ந்து கொண்டு அவர்கள் மத்தியில் தானும் ஒருவனாக நின்று சேவையாற்றிய தன்மையினை மட்டக்களப்பு வாழ் மக்கள் நன்கு அறிவார்கள். சுவாமிஜீ அவர்கள் எமதுமக்கள் மீது அளப்பரிய வாஞ்சையுடையவராக வாழ்ந்தார்கள். மக்களும் சுவாமிஜீ அவர்களை தங்களது ஆத்மீகத் தலைவராக, சகோதரராக, உறவினராக ஏற்றுக் கொண்டு மிக நெருக்கமாக உறவாடியும், உதவியும், ஒத்துழைப்பும் வழங்கினர். அவர் மக்களை மிகவும் நேசித்தார். மக்களும் அவரை நேசித்தார்கள். சுவாமிஜீ அவர்கள் இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் கோட்பாட்டின்படி சகல மதங்களையும் நேசித்த ஒரு மகான். அவை எல்லாம் அவர் வாழ் நாளில் கடைப்பிடித்து வந்த நடவடிக்கைகள் மூலம், ஒவ்வொரு மதத் தலைவர்களும் ஏற்றுக் கொள்கின்ற வகையில் வெளிப்படுத்திக் காட்டினார்.

மக்களுக்கு ஏற்பட்ட அனர்த்தங்களின் போதெல்லாம் கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத்தலைவர்களுடன் ஒன்று சேர்ந்து மக்களின் பாதுகாப்பிற்காகவும், துயர்துடைப்பிற்காகவும் பாடுபட்டுவந்தார். நாம் நமது தாயை நேசிக்கலாம் மற்றவருடைய தாயையும் மதிக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். குறிப்பாக கத்தோலிக்க ஆயர் பேரருட் திரு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களுடனும், அவருடைய வழிகாட்டலில் வந்த செயற்பாடுகளிலும் இறப்பிற்குப் பின் இந்துக்களை முந்திக்கொண்டு ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜீ என்ற நூலை வெளியிட்ட அருட் திரு.எஸ்.ஏ.ஐ.மத்தியூ அருட்சகோதரர் அவர்களுடனும் மற்றும் இஸ்லாமிய, பௌத்தமதத் தலைவர்களுடனும் இணைந்து சமூகத்தின் நெருக்கடியான எத்தகையபணிகளை மேற்கொண்டாலும் இராமகிருஷ்ண சங்கத்தின் நற்பெயருக்கு களங்கங்கள் ஏற்படாத வகையிலே அவருடைய அத்தனை சேவைகளும் அமைந்திருக்கும். தோணியில் இருந்து கொண்டு ஆற்றினுள் விழுந்தவனை காப்பாற்றுவது போல செயற்பட்டாரே தவிர இராமக்கிருஷ்ண மிஷன் என்கின்ற படகையும் தன்னையும் அந்த ஆற்றினுள் அமிழ்ந்துவிடுகின்ற மாதிரி எந்தக் கட்டத்திலும் அவர் செயற்பட்டது இல்லை.

தன்னுடைய செயற்பாடுகள் சமய ரீதியிலானதாகவோ அல்லது சமூகரீதியிலான தாகவோ இருந்தாலும் கூட தன்னால் இராமக்கிருஷ்ணமிஷனுக்குக் களங்கம் ஏற்படக் கூடாது என்பதில் குறியாக இருந்தார்.

'தம்பிநான் இராமக்கிருஷ்ண பரமஹம்ஷரினதும் அந்த ஸ்தாபனத்தினதும் சேவகன்' என்று அடிக்கடி கூறுவார். தான் கற்பித்த மாணவர்கள் நாட்டின் பலபகுதிகளிலும் அதிகாரிகளாகவும். நல்ல சேவையாளர்களாகவும் இருப்பதற்கு வழிசமைத்துக்கொடுத்த சுவாமிஜீ அவர்கள் தமது ஸ்தாபனம் மூலம் அந்தந்தப் பகுதிகளில் இராமகிருஷ்ண மிஷன் மூலம் நடக்கின்ற சமூகவேலைகளுக்கு உதவும் படியும், செயற்படுத்தும்படியும் கடிதம் மூலமாகவோ,தொலைபேசி மூலமாகவோ அன்புடனும், உரிமையுடனும் கட்டளையிடுவார். அவர்களும் சுவாமி கூறிவிட்டாரே என்பதற்காக கடமையுணர்வுடனும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்துடனும் கட்டளையை நிறைவேற்றி வைப்பதை நாம் பரவலாக அவதானித்துள்ளோம்.

அனுமனின் நெஞ்சைப் பிளந்து பார்க்கின்ற போது அங்கே இராமர் வீற்றிருப் பதைப் போல சுவாமிஜீ அவர்கள் இராமகிருஷ்ண மிஷனை தனது நெஞ்சத்தில் தாங்கி நின்றார்கள். சென்ற காலத்தில் மிஷன் செயற்பாடுகளைக் கொண்டு செல்வதற்கு பணம் இல்லாத சூழ்நிலை ஏற்பட்ட போது சுவாமிஜீ அவர்கள் ஒரு பையனையும், பையையும் எடுத்துக் கொண்டு வீதியிலிறங்கி பக்குவமும், பக்குவமில்லாதவர்களதும் வீடுகளிற்குச் சென்று ஒருரூபாய், இரண்டுரூபாய், ஐந்துரூபாயும் பெற்று இல்லவிடுதிகளைக் கட்டியதுடன் அந்த ஒரு ரூபாய், இரண்டு ரூபாயாகப் பெறப்பட்ட அந்த பணத்தின் மூலம் ஏழைக் குழந்தைகளுக்கு வாழ்வளிக்கும் செயற்பாடுகளையும் தன்னம்பிக்கையுடன் செயற் படுத்தியிருந்தார். இவைகளை சுவாமிஜீ அவர்கள் கூறுகின்ற பொழுது இத்தனையையும் சாதாரண ஜீவனாநந்தாவினால் செய்ய முடியாது தம்பி. இவையெல்லாம் அந்த குருதேவரே என்னைக் கருவியாக வைத்துச் செய்வித்தார். 'நான் ஒன்றுமில்லை'. என்று கூறுவார். தெளிவாகச் சொன்னால் சுவாமிஜீ அவர்கள் பிச்சை எடுத்தே இந்த மிஷனை வளர்த்தார் எனலாம்.

சுவாமிஜீ அவர்கள் அவருடைய இறுதிக்காலத்தில் அடிக்கடி சுகயீனங்கள் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொழுதும் கூட அவர் என்னிடம் கூறுவார் 'நான் வருத்தத்துக்காக துன்பப்படவில்லை தம்பி. என்னை நேசிக்கின்ற இந்த மக்களின் தொடர்பு களில் இருந்து துண்டிக்கப்பட்டு விடுவேனோ எனும் நினைவு தான் எனக்குத் துன்பம் அளிக்கிறது'என்று கூறுவார். நிர்வாகம் அவரின் சுகயீனத்தைக் காரணம் காட்டி அவருடைய வழமையான செயற்பாடுகளில் இருந்து அவரை விடுவித்து அவருக்கு ஓய்வு கொடுத்த போதும் இச் செயலை அவர் தனக்கு ஏற்பட்ட வேதனையாகவே கருதினார். மக்கள் தொடர்புகளில் இருந்து தான் விடுவிக்கப்படுவதை அவர் கடைசிவரை விரும்பவில்லை. மேலிடம் அவரை மைலாப்பூருக்கு ஓய்வுபெற அனுப்ப இருந்த செய்தி கேட்டு அவர் மிகவும் கவலையுற்றவராக இருந்தார். தான் பிறந்த, தான் சேவை செய்த இந்த மண்ணிலேயே தான் சங்கமமாக வேண்டும் என்பதே தனது விருப்பம் என்றும் கூறியிருந்தார்.

கிழக்கின் சகலமக்களையும்,சகலமதங்களையும் அவர் மனதாரநேசித்துவந்தார். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தஅருட்திரு எஸ்.ஏ.ஐ .மத்தியூ அடிகளார் அவர்கள் சுவாமியின் இறப்பிற்குப் பின் 'ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ்' எனும் நூலை வெளியிட்ட அந்த நூலுக்கு பேரருட்திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் (மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்)ஆசிச்செய்தி வெளியிட, அவரின் ஈமக் கிரியையின் போது முஸ்லிம் மதத்தலைவர்கள் அதில் கலந்து கொண்டு இரங்கல் உரை நிகழ்த்தினார்கள் என்றால், பௌத்த குருமார் அனுதாபச் செய்தி வெளியிட்டார்கள் என்றால் அது சுவாமி தன் வாழ்நாளில் பிறமதங்களையும், மதத்தலைவர்களையும் எந்தளவிற்கு நேசித்தார் என்பதற்கு சாட்சியாகவே அமைந்திருந்தது.

மட்டக்களப்பின் தவப்புதல்வராக எண்பத்தொரு வயது வரை சேவையாற்றிய சுவாமிஜீ அவர்கள் தன்னை நேசித்து அன்பு செலுத்திய மக்களிடமிருந்து 2006.02.04 தினத்தன்று விடைபெற்று இராமகிருஷ்ண பரமஹம்ஷரின் திருவடியை அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஜீவனாநந்தர் அவர்களின் சமூகப்பணி

எஸ்.எதிர்மன்னசிங்கம்
முன்னாள் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர், கல்விஅமைச்சு (வ.கி.மா)

மட்டக்களப்பு கல்லடி உப்போடை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் இல்லத்தினை ஆரம்பித்து வைத்துக் கல்விப் பணி,ஆன்மீகப்பணி, சமூகப்பணி ஆகிய பணிகளை மேற்கொண்ட சுவாமி விபுலானந்தரின் வழியில் தொண்டாற்றிய சுவாமி நடராஜானந்தா் அவா்களைத் தொடர்ந்து இல்லத்தை நிருவகிக்கும் பணியை சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் 1966ம் ஆண்டு ஏற்றுக் கொண்டார். சாதாரண குடும்பத்தில் பிறந்து சமூகப்பிரச்சினைகளை நன்றாகத் தெரிந்து கொண்டவரான சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் தனது முழு நேரத்தையும் சமூக முன்னேற்றத்திற்காகவும் கல்வி வளர்ச்சிக்காகவும் இறைபணியிலும் செலவிட்டார்.

சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள் இல்லத்தில் உள்ள மாணவர்களின் நலன் கருதி மாதாந்தம் மட்டுநகரின் கடைகள் தோறும் ரூபாஒன்றுவீதம் நிதியைச் சேகரித்தார். அத்தோடு உத்தியோகத்தர்களிடம் நிதிசேகரிப்பு அட்டைகள் (காா்ட்) மூலம் மாதந்தோறும் இல்ல உதவியாளர்களை அனுப்பி சேகரிக்கும் முயற்சிகளை மேற்கொண டார். மட்டக்களப்பு கல்லடியில் விவேகானந்தர் அவர்களின் நூற்றாண்டு நிறைவை யொட்டி 'விவேகானந்தபுரம்' எனும் கிராமத்தை அமைத்தார். விவசாயத்தைஅபிவிருத்தியடையச் செய்வதற்கும்,மக்களுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதற்குமாக உறுகாமம் எனும் இடத்தில் விவசாயப்பண்ணை ஒன்றினை நிறுவி தேவையான நீரை சேகரிப்பதற்காக இராமகிருஷ்ணகுளம் ஒன்றையும் உருவாக்கினார். சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்களில் வாழ்விடத்தை இழந்த மக்களுக்கு சீலாமுனை, சின்னஉப்போடை, பெரியஉப்போடை, திருச்செந்தூர், கல்லடிஆகியகிராமங்களில் 116 வீடுகளைஅமைத்துக் கொடுத்தார். வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற பெற்றோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங் களை வழங்கினார்.

இராமகிருஷ்ண இல்லத்தில் உள்ளஅனாதைச் சிறுவர்களை உற்சாகப்படுத்தி பெற் றோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கினார். இராமகிருஷ்ண இல்லத்தில் உள்ள இல்லசிறுவர்களை உற்சாகப்படுத்தி மரக்கறித் தோட்டத்தை உற்பத்தி செய்தார். இல்லத்திற்குத் தேவையான மரக்கறி வகைகளை எடுத்துக் கொண்டு மீதமா யுள்ளவற்றை குறைந்த விலையில் மக்களுக்குக் கொடுத்து உதவினார். எல்லா இன, மதமக்களையும் ஒரே மாதிரியாக நடத்தினார். கூடுதலான முஸ்லீம் மாணவர்கள் இங்கு இல்லத்திலிருந்து படித்து பயனடைந்துள்ளனர். உறவுகளைத் தொலைத்து நின்ற மாணவர் களுக்கு ஆதரவு அளித்து கல்வி அறிவைப் பெறவும் வழி காட்டியவர் சுவாமி நடராஜானந்தஜீ அவர்களாகும். இல்லமாணவர்களுக்கு ஏதாவது பிரச்சினையென்றால் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்திற்குச் சென்று அவர்களது பெற்றோர்களையும் சந்தித்து அதனைப் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். இல்லத்தின் மாணவர்களுக்காக விபுலானந்த மண்டபத்தில் நடைபெற்ற அறநெறிப் பாடசாலையினைத் திறம்பட நடாத்திய தோடு ஏனைய அறநெறிப் பாடசாலை (ஞாயிறுபாடசாலை) களுக்கும் உதவி வழங்கினார். தரிசனம் விழிப்புலன் அற்றோர் பாடசாலையின் போஷகராக இருந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுத்தார்.

அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு என்ற யேசுகிறிஸ்துவின் வேத வாக்கிற் கிணங்க செயற்பட்டு மக்களை வழிநடத்தினார். இந்தியாவில் சேலம் ஆச்சிரமத்தில் மருந்தகசாலையில் பணி புரிந்தமையால் மருத்துவஅறிவையும் இலகுவாகப் பெற்றுக் கொண்டார். மைசூர் மாநிலத்திலுள்ள திருத்தலவைத்தியசாலையிலும் சுவாமிஜீ அவர்கள் சேவை செய்தமையால் மருத்துவம் சம்பந்தமாக போதிய அனுபவத்தையும் அறிவையும் பெற்றுக் கொண்டார்.

மக்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்மானிப்பதற்கான நடவ டிக்கைகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட பிரஜைகள் குழுவில் தன்னையும் இணைத்துக் கொண்டு அயராது பணிபுரிந்தார். திருகோணமலை, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களை தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்ட கிழக்குப் புனர்வாழ்வு அமைப்பின் (E.R.O) உருவாக்கத்திற்கு சுவாமிஜீ அவர்களும் பங்களிப்புச் செய்தார். மட்டக்களப்பு மாவட்டத்திலும், அம்பாறை மாவட் டத்திலும், கொழும்பிலும் நடைபெறுகின்ற சமயசமூக அபிவிருத்தி நிகழ்ச்சிகளிலெல்லாம் மனங்கோணாது இருந்து கொண்டு ஆசியுரை வழங்கி வந்தார். எனது மணிவிழா நூலுக்கு சிறந்தவொரு வாழ்த்துரையை சுவாமிஜீ வழங்கியுள்ளார். விழாவில் கலந்து கொள்வதற்கு விருப்பமாகவிருந்த போதும் உடல் நலக்குறைவால் அது கைகூடவில்லை. சுவாமிஜீ அவர்களது கண்பார்வையில் ஏற்பட்ட குறைபாட்டினால் அடிக்கடி இந்தியாவிற்குச் சென்று சிகிச்சைபெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

சுவாமி விவேகானந்தர் ஏற்றிய சேவை என்னும் தியாக வேள்வியில் தன்வாழ்வை ஆகுதியாகச் செலுத்திப் பெருவாழ்வு பெற்றார். சுவாமிஜீ அவர்களைச் சந்திப்பதற்காக நான் பலதடவைகள் இல்லத்திற்குச் சென்ற போதெல்லாம் இன்முகத்துடன் வரவேற்று இல்லத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறித் தோட்டத்தையும் கொண்டு சென்று காட்டி அத்தோடு மாணவர்களது விடுதிவசதிகளையும் பார்வையிடச் செய்வார். பின்னர் அருந்து வதற்கு சுவையான தேநீர் வழங்கப்படும். அங்கு இல்ல குழந்தைகளுக்கு நடைபெறும் பூசைகளில் கலந்துகொள்ளும் பாக்கியமும் பல தடவைகள் எனக்கு கிடைத்துள்ளது. இராமகிருஷ்ண இல்லத்திற்குள் அடியெடுத்து வைத்ததும் பெரும் மனநிறைவொன்று ஏற்பட்டுவிடும். அந்தளவிற்குப் புனிதமாக இல்லம் அமைந்திருக்கும். அதற்கான காரண மாக சுவாமி ஜீவனாநந்தமகராஜ் அவர்கள் விளங்கினார். ஓர் ஆன்மீகஞானியாக, சமூகப் பணியாளராக, சமயங்களுக்கிடையே நல்லுறவை வளர்த்த சமரசத் தலைவராக விளங்கினார் என்பதனை அவரது மறைவின் பின்னர் நடைபெற்ற இறுதி நிகழ்வின் போது (மகாசமாதி) கலந்து கொண்ட ஜனத்திரளிலிருந்தும், இரங்கலுரைகளிலிருந்தும் கண்டுகொள்ள முடிந்தது. இந்நூலும் எதிர்காலத்தில் ஓர் ஆவணமாக ஆய்வாளர்களுக்கு உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவசேவையே சிவபூஜையாக் கொண்ட ஜீவனாநந்தஜீ மகராஜ்

க.குருநாதர்

*தலைவர்*

*சிவானந்த வித்தியாலய பழையமாணவர் மன்றம்,*

*மற்றும் K.V.O நம்பிக்கைநிதியம்.*

வாழ்நாள் முழுக்க மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணித்த எமது நாட்டில் பிறந்த ஒரு மகான் எங்கள் ஜீவனாநந்தஜீ. அவர் காலத்தில் அவருடன் நெருங்கிப் பலசேவைகள் ஆற்றஆண்டவன் எனக்கும் சந்தர்ப்பத்தைஅளித்ததை இட்டு பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

எமது K.O.V நம்பிக்கை நிதிய குடும்ப உறவுகளுடன் சுவாமிமிகவும் மரியாதையும் அன்பும் கொண்டிருந்தார். சிவானந்த வித்தியாலயத்திற்கு நிலம் 15ஏக்கரும் நிதியும் வழங்கிய எமது குடும்ப மூத்த உறுப்பினரான கதிர்காமத்தம்பி உடையார் வேலுப்பிள்ளை அவர்களின் சிறப்புக்களையும், இராமகிருஷ்ண மிஷனை மட்டக்களப்புக்கு கொண்டு வர அமரர் K.O. வேலுப்பிள்ளை ஆற்றிய சேவையையும் அடிக்கடி சுவாமி ஜீவனாநந்தஜீ எனக்கு கூறுவார். சுவாமிவிபுலானந்தர் வண்ணார்பண்ணை வெள்ளிக்கிழமை இராம கிருஷ்ண மடத்தில் இருந்து 4 ஆதரவற்ற பிள்ளைகளை மட்டக்களப்பிற்கு கொண்டு வந்துஅமரர் K.O. வேலுப்பிள்ளையின் சொந்த இல்லமான 'ராஜ்மகாலில்' விடுதியாக பாவிக்க அனுமதித்தது முதல் பின்னர் 'கமலாலயம்' என்ற விடுதிக் கட்டடத்தை அமரர் K.O. வேலுப்பிள்ளை தனது சொந்தக் காணியில் கட்டிக் கொடுத்ததோடு முதல் கட்டடத் தொகுதியை சிவானந்த வித்தியாலயத்தில் கட்டிக் கொடுத்து பாடசாலை இயங்க தள பாடங்கள், ஆசிரியருக்கான கொடுப்பனவுகள் போன்றவற்றையும் செய்ய அமரர் K.O. வேலுப்பிள்ளை வழிவகுத்துக் கொடுத்த சரித்திர உண்மைகளை இராமகிருஷ்ண மிஷன் ஆண்ட றிக்கை மூலம் ஆதாரப்படுத்தி எனக்கு ஜீவனாநந்தஜீ மகராஜ் புகழ்ந்து ரைத்ததை நான் இன்றும் மறவேன். பழைய சரித்திரங்களை இன்றைய சமூகத்திற்கு சொல்ல வேண்டும் அது அழியக் கூடாது என பலமுறை எனக்கு கூறுவார்.

**நாவற்குடா மீள் குடியேற்ற வீட்டுத் தொகுதி**

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 100 ஆண்டுகள் நினைவாக அதனை நினைவு கூர யுத்தத்தில் பாதிக்கப்பட்டு காத்தான்குடியில் இருந்து இடம் பெயர்ந்த ஏழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு புதிய வீட்டுத் தொகுதியை அமைத்துக் கொடுக்க சுவாமி அவர்கள் மிகவும் பாடுபட்டவர். அந்த நேரத்தில் அந்த வீடுஅமையும் நிலம் உரிய வீட்டைபெறும் மக்களுக்கு சொந்தமாக்க பல சிக்கல்கள் ஏற்பட்ட போது வீட்டுத் திட்டம் தாமதமானது. அப்போது நான் வடக்கு கிழக்கு மாகாண உதவி காணி ஆணையாளராக இருந்தேன். அந்த நேரத்தில் திருமதி.வாசுகி. அருள்ராஜா உதவிபிரதேச செயலாளராக மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றினார். நாங்கள் இருவரும் இந்தகாணிப் பிணக்குகளை சட்டரீதியாக விரைவாக தீர்த்து வைத்து குறிப்பிட்ட காலத்திற்குள் ஜீவனாநந்தஜீ மகராஜ் அவ்வீட்டுத்திட்டத்தை நிறைவு செய்ய உதவிகள் பல செய்தோம். சுவாமிகள் சிந்தனையில் முன்னைய அனுபவம் ஒன்று இருந்தது. முகத்துவார வீட்டுத் திட்டம் தோல்வி அடைந்தது, ஆனாலும் நான் சுவாமிஜீக்கு மிகுந்த ஒத்தாசையாக இருந்த தோடு திரு.காசுபதி நடராஜாவும் இதற்கு ஒத்தாசை வழங்கிய போது சுவாமி அவர்களுக்கு ஒரு நம்பிக்கை பிறந்தது. இறுதியில் வெற்றி அளித்ததிட்டமாக இந்த வீடமைப்புத் திட்டம் மாறியதையும் பல வெளிநாட்டு பிரதிநிதிகளும் வெற்றியளித்த இந்த மாதிரிக் கிராமத்தை பார்வையிட்டு சென்றதையும் சுவாமி அவர்கள் பெருமிதமாக கூறுவார்.

**மட்டக்களப்பு மிஷன் விடுதி**

கல்லடி உப்போடையில் உள்ள ஆண்கள் இல்லம், மிஷன் நிர்வாக கட்டடம், பெண்கள் இல்லம், காரைதீவு இல்லம் ஆகியன சுவாமிஅவர்களின் கடும் உழைப்பினால் உருவா கியவை. நான் பாடசாலையில் படிக்கும் போது சுவாமிகள் திரு.அன்பர் நடராஜா ஆசிரியருடன் கால் நடையாக சென்று பணம் கொஞ்சம் கொஞ்சமாக சேகரித்தது எனக்குத் தெரியும். படுவான்கரை வயல் வெளிகளில் போடிமாரிடம் சிறிது சிறிதாக நெல் சேகரித்தது போன்ற நல் உழைப்பால் வியர்வை சிந்தி கட்டிய கட்டடத் தொகுதியே இவையெல்லாம். இக்கட்டடம் வெறும் கல்லாலும் சீமேந்தாலும் மண்ணாலும் கம்பிகளாலும் கட்டப்பட்டவை அல்ல. ஜீவனாநந்தஜீயின் வியர்வையாலும் அவர்களின் உயர்ந்த சிந்தனையாலும் கலந்து கட்டப்பட்டவையே. சுவாமிகள் கால் நடையாக நடந்து சென்று முயன்று மிஷன் அபிவிருத்திக்காக பாடுபடுவதைக் கண்ட எமது K.O.V நம்பிக்கை நிதிய உறுப்பினர்களில் ஒருவரான திருமதி.தம்பிப்பிள்ளை. செல்லத்தங்கம் அவர்கள் (Dr.தம்பிப்பிள்ளையின் மனைவி) தனது (Land Rower) ஜீப்வண்டியை சுவாமியின் பணிக்காக இலவசமாக வழங்கினார். சிலவேளைகளில் அவரும் சுவாமிகளுடன் நிதி சேகரிக்கும் பணிக்கு செல்வதும் உண்டு.

இராமகிருஷ்ண மிஷன் எமது சமூகத்தில் இருந்து பிரித்தெடுக்க முடியாத ஒன்றாக இணைந்த ஒரு ஸ்தாபனம். அமரர் சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜின் மீது மக்கள் கொண்ட பயபக்தியே அதற்கு காரணம். இவரால் தான் மக்கள் இராமகிருஷ்ண மிஷனை நம்பினர். இராமகிருஷ்ணரின் தத்துவங்களையும் சுவாமி விவேகானந்தரின் வழிகாட்டல்களையும் பயபக்தியுடன் ஏற்று நடந்தனர். எத்தனையோ சுவாமிகளின் ஆசீர்வாதம் பெற்ற பூமி எங்கள் கிராமம். ஆனால் அத்தனைக்கும் மேலாக ஒரு தெய்வமாக எம் மக்கள் போற்றும் மகான் எமது ஜீவனாநந்தஜீ மகராஜ் என்பதில் எந்த மறுப்பிற்கும் இடமில்லை. உலக முள்ள வரை அவர் புகழ் வாழும். இதனை அழிக்கவோ, மறைக்கவோ முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மன்றமும் சுவாமி ஜீவனாநந்தஜீயும்

கு. ஜதிஸ்குமார் (தலைவர்)
ஸ்ரீ ராமகிருஷ்ண மன்றம், மண்டூர்

சமய,சமூக,கலாசார,ஆண்மீக பணிகளை மண்டூர் பகுதியிலே முன்னெடுத்து செல்வதற்கான சரியான தளம் ஒன்று இல்லாததை உணர்ந்த இளைஞர்களால் அக்குறையினை போக்கும் நோக்கத்தை அடிப்படையாக வைத்து 1972ம் ஆண்டு உருவாக்கப்பட்டது தான் மண்டூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மன்றமாகும். இம் மன்றம் உருவாக்கப்பட்ட போது ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் வழிகாட்டலில் கீழ் அனைத்து பணிகளையும் முன்னெடுக்க வேண்டுமென்ற மனவிருப்பத்துடன் அனைவரும் இருந்தனர். இதற்கமைய மன்றத்தை உருவாக்கிய மூத்த உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து கல்லடி இராமகிருஷ்ண மிஷனுக்கு சென்று சுவாமி ஜீவனாநந்த மகராஜியை சந்தித்து உரையாடியபோது இம்மன்றம் உருவாக்கப்பட்டதை சுவாமி ஜீவனாநந்தா ஏற்றுக் கொள்ளவில்லை. எல்லோரும் கவலையுடன் இருந்த போது சுவாமி அவர்கள் ஏற்றுக் கொள்ளாமைக்கான காரணம் மன்றங்களை இலகுவாக அமைக்க முடியும். தொடர்ந்து பொதுப் பணிகளில் ஈடுபடுகின்ற விடயங்களில் பூச்சியமாகவே காணப்படுவது வழமை. என்றதொனியில் அவரது கருத்து வெளிப்பட்டது. மனம் நொந்து இருந்த இளைஞர்களிடத்தில் இறுதியாக மகிழ்ச்சியான செய்தி ஒன்றை கூறி மன்றம் தன் பணி சிறக்க ஆசி கூறி ஏற்றுக்கொண்ட அன்றைய நாளைமீட்டுப் பார்க்கும் போது சுவாமிகளது உள்ளத்திலே உண்மை தன்மையின் வடிவங்களே காணப்பட்டதை இந்நிகழ்வானது உணர்த்துகிறது.

1972ம் ஆண்டு ஒரு கிடுகுக் கொட்டிலிலேதான் இதன் பணிகள் ஆரம்பமானது குருதேவரின் திருவருளால் சுவாமி ஜீவனாநந்த மகராஜே இக்கொட்டிலுக்கான காலை நாட்டிவைத்தார். இதனைத் தொடர்ந்து வாராந்த பஜனை, சமயவிழாக்கள், சமயப் பெரியோர்களின் விழாக்கள், சிரமதானம், அன்னதானம் போன்ற நிகழ்வுகள் எமது மன்றத்தினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதை கண்ணுற்ற சுவாமியவர்கள் அடிக்கடி எமது பணிகளை அவதானித்து பாராட்டிவந்தார்.

ஒருதடவை மண்டூருக்கு வந்த சுவாமியை மண்டூர் கவிஞர் மு.சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் கீழ்வருமாறு பாராட்டி வரவேற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கத் துறுதி குலையாமல்
உண்மை ராமகிருஷ்ண மகான்
ஆக்கப் பணிகள் புதுக்கவென
அல்லும் பகலும் உழைக்கும் அன்பு
தேக்கும் ஜீவனாநந்தா
தில்லை மண்டூர் கந்தனருள்
வாக்குப் பலிக்கப் பணிபுரியும்
வாய்மை மணிகாள் வருகவே

என வாழ்த்தி வரவேற்றார். மண்டூர் கவிஞர் அவர்கள் பாடல் சுவாமிக்கும் மண்டூருக்குமிடையிலான தொடர்பு நெருக்கமாக இருந்ததை வெளிக்காட்டுகிறது.

2003ம் ஆண்டிற்கு முன்னுள்ள காலத்தில் ஆண்டு தோறும் குருதேவரின் ஆண்டு ஜயந்திவிழா, விவேகானந்த ஜயந்திவிழா கொண்டாடும் போது சுவாமி ஜீவனாநந்தா இல்லாத விழா இல்லையென்றே சொல்ல முடியும். இந்த வகையில் 1981ம் ஆண்டு முப்பெரும் விழா மிகவும் பிரமாண்டமான முறையில் நடாத்திய போது சுவாமி ஜீவனாநந்தா பாராட்டி ஆசிவழங்கியதை இப்போது நினைவுபடுத்திப் பார்க்கின்றோம்.

இதைப் போன்று 1994ம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் சிகாகோ நூற்றாண்டு விழா கொண்டாடிய போது சுவாமியவர்கள் மிகவும் நல்லாசி வழங்கி எமது பணியை பாராட்டி யுள்ளார். அதுமட்டுமல்ல இந்நிகழ்வை நினைவு கூரும் நோக்குடன் சுவாமி அவர்களால் நட்டுவைக்கப்பட்ட மரக்கன்று இப்போது விருட்சமாக காட்சி தருகிறது. சுவாமியவர்களை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இன்னுமொரு விழாவின் போது மண்டூர் கவிஞர் சோமசுந்தரப்பிள்ளையின் வாழ்த்துப் பாவில் சுவாமியைப் பற்றிகுறிப்பிடத் தவறவில்லை.

குருவாம் ராமக் கிருஷ்ணரருள்
கொள்ளைக் காந்த இழப்பினிலே
துரும்பாம் சொந்தச் சுகம்வீசித்
துடித்துப் பிணைந்த தொண்டாளன்
உருக்கொண்டாடும் சுவாமி ஜீ
வானந்தன் சேவைத் தீங்
கரும்பைச் சுவைத்த கவியாலென்
கண்மாமணியை வாழ்த்தேனோ

என்று உள்ளம் உருகி வாழ்த்திய பாடலிலிருந்து இராமகிருஷ்ண மன்றத்திற்கும் சுவாமி களுக்குமிடையிலான தொடர்பு எப்படிப்பட்டது என்பதை உணரமுடிகிறது.

கல்லடி மிஷனுக்குச் சென்று சுவாமியை சந்திக்கும் போதெல்லாம 'மன்றம் எப்படித் தம்பி' என்றே விசாரிப்பார். இறுதியாக அவர் கதைத்த விடயமொன்றினை எம்மால் செயல்படுத்த முடியாமல் போனதையிட்டு மன வேதனையடைகிறோம். அதாவது குருதேவரின் ஜயந்திவிழாவினை மண்டூரில் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்பதை அவர் கதைத்த விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது உள்ள சூழ்நிலையில் எமது மன்றம் தொடர்பாக கதைப்பதற்கு வரலாறு தெரிந்த துறவி எமக்கு இல்லாதது ஒரு வேதனையான விடயமொன்றாகும். இந்த வகையில் முற்றும் துறந்தவர்கள் என்று சொன்னாலும் உலகியல் வாழ்வில் இருக்கின்ற காரணத்தினால் சுவாமி அவர்களின் சமாதியானது எமது மன்றத்திற்கு பாரியதொரு பின்னடைவினை ஏற்படுத்தியிருக்கிறதென்றே கூற வேண்டும். இவர் பணிகளைப் பற்றி அறியாதவர்கள் இல்லையென்றே சொல்ல வேண்டும். இவரின் வெற்றிடம் பிற்காலத்தில் நிரப்பப்படுமா என்ற கேள்வியும் எழாமலில்லை.

---

- The mind naturally tends towards evil deeds .It is lethargic in doing good works. Formerly I used to get up at 3 a.m and sit up for meditation. One day I felt disinclined to do so on account of physical indisposition. That one day's irregularity resulted in the upsetting of my routine for a number of days. That is why I say perseverance and tenacity are necessary for success in all good work.
- it is the nature of water to flow downwards, but sun's rays lift it up towards the sky. likewise it is the very nature of mind to go to lower things., to objects of enjoyment, but the grace of God can make the mind go towards higher objects.
- He who has a pure mind sees everything pure.
- One suffers as a result of one's own actions. So, instead of blaming others for such sufferings, one should prey to the lord and depending entirely on His grace, try to bear them patiently and with forbearance under all circumstances.

-Holy Mother Sri Sarada Devi-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பால் அறிவூட்டிய ஆத்மஞானி

*யசோதை-துஸ்யந்தராசா*
*சாரதாமகளிர் இல்லம்*

1994.09.10 திகதி நான் இராமகிருஷ்ண மிஷனுக்கு வருவதற்கு நான் விண்ணப்பித்த கடிதத்திற்கு பதிலாக சுவாமிஜீ அவர்கள் அனுப்பிய கடிதமே ஆதாரமாகும்.

அன்று காலை நான் ஆச்சிரமத்திற்குச் சென்ற வேளை சுவாமிஜீ முன் பக்கம் இருக்க வில்லை. சிறிது நேரத்திற்குப் பின் தான் வந்தார். ஆச்சிரமத்திற்கு வந்தவுடன் ஒரு புத்துணர்ச்சி, சுவாமிஜீயைக் கண்டதும் பக்தி மனதில் ஏற்பட்டது. அதை வார்த்தைகளால் கூற முடியாமல் உள்ளது.

சுவாமிஜீயை குருவாகவும், தந்தையாகவும் மதித்தே பன்னிரெண்டு ஆண்டுகள் அவருடைய வழிகாட்டலில் இவ்வில்லத்தில் கடமைபுரிந்துள்ளேன்.

சுவாமிகள் ஒவ்வொருசந்தர்ப்பத்திலும் ஆலோசனைகள் கூறத் தவறவில்லை. கண்டிக்க வேண்டிய இடங்களில் கண்டிப்புடன் நடந்துகொள்வார். பல சிக்கலான சந்தர்ப்பங் களுக்கு முகம் கொடுக்க வேண்டி வந்துள்ளது. அதில் 2004ஆண்டு டிசம்பர் மாதம் 28ந் திகதி தனிமையாக இல்லப் பொறுப்பை ஏற்று நடத்திக் கொண்டிருந்த சந்தர்ப்பம் மாலை 6.00 மணிக்குப் பின் 5ம் ஆண்டு மாணவிகள் இருவர் இல்லத்தை விட்டு ஓடி விட்டார்கள். உடனே சுவாமிகளுக்கு அறிவித்து விட்டு பல அகதி முகாம்களுக்கும் ஆட்களை அனுப்பித் தேடியும் பிள்ளைகளை கண்டு பிடிக்க முடியாமல் போனதால்,எனக்கு பயம், கவலை என்ன செய்வதென்று தெரியாத நிலை; சுவாமிஜியிடம் மீண்டும் தொடர்பு கொண்ட போது என்னைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதால் அழுதுவிட்டேன். சுவாமி ஆறுதல் கூறி மனதை தளரவிடாதே அன்னையாரிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டுமற்றக் குழந்தைகளை கவனமாகப் பார்த்துக்கொள் விடிந்த பின் பார்ப்போம் என்று ஆறுதல் படுத்தினார்.

இந்த வாழ்க்கையை ஒரு பாக்கியமாகவே கருதுகின்றேன். பல ஊர்களில் இருந்து வந்த பல தரப்பட்ட பெற்றோரின் குழந்தைகள், பல குணாதிசயங்களைக் கொண்டவர்கள் இவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் இல்லாவிட்டாலும் இந்த இடத்தை மதித்து இல்லக் கட்டுப் பாட்டுக்கு அமைவாக, ஆன்மீக ஈடுபாட்டுடன், ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். ஒவ்வொரு வரிடமும் நல்ல பண்புகளைக் காணக்கூடியதாக உள்ளது. அதிலும் பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை தாராளமாக உண்டு. இன்றைய காலகட்டத்தில் உத்தியோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும் அனைவரது உள்ளங்களிலும் இந்த இடத்தால் தான் நான் இந்த உயர்ந்த நிலையில் இருக்கின்றேன். என்ற நன்றி உணர்வு, பெருமிதம், அவர்களின் செயற்பாடுகளில் வெளிப்படுகின்றன.

இங்கிருந்து சென்ற மாணவிகளுக்கு பலதரப்பட்ட பயிற்சிகளை இல்லத்தில் சுவாமிகள் வழங்கியுள்ளார்கள். பலர் உத்தியோகம் பார்ப்பதையும். சிலர் குடும்பப் பெண்களாக மிளிர்வதையும் காண்கின்றோம். இவர்களுக்கு முதலாவதாக கை கொடுப்பது காலை 4.00 மணிக்கு எழும்பும் பயிற்சி. உத்தியோகம் பார்ப்பவர்களும். தையல் தைத்து வருவாயை மேம்படுத்திக் கொள்கின்றார்கள். மாலை, நாகசடை, என்பன கட்டிக் கொடுத்து ஆதாயத்தை அடைகின்றனர். இன்று சிலர் தீண்பண்டங்கள் செய்து கொடுத்தும் ஆதாயத்தை அடைகின்றனர். விழாக்கள், நடக்கும் போது கோலம் போட்டுடு; பெருமையடைகின்றனர். பழைய மாணவிகள் சமுதாயத்தில் பலராலும் மதிக்கத்தக்க வகையில் வாழ்கின்றமை இல்லத்திற்கு பெருடையாகின்றது. இவற்றுக்கும் மேலாக இவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்து இவர்கள் எதிர்காலம் சிறக்க வேண்டும் என்ற நோக்கொடு படிப்பு மட்டுமல்லாது ஒழுக்கம், பண்பாடு என்பவற்றை மாணவர்களுக்கு ஊட்டி வழிகாட்டிய அந்த மகா புருசர் சுவாமி ஜீவனாநந்தாவின். சேவை மாபெரும் சேவை என்பது போற்றத்தக்கது. அச்சேவையில் பங்கெடுத்தது மனமகிழ்வைத் தருகிறது.

- தூய்மை, பொறுமை விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமை யாதவை ஆகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.
- பொறாமையையும், ஆணவத்தையும் விட்டு விடு. பிறருக்காக கூடி உழைக்கக் கற்றுக் கொள். நமது நாட்டிற்கு மிகவும் தேவையானது இதுவே.
- முதலில் கீழ் பணியக் கற்றுக் கொள். பிறகு கட்டளை இடும் பதவி உனக்கு தானாகவே வந்து சேரும்.
- சுயநலமே ஒழுக்கக் கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுவே ஒழுக்கத் திற்கு நாம் கொடுக்கக் கூடிய ஒரே இலக்கணமாகும்.
- மணிக்கணக்கில் நிறையப் பேசுவதைக் காட்டிலும் குறைந்தளவு காரியங்களைச் செய்வது மேலானது.

-சுவாமி விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் சிலதுளிகள்

திலகவதி-சின்னத்தம்பி
கல்லடி, மட்டக்களப்பு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வங்கள் என மதித்துப் பூஜிக்கப்படும் இராமகிருஷ்ண சங்கத் துறவிகளின் வழியில் மட்டக்களப்பில் அவதரித்து தனக்கெனப் பெயர் சூட்டும் வகையில்,அதேவேளை துறவு வாழ்வில் இம்மியளவும் பிசகாது வாழ்ந்து காட்டிய துறவி சுவாமி ஜீவனாநந்தாஜீ. மக்கள் சேவையே மகேசன் சேவை என்பது அவரது கொள்கை. குருகுலமும் சீடர்களும் அவரது முழுமையான சொத்தும் உறவும், துறவு மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்த இவருக்கு உலகியல் வாழ்வில் ஏற்பட்ட தடைகளைத் தாண்ட சில இல்லற சீடர்களைத் தனக்கு உதவியாகப் பயன்படுத்தியதும் உண்மை. அவர்களில் ஒருவர் தான் எனது தந்தை பண்டிதர்.செ.பூபாலபிள்ளையும் ஆவார். சுவாமிஜீ தன் இளமைக் காலதுறவு வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினைகட்குத் தீர்வு எடுப்பதற்கு மட்டக்களப்பில் வாழ்ந்த பல இல்லற சீடர்களின் உதவியை நாடினார். நாடினார் என்பதை விட இல்லற பத்தர்களை தம்பால் ஈர்த்தார் என்பது சாலப் பொருந்தும்.

அவ்வாறு ஈர்க்கப்பட்ட நூற்றுக் கணக்கான குடும்பங்களும் எமது குடும்பமும் அடங்கும். ஏற்கனவே இராமகிருஷ்ண சங்கத்துடன் கல்விக்காக தொடர்பு கொண்டிருந்தஎன் தந்தைக்கு சுவாமி விபுலானந்தரின் வழிகாட்டலும் சுவாமி நடராஜானந்தாஜீயின் நட்பும் அவரை இராமகிருஷ்ண சங்கத்துடன் ஐக்கியப்பட வைத்தது. தன் குருநாதராம் சுவாமி விபுலானந்தர் கூறிய ஒவ்வொரு கூற்றையும் தன் வாழ்வில் இலக்கணமாக்கிக் கொண்டிருந்தார் என் தந்தை. தொடர்ந்து சுவாமி நடராஜானந்தர் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சங்கக் கிளைத் தலைவராகச் செயற்பட்ட காலத்தில் அவரின் ஈடுபாடு மேலும் நட்பு எனும் உரிமையுடன் மேம்படத் தொடங்கியது. இக்காலகட்டத்தில் தான் அமரத்துவம் அடைந்த சுவாமி ஜீவனாநந்தர் குருகுலத்தில் தன் பணியை ஆரம்பிக்க வந்துசேர்ந்தார். சுவாமி ஜீவனாநந்தா இளமைக் காலத்தில் சேவையை ஆரம்பித்தமையாலோ என்னவோ தன் பணியை மக்களிடமும் விஸ்தரிக்க விரும்பியிருந்தார். அதேவேளை தாம் கருமங்களிலீடுபடும் போது வயதாலும் அனுபத்தாலும் முதிர்ந்த பலரிடம் சங்கத்தின் வளர்ச்சிக்கான உதவியையும் பெற்றார். இதனால் இன்னும் பலர் இராமகிருஷ்ண மிஷன் சங்கத்தின் தொண்டர்களாக, ஆதரவாளர்களாக பெருகத் தொடங்கியிருந்தனர்.

அவ்வாறான தொண்டர்கள் வரிசையில் எம்மையும் நிறுத்திய பெருமை எமது தந்தையாரையே சாரும். சிறுவயதுமுதல் 'இறைவனை நீ நேரில் தேடிச் சென்று காண்பதைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை நேரில் கண்ட குருதேவரைபற்றிப் பிடி' எனும் உண்மையை ஊட்டி விட்ட என் தந்தையார் தன் இறுதிக்காலம் வரை இராமகிருஷ்ண சங்கத்துடன் வைத்திருந்த தொடர்பு இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது. 'ஒரு குழந்தை சிறுகம்பத்தைப் பற்றிக் கொண்டு சுழலும் போது அக்குழந்தைக்கு ஏற்படும் நம்பிக்கை போல குரு தேவரைப் பற்றிப் பிடித்துக் கொண்டு உலகியலை வெற்றியோடு காண்பாய்' எனஅவர் கூறும் வாக்கியத்தை நான் இன்றும் கடைப்பிடிக்கின்றேன்.

இராமகிருஷ்ண சங்கத் துறவிகள் மக்களுக்காகச் செய்யும் சேவைகளை விஸ்தரிக்கும் பாங்கே ஒரு தனி. அவ்வழியில் சுவாமி ஜீவனாநந்தாவின் மகத்தான சேவைகள் இன்றும் கல்லடி உப்போடையில் ஏன் கிழக்கு மாகாணத்திலேயே பல இடங்களில் அழியாத தடயங்களை ஏற்படுத்தியுள்ளன. விஷேடமாக கல்லடி-உப்போடையில் சுவாமிஜீயின் பணியை இவ்வூர் மக்கள் உள்ளளவும் நன்றியோடு நினைவு கூர்வர் என்பது அசைக்க முடியாத உண்மை.

சுவாமிஜீ கருமவீரன். அவரின் தலைமைத்துவக் காலத்தில் நானும் அரச உத்தியோ கத்தில் ஈடுபட்டிருந்தேன். அதிலும் அரச அதிபர், செயலாளர் போன்றோர் பணிபுரியும் மாவட்ட செயலகத்தில் பணிபுரிய எனக்கு கிடைத்த வாய்ப்பு இராமகிருஷ்ண சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைக்கு சில வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கிடைத்தமையை இன்றும் மகிழ்வுடன் நினைவு கூர்கின்றேன். சுவாமிஜீ என்னை அழைக்கும் போதெல்லாம் மறுக்காது உடன் அவ்விடத்திற்கு சென்று தேவையைப் புரிந்து கொண்டு செயற்பட்டேன். சுவாமிஜீ, 'நீங்கள் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் படையணிகள்' என்று கூறும் வார்த்தைகளை நான் விருப்புடன் உள்வாங்கிக் கொண்டு செயற்பட்டதை இன்று என்னால் உணர முடிகின்றது. இவ்விடத்தில் மடத்தின் தேவையை அறிந்து கேட்டபோதெல்லாம் மறுக்காது பல உதவிகளைப் புரிந்த திரு.சிவானந்தராஜா ஐயா, திருமதி.கலாவதி-பத்மராஜா, திருமதி. வாசுகி-அருள்ராஜா முதலிய பண்பாளர்களை அன்புடன் நினைவு கூர்வது என் கடமை யாகும்.

சுவாமி ஜீவனாநந்தாஜீ கட்டடங்கள் கட்டுவதில் சிற்பியாகவும், அன்னதானம் புரிவதில் சிவனின் பத்தினியாகவும் குருகுலத்துக் குழந்தைகட்குத் தாலாட்டும் தாயாகவும், அவர் கட்கு கல்வி புகட்டுவதில் கண்டிப்பான தந்தையாகவும் இருந்து செயற்பட்டதை நான் கண்டேன். அவரிடம் ஆசிபெறச் செல்லும் அடியார்களிடம் அவரே குழந்தையாக மாறித் தன் பிள்ளைச் செல்வங்களின் தேவைகளை ஆழ்ந்த கரிசனையுடன் கூறுவார். கேட்டோர் நெஞ்சை நெகிழவைக்கும் அவர் வார்த்தைகள் எப்படியாவது உதவத் தூண்டும். அவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்ட அத்தனை குழந்தைகளையும் பக்குவமாய் பேணிக் காத்தார். அவர்கள் தேவையை மிக உன்னிப்பாக அவதானித்து அவற்றை நிறைவு செய்யத் துடிக்கும் வார்த்தைகள் இன்றும் என் நினைவிலுள்ளன.

அவர் கல்விச் சேவை இராமகிருஷ்ண மிஷன் இல்லத்துடன் மட்டும் நின்று விட வில்லை. அன்னை சாரதையின் கொள்கைக்கமைய உலகில் உள்ள எல்லாப் பிள்ளைகளும் என் குழந்தைகளே, அவர்கள் எல்லோருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் எனும் தீராத தாகத்துடன் முதலில் கல்லடி-உப்போடையில் மாதர் சங்கத்தை அமைத்தார். சிறுவர் கட்கான முன்பள்ளியை விரிவுபடுத்தினார். தொடர்ந்து விவேகானந்தபுர மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை மேம்பாட்டுக்காக முன்பள்ளி, ஆலயம், வாசிகசாலை, வீடுகள் என அவர்களின் பல தேவைகளை நிறைவேற்றியமை அவரை ஒரு துறவியாகவோ, அல்லது தனி மனிதனாகவோ நினைக்கத் தோன்றவில்லை. அவர் ஓர் அவதார புருஷர், ஓர் நிறுவனம், பலசக்திகள் ஒருங்கே இணைக்கப்பட்டு பூவுலகுக்கு சேவை புரிவதற்காக அனுப்பட்ட மகாபுருஷர். இவ்வாறெல்லாம் சுவாமி ஜீவனாநந்தாவை வர்ணிப்பதற்கு ஆயிரம் ஆதாரங்கள் உள்ளன.

*'நல்லாரைக் காண்பதுவும் நன்றே- நலமிக்க*
*நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே*
*நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே*
*அவரோடு இணங்கியிருப்பதுவும் நன்றே'*

எனும் ஔவையாரின் வாக்குக்கிணங்க இராமகிருஷ்ண துறவிகளோடு இயைந்து செயற்பட்ட சேவைகள், என் பெற்றார் மூலம் எனக்கு ஊட்டப்பட்டு, ஆன்மபலம் பெற்றேன். இது சந்ததி சந்ததியாகத் தொடரும், அதன் மூலம் ஆன்மீகபலத்தையும், சாந்தியையும் பெறமுடியும் என்பது உண்மையே.

*'அலைமீது அலையாக துயர்வந்த போதும் -நீ அஞ்சாதே'*

எனும் குருதேவரின் அபயக்குரல் ஒலித்துக் கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத மகாபுருஷர்

*லயன்.க.பாஸ்கரன்*
*உபதலைவர்*
*மட்/சிவானந்தாவிளையாட்டுக் கழகம்*

சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் அவர்கள் காலத்தால் அழியாத வரலாறு படைத்த ஒரு உன்னதமான மகா துறவி. சுவாமிஜீயிடம் பல சிறப்பான குணாதிசயங்கள் இயல்பாகவே அமையப்பெற்றிருந்தன. அன்பு கலந்த அரவணைப்பு, துணிவு, பரிவு, திட்டமிடல், செயற் திறன், பக்தி, திறமையைப் பாராட்டுதல், புத்திமதி கூறும் ஊக்குவிப்பு இப்படி பல பாராட்டத்தக்க சிறப்பானபண்புகளைத் தன்னகத்தே கொண்ட மகாபுருஷர்.

இவர் சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலப்பகுதியிலும், குருகுலத்தில் வாழ்ந்த காலப் பகுதியிலும் சுவாமி நடராஜானந்தஜீ மகராஜ் அவர்களை தனது முதலாவது ஆன்மீக குருவாக மிகுந்த பக்தியுடன் ஏற்றுக் கொண்டவர். அத்தோடு இவர் மகாசமாதி யடையும் வரைக்கும் தனக்கு கற்பித்த ஆசிரியர்களை குறிப்பாக, அமரர் அம்பலவாணர், அமரர் கணபதிப்பிள்ளை, அமரர் கந்தசாமி போன்றோரை மிகுந்த மரியாதையுடன் 'சேர்' என்றே தனது துறவு நிலையிலும் விழிப்பார்.

சுவாமி நடராஜானந்தஜீ அவர்களின் மகாசமாதிக்குப் பின்னர் இராமகிருஷ்ண மிஷன் தலைவராக கடமையேற்று குருகுல மாணவர்களுக்கான ஒரு நிரந்தர விடுதியை அமைக்கும் பாரிய செயற்பாட்டை ஆரம்பித்து நிறைவேற்றினார். அதே போல் குருகுல மாணவிகளுக்கான ஒரு நிரந்தர விடுதியை அமைத்து ஆனைப்பந்தி பெண்கள் பாட சாலையில் இயங்கி வந்த பெண்கள் குருகுலத்தை ஸ்ரீ சாரதா விடுதிக்கு மாற்றினார். அத்தோடு காரைதீவு விடுதியையும் சிறப்பாக நிர்வகித்து வந்தார். சுவாமி நடராஜானந்தஜீ அவர்களால் செய்கை பண்ணப்பட்ட உறுகாமம் வயலையும் தொடர்ந்து அமரர் சிவயோகன் போன்றோர்களின் அர்ப்பணிப்பான சேவை மூலம் நிர்வகித்து வரலானார். சிலகாலம் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் தலைவராக நியமனம் பெற்ற பின்னர் வெள்ளவத்தைமிஷன் விடுதியை புனரமைப்புச் செய்தார்.

சுவாமிஜீ அவர்கள் அழைக்கப்படும் சகல நிகழ்ச்சிகளிலும் மகிழ்வோடு கலந்து ஆசி யுரை வழங்குவார். சிவானந்தா வித்தியாலயத்தில் இடம்பெறும் வருடாந்த பரிசளிப்புவிழா, இல்ல விளையாட்டுபோட்டி, பழையமாணவர் ஒன்றுகூடல், போன்ற நிகழ்ச்சிகளிலும் மனமகிழ்வுடன் கலந்து சிறப்பிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறமத ஸ்தாபனங்களும், மதத் தலைவர்களும் சுவாமி மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தனர். குறிப்பாக திருமலை-மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் பல பொதுவிடயங் களை சுவாமிஜீ உடன் கலந்தாலோசிக்கத் தவறுவதில்லை. இருவருக்கும் இறுக்கமான ஒருங்கிணைப்பு எப்போதும் இருந்து வந்தது.

சுவாமிஜீ அவர்கள் சமூக சேவையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல வகைகளில் பல உதவிகளை வழங்கியதோடு அவர்களுக் கென ஒரு வீட்டுத்திட்டத்தையும் ஆரம்பித்து உதவினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக மட்டக்களப்பில் ஒரு புகழ்பூத்த செல்வகுடும்பத்தில் செல்வ நிலைகளைத் துறந்து துறவறத்தை அரவணைத்து ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ச ரின் பாதங்களைப் பற்றி புனித ஆன்மீக சேவைகளுக்காகத் தன்னைஅர்ப்பணித்த ஒரு மாபெரும் துறவி.

சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் அவர்களின் நாமமும் சேவையும் காலத்தால் அழியாது நீடித்து நிலைத்து நிற்கப்பிரார்த்திக்கின்றோம்.

- தான் கேட்பதைத் தருவார்கள் என்ற உறுதியுடன் அல்லவா ஒரு குழந்தை தன் தாய் தந்தையிடம் கேட்கிறது, அதுபோல உங்களுக்குத் தேவையானவற்றை இறைவனிடம் கேளுங்கள்.
- கள்ளம் கபடமற்ற உள்ளத்துடன் இறைவனிடம் பிரார்த்தனை செய், அந்தப் பிரார்த்தனையை இறைவன் கேட்பான்.
- நீ எங்கிருந்து எச்செயலைச் செய்தாலும் மனதை மட்டும் சதா சர்வ காலமும் தெய்வத்தின் திருவடியில் வைத்திரு.

-பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலமற்ற சேவையால் உயர்ந்த சுவாமி ஜீவனாநந்தர்

*கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை*
*முன்னாள் பல்கலைக்கழக விரிவுரையாளர்*

தன்னலமற்ற சேவையே தனது வாழ்க்கையாகக் கொண்டிருந்த சுவாமி ஜீவனாநந்தா அவர்கள் சிவானந்தா வித்தியாலயத்தில் ஆங்கிலமூலம் கல்வி கற்றார். அந்தக் கால கட்டத்தில் நானும் அங்கு கல்வி கற்றேன். சுவாமியினுடைய இயற்பெயர் சீவரெத்தினம். எனக்கு இரண்டு வகுப்புக்கள் முந்தியிருந்தார். நாங்கள் வித்தியாலய விடுதியில் இருந்தே படித்தோம். சீவரெத்தினம் வலையறவைச் சேர்ந்த வாரித்தம்பி போடியாரின் மகன். வாரித்தம்பி போடியார் பெயர்போன விவசாயி. அந்த ஊர் மக்களுக்கு ஓர் முன் மாதிரியாக விளங்கியவர். நிறைய நெல் உற்பத்தி செய்து பலருக்கும் வாரி வழங்கியவர். நாங்கள் சிவானந்தா வித்தியாலயத்தில் படிக்கும் போது இரண்டாவது உலக மகா யுத்தம் நடந்து முடிவுற்றது. அப்போது இலங்கை எங்கும் உணவுத் தட்டுப்பாடு. விடுதியில் இருந்தவர்கள் சிலர் விவசாயக் குடும்பத்தில் இருந்ததால் விடுதிக்கு அரிசி கொண்டு வந்து கொடுத்தல் வேண்டும். இதற்கு அரச அதிபர் உத்தரவு பெறவேண்டும். சீவரெத்தினம் அவர்களும் உத்தரவு பெற்று விடுதிக்கு அரிசி கொண்டு வருவார். கன்னங்குடாவைச் சேர்ந்த அன்ன கேசரி, களுதாவளையைச் சேர்ந்த வேதநாயகம், மண்டூரைச் சேர்ந்த என் போன்ற பலர் விடுதிக்கு அரிசி கொண்டு வந்து கொடுத்தோம். அரிசி போதாததால் ஒருநேரம் தான் சோறு; மற்றைய நேரங்களில் பாண், வத்தாளைக் கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு போன்ற வற்றை உண்போம். வார இறுதியில் சீவரெத்தினம், அன்னகேசரி போன்றோர் தமது கிராமத்திற்குச் சென்று ஞாயிற்றுக் கிழமை வரும் போது பெரிய சோற்றுப் பொதியோடு வருவர். சோற்றுப் பொதியை விடுதியில் உள்ளவர்கள் பகிர்ந்து உண்போம். வார நடுப்பகுதியிலும் வலையிறவிலிருந்து சோற்றுப் பொதி வரும். சிலவேளைகளில் தயிர்ப் பானையும் வரும். இவ்வாறு பாடசாலையில் படிக்கும் போதே பலருக்கு உணவு கொடுக்கும் மனப்பாங்கோடு வளர்ந்தவர் சீவரெத்தினம் அவர்கள்.

நாங்கள் விடுதியில் இருக்கும்போது குழுக்குழுவாக கோயில் கட்டி விளையாடுவ துண்டு. அப்போது சீவரெத்தினம் அவர்களும் கோயில் கட்டி விளையாடும் ஒரு குழுவுக்கு தலைவராக இருந்து சிறப்பாக திருவிழா நடத்துவார். சிவானந்த வித்தியாலயத்தில் படிக்கும் போது சுவாமி விபுலானந்தர், சுவாமி நிஸ்கமானந்தர் ஆகியோரின் வழிகாட்டலில் வளர்ந்தோம். அதனால் பல சிறந்த பண்புகள் மாணவரிடம் விருத்தி செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு கற்று வெளியேறியவர்கள் பரந்தமனப்பான்மையோடுடு; சமூகத்துக்கு சேவை செய்யும் மனப்பான்மையோடுடு; வாழ்ந்தனர்.

சிவானந்தா வித்தியாலயத்தில் கல்வியை முடித்து வெளியேறிய சீவரெத்தினம் ஆங்கில ஆசிரியராக பதவியேற்றார். இக்காலத்திலே தான் அவரது வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. தொழிலை விட்டு துறவியாக மாறவிரும்பினார். அப்போது சிவானந்தா வித்தியாலயத்தின் அதிபராக இருந்த திரு. ச.அம்பலவாணரிடம் இவர் தனது முடிவு தொடர்பாக ஆலோசனை கேட்டதாகவும் கூறப்பட்டது.

இராமகிருஷ்ண சங்கத்தில் துறவியாகிய இவர் ஆரம்பநிலையில் சைதன்யராக இருந்து சுவாமியாகி ஜீவனாநந்தா என்னும் நாமத்தோடு தொண்டாற்றும் பணியில் இணைந்தார். மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்க கிளையை இவர் பொறுப்பேற்ற காலம் இச்சங்கம் கல்வி நிலையங்களை நடத்தும் பணியைவிட்டு சமூகசேவையில் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டிய பணிகளைச் செய்து மேலும் இப் பணியை விரிவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இங்கே தான் ஜீவனாநந்தாவின் ஆளுமை பிரகாசித்தது. மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்கக் கிளை பல துறைகளிலும் விரிவாக்கப்பட்டு வியக்கத் தக்க நிலையமாக பிரகாசிக்கத் தொடங்கியது. எதையும் அழகாக அமைக்கலாம். விவசாயத்தை விருத்தி செய்யலாம். எளிய வாழ்க்கை தான் நிம்மதியைக் கொடுக்கவல்லது. பிறருக்கு உதவுவதே செய்யக்கூடிய சிறந்தபணி போன்ற இலட்சியங்களோடு வாழ்ந்து காட்டிய சுவாமி ஒரு சிறந்த செயல் செம்மல். இவரது வாழ்க்கை எமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையுடன் வாழ்ந்தேன்

தங்கவடிவேல்
*இ.கி.குருகுலப் பழையமாணவன்*

நான் மூன்றுமாதக் குழந்தையாக இருக்கும்போது தந்தையை இழந்து விட்டேன் எனினும் ஐந்து வயதில் இருந்து சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் எமது தந்தையின் ஸ்தானத்தில் இருந்து என்னை வழி நடத்தினார். அவர் மகாசமாதியடையும் வரைக்கும் அவர் எனது தத்தையையே. அவருடன் வாழ்ந்த நாட்களில் சிலவற்றை தம்பிமார்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

நம்ம மிஷனின் பெண்கள் இல்லத்தில் இருந்து கோமதி எனும் ஈச்சிலம்பற்றுபிள்ளை கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி 2ம் வருடத்தில் விடுதி வசதியில்லாத போது என்னை அழைத்து எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை ஒரு வீடு ஒழுங்கு செய்து கொடுக்குமாறு தெரிவித்தார். நானும் முடிந்த வசதியுடன் வளாகத்திற்கு பக்கத்தில் ஏற்பாடு செய்து கொடுத்தேன். அவர் வசதிகளை கேட்டறிந்து, நம்ம மிஷனில் இருந்து ஒரு மேசையும், கதிரையும் கொண்டு கொடுக்குமாறு சொன்னார். செலவைக் குறைப் பதற்காக பல்கலைக்கழக வாகனம் மட்டக்களப்பிற்கு வரும் போது நானும் அதிலே இந்த கதிரை மேசைகளை ஏற்றினேன். அப்போது சுவாமிஜீ வந்து மேசையை அசைத்துப் பார்த்து கதிரையின் பொருத்துக்கள் சரியா இல்லாவிட்டால் இருந்து படிக்கும் போது வசதியிராது இது பரவாயில்லை என்றாலும் இந்த கதிரையை மாற்று அத்துடன் இரவில் எல்லாம் திடீர் திடீர் என்று வெளிச்சம் நிற்கின்றது. அதனால் ஒரு அரிக்கன் லாம்பும், மண் ணெண்ணை ஒரு கலனும் ஸ்ரோரில் எடுத்து கலன் நிறைவாக எண்ணெய்யும் வாங்கிக் கொடு என்றார். படிக்கும் பிள்ளையை சுவாமி எப்படியான இடத்தில் வைத்துள்ளார். ஒரு தந்தை கூட இந்தளவிற்கு சிந்திப்பாரா என எனது மனம் பூரித்துப்போய் விட்டது.

1984இல் சுவாமிஜீ பம்பலப்பிட்டி பென்ரிஸ் எனும் தனியார் வைத்தியசாலையில் பிரித்தானியாவில் வசிக்கும் ஒரு அம்மாவின் நிதி உதவியுடன் கண் அறுவை சிகிச்சை செய்தார். ஒருவாரம் அங்கு தங்கியிருந்தார். அப்போது B.M.V. பத்மநாதன் அண்ணன் பகலும் நான் இரவிலும் சுவாமிக்கு உதவியாக இருந்து கவனித்தோம். கொழும்பு மிஷனில் இருந்து வழக்கமாக சாப்பாடு வருவது வழக்கம் . ஒருநாள் இரவு முருகேசு ஐயாவிடம் (மிஷனுடன் மிகவும் நெருக்கமானவர்) அங்கிருந்து வரும் போது சாப்பாட்டை வழியில் கொடுத்துவிட்டு வீட்டிற்கு போகுமாறு சுவாமி பிறேமாத்மானந்தாஜீ சொல்லியிருக்கிறார் அதன்படி அவர் இரவு உணவை வைத்தியசாலையில் தந்துவிட்டு சென்று விட்டார். இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.30 மணியளவில் சாப்பாடு சுவாமிஜீக்கு பரிமாறுவதற்கு திறந்து பார்த்த வேளை சுவாமி சாப்பிடும் உணவுத்தட்டம் அதனுள் வழக்கத்தில் வருவது அன்று இல்லை. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சுவாமிஜீ என்ன தடுமாறுகிறாய் சாப் பாட்டை எடன் நமக்குத் தான் என்ன வேலை சாப்பிட்டுவிட்டு தூங்குவோம், குருதேவர் இன்னும் எத்தனை நாட்களுக்கு தான் இப்படி நம்மை கட்டிப் போடப் போகிறாரோ தெரியவில்லை. எனக்காதில் ஒலிக்கிறது. நான் செய்வதறியாது நின்றேன். அதன்பின் விடயத்தைக் கூறினேன். ஆ.. இதற்குத்தானா இப்படி யோசிக்கிறாய் உன்ர பிளேட்டைஎடு சாப்பிடலாம். அதன் பிறகு நீ சாப்பிடு. சுவாமி இது வைத்தியசாலைப் பிளேட்டில் நான் சாப்பிடுகிறேன். அதற்கு சுவாமி சொன்னார் இதிலும் மனிஷன் தானே சாப்பிடுகிறான். நானும் ஒரு சாதாரண மனிதன் தானே, ஒரு துறவிக்கு இது தான் வேண்டும் என்று இல்லை. எப்படி கஷ்டமான நிலையிலும் வாழ பழகிக் கொள்ள வேண்டும் இது தான் சன்னியாசம். அப்போது நான் சுவாமியிடம் அனுமதி கேட்டேன் பக்கத்தில் ஒருகடையில் சிறிதான குறைந்த விலையில் ஒரு பிளேட் வாங்கிவாறன் என்று சுவாமி மறுத்துவிட்டு என்னுடைய வைத்தியசாலைப் பிளேட்டில் இரவு சாப்பிட்டார்.

1990இல் பிறகுநடேசன் உறுகாமம் வயலில் வேலை செய்கிறார். சுவாமிக்கு தகவல் வருகிறது. நடேசன் மிக சுகமில்லாத நிலையில் வயலில் உள்ளான். நீங்கள் வந்து பாருங்கள் என்று. அதே வேளை சுவாமிஜீயும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அன்று உடன் எனக்கு தகவல் வைத்தியசாலை தொலைபேசியிலே கதைக்கின்றார் 'தம்பி தங்கவடிவேல் எப்படியாவது நம்ம நடேசனை எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை போய் அழைத்து வந்து வைத்தியசாலையில் அனுமதியுங்கள் அவன் இன்று இங்கே வரவில்லை என்றால் எனக்கு என்னாகுமோ தெரியாது அவன் விடயத்தில் அவ்வளவு கவலையாக இருக்கிறது. நாம பார்க்காட்டால் அவனை யார் பார்ப்பா பிளிஸ் போ' man என்றார். ஒவ்வொருவர் மேலும் சுவாமியின் பாசம் வியப்பிற்குரியது. நான் அழைத்து வந்த நடேசனை அதன் பிறகு உறுகாமம் வயலுக்குப் போக சுவாமி விடவில்லை ஏன் பிரச்சினை யின் உச்சமான காலம் என்பதால்.

சுவாமி நிதிசேகரிக்க ஈடுபடும் போது அநேகமாக மிகக்குறைந்த பணம் தருபவர்களை பெரிதும் மதித்தார். 1/-ரூபா தருகிறான் என்றால் அது நமக்கு பெரிது அவன் அன்றாட தேவையை ஒழித்து இந்த புண்ணிய கைங்கரியத்தில் குருதேவரின் பெயரால் தாமும் கலக்க விரும்புகிறான். அதைத்தான் கண்டிப்பாக பெறவேண்டும். நீ கடைசி வரைக்கும் 1/- ரூபா இல்லை 50 சதம் என்றாலும் இந்த நிதிசேகரிப்பை கைவிடாமல் செய்ய வேண்டும் சுவாமி எனக்கு தெரிவித்தகட்டளையை இன்று கூட முடிந்தளவு செய்து கொண்டே இருக்கிறேன்.

இதே போன்று பல்கலைக்கழகத்திலும் மாதாந்தம் நிதி சேகரிப்பில் ஈடுபட்டேன். 1985இல் சுவாமியிடம் சொன்னேன். பல்கலைக்கழகத்தில் ஏதோ முடிந்தளவு அங்கே வேலை செய்பவர்களிடம் இருந்து உதவி பெறுகின்றோம் எகட் நிறுவனம் 500/- வீதம் பத்து பேருக்கு மாதாந்தம் உதவி செய்கின்றனர். நாங்களும் ஒரு, இரண்டு, மூன்று பிள்ளைகளுக்கு உதவினால் என்ன சுவாமி என்று கேட்டேன், உடனே சுவாமி கொழும்பு மிஷனுடன் தொடர்பு கொண்டு முகாமைத்துவ குழுவிற்கு இந்த வேண்டுகோளை முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து ஐந்து பிள்ளைகள் அளவில் மாதாந்தம் 1000/- உதவி புரிவதற்கு முன்வந்தார். அப்போது ஐந்தாக தொடங்கிய உதவி பெறுபவர்கள் இப்போது நூற்றைத் தாண்டி நிற்கின்றது. இந்த ஒழுங்கு முறை நடைமுறைக்கு வருவதற்கு முதலிலேயே சுவாமி ராம்தாஸ் பவுண்டேசன் எனும் அறக்கட்டளையினருடன் தொடர்புகொண்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி உதவி நல்குமாறு வேண்டுகோளை முன்வைத்து உடனடித்திட்டத்தை அமுல் படுத்தினார். இரண்டொரு மாதத்தின் பிறகு மிஷன் முகாமைத்துவ குழு இவ்வுதவித்திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்தது. சுவாமி நல்ல விடயங்களை உடன் நடைமுறைப் படுத்துவதில் வல்லவர்.

மற்றது சுவாமியிடம் மிஷன் பிள்ளைகளை அனாதைகள் என்று யார் கதைத்தாலும் கொதித்தெழுவார். எத்தனையோ சுவாமிமார்கள், மிஷனில் இருக்கும் வரையில், ஏன் அநாதைகளென்று கதைக்கிற நீங்கள் தான் அநாதைகள் எனச் சொல்லுவார்.

சுவாமிஜீ தன்னுடைய வாழ்நாளில் முன்னெடுத்த பல திட்டங்கள் முழுமையாகப் பயன் கண்டன. அவற்றுள் சுவாமியின் இறுதிக் கட்டத்தில் சுனாமி வேலைத்திட்டமும் வீடமைப்புத் திட்டத்திற்குமாக தம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் போது நானும் மூன்று மாதகாலம் பல்கலைக்கழகத்தில் விடுமுறை எடுத்துக் கொண்டு சுவாமியுடன் மிகநெருக்கமாக பழக நேரிட்ட போது அவர் பிறரிடம் வைத்துள்ள பாசத்தையும் அக்கறையையும் மேலும் ஆழமாக உணர்ந்திட முடிந்தது. அதை வார்த்தை வடிவில் உங்களுடன் பகிர்ந்துகொள்ள முடியாதுள்ளது. அவர் எனக்கு சுவாமி இல்லை குருதேவர் என்றே சொல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அறிந்த சுவாமிகள்

*க. நமசிவாயம்*
*இ.கி. குருகுல பழையமாணவன்*

ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தஜீ மஹராஜ் அவர்களால் சிவானந்த வித்தியாலயம்,அதைத் தொடர்ந்து 1926ம் ஆண்டு ஜீன் மாதம் 6ம் திகதி இராமகிருஷ்ண மிஷன் குருகுலம் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இது காலவரை எமது குருகுலத்தில் கல்வி கற்று பயன் பெற்றவர்கள் நம் நாட்டிலும் வெளிநாடுகளிலும் நல்ல நிலையில் உள்ளனர். சுவாமி விபுலானந்தரின் பின் பல துறவிப் பெருமக்களின் அயராத அர்ப்பணிப்புடனான சேவை யின் பயனாக இராமகிருஷ்ண மிஷன் குருகுலம் தனது பணியில் வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இவர்களில் எமக்கு (எனக்கு) நன்கறிந்த சுவாமி நடராஜானந்தர், சுவாமி ஔவையானந்தர், சுவாமி ஜீவனாநந்தர்,சுவாமி அஜராத்மானந்தர் ஆகியோரைக் குறிப் பிடலாம். சுவாமி விபுலானந்தரை நான் நேரில் பார்த்ததில்லை. ஆனால் இங்கு குறிப்பிட்ட ஏனைய சுவாமிகளின் அன்பையும் ஆசியையும் ஆசீர்வாதத்தையும் பெற்ற இலட்சக் கணக்கானவர்களில் நானும் ஒருவன் எனக் கூறிக் கொள்வதில் பெருமையடைகின்றேன். மேலும் குருகுலத்தில் இருந்த காலத்திலும்,பின்பும்,காலத்திற்கு காலம் இங்கு வருகை தந்த பல துறவிகளின் ஆசிர்வாதத்தையும் பெற்றுள்ளேன்.

ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாஜீ (1966ம் ஆண்டு) மட்டக்களப்புக்கு வந்து கல்லடிச் சந்தியிலிருந்து ஊர்வலமாக இல்லத்துக்கு அழைத்து வரப்பட்ட வேளை தொடங்கி அவர் மகாசமாதி அடைந்த பின்னர் (2006ம் அண்டு) அன்னாரின் இறுதி ஊர்வலம், கிரியைகளில் கலந்து கொண்டவன் என்ற வகையில் (40 ஆண்டுகள்) அன்னாரை எம்மால் மறக்க முடியால் உள்ளது. அவர் வாழ்ந்த காலத்தில் நானும் வாழ்ந்தேன்,அவரின் சேவையில் நானும் சிறிதளவு உதவினேன் என்ற நல்ல எண்ணத்தோடு வாழ்ந்து கொண்டிருப்பேன்.

ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தஜீயின் மகாசமாதியின் பின் எமது சுவாமிகள் (சுவாமி ஜீவனாநந்தஜீ) 03 இல்லங்களின் நிர்வாகப் பொறுப்பைப் பெற்றார். முதல் முயற்சியாக இல்லங்களின் பராமரிப்பிற்கான நிதியினை வீடுவீடாக, கடைகடையாக பல கிராமங்களுக்கு சென்று வசூலித்தார். அவருடன் நானும் பல இடங்களுக்கும் சென்றுவந்தேன். இந்த வேளையில் 1968ம் ஆண்டு மாணவரில்லத்திற்கு புதுக்கட்டடம் அமைக்க திருவருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடி வந்தது. 1972ம் ஆண்டு இல்லத்திறப்பு விழா மிகவும் விமரிசையாக நடைபெற்றது. எல்லோருக்கும் பலபல கடமைகள். எனக்கும் அன்று வரும் அனைவரையும் வரவேற்கும் பணி.

அன்றைய காலகட்டத்தில் மட்டக்களப்பில் கடமை புரிந்த அரச உயரதிகாரிகள் (அரசஅதிபர், உதவிஅரசஅதிபர், பொலிஸ் அதிகாரி, தபால் அதிபர், பொறியியலாளர்கள்) கொழும்பிலும் வெளிநாடுகளில் இருந்துவரும் VIP களையும் இல்லத்திற்கு அழைத்து வரத்தவறுவதில்லை. இதன் பயனாக மட்டக்களப்பில் பார்க்கக்கூடிய இடமாக எமது இல்லம் முதன்மையானது என்று கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றேன். இன்று வரை இது கடைப்பிடிக்கப்படுகின்றது.

அன்று அரசாங்க அதிபராகவிருந்த திரு.பிரட்மன் வீரக்கோன் அவர்களின் உதவியினால் உறுகாமம் விவசாயப்பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முன்னோடியாக திரு. க. குணநாயகம்.eng, திரு. S. அழகானந்தன், நீர்ப்பாசனப் பொறியியலாளர், திரு.முத்தையா DFO ஆகியோர் உறுதுணை புரிந்தனர். அந்நாட்களில் அன்பன் நடராசன், (ஓய்வுபெற்ற) அதிபர் சுவாமிகளுக்கு வலக்கரமாக இருந்து கட்டடம், வயல், நிதி வசூல் ஆகியவற்றில் பங்குகொண்டு எமது இல்ல மேம்பாட்டிற்காக உழைத்தார் என்றால் அது மிகையாகாது. மிகவும் கடமை உணர்வோடு சேவை புரிந்தவர். அவரின் இறுதிக்காலம் சுவாமிகளுடன் வாழ்ந்து இறையடி சேர்ந்தார்.

இராமகிருஷ்ணபுரம் மாணவரில்லத்தைத் தொடர்ந்து ஆனைப்பந்தி மற்றும் காரைதீவு போன்ற இடங்களில் சிறுமிகளுக்கான புதிய இல்லங்கள் அமைக்கப்பட்டன. சுவாமிகளின் சேவையை உணர்ந்த அன்பர்கள் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் உதவினார்கள். அதன் பயனாக இவ்வில்லங்களை குறித்த காலத்துள் கட்டிமுடிக்கக் கூடியதாகவிருந்தது. இதனைவிட அக்கரைப்பற்றிலும், கல்லடியில் விவேகானந்தபுரம் ஆகிய இடங்களிலும் வீடமைப்புத் திட்டங்கள் (வீடுகள், கோவில், பாலர்பாடசாலை, பொதுக்கிணறு) அன்னாரின் சேவைகளை இன்றும் நினைவு கூரும்.

சுவாமிகளின் நற்பணிகளில் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். பாடசாலை களில் படிக்கும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அதிபர்களின் சிபாரிசின்படி சீருடையும், கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் சர்வகலாசாலையில் பயிலும் வறியமாணவர்களுக்கு மாதாந்த நன்கொடை வழங்கினார். காலத்துக்குக் காலம் நாட்டில் ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலைகளில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வேண்டிய நிவாரணப் பொருட்களை தாமே நேரில் சென்று வழங்கினார். 1978ம் ஆண்டு சூறாவளியினாலும், 2004ம் ஆண்டு சுனாமியாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனமத பேதமின்றி பெருமளவு உதவிகளைச் செய்தார். சுனாமியால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவி புரிவதற்காக வேலூர் மடத்துடன் தொடர்பு கொண்டு ஸ்ரீமத் சுவாமி ஞானமயானந்தஜீயை மட்டக்களப்புக்கு வரவழைத்தார். சுனாமியால் பாதிப்புற்ற சீலா முனை,பெரியஉப்போடை, சின்னஉப்போடை, புதுமுகத்துவாரம், கல்லடி, வேலூர் போன்ற இடங்களில் 118 வீடுகளை புதிதாக கட்டி பயனாளிகளுக்கு வழங்கினார்.

சுவாமிகள் கடைசிக் காலத்தில் வயது முதிர்ந்தாலும் தன் கடமைகளை தானே செய்து வந்தார். இல்லத்தில் அவருக்கு உறுதுணையாக சுவாமி அஜராத்மானந்தஜீ சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்பாஷானந்தஜீ, சுவாமி ஞானமயானந்தஜீ ஆகியோர் இருந்தனர். இவர்களுடன் திரு.பத்மநாதன் ஐயாவின் உதவி சொல்லில் அடங்காது. எள் என்று சொன்னால் எண் ணையுடன் நிற்கும் ஒரு பெருந்தகை. எல்லாரையும் 'சேர்' என்றும் 'அம்மா' என்றும் மரியாதையுடன் கவனிப்பவர். விருந்தினர்கள், அவர்கள் யாராகவிருந்தாலும் முறையாக உபசரிப்பார். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொடர்பு கொண்டு இல்லத்திற்கு உதவி பெற்றார். அவரை இந்த வேளையில் நன்றியுடன் பார்க்கின்றேன்.

சுனாமி நடந்த இரு தினங்களின் பின்பு தான் நான் சுவாமிகளை சந்திக்கக் கூடியதாக விருந்தது. அவர்மிகவும் கவலையுடன் காணப்பட்டார். அவர் முன்போல் சுகதேகியாக இல்லை. மருந்து மாத்திரைகளுடன் கையில் ஊன்றுகோலுடன் வாழ்ந்தநேரம். என்ன நடந்தது? எனக் கேட்டபோது, அவர் கூறியதை இங்கு தருகிறேன். 'கடல் வருது என்று பையன்கள் கூச்சலிட்டவாறு வந்தார்கள். நான் ஊன்றுகோல் கூட எடுக்காமல் தட்டுத் தடுமாறி பின்வளவுக்குள் சென்றுகொண்டிருந்தேன். அப்போது கரிய நிறத்தில் நீர்வருவது தெரிந்தது. நான் குருதேவரை மனதில் நிறுத்தி ஐயனே 1978ல் சூறாவளி தாக்கியதில் மிகவும் கஷ்டப்பட்டுப் போனோம். இப்போது கடல் வருது இந்த இக்கட்டான நிலையி லிருந்து தாங்கள் தான் எம்மைக் காப்பாற்றும் ஐயா' என்று சற்றுநேரம் கண்களை மூடி வேண்டினேன். நான் பிரார்த்தனை செய்வதற்காகவோ அன்றி நீரின் வேகம் குறைந்த தாகவோ தெரியவில்லை. ஆனால் நீர் (கடல்) அதற்குமேல் வரவில்லை. எல்லாம் குருதேவரின் திருவருள்.

சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் பல சமய சமூக நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தார். அவரின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் யாவும் சிறப்புடன் முற்றுப்பெற்றன. சுவாமிகளை 'கைராசி' உள்ளவர் எனபல பொதுமக்களும், நிறுவனங்களும் நினைவு கூர்வதை யாவரும் அறிவர்.

இராமாயணத்தில் ஸ்ரீராமபிரானில் கொண்ட அதீதபக்தியினால் ஸ்ரீஹனுமனால் பல செயற்கரிய செயல்களை செய்யக்கூடியதாகவிருந்தது. நமது சுவாமிகள் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சதேவர்மேல் என்றும் நினைவினை வைத்திருந்தார். அவர் மகாசமாதியடையும் வரை அவ்வாறே இருந்தார். சுவாமி விவேகானந்தர் கூறியதுபோல் 'ஜீவசேவையே சிவபூஜை' என்பதற்கமைய தனக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்த ஒரு கர்மவீரர் என்றால் மிகையாகாது. அவர் அடிக்கடி என்னிடம் 'நல்லதைச்செய் நன்மை கிடைக்கும். உடன் கிடைக்காவிட்டாலும் கொஞ்சம் தாமதித்தாவதுகிடைக்கும்' என்று கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவனாநந்தாஜீ கல்லடி உப்போடையின் கலங்கரை விளக்கம்

*திலகவதி ஹரிதாஸ்*
*அதிபர்,*
*மட்/விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம்*

ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ் அவர்கள் மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பில் வலையறவிலே அவதரித்து மட்/சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி பயின்று இந்தியா விலே சந்நியாசியாகி மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனிலே தனது அரும்பெரும் சேவையை ஆற்றி இங்கேயே சமாதி அடைந்த உத்தமர் ஆவார். இவர் 81 வயதிலே சமாதி அடைந்தாலும் தமது வயதில் 39 ஆண்டுகள் கல்லடி உப்போடையிலே கழித் துள்ளார். எனவே கல்லடி உப்போடையில் பின்னிப்பிணைந்து இருந்து கலங்கரை விளக்க மாகவும் மிளிர்ந்தார் எனில் மிகையாகாது.

கல்லடி உப்போடைப் பிரதேசமானது மட்டக்களப்பு மாவட்டத்தின் மைல்கல் என்றே கூறலாம். ஏனெனில் இது இயற்கை சூழலும், ஆன்மீக சூழலும், அறிவுச்சூழலும் ஒன்றாய் இணைந்த ஒரு பிரதேசமாகும். கிழக்கே வங்கக் கடலும் மேற்கே மட்டக்களப்பு வாவியும் இதன் அழகை மேலும் மெருகூட்டுகின்றன. கல்லடி உப்போடையின் முத்தாக கண் முன்னே காட்சியளிப்பது இராமகிருஷ்ண மிஷனாகும். இராமகிருஷ்ண மிஷனுக்கு இப்புதிய கட்டடத்தை அமைத்த கர்த்தா சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜேதான். இவர் சந்நியாசியாகி இருந்த காலப்பகுதியில் தான் இராமகிருஷ்ண மிஷனின் குருகுலக் கட்டடம் ஆல்போல் தளைத்து விஸ்தீரணமானது. சுவாமிகள் கட்டடக்கலையில் வல்லவராகவே திகழ்ந்தார். அது மாத்திர மல்லாது கல்லடி உப்போடை பிரதேசமானது சிவானந்த தேசிய பாடசாலையையும், மட்/விவேகானந்தா மகளீர் வித்தியாலயத்தையும், விபுலானந்தா மணிமண்டபத்தையும், சனசமூக நிலையத்தையும், இராமகிருஷ்ண மிஷன் குடும்ப சுகாதார நிலையத்தையும், விபுலானந்தர் சமாதியையும் மட்டக்களப்பு மாவட் டத்திலே ஆகமமுறைப்படி அமைக்கப் பட்ட ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தையும், புகழ் மிகு ஸ்ரீபேச்சி அம்மன் ஆலயத்தையும், ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தையும், தீர்த்தக் குளத்தையும் வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்தையும், கலியாணமண்டபத்தையும் கொண்ட பிரதேசமாகக் காணப்படுகிறது. இங்கு முக்கிய வரலாற்றுப் பெருமைக்குரிய சின்னங்களாக காணப்படும் மேற்குறிப்பிட்ட அனைத்தும் ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ் அவர்களின் பாதாரவிந்தங்கள் பட்டு ஆசி கூறப்பட்ட இடங்களாகும். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவனாநந்தாவைக் கல்லடி உப்போடையின் கலங்கரை விளக்கமாக அழைப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

சிவானந்த வித்தியாலயத்தின் எந்த நிகழ்வாக இருந்தாலும் ஆரம்பம் முதல் முடிவு வரை அமர்ந்து இருந்து ஆசீர்வதித்து அங்கு நடைபெறும் நிகழ்வுகளையும் கண்டு களித்துவிட்டே செல்வார். அடிக்கடி கூறுவார் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் நேரடிச் சீடரான ஸ்ரீமத் சுவாமி விஞ்ஞானானந்தா மகராஜ் அவர்கள் இப் பாடசாலைக்கு வருகை தந்து ஒன்று கூடல் நடைபெறும் இடத்தின் முன்னால் நின்று "Grow Grow Well" என்று கூறியதாக உணர்வு பூர்வமாகக் கூறுவார்கள். அவர் கூறிய அருந்துரைப்படி இன்றும் சிவானந்தா வளர்ந்து கொண்டே செல்கின்றது. என்று உள்ளார்ந்தமான புளகாங்கிதத்தோடு கூறியதை நான் அறிவேன்.

ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தஜீ அவர்கள் உடல் நிலையில் சிறுதளர்ச்சி ஏற்பட்ட வேளையில் கல்கத்தாவில் உள்ள வேலூர் மடத்தால் சுவாமி அவர்களை அங்கு வந்து சிறிதுகாலம் தங்கி இருந்து ஓய்வு எடுக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இம் மிஷனைப் பொறுப்பேற்க சுவாமி ராஜேஸ்வரானந்தாஜீ அவர்கள் வருகை தர ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. அப்போது நானும் சிவானந்தா வித்தியாலய பழைய மாணவர் மன்ற நிர்வாகக் குழுவில் ஒரு உறுப்பினர். சுவாமிஜீயைச் சந்திப்பதற்கு பழைய மாணவர் மன்றக் குழுவினர் அங்கு ஒரு மாலைநேரம் சென்றிருந்தோம். இராமகிருஷ்ண மிஷனின் முன்னால், பூந்தோட்ட முற்றத்தில் நாங்கள் அனைவரும் நிலத்தில் அமர்ந்திருந் தோம். சுவாமி அவர்கள் ஒருகதிரையில் அமர்ந்திருந்து எங்களோடு கதைத்தார். நாங்கள் கேட்டோம். நீங்கள் இனிமேல் இங்கு வரமாட்டீர்களா? என்று கேட்டோம் அப்போது அவர்கள் கூறினார்கள், நான் நாய் போல; நாயைக் கட்டிஆற்றிலே தள்ளிக் கடத்தினாலும் நாய் ஆற்றைக் கடந்து எப்படியோ வந்துவிடும். அது போல நானும் வந்துவிடுவேன். என்று கூறினார். இது அவர் இம்மண் மீது கொண்டிருந்த பற்றினைத் தான் எமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

மட்/விவேகானந்த மகளிர் மகாவித்தியாலயத்திலும் பரிசளிப்புவிழா, விளையாட்டுப் போட்டி, வாணிவிழா, ஏனைய கலைவிழா அனைத்து விழாக்களின் போதும் வருகை தந்து மாணவர்களுக்கு ஆசி கூறிவிட்டுச் செல்வார். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பல பண உதவி, பொருள் உதவிகளையும் வழங்கி உள்ளார். இப்பாடசாலையில் தான் சாரதா மகளிர் இல்லமாணவிகள் கல்வி கற்கின்றனர். அம்மாணவிகள் நன்றாக கல்வி கற்று நல்ல நிலையை அடையவேண்டும் எனக் கனவு கண்டார். சாரதா மகளிர் இல்ல மாணவிகள் கல்வித் துறையில் மாத்திரமல்லாது கைத்தொழில் துறையிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமெனக் கருதி பல தொழில் பயிற்சிகளை இம் மாணவிகளுக்கு வழங்கி உள்ளார்.

இராமகிருஷ்ண மிஷன் குருகுல மாணவர்களின் உடல், உள ஆரோக்கியத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தார். இம் மாணவர்களைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்காக பல இடங்களில் உதவியும் ஒத்தாசையும் கேட்டுநின்றார். **'தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும்'** என்ற ஜேசுநாதரின் கூற்றுக்கு இணங்க சுவாமி அவர்கள் தட்டிக் கேட்ட இடங்களில் எல்லாம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. வெளிநாட்டில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள், ஆதரவாளர்கள் உதவினார்கள். இதனால் சுவாமிஜீ அவர்கள் இக் குருகுலத்தை சிறப்பாக பேணினார். செல்லா என்று செல்லமாக அழைக்கும் மாணவனை சிறுகுழந்தை யாக எடுத்து தான் பெற்ற குழந்தை போல அரவணைத்து அன்பாக வளர்த்து எடுத்தார். அவரிடத்திலும் உயர்வு தாழ்வு காட்டியது கிடையாது. பாரதியாரின் கூற்றுப்படி ஏழை யென்றும் பாராது சரிநிகர் சமமாக வளர்த்தார்.

கல்லடி உப்போடை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நடைபெறும் போது முதலாம் நாள் திருவிழா ஆலய தர்மகர்த்தா திரு.மு.வேலுப்பிள்ளை குடும்பத்தினரால் நடாத்தப்படும். கொடியேற்றத் திருவிழாவின் போது கொடிமரத்தின் முன்னால் அமர்ந் திருந்து கொடி ஏற்றத்தினைக் கண்டுகளிப்பது அனைத்து அடியார்களையும் கொள்ளை கொண்ட நிகழ்வாகக் காணப்பட்டது. அதேபோல் ஸ்ரீ பேச்சிஅம்மான் ஆலய வருடாந்த சடங்கு உற்சவத்தின் போதும் சுவாமிஜீ அவர்கள் ஒருநாள் வருகைதந்து விடுவார். எமது பிரதேசத்தில் நடைபெறும் எந்த விழாவாக இருந்தாலும் சரி ஜீவனாநந்தாஜீ மகராஜ் அவரிகளின் ஆசியுரை இன்றி நடைபெற்ற சரித்திரமே இல்லை.

இலங்கை சுதந்திரம் அடைந்த மாசி மாதம் 4ம் நாள் சுவாமிஜீ அவர்களும் இவ்வுலகை நீத்து சமாதி அடைந்தார். அன்று கல்லடி உப்போடைக் கிராம மக்கள் கண்ணீரும் கம்பலையும் ஆனார்கள். கதிகலங்கி நின்றனர். எமது பிரதேச ஆலமரம் அடிசாய்ந்து விட்டது. என்று ஏங்கினார். சூறாவளி, சுனாமி வேளைகளில் சுவாமிஜீ அவர்கள் செய்த நிவாரணப் பணிகளை நினைத்து அழுது நின்றனர். இவருடைய பூதவுடல் அழிந்தாலும் புகழ் உடல் இன்றும் எமது பிரதேசமக்கள் உள்ளங்களில் நிலைத்து நிற்கின்றது என்பது வெள்ளிடைமலையாகும்.

**'ஓங்குக சுவாமிஜீ அவர்களின் புகழ்; வளர்க அவர் திருநாமம்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அன்பே ஆளுமையாக'

*சிவானந்தராஜா*
*இராமகிருஷ்ண குருகுலபழையமாணவன்*

சுவாமி நடராஜானந்தஜீ மகராஜ் (தனது 64வது வயதில்) 18.03.1967 அன்று சனிக்கிழமை அதிகாலை குருதேவரின் திருவுருவப் படத்தைத் தமதுமார்பில் தாங்கியவண்ணம் இறை வனடி எய்தினார். இவர் இறைவனடி எய்வதற்கு முன்பே சுவாமி ஜீவனாநந்தஜீயை இந்தியாவிலிருந்து தன் பணியை தொடர்வதற்கு அழைத்து எடுத்துக் கொண்டார்.

வலையிறவு எனும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட வாரித்தம்பிப் போடியாருக்கும் அழகம்மா அம்மையாருக்கும் மகனாக 1925ம் ஆண்டு பிறந்த சுவாமிஜீயின் இளமைப் பெயர் சீவரெத்தினம். இவர் ஆசிரியராக கடமை புரிந்துகொண்டிருக்கும் போது குரு தேவரினால் ஈர்க்கப்பட்டு துறவியானார். இவருக்கு துறவறத்தின் போது அவரது குரு விரஜானந்தரால் வழங்கப்பட்ட நாமமே ஜீவனாநந்தஜீ என்பதாகும்.

சுவாமிநடராஜானந்தாவின் மறைவிற்கு பிற்பாடு மாணவரில்லங்களையும், பாடசாலை களையும் கொண்டு நடத்துவதில் நிதிநெருக்கடி ஏற்பட்டது. இருந்தும் சுவாமி விவேகானந் தரின் சிந்தனைக்கமைய அனைத்துச் சக்திகளும் தம்மிடமுள்ளதாக நினைத்தார். நம்பிக்கை யுடனும் தைரியத்துடனும் பல திட்டங்களை வகுத்தார். அதாவது குருகுலத்தில் இருந்து படித்து பல இடங்களிலும் தொழில் புரியும் பழைய மாணவர்களின் உதவியும் ஒவ்வொரு நகர கிராம கருணைஉள்ளங்களைக் கொண்ட பெரியோர்களின், அன்பர்களின் பங்களிப்பு நிதிநிலையைப் பெறுவதற்கான வழி என உணர்ந்தார்.

தனதுஅன்பாலும் ஆளுமையாலும் செயல் திறனாலும் மேற்படி விடயத்தில் சாதனை படைக்கலாம் என்ற நம்பிக்கையுடன் ஆச்சிரமத்தில் இருந்து அதிகாலை 4 மணிக்கு குரு தேவரை வணங்கிவிட்டு ஓரிரு பழைய மாணவர்களுடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு வயல் வெளிகளிலுள்ள சூடு மிதிக்கும் களங்களுக்கும் சென்று நிதி கஸ்ரங் களை விளக்கி கூறி மாணவர்களுக்கு உதவிபுரியுமாறு வேண்டிக் கொள்வார். நாளுக்குநாள், வாரத்திற்கு வாரம், மாதத்திற்குமாதம் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று தான் செய்யப் போகின்ற குருதேவர்,அன்னை,விவேகானந்தரின் உன்னத பணியை அவர்களுக்கு விளக்கி அவர்களிடமிருந்து ரூபா1, ரூபா2 போன்ற அன்பளிப்புக்களை பெற்று மாலை 6மணிக்கு ஆச்சிரமம் திரும்புவார். பெறப்பட்ட பணங்களுக்கு ரிசீதுகளைஅனுப்புவது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இலங்கையிலும் வெளிநாட்டிலும் தனக்குத் தெரிந்த அன்பர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் நிதிநெருக்கடியை ஈடுசெய்ய பல கடிதங்களை நாளுக்குநாள் எழுதினார். இவரின் தீவிர முயற்சியினால் இராமகிருஷ்ண மிஷனுக்கு பல வழிகளாலும் நிதிகுவியத் தொடங்கியது. குருகுல மாணவர்களின் செலவைத் தவிர மீதியை வங்கி யிலிட்டார். நிதிநெருக்கடிகளைச் சமாளித்து தன்னிறைவு கண்டிருக்கும்போது 1978ம் ஆண்டு குருதேவரின் ஆலயம் உட்பட மாணவர் விடுதி அனைத்தும் சூறாவளியினால் முற்று முழுதாக சேதமாக்கப்பட்டன. இவை அனைத்தையும் எதிர் கொண்ட சுவாமிஜீ அவர்கள் மேலும் தைரியத்துடன் குருதேவர் ஆலயம் மாணவர் இல்லம், படிப்பறை. ஆச்சிரமம் போன்றவற்றை அமைப்பதற்கு தீவிரமாச் செயற்பட்டு இந்திய இராமகிருஷ்ண மிஷன் மடத் தலைவர் வீரேஸ்வரானந்தஜீ மகராஜ் அவர்களை அழைத்து புதிய கட்டடங்களுக்கான அடிக்கல்லை நாட்டினார். இந்த முயற்சிக்கு இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உள்ள அன்பர்களின் ஆதரவாளர்களின் பழைய மாணவர்களின் உதவியும் நினைப்பதற்கு மேலாக குருதேவரின் அருளால் கிடைத்தன. மிகவும் தீவிரமாக கட்டட வேலைகள் நடைபெற்று பூர்த்தியடைந்தன. புதிய கட்டடங்கள் இலங்கை இராமகிருஷ்ண மிஷன் மடத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மாநந்தஜி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. தற்போதுள்ள அனைத்துக் கட்டடங்களும் சுவாமிஜீ அவர்களின் முயற்சியாலும் குரு தேவரின் அருளாலும் உருவானதேயாகும். அத்துடன் நில்லாமல் மட்டுநகரத்திலுள்ள சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட அடிப்படை வசதிகளுடைய வீடுகளை அமைத்து அவர்களுக்கு கையளித்து விவேகானந்தபுரம் என்ற நாமத்தையும் அவ்விடத்துக்குச் சூட்டினார்.

**மக்களுக்கு சேவை செய்து கொண்டேயிரு;** எவன் **ஒருவன் ஏழைகளுக்காக கண்ணீர் சிந்துகிறானோ அவன் பாக்கியவான்** என்ற சுவாமி விவேகானந்தரின் திரு வார்த்தைக் கமைய தான் வாழ்ந்தகாலத்தில் தம்மை நம்பிவந்தவர்களையும், குழந்தைகளையும் நெறிப்படுத்தி நற்பண்புள்ள பெரியோர்களை உருவாக்கினார் என்றால் அது மிகையாகாது.

2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் கிழக்கு மாகாணத்திலுள்ள கரையோர மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் பெரும்பாலான உயிர்களும் காவு கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் தன்னால் இயன்ற உதவிகளை வழங்கினார். அத்துடன் சீலாமுனையிலும் இராமகிருஷ்ணபுரத்திலும் 100க்கு மேற் பட்டவீடுகளை அமைத்து கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கையளித்தார். இவரின் சேவை பாராட்டப்பட்டதுடன் மக்களால் இவர் திட்டங்களுக்கு இராமகிருஷ்ண மிஷனுக்கு நிதி குவிந்தவண்ணம் இருந்தது. அனைத்து இராமகிருஷ்ண மிஷன் கணக்குகளும் இலங்கை வங்கியிலேயே இருந்தன. மக்கள் வங்கியில் கடமைபுரியும் நானும் எனது பிரதேச முகாமையாளர் திரு.சீவரெட்ணமும் சுவாமி அவர்களைச் சந்தித்து மக்கள் வங்கியிலும் கணக்கை ஆரம்பிக்குமாறு வேண்டிக் கொண்டோம். அதன் பிரகாரம் கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் தலைவரிடம் அனுமதிபெற்று வருமாறு பணித்தார். சுவாமி பிறேமாத்மானந்தாஜீ அவர்கள் அனுமதிதந்தார்கள். அதன் அடிப்படையில் பல மில்லியன் தொகைகள் மக்கள் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளன. சுவாமி ஜீவனாநந்தஜீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூர நோக்குடனும் செயல் திறனுடனும் விழித்திரு. எழுந்திரு. கருதிய எண்ணம் கைகூடும் வரை அயராது நம்பிக்கை யுடன் செயற்படு எனும் பொன்மொழிக்கமைவாகச் செயற் பட்டதனால் மேலும் பல குருகுலங்களை அமைத்து எதிர்காலத்தில் கஸ்டமின்றி இவை களை பல ஆண்டுகாலம் நடத்த வரும் துறவிகளுக்கு ஏதுவாக வழி சமைத்து வைத்துள்ளார்.

எளிமையும் மனிதநேயப் பண்பும் உயர்ந்தஉள்ளமும் கொண்ட சுவாமிஜீ அவர்கள் தாய்க்குத் தாயாகவும் தந்தையாகவும் குருவாகவும் தம்மை நாடிவந்தவர்களைஅர வணைத்து வழி நடத்தினார். என்வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை மட்டும் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதாவது 1982ம் ஆண்டு, இலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் இறுக்கமான ஓர் காலப்பகுதி அது. இரவினில் யாரும் வெளியில் செல்லமுடியாத காலகட்டமாகும். இக்காலகட்டத்தில் தான் ஒருநாள் நள்ளிரவு 2.00மணியளவில் எனக்கு தாங்க முடியாத வயிற்று வலி ஏற்பட்டது. அவ்வேளையில் என்ன செய்வது என்று தெரியாமல் தத்தளிக்கும் வேலையில் சுவாமிஜீ அவர்கள் விடயம் அறிந்து உடனே வீட்டுக்கு வந்து தனது வேனில் என்னையும் மனைவியையும் ஏற்றிக் கொண்டு வைத்தியசாலையில் அனுமதித்து உதவி புரிந்தார். அதுமட்டுமல்லாமல் மீண்டும் காலையில் வந்து சுகநலன்களை விசாரித்துவிட்டு சென்றார். எனவே சுவாமிஜீ அவர்கள் தந்தை என்ற ஸ்தானத்தில் இருந்து செய்யவேண்டிய வேலையை மனிதநேயத்துடன், துயரம் என்று பாராமல் அன்று செய்து தந்தமை என் வாழ்நாளில் மறக்க முடியாத ஓர் நிகழ்வாகும். இவ்வாறு அனை வரிலும் அன்பும் அக்கறையும் கொண்ட சுவாமிஜீ ஓர் அற்புத புருஷராக திகழ்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவானந்தா வித்தியாலயமும் ஜீவனாநந்தாஜீ மகராஜும்

*தெ. ரவீந்திரமூர்த்தி*
*முன்னாள் அதிபர்*
*மட்/சிவானந்தா தேசியபாடசாலை*

ஸ்ரீமத் சுவாமி விபுலானந்த அடிகளின் வழித் தோன்றலாக மட்டுமண் ஈன்றெடுத்த மாபெரும் துறவி எங்கள் சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ் அவர்கள். 1925ம்ஆண்டு ஆனி மாதம் இருபத்தி இரண்டாம் நாள் வலையறவுப் பகுதியிலே வாரித்தம்பி அழகம்மா தம்பதியினர் செய்த தவத்தால் அவனியில் அவதரித்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சீவரெத்தினம்; பதிவுப் பெயர் தம்பிப்பிள்ளை.

இளமைப் பெயர் சீவரெத்தினம் எனும் நாமம் கொண்ட எங்கள் சுவாமிஜீ எட்டு ஆண்டுகள் சிவானந்தாவில் கல்விகற்றார். இவர் அம்பலவாணர் அதிபரின் வழிகாட்டலில் வளர்ந்தவர். தனது இருபதாவது வயதில் 1945இல் கேம்பரிஜ் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் மட்டக்களப்பு ஆனைப்பந்தி வித்தியாலயத்திலும், சீர்புகழும் சிவானந்த வித்தியால யத்திலும் அறிவூட்டும் ஆங்கில ஆசிரியராய் பணிபுரிந்தார். இக்காலத்தில் தான் ஸ்ரீமத் சுவாமிநடராஜானந்தாஅவர்கள் இல்லப் பொறுப்பைஏற்றுநடத்திக்கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் சீவரெத்தினம் எனும் பெயர் தாங்கிய சுவாமி ஜீவனாநந்தா விடுதி மேற்பார்வை யாளராகவும் ஆங்கில ஆசிரியராகவும் பணிபுரிந்தார். உயர்ந்த நிமிர்ந்த தோற்றம், நேரிய பார்வை ஏழைகளுக்கு உதவி புரியும் எண்ணம் கொண்ட அவர் 1958இல் சுவாமி விவேகானந்தரின் நேர்சீடரான சுவாமி விரஜானந்தரின் ஆசியின் அருளால் சன்னியாசம் பெற்று சுவாமி ஜீவனாநந்தர் ஆனார்.

பற்றுதல் அற்றும் பயன் கருதாமலும் என் கடன் பணிசெய்து கிடப்பதே என்ற தாரக மந்திரத்திற்கு ஏற்ப அரை நூற்றாண்டுக்கு மேலாக இராமகிருஷ்ண மிஷனின் அறப் பணிகளை நிறைவேற்றி நிலைநிறுத்திய மகான். அவர் 1966ஆம் ஆண்டு கல்லடி உப்போடை இராமகிருஷ்ண மிஷன் தலைவராக பொறுப்பேற்று ஏழைச்சிறார்களின் இன்னலைப் போக்க காலில் செருப்பு அணியாமல் மட்டக்களப்பில் உள்ள கடைகளில் மாதம் மாதம் 10ஆம் திகதி ஏறி இறங்கி 1ரூபாய் வீதம் நிதி சேகரித்து பின் தங்கிய நிலையில் இருந்த மாணவர் இல்லத்தை உயர்ந்த நிலைக்கு உயர்த்திய உத்தமர். செல்வக் குடும்பத்தில் பிறந்த போதும் வாழ்க்கை வசதிகளை உதறித் தள்ளி விட்டு துறவை மேற்கொண்டு ஆத்மீகப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்த மகான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனாதைக் குழந்தைகளுக்கு அன்னையாவும், தந்தையாகவும், ஆசானாகவும் வாழ்ந்தவர். சிவானந்த வித்தியாலயத்தின் போசகராய் இருந்து எம்மாணவர்களுக்கு வழிகாட்டியவர். சிவானந்த வித்தியாலயமும் இராமகிருஷ்ண மிஷனும் இணையற்ற இரண்டறக் கலந்த அமைப்புக்களாகத் தொழிற்பட உதவியவர் சுவாமிஜீ. சிவானந்த வித்தியாலயத்தின் எந்தவொரு நிகழ்வும் வணக்கத்துக்குரிய சுவாமிஜீயின் வருகை இல்லாது ஆரம்பமானது இல்லை. அவரது ஆசியுரையுடன் தான் அனைத்து நிகழ்வுகளும் ஆரம்பமாகும். ஸ்தாபகர் தினம்,வருடாந்தபரிசளிப்புவிழா, இல்ல விளையாட்டுப் போட்டி தெய்வத் திரு மூவர் நிகழ்வு, மாபெரும் கிரிக்கட் போட்டி. ஆசிரியர் தினம், சரஸ்வதிப் பூசை, பங்குனி உத்தர நிகழ்வுகளில் தவறாது கலந்து கொண்டு ஆரம்பம் முதல் இறுதி வரையும் எம்முடன் அமர்ந்திருந்து நிகழ்வுகளை பார்த்து ரசித்து உரமூட்டி வழிகாட்டிய மகான்.

ஆயிரமாயிரம் மாணவர்களுக்கும்,மக்களுக்கும் ஆத்மீகப் பாதையைக் காட்டியவர். மக்கள் சேவையே மகேசன் சேவை என்னும் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் கோட்பாட்டை நடைமுறையில் வாழ்ந்து காட்டியவர். இவரது பணியின் கீழ் வளர்ந்த சிவானந்த வித்தி யாலயத்தில் பயின்ற பல மாணவர்கள் இன்று கல்விமான்களாகவும், கலைஞர்களாகவும், செல்வந்தர்களாகவும், வைத்தியர்களாகவும், உதவிபுரியும் உத்தமர்களாவும், இலங்கையில் மாத்திரமன்றி கடல் கடந்த நாடுகளிலும் பிரகாசிக்கின்றனர். இதற்கு எமது சுவாமியின் அரவணைப்பும், அன்பும்,க ட்டுப்பாடும் காரணம் என்றால் மிகையாது.

மட்டக்களப்பு மண்ணில் ஆத்மிக அலைகளை நிறைத்தவர். ஆத்மீகஞானிகளை ஈர்ந்தவர், சாதி, மதம், பேதம் பாராமல் இராமகிருஷ்ண மிஷன் பணிகளை மட்டக்களப்பு கிராமங்கள் தோறும் வியாபிக்கச் செய்தவர். அதற்கு சான்று சூறாவளி, சுனாமி அனர்த்த காலங்களில் சுவாமிகள் மேற்கொண்ட மனிதாபிமானப் பணிகளும் வீட்டுத் திட்டங்களும் எங்கள் சுவாமிஜீயின் நினைவின் குறியீடாக திகழும் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன், சாரதா மகளீர் இல்லம், காரைதீவு சிறுமியர் இல்லம், அனர்த்த நிவாரணப் பணிகள், சமூக முன்னேற்றப்பணிகள், சமயப் பணிகள், சமரசப் பணிகள் என நாம் பட்டியலிட்டுக் காட்டமுடியும். அரை நூற்றாண்டுக்கு மேலாக ஆன்மீகப் பணி ஆற்றி வரும் வேளை மட்டக்களப்புக்கு வரும் பிரமுகர்கள் இராமகிருஷ்ண மிஷன் சென்று அங்கு நடைபெறும் பணிகளால் மகிழ்வடைந்து தங்கள் ஆதரவுக் கரங்களை நீட்டுவதற்கும் தவறுவதில்லை. அதே நேரம் இந்தியாவிலிருந்து வருகை தரும் இராமகிருஷ்ண மிஷன் துறவிகளை எமது பாடசாலைக்கு அழைத்து அறிமுகப்படுத்தி ஆசியும் அருளும் வழங்க வழி சமைத்தவரும் எங்கள் ஜீவஜோதி ஜீவனாநந்தஜீ மகராஜ் ஆகும்.

சிவானந்த வித்தியலயத்தின் வளர்ச்சியில் அவர் எப்போதும் கண்ணும் கருத்துமாய் இருப்பார். சிவானந்தாவில் மாணவர்கள் பெறும் வெற்றியைத் தனதுவெற்றியாக எண்ணி மகிழ்ச்சி கொள்வார். தளர்வடையும் போது உற்சாகமூட்டி உரமூட்டுவார். சிவானந்தா வித்தியாலயத்தில் அமைந்துள்ள அன்னை சரஸ்வதி ஆலயத்தில் நடைபெறும் பங்குனி உத்தர பூசையில் தவறாது கலந்து அன்னைக்கு பச்சை நிறப்பட்டாடையும் பூசைக்குரிய பொருட்கள் அடங்கிய தட்டையும் வழங்கி வழிபடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமகிருஷ்ண மிஷன் இல்லவிசேடநிகழ்வுகளின் போது வருகை தரும் அதிபா், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி அணிசாராஊழியர்கள் அனைவரையும் அன்போடு வர வேற்று பண்புடன் உபசரிப்பார். அவ்வாறேகல்லூரி சமூகம் அனைவரும் சுவாமிஜியின் ஆசியைப் பெறுவதற்குத் தவறுவதில்லை.

இத்தகைய சேவகனின் ஜீவாத்மா 2006ஆம் ஆண்டு மாசி மாதம் 4ம் திகதி இரவு 7.15 மணிக்கு பிரம்மத்துள் சங்கமமாகி ஜீவசமாதி அடைந்தது.

*அந்த ஜீவானந்த ஜோதிஅணைந்து விடுமா?*
*ஒருநாளும் இல்லை.*
*அதுநம்முன் உறைந்து நின்று*
*அதுஎன்றும் நம்மை வழிநடத்திச் செல்லும்*

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு ஓர் தந்தை

*அசிறி இந்துனில் அற்புதாநந்தன்*
*இ.கி.குருகுல பழைய மாணவன்*

சுவாமி ஜீவனாநந்தர் என்னை தன் மகனாய் நினைத்து அன்பினால் அரவணைத்து வளர்த்து விட்ட ஓர் தந்தையே. ஏன்? 'திக்கற்றவர்க்கு தெய்வமே துணை என்பார்கள்' உண்மையில் திக்கற்ற எனக்கு தெய்வமானார் சுவாமி அவர்கள். திக்கற்ற எனக்கு தாயை தெரியாது, என் தந்தையை தெரியாது. ஆனால் இருவரையும் சுவாமி ஜீவனாநந்தரில் கண்டேன். 1983 இல் இரண்டே வயது குழந்தையாய் சுவாமி மடியில் தவழ்ந்தேன். அவரின் அன்பாலும் அரவணைப்பாலும் வளர்ந்தேன். கண்டேன் அவரை என் தந்தை யாய்.நான் உண்மையில் ஓர் சிங்கள இனத்தவன். ஆனால் எந்தவித ஏற்றத்தாழ்வுமற்று அவரது பெற்ற மகனைப் போல் என்னை ஏற்று வழிகாட்டினார்.

**எனது ஆரம்ப ஞாபகங்கள்**

நான் 1983ல் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுக்கு வந்த ஞாபகம் உள்ளது. எனக்கு அம்மா, அப்பா சொந்தம், பந்தம் இருக்கிறார்களோ இல்லையோ தெரியாது. கடவுள் மனிதனைப் படைத்தான் இவ்வுலகில் அனைத்து வளங்களுடன் வாழ்வதற்கு. ஆனால் அந்த கடவுள் எனது வாழ்வில் இலை மறை காய் போல் விளங்கினார். அதனால் ஏற்பட்ட விபரீதங்களால் எனது அம்மா, அப்பா சொந்த, பந்தங்கள் யாவரையும் இழந்து இருந்த பொழுது எனது வாழ்வின் பிற்காலத்தை எண்ணிய அந்தக் கடவுள் எனது வாழ்வின் மறுமலர்ச்சியின் நோக்கத்தை எண்ணி 1983ல் சுவாமி ஜீவனாநந்தரிடம் கையளித்தார்.

**அதன் பின் ஞாபகங்கள்**

சுவாமி விவேகானந்தர் கூறியது போன்று வாழ்க்கையின் சவால்களை எதிர் நீச்சலடித்து வெற்றிகொள்ளக் கூடிய திறன்களை சுவாமி எனக்கு கற்றுக்கொடுத்தார்.

- காய்கறித் தோட்டம் செய்தல்
- யோகாசனம்
- சமையல் கலை
- பூமாலைகட்டுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கணினிபயிற்சிவகுப்பு
- இறைவனும் ஆன்மீகமும் - என பல பயிற்சிகளை வாழ்க்கை முறைமையாக மிக எளிமையான முறையில் கற்றுக் கொண்டோம்.

**எனது பாதை**

ஒரு முறை சுவாமிஜீயின் அறையை பெருக்கிய பொழுது ரூபா 1000/= எடுத்து எனது பாடசாலையில் படித்த சக மாணவர்களோடு உண்டு மகிழ்ந்தேன். அதன் பின் சுவாமிக்கு தெரியவர அவர் கோபத்துடன் என்னை அழைத்து 'கிழக்கைப் பார்; மார்பில் கையை கூப்பு; உனது குலதெய்வத்தை நினை' என்றுசொல்லி பிரம்பால் அடி விழுந்த ஞாபகம் மறக்க முடியாது. உண்மையிலேயே நான் குறும்புக்கார சிறுவனாக பலமுறை சுவாமிகளின் கண்டனத்திற்கு ஆளாவதுண்டு. எனினும் கண்டனத்தின் போது எனது கண்ணீரை கண்ட வுடன் ஒரு மகனை பெற்ற தகப்பன் ஸ்தானத்தில் இருந்து எனது வேதனையை நினைத்து என்னைத் தடவி ஆறுதலளித்து புத்திமதி சொல்லிமிட்டாய் தந்திடுவார். இவ்வாறு பலமுறை தவறு செய்த பொழுது என்னை தனது மகன் போல் வழிநடத்தினார். இவ்வாறு (அம்மா அப்பா சொந்தம் பந்தம் யாவரினாலும் ஆதரவற்ற 05 பேரை தனது பிள்ளைகள் போல் வளர்த்தார்) விபரம் வருமாறு செல்வராசா (S.L), A.I.அற்புதநாதன்(S.L), அமுதானந்த பிரதீபா(U.S.A), ராஜூ(S.L),செல்வராணி(U.K) இவர்களில் ஒருவரைதவிர (செல்வராசா மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன்)ஏனைய நான்கு பேரும் நன்றாக சுவாமிஜீயின் வழிகாட்டலின் கீழ் திருமணமாகி வாழ்கிறார்கள்.

**மகாசமாதி**

சுவாமிஜீயை நேசிக்கும் அன்பான உள்ளங்களே! உலகில் நடக்கும் பரிமாற்றங்கள் போல் எமது தந்தையை நினைக்க வேண்டாம் எல்லோருக்காகவும் வாழ்ந்து மகா சமாதியடைந்த அவரது ஆசிகள் என்றும் உங்களுடன் இருக்கும்.

**குறிப்பு**

சமூகத்தில் எமது சேவை சுவாமிஜீயைப் போல ஏழைகளுக்கு உதவும் பண்புகளைப் பழகுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையே கண்ணான கர்மயோகி சுவாமிஜீ

*மாஸ்டர் சிவலிங்கம்*
கல்லடி

பிறருக்கு எதை உபதேசித்தாரோ, அதைத் தனது வாழ்விலே கடைப்பிடித்து மற்றவர்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தவர் சுவாமி ஜீவானாநந்தர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை தமது வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வாழ்ந்த கர்மயோகி அவர். (ஒரு தடவை சுவாமிஜீயின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. வைத்தியத்துக்காக இந்தியாவுக்கு வரும்படியும், வைத்தியம் முடிந்த பின்புஅங்கு சிறிது காலம் தங்கியிருந்து ஓய்வெடுக்கும் படியும் இராமகிருஷ்ண மிஷன் தலைமைப்பீடம் சுவாமி ஜீக்கு அழைப்பு விடுத்தது.

பற்றற்ற துறவியான சுவாமிஜீ, தனது உடல்நிலை பற்றி பெரிதாக எண்ணவில்லை. இந்தியா சென்று சிகிச்சை பெற அவர் ஆர்வம் காட்டவில்லை. மட்டக்களப்பைச் சேர்ந்த சில அன்பர்கள் அடிக்கடி சுவாமிஜீயைச் சந்தித்து, இந்தியா சென்று சிகிச்சைபெற்று வரும்படி அவரை வேண்டிக்கொண்டே இருந்தனர். அதன் காரணமாக சுவாமிஜீ இந்தியா சென்று வைத்தியசிகிச்சை பெறச் சம்மதித்தார். 'நீண்டகாலம் நான் அங்கு தங்கியிருக்க மாட்டேன். உடல்நிலை தேறியதும் மட்டக்களப்புக்கு வந்துவிடுவேன்' என்று அன்பர்களிடம் கூறினார்.

குறிப்பிட்ட ஒரு தினத்தில் வழியனுப்பத் திரண்டிருந்த அடியார்களிடம் விடைபெறும் போதும் தாம் சிகிச்சை முடிந்த பின்பு அங்கு நீண்டகாலம் தங்காது மட்டக்களப்புக்குத் திரும்பிவர எண்ணியுள்ளதாகக் கூறிக்கொண்டு இந்தியப் பயணத்தை மேற்கொண்டார். வைத்திய சிகிச்சை வெற்றிகரமாக முடிந்ததும் சிறிதுகாலமே அங்கு தங்கியிருந்துவிட்டு இலங்கை திரும்பினார். 'சிறிது காலம் வேலைகள் ஏதும் செய்யாது பூரண ஓய்வு எடுக்க வேண்டும்' என்ற நிபந்தனையுடன் தான் டாக்டர்களும் சுவாமிஜீகளும் இலங்கைக்கு அவரை அனுப்பி வைத்தனர். இலங்கை திரும்பிய சுவாமிஜீ, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனில் சில நாட்கள் தங்கிவிட்டு மட்டக்களப்புக்கு வந்தார். மட்டக்களப்பில் பூரணமாக ஓய்வு எடுக்கவேண்டும் என்று ஆலோசனை வழங்கியே வெள்ளவத்தை மிஷன் சுவாமிகள் அவரை அனுப்பிவைத்தனர். மட்டக்களப்புக்கு சுவாமிஜீ வந்துவிட்டார் என்ற செய்தி அறிந்ததும் அவரைத் தரிசிப்பதற்காக பக்தர் கூட்டம் அலைமோதியது. அப்போதும் அவருடைய உடல் நிலைசற்றுத் தளர்ந்தே காணப்பட்டது. நானும் அவரைத் தரிசித்து வணக்கம் தெரிவித்துவிட்டு வந்தேன். ஒரு வாரத்தின் பின்பு சுவாமிஜீயைச் சந்திப்பதற்காகச் சென்றேன். அவருடைய அறைக்கதவு பூட்டப்பட்டிருந்தது. 'சுவாமிஜீ ஓய்வாகப்படுத் துறங்குகிறார் போலும்' என்று எண்ணிக் கொண்டு குருதேவர் ஆலயத்திற்குச் சென்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாமா! பெரிய சுவாமியைப் பார்க்கவா வந்திருக்கிறீங்க... அவர் ஓபிசில் ஏதோ கணக்கு எழுதிக்கொண்டிருக்கிறார். அங்கு போய் பாருங்கள்' என்று, இல்லமாணவன் ஒருவர் கூறினார். உடனே காரியாலயத்துக்குச் சென்றேன். மேசையிலே பல பைல்கள் கும்பமாகக் காணப்பட்டன. அவற்றைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தபடி ஏதோ எழுதிக் கொண்டிருந்தார் சுவாமிஜீ.

சுவாமிஜீ வணக்கம்! உங்களை வேலை ஒன்றும் செய்யாது சிறிதுகாலம் பூரண ஓய்வு எடுக்கும் படியல்லவா கூறியிருக்கிறார்கள். நீங்கள் இப்படி வேலை செய்து கொண்டிருக்கிறீர்களே என்று கூறினேன்.

மாஸ்டர் வாருங்க....... இருங்க......... ஒரு வேலையும் செய்யாமச் சும்மா இருந்து சாப்பிட்டுத்துப் படுக்கிறதுக்கு இங்க ஒரு ஆள் தேவையா..? நான் இங்க இருந்தால் என்னால மிஷனுக்கு ஏதாவது பிரயோசனம் இருக்க வேணும். நான் கண்ணை மூடுற வரையும் என்னால முடிந்தவரை காரியம் பார்ப்பேன். வேலை ஒண்டும் செய்யாமச் சும்மா இருக்கிறதுக்கு என்னால முடியாது மாஸ்டர் என்று கம்பீரமான குரலிலே கூறினார் கர்மயோகியான நமது சுவாமிஜீ. அவருடைய பேச்சைக் கேட்டு நான் மெய்சிலிர்த்து நின்றேன்.

சுவாமிஜீக்கு கலைஞர்கள், கவிஞர்கள் மீது தனி அபிமானம் நான் கதை கூறும் விதத்தை வெகுவாகப் பாராட்டுவார். ஒரு நாள் நான் அவருடன் பேசிக்கொண்டிருக்கும் போது, 'மாஸ்டர்! உங்களுக்குப் பிறகு மட்டக்களப்பில் இதை சொல்வதற்கு யாரை உருவாக்கியிருக்கிறீங்க..?' என்று கேட்டார். சுவாமிஜீ! என்னைக் கதைக் கலைஞனாக உருவாக்கியவர் கடவுள் தான். அவர்தான் மற்றொருகதை சொல்லும் கலைஞனை மட்டக்களப்பில் உருவாக்க வேண்டும். கலைஞனை மனிதன் உருவாக்க முடியாது. மனிதர்கள் ஊக்கமளிக்கலாம், உற்சாகம் ஊட்டலாம். ஆனால் உருவாக்க முடியாது என்பது எனது அபிப்பிராயம்.........என்றேன்.

மாஸ்டர்! சரியாகச் சொன்னீங்க,சரியாகச் சொன்னீங்க,உண்மைதான் என்று கூறிவாய் விட்டுச் சிரித்தார் சுவாமிஜீ.

1994ல் சில அன்பர்கள் ஒன்றிணைந்து மணிவிழாச்சபை ஒன்றை உருவாக்கி அக்டோபர் முதலாம் திகதி மட்/வின்சன்ட் மகளீர் மண்டபத்தில் எனது மணிவிழாவைச் சிறப்பாக நடத்தினர்.

அன்றைய தினம் அதிகாலை வேளையிலே சுவாமிஜீ எமது வீட்டுக்கு வந்து 'மணி விழாக் கதாநாயகனுக்கு எனது வாழ்த்துக்கள்' என்று வாழ்த்தி, குருதேவரின் அமுத மொழிகள் அடங்கிய பல புத்தகங்களையும் பரிசாக வழங்கினார்.

2002ம் ஆண்டு 10ஆம் திகதி நடைபெற்ற கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் எனக்கு 'இலக்கியமுதுமாணி'என்ற பட்டம் அளித்துக் கௌரவித்தனர்.

அடுத்தநாள் அதிகாலை சுவாமிஜீ அவர்கள் எங்கள் வீட்டுக்கு வந்து எனக்குக் கௌரவப்பட்டம் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியும் பாராட்டும் ஆசியும் தெரிவித்ததோடு, குருதேவர் பற்றிய சில அரிய புத்தகங்களையும் வழங்கினார்.

மேற்படி செயல்கள் மூலம் கலைஞர்கள் மீது சுவாமிஜீ வைத்திருந்த பேரன்பு நன்கு புலப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானஒளி ஜீவ ஆனந்தம்

*திருமதி.எம்.சீவரெட்ணம்*
*இந்துமகளிர் மன்றம்,*
*மட்டக்களப்பு*

இந்து தர்மம் நிலைக்க இராமகிருஷ்ண பரமஹம்சரும், இந்து தர்மம் பரப்ப சுவாமி விவேகானந்தரும் அன்னை ஸ்ரீ சாரதாதேவியும் ஈந்தஅருள் ஒளியில் தோய்ந்து சுவாமி விபுலானந்தரின் இதயக் கமலத்தில் நனைந்து ஞானச் சுடர் ஏற்றி சமூக நல சேவைக்கே தடம் பதித்த, எமது காப்பாளர் பெருநிலைத் துறவி சுவாமி ஜீவனாநந்தா, நீவீர் மறைந்துவிட்டீர்.

உள்ளக் கமலத்தில் நிறைந்திட்ட அருள் ஒளி அனாதை என்பதற்கு அர்த்தமே இல்லையென அன்புடன் குழந்தைகளை அரவணைத்து, காத்து அவர் தம் வளம் பெருக்கி, சமூகமேம்பாடடைய ஸ்ரீ சாரதாதேவியின் முன்னெடுப்பு சகல பெண்ணிடத்தும் நிலைபெற வேண்டுமென்று, சமயவழிகாட்டலோடு அனுதினமும் இறைநாமத் துதியால் அருள்பெற ஆற்றியதொண்டெல்லாம் நிலைத்திருக்க நீவீர் மறைந்தாவிட்டீர்!

தவத்திருசுவாமி ஜீவனாநந்த மகராஜ் நாம் சிறுதுளி பெருவெள்ளம் என்றும், நாமே நம்மை பெருக்க அயராத முயற்சி உறுதுணையாம் என்றும் ஒவ்வொரு இந்துவும் ஆன்மீக பலம் பெறவேண்டும் மென்றும் ஆறுதலுடன் அரவணைத்து ஆக்கபணி முடித்தீர் புன்னகையுடன் இன்சொல்லும் உம் திருவுருவம் நீவீர் மறைந்தாவிட்டீர்!

போஷகராய் மட்டுநகர் இந்துமகளிர் மன்றத்தின் செயற்றிறன் விளக்க, எக்கணத்திலும் மகான் சுவாமிஜீயை அணுகிய எம்மவரை தாயன்புடன் தகைமையினால் ஊரெல்லாம், நாடெல்லாம், உலகெல்லாம் அன்புமேவி ஒருகுலமாய் வாழ்கவென அருளொளி பரப்பிய நீவீர் ஓய்ந்தீரா - இல்லை

பெரிய அறிவாளியோ இல்லை, திறமையோ எனக்கில்லை, ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் பணியாளன் பகவான் பணித்த பணிகளை செய்து முடிப்பேன் என கூறும் உம்வழி நின்று சமூகமேம்பாடடைவோம் உடல் பொருளொடாவி, சீரிய சேவைக்கே மற்று, மணிக்கணக்காகப் பேசிக் கலைவதைவிட்டு.

அந்த ஞானஒளியில் தோய நனைந்து, நினைந்து அறவழிச் சேவையில் நிற்பதே, எம்மவர் வாழ்வில், உமக்கீனும் கைமாறாம், உம் அருட்பாதம் போற்றுவோம், நீவீர் எம்மோடு வாழ்வீர்!

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம் பெற்ற எனது விளையாட்டுத் தோழன் சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ்

*நாகமணிவைத்தியன் கணபதிப்பிள்ளை*
*முன்னாள் பேச்சியம்மன் ஆலய பிரதமகுரு*

சுவாமி ஜீவனாநந்தாஅவர்களை நினைக்கும் தோறும், அவர் பெச்சியம்மாள் மீதும் அத்திருத்தலத்தின் மீதும் கொண்ட பக்தியே மேலெழுகின்றது.

சுவாமிகள் இந்தியத்திருத்தலயாத்திரைசெய்துமீளும் ஒவ்வொருசந்தர்ப்பத்திலும் பேச்சியம்மாளுக்காக ஒருபட்டுச் சேலையை வாங்கி வந்து கையளிக்கத் தவறமாட்டார்.

வருடாந்தப் பேச்சியம்மன் பெருஞ் சடங்கு தொடங்கும் முகமாக ஞாயிறு அதிகாலை நான்கு மணிக்குக் கதவு திறக்கும் முதற் பூஜைக்குச் சமூகமளித்து அம்மனைத் தரிசித்துச் செல்வதைத் தனது வழக்கமாகக் கொண்டு ஒழுகுபவர்.

**மாணவர் பருவம்**

சுவாமிகள் மாணவனாக இருக்கும் காலத்திலிருந்தே எனக்குப் பழக்கமுண்டு இவரது பெயர் சீவரெத்தினம். மாணவன் சீவரெத்தினமும் நானும் இணைந்து விளையாடித் திரிந்தகாலப் பசுமை நினைவுகள் வருகின்றன.

எப்போதும் சுறுசுறுப்புள்ளவராகவும் மற்றவர்களிடம் அன்பு செலுத்துபவராகவும் அவர் இளமையிலிருந்தே காணப்பட்டார். இவரின் சிறந்ததலைமைத்துவமும் மற்றவர்களை அரவணைத்துச் செல்லும் பண்பும் நிறைந்திருந்தது. இதனாற்றான் சுவாமி நடராஜானந்தா, மாணவர் பருவத்திலிருந்தே இவரை ஏனைய மாணவர்களுக்கெல்லாம் தலைவனாக நியமித்துவிட்டார். இதனால் இவரை பிரதர் சீவரெத்தினம் என்றே அழைப்போம். இவரை ஞானமார்க்கத்துக்கு வழி நடத்தியவரும் சுவாமி நடராஜானந்தரே.

சுவாமி நடராஜானந்தர் இவரை இந்தியாவுக்கு அனுப்பி ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் குருகுல ஆச்சிரமத்தில் பயிற்றுவித்தது பிற்காலத்தில் மட்டக்களப்புக்குப் பெருங் கொடையாகிவிட்டது.

சுவாமி நடராஜானந்தா தனது அந்திமகாலத்தில் நோயுற்றபோது இவர் மட்டக் களப்புக்கு உதவிச் சுவாமியாக அனுப்பப்பட்டார். சிறிதுகாலத்தின் பின் சுவாமி நடராஜானந்தா மகாசமாதியடைந்ததும் இவரே மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் நிருவாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது சிவபுரியையும் சிவாலயத்தையும் சுற்றி சிறு அளவிலேயே கட்டட வசதிகள் இருந்தன. சகல வசதிகளுடனும் கூடிய மாணவர் இல்லக்கட்டடத் தொகுதி ஒன்று உருவாக்கவேணுமென்று ஆசைப்பட்டார். அடிக்கடி என்னிடம் இது பற்றிக் கூறுவார். ஏனெனில் சுவாமி நடராஜானந்தாவின் காலத்திலிருந்தே மிஷன் மின்இணைப்பு வேலைகளை நானே மேற்கொண்டு வந்தேன் என்பதையும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

**புதிய இல்லங்கள்**

சுவாமிகளின் அயராத முயற்சியினால் இப்போதுள்ள ஆண் மாணவரில்லம் தோற்றம் பெறலாயிற்று. சுவாமிகளுக்குத் துணையாக அமரர் சிவயோகன். திருவாளர்கள் ராஜ கோபால், செல்வநாயகம், குருகுலசிங்கம், நமசிவாயம், சௌந்தரலிங்கம், கைலாயபிள்ளை, விநாயகமூர்த்தி மற்றும் முத்துலிங்கம் முதலானோர் துணைநின்றனர்.

ஊர் ஊராகத்திரிந்து சிறுகச் சிறுகச் சேர்த்து எடுத்த பெருங்கட்டடம் இம்மாணவரில்லம். இதேபோல் சாரதாமகளிர் இல்லம். காரைதீவுசிறுவர் இல்லம் முதலான பல கட்டடத் தொகுதிகளை குருதேவர், சுவாமிகள் ஊடாக இம்மண்ணுக்குச் சேர்த்துத்தந்துவிட்டார். இதேபோல் விவேகானந்தபுரம் ஒன்றை உருவாக்கி மக்களுக்குக் கையளித்தார். இவ்வாறு சுவாமிகள் தொட்டதெல்லாம் தலங்களாயிற்று. இவை அனைத்து மின்வேலைகளையும் சுவாமிக்கு நானே வழங்கினேன். இப்பெரும்ஞானியை நினைவு கூர்ந்து விழாவெடுக்கும் அன்பர்களை நான் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

- நீங்கள் கடவுளின் குழந்தைகள் அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள் புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள்.
- நம்பிக்கை நம்பிக்கை நம்மிடத்தில் நம்பிக்கை, நம்பிக்கை நம்பிக்கை கடவுளிடத்தில் நம்பிக்கை, இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும்.

-சுவாமி விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஜீவனாநந்தர் காட்டிய வழி

செல்வி. விஸ்வலிங்கம் மலர்விழி
*சாரதா இல்ல பழைய மாணவி*

'ஒறுத்தாருக்குஒருநாளை இன்பம் பொறுத்தாருக்கு
பொன்றும் துணையும் புகழ்'

என்கின்றது நம் தமிழ் மொழிக்கு அழகும் அருமையும் சேர்த்து புகழ் மணம் பரப்பும் பொய்யா மொழிப் புலவரின் திருக்குறள். அக்குறளின் அர்த்தத்திற்கு ஏற்ப வாழ்ந்தவரே இராமகிருஷ்ண மிஷன் போற்றும் உத்தம சற்குரு சுவாமி ஜீவனாநந்தர்.

உலகம் போற்றும் உலகத்தாயான அன்னைசாரதையின் வாழ்வினைத் தொடர்ந்து பின்பற்றி வந்த துறவிகளில் சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்களும் குறிப்பிடத்தக்கவர் களாவர். இவ்வுலகம் போற்றித் துதிக்கும் நம் அன்னை தன் வாழ்வில் எத்தனை எத்தனை நல்வழிகளை யதார்த்த உலகில் எடுத்துக்காட்டி எத்தனையோ நல்வழிகளை தன் செயலின் மூலம் புகட்டிச் சென்றுள்ளார்.

அந்த அடிப்படையில் நம் அன்னையின் நல்வழிகளை ஒழுங்கான முறையில் எடுத்துக் காட்டியும் செயல்படுத்தியும் வாழ்ந்த உத்தமர்களின் வரிசையில் சுவாமி ஜீவனாநந்தஜீயும் ஒருவராவார்.

சுவாமி ஜீவனாநந்தாஜீ அனைத்துமக்களுடனும் சகோதரத்துடன் வாழ்ந்தவர். எல்லா மக்களும் ஒன்றே என்ற சிந்தனையை எடுத்துக் காட்டுவதில் இவர் வல்லவர். இப்படித்தான் வாழவேண்டும், இப்படி வாழ்ந்தால் தான் வாழ்க்கையில் முன்னேறலாம் என்பதனை மக்களுக்கு புகட்டி மக்களின் வாழ்வில் சமாதானத்தை நிலைநாட்டியவர்.

இராமகிருஷ்ண மிஷன் இனமத வேறுபாடுகள் இன்றி அனைத்து மக்களுக்கும் ஆதரவு வழங்கும் ஸ்தாபனமாகும். அத்தகைய ஸ்தாபனத்தின் கொள்கைகளை ஒழுங்கான முறையில் கடைப்பிடித்து வாழ்ந்த துறவிகளில் சுவாமி ஜீவனாநந்தஜீ அவர்கள் சிறப்பாக குறிப்பிடத்தக்கவர். அனைத்து மக்களாலும் போற்றித் துதிக்கக் கூடியவர் ஆவார். அன்பை யும் உதவிகளையும் இராமகிருஷ்ண மிஷன் ஊடாக ஏழைக் குழந்தைகளுக்கு அள்ளிக் கொடுத்தார்.

அனைத்து ஏழை மக்களுக்கும் எவ்வித ஏற்றத்தாழ்வுகளும் இல்லாமல் தன் அன்பி னையும் அரவணைப்பினையும் சமமாக பங்கிட்டு வழங்கிய அன்புத் தெய்வம் சுவாமி ஜீவனாநந்தாஜீ. மக்களின் வாழ்வில் குடிகொண்ட அன்புத் தெய்வம் சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களைப் போன்ற எத்தனையோ ஆதரவற்ற மாணவர்களுக்கு தன்னுடைய அன்பி னாலும் அரவணைப்பினாலும் நல்லறிவுகளை புகட்டியவர். சமூகத்துக்கு ஏற்றவாறு நல்ல ஒழுக்கம் பண்பாடு மிக்க நற்பிரஜைகளாக ஏழைமாணவர்களை உருவாக்கியுள்ளார்.

அநாதைக் குழந்தைகளின் மனத்திற்கு ஏற்றவாறு அவர்களுடன் பேசி அவர்களின் குறைபாடுகளை தெரிந்து தன்னுடைய அரவணைப்பின் மூலம் அகுறைபாடுகளை நீக்கி நேரான பாதைக்குச் செல்வதற்கு வழிகாட்டிய உத்தம சற்குரு சுவாமி ஜீவனாநந்தஜீ அவர்கள்.

சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்கள் தனது வாழ்வின் ஊடாக சனாதனதர்மத்தைப் பேணி அதுபற்றி ஏழைக் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறினார். இதனூடாக ஏழை மாணவர்களின் இந்துக்கல்வியை வளர்த்தார். இந்துப் பராம்பரியத்தினை மாணவர்களுக்கு எடுத்துக் காட்டினார்.

சுவாமி ஜீவனாநந்தஜீ ஏழை மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்தவர். அந்த வகையில் சுவாமி ஜீவனாநந்தாஜீ சிறப்பாக குறிப்பிடத்தக்கவர். தன்னுடைய அன்பினையும் அரவணைப்பினையும் ஏழைக் குழந்தைகளுக்கு அள்ளி வழங்கினார் சுவாமிஜீ அவர்கள்.

சுவாமி ஜீவனாநந்தாஜீ குழந்தை, பெரியோர் என்ற வேறுபாடு இல்லாமல் அனைத்து மக்களின் சிந்தனைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பார். அந்த வகையில் மக்களின் வாழ்வில் ஒளிவிட்டு பிரகாசிக்கின்றார் சுவாமிஜீ.

சுவாமி ஜீவனாநந்தாஜீ ஏழை மக்களுக்காக வாழ்ந்த மகா துறவியாவார். அனைத்து மக்களின் நலன்களைப் பாதுகாப்பதிலும் அவர் வல்லவர். தாய், தந்தையை இழந்த மாணவர்களுக்கு நல்லறிவுரைகளைப் புகட்டி அவர்களை நல்வாழ்வுக்கு இட்டுச் சென்றார். அத்தகைய நிலையில் அனைவரையும் அன்பில் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து அவர் களுக்கு உயர்ந்த பாடம் புகட்டிய ஒரு துறவியாவார். சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்கள் ஏழை மாணவர்களின் மனதில் பதிந்துள்ளஅன்புத் தெய்வம் . சுவாமிஜீ அவர்கள் அன்பின் உருவாக வாழ்ந்தவர்.

சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்களின் பணியானது அளவிட முடியாத ஒன்றாகும். அவர் இராமகிருஷ்ண மிஷன் ஊடாக ஏழை மாணவர்களுக்கு அள்ளி வழங்கியுள்ளார். அந்த வகையில் அவரின் பணியானது மக்களால் போற்றி பாடக்கூடியது.

சுவாமி ஜீவனாநந்தாஜீ அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்கும் ஒரு பெரிய துறவியாவார். தன்னை நாடிவரும் அனைவரையும் அவர் அன்புடன் வரவேற்று உப சரித்தார். அத்தகைய பண்பினையே தான் வளர்த்த மாணவர்களுக்கும் சொல்லிக் கொடுத் துள்ளார் கர்மயோகி ஜீவனாநந்தாஜீ அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுள்ளம் கொண்ட சுவாமிஜீ

தருமரெத்தினம்
முன்னாள் மாணவரில்ல வாகன ஓட்டுநர்

இவ்வுலகினது இன்று வரையான இருப்புக்கு காரணமாக அமைவது உயிரினங்கள் ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள அன்பு தான் என்றே நான் நினைக்கின்றேன். இந்த அன்பு தான் ஜீவராசிகளின் இருப்பிற்கும் காரணமாக அமைந்துவிடுகின்றது. அந்த அன்பிற்கு சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தவர் சுவாமிஜீ என்று கூறினால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றே. நான் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனிலே வேலை செய்த காலங்களிலே எனக்கு உற்றதுணையாக இருந்தவர் சுவாமிஜீ அவர்கள். அன்பாக பழகுவதிலும்,பேசுவதிலும் என்னை ஆதரித்து நல்வழிகாட்டுவதிலும் சுவாமிஜீயைத் தவிர யாரும் இதற்கு பொருத்த மானவர்களில்லை. இராமகிருஷ்ண மிஷனில் வேலை செய்ய சேர்ந்தது 1984 காலப் பகுதிகளில், விலகியது 1999 காலப்பகுதி. இதற்கிடையில் உள்ள பதினைந்து வருடங்களில் அவருடன் பழகிய அந்த நாட்கள் இன்னும் என் நினைவில் நின்று என் கண்களைகலங்கச் செய்கின்றது.

சுவாமிஜீ அவர்கள் இரக்க குணம் உடையவர்கள். முக்கியமாக குழந்தைகள் மீது அதிக இரக்கமுடையவர். என் பிள்ளைகள் நான்கு பேரும் கல்வி கற்கின்ற அந்த இக்கட் டான சூழ்நிலையில் படிப்பிற்குத் தேவையான புத்தகம், கொப்பி என்பவற்றை தந்து உதவியுள்ளார். எனது பிள்ளைகளது கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான அனைத்து பாடசாலை உபகரணங்களையும் தவறாது என்னிடம் கொடுத்தனுப்புவார். அதனை யெல்லாம் தந்துவிட்டு என்னிடம் **'தருமரெத்தினம் பிள்ளைகளை நன்றாகப் படிக்க வை'** என்று கூறுவார். இன்று என் பிள்ளைகளில் ஒன்று நன்றாகப் படித்து பல்கலைக்கழகம் வரை சென்றதில் சுவாமிஜியின் பங்கு அளவிட முடியாததாகும்.

மேலும் சுவாமிஜி இடம் வேலை செய்த காலப்பகுதியிலே தான் எங்களது சிறிய வீட்டினைக் கட்டி முடித்தேன். சுவாமிஜீ அனைவருக்கும் ஏற்றத் தாழ்வின்றி உதவி செய்பவர். நான் வீடுகட்டிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் பல்வேறுபட்ட உதவிகளை எனக்குச் செய்துள்ளார். அக்காலகட்டத்திலே எனக்கிருந்த அந்த கஷ்ரமான நிலைமையை உணர்ந்து வீட்டினைக் கட்டுவதற்கு பணஉதவிகளையும், பொருள் உதவிகளையும் மனமுவந்து செய்தார். சுவாமிஜீ அனைவரும் நன்றாக வாழவேண்டும் என்ற பரந்த மனப்பாங்கிளைக் கொண்டவர். எனக்கு மட்டுமின்றி பலருக்கும் இது போன்ற பல உதவிகளைச் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பிள்ளைகளை வாரத்திற்கு ஒரு தடவை அவரிடம் கூட்டிச் செல்வேன். மிஷனில் நடைபெறுகின்ற பூஜை பஜனைகளில் பங்குகொள்ளச் செய்வேன். அந்தச் சந்தர்ப்பங்களில் சுவாமியிடம் ஆசீர்வாதம் பெறுவதற்காக என் பிள்ளைகளை அவர் இருக்குமிடம் அழைத்துச் செல்வேன். பிள்ளைகளோடு அன்பாக பேசுவதிலும், பழகுவதிலும் அவரைப் போன்ற தயாளகுணம் கொண்டவர்கள் யாருமில்லை. பிள்ளைகளோடு அன்பாக பேசி அவர்களது படிப்பு பற்றி விசாரித்து நன்றாக படிக்குமாறு கூறுவார். அத்தோடு பல்வேறு வகையான இனிப்புக்களை வழங்கி இவர்களை இன்புறச் செய்வார். சுவாமிஜீ அவர்களது ஆசீர்வாதம் மிக முக்கியமானதொன்றாகும். அவர் மனமார என் பிள்ளைகளுக்கு கொடுத்த ஆசீர்வாதங்களே அவர்களை இந்த நல்ல நிலைமையில் நன்றாக வாழவைத்துள்ளது என நான் நினைக்கின்றேன்.

சுவாமிஜீயை நான் வானில்(van) பல இடங்களுக்கு ஏற்றிச் சென்றுள்ளேன். அத்தருணங்களில் அவர் அனைவரோடும் மிக அன்பாக நடந்து கொள்வார். பல்வேறு கூட்டங்களுக்குச் செல்கின்ற போதும் அங்கே வேறுபட்ட மதத்தலைவர்களையும் சந்திக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். அந்த மதத் தலைவர்களோடு பாரபட்சமின்றி மிகவும் மரியாதையாக அன்பாக பேசிப் பழகுவார். அப்போதெல்லாம் நான் மனதிற்குள் நினைத்துக் கொள்வேன். சுவாமிஜீயைப் போன்றவர்கள் இன்றும் இவ்உலகில் இருப்பதனால் தான் இன்னும் மழை பெய்கின்றது என்று. அந்தளவுக்கு ஓர் நல்ல மனிதராக இருந்தார்.

மேலும் சுவாமிஜீ எனது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு மாத்திரம் உதவி புரியவில்லை. பாடசாலை மாணவர்களுக்கும் உதவிபுரிந்துள்ளார். கொப்பி, புத்தகங்கள், இனிப்புக்கள், உணவுப் பொருட்கள் போன்றவற்றை வானில் அவரே ஏற்றிச் சென்று பாடசாலைகளில் வழங்கியுள்ளார். அவரது கையாலேயே பிள்ளைகளுக்கு அவற்றினைக் கொடுத்து அவர்களுடன் பேசி அளவளாவி மகிழ்ந்ததைக் கண்டு அத்தருணத்தில் நானும் மகிழ்ந்துள்ளேன். அத்தோடு பாடசாலைகளில் தாய், தந்தை இன்றிக் காணப்படும் குழந்தைகளை அடையாளம் கண்டு அவர்களை தனது இல்லத்திற்கு கொண்டு வந்து அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பார். அனைவரையும் பாரபட்சமின்றி அன்பாக நடத்துவார். அவர்களது மனதுக்கு ஏற்றவாறு அவர்களது அனைத்துத் தேவைகயையும் பூர்த்திசெய்வார்.

எங்கள் சுவாமிஜீ அன்புள்ளங் கொண்ட தாயுள்ளங் கொண்ட ஒரு மனிதர். மனிதரல்ல அவரொரு தெய்வம். அந்த தெய்வத்தைபற்றி சொல்லமுடியவில்லை. அவருடைய சேவைகள், அவர் செய்த நன்மைகள் இந்த கிராமத்தில் எவருமே மறக்கமுடியாது. அவரைப் பற்றி கதைக்கும் போது என்னால் எதுவுமே செய்யமுடியவில்லை. அவர் இன்னும் நிறைய நாள் வாழ்ந்திருக்கவேண்டும். அவரிடம் தொழிலாளியாக நான் போய் சேர்ந்த பிறகு என்னை அவருடைய பிள்ளையாக பார்த்தவர். எது கேட்டாலும் இல்லை என்று சொல்லமாட்டார். என்னை ஒரு டிரைவராக அவர் நடத்தவில்லை. என்னோடு அவருக்கு அவ்வளவு விருப்பம்.

நான் அவரிடம் இருந்து தானாக வேலையை விட்டுவிலகவில்லை. அவர்களுடைய வேனை குறைந்தவிலைக்கு எனக்குத் தந்து நல்லா இரு என்று சொன்னவர். என்ன சுவாமி தான் முழுசா மனிதனாக்கினவர். என்னிடம் நிறைய கெட்ட பழக்கம் இருந்தது. நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இடத்தில் நிலையாக வேலை செய்ததில்லை. சுவாமியிடம் சேர்ந்த பிறகு தான் ஒரு நிலையான வேலையில் இருந்திருக்கிறேன். குறைந்த சம்பளம் என்றாலும் நிறைவான வாழ்க்கையை எனக்கு தந்தவர் அந்த தெய்வம் தான்.

சுவாமியோடு பழகிய அந்த நாட்களில் எனக்கு மறக்கமுடியாத சம்பவம் இரண்டு இருக்கிறது. நான் ஒருநாள் மிஷன் வாசலில் வேனின் மோட்டர் கழற்றிப் பார்த்துக் கொண்டிருந்தேன் அப்போது யாரோ ஒருவன் மிஷன் மதிலில் வில்லங்கமான ஒரு Notice ஒட்டினான். அதற்கு இந்திய இராணுவம் நான் தான் அந்த Notice ஒட்டினது என்று என்னை பிடித்துக் கொண்டு போய் சித்திரவதை செய்தார்கள். என்னை விடவே யில்லை. இதைக் கேள்விப்பட்ட சுவாமிகள் தான் Camp க்கு வந்து Brigadiar கிட்ட இரண்டு, மூன்று தடவைகள் போய் கதைத்து வெயில், மழையில் அலைந்து என்னை அந்த பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றினார். என்னுடைய நிலைமையைப் பார்த்து கவலைப் பட்டவர். சுவாமி மட்டும் இல்லாவிட்டால் என்னை இப்போது உயிரோடு பார்க்கவே முடியாது. என்னுடைய உயிரையே அவர் காப்பாற்றியிருக்கின்றார்.

அடுத்தது எனக்கு கால், கை அசைக்க முடியாமல், பேச முடியாமல், நடக்க முடியாமல் ஆஸ்பத்திரியில் 20 நாட்கள் இருந்தேன். அப்போது என்னைப் பார்க்க வந்து **'தர்மரெத்தினம் நீ எழுந்து நடப்பாய் பார் உனக்கு எதுவுமில்லை, நம்பிக்கையைத் தளரவிடாதே உனக்கு சரிவந்து விடும்'** என்று அன்பாக என்னுடைய தலையை தடவித் தந்தவர். அது இன்னும் என்னுடைய காதுக்குள் கேட்டுக்கொண்டிருக்கு. அவருடைய அந்த ஆசீர்வாம் தான் நான் எழுந்து நடமாடுறத்துக்கு காரணம் என்று நான் நினைக்கின்றேன்.

சுவாமி எங்கு போறதோ அங்கெல்லாம் நான் போயிருக்கிறன். வேனை விட்டு இறங்கி உள்ளேபோகும் போது தர்மரெத்தினம் அவர்கள் உன்னை கவனிக்கிறார் களோ தெரியாது இந்தக் காசை வைத்து ஏதாவது வாங்கிச் சாப்பிடு என்று காசு தருவார். முதலில் என்னைப் பற்றித்தான் கவலைப்படுவார். என்னோடு அவருக்கு அவ்வளவு இரக்கம். ஏனென்றால் நான் பசியோடு இருந்தால் அவர் ரொம்பக் கவலைப்படுவார்.

நான் சுவாமியைக் கூட்டிக் கொண்டு நிறைய இடங்களுக்கு போயிருக்கிறேன். அங்கெல்லாம் இரவில் தங்கிற சூழ்நிலை வரும்போது சுவாமிஜீ மெத்தை வேணும், கட்டில் வேணும் என்றெல்லாம் கேட்டதில்லை. நிலமாக இருந்தாலும் தன்னுடைய தோளில் இருக்கும் துண்டினால் நிலத்தை துடைத்துவிட்டு தூங்குவார். அவர் எதுக்குமே ஆசைப்படமாட்டார். சுவாமிக்கு பிடித்த சாப்பாடு ரீஉம் முந்திரியம் பருப்பும் அதைத்தான் விரும்பிச் சாப்பிடுவார். அவர் சாப்பிடும் போது எனக்கும் தந்து தான் சாப்பிடுவார்.

சுவாமியைப் பற்றி இன்னொரு முக்கியமான விடயமும் ஞாகபத்திற்கு வருகிறது. இல்லத்தில் இருந்த ஒரு பெடியனுக்கு கொஞ்சம் வருத்தம் அவனை ஆஸ்பத்திரியில் வைத்திருந்தார்கள். அவர்களுடைய வீட்டிலிருந்து யாருமே வரவில்லை. அப்போ சுவாமி எனக்கு போன் பண்ணி கூப்பிட்டார். போனதும் தர்மரெத்தினம் நாங்கள் போய் சொல்லி விட்டு வருவோம் என்று கூப்பிட்டார். நாங்கள் உன்னிச்சைக்கு அவங்க வீட்டுக்குப் போய் அந்தப் பையனின் அம்மா, தங்கையையும் சந்தித்து சொன்னோம். சுவாமியைப் போல் அன்பானவர் யாரும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய தாய், தகப்பன் செய்யாத விஷயங்களையும் சுவாமி எனக்கு செய்திருக் கார். ஒவ்வொரு வருடப் பிறப்பிலும் கைவிஷேடம் வாங்கிறபோது நான் முதலில் அவருடைய கையால் தான் வாங்குவேன். அதுதான் எனக்கு சந்தோசம். நான் வராமல் கொஞ்சம் பிந்திச் சென்றாலும் என்னஅவனை இன்னும் காணவில்லை என்று தேடிக் கொண்டிருப்பார். அவருடைய உருவத்தில், குணத்தில் ஒரு தாயுடைய அந்த உள்ளத்தை நான் பார்த்தேன்.

சுவாமி என்னிடம் அடிக்கடி சொல்லுவார் 'தர்மரெத்தினம் இந்த பூமியில் பிறந்த யாருமே அனாதை இல்லை எல்லோரும் மனிதர்கள் என்று' அவருடைய மனசு எல்லோ ரையும் அரவணைக்கிறது. சுவாமிக்கு கோபம் நிறைய வரும் ஆனால் அந்த கோபம் ஐந்து நிமிடத்திற்கு மேல் இருக்காது. எனக்கு ஏதாவது கவலைகள், பிரச்சினைகள் என்றால் அவரிடம் தான் ஓடிப்போய் சொல்வேன். அதேபோல் அவருடைய விஷயங்களையும் என்னுடன் பகிர்ந்துகொள்ளுவார்.

அத்துடன் சுவாமி மூலம்தான் எனக்கு நிறைய பெரியவர்களின் பழக்கம் கிடைத்தது. அவருடன் எல்லா இடங்களுக்கும் போவார் அவரை நன்றாகத் தெரிந்தவர்கள் எல்லோ ருக்கும் என்னையும் தெரியும். சுவாமிதான் என்னுடைய குடும்பத்தையும் என்னையும் வழிநடத்தியவர். என்னைப் பொறுத்த வரைக்கும் அவர் சாகவில்லை இப்பவும் அவ ருடைய அன்பால் எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் நிறை ஆசி தந்த மாண்பாளர்

*அ.நல்லம்மா*
*முன்னாள், சாரதா மகளிர் இல்ல மேற்பார்வையாளர்*

சுவாமி ஜீவனாநந்தஜீ அவர்கள் அன்பாகவும் ஆதரவாகவும் பழகுவார். அத்தோடு பரந்த மனப்பாங்கு உடையவர். ஏழை எளியவர்கள் மீது மிகுந்த கருணை காட்டுவார். விருந்தினர்களை உபசரிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்.

சுவாமிஜீயை கண்டதும் பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. இந்த இடத்தில் கண்டபோது சுவாமிஜீ என்னை இந்த இடத்தில் கடைசிவரை வைத்துப்பார்ப்பார் என்று நம்பினேன். நான் அன்று நினைத்தது போல் அவரின் நல்ல சிந்தனையால் நான் இன்றுவரை நன்றாக உள்ளேன்.

காலஞ்சென்ற ஆ.பத்மநாதன் எனது சகோதரன் மூலம் என்னை அழைத்து வரும்படி கூறியிருந்தார். அண்ணா என்னை அழைத்துவந்து சேவை செய்யுமாறு கூறினார்.

1981.05.05 காரைதீவு இல்லத்தில் சேர்ந்தேன். 1985.03.06 சாரதா இல்லத்தில் சேர்ந்தேன். அன்று தொடக்கம் 2012 வரை சேவை செய்து நானாகவே ஓய்வு பெறுகின்றேன்.

சிறுபிள்ளைகள்தான் தப்பு செய்யும்; அதனால் நாம்தான் அன்பாக அரவணைத்து நமது குழந்தைகள் போல் பார்க்க வேண்டும் என்று புத்தி சொல்வார் சுவாமிஜீ அவர்கள். முதலாவது குற்றம் மன்னிப்பு கேட்டு வைத்து கொள்ள வேண்டும். திரும்ப திரும்ப பிழை செய்தால் பாதுகாவலரை கூப்பிட்டு கதைப்போம் என்று சொல்வார்கள். இது தவிர திடீர் முடிவு செய்யமாட்டார். அப்படி ஒரு மனப்பாங்கு உள்ளவர்தான் சுவாமிஜீ ஜீவனாநந்தாஜீ.

சுவாமியின் ஆசியினாலும் நான் இங்கு வந்ததாலும் நான் சமூகத்தில் நிறைய பெரியவர்களையும், நல்லவர்களையும் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. பெரி யோரின் ஆசியும் பெற்று நிறைவைக் கண்டுள்ளேன். இந்தியாவில் இருந்து வருகை தரும் சுவாமிஜீ அவர்களின் ஆசிர்வாதத்தையும், தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்ததை நினைத்து பெருமைப்படுகின்றேன். இந்த இடத்தின் பெருமை வெளி இடங்களுக்குச் செல்லும் போதுதான் நமக்குத் தெரியும். அவ்வாறு நான் வெளியில் செல்லும்போது பெருமையும், மதிப்பும் பெற்றிருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் அருளால் சுவாமி விபுலானந்தர் இருக்கும் இடத்தின் அருகாமையில் எனக்கென்று காணி வாங்கி வீடு கட்டி வாழ்வதோடு எனது சகோதரர்கள் இரண்டுபேர் இங்கு வாழ்வதற்கு அன்னை அருள் புரிந்துள்ளார். எனக்கு இவ்விடத்தில் கூட்டுக் குடும்பமாய் வாழ்வது மகிழ்ச்சியாக இருக்கிறது.

மற்றும் அன்னை அருளினால் இவ்வில்லத்தில் இருந்து அனைத்து மாணவ மாணவிகளும் இராமகிருஷ்ணர், அன்னையார், விவேகானந்தர் மூவரின் அருளால் இவ்வில்லத்தில் பல வேலைகளைப் பழகி, ஒழுக்கம், பண்பாடு, கட்டுப்பாடு, அமைதி என்பவற்றைக் கடைப்பிடித்து வளர்ந்ததினால் தற்போது வெளியில் சென்று நல்ல உத்தியோகம் கிடைத்து வாழ்கின்றனர். ஒவ்வொரு பிள்ளையும் ஏதாவது ஒரு சிறிய தொழிலையேனும் செய்து கொண்டு வாழ்கின்றார்கள். அதுமட்டுமல்லாது கோலம் போடுதல், தையல், மாலை கட்டுதல் இவ்வாறு பல தொழில்களை பழகி தற்போது உழைத்து முன்னேற்றம் பெற்று பெருமை அடைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ விக்கினேசுவரர் திருத்தொண்டர் சபையில் சுவாமி ஜீவனாநந்தா

*எம். கணேசராஜா*
*செயலாளர்,*
*ஸ்ரீ விக்கினேசுவரர் திருத்தொண்டர் சபை,*
*மட்டக்களப்பு*

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் வழிநின்று சமய மற்றும் சமூகப்பணியாற்றிய சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ் அவர்கள் மகாசமாதியடைந்து ஆண்டுகள் பல நகர்ந்துவிட்டாலும், அவர் நம் ஒவ்வோருவரதும் இலக்குகள் நிறைவேற காட்டியவழிகளும், கூறிய அறிவுரை களும் அவர் வழி தொடர்ந்த அனைவருக்கும் பெருந்துணையானது என்றால் மிகையாகாது.

இந்தவகையில் குறிப்பாக சுவாமிஜீ அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் கல்லடிக் கிளையின் தலைமைப்பொறுப்பில் இருந்து அப்பாரிய நிறுவனத்தை வழிநடத்தி ஏராளமான சிறுவர்களின் வாழ்க்கையில் ஒளியூட்டி அவர்களை வாழ்வின் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல உந்துகோலாய்த் திகழ்ந்துள்ளார் என்பதை நினைக்கும்போது அவருடைய வழிகாட்டலின் மகத்துவத்தை வியக்கக் கூடியதாகவுள்ளது. அத்தோடு நின்று விடாமல் அவர் தம் பணியுடன், இந்து தருமம் சிறக்கவும் இந்துமதம் தழைக்கவும் ஏதுவான காரியங்களை மேற்கொண்டார் என்பது நாம் அறிந்த விடயம்.

குறிப்பாக இன்று மாமாங்கம் வீதியிலே ஓங்கிநின்று மக்கள் தொண்டாற்றும் ஸ்ரீ விக்கினேசுவரர் திருத்தொண்டர் சபையின் முதற் போசகர் சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் என்று சொல்வதால் நாம் பெருமையடைத்தான் வேண்டும். இற்றைக்கு சுமார் 48 வருடங்களாக இறைபணியிலும் மக்கள் தொண்டாற்றுவதிலும் முனைப்புக் காட்டும் முகமாக உருவாகிய ஸ்ரீ விக்கினேசுவரர் திருத்தொண்டர் சபை மக்கள் தொண்டே தமது தொடர் இலக்கு என்ற நோக்கிற்கு இணங்க தனக்கென ஒரு தனியான கட்டடத்தை நிறுவ முனைந்தவேளை தொண்டர்கள் மற்றும் நலன்விரும்பிகளின் உதவியுடனும் சுவாமிஜீயின் அறிவுரையுடனும் அது கைகூடி வந்தவேளை கட்டடத்திற்கான அடிக்கல்லை நட்டு வைத்த திருத்தொண்டர் சபையின் தொடர்ச்சியான சேவைக்கு அத்திவாரமிட்டு வைத்தவர் மகா சமாதியடைந்த சுவாமிஜீ என்பது நினைவுகூரப்பட வேண்டிய ஒரு விடயமாகும். அவர் நட்டுவைத்த அடிக்கல்லில் உருவான கட்டடம் இன்று மிகப்பெரியதொரு விருட்சமாக ஓங்கிநின்றுமக்கள் தொண்டாற்றிக் கொண்டிருப்பதை எண்ணிப் பெருமையடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் திருத்தொண்டர் சபையின் போசகராக தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் இருந்து சபை வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் சபையின் தொண்டர்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் சுவாமிஜீ அவர்கள்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் போதனைகளை அடியொற்றி இராமகிருஷ்ண மடம் மூலம் மக்களுக்கு சேவை செய்த சுவாமிஜீ அவர்கள் ஸ்ரீ விக்கினேசுவரர் திருத்தொண்டர் சபை வருடந்தோறும் நடத்தும் மாமாங்கேசுவரர் உற்சவவிழா நிகழ்வு மற்றும் நவராத்திரி விழா நிகழ்வு என்பவற்றில் ஆசியுரை வழங்கி வந்ததுடன், தனது ஆசியுரை மூலம் எமது தொண்டர்களையும் மக்களையும் தெம்பூட்டி சமயம் மற்றும் சமூகப் பணிகளின் பால் மிகுந்த ஈடுபாடு கொள்ளும் மனோநிலைக்கு அவர்களை இட்டுச் சென்றது மட்டு மல்லாமல் தொண்டர் சபையின் பணிகள் தொய்வில்லாமல் வருடாவருடம் தொடர்ச்சியாக நடைபெறவும் உறுதுணையாய் திகழ்ந்தார்.

அவர் வழிதொடர்ந்து தொண்டர்களின் பணிகளை இன்றும் தற்போதுள்ள கல்லடி இராமகிருஷ்ண மிஷன் கிளையின் சுவாமிகளின் வழிகாட்டல்களின் கீழ் நாம் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம் என்பதில் பெருமையடைவதோடு, கல்லடி ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் கிளைமூலம் மிகச்சிறந்த ஆன்மிக மற்றும் சமூகப் பணியாற்றிய சுவாமிகளுள் என்றும் எம்மால் பூசிக்கப்பட வேண்டியவர் மகாசமாதியடைந்த சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘துறவும் தூய்மையும் தாயினும் சாலப் பரிந்து........’

க.மதிவண்ணன்
இ.சி குருகுல பழைய மாணவன்

அது ஓர் புதன்கிழமை என்று ஞாபகம் 09 ஆம் திகதி 1985 ஆம் ஆண்டு முதல் நாள் மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுக்குள் காலடி எடுத்து வைக்கின்றேன். எனது மூத்த சகோதரி ஆனைப்பந்தி சாரதா பெண்கள் விடுதியின் மேற்பார்வையாளர்களுள் ஒருவராகக் கடமையாற்றுகின்றார், அவரது சம்பளத்தை (150.00) எனக்குரிய அரைக்கட்டணமாகச் செலுத்தி (அப்போது முழுக்கட்டணம் 300.00) இல்லத்தில் சேர்க்கப்படுகின்றேன். அப்போது எனது பெயர் காசு கட்டி சேர்ந்தோர் வரவுப்பதிவேட்டில் (Paying Boarders) பதியப்படுகின்றது. அதுமட்டுமல்ல இல்லத்தில் சேர்ப்பதற்கு 5ஆம் வகுப்பின் இறுதித் தேர்வில் முதலாம் பிள்ளையாக வரவேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் 1984 ஆம் ஆண்டு மண்டூர் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையின் இறுதித்தேர்வில் முதலாம் பிள்ளையாக வந்த பரீட்சைத்தேர்வு (Report) அறிக்கையும் சமர்ப்பிக்கப்படுகின்றது. சிவானந்தா வித்தியாலயத்திலும் சேர்க்கப்பட்டேன்.

இல்லத்தில் சேர்க்கப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் செங்கலடி சிவதொண்டன் நிலையத்தின் பா ஓதல் பண்ணிசைப்போட்டியில் பங்குபற்றி மூன்றாம் இடம்பெற்றேன். முதல் மூன்று இடங்களிற்கு மட்டுமே பணப்பரிசு. எனக்கு ரூ.50.00 பணப்பரிசும் சான்றிதழும் கிடைக்கின்றது. (இப்பணப்பரிசு சுவாமிகள் இந்தியா செல்வதற்கு முன்னர் கிடைத்தது. சுமார் 03 ஆண்டுகளின் பின்னர் பரிசு பெற்ற அதே கடித உறையுடன் என்னிடம் மீளவும் தந்தார்). இவ்வாண்டில் பணப்பரிசில் பெற்றவன் நான் மட்டுமே. இதன் பிரதி பலிப்பாக நான் காசுகட்டிப் படிக்கவேண்டும் என்ற நியதியிலிருந்து விடுவிக்கப்படு கின்றேன்.தற்போது எனது பெயர் அடுத்த வரவுப்பதிவேட்டிற்கு(Orpha nage)மாற்றப் படுகின்றது.

இல்லத்தில் கல்விகற்றபோது பாட்டு, இசை, கோயில் வேலை, பூசை செய்தல் மாலை கட்டுதல், சுத்திகரிப்பு வேலைகள் , தோட்டவேலை என்று சகல வேலைகளிலும் பயிற்சி வழங்கப்படுகின்றது. இவ்வேளையில் சுவாமி இராஜேஸ்வரானந்தாஜீ, அஜராத்மானந்தாஜீ அவர்களது மகத்தான வரவேற்புடன் கூடிய வருகை நிகழ்கின்றது. ஜீவனாநந்தஜீ மஹராஜ் சுகயீனம் காரணமாக இந்தியா செல்கின்றார். இராஜேஸ்வரானந்தஜீ மஹராஜ் இல்லப் பொறுப்பை ஏற்கின்றார். தொடர்ந்து இராஜேஸ்வரானந்தா சுவாமிகளின் அன்பிலும் அரவணைப்பிலும் வளர்கின்றேன். குருகுலச் செயற்பாடுகளில் போதிய முன்னேற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படினும் எனது பாடசாலைக்கல்வியில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் காணப்பட்ட பின்னடைவு காரணமாக க.பொ.த.(சா/த) பரீட்சையைக் கருத்திற் கொண்டு இல்லத்தைவிட்டு விலகவேண்டிய சூழல் ஏற்படுகின்றது. இறுதி நாள் சுவாமி இராஜேஸ்வரானந்தாஜீ மஹராஜிடம் விடைபெறச் செல்கின்றேன். சுவாமிகளைக் கண்டதும் கண்ணீர் மல்கி தேம்பித்தேம்பி அழுகின்றேன். சுவாமிகள் அன்பாய் அரவணைத்து ஆறுதல் கூறி 'இந்த இல்லத்தின் கதவு எப்போதும் உனக்குத் திறந்திருக்கும்', நாளை கற்பகதருதினம் இங்கு வரவேண்டும் என்று அன்புக்கட்டளை பிறப்பித்தார். இத்துடன் குருகுலத்தில் எனது வாழ்வு முடிவுறுகின்றது. அத்தோடு சுவாமிகள் இந்தியா சென்று வந்ததும் குருமஹராஜ், அன்னையார், சுவாமிஜீ ஆகியோரின் படங்கள் இணைக்கப்பட்ட மடிப்பு (Folder) ஒன்றும் தந்தார். மறுநாள் கற்பகதரு தினம் காலை பூசைக்கு வந்தேன் சுவாமிஜீ அன்புடன் வரவேற்றார். காலை உணவு தந்து உபசரித்தார்.

இல்லத்தில் இருந்த காலத்தில் சுவாமி ஜீவனாநந்தா ஓர் கண்டிப்பான நிர்வாகியாகவே தென்பட்டார். உண்மையில் அப்போது சிறுவனாயிருந்தபடியால் என்னால் அவரது உயர்ந்த குணங்களைப் புரிந்து கொள்ள முடியாமற்போனது. சுவாமிகள் மட்டுமல்ல இல்லத்தின் பயிற்சிகளும் ஒழுங்கு விதிகளும், கட்டுப்பாடுகளும் கூட வெறுமனே ஒழுங்கு விதிகளாகத் தென்பட்டனவே தவிர அவற்றின் ஆழமான அர்த்தங்களும் வாழ்வியல் உண்மைகளும் விளங்காதிருந்தன.

ஆனால் நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பது போல இல்லத்தை விட்டு விலகிய பின்னரே அதன் செயற்பாடுகளும், கட்டுப்பாடுகளும், விதிகளும் பயிற்சிகளும் ஒவ்வொன்றாக என்னுள் அவற்றின் மேன்மையான அர்த்தங்களுடன் ஆழப்பதியத் தொடங்கின. இப்பண்புகளும் பயிற்சிகளும் எம்மை சமூகத்தின் ஏனையோரிடமிருந்து இலகுவாக வேறுபடுத்தி நல்லதொரு அடையாளத்தை வழங்கலாயின. இப்போது குருகுலத்தின் மீதும் சுவாமிகள் மீதும் ஓர் வித்தியாசமான பிரிக்க முடியாத ஆத்மார்த்தமான ஈடுபாடும் அன்பும் ஏற்படலாயிற்று. இல்லத்தின் மாணவனாய் வாழ இன்னொரு சந்தர்ப்பம் வாய்க்காதோ என்று மனம் ஏங்கியது.

'ஒவ்வொரு மனிதனையும் தனது சொந்தக்காலில் நிற்கச்செய்யவல்ல கல்வியே உண்மைக்கல்வி', 'பாமரனைப் பண்புள்ளவனாகவும் பண்புள்ளவனை தெய்வமாகவும் உருவாக்குவதே உண்மைச் சமயமாகும்' என்ற சுவாமி விவேகாநந்தரின் தெய்வீக வாக்குகளைப் பிரதிபலிப்பனவாய் இல்லத்தின் சகல பயிற்சிகளும் ஒழுங்கு விதிகளும் இருக்க வேண்டும் என்பதில் சுவாமிகள் எப்போதும் உறுதியாய் இருந்தார். இல்லத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளும் கடைப்பிடிக்கப்படும் ஒழுங்கு முறைகளும் ஒவ்வொரு மனிதனதும் எதிர்கால வாழ்க்கைக்கு பலமானதும், உறுதியானதும், ஆன்மீக ரீதியானதுமான ஓர் உன்னத வாழ்வியலுக்கு அடிப்படையாயும் ஆதாரமாயும் விளங்குவன. எதிர்கால வாழ்வின் எத்தகைய சவாலையும் ஆத்மீகத் துணிச்சலோடு எதிர்கொள்ளும் ஆற்றலை அவனுக்கு வழங்குவனவாய் நன்கு திட்டமிடப்பட்டு அக்காலம் முதல் பண்பட்ட துறவிகளால் உருவாக்கப்பட்டவை. அவன் ஏழையாயினும் சரி, பணக் காரனாயினும் சரி, படித்தவனாயினும் சரி, படிக்காதவனாயினும் சரி, உயர்தொழில் புரிபவனாயினும் சரி, சிறுதொழில் புரிபவனாயினும் சரி, ஊனப்பட்டவனாயினும் சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தகைய இக்கட்டான சூழலையும் எதிர்கொண்டு வெற்றிபெறும் ஆற்றலையும் துணிச்சலையும் அவனுள்ளே உருவாக்கும் ஆற்றலுள்ளவை. மனித வாழ்வியலின் ஒவ்வொரு அம்சங்களையும் ஆராய்ந்து தெளிந்த தூய்மையான துறவிகளால் உருவாக்கப்பட்ட ஒழுக்கவிதிகளும் பயிற்சிகளுமே அவை. ஒன்றில் மட்டும் சுவாமிகள் உறுதியாய் இருந்தார். டாக்டர்களையும் என்ஜினியர்களையும் உருவாக்குவதைவிட பண்புள்ள மனிதர்களை இல்லம் உருவாக்கினால் போதும் என்ற அடிப்படையே அது. அதுமட்டுமல்ல; டாக்டர்களையும் என்ஜினியர்களையும் உருவாக்குவதற்கு பாடசாலைகளும் சாதாரண கல்வியறிவுள்ள பெற்றோரும் போதும். அதற்கு குருகுலங்களும் துறவிகளும் தேவையில்லை என்பதே சுவாமிகளின் எண்ணம்போலும்.

இனி இத்தகைய வாழ்வியலில் எம்மை ஆற்றுப்படுத்திய சுவாமி ஜீவனாநந்தஜீ அவர்களைப் பற்றிச் சற்று ஆராய்வோமாயின்,

உண்மையிலேயே சுவாமிகளின் சமாதிக்குப்பின்னரே குருதேவர்பால் மனம் முழுமையாக ஈடுபடத்தொடங்கியது அதுவரைக்கும் அனைத்துமாய் இருந்தவர் சுவாமிகளே. அந்தளவிற்கு சுவாமிகளின் வாழ்க்கை குருதேவரின் தெய்வாம்சம் பொருந்தியதாய் இருந்தது. இப்போதெல்லாம் சுவாமிகளை நினைத்தால் மிகுந்த பெருமை வரும். ஏனெனில் எறும்பு சேர்ப்பதுபோல் சிறிது சிறிதாய்ச்சேர்த்து இன்று மிகப்பெரிய பொருளாதார பலத்துடன் விளங்குவதற்கு உழைத்த சுவாமிகளின் வாழ்க்கையின் எளிமை ஒரு தூய்மையான துறவியை நினைத்துப் பெருமைப்படச் செய்கின்றது. எப்போதும் இல்லத்தின் குழந்தைகட்கும், பக்தர்கட்கும்,அன்பர்கட்குமாய்த் திறந்தே இருக்கும் அறை, யாவரும் எப்போதும் சுவாமிகளைச் சந்திக்கலாம் என்ற தன்னலங்கருதாத வாழ்க்கை சுவாமிகளின் துறவு வாழ்க்கையின் கள்ளங்கபடமற்ற வெளிப்படைத்தன்மையை வெளிக்காட்டின.' "The sky thy roof, the grass thy bed and food what chance may bring ,well cooked or ill judge not…". From The Sanyasin Geetham of Swami Vivekananda. ('வானம் கூரையாம் கீழே புற்றரை மெத்தையதுவென ஆகுமே தானாய் வந்து கிடைப்பது உண்டி தீது நன்றென்று எண்ணாய்…….') அப்போதெல்லாம்' சுவாமிகள் உறங்குவது இல்லத்தின் முன்மண்டபத்திலுள்ள சுவாமி விவேகாநந்தரின் பெரிய படத்தின் முன்னால் தரையில் பாய் விரித்து பக்கத்தில் டோச் லைற்றுடன் தான். பிற்காலத்தில் சற்று நோய்வாய்ப்பட்ட பின்னரே கட்டிலும் நுளம்புவலையும். பக்கத்தில் படுத்திருக்கும் மாணவனுக்கும் தெரியாமல் அதிகாலையிலேலே எழுந்து நாங்கள் எழுந்திருக்கும்போது சுவாமிகள் காலைக்கடன் முடித்து கோயிலில் இருப்பார்.

காசும் கணக்கும் சுவாமிகளின் இரு கண்கள். ஆனாலும் இல்லக் குழந்தைகளைப் பொறுத்து சுவாமிகளின் மனப்பாங்கு இவ்வாறு இருந்தது. ஒருநாள் இல்ல மாணவர் ஒருவர் சுவாமிகளின் மேசைமீதிருந்த பணத்தைத் திருடிவிட்டான். பின்னர் பிடிபட்டும் போனான். இதனைத் தொடர்ந்து அந்தப் பையனை வீடடிற்கு அனுப்பவேண்டும் என்றும் அல்லது போலீசில் ஒப்படைக்கவேண்டும் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் சுவாமிகளின் பார்வையே வேறு, சுவாமிகள் கூறினார் 'பிள்ளையொருவன் தனது தந்தையினுடைய பொக்கற்றில் இருந்து பணத்தைத திருடினால் எந்தத் தந்தையாவது அவனை போலீசில் ஒப்படைக்க முற்படுவானா அல்லது தவறு செய்தவனைப் புத்திமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறித் திருத்தாமல் வீட்டிற்கு அனுப்பினால் நம்மையே நம்பி வந்த அவனது எதிர்காலம் என்னாகும். திருடியதால் சுவாமி துரத்திவிட்டார் என்று ஊரவர் ஒதுக்கினால் அவன் சமூகத்தில் மேலும் கெட்டவனாகிவிட சந்தர்ப்பம் அதிகமாகுமன்றோ அன்றியும் அவன் வீட்டிற்குச் சென்றாலும் திருந்துவான் என்பதற்கு என்ன உத்தரவாதம்' என்றார். இதுதான் சுவாமிகளின் தாய்மைப்பாங்கு. இவ்வாறு பேருக்காக இல்லாமல் உண்மையிலேலே ஒரு தாயின் மனோநிலையில் இருந்துகொண்டு இல்லக்குழந்தைகளைப் பராமரித்த சுவாமிகளின் செயற்பாடானது 'தாயினும் சாலப்பரிந்து......' என்ற உன்னதத் தன்மைக்கு இலக்கண மாகின்றது.

அப்போதெல்லாம் குறித்த வகுப்பிற்குப் பின்னர் வீடு செல்லவேண்டும் என்ற வரையறை இல்லை. குறித்த மாணவருக்கு வீட்டில் வசதியில்லை அல்லது வேறு காரணங் கள் வேண்டிநிற்பின் தொடர்ந்து இல்லத்தில் தங்கியிருந்து இல்லவேலைகளைக் கவனிக் கலாம். இதனால் தொடர்ச்சியாக பிள்ளைகளை மேற்பார்வை செய்யவும் இல்லத்தின் ஏனைய வேலைகளைக் கவனிக்கவும் வெளியாட்கள் தேவைப்படுவதில்லை.தொடர்ச்சியாக பெரிய மாணவர்கள் இருப்பதால் தலைமுறை தலைமுறையாக சிறிய மாணவர்களை அவர்கள் கவனித்து வருவதாலும், பெரிய மாணவர்களின் நடத்தைகளையும், பழக்க வழக்கங்களையும் சிறிய மாணவர்கள் பார்த்தே பழகுவதாலும், இல்லத்தின் செயற் பாட்டிற்கு ஒருபோதும் பாதிப்போ, பங்கமோ ஏற்பட்டதில்லை. இதுவே சுவாமிகள் மூன்று இல்லங்களிலும் சுமார் 180 க்கு மேற்பட்ட மாணவர்களை தனியொருவராய் இருந்து கொண்டு வழிப்படுத்திய உளவியல் முகாமைத்துவப்பாங்கு எனலாம். இங்கு சுவாமிகள் பிரசன்னமாயிருக்கும் இடத்திலும் பார்க்க அவர் பிரசன்னமாகாத இடத்தின் நிர்வாகமும் ஒழுங்கும் மேலும் சிறப்பாய் இருப்பது விசேட பண்பாகும். இதிலே இன்னொரு விசேடம் என்னவென்றால் ஒவ்வொரு மாணவனும் ஏதோ ஒரு துறையில் தலைமைத்துவப் பண்பையும் நிபுணத்துவத்தையும் பெற்றுவிடுவதாகும். உதாரணமாக இல்லத்தின் மின்சாரவேலைகளை குறித்த தொழிநுட்பப் பணியாளருடன் உதவிக்கு செல்லும் மாணவன் நாளாவட்டத்தில் அது விடயமான சகலவேலைகளையும் அவனே கவனிக்கத்தொடங்கிவிடுகின்றான். இவ்வாறே இங்கு நடைபெறும் ஒவ்வொரு செயற்பாடு களிலும் மாணவர்களுக்கும் பயிற்சியளிக்கப்படுவதால் அவர்களும் பிற்காலத்தில் அத்துறை சார்ந்து நிபுணத்துவம் பெறச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுவந்தது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் சுனாமி இடம் பெற்றதைத் தொடர்ந்து முகாம்களிலுள்ள மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்காக வேண்டிய உதவிகளைப் புரிதற்காக சுவாமிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மண்டூர் இராமகிருஷ்ண மன்றத்திலிருந்து அன்பர்கள் சிலர் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் வந்திறங்கியதும் முன்னாலிருந்த பெரியவர் ஒருவரிடம் தாங்கள் வந்த விடயத்தைக்கூற அப்பெரியவரோ 'இங்கு அப்படி யொன்றும் வேலையில்லை அதற்கு யாரும் தேவையுமில்லை' என்று கூறிவிட்டார். இவ்விடயம் பின்னர் சுவாமிகளுக்குத் தெரியவர சுவாமிகள் மிகுந்த மனமுடைந்து அவர்களை அழைத்து 'தம்பி அவர் பொருட்டு நான் உங்களிடம் மன்னிப்புக் கோரு கின்றேன். சும்மா கதிரையில் இருந்து கொண்டு சேவைபுரிய முடியாது எத்தனை பேரின் உதவிகளைப் பெற்று காரியம் இங்கு ஆற்றப்படுகின்றது என்பது அவர்களுக்கு விளங்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது குருதேவரின் பணி தயவுசெய்து இவ்விடயத்தைப் பெரிதுபடுத்தாமல் சீக்கிரமாக உணவுசமைக்கத் தொடங்குங்கள்' என்று மிகுந்த விநயமாகச் சுவாமிகள் கூறினார். அவர்களும் வந்த வேலையைத் தொடங்கலாயினர். சுவாமிகள் எத்தகைய சவாலையும் எதிர்கொண்டு குருதேவரின் பணியை நிறைவேற்றுவதில் கொண்டிருந்த ஈடுபாட்டை மட்டுமன்றி அன்பர்கள் பக்தர்களின் மனம் நோகாதவாறு அவர்களை இறைபணிக்குள் ஈர்த்துக்கொள்ளும் பாங்கினையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இல்லத்தின் வளர்ச்சிக்கு உதவிசெய்தவர்களை சுவாமிகள் ஒருபோதும் மறந்து விடுவதில்லை. அவர்களது பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும்கூட அதே பாங்கில் மதித்து உபசரிப்பார். 'தம்பி இந்த இல்லம் வானத்திலிருந்து மந்திரத்தால் வருவிக்கப்பட்ட தல்ல. இப்பிரதேச மக்களதும் அன்பர்களதும், பக்தர்களதும், நன்கொடையாளர்களதும், இல்லக்குழந்தைகளதும், குருகுலப் பழைய மாணவர்களதும் அயராத உழைப்பினாலும் கூட்டுமுயற்சியினாலும் உருவாக்கப்பட்டது. இந்த இல்லத்தின் வளர்ச்சிக்கு சிறு பங்களிப் பினைச் செய்தவர்கள்கூட பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அவர்களது மனம் புண்பட்டால் குருதேவர் நம்மைச் சுட்டுவிடுவார்' என்றார். இது சுவாமிகள் எவ்வாறு தமது அன்பர்களையும் பக்தர்களையும் நேசித்தார் என்பதற்குச் சான்றாய் அமைகின்றது.

இல்லத்தின் பழைய மாணவர்கள் சுவாமிகளின் உழைக்கும் கரங்கள். இல்லத்தின் அனைத்துச் செயற்பாடுகளிலும் சுவாமிகளுடன் தோளோடு தோளாக நின்று செயற் படுத்துவதில் இல்லப் பழைய மாணவர்களின் பங்கு இன்றியமையாதது. எவ்வளவு காலம் சென்றாலும் சரி ஒரு பழைய மாணவன் வந்தால் அவனை அடையாளம் கண்டு விடுவது சுவாமிகளின் சிறப்பு. அவ்வளவு ஞாபகசக்தி சுவாமிகளுக்கு. அதுமட்டுமன்றி அம்மாணவர் இல்லத்திலிருந்தபோது என்னென்ன செய்தார் என்பதையும் அப்போதே கூறிவிடுவார்.இல்லத்தின் பழைய மாணவர்கள் சுவாமிகளின் அன்புக்கட்டளைக்காக எப்போதும் காத்துக்கிடப்பர். சுவாமிகளும் அத்தியந்த உரிமையோடு கட்டளைகளைப் பிறப்பிப்பார். இல்லத்தில் நடைபெறும் விழாக்கள் முதல் இல்லத்திற்கு வெளியே நடாத்தப்படும் புத்தகக்கண்காட்சி, ஊர்கள்தோறும் நடாத்தப்படும் ஜயந்தி விழாக்கள் ஊர்வலங்கள் என்று எல்லா நிகழ்வுகளிலும் இவர்கள் உள்வீட்டுப்பிள்ளைகள். அது மட்டுமல்ல சுவாமிகளுக்கு இவர்கள் அடிக்கடி இல்லத்திற்கு வரவேண்டும்.தங்கியிருந்து உணவருந்திச் செல்லவேண்டும. இல்லாவிட்டால் சுவாமிக்குக் கோபம் வரும். நீண்ட நாளாய் ஒருவரைக் காணாவிட்டால் அதே ஊரைச்சேர்ந்த வேறு மாணவனைக்கண்டால் 'அவனை வரச்சொல்' என்பார்.

அதுமட்டுமன்றி பழைய மாணவர்கள் தாங்கள் இந்த இல்லங்கள் அமைக்கப்பட்ட போது செய்த வேலைகள் பற்றிக் கூறும்போது எமக்கு அது மிகுந்த ஆச்சரியமாய் இருக்கும். 'சுடலையில் எழுந்திடு பெருங்கழகம் சூழ்ந்த நம் மாணவர் வாழ் நிலையம்......' என்பதற்கிணங்க சுடுகாடாய்க் கிடந்த நிலத்தினை காடு வெட்டி கல்தூக்கி மண்சுமந்து இல்லமமைத்த கதையும், கரடியனாற்றில் களனி செய்து ரக்ரரில் நெல் ஏற்றி வந்த கதையும், கதிர்காமத்தில் அணையா அடுப்பினில் சமைத்து அன்னதானமிட்ட கதையும் கேட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவர்கள் பட்டபாடேங்கே இன்று இருந்த இடத்தில் இருந்து கொண்டு உண வருந்தும் நாமெங்கே என்று எண்ணி வெட்கப்படத் தோன்றுகின்றது.

மேலும் தனது இல்ல மாணவர் ஒருவர் ஏதாவது துறை சார்ந்து அல்லது தொழில் சார்ந்து உயர் பதவிகளை அல்லது பட்டங்கள் பெற்றால் சுவாமிகள் அதனை வெகுவாகப் புகழ்ந்து பேசுவார் . வருவோர் போவோரிடமெல்லாம் அதனைக்கூறிப் பேசுவார் இவ்வாறு ஒரு தாய் தனது பிள்ளையின் சிறு முன்னேற்றத்திலும் அடையும் பெருமையை சுவாமி களிடமும் காணக்கூடியதாயிருந்தது.

இவ்வாறு இல்லத்திலிருக்கும்போது கட்டுப்பாடுமிக்க மேற்பார்வையாளராக தெரிந்த சுவாமிகள் இல்லத்தைவிட்டு விலகியதும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஸ்ரீ ராமகிருஷ்ண பாரம்பரியத்தைக் கட்டிக்காக்கும் சிறந்த துறவியாகச் செயற்பட்டார். ஆனால் அவரது சமாதிக்குப் பின்னர் அவரது செயற்பாடுகளையும் வாழ்க்கைமுறையையும் உற்றுநோக்கின் எம்முள் தெய்வமாய் குருதேவரின் பிரத்தியட்சமாய் நின்று நிலைக்கின்றார் என்பது கண்கூடு.

- 'நீ எம்மதத்தைச் சேர்ந்தவன் என்பது முக்கியமானதல்ல. நீ எவ்வளவு தூரம் அருள் தாகம் பிடித்தவனாக இருக்கிறாய் என்பதே முக்கியமானது. ஒருவனுக்கு அருள் தாகம் தீவிரமாக உண்டாகுமாகில் அவன் எம்மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் இறைவனை நிச்சமாக அடைவான்'
- 'மரம்வெட்டுகிற ஒருவன் பெரும்பகுதியைச் சிரமப்பட்டு வெட்டி முடிக்கிறான். பிறகு அவன் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறபொழுது வெட்டுப்படாது எஞ்சியிருக்கிற பகுதி தன்னைத்தானே ஒடித்துக்கொண்டு தரையில் தடால் என்று விழுகிறது. மனிதன் மரத்தை வெட்டிய பகுதிக்கு நிகர், குரு சிஷ்யனுக்குச் செய்து வைத்த ஆத்ம பரிபாகம். மரம் தானே ஒடிந்து விழுதற்கு நிகர் சிஷ்யன் எடுத்துக்கொண்ட சுயப்பிரயத்தனம்'
- 'நாணல் ஒன்று தன்னளவில் நீரின்மீது மிதக்கிறது. அதன்மீது ஒரு சிறு குருவி உட்கார்ந்தாலும் அது மூழ்கிப்போம். அனால் பெரிய மரக்கட்டை ஒன்றோ தான் மட்டும் மிதப்பது அல்ல. அது மிதக்கும்பொழுது பலபேர் அதன்மீது உட்கார்ந்திருக்கவும் இடங்கொடுக்கிறது. தங்கள் சொந்த முக்தியைக் கவனித்துக் கொள்பவர்கள் நாணல் போன்றவர்கள். உலகை உய்விக்க வந்த பெருமக்கள் பெரிய மரக்கட்டை போன்றவர்கள்'

(பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சேவையின் சிகரம்' சுவாமி ஜீவனாநந்தர் அவர்கள்

பொ. கந்தையா
காந்தி ஆசிரியர், திருகோணமலை

'ஒன்றேகுலம் ஒருவனே தேவன்'

சமயங்களும் அதிகம். சமயப் போர்களும் அதிகம். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சர் பெயரால் சுவாமி விவேகானந்தரால் அமைக்கப் பெற்ற இராம கிருஷ்ணமிஷன் உலகெங்கும் சமயத்தையும், சமரசத்தையும் வளர்த்து சமயப் போர்களுக்கு இடமளிக்காமல் சமய, சமூகத் தொண்டுகளை ஆற்றிவருகிறது.

சுவாமி விபுலானந்த அடிகள் மட்டக்களப்பில் கிராமங்கள் தோறும் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளை அமைத்தும் சிறுவர், சிறுமிகளின் இல்லங்களை அமைத்தும் மடத்தை ஸ்தாபித்தும் சமயசமூகப் பணிகளைத் திறம்பட நடத்தினார்கள்.

விபுலானந்த அடிகளின் பின் சுவாமிநடராஜானந்தர் அவர்கள் மிஷன் பணிகளைத் தொடர்ந்துநடத்தினார்கள். அதன் பின் சுவாமி ஜீவனாநந்தா அவர்கள் பணிகளை மேற்கொண்டார்களா. சுவாமி ஜீவனாநந்தாஅவர்கள் மட்டக்களப்பு வலையிறவுக் கிராமத் தில் 1925 யூன் மாதம் 6ம் திகதி வாரித்தம்பி அழகம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவர் பெயர் தம்பிப்பிள்ளை. பெற்றோர் இவரை சுவாமி விபுலானந்தரிடம் ஒப்படைத்து இராமகிருஷ்ண மிஷன் இல்லத்தில் சேர்த்தனர்.

ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் சேவைக்காக இராமகிருஷ்ண மிஷனில் சேர்ந்து 1958ல் ஜீவானநந்தர் என்னும் பெயருடன் சுவாமி ஆனார். 'பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும் நற்றவவானினும் நனிசிறந்தனவே' என்ற பாரதி பாட்டுப்படி பிறந்த நாட்டில் தொண்டு செய்யவிரும்பி 1966ல் இலங்கை வந்து மட்டக்களப்பில் மிஷன் பணிகளை ஏற்றுத் தொண்டு செய்தார்.

'அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்து எய்துங்காண் பராபரமே' என்ற தாயுமான சுவாமிகளின் பாடலுக்கேற்ப அன்பர் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். மட்டக்களப்பு மிஷன் தலைவராகவும் பாடசாலைகளின் பொது முகாமையாளராகவும் பணிகளை மேற்கொண்டார். மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற சுவாமி விவேகானந்தரின் கொள்கையே சுவாமி ஜீவனாநந்தரின் கொள்கையும், மக்களிடமே கடவுளைக் கண்டார். தன் சுகத்தையும் பாராது முழுநேரமும் மக்களுக்குத் தொண்டு செய்தார். காட்சிக்கு எளியவர் ஆகவும் எல்லோருடனும் இன் முகத்துடன் பழகுபவர் ஆகவும் இருந்ததால் அவருடைய சேவை மேலோங்கி நின்றது. சமயசமூகப் பணியாற்றுபவர்கள் சுவாமிகளிடம் கற்கவேண்டியது அதிகம். மிஷன் மணிமண்டபம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதாமகளிர் இல்லம், பகவான், சாரதாஆலயங்கள் என பல நிர்மாணப்பணிகளை குருதேவர் நல்லாசிகளுடன் சுவாமிகள் செய்துமுடித்தார். விவேகானந்தபுரம், உறுகாமம் விவசாயப் பண்ணை, சீலாமுனை வீடமைப்புத் திட்டம் என்பன சுவாமியின் பணிகளுக்கு எடுத்துக்காட்டு.

தள்ளாத வயதிலும் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும் சேவையையே இறுதி மூச்சாகக் கைக்கொண்டு வாழ்ந்தார். இறுதி நேரத்திலும் சுவாமி ஞானமயானந்தரிடம் இல்லக் குழந்தைகளை நன்கு கவனியுங்கள் என்று வேண்டிக்கொண்டார்.

**சுவாமிகள் எனக்கு எழுதிய மூன்று கடிதங்களிலிருந்து சில குறிப்புகளைக் கீழே தருகிறேன்.**

20.05.2000 'தாங்கள் மேற்கொண்டுள்ள ஞானதானத் தொண்டுகள் மிகவும் சிறப்பாக நடந்தேறுகின்றன. என்று சுவாமி ஆத்மகனானந்தர் அவர்கள் வாயிலாக அறிந்து பெரு மகிழ்ச்சி அடைந்தேன. இந்துக் கல்லூரி இறையருளாலும், அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிபர், ஆசிரியர் குழாத்துடன் சிறப்பாக நடக்கின்றது என்று பலர் வாயிலாக அறிய மகிழ்ச்சி.'

04.05.2003 'தாங்கள் தியாகச் சிந்தையுடன் ஆற்றிக் கொண்டிருக்கும் தன்னலமற்ற சேவைகள் தொடர்கின்றது என்பதை நினைக்கும் பொழுது உங்களை நாங்கள் போற்றாமல் இருக்க முடியாது. தாங்கள் காலம் காலமாக செய்துவரும் சேவை போற்றுதலுக்குரியது. தங்களின் செயற்பாடு எம் போன்ற பலருக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. தள்ளாத வயதிலும் கூட தாங்கள் நேரம் காலம் பார்க்காது தன்னலமற்ற சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். தாங்கள் சுகதேகியாய் மேலும் பல ஆண்டுகள் வாழவேண்டும் என எம்பிரானைப் பிரார்த்திக்கின்றேன்.'

12.05.2005 'கடல்கோளின் சீற்றம் நம் அனைவருக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது. பாதிக்கப்பட்ட நமது சமூகம் சகஜ நிலைக்குத் திரும்ப இன்னும் எத்தனை ஆண்டுகள் செல்லுமோ இறைவனுக்குத் தான் தெரியும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பணியில் நமது மிஷனும் மிகச் சிறிய அளவில் ஈடுபட்டுள்ளது. நாளிதுவரை சுமார் 13 கோடி ரூபா பணம் நிவாரணப் பணிகளுக்காகச் செலவாகியுள்ளது. மேலும் செய்ய வேண்டியவை அதிகம். மட்டக்களப்பிலுள்ள சீலாமுனை பெரிய உப் போடை, சின்ன உப்போடை ஆகிய கிராமங்களில் சுமார் 65 வீடுகள் அமைத்துக் கொடுக்க உத்தேசித்துள்ளோம்.' இவற்றால் சுவாமிகள் சமயசமூக சேவைகளில் முற்று முழுதாக ஈடுபட்டிருந்தார் என்பதும் சேவை செய்பவர்களை ஊக்கப்படுத்தினார் என்பதும் புலனாகின்றது.

சுவாமிகளுக்கு நாம் செய்யும் நன்றிக்கடன், வருவாயில் ஒரு பகுதியை மக்களின் சேவைக்காகப் பயன்படுத்துவதும் கடவுளின் பிள்ளைகளாகிய சமுதாய மக்களுக்கு சமய சமூக சேவை செய்வதும் தான்.

**'சுவாமிகளின் வழிகாட்டலில் நாம் எல்லோரும் சேவைசெய்வோமாக'**

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஜீவனாநந்தரின் ஜீவகாருண்ய பணியில் எமது பாடசாலை

*திருமதி. நே. துரைராசசிங்கம்*
*அதிபர்,*
*மட்/ஆனைப்பந்தி இ.கி.மி.பெ.ம.வி*

கிழக்கிலங்கையின் சிறப்பை வெளிஉலகிற்கு வெளிப்படுத்திய அவதார புருஷர்களின் வரிசையிலே வித்தகன் விபுலானந்தரின் பணியை தொடர இராமகிருஷ்ண பரமஹம்சரின் வழித் தோன்றலாக செந்நெல் களனிகளால் சூழப்பட்ட, கிழக்குமாகாணத்தின் மேற்குக் கரையிலுள்ள,வலையிறவில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த வாரித்தம்பி தம்பதிகளுக்கு மகனாக 1925ல் அவதரித்தார் ஜீவனாநந்தர். சுவாமிஜீ அவர்கள் சுகபோகங்களை வெறுத்தார். மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணிக்கும் நோக்கில் கல்வித் தேவையை பூர்த்திசெய்தார். ஆரம்ப வகுப்பை கற்க ஆனைப்பந்தி இராமகிருஷ்ண மிஷனை நாடினாலும் அவரது பூரணகல்வியை வழங்கிய கல்விக் கூடமாக மட்/ சிவாநந்தா வித்தியாலயமே திகழ்ந்தது. தனது இருபதாவது வயதிலேயே ஹேம்பிரிச் பரீட்சையில் சித்தியடைந்தார். மேற்படிப்பில் நாட்டம் செலுத்தினால் மக்கள் சேவையை தொடரமுடியாது என்னும் நோக்கில் அதனையும் விடுத்தார். அக்காலப்பகுதியில் இராமகிருஷ்ணமிஷனுக்கு பொறுப்பாக இருந்த சுவாமி நடராஜானந்தாவின் வழிகாட்டலில் விருப்புக் கொண்டு ஆன்மீகத் துறவியாக 1952ம் ஆண்டு சுவாமி ஜீவானந்தாஜீ என்னும் உயர்ந்த நாமத்தை பெற்றுக் கொண்டார். துறவற வாழ்க்கையில் ஈடுபட்ட அடிகளார் 1966ம் ஆண்டு மட்டுநகர் திரும்பி சுவாமி நடராஜானந்தாஜியுடன் இணைந்து ஆதரவற்ற ஏழை மாணவர்களின் கல்வி ஊட்டலுக்காக அரும்பாடுபட்டார். சுவாமிகளால் உருவாக்கப்பட்ட பல கல்விமான்கள் இன்றும் கூட பல நிறுவனங்களில் உயர் தொழில் புரிந்துவருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஏழைப் பெண் மாணவர்களை வழிப்படுத்தும் முகமாக மட்/ஆனைப்பந்தி இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையுடன் மிக நெருங்கிய தொடர்புகளை பேணிக்கொண்டார். கல்விக்காக தன்னை நாடிவந்த ஏழை மாணவர்களின் கல்வித் தாகத்தை தீர்த்தபெருமகான் சுவாமி ஜீவனாநந்தா என்றால் மிகையாகாது.

15.03.1989 மட்/ஆனைப்பந்தி இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சரின் 154வது ஜனன தினம் வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொறுப்பாளராக விழாவைச் சிறப்பித்ததோடு, சிறந்ததொரு ஆன்மீகச் சொற்பொழிவையும் ஆற்றினார். இவ்விழாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு பேச்சாளராக திரு.வி.சுப்ரமணியம் அவர்களும் கலந்துகொண்டிருந்தார். இக்காலப் பகுதியில் காந்திசேவா சங்கத்தால் காந்தியை பற்றிய சில நூல்கள் ஆனைப்பந்தி பாட சாலையில் பிரசுரம் செய்யப்பட்டன. இவ் வெளியீட்டு வைபவத்தில் 24.05.1989ல் கத்தோலிக்க திருச்சபை ஆயர் வணக்கத்துக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களுடன் கலந்து சிறப்பித்தார்.

இலங்கை இராமகிருஷ்ணமிஷன் சுவாமிகளான ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தர், ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தர் ஆகியோருடன் 12.06.1991ல் ஆனைப்பந்தி பாட சாலையை தரிசித்து சிறப்பான சொற்பொழிவொன்றை ஆற்றியுள்ளார். இச்சொற்பொழிவில் சிசிலியா பெண்கள் பாடசாலை மாணவர்களும் கலந்து சிறப்பித்துள்ளனர். 1999ல் இப்பாட சாலையில் சிறந்த ஒரு விளையாட்டுவிழா இடம் பெற்றுள்ளது. அக்காலப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்ட கல்விப் பணிப்பாளருடன் இணைந்து விழாவை சிறப்பித்துள்ளார்.

தற்போது இப்பாடசாலையின் கட்டிடங்களில் ஒன்றாக விளங்கும் மூன்று மாடிக் கட்டிடம் 18.06.1992ல் குடிபுகும் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ்வேளையில் பாட சாலை வளாகத்தில் காணப்படும் வித்தகன் விபுலானந்தனின் சிலையை சுவாமி ஜீவானந்தாஜீ திறந்து வைக்க கட்டிடத்தொகுதியை திரு.க.தியாகராஜா, கல்விப் பணிப்பாளர் திறந்து வைத்துள்ளார். இவற்றோடு நின்றுவிடாது 27.07.1993ல் ஸ்தாபகர் தினவிழாவொன்று இப்பாடசாலையில் இடம்பெற்றுள்ளது. அவ்விழாவில் திமிலைத்துமிலன், முத்தழகு, மாஸ்டர் சிவலிங்கம் போன்ற கலைச்செல்வங்களுடன் சுவாமிஜீயும் கலந்து சிறப்பித் துள்ளார். சுவாமிஜீ அவர்கள் 2006.02.04ம் திகதி மகாசமாதி எய்தி இறையடி சேர்ந்தாலும் மட்/ஆனைப்பந்தி இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் மகாவித்தியாலயம் அவரது பணியை என்றென்றும் போற்றிநிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அனுபவத்தில் சுவாமிகளின் சேவையின் ஆழம்

செல்வி.ந.பரஞ்சோதி
*சாரதா இல்லப் பழையமாணவி*

**'மக்கள் தொண்டே மகேசன் சேவை'** என்று முழங்கிய சுவாமி விவேகானந்தரின் பாத கமலத்தைப் பின்பற்றி வாழ்ந்த உத்தம புருஷர் என் உள்ளத்தில் என்றும் அணையா விளக்காக இன்றும் சுடர் விட்டுக் கொண்டிருக்கும் ஒருஆத்மீகத் தலைவர் சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ் அவர்கள்.

சுவாமிஜீ மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பில் அவதரித்து தனது ஆரம்பக் கல்வியை சுவாமி விபுலானந்தரின் மேற்பார்வையில் பயின்றார். **'நீங்கள் எங்கிருந்தாலும் ஆன்மீகத்தை மனதில் இருத்துங்கள்'** என்ற சுவாமி விபுலானந்தரின் அறிவுரைகள் சுவாமிகளின் மனதில் ஆழப்பதிந்தது.

இந்துசமய பின்னணியில் பெற்ற கல்வியும் மாணவர் இல்லத்துத் துறவியரின் தன்னலம் கருதாத சேவையும் சுவாமிகளை தொண்டின்பால் ஈர்த்தன. இதனால் பெரிய பணக்காரராக இருந்தும் தனது சொத்துக்களை துறந்து தன்னை குருதேவரின் பணிக்காக அர்ப்பணித்தார். சுவாமி விரஜானந்தரை தனது குருவாக ஏற்றுக் கொண்டு பல இடங்கலிலும் சேவை செய்தார். **'நான் பெரிய அறிவாளியும் இல்லை, பெரியதிறமைகளும் எனக்கில்லை, குருதேவர் பணித்த பணிகளைச் செய்து முடிக்கும் வேலைக்காரன் மட்டுமே நான்'** என்று அடக்கத்துடன் கூறியவாறு அவர் தம் பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றிவந்தார். சுவாமிகள் குழந்தைகள்,சிறுவர்கள் என்போரைக் கண்டால் அவர்களின் நிலைக்கு தாமும் இறங்கி விடுவார். அவர்களின் தன்மைக்கேற்றவாறு அதாவது, தாய், தந்தை இல்லாத குழந்தைகளுக்கு வாத்சல்யத்தை ஊட்டி பெற்றோருக்குச் சமமாகவும், வறிய குடும்பத்தில் வாழ்பவர்களுக்கு ஆபத்தில் தோளோடுதோள் கொடுக்கும் உற்ற நண்பராகவும் தப்பு செய்தால் உடனே திருத்துவதில் தாயாகவும் அறிவுரை வழங்கு வதில் உற்ற ஆசானாகவும் யாருக்கும் மனம் நோகாமல் நடந்து கொள்வதில் சகோதரராகவும் மொத்தத்தில் பார்க்கப் போனால் இறைவனுக்கும் மேலானவர் என் அப்பா சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் செய்தியைப் பரப்புதற்காக சுவாமிகள் இலங்கை முழுவதும் பயணம் செய்தார். அவரது அன்பிலும் சேவையிலும் மக்கள் ஜாதிபேதமின்றி கிறிஸ் தவர்கள், இஸ்லாமியர்கள் பலர் அவர்பால் ஈர்க்கப்பட்டனர். அண்மையில் கூட அவரை நினைவுபடுத்துவதற்கு 'ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ்' என்ற தலைப்பில் ஒரு கிறிஸ்தவ பாதிரியார் அருட் திரு.எஸ்.ஏ.ஐ மத்தியூ அவர்கள் புத்தகம் ஒன்றை வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுகாமம் என்ற காட்டுப் பகுதியைத் திருத்தி செழிப்பான நிலமாக மாற்றி மிஷனுக்கு ஆண்டுதோறும் நிரந்தர வருவாய் கிடைக்க வழி செய்தார். இராமகிருஷ்ண மிஷன், மணிமண்டபம், கல்லடி மற்றும் காரைதீவு மகளீர் இல்லங்கள், கல்லடி மாணவர் இல்லம், விவேகானந்தபுரம் வீடுகள், முத்துமாரியம்மன் கோவில், ஸ்ரீ ராமகிருஷ்ணர் மற்றும் ஸ்ரீ சாரதாதேவியின் அழகிய ஆலயங்கள் போன்று இன்னும் எத்தனையோ கட்டடங்கள் (மயிலம்பாவெளி வீடுகள்) அவரது உழைப்பையும் தியாகத்தையும் பறைசாற்றி நிற்கின்றன. மக்கள் துன்பப்படும்போது அவர்களுக்கு உற்றதுணைவனாக உடனுக்குடன் நிவாரணம் வழங்குவதில் சுவாமிகள் முன் நின்றார். போரினால் பல இன்னல்களுக்குட்பட்ட கால கட்டத்திலும் உறுதி குலையாது பணியைத் தொடர்ந்தார். சூறாவளி முதல் சுனாமி வரை எல்லா இயற்கை இடர்பாட்டு நிவாரணப் பணிகளிலும் அரும்பணி புரிந்தார். தான் கஷ்ரப்பட்டாலும் பரவாயில்லை மக்கள் கஷ்ரப்படக் கூடாது என்று நினைத்து ஒவ்வொரு மனிதரிலும் இறைவனையே கண்டு சேவை செய்யும் ஒரு ஜீவகாருண்யம் மிக்க ஒரு கலியுக புருஷர் சுவாமிஜீ. சுவாமிஜீயின் அன்பானது ஆழம் காணமுடியாது. விபரிக்க முடியாது. எங்குமே அன்புமயம் இவ்வாறு சுவாமியின் வாழ்க்கையை வார்த்தைகளால் விளக்கமுடியாது.

நல்ல எண்ணங்கள் தான் ஒவ்வொருவரையும் நல்வாழ்வு வாழவைக்கின்றன. என்று சுவாமிஜீ அடிக்கடி கூறி ஒவ்வொரு மனிதனுக்கும் நல்ல எண்ணங்களையே புதைத்தார்.

இவ்வுலகில் புகழை விரும்பாதவர்களைக் காணமுடியாது. ஆனால் இவை அனைத்திற்கும் விதிவிலக்கு ஜீவனாநந்தாஜீ. நான் எதுவுமேசெய்யவில்லை. சாதாரணமான வேலைக்காரன் என்று சொல்லிக்கொள்ளும் பற்றற்றதுறவி நம் சுவாமிஜீ. அவரது அரவணைப்பின் கீழ் வாழ்ந்த ஆயிரம் ஆயிரம் உள்ளங்களால் கூட அவரது உண்மையான சேவையை சொல்லமுடியாது. காரணம் அவர் எதையும் இறைவனுக்காக மட்டும் செய்தார். மனிதனில் தெய்வத்தைக் கண்டார். அவருடைய மனத்தை யார் உள் நுழைந்து பார்த்தார்கள். சில சேவைகளைப் பார்த்து சுவாமி என்கின்றார்கள். அவர்களின் உண்மை இயல்பை என்றும் வழிபடுவர்.

நம் சுவாமிஜீ தோன்றாத் துணையாக இப்போது எங்களோடுதான் இருந்து எம்மை வழிநடத்திக் கொண்டிருக்கின்றார். அவரது ஊனுடல் அழிந்தாலும் புகலுடம்பு என்றுமே புகழோடு சத்திரமாக ஒளி தரும். மீண்டும் சுவாமிஜீயை இந்த மட்டக்களப்புமண் ஈன்றுகொடுக்குமா? மீண்டும் எங்களோடு வாழ்வாரா? மீண்டும் எங்கள் அப்பாவாக அன்பு வைப்பாரா? சுவாமி விவேகானந்தர் ஏற்றிய சேவை என்னும் தியாகவேள்வியில் சுவாமிஜீ தன் வாழ்வை ஆகுதியாக செலுத்தி பெருவாழ்வு காண்பதற்காக மட்டுமண் என்றுமே காத்திருக்கின்றது.

**'சேவையின் சிகரம் எளிமையின் வடிவம் 'ஞானிகளுக்கு பிரபஞ்சம் ஒரு பொய்த் தோற்றம்' இவ் வாசகத்திற்கு அம்சம் சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ் அவர்கள்'**

வாழ்க சுவாமி ஜீவனாநந்தாஜீ
ஓங்குக அவர் நாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர்

த. செந்தூரன்
பழையமாணவன்

'வங்கக் கடலில் மூழ்கிவிட்டு வரும் இளம் தென்றல்
கல்லடி உப்போடையில் துளிர்விட்டுநிற்கும்
ஆலவிருட்சமான இராமகிருஷ்ண மிஷனில்

சேவையின் சிகரமாக நடமாடும் தெய்வமாக
ஏழைகளின் கருணைக்கடலாக அன்பின் உறைவிடமாக இருந்து

**மக்களின் சேவையே மகேசன் சேவை**'என வாழ்ந்து காட்டியமகான் சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ். சாதி, சமய, இனப் பாகுபாடு களுக்கு அப்பால் உலகில் பிறக்கும் மனிதர்கள் எல்லோரும் நம் இறைவன் படைப்பு என்று தூய்மையான நல்நோக்கோடு வாழ்ந்து காட்டியவர் ஜீவனாநந்தாஜீ.

தேசத்தின் இலக்கண வாழ்கை என்பது ஆதரவற்றவர்களுக்கு உளத்தூய்மை யோடு சேவை செய்வதிலும் துன்பப்படும் ஏழைகளுக்கு அரவணைத்து உதவி செய்வ திலும் உன்னதமானது. காலையில் அனைவரையும் 4மணிக்கு எழுப்பி அவர்களை காலைக் கடன்களை முடிக்கச் செய்து காலையில் யோகாசனம் மாலையில் விளையாட்டு என்று அவர்களை மாணவர் விடுதியில் இணைத்து தன் உயிருக்கு உயிராக நேசித்து வந்தவர். இரவு பகல் பாராது அவர்களின் இன்ப துன்பங்களிலும் இணைந்து வாழ்ந்தவர். யாரையும் அனாதை என்று சொல்வதில்லை. அவர்களை உயிருக்கு மேலாக நேசித்தவர். மனம் நோகும் படி நடக்காது எல்லோரிடமும் அன்பாக இருப்பார்.

சுவாமி ஜீவனாநந்தாஜீயுடன் 1995ம் ஆண்டில் இருந்து நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. அவருடைய அன்பான போதனைகளும் அன்பான வாக்குகளும் என் நெஞ்சைவிட்டுஅகலவில்லை. எல்லா மகான்களும் ஒரே மாதிரியானவர் அல்ல. அவர் களைவிட வித்தியாசமானவர். எளிமையானவர். எந்தப் பொருளுக்கும் ஆசைப்பட மாட்டார். யாரும் அவரைச் சந்திக்க வருவதானால் அவர் வரும் வரை காத்திருப்பார்.

உபசரிப்பதில் வல்லவர். விருந்தினரையும், ஏழைகளையும் அன்பாக உபசரிப்பார். அவருடைய காலத்தில் இராமகிருஷ்ண மிஷனை உன்னதமான நிலைக்கு இட்டு சென்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவருடன் பழகியநாட்களில் இருந்து கடைசிகாலம் வரை அவருக்கு சேவை செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். அவர் தனது இறுதிக் காலத்தில் இராமகிருஷ்ண மிஷனுக்காக தன் உயிரை அர்பணித்தார். இராம கிருஷ்ண மிஷன் வாழ்க என்று வாழ்ந்து தன் உயிரை தியாகம் செய்தார்.

தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் செலவு செய்து சகலமத இன,மொழி, மாணவர்களையும் மக்களையும் ஒன்று சேர்த்து அனைவரும் வாழ வழிகாட்டியவர். எடுத்துக் காட்டாக விளங்கியவர்.

**வாழ்க அவர் நாமம்**
**வளர்க அவர் தொண்டு.**

> ✷ Ask nothing; want nothing in return, Give what you have to give; it will come back to you-but do not think of that now. It will come back multiplied- a thousand fold – but the attention must not be on that. You have the power.
>
> -Swami Vivekananda-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமிஜீயுடன் சில காலம்

*சாரதாமகளிர் இல்லப் பழையமாணவி*
*சந்திரமதி தயாகரன்*

என் வாழ் நாளில் ஒருசிறுபகுதியைசுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்களுடன் கழித்ததை இட்டு என்றும் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இப்படிப்பட்ட ஒரு சுவாமிஜீயின் அரவணைப்பில் வளர்ந்ததை பெரும் பேறாக கருதுகிறேன்.

ஒரு குழந்தை எப்படி தன் தந்தையிடம் அடம்பிடித்து எனக்கு அந்தப் பொருள் வேண்டும், எனக்கு இந்தப் பொருள் வேண்டும் என சண்டை போடுவோம். அப்படிப்பட்ட தந்தை, மகள் என்ற உறவுமுறையுடன் தான் சுவாமிஜீயுடன் பழகினேன். நான் கடந்த 8 வருடகாலமாய் (1992-2000) சுவாமிஜீயுடன் அவரின் அரவணைப்பில் வளர்ந்தேன்.

ஒரு தடவை அதாவது சமையல் அறைக் கழிவுத் தொட்டி துப்பரவுசெய்வது எனது அன்றைய கடமை ஆனால் நான் அதனைச் செய்யவில்லை எங்கள் இல்லத்துக்கு சுவாமிஜீ வந்ததும் அதற்கு பொறுப்பானவர் என்னை அதாவது நான் என் கடமையை செய்யவில்லை எனக்கூற அதனைக் கேட்ட சுவாமி தன் கையில் உள்ள ஊன்றுகோலால் எனக்கு அடித்தார். சுவாமிஜீ அடித்த கோபத்தில் அன்று இரவும், மறுநாள் காலையிலும் உணவு உண்ணாமல் பாடசாலைக்கு சென்றேன். அதனைக் கேள்விப்பட்ட சுவாமிஜீ சக்திரீச்சர் (ஆசிரியை) அழைத்து எனக்கு சற்று புத்திமதி கூறும்படி கூறினார். பின் சக்தி ரீச்சர் என்னை அழைத்து சுவாமிஜீயை இப்படி கக்ஷரப்படுத்தக் கூடாது எனக் கூறினார் அத்துடன் மேலும் பல விடயங்களைக் கூறிசென்றார். இவ் நிகழ்வுஎன் வாழ் நாளில் மறக்க முடியாத ஒன்றாக உள்ளது.

நான் இல்லத்தைவிட்டு வெளியே (வீட்டிற்கு) வந்ததன் பிற்பாடு அடிக்கடி சுவாமிஜீயை பார்க்கச் செல்வது வழக்கம். ஒரு பரீட்சைக்கு தோற்றச் செல்வதாக இருந்தாலோ அல்லது எந்த ஒரு நல்ல விடையமாக இருந்தாலும் சுவாமிஜீ அவர்களை வணங்கிவிட்டுச் சென்றால் அது மனதிற்கு மிகுந்த சந்தோசமாக இருக்கும் . அதற்காக அடிக்கடி செல்வேன். சுவாமிஜீ அவர்களை அடிக்கடி போய் பார்க்காமல் இரண்டு, மூன்று நான் கழித்து சென்றால் என்னைப் பார்த்துஅவருடன் உரையாடிக் கொண்டிருக்கும் வேறுநபருடன் 'அவங்க பெரிய ஆள் தானே நம்மிடம் வந்துபோவாங்களா' என்று கூறுவார். இவ்வாறு பல தடவைகள் என்னைப் பற்றிக் கூறுயிருக்கிறார்.

நான் இன்று ஓர் ஆரிசியையாக சேவையாற்றுகின்றேன் அவ்வாறு நான் சேவை செய்வதற்கு காரணம் சுவாமிஜீ அவர்களின் வழி நடத்தலின் கீழ் இருந்து கற்றதினால் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று கூடு சிலசமயம் கல்லடிப் பக்கம் சென்றால் சிலர் எங்களைக் கண்டால் 'நீங்கள் சுவாமியிட பிள்ளை தானே' என்று தான் கேட்பார்கள். நான் உற்பட இல்லத்தில் இருந்த எனது சகோதரிகள் அனைவரையும் இப்படித்தான் அழைப்பார்கள், கேட்பார்கள் ஏனெனில் நாங்கள் சுவாமியின் வழி நடத்திலின் வளர்ந்ததினால்.

இறுதியாக சுவாமிஜீ அவர்கள் மகாசமாதி அடைவதற்கு இரு தினங்களுக்கு முன் பார்க்க சென்றிருந்தேன் அவரை எப்போ பார்க்க சென்றாலும் யார் யார் சென்றாலும் அவர்களுக்கு கற்கண்டு, லட்டு, டொபி என ஏதாவது இனிப்பு கொடுப்பது வழக்கம் அது போன்று எனக்கு அன்று இனிப்புத் தந்தார். அது இறுதி இனிப்பு என்று எனக்குப் அப்போ புரியவில்லை. நான் பார்த்துவிட்டு வந்து இரு நாட்களின் பின் கேள்விப்பட்டேன் சுவாமிஜீ அவர்கள் மகாசமாதி அடைந்துவிட்டார் என்றுபின் அவரின் இறுதிசமாதி ஊர்வலத்தில் கலந்துகொண்டேன்.

சுவாமிஜீ அவர்கள் இறைசமாதி அடைந்தாலும் நான் அவருடன் கழித்த காலத்தை மீட்டுப் பார்க்கும் போது அவர் என்றும் போல் என்னுடன் உள்ளார் என்ற ஓர் உணர்வு தான் என்னுள் உள்ளது. சுவாமிஜீ அவர்களுடன் வாழ்ந்த காலத்தை எழுதுவதாக இருந்தால் எவ்வளவு வேண்டுமானாலும் எழுதிக் கொண்டே போகலாம். சுவாமிஜீ அவர்களின் அருளாசி எமக்கு என்றும் இருக்க வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஜீவனாநந்தாஜீ ஓர் தெய்வீகப் பிறவி

செல்வநாயகி
*காரைதீவு*

காரைதீவு எனும் போது எம்மனதில் எழுவது கண்ணகி அம்மன் ஆலயமே. இவ்வாலய விசேட நிகழ்வுகளில் முன் நிற்பவர்களில் சுவாமி ஜீவனாநந்தஜி முக்கியமானவர். இதுபோல் எம் ஊரின் விசேடெ சயற்பாடுகளில் எல்லாம் சுவாமியின் பங்களிப்பு சிறப்புடையதாகும். சுவாமிஜீயை நான் ஒரு தெய்வம் என்றே நோக்கினேன். சுவாமிஜீயும் தம் பணியில்:

முகாமையாளராக.............

கல்வியூட்டுபவராக...........

உதவுபவராக....................

அவதானிப்பாளராக..........

இனங்காண்பவராக...........

ஒழுங்கமைப்பாளராக.......

முன்வைப்பவராக............

ஊக்குவிப்பவராக.............

ஆலோசகராக......................

மதிப்பீட்டாளராக..............

இருந்து சகல பிள்ளைகளையும் ஆதரித்தார். இதே போன்று எனது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றியவர். உதவி எனும் போதெல்லாம் உதவிக்கரம் நீட்டியவர் சுவாமிஜீ. பிள்ளைகள் மீது இவர் அளவு கடந்த நம்பிக்கையும் பாசமும் வைத்துப் பேணியவர் எனலாம். இதனை நான் கண்கூடாக கண்டறிந்தேன். இல்லத்தில் வளர்ந்த பிள்ளை ஒன்றின் இறப்பின் போது அவர் ஒரு தாயாக செயற்பட்டார் நடக்க முடியாத நிலையிலும் தன்னிலை பாராது வாகனம் செல்ல முடியாத இடத்திற்கு நடையில் சென்றே தம் கருமங்களை செய்தார். இந்த வகையில் ஒரு செயல் வீரனாகவும், தெய்வீகப் பிறவியாகவும் கண்டேன் சுவாமிஜியை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பது வருடகால தெய்வீகப் பணியில் சுவாமி ஜீவனாநந்த மகராஜ்

தொகுப்பு: அ. கனகசூரியம்

மட்டக்களப்பு கல்லடி-உப்போடை இராமகிருஷ்ண மிஷன் அதே இடத்தில் ஆண்-பெண் பிள்ளைகளுக்காகத் தனித்தனியான இரு இல்லங்களையும், காரைதீவில் பெண் குழந்தைகளுக்கான ஒரு இல்லத்தையும் அமைத்து நிர்வகித்து வருவது சிறப்பானதொரு தெய்வீகப் பணியாக அமைந்துள்ளது. இந்த மூன்று இல்லங்களிலும் மொத்தமாக 220 பிள்ளைகள் தங்கியிருக்கிறார்கள்.

அகில இலங்கை இந்துமாமன்றக் குழுவினர் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனுக்கு விஜயம் செய்த பொழுது, அதன் தலைவர் சுவாமி ஜீவனாநந்தமகராஜ் அவர்களை மாமன்றப் பொதுச் செயலாளர் திரு.கந்தையா நீலகண்டன் செவ்விகண்ருந்தார். அதனை இங்கே தருகிறோம்.

- நீங்கள் இங்கே குழந்தைகள் இல்லங்கள் அமைத்து செய்கின்ற தெய்வீக சமூகப் பணிகளைப்பற்றி எல்லோரும் மெச்சுவதை கேள்விப்பட்டிருக்கிறோம். அந்தப் பணி எப்படி ஆரம்பமானது என்பதைப் பற்றிச் சொல்லுங்கள்.

- இந்தப் பணியானது தனிப்பட்ட ஒரு நபருடைய பணி அல்ல, பகவான் ஸ்ரீராம கிருஷ்ணருடைய பெயரில் ஈஸ்வர அர்ப்பணமாக நடந்துகொண்டிருக்கிறது. இந்த எண்ணத்திற்கு ஒரு காரணகர்த்தாவாக இருந்தவர் சுவாமி விவேகானந்தர். இவரின் அடிகளைப் பின்பற்றி சுவாமி விபுலானந்தர், இந்தப் பகுதியலே ஏழ்மையுள்ள பிள்ளைகளுக்கு தகுந்த முறையிலே கல்வி கற்கவைத்து அவர்களை சமூதாயத்திலே நல்ல மனிதர்களாக உருப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தப் பணியை ஆரம்பித்தார். இராம கிருஷ்ண மிஷனுக்குரிய முதலாவது இல்லம் 1926ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் திகதி யாழ்ப்பானத்திலுள்ள வெள்ளிக்கிழமை மடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது 6 பிள்ளைகள் அங்கிருந்தார்கள். பின்னர் சில நிர்வாக கஷ்டங்களினால் அந்த இல்லம் மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து 1937ஆம் ஆண்டு காரைதீவில் பெண் குழந்தைகளுக்கு வாழ்வளிக்கும் ஒரு இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. பெண் பிள்ளைகளுக்கான மற்றொரு இல்லம் பதினைந்து பிள்ளைகளுடன் மட்டக்களப்பு விவோகானந்த மகளிர் வித்தியாலயத்தில் ஒரு சிறிய மண்பத்தில் ஆரம்பிக்கப்பட்டு சூறாவளியின் அனர்த்தத்தினால் இப்பொழுது புதிய இடத்தில் செயறப்பட்டு வருகிறது. இந்த தூண்டுதலை அளித்தவர்கள், இந்த இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த மூத்த துறவிகள் தான் என்று சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் ஒரு விதையை விதைத்தார்கள். நல்ல உரத்தை இட்டுச் சென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வளருகின்றது. அந்த விதையின் வளர்ச்சி குன்றாது என்னென்ன செய்ய முடியுமோ, இறைவனுடைய அர்ப்பணமாக ஏற்று அவற்றைச் செய்வதைத் தான் என் கடமையாகக் கொண்டிருக்கிறேன்.

- சுவாமி விபுலானந்தர் 1947ஆம் ஆண்டு சமாதியடைந்தபின்புஅந்தப் பணியை இந்தமண்ணில் தொடர்ந்த சுவாமிகளது விபரங்களைச் சொல்லமுடியுமா?

- ஏற்கனவே சுவாமி விபுலானந்தருடன் காரைதீவைச் சேர்ந்த தொண்டர் ஒருவர் இருந்தார். இவர் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தவர். இவர் துறவறம் பூண்டு இந்தப் பணியைத் தொடர்ந்தார். இவரது பெயர் சுவாமி நடராஜானந்தஜீ. இவருக்கு முன் மூன்று சாதுக்கள் பணிபுரிந்திருக்கிறார்கள். சுவாமி நடராஜானந்தஜீக்கு இராமகிருஷ்ண மிஷனால் நடாத்தப்பட்டு வந்த 26 பாடசாலைகளை நிர்வகிக்கும் பொறுப்பு இருந்தது. அந்த நிலையிலும் மிகவும் அர்ப்பணிப்புடன் குழந்தைகளை வளர்த்தார். அவரே பிள்ளைகளுக்கு குளிக்கவைப்பார். உடுப்புகளையும் தோய்த்துக் கொடுப்பார், அவர் பெருந் தியாகியாக இருந்தவர் என்று சொல்வதில் பெருமைப்படுகிறேன். **'நாம் எல்லாம் சாதுக்கள், கொடுத்துப் பழகவேண்டும் எடுத்துப் பழகக்கூடாது'**என்றுஅடிக்கடி சொல்வார்கள்.

- நீங்கள் மட்டக்களப்பு மண்ணுக்கு எத்தனையாம் ஆண்டு வந்து இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டீர்கள்?

- நான் 1966 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இங்கு இருந்த சுவாமிகள் நோய் வாய்ப் பட்டிருந்ததினால் அவரைப் பார்த்துவிட்டுத் திரும்பிப் போகலாம் என்ற எண்ணத்துடன் வந்தேன். அவரை மூன்றுமாத காலத்திற்கு பாங்ஹொக் அனுப்ப வேண்டும் என்பதால் அந்த மூன்று மாதங்களுக்கும் என்னை இங்கு இருக்கும் படிதலைமை மடத்திலிருந்து சொன்னார்கள். மூன்று மாதகாலத்திற்கு என்று இருக்கத் தொடங்கி இப்பொழுது முப்பது வருடங்களாக இங்கு இருக்கிறேன்.

- இந்த மூன்று தசாப்தங்களிலே இங்கு நீங்கள் கண்ட முக்கிய மாற்றங்களைச் சுருக்கமாகக் கூறுங்கள்?

- இது இறைவனுடைய பணி. நான் பெருமைப்பட்டுச் சொல்வதற்கு ஒன் றும் இல்லை. முன்பிருந்தவர்கள் விட்டுச் சென்ற பணி, நல்ல பசளையையும் விட்டுப் போனார்கள். அதனைப் பாதுகாக்கின்ற வேலையையே நான் செய்து வருகிறேன். ஒருநாள் சுவாமி பிரேமாத்மானந்தா இந்த இடம் வளர்வதற்கு நீ அங்கு போகவேண்டும் என்று சொல்லி அனுப்பினார்கள். என் குருமகராஜி செ ான்ன மாதிரி அவர் திருவருளாலே எல்லோரும் எனக்கு நிரம்ப ஒத்துழைத்தார்கள். எதனைத் தேடிப்போனாலும் கிடைக்கக்கூடிய பெரும் பாக்கியம் எனக்கு இருக் கிறது. அந்த மாதிரித்தான் செய்கிறேனே தவிர, என்னுடைய பெருமையாலே நடந்ததாக சொல்வதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீங்கள் உங்களது தன்னலம், தற்பெருமை எல்லாம் மறந்து துறவியாக தெய்வீக உணர்வுடன் பணிசெய்து வருகிறீர்கள். இந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் உங்களை ஒரு தெய்வமாக மதிக்கிறார்கள். நீங்கள் செய்துகொண்டிருக்கின்ற சேவை தொடர வேண்டும் என விரும்புகிறோம். இந்த சேவைக்கு, உங்களுக்கு யாராவது துணைநிற்கிறார்களா?

- எனது முப்பது வருடகால சேவையில், இருபது வருடங்கள் தனியாகப் பணி செய்ய வேண்டியிருந்தது. அது மிகவும் கஷ்டமான காலம். உணவுக்கு கஷ்டம் மட்டுமன்றி பொருளாதாரத்திலேயும் மிகவும் கஷ்டமான நிலையிருந்தது. பகவான் ஒரு சக்தியைத் தந்தது என்று சொல்ல வேண்டும். அந்த வேளையில் அதாவது பத்து வருடங்களுக்கு முன்னர் சுவாமி ராஜேஸ்வரானந்தஜீ மகராஜ் வந்தார். அவர் ஆக்கபூர்வமான உதவிகளைச் செய்தார். இப்பொழுது சுவாமி அஜராத்மானந்தஜீ மகராஜ் இருக்கிறார். அவரும் தன்னால் இயன்ற அர்ப்பணிப்பு சிந்தையுடன் சேவையாற்றிக் கொண்டிருக்கிறார். ஆகையினாலே இது ஒருவருடைய முயற்சி இல்லை. பகவான் இராமகிருஷ்ணருடைய திருவருளினாலே கூட்டு முயற்சியாக நாங்கள் இதனைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆதலால் இதைப் பற்றி தற்பெருமை கொள்வதற்கோ, தன்னலம் கொள்வதற்கோ எந்த விதமான சந்தர்ப்பங்களும் வராமலிருக்க வேண்டும்.அதுதான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குச் செய்யவேண்டிய பெரும் பேறு எனக் கருதுகிறேன்.

- உங்கள் உள்ளம் தெய்வீகமானது. இங்கு தற்பெருமைக்கோ தன்னலத்திற்கோ இடமிருக்காது. கல்லடி உப்போடையிலிருந்த இரு இல்லங்களிலும் காரைதீவிலிருக்கும் இல்லத்திலும் மொத்தம் 220 பிள்ளைகளுக்கு நீங்கள் தாயும் தந்தையுமாக இருக்கின்ற தெய்வீக உயர்வைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நீங்கள் இந்தப் பிள்ளைகளிடம் எப்படி ஒழுக்கக் கட்டுப்பாட்டை நிலைநாட்ட முடிகிறது?

- அன்பு தான் காரணம். என்று சொல்லுவேன். மன்னிக்கின்ற குணம், பொறுமையுடன் பிழைகளை ஏற்று வழி நடத்துகின்ற தன்மை, இப்படியான திறந்த மனத்துடன் தாய் தந்தை போல பிள்ளைகளுக்கும் எனக்கும் இடையில் ஒரு சுவரை வளர்த்துக் கொண்டிருக்கிற நிலை இல்லாமல் இருப்பதால் இத்தகைய சேவையைச் செய்யக் கூடியதாக இருக்கிறது என்று சொல்லலாம். ஒரு முகாமையாளர் செய்கின்றேன் என்ற நிலையில் இதனை நான் செய்யவில்லை. பையன் ஒருவன் பகவான் இராமகிருஷ்ணரால் அனுப்பப்பட்டிருக்கிறான், அவனுக்கு நம்மால் முடிந்ததைச் செய்வோம் என்ற மனநம்பிக்கை எனக்கு என்போதுமே இருக்கிறது. நிலமைகளை உணர்ந்துதவறுகள் ஏற்படாமல் திறந்தமனப்பான்மையுடன் சந்தோஷமாக இந்தப் பணியைச் செய்துவருகிறேன்.

நன்றி - இந்து ஒளி, காலாண்டிதழ்,
தீபம்-2, சுடர்-4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே

சோ. சிவலிங்கம்
கல்லடி

மட்டக்களப்பு வலையிறவுக் கிராமத்தில் வசதியான குடும்பத்தில் பிறந்தவர் சீவரெட்ணம். பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய வயது வந்ததும் வலையிறவில் ஆரம்ப வகுப்புக்களில் கற்றார். தனது மகன் சைவச் சூழலில் கற்க வேண்டுமென விரும்பிய தந்தை வலையிறவுக்கு அண்மையில் பல தரமான பாடசாலைகள் இருந்த போதும், சிறிது காலமாகத்தான் சுவாமி விபுலானந்தரால் ஆரம்பிக்கப்பெற்ற சிவாநந்தா வித்தியாலயத்தில் சீவரெட்ணத்தைச் சேர்த்தார்.

இங்கு இவர் விடுதியில் தங்கி கற்றதனால், ராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளுடன் பழக வாய்ப்பு ஏற்பட்டது. இன்று நடைபெறுவது போலவே மாணவர்கள் நாளாந்த நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாயிருந்தனர். இவர் பூசைகளுக்கான பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செயல்பட்டார். இவரின் பொறுப்புணர்ச்சியும் நன்நடத்தையும் இல்லச் சுவாமி களின் கவனத்தை ஈர்த்தன. எனவே இல்லத்து மாணவர்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பும் கொடுக்கப்பட்டது. இதனால் மாணவர்கள் இவரை 'ப்றதர்' (Brother) என அழைத்தனர்.

சிவாநந்த வித்தியாலயமும் இல்லமும் விடுதியும் ஆரம்ப காலம் என்பதால் பல கஷ்டங்களை எதிர்கொண்டன. இல்லத்திலுள்ள மாணவர்களைப் பராமரிக்க நிதி மற்றும் பொருட்கள் தேவைக்கேற்ற அளவு கிடைக்கவில்லை. எனவே ஊரவர்களிடம் நிதி, பொருள் ஆகியவற்றைச் சேகரிக்கத் தொடங்கினார். நன்கொடையாளர்கள் சலிக்காத வகையில் சிறு அளவில் தான் நன்கொடையைக் கோரினார். மாதாந்தம் சிறு தொகைப்பணம், வாராந்தம் சேர்ந்த கைப்பிடி அரிசி போன்றவற்றையே கேட்டனர். அரிசி கொடுப்பவர் களிடம் ஒரு சிறிய ஓலைப்பெட்டியை கொடுத்து அவர்கள் சமைக்கத் தொடங்கும் ஒவ்வொரு முறையும் ஒரு கைப்பிடி அரிசியை அவ்வோலைப்பெட்டியில் சேகரிக்கும் படி கேட்டு வார முடிவில் அவை பொறுப்பாளர்களால் சேகரிக்கப்பட்டன. இப்பணிகளில் 'Brother' சீவரெட்ணம் ஆர்வத்துடன் ஈடுபட்டார். இவ்வாறான பயிற்சியும் அவர் சுவாமி யான பின் இந்தியாவிலுள்ள பல ராமகிருஷ்ண மடங்களில் பெற்ற அனுபவமுமே இவர் இங்கு சிறு தொகையாக சேகரித்து பெரிய சேவைகளைச் செய்ய உறுதுணையாய் பயன்பட்டது.

இவருடைய குண இயல்புகளை நன்கு அவதானித்த ஸ்ரீமத் சுவாமி நடராஜாநந்த மகராஜ் இவருடைய விருப்பத்துடனும் குடும்பத்தார் இசைவுடனும் இவர் கல்கத்தா (தற்போது கொல்கத்தா) ராமகிருஷ்ண மடத்தில் சைதன்யராகச் சேர உதவினார். பயிற்சிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் முடிந்ததும் தீட்சை பெற்று சுவாமி ஜீவனாநந்தர் என்ற துறவு நாமத்தோடு துறவி யானார். இவர் இந்தியாவில் பல மடங்களுக்குச் சேவையாற்ற அனுப்பப்பட்டார். இவர் சேவையாற்றிய மடங்கள் சில மிகவும் வறிய மக்களைக் கொண்ட ஊர்களில் அமைந் திருந்தன. மடத்தின் செயற்பாடுகளுக்காக சுவாமிகள் பணம் பொருள் ஆகியன சேகரிக்கச் செல்வது வழக்கம். அங்கு அனுதாபிகள் கொடுக்கும் சிறு அளவிலான பொருளையும் பணத்தையும் மனங்கோணாது பெற்று இன்முகத்தோடு ஆசிர்வதிப்பார். இவ்வனுபவம் காரணமாகவே நன்கொடையாளர்களுக்குச் சிரமமில்லாமல் நன்கொடைகளைப் பெறும் ஆற்றலைப் பெற்றார்.

ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தர் ராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளின் முகாமை யாளராக இருந்ததோடு மாணவர் இல்லங்கள், மாணவர் விடுதி ஆகியவற்றை நடத்தும் பொறுப்பாளராகவும் இருந்தார். 1963ம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்ற பின் மாணவர் இல்லத்தையும் விடுதியையும் நடத்தும் பொறுப்பில் இருந்தார். சிவாநந்த வித்தியாலய விடுதியை நடத்தும் பொறுப்பை சிவாநந்த வித்தியாலயம் கேட்டுப் பெற்று நடத்தியது. எனவே மாணவர் இல்லங்கள் மட்டும் சுவாமிகளின் பொறுப்பில் இருந்தன. சுவாமிகளின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் இல்லங்களை தனியாக நடத்துவதில் சிரமப்பட்டார். இந்நிலையில் அவர் மிஷன் தலைமையுடன் தொடர்பு கொண்டு உதவிக்கு ஒரு சுவாமியை அனுப்பும்படி கோரிக்கை விடுத்தார். சுவாமி ஜீவனாநந்த மகராஜை அனுப்புவதாக மிஷன் தலைமையகம் அறிவித்தது.

ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்த மகராஜ் மட்டக்களப்புக்கு வரவிருக்கின்றார் என அறிந்ததும் மிஷன் அபிமானிகளும் நலன் விரும்பிகளும் பழைய மாணவர்களும் சிவாநந்த வித்தி யாலயமும் மற்றும் பாடசாலைகளும் இணைந்து வரவேற்கத் திட்டமிட்டனர். சுவாமி அவர்கள் மட்டக்களப்புக்கு வந்த அன்று அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. புகையிரத நிலையத்திலிருந்து அவரை ஊர்வலமாக அழைத்து வந்தனர். மாணவர் இல்லத்தில் வரவேற்கப்பட்டு அங்கு கலந்துரையாடலும் நடைபெற்றது. தான் இந்தியா வுக்குச் செல்லும் போது இல்லம் எப்படி இருந்ததோ அதே நிலையில் இருப்பதை சுவாமிஜீ கவனித்தார். இந்த இல்லத்துக்கு நல்ல வசதியான கட்டடம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு அப்போதே தோன்றியிருக்க வேண்டும்.

சுவாமி ஜீவனாநந்தரின் வரவால் சுவாமி நடராஜானந்தருக்கு மனத்திருப்தியும், ஆறுதலும் கிடைத்தது. எனினும் அவருடைய உடல்நிலை பாதிப்படைந்தது. சுவாமி ஜீவனாநந்தர் அவரது ஆசிரியரும் துறவுப்பாதை வழிகாட்டியுமான சுவாமி நடராஜானந்தரை இரவு பகல் பாராது நன்கு பராமரித்து கவனித்து வந்தார். எனினும் உடல் நிலை தேற வில்லை. 1964ம் ஆண்டு சுவாமி நடராஜானந்தர் மகா சமாதியடைந்தார்.

இந்நிலையில் மட்டக்களப்பில் ஒரு இராமகிருஷ்ண மிஷன் நிலையம் அவசியந் தானா? என்றொரு எண்ணம் தலைமைப் பீடத்தில் எழுந்திருக்க வேண்டும். ஏனெனில் சுவாமியின் சமாதிக்கிரியைகள் முடிந்ததும் கொழும்பு மிஷன் தலைவர், சுவாமி ஜீவனாநந்தரிடம் 'Jeevanananda be ready to pack up' (ஜீவனாநந்தா போக, மூட்டை கட்ட ஆயத்த மாயிரு) என்றார். பெரியவர்களுக்கு மரியாதை அளிக்கும் சுவாமி மௌனமாயிருந்தார். இந்த எண்ணம் எழக் காரணமும் உண்டு மட்டக்களப்பில் மிஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றுள்ளதால் பாடசாலை முகாமையாளரோ முகாமைத்துவமோ தேவைப்படவில்லை. மாணவரில்லத்திலும் குறைந்த மாணவரே உள்ளதால், கொழும்பிலிருந்தே தொண்டர்கள் மூலம் இல்லத்தை நடத்தலாம் என்று அபிப்பிராயப்பட்டனர். ஆகையால் இங்கு மிஷன் நிலையம் ஒன்று தேவையில்லை என்ற எண்ணம் இருந்தது.

இதனால் ஏற்படும் ஏமாற்றத்தையும் அபாயத்தையும் உய்த்துணர்ந்த ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு அங்கத்தவர்களும், மிஷன் அபிமானிகளும், நலன் விரும்பிகளும், அனுதாபிகளும், பழைய மாணவர் பிரதிநிதிகளும், மிஷன் தலைவரிடம் சுவாமி விபுலானந்தரின் நோக்கமும், முக்கியத்துவமும், சிவபுரி விபுலானந்த மண்டபம், விபுலானந்த சமாதி அன்று வெற்றுக் காணியாய் கிடந்த பல ஏக்கர் நிலம் ஆகியவற்றையும் நினைவு சார்ந்த நிகழ்ச்சிகளையும் முன்னெடுத்து கூறி மட்டக்களப்பில் இராமகிருஷ்ண மிஷன் நிலையமும், பணியும் தொடர வேண்டுமென்பதற்கான முக்கியத்துவத்தை அழுத்திச் சுட்டிக்காட்டியதன் விளைவாக நிலையத்தைத் தொடர்ந்தியங்க வைக்கத் தீர்மானிக்கப்பட்டது. சுவாமி ஜீவனாநந்த மகராஜின் சேவை ஆரம்பமானது.

மிஷன் ஆச்சிரமத்துக்கும் மாணவர் இல்லங்களுக்கும் காத்திரமான கட்டிடங்கள் தேவை என்பதை சுவாமி உணர்ந்தார். ஆகவே முதலில் கல்லடி உப்போடை மாணவர் இல்லத்துக்கு ஒரு வசதியான கட்டிடம் அமைக்கும் பணிக்கும் தேவையான நன்கொடைகளை பெறத் திட்டமிட்டார். மாதாந்தம் இரண்டு ரூபாய் என எளிதான நன்கொடையை எதிர்பார்த்து சேகரிப்பு அட்டைகளைத் தயாரித்தார். இவ்வட்டைகளை அன்பர்கள் அபிமானிகள் நலன் விரும்பியோர் பழைய மாணவர்கள் ஆகியோரிடம் விநியோகித்தார். இத்தொகையைக் கொடுக்க இயைந்தவர்களில் பெரும்பாலானோர் இத்தொகை மிகவும் சொற்பம் எனக்கூறியதும் சுவாமி சொன்ன பதில் இதையே ஒழுங்காகத்தந்தால் போதும் பெரியதொகை தேவைப்படும்போது கட்டாயம் நான் உங்களிடம் வருவேன் என்றார். கூறியதுபோல் கட்டடத்திற்காகப் பெரிய தொகை தேவைப்பட்டபோது சென்று கேட்டுப் பெற்றார். இக்கைங்கரியத்தில் சுவாமி சர்வாதீதானந்தர் (கதிர்காமத்துமட சுவாமி) பெரிதும் பங்காற்றினார். சுவாமி ஜீவனாநந்தருடன் சென்று நன்கொடைகளைப் பெற்று உதவினார். கதிர்காமத்து மட அறிமுகம் இதில் பெரிதும் உதவியது. இந் நன்கொடைகளால் அமைந்த கல்லடி உப்போடை மிஷன் ஆச்சிரமமும், மாணவர் இல்லமும், சாரதா பெண்கள் இல்லமும் காரைதீவு இல்லமும் சுவாமிக்கு அழியா நினைவாலயங்களாக அமைந்துள்ளன என்றால் மிகையாகாது.

தொடர்ந்து வந்து கொண்டிருந்த நன்கொடைகளால் மட்டக்களப்பு ஆனைப்பந்தி இல்லப் புனரமைப்பு, சிவபுரி மறு சீரமைப்பு, ஆச்சாரிய மந்திர் திருத்த வேலைகளும், புதிய கட்டிடமும் (விவேகானந்த விருந்தினர் விடுதியகமும்) மாந்தீவு முருகன் ஆலய புனரமைப்பு, விவேகானந்தர் வீடமைப்புத்திட்டம் ஆகியனவும் செயற்படுத்தப்பட்டன. இல்லத்தைச்சுற்றி வெற்றுக்காணிகளாயும் மணற்பரப்புக்களாகவும் கிடந்த நிலப்பரப்பை இல்ல மாணவர் உதவியுடன் பசுமையான மரக்கறித் தோட்டங்களாகவும் மலர் நந்தவனங்களாகவும் தென்னந்தோட்டங்களாகவும் மாற்றினார். நூகம் இராமகிருஷ்ண நெற்காணிச் செய்கை, இடர் நிவாரணச்சேவை போன்ற பல சேவைகள் சுவாமிகளை நினைவுகூரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொண்டேயிருக்கும்.

இராமக்கிருஷ்ண மிஷன் நிலையங்கள் புனிதத்துவத்துக்கு பேர்போனவை. சுவாமிகளும் மாணவர் இல்லங்களையும் சூழலையும் சுத்தமாக வைத்திருக்க மாணவர்களை பயிற்றுவித்துள்ளார். அத்துடன் மரக்கறித் தோட்டம், மலர்த்தோட்டம் அமைத்து அவற்றையும் சுத்தமாக வைத்திருக்கப் பழக்கியுள்ளார். இதன் மூலம் தேவைப்படும் மலர்களையும் தேவைப்படும் மரக்கறிகளில் ஒரு பகுதியையும் பெறுகிறார்கள்.

ஆன்மீகம் தொடர்பாக உத்தியோக சம்பந்தமாக அல்லது வேறு காரணங்களுக்காக மட்டக்களப்புக்கு வருபவர்கள் இந்த மிஷன் ஆச்சிரமத்துக்கும் வந்து சுற்றிப்பார்த்துப் பிரமித்துப் போகிறார்கள். இவ்வாறு சீராக பராமரிப்பதைப்பார்த்து ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று விரும்பி நன்கொடை கொடுத்துச் செல்கிறார்கள். இங்கு வரும் வெளி நாட்டவர்கள் வெளிநாட்டுத் தூதுவர்கள் மனமுவந்து பாராட்டி வரவு ஏட்டில் பதிந்து செல்வார்கள்.

இவ்வாறு வந்த நோர்வே நாட்டுத் தூதரும் கரும அதிகாரிகளும் சுவாமிகளுடன் உத்தியோக பூர்வமாக கலந்துரையாடிக் கொண்டிருந்த வேளையில் அவருடன் வந்திருந்த தூதரின் பாரியாரும் மற்றப் பெண்களும் இல்லத்தைச் சுற்றிப்பார்க்க விரும்பினார்கள். அவர்களைக் கூட்டிச்சென்று சுற்றிக்காண்பித்தார்கள். பார்த்துவிட்டு வந்தவர்கள் தூதரிடம் நாங்கள் உலகில் பல தர்மத்தாபனங்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இந்தத்தாபனம் போன்று பரிசுத்தமாக பராமரிக்கப்படும் தாபனத்தை நாங்கள் எங்கும் காணவில்லை. ஆகையால் இந்தத் தாபனத்துக்கு காத்திரமாக ஏதாவது செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். தூதரும் சுவாமிகளுடன் ஆலோசித்து ஏதாவது செய்வோம் எனக் கூறினார். இதன் விளைவு சாரதா பெண்கள் இல்லத்தின் படிப்பு மண்டபம் (Study hall).

சுவாமிகள் சில காலம் கொழும்பு மிஷனில் பணியில் இருந்த போது அங்கும் பல திருத்த வேலைகளை பல இலட்சம் ரூபாய் செலவில் செய்திருந்தார். கொழும்பில் தொடர்ந்து சேவையாற்றும் படி கேட்டும் அவர் விரும்பாது, தான் மட்டக்களப்பில் தனது இல்ல மாணவர்களோடு இருக்க விரும்பியதால் மீண்டும் மட்டக்களப்பு கல்லடி உப்போடை மிஷன் ஆச்சிரமத்திலிருந்து தொண்டு செய்தார்.

மட்டக்களப்பு மிஷன் ஆச்சிரமத்திலும் இல்லங்களிலும் மற்றும் சமூகத் தொண்டுகளிலும் வேலைப்பழு அதிகரித்ததால் சுவாமி அஜராத்மாநந்த மகராஜ் சுவாமி, தத்பாஷாநந்த மகராஜ் ஆகியோர் மட்டக்களப்பு மிஷனுக்கு அனுப்பப்பட்டார்கள். சுவாமி அஜராத்மாநந்த மகராஜ் சுவாமிக்கு உதவியாகவும் சுவாமி தத்பாஷாநந்த மகராஜ் இல்லப் பரிபாலிப்பையும் ஏற்றுக்கொண்டனர். 26.12.2004 சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பை மீளக்கட்டும் பணியும், புனரமைத்தல் பணியும் நடைபெற்றபோது அதில் மிஷனும் பங்கு கொண்டு வீடுகள் கட்டும் பணிக்காக சுவாமி ஞானமயாநந்த மகராஜ் வந்தார்.

இவ்வளவு உதவியிருந்தும் சுவாமி ஜீவனாநந்த மகராஜின் உடல்நிலை பாதிப்புற்றது. இருந்தும் அவர் கடமையை செய்து கொண்டே இருந்தார். வைத்தியர்களும் தங்களாலான மருத்துவச் சேவையைச் செய்தனர். எனினும் அவர் உடல்நிலை தேறாது அவர் விரும்பியபடியே மட்டக்களப்பிலேயே 04.02.2006ல் மகாசமாதியடைந்தார்.

மட்டக்களப்பில் ராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமும் அதன் தொழிற்பாடுகளும் தொடர்கிறதென்றால் அது சுவாமி ஜீவனாநந்த மகராஜின் இடைவிடாத் தொண்டினாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட சுவாமிஜீ

வே. யோகிதாஸ் (J.P)
'வெண்ணிலா', கல்லடி

சுவாமி ஜீவனாநந்தஜீ மஹராஜ் ஜீவரெத்தினம் என்ற பெயரில் 22.06.1925ல் மட்டக்களப்பு வலையறவில் செல்வம் நிறைந்த போடியார் குடும்பத்தில் பிறந்தார். இவர் சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்று பின் சீனியர் கேம்பிரிஜ் பரீட்சையில் சித்தியடைந்தார். அப்போது சுவாமி நிஸ்கமானந்தர் சிவானந்த வித்தியாலய விடுதிக்குப் பொறுப்பாக இருந்தார். அவரின் பக்தி, ஒழுக்கம், கட்டுப்பாட்டினால் மிகவும் கவரப்பட்டார். சுவாமி விவேகானந்தரின் நேரடிச் சீடரான சுவாமி வீரஜானந்த மஹராஜ் அவர்களிடமிருந்து மந்திரதீட்சை பெற்று 1952ல் பிரம்மச்சரிய தீட்சை, பின் சன்னியாச தீட்சையும் பெற்றுக் கொண்டார்.

1966ம் ஆண்டு சுவாமிஜீ மட்டக்களப்புக்கு மாற்றலாக வந்தார். அப்போது சுவாமி நடராஜானந்தஜீ சுகயீனமாக இருந்தபடியால், அவரின் புனித சேவைகளைப் பொறுப்பேற்க வேண்டியேற்பட்டது. அப்போது நிதிநிலைமை மிகவும் மோசமாக இருந்தது. அவரின் பெரும் முயற்சியாலும், அர்ப்பணிப்பு சேவையினாலும் நிதி தாராளமாகக் கிடைத்தது. உண்மையிலே சுவாமிஜீ லட்சுமிகரம் பெற்றவர் என்றே கூற வேண்டும்.

அக்காலத்தில் எனக்கு நன்கு தெரியும் உறுகாமம் வயல் வேலையை ஆரம்பித்தார். அமோக அறுவடை வருடாவருடம் குருதேவர் அருளால் கிடைத்தது. அமரர்களான அன்பன் நடராஜா, பொ.சிவயோகம் இருவரும் சுவாமியுடன் உறுதுணையாக வயல் வேலைகளை கவனித்துதவினார்கள்.

வெளியிடத்தில் இருந்து அன்பர்கள் விருந்தாளிகளாக வந்தால் மட்டக்களப்பு மண் வாசனைக்கேற்ற உணவுகள் வழங்கி சந்தோசப்படுத்துவதில் தனி விருப்பம் காணுவார். அதற்கு அமரத்துவம் அடைந்த எனது பாரியார் புனிதவதி சுவாமி கூறுகின்ற சிற் றுண்டிகளை பொறுப்புடன் செய்து கொடுக்க தயங்கமாட்டார்.

குருதேவரைத் தரிசிக்க, மிஷனுக்கு போகும் அன்பர்கள் சில நாட்களாக போகாவிட் டால், சுவாமி கண்டதும் என்னமேன் இப்பக்கம் காணவில்லை? என்ன சுகமில்லையா? என்று குசலம் விசாரிப்பார். அவருக்கு மிகுந்த ஞாபகசக்தி உண்டு. அன்பர்களுடன் தொடர்பாடும் அதிகம்.

இப்படியான கோட்பாட்டில் வாழ்ந்து குருதேவருக்கு சேவை செய்தவர்தான் எமது சு வாமிஜீ. தற்பொழுது நாங்கள் வாழும் கல்லடியில் உள்ள 'வெண்ணிலா' இல்லத்துக்கு அடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல் நாட்டி, ஆசிர்வாதம் வழங்கியதும் சுவாமிஜியேதான், மட்/மாந்தீவு தொழுநோயாளர் ஆஸ்பத்திரி சூழலில் முருகன் ஆலயம் உண்டு. வருடாந்தம் திருவிழா செய்வது வழக்கம். சகல ஒழுங்குகளையும் செய்யும்படி கேட்பார். நான் செவ்வனே செய்து முடித்து வைப்பேன். அவர் பிறந்து வளர்ந்த ஊருக்கருகாமையில் உள்ள முருகன் ஆலயத்தை நிர்வகிப்பது சுவாமிக்கு பெரும் சந்தோசம்.

மேலும், காகிதம் போக்குவரத்துக்கு ஏதும் கடிதங்கள் 'ரைப்' பண்ண வேண்டுமெனில் என்னைக் கூப்பிடுவார் நானும் செவ்வனே செய்து கொடுப்பேன்.

வாழ்க ஜீவனாநந்தஜீயின் திருநாமம்
மேலும் வளர்க அன்னாரது திருப்பணிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கர்மமே கருணையாய்'

லயன், தேசபந்து, கலாநிதி. வை. வீரசிங்கம்
*அகில இலங்கை சமாதான நீதிவான்,*
*உரிமையாளர்,ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு*

இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டு தம்பெருமை உலகில் பிறக்கும் வகையில், மானிடராய் பிறந்தும் மக்களுக்குத் தொண்டாற்றும் எண்ணத்தில் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பியும் வந்த அடிகள், துறவிகள் வரிசையில் எமது மகான் 'ஜீவனாநந்த அடிகளும் ஒருவர். இவர் பகவான் இராமகிருஷ்ணர் பின்பற்றி நின்ற கருத்துக்களால் ஈர்க்கப்பட்டும், சுவாமி விபுலானந்த அடிகளைக் குருவாகக் கொண்டும் செயற்பட்டார்.

*'வேண்டின் உண்டாகத்துறக்க துறந்த பின்*
*ஈண்டு இயற்பால பல'* *-342*

என்ற வள்ளுவப் பெருமானின் வாக்குக்கொப்ப எல்லாப் பொருள்களையும் துறந்து இம்மையில் முறையாக உண்டாக வேண்டிய இன்பங்கள் பலப்பலவாகும் என்பதனால், இளமையிலேயே துறவு பூண்டு, ஏழை எளியவர்களுக்குப் பணியே செய்து இறந்தும், இறவாப்புகழீட்டினார். சுவாமி ஜீவனாநந்த அடிகள் ஒரு துறவியாக மட்டுமல்லாமல் இறையடிபற்றி சுவர்க்கம் ஒன்றினையே அடைய வேண்டுமென எண்ணி தலயாத்திரைகள் சென்றும், திர்த்தங்களாடியும் காலத்தைக் கழிக்காது ஒரு தாயாக, தந்தையாக, தாயை இழந்த பிள்ளைகளின்பால் அன்பு, கருணை கொண்ட தனது வழியிலே அவர்களையும் ஒழுக்கசீலர்களாக, கல்விமான்களாக, கல்வி மான்கள் மட்டுமல்லாமல் நிலத்தையும், நீரையும் கொண்டு தங்களது உடல் உழைப்பால் எதுவும் இல்லையே என்று சோம்பியிராது, வறுமையால் வாடாது உழைத்து வாழும் வழிவகையில் அவர்களுக்கு தொழிலையும் கற்றுக் கொடுத்து கல்வியும் கைத்தொழிலும் இரு கண்கள் என உணர்த்தினார்.

சுவாமி அவர்களின்கீழ் கல்வியும், கைத்தொழிலும் கற்றுத் தேறியுமுள்ள எந்தவொரு மாணவனையும், அவரது கண்முன்னால் எடுபிடிகளாக நிற்பவர்களாகக் காணக்கூடாது என்ற தாய் உள்ளத்தோடும், தன்மானச் சுயமரியாதையோடுமே அவர் பண்படுத்தியிருந்தார். மட்டுமல்லாமல் சுவாமி அவர்களிடம் சமய வேறுபாடு, இன, பிரதேச வேறுபாடு என்பவற்றையும் காணமுடியாது. கிழக்கின் மட்டக்களப்பு நகரையண்டிய வலையறவு எனுமிடத்தில் பிறந்தும், வளர்ந்தும், துறவு பூண்டு தொண்டாற்றினாலும் சுவாமி அவர்கள் பிறந்த இடம், வளர்ந்த இடம் எது? எங்கு என்பது அனேகமானோர் அறியமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் அவர் நோக்கு பொதுநோக்கு, எதிலும் உண்மை, நேர்மை தவறாது சமூக, சமய நோக்காகவே இருந்தது.

*'துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து*
*இறந்தாரை எண்ணிக் கொண்டற்று'*

*'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று*
*நிலையாமை காணப்படும்'*

என்ற வள்ளுவர் பெருமானின் குறள் நெறிப்படியே அதன் இலக்கணம் தவறாது நல்லதோர் 'இலக்கு இமயமாகப்' பணியாற்றி இறவாப் புகழுடன் எத்தனையோ மனிதர் களின் உள்ளத்தில் நிலைத்து நிற்கின்றவர்தான் சுவாமி அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குரு தேவருக்காக வாழ வேணும்' என வாழ்ந்த சுவாமிகள்

*சுவாமி நீலமாதவானந்தஜி*
*செங்கற்பட்டு - இந்தியா*

அந்நாளில் குறு முனிவன் ஒருவன் தென்திசை வந்து உலகின் சமநிலையை நெறிப்படுத்தி னான் என்று புராணங்களில் படித்தோம். ஈழவளநாட்டில், மீன்பாடும் தேனாடாம் மட்டு நகரில் தமக்கென எதையும் கொள்ளாது, நானலம் விட்டு நானிலத்திற்காய் வாழ்ந்து தாயாய், தந்தையாய் மதியுக மந்திரியாய், காப்பதில் அந்த மாயவனாய் தோன்றிய மனுக்குலத்தின் அணிவிளக்கை, சான்று நிறை தத்துவதைப் பற்றி சிறிது நினைவு கூறக் கிடைத்த இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வதில் பேருவகை அடைகிறேன்.

எத்தனையோமுறை மஹராஜ் அவர்களைப் பார்த்திருந்தாலும் முதன் முறையாக 1998ல் நான் கல்லூரி மாணவனாக இருந்தபோது 'சாரதை' என்னும் சஞ்சிகையை அவரிடம் கொடுத்து ஆசிபெற்ற நிகழ்வுதான் முன்னோடியானது. 1999ல் ராமகிருஷ்ண இயக்கத்தில் என்னை இணைப்பதற்கு எனது குருநாதரின் ஆசி கிட்டிய போது, கொழும்பு ஆசிரமத்தில் வந்து தங்கியிருந்தேன். அப்போது நவராத்திரி காலம். மஹராஜ் அவர்கள், மீண்டும் கொழும்பு வந்திருந்தார்கள். அவரிடம் ஆசி பெற நான் சென்ற போது தம்பி எங்கட ஹோமில பெடியளுக்கு கொஞ்சம் பாடங்கள் சொல்லித்தரவேணும் நீங்கள் இந்தியாவிற்கு போகும் வரை மட்டக்களப்பில இருப்பியளோ என்றார். எனக்கு கிடைத்த வரத்தை கேள்வியாக, வேண்டுகோளாகக் கேட்டது எனக்கு மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் கொடுத்தது. அதுதான் மஹராஜ் அவர்களின் தனித்தன்மை.

முதல் நாள் மட்டக்களப்பு வாசம் எனக்கு புது அனுபவத்தைக் கொடுத்தது. மஹராஜ் அவர்கள் தனக்கு பிடித்த தேனில் ஊறிய முந்திரிப்பருப்புக்களை எனக்கும் தந்தார். அது எனது உடலில் மட்டுமல்ல உள்ளத்திலும் புகுந்து என்னை உரமாக்கியிருக்கிறது.

என்னை இரண்டாம் நாள் தொட்டு மாணவர்களுக்கு 2 வகுப்புக்கள் எடுக்கச் சொன் னார். 3ம் நாள் என்னை ஒரு பிரம்மச்சாரியை அழைப்பது போன்று அழைத்து 'மஹராஜ் நீங்கள் குருதேவருக்கு பூசை செய்ய வேணும் கற்றுக்கொள்ளுங்கள்' என்றார். 5ம் நாள் இடைவெளிக்குள் பூஜா மந்திரங்களை மனப்பாடம் செய்து பூஜையில் உட்கார்ந்தேன்.

மஹராஜ் அவர்கள் 2.45 அல்லது 3மணி (அதிகாலை)க்கு எழுந்து விடுவது வழக்கம் நான் 4 மணிக்கு கோயிலில் குருமஹராஜ் அலங்காரத்திற்காக நடைதிறக்கும் போது அவர் குளித்து முடித்து ஈரவேட்டியோடு பக்தி பெருக குருமஹராஜ் திருச்சன்னிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து 'குருமஹராஜ் கீ ஜெய்' என்றவாறு நின்றிருப்பது, காண்பவரைக் கூட பக்தியில் ஆழ்த்திவிடும்.

ஒரு முறை பக்கத்து கிராமம் ஒன்றில் அடிக்கல் நாட்டுவதற்காக அழைத்திருந்தார்கள். வழமைபோல கோயிலுக்கு வரும் போது அவர் ஏற்கனவே குளித்து முடித்து சந்நிதிக்குள் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தார். பின்னர் பூக்களும் வில்வதளங்களும் கொண்டு குருதேவரை அர்ச்சித்தார். சுமார் 1 மணிக்கு அடிக்கல் நாட்டும் விழா முடிந்து.... மடத்திற்கு திரும்பி வந்தார். நான் மஹாராஜிடம் மஹாராஜ் நீங்கள் காலையில் விரதம் இருந்து இதுவரை ஒன்றும் சாப்பிடாமல் இருக்கிறீர்களே இது மிகவும் அவசியம் தானா? என்று கேட்டேன். அதற்கு அவர் 'மக்கள் நம்மிடம் நம்பிக்கை கொண்டு அழைக்கிறார்கள். சிறிதளவாவது பக்தியுடனும், உடல் உழைப்புடனும் சென்றால் குருதேவர் மனமிரங்கி அருள் செய்வார்' என்றார். அந்த முதிய வயதிலும் தன்னை மிகவும் சிறியவனாகப் பார்ப்பது அவரது பண்பு.

நான் பூஜையில் இருந்த போது 'அந்தரிக்ச நிவாரணம்' என்ற நியாஸசத்தை செய்கிற போது தண்ணீர் எடுத்து வானத்தை நோக்கி விசிற வேண்டும். அன்று மஹராஜ் அவர்களை அருகில் பார்த்த அவசரத்தில் சற்று அதிகமாக நீர் எடுத்து விசிறி விட்டேன். அதற்கு மஹராஜ் சொன்னார் 'வேணு மண்டா ஒரு பைப் எடுத்து மந்திரம் சொல்லி அடியுங்கோ' நான் சிரிப்பை அடக்க முடியாமல் தவித்தேன்.

குழந்தைகள் வருகின்ற போது குதூகலமாகி விளையாடுவார். அவரை அப்போது ஒரு வயதானவர் என்றே நம்ப முடியாது. 'உனக்கு பூனைக்குட்டி பிடிக்குமா, பூனை குட்டிக்கு எத்தனை கால், அது எப்படி கத்தும்' என்றெல்லாம் விளையாடிக் கொண்டிருப்பார்.இளம் சுவாமியாக இருந்த போது அவர் பட்ட ஆரம்பகால பிரச்சினைகள் ஏராளம்.

ஊட்டி மடத்தில் அவர் சேர்ந்த காலம் மிகவும் சோதனைக்காலம், மஹாராஜிடம் இருந்தது ஒரே வேட்டி, துண்டு மாத்திரமே. அந்தக் கடுங்குளிர் மலைப் பிரதேசத்தில் இரவில் துணி துவைத்து உலர்த்தி உடுத்த வேண்டிய கட்டாயம். பல நாட்கள் பல் நடுங்க பதைத்து உறக்கமின்றி தவித்த இரவுகள், குருதேவரின் சிந்தனையில் சாதனையின் சாதகத்தின் சத்தியமாக விளங்கிற்று. ஊட்டி மடத்தில் அவருக்கு ஒதுக்கப்பட்ட அறையில் நுழைந்த போது அறைக்குள் உள்ளிருந்து பாம்பு ஒன்று வெளியேறிற்று, அதற்கு அருகிலிருந்த சீனியர் சுவாமி ஒருவர் என்ன பார்க்கிறாய், எப்படியாவது அந்த பயலோடு 'அட்ஜஸ்ட்' செய்து கொள் என்றார்.

அது சுவாமி சித்பவானந்தர் தனது எழுத்து ஆற்றலால் தமிழகத்தில் ராமகிருஷ்ண விவேகானந்த எழுச்சியை வளர்த்து கொண்டிருந்த காலம். மஹராஜ் அவர்கள் அவருக்கே உரிய தமிழார்வத்துடன் சித்பவானந்தரிடம் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். அதன் மூலம் பலமுறை தீர்த்த யாத்திரைகள் செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

சேலம் ஆசிரமத்தில் மஹராஜ் அவர்களின் பணி மிகவும் பல தரப்பட்டதாயிருந்தது. சமையல், காய்கறி வாங்க சந்தைக்கு போதல், பாத்திரம் கழுவுதல், பூஜை, வந்தவர்களை உபசரித்தல், உணவு பரிமாறுதல், அலுவலக வேலைகள், நிதி திரட்டுதல், வயதான சுவாமிகளை பார்த்துக் கொள்ளுதல் என பன்முகப்பட்ட பணிகளுக்கு மத்தியிலும் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்முகம் மாறாது எடுத்த இலட்சியத்தில் பற்றுக் கொண்டு தன் 'பற்று' அறுவதற்கு தவமியற்றினார்.

சிறுவயதில் (5 அல்லது 6 வயதில்) மட்டு/சிவானந்தா வித்தியாலய மாணாக்கராக சிறு பிள்ளை சீவரத்தினம் குதிரை பூட்டிய வண்டியில் தந்தையோடு வந்திறங்கினார். தாயைப் பிரிந்த ஏக்கம் தனயனுக்கு வந்து விடக் கூடாது என்பதில் நாட்டம் கொண்ட தந்தை அந்தக் காலத்திலேயே ஆயிரம் ரூபாய்களைக் கொடுத்து பள்ளியில் சேர்த்தார். மதில் சுவர் ஓரமாக தந்தையின் சாரட்வண்டி சத்தத்தைக் கேட்க சிறுவன் சீவரத்தினம் துடித்த துடிப்புக்கள் சில மாதங்களில் ஓய்ந்துதான் போனது. ஒரு நாள் இரவில் எல்லா மாணவர்களும் வரிசையில் நின்று சுவாமிகள் ஒருவருக்கு வணக்கம் செய்ய அழைத்து வரப்பட்டார்கள். அந்தக் கூட்டத்தின் மத்தியில்........ ஆம் அது உண்மைதான் இவர் மட்டு தந்த முத்து நிறை மணிப்பவளம், தேர்ந்தெடுத்த மாமலர் ஆவர். தவத்திரு சுவாமி விபுலானந்தர், 'உம்!!- உமது பெயரென்னவோ?....' சிங்கம் கர்ஜித்தது. சீவரெத்தினம் பதில் மங்கிய குரலில் சரி நன்றாகப் படிக்க வேணும். 'ஓம் சுவாமி' படித்தார்... நன்றாக த்தான் மட்டு நகர் மடத்தில் அவர் தனது முதலுழைப்பில் பெற்ற பணத்தைக் கொண்டு சிறிய கோயில் கூரை வேய்வதற்காக செலவிட்டார். இறுதியாக அந்தத் கோயிலை ஒரு முறையாவது தரிசனம் செய்யாமல் இருந்ததில்லை.

வேலூர் மடத்திற்கு தலயாத்திரையாக புறப்பட்டார். மதுரை அண்ணாமலைக் கல்லூரியில் பட்டப் படிப்பிற்கான கடிதத்தை கூடவே கொண்டு சென்றார். தவத்திரு வீரஜானந்தர் தவ மடத்தின் தலைமையில் இருந்தார். சீவரத்தினம் அடிகளாரின் அடியிணைகளில் வீழ்ந்து அருமறையாகிய மந்திர உபதேசத்தை அருளப் பெற்றார். மறந்தது தன் உடலையும் உலகத்தையும் மட்டுமல்ல தான் படிக்க வந்ததையும் தான்.

திருமடத்திலேயே துறவு பூண இச்சை கொண்டார். காலங்கள் கடந்தன. சேலம் ஆசிரமத்தில் வறுமை நிலை இருந்த போது மல்லிகையும், பூசணிக்காய்களும் சற்று விளைந்து பலன் கொடுத்தது. காலையில் அதை சந்தையில் விற்று வரவேண்டியிருந்தது. பிராமண எதிர்ப்பாளர்கள் சுவாமிகளின் பிரமச்சரிய குடுமியைப் பார்த்து ஏளனமாக கிண்டடிலப்பார்கள். எதையும் பொருட்படுத்திப் பார்க்க துறவின் வேகம் அவருக்கு இடம் கொடுக்கவில்லை.

சுவாமி சம்ப்ரக்ஞானந்தஜி, சுவாமி தேசிகானந்தஜி போன்றோருடன் அவர் கழித்த இறுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த காலம் அவரை மேலும் பண்படுத்திற்று, நன்கொடைகள் வசூலிக்கச் செல்லும் போது பட்டினத்தாரின் சில பாடல்களைப் பாடி வாழ்வின் செல்வத்தின் நிலையாமையைக் கூறி மக்களை விழிப்புணர்வு கொண்டு நன்கொடை தரச் செய்தார்.

சுவாமிகள் மட்டுநகர் மடத்திற்கு மேலாளராக வந்த போது மடத்தின் வசமிருந்த 20வதுக்கும் மேற்பட்ட பாடசாலைகளும் அரசுவசமாயிருந்தது. 2 ரூபாய் மட்டுமே கைவசம் வைப்பு நிதியாகத் தரப்பட்டது. மஹராஜ் அவர்கள் அன்று தனது வாழ்வின் போராட்ட வேள்வியைத் தொடங்கினார்.

பல நாட்கள் நடந்து சென்று 1 ரூபாய் நன்கொடையை உவகையோடு குருதேவரின் திருப்பணிக்காக பெற்றுக் கொண்டார். மடத்திற்கு சொந்தமான பகுதியில் உள்ள நிலத்தில் பயிர் அறுவடை செய்ய மாணவர்களை ஊக்கப்படுத்தினார். உழைப்பு, உழைப்பு கடின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பு அது மட்டுமே ஊனமுற்ற ஜீவர்களை வாழ்வித்து ஆனந்த மடைந்த அந்த ஜீவனாந்தருக்கு தெரியும். காலம் மாறி விட்டது. சுவாமி பிரேமாத்மானந்தரின் தலைமையில் தனது பணியை செவ்வனே ஆற்றி வரலானார். இழந்து போயிருந்த மாணவர் இல்லத்தை புதுப்பித்து முடித்தபோது அடுத்த இடி விழுந்தது. இடியல்ல புயல் 1978ம் ஆண்டு என்று நினைக்கிறேன். புயலையும் எதிர்த்து ஒரு புரட்சி செய்து மீண்டும் மாணவர் இல்லத்தை புதுப்பித்தார். பின்னர் மாணவர் இல்லம் காரைதீவு இல்லம் போன்றவற்றை நிறுவினார்.

நான் மடத்தில் சேர்ந்து ஒரு மாதங்களுள் கடுமையான சுகவீனம் வந்தது. என்னைப் பார்ப்பதற்காக மஹராஜ் எனது அறைக்கே வந்து விட்டார். நான் மருந்து சாப்பிடுவது முதல் அனைத்தும் அவருக்குத் தெரிந்திருந்தது. அன்பு என்பது அவரது தனிப்பட்ட வெளிப்பாடு.

மாணவர்களை அவர் கவனித்துக்கொள்ளும் விதம் அலாதியானது. அவர்கள் குளிப்பது முதல் அனைத்தையும் நெறிப்படுத்தினார். இவர்கள்தான் நாளைய நமது நாட்டை நிர்வகிக்கப் போகின்றவர்கள். எனவே அவர்கள் நெறிமுறைக்கு உட்பட்டு வாழ்வது அவசியமானது என்பார்.

சுனாமியின் போது மீண்டும் நான் மட்டு நகர் மடத்திற்கு அனுப்பப்பட்டேன். சுமார் ஆறு வருடங்கள் வட இந்தியாவில் இருந்ததால் எனக்கு நமது உணவின் நிறம் கூட மறந்து போயிற்று வந்த நாள் முதல் தான் உண்ண மறந்தாரே தவிர என்னை ஏதாவது ஒரு உணவு தந்து சாப்பிடச் சொல்லிக் கொண்டே இருப்பார்.

ஒரு நாள் சுனாமி சேவைகள் சற்று பின்னடைவதைக் கண்டு 'என்னால் முடியவில்லை இல்லையென்டா தவண்டு தவண்டு அந்த வேலையை முடிச்சுப் போடுவேன்' என்று ஆதங்கத்துடன் சொன்னார். நாங்கள் அன்றே அந்த வேலைகளைச் செய்து அவரின் ஆசியைப் பெற்றது வேறுகதை.

மக்கள் சாப்பிட்டார்களா, கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகளுக்கு உணவு கிடைத் ததா என்றெல்லாம் விசாரித்து விசாரித்து எல்லா முகாம்களுக்கும் எங்களை அனுப்பி வைத்தார். நாங்கள் சோர்வடைந்த போதெல்லாம் எங்களை உற்சாகப்படுத்தினார்.

ஒரு நாள் நலிவடைந்த எனது தந்தையைக் காண நான் காலையில் புறப்பட வேண்டி யிருந்தது. எனக்காக அவர் காலை 3 மணிக்கு கையில் காசுடன் வாசலில் காத்திருந்தது என் நினைவுகளில் ஆழமான ஊற்றைத் தந்திருக்கிறது.

**'குருதேவருக்காக வாழ வேணும், அவருக்கு சேவை செய்ய வேணும் இதுதான் எனது வாழ்க்கை'** என்பார்.

ஒரு பூச்செடியினை குருதேவருக்காக மட்டு மடத்தில் நட்டிருந்தேன். பல வருடங்கள் கழித்து 2005ல் நான் திரும்பி வந்தபோது மஹராஜ் அவர்கள் ஒரு பூவினைப் பார்த்து வந்து 'தம்பி இது நீங்கள் நட்ட செடியில் பூத்தது உங்களுக்காக தினம் ஒரு பூப்பறிச்சு குருதேவருக்கு கொடுக்கின்றேன்' என்றார். என் கண்கள் குளமாயிற்று இதுதான் 'தாயினும் சாலப் பரிந்து' என்பதன் விளக்கமோ என்று வியந்துபோய் நின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் அணுகுமுறைகள் பல ருசிகரமாக இருக்கும் எந்த மாணவன் தவறு செய்தாலும் அதனை அப்படியே ஏற்று ஒரு தந்தை எவ்வாறு திருத்துவாரோ அந்த முறையிலேயே எப்போதும் நின்றார்.

ஆசிகள் தான் அவரது மொழி 'தம்பி நீங்கள் நல்ல சந்நியாசியா வருவியள்' என்று அவர் கூறிய ஆசி மொழி என்றென்றும் என் செவிகளுள் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றது.

வேலூர் மடத்தை அவர் வேலூர் திருமடம் என்றுதான் அழைப்பதுண்டு. அங்கிருந்து வரும் கடிதங்களை முதலில் தனது தலையில் வைத்து வணங்கிய பின்னரே திறந்து படிப்பார். இதுதான் 'சங்க பக்தி' என்பதோ!!! என்று திகைத்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தேன்.

சுவாமி ஆத்மகனானந்தாஜி மஹராஜ் அவர்கள், சுவாமிகளை விட மிகவும் வயதில் குறைந்தவர். அவர் கொழும்பு மடத்தின் தலைவர் என்ற முறையில் சற்று முறைப் பயணமாக மட்டக்களப்பிற்கு வந்தபோது மஹராஜ் அவர்கள் தானே வாசல் வரை சென்று வரவேற்றார். வயதினுடைய வழக்கப்படி அல்லாவாயினும், நாம் திருமடம் நியமித்த தலைவருக்கு மரியாதை செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இதுதான் சுவாமி விவேகானந்தரின் கொள்கையை ஏற்போரது உயர்ந்த மனப்பாங்கு.

'நான் குருமஹராஜ் தவிர எந்த கடவுளையும் அறிந்திராதவன். அவரே சிவனாகவும், காளியாகவும் காட்சி தருகிறார் என்பதில் எந்த சந்தேகமுமில்லை' என் தாயைத் தவிர மற்றப் பெண்களையும் என் கண்கள் தாயாகவே பார்க்கத் தவறியதில்லை என்பார். என் மனதில் காம எண்ணங்கள் என்னை ஒரு போதும் தீண்டியதில்லை என்பார். இது போதாதா தூய துறவியின், துறவின் மாண்பை நமக்கு கட்டியஞ் சொல்வதற்கு!

சரணாகதி என்பது அவரது அடுத்த இலட்சியம் எப்போதும் அவரது குருநாதரின் சிந்தனையில் ஆழ்ந்திருப்பார். ஸ்ரீமத் சுவாமி வீரஜானந்தரின் சிகையின் ஒரு பகுதியை ஒரு தாயத்தில் இட்டு தினசரி வழிபடுவது அவரது வழக்கம்.

அவருக்கு 'பேனைகள்' (எழுது கோல்கள்) மீது அலாதி விருப்பம். ஒரு முறை பக்தர் ஒருவர் கனடாவில் இருந்து பேசினார். 'மஹராஜ் உங்களுக்கென்று ஏதாவது கேளுங்கள் வாங்கித்தர ஆசையாக இருக்கிறது' என்றார்.

அந்த பக்தர் ஏதாவது ஒரு விலையுயர்ந்த பொருளை வாங்கி தர ஆவலாகக் காத்திருந்தார். சுவாமிகள் சற்றும் யோசிக்காமல் 'எனக்கு வடிவான பேனை ஒன்று வேண்டியாங்கோ' என்றார். துறவு தனக்கென ஒன்றை பேணாதது ஒரு பேனைக்கு உவகை கொண்டது. ஆச்சரியம் அல்லவே..! அழகான சிறிய பெட்டிகளை அடிக்கி வைத்து அழகு பார்த்துக் கொண்டிருப்பார்.

ஒரு நாள் என்னிடம் 'தம்பி எனக்கு கொம்பியூட்டர் பெட்டிய போட்டு காட்டுங்கோ!' எப்பிடி வேலை செய்யிறியள் என்று பார்க்க வேணும், நானும் மிகவும் ஈடுபாட்டோடு ஆரம்பித்தேன். இதுதான் Start Menu என்று ஆரம்பித்து விட்டு திரும்பிப் பார்த்தேன் சுவாமிகள் ஆழ்ந்து உறங்கி விட்டிருந்தார். 'உங்கட கதையை கேட்டா தலை சுத்துது' என்று சொல்லி சிரித்தாவாறு எழுந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்காவது சொற்பொழிவு என்றாலும் மஹாராஜ் மிகவும் கவனமாக எழுதி பலமுறை படித்து திருத்தி எடுத்துச் செல்வார். எதையும் ஆழ்ந்த கவனத்தோடு முழு மனதோடு சொல்வது அவரது பாங்கு.

சுனாமி நேரத்தில் பல நேரங்களில் காலை உணவு 12 மணிக்கு மதிய உணவு 4 மணிக்கும் தான் உட்கொள்வார் நாங்கள் சாப்பாட்டு பொட்டலங்களை விநியோகித்த செய்தி கிடைத்த பின்தான் அவர் ஆறுதலடைவதைக் கண்டிருக்கின்றேன்.

எனவே மனிதநேயம் ஒரு மானுட உருக்கொண்டு மட்டு நகர் மண்ணிடை தோன்றி மனுக்குலத்தின் துயர்துடைத்து உயர் துறவுக்கும் தூய்மைக்கும் உருவகமாக நின்று நமக்கு ஒளி தந்து, இன்பந்தந்து வாழ்வின் நெறி தந்து, தன்னையே தந்து, காத்து நின்றதை என் மனத்திரையில் இருத்தி என்னையும் தன் திருப்பாதத்தின் கீழ் இடமளித்து அன்பு காட்டிய தவநெறிக்கும் என்றென்றும் தண்டனிட்டு அமைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வாழ்வே வழிகாட்டலாய்'

*தவதர்ஷினி சுரேஷ்குமார்*
*சாரதா இல்லப் பழைய மாணவி*

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பினிலே பிறந்த பெரியோர்களில் ஒருவரான ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தர் இலங்கையின் இராமகிருஷ்ண இயக்கத்தில் முக்கியமானவராக திகழ்கிறார். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இராமகிருஷ்ண மிஷனின் செயற்பாடுகளின் விஸ்தரிப்பில் சுவாமிகளின் இடம் மகத்தானது.

மாணவரில்லங்களை ஸ்தாபித்து மாணவர்களது கல்வி மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னேற்றுதலிலும்,இடப்பெயர்வு, வெள்ளம், சூறாவளி, சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களாலும், போர் வன்செயல்கள், முதலான செயற்கை அனர்த்தங்களாலும் பாதிப்புற்ற மக்களது வாழ்க்கை வள மற்றும் ஆற்றுப்படுத்தல்களுக்காகவும் அயராது உழைத்த மாமனிதர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தர், என்றும் எப்போதும் எல்லோரது இதயங்களிலும் நீங்காது நிறைந்த ஜோதியாகியுள்ளார்.

இவ்வாறு இராமகிருஷ்ண மிஷனின் உயரிய கருத்துருவாக்கத்திலும் சுவாமி விவேகானந்தரின் செயலுருவாக்கத்திலும் ஆற்பட்டு செயற்பட்ட சுவாமிஜி கரும யோகியாக பலராலும் பல நிலைகளிலும் கணிக்கப்படுகின்றார்.

இப்பொது நிலையில், மிஷனோடு தொடர்புடையதும், தொடர்புகளை நேரடியாகக் கொண்டிராததுமான நிறுவனங்களுடன், நபர்களுடன் சுவாமிஜி அவர்கள் எவ்வாறு சக பிரயாணியாக இருந்து தனது ஆலோசனைகள், ஆசிகள் மூலம் அவர்களையும் செயல் முனைப்புள்ளவர்களாக இயங்க வைக்கும் கருவியாக செயற்பட்டுள்ளார் என்பதும் கவனிப்பிற்குரியதாகின்றது.

மற்றவர்களை வாழ்த்துவதிலும், வழிப்படுத்துவதிலும் முன்னின்ற சுவாமிஜியின் உயரிய நோக்கையும், உள்ளுறை ஆற்றலையும் நிறுவனங்கள், சங்கங்கள் மூலம் வெளியான சஞ்சிகைகள், மலர்களுக்கு அவர் வழங்கியுள்ள ஆசியுரைகள், அணிந்துரைகள் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது.

விளக்கத்துக்காக ஒருசில சஞ்சிகைகள், மலர்கள் மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப் படுகின்றன. இவைகளினூடாக சுவாமிஜியின் மற்றொரு ஆற்றலும் நமக்குத் தெளிவாக புலப்படுகின்றது. அதாவது தனது காலத்தின் மிகப் பெரும்பகுதியை பௌதீக செயற் பாடுகளிலே (மிஷன் கட்டுமான மற்றும் நிர்வாகப் பணிகளில்) அர்ப்பணித்த போதும் சுவாமிஜி எழுத்து, வாசிப்பு நிலையிலும் சிறந்து விளங்கியுள்ளார் என்பது. பொருத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானவற்றை திருத்தமான முறையில் உரிய எடுத்துக்காட்டுக்களுடன், உவமைகளுடன் எடுத்துரைக்கும் அவரது எழுத்துக்கள், இதைத் தெளிவுபடுத்துகின்றன.

மட்டக்களப்பு கல்லடி 'ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய திருச்சடங்கு' என்ற நூலுக்கு வழங்கிய ஆசியுரையிலே 'விநாயக்கடவுளது திருப்பாதார விந்தங்களை சிரமேற் கொண்டு, பண்டு தொண்டு இன்றும் பயபக்தியுடன் மக்களால் பூசிக்கப்படும் இவ்வாலயமானது இனிமேலும் காலம் கடந்து நின்று ஆன்மீக ஒளி பரப்பும்' என்ற தனது உயர்ந்த எண்ணத்தை 'அகரமென வறிவாகி யுலக மெங்கும்.....' எனும் திருமந்திரத்தை முன்னிறுத்தி வெளிப்படுத்தியுள்ளார்.

'ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தஜீ' என்ற நூலிலே 'கடுகைத்துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்று குறளின் பெருமை கூறுவது போல அடிகளார் பற்றிய அநேக தகவல்களை அடிமுதல் நுனிவரை அடக்கிய இந்நூல் புகழும் பெருமையும் மிகவாக கொண்டே ஒன்றேயாம். என்று இந்நூலின் சிறப்பை அணிந்துரை மூலம் விளக்கியுள்ளார், செயற்பட்டவர்களையும் வாழ்த்தியுள்ளார்.

'உள்ளக் கமலம்' என்ற சுவாமி விபுலானந்தர் பற்றிய நூலிலே 'மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி இரந்தழைப்பார் யாருமில்லை' இராமகிருஷ்ண சங்கத்தின் பொதுமையை உணர்ந்த பல்வேறு சமய மக்களும் இன, மத, வேற்றுமை கடந்த இச்சங்கத்தின்பால் இலகுவாக ஈர்க்கப்படுகின்றனர். சுவாமி விவேகானந்தர் மூலம் பாரதத்தில் எத்தகைய ஒரு ஆத்மிக விழிப்புணர்வும், சமூக மறுமலர்ச்சியும் ஏற்பட்டதோ அதேபோல் ஈழத்தில் ஏற்படுவதற்கு மூலகாரணர்களில் ஒருவராக சுவாமி விபுலானந்தர் இருந்தார் என்பதை இந்நூலில் தெளிவுபடுத்துவதன் மூலம் முன்னோரை, வழிகாட்டிகளை நினைவு கூரும் பண்பையும் அதன்மூலம் வரலாற்றை உரத்துக்கூறும் திறத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

சுவாமி நடராஜானந்தரின் சிறப்பு மலரில் 'வடிவங்கள் ஏதும் இல்லாத கற்களை தமது கைவண்ணத்தினால் செதுக்கி உயிரோட்டமுள்ள பற்பல அழகுள்ள சிற்பங்களை உருவாக்கி விடுவதைப் போல சுவாமிகள் தனது அன்பு, ஆளுமை, செயல்திறன் போன்றவற்றினால் தன்னை அடைந்தவர்களை நெறிப்படுத்தி சமூகத்திற்கு பயன்படும் பெரியோர்களாக உருவாக்கினார். சுவாமிகளின் எளிமையும், செயல்திறனும், மனிதநேயப் பண்பும் அவர் செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் மிளிர்ந்தன. தாயாக, தந்தையாக, குருவாக தன்னை நாடியவர்களுக்கு வழிகாட்டியவர் பகவான் இராமகிருஷ்ண போரொளியில் திளைத்து தனது இறுதி மூச்சுவரை அர்ப்பணிப்போடு உழைத்தவர்' என எளிமையாகவும், சிறப்பாகவும் எடுத்துரைக்கும் சுவாமிஜி, வெறும் புகழ்ச்சியுரையாகவன்றி அன்னவரின் வழிகாட்டலின் கீழ் தானும் வாழ்ந்து காட்டியவர், வழிகாட்டியவர்.

சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சிறப்பு மலரில் 'இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார் பெருமை பிறங்கிற் றுலகு' பிறப்பு, வீடுபேறு ஆகிய இரண்டினதும் தன்மைகளை ஆராய்ந்தறிந்து இப்பிறப்பில் துறவறத்தைப் பூண்டாரது பெருமையே உலகில் சிறந்தது. இது வான்புகழ் வள்ளுவர் வாக்கு என வள்ளுவரின் வார்த்தைகளை ஆசியுரை மூலம் எடுத்துக் கூறி தனது அடிச்சுவட்டை கோடிட்டுக் காட்டும் அதேவேளை சுவாமிகள் 'சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் முகமாக தாம் மேற்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்கள் அனைத்திற்கும் நிலைக்களனாய் விளங்கியவற்றுள் கல்லடி உப்போடை கிராமமும் ஒன்றெனல் மிகையாகாது' என ஊர்மக்களை மேம்மைப்படுத்திக் கூறும் பண்பு முக்கியமானது.

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையின் 'கலைச்செல்வி' என்ற சஞ்சிகையில் 'ஒரு தேசத்தில் வாழுகின்ற மக்கள் அரசியல்நிலை, பொருளாதார நிலை, சமூக வாழ்க்கை என்பவற்றை சீர்படுத்திக் கொள்ள முயல்வாராயின் முதலிலேயே தாம் எய்தவேண்டும் என எண்ணுகின்ற நிலையை அவர் தம் மனத்திடையே தெளிவுற உருவகப்படுத்திக் கொள்ள வேண்டும்'.

'இந்நாளில் நடந்து வருகின்ற நாகரிக பழக்கங்களுக்கு பலதேசத் தொடர்பினுக்கும் இயைபாகும்படி நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்தில் படிப்படியாக எடுத்துச் சொல்லும் ஆற்றலுடையவனே தன்னுடைய நாட்டுக்குப் புத்துயிரளிக்கவல்ல உண்மைக் கவியாவான் என்ற பாரதியின் தமிழ்த் தொண்டைப் பற்றி சுவாமி விபுலானந்தர் கூறிய கூற்று எழுத்தாளர்களுக்குப் பொருந்தும்' என பொலிந்தமை அவரை, அவரது எழுத்தாற்றலை நமது மிகுந்த கவனிப்பிற்குரியதாக்குகின்றது.

சிவானந்த தேசிய பாடசாலையால் வெளியிடப்படும் 'சிவானந்தம்' சஞ்சிகை தடைகளின் பின் மீண்டும் வெளிவந்த போது(2001) அதற்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியிலே, சுவாமி விவேகானந்தரால் ஆரம்பிக்கப்பட்ட 'பிரபுத்த பாரதம்' சஞ்சிகை சில காலம் வெளிவராமல் நின்று, மீண்டும் வெளிவரத் தொடங்கிய போது சுவாமி விவேகானந்தர் வழங்கிய அருள் மொழிகளை தானும் இங்கு கூறவிரும்புகின்றேன்.

Once more awake!
For sleep it was, not death. to bring thee life
Anew, and rest to lotus-eyes, for visions
Daring yet. The world in need awaits, O Truth!
No death for thee!

உண்மைக்கு சோதனைகள் வந்தாலும் நீறுபூத்த நெருப்பைப் போல் அது மீண்டும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் என்று தன் வாழ்வில் எதிர்கொண்டு அவற்றினை அவ்வாசியுரை வாயிலாக மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார். குறிப்பாக இளைஞர்களுக்கு சுவாமி விவேகானந்தரை ஓர் ஆதாரபுருஷராக முன்னிலைப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு தன் அனுபவ வாழ்வையே, வாழ்விலிருந்தே அடுத்தவர்களுக்கான ஆதாரமாக வழிமுறையாக வாழ்த்தி வழிப்படுத்திய சுவாமிஜி உதாரணபுருஷராகவும் உண்மைச் சான்றாகவும் திகழ்கிறார். இவ் எடுத்துரைப்புக்களினூடாக வெளிப்படும் இவரது எழுத்து, வாசிப்பு முதலான பன்முக ஆற்றல்கள் மேலும் நமது ஆய்வுகளுக்குரிய களங்களாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஜீவ நதி'

### சுவாமி ஜீவனாநந்தாவின் மகாசமாதியை ஒட்டி வெளியிடப்பட்ட அஞ்சலிகளின் ஊற்று

தொகுப்பு: இ. விஜயகுமார்
இ.கி. குருகுலப் பழைய மாணவர்

இறைவன் படைத்த கவிதை மனிதர், அதில் மிக அபூர்வமான சில கவிதைகள் காப்பியங்கள், காவியங்கள் ஆகின்றன. சுவாமி ஜீவனாநந்த மகராஜ் இவ்வாறான ஒரு காவியமே! மனித குலத்தின் மாட்சிமைகள் எல்லாம் ஒருங்கே அமைந்த காவியம் அவர், ஐம்பெருங்காப்பியங்களையும் விட அபூர்வமான காவியம் அவர். மட்டக்களப்பு இராமகிருஷ்ண குருகுலத்தின் உயிர்த்துடிப்பும், உள்ளத்துடிப்பும் அவரே, அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையாக திகழ்ந்தார்.

-குருகுல பழைய மாணவர்கள்-

மண்ணில் வந்த மாந்தர்கள் எல்லாம் மாணிக்
கமாவதில்லை கண்ணின் மணிபோல் கருத்
தில் சிலரே காவியமாகி நிற்பர்.

மட்/பன்குடாவெளி றோ.க.த.க.
பாடசாலைக் கழகம்

என்பதற்கு இணங்க,
ஜீவ சேவையே சிவ பூஜை என வாழ்ந்
தவர்

மட்டக்களப்பு ஸ்ரீமாமாங்கப் பிள்ளையார்
பாதயாத்திரிகள் சங்கம்

ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்த அடிகளார் மீன்
பாடும் தேனாட்டின் செறிநீர்ப் பரப்பினிலே
வானோடும் ஒத்த மாலுறையும் தீவினிலே
மேற்குப் புறத்தினிலே விளைநிலத்தின் சார்
பினிலே வீற்றிருக்கும் வலையிறவாம்
மேலாம் திருவிடத்தே வாரித்தம்பிக்கு வந்
துதித்த மாமனிதன்

பா.இன்பராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை வசதிகளை உதறித்தள்ளி துறவு மேற்கொண்டு தூயவரானார்.

க.தங்கேஸ்வரி

அது மட்டுமின்றி மனதில் சாந்தம், மகிழ்வின் வெள்ளம், பெருந்துறவில் நாட்டம், உலக மாந்தர் உய்ய வந்தவர் சுவாமிஜீ அவர்கள்.

கொக்கட்டிச்சோலை,இ.கி.மி. வித்தியாலயம்

'ஈழத் தரையின் இளஞானியாக வாழ வழித் துறையாய் பல பேர்க்கு நின்றவர்'

ஆரையம்பதி இ.கி.மி. வித்தியாலயம்

'விஞ்ஞான மயக்கத்தில் விளையாடும் மனிதர்களின் அஞ்ஞான இருள் மறைக்க' ஆதவனாய் ஒளி வீசினார். கற்றதும் பெற்றதும் கருத்திற் கொண்டு, கருணை, காருண்யம் சிரமேற்கொண்டு 'ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஜீவனை இணைத்து வாழ்ந்தவர் அவரே ஜீவனாநந்தாஜீ அவர்கள்'

ஆனைப்பந்தி மகாவித்தியாலயம்

கல்வி, மருத்துவம், சமுதாயம், புனரமைப்பு பணியோடு

மட்/இந்து சினேக ஒன்று கூடல்

சூறாவளி காலம் தொடக்கம் சுனாமி பரியந்தம் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் பலவற்றையும் நீக்கப்பாடுபட்டு வெற்றியும் கண்டதோடு

ஸ்ரீ சப்தரிஷி வளாகம், காயத்திரி பீடம்

இன்னும் பல எண்ணிலடங்கா ஈடிணையில்லாச் சேவைகள் புரிந்து தன்சுகம் துறந்து பிறர் சுகம் ஈந்து தன்னலமற்ற பணி புரிந்து

மட்/சுவாமி விபுலானந்த நூற்றாண்டு விழாச்சபை

சுவாமிகள் உறுகாமம் வரை சென்று விவசாய சேவையும் செய்தார்.

அடியவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை ஒருபக்கம் இருந்தாலும் எட்டிசை யும் அருள் பரப்பும் இராமகிருஷ்ண இறை ஞானிப் பாதையில் களங்கமில்லாப் பெருந் துறவியாக பணி தொடர்ந்தவர்.

பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம்

வேதாந்தக் கொள்கைதனை கடைப்பிடித்து வாழ்ந்தவராயினும் மட்டுமக்கள் நலம் பெற்று வாழ கலையோடு கலாசார அம்மன் சடங்குகளிலும் சேவைகள் செய்தார்.

மாரியம்மன் கோயில், தாமரைக்கேணி பொதுமக்கள்

இவ்வாறு மனித நேயத்துக்காக தன் வாழ் நாளை அர்ப்பணித்த மனிதருள் மாணிக்கமான சுவாமிகள் வானுறையும் தெய்வத்தினுள் வைக்கப்படுவார் என்பது உண்மை.

காரைதீவு விபுலானந்த மத்தியகல்லூரி

கண்ணியம் நிறைந்த சுவாமிகள் விபுலானந்த ரோடு நடராஜானந்தரது திண்ணியம் மிகு புனித காலச் சுவட்டால்

வேலூர் மக்கள்

வித்தான சிவானந்தா முத்தாக வளர்ந்து வர சத்தாக உழைத்த சுவாமிஜீ

சிவானந்த வித்தியாலயம்

'அழியாச் செல்வமான கல்விதனை ஈந் தளிக்க கண் இமையாதிருந்து ஏற்றமளித்து பேசும் மொழியால் பிணைந்த சமுகம் பிரியாதிருப்பதற்கு நேசமிகு பணி புரிந்தார்'

பாவலர் சாந்தி முஹியித்தின்

அவற்றிலும் மேலாக 'அன்புக்கோர் ஆலய மாய் அரும் பணியில் கோபுரமாய் துன் புற்றோர் தேடிவரும் தூய திருக் காப்பியமாய்'

கதிர்காமத்தம்பி உடையார் வேலுப்பிள்ளை ஞாபகார்த்த நம்பிக்கை நிதியம்

ஆயிரமாங் கணக்கில், அனாதைகளை ஆத ரித்து தாயிலும் மேலாம்

மட்/மத்தியஸ்தர் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 'ஆறுதல் வார்த்தைகளை அளவற்ற அன்புடன் தேடி எவர் வந்தாலும் தேவைதனை தான் அறிந்து ஆறுதல் கூறி' | மட்/அம்பாறை இந்து ஆலயங்களின் ஒன்றியம் |
| 'கற்கண்டு தந்து, மட்டக்களப்பு மிஷன் தன்னை மதித்துப் பலர் தேடி வர திட்டமிட்டுப் பல பணிகள்' | ஆதவன் அச்சகம் |
| செய்து 'சீலம் விளைத்திடும் சிறப்புறு மட்டு நகர் தன்னில் செப்பிட முடியாச் சேவையின் சிகரம் என' | மட் / ஸ்ரீமுருகன் வித்தியாலயம் திருப்பெருந்துறை |
| மதி நலத்துடன் நல்ல மகத்தான பணி யாற்றும் | திருநாவுக்கரசு நாயனார் குருகுலம், தம்பிலுவில் |
| போசகராய் வாழ்ந்து வழி நடத்தினார். | இந்து சமய விருத்திச் சங்கம் |
| இவ்வாறு அன்பு காட்டிய அருள் நிறைவாளர் வழிநின்ற பெருந்துறவாளரின் ஞானச்சுடர் | மட்/கொத்துக்குளத்து ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய பரிபாலன சபை |
| நாலாம் நாள் மாசி இரண்டாயிரத்தாறில் நம்மைப் பிரிந்து. | சுவாமி விபுலானந்த சிறுவர் இல்லம் அக்கரைப்பற்று |
| பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜோதியில் கலந்து விட்டது | சிவானந்த வித்தியாலய அனைத்துலக பழைய மாணவர் மன்றத்தினர் |
| என்ற முடிவே இல்லாத சோகச் செய்தி கேட்டு 'இடி விழுந்தது எங்கள் இதயத்தில். துடியாய் துடித்தோம். துவண்டோம்' | ஹரி சிறுவர் இல்லம் |
| வாது சூது வஞ்சனைகள் போக்கி வாஞ்சையோடு மானுடம் செழிக்க நீதி வழி காட்டி நின்ற நிர்மலனின் | விபுலானந்தா வெளிவாரிப்பட்டப்படிப்புக் கல்லூரி, மட்டக்களப்பு |
| ஞானச்சுடர் அணைந்தது. கிழக்கு நல் மண்ணிலே ஒளி ஏற்றிய ஆதவன் சாய்ந்தது | மட்டக்களப்பு கல்வி அபிவிருத்திச் சங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாற்பது ஆண்டுவரை நடமாடும் கோயில் என ஆற்றிய சேவை, அவர் அர்ப்பணிப் பான சிவ சேவை கூப்பிய கரமும் குன்ற னைய நீளுருவும் ஆர்ப்பரிக்கும் பேரொ லியும் அடங்கி மகாசமாதி கொண்டே குரு தேவர் கூடவே சங்கமித்தது'

களுதாவளை பொதுமக்கள்

'கல்லடி காரைதீவு சாரதா இல்லங்கள் சொல் லடி படாமல் சுடராய் ஒளி வீச அல்லும் பகலும் அரவணைத்து இறுதிவரை தொல் லுலகில் காத்த தூயவர் சோதியானார்'

விபுலானந்த பணி மன்றம், காரைதீவு.

சுவாமி நீங்கள் 'அன்புக்கு அடிமையானீர். ஆண்டவனின் தொண்டனானீர். ஈசற்கே சேவை செய்தீர், ஓங்காரம் ஆனீர்'

மங்கயற்கரசியார் மகளீர் இல்லம்.

தொண்டுயரத் துறவறமே மேலாம் என்னும் தொடுமுணர்வால் ஆன்மிகந் துலங்கும் வண்ணம் எண்டிசையும் அருள்பரப்பும்

சிவானந்த விளையாட்டுக் கழகம்.

பிரிவு கண்டாலும் மகாத்மாவாக மனித குலம் புனிதமடையத் தொண்டாற்றி

வலையிறவு பொதுமக்கள்.

'நல்லார் பலர் பாராட்ட நாடெல்லாம் புகழ் மிகுந்தார் அன்னை தந்தை அற்றோரின் ஆறுதல் தெய்வமாய் மறையா ஒளியாய்'

சாரதா மகளீர் இல்ல பழைய மாணவிகள்.

சைவம் மேன்மையுற சேவை செய்த மகான் செந்தமிழர் சிந்தைகளில் நம்பிக்கைதந்த மகான்.

மகாசக்தி நிறுவனம், அக்கரைப்பற்று.

தொட்டு உறவாடி வழிகாட்டி நின்றதில் மட்டற்ற மகிழ்ச்சி அதெமக்கு எழுச்சி. நமை விட்டுச் சென்றதால் எமக்குப் பெரும் அதிர்ச்சி.

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உறவுகளை தொலைத்து நின்ற குழந்தைகளுக்கு உணவோடு உயர் கல்வியும்' சுத்தானந்த இந்து இளைஞர் மன்றம், வவுனியா.

தந்த வித்தகர் விபுலானந்தர் வழிவந்த உத்தமர் ஜீவனாநந்தஜிக்கு விழி நீர் அஞ்சலிகள். மட்டக்களப்பு இந்து அபிவிருத்திச் சங்கம்.

ஆன்மா-அதனை வாள் பிளக்காது நெருப்பு எரிக்காது நீர் கரைக்காது காற்று உலர்த்தாது . ஒவ்வோர் ஆன்மாவும் கற்றெல்லையில்லாத ஒரு வட்டம் அதன் மையம் உடலில் பொருந்தியுள்ளது. இந்த மையம் ஓர் உடலிருந்து மற்றோர் உடலுக்கு மாறிச் செல்வதே மரணம். சுவாமி விவேகானந்தர் ஆலய பரிபாலன சபை, தான்தோன்றீஸ்வரர்.

நெஞ்சில் நிறையும் நினைவுகளால் வெஞ்சித் துழலும் உன் பிரிவு நிதம் எஞ்சும் என்றும் எம் மனதுகளில் மாறாது மணம் வீசும், இறுதியாய் நீர் நடந்த வீதியைக் கழுவினோம் விழிநீர் நிறைந்தது நம் சுவாசம் காற்றோடு கலந்து தழுவும் இப்பேறு பெற்ற நாம் உய்வுற்றோம்-

என்பது உண்மையானால் மற்றொரு ஜீவநதியாய் எம் சுவாமிஜீ ஊற்றெடுப்பார் என்பதில் ஐயமில்லை-

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

**ஆத்ம சாந்திக்காக**

ஸ்ரீமகா மாரியம்மாள் ஆலய சங்கம், கோட்டமுனை. மட்டக்களப்பு.

கிழக்குப் பல்கலைக்கழகம்.

தரிசணம்.

ஸ்ரீவிக்னேஸ்வரர் திருத்தொண்டர் சபை-மாமாங்கம்.

ரிதம் கழகம்-புளியந்தீவு,

சீலாமுனைக் கலைக்கழகம் -சீலாமுனை.

அம்மன் ஆலயம்-புதுக்குடியிருப்பு.

காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரி.

இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம் -களுதாவளை

குருக்கள்மடம் -கிராமமக்கள்.

எவகிறீன் அச்சகம்.

கார்மேல் பாத்திமா கல்லூரி-தேசிய பாடசாலை.

கல்லடி வேலூர் சக்தி வித்தியாலயம் -முன்னாள் அதிபர், ஆசிரியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவும் மகனும்

வண. சகோ. எஸ். ஏ. ஐ. மத்தியு
முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர்

[42 ஆண்டுகால இடையீடற்ற அன்புத் தொடர்பு]

இவ்வுலகில் பிறக்கின்ற மாந்தர் சிலர் தம் தாயையோ, தந்தையையோ இளமையிலே இழந்து விடுகின்றனர். அன்பு இல்லாமல் வளர்கின்றனர். நீர்வற்றிய பாலைநிலத்துமரம் போல ஒற்றி உலர்ந்து- அன்புவற்றி சமுதாய - உரசல்களுடன் ஏதோ வகையில் வாழ் கின்றனர். பிறமக்கள் தம்மை நேசிக்கவேண்டும் என்றுஅவாவுறுகின்றனர். இதனால் இவர்கள் பிறருக்குத் துன்பமாகவும் உள்ளனர்.

சுவாமி ஜீவனாநந்தாவின் வாழ்வில் இளமையில் தாயை இழக்கின்றார். அருட் சகோதரிகளின் மட்டக்களப்பு மடத்துக் கன்னியரின் அன்புகலந்த அரவணைப்புக் கிடைக்கின்றது. பின்னர் புனித மிக்கேல் கல்லூரியில் கல்வி பயின்ற பிற்கால சுவாமியின் தமையனார் இறக்கின்றார். அகாலமரணம் சுவாமியின் இன்னொருகரம் இல்லை.

சோதனைமேல் சோதனை, கல்லடி சிவானந்தாவுக்கு அழைத்துச் செல்கிறார் தந்தை. அங்குள்ள சுவாமிஜியிடம் 'இவனுக்குத் தேவையானகல்வியை அளியுங்கள்' மிகப் பெரிய வேண்டுகோள். அன்புகளை இழந்தவருக்கு ஆதாரக் கல்விவருடத்தில் வருடப் பிறப்புக்காக மூன்று நாட்கள் மட்டும் வீடு சென்றார். அம்மா இல்லாதவீடு, அப்பா மட்டும் ஆனாலும் அவர் நிலபுலன்களுக்குச் செல்வச் சீமான்,எனினும் அவரது உண்மைச் செல்வம் அன்பு,அறம்,தாய் தந்தையரின் 'ஜீன்' தனையனில் ஓடுகிறது. இங்கு சற்று விலகி நின்று நாமறிந்த வள்ளுவப் பெருந்தகை நமக்குக் காட்டுகின்ற நல்லதோர் சமூதாயக் கட்டமைப்பைப் பார்ப்போமா?

**அது இயேசு பகவான் சமூதாயக் கட்டமைப்பு.**

*'பாறையின் மேல் உன் வீட்டைக் கட்டு'*
*மழை வந்தது*
*காற்று அடித்தது*
*புயலாக மாறியது*
*வீடு நின்றது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இங்கு சுவாமிஜீயின் அப்பா ஒருபாறை**

அன்பு அறம்
பிறரன்பு
உதவும் கரங்கள்
நல்ல பாறை
அதிலே ஒருவீடு
ஜீவனாநந்தாஜீ என்றவீடு

**வள்ளுவத்தைப் பார்ப்போம்...**

அவரின் சமுதாயத்தில்
இறைவனின் அருள்
மழையாகிய அருள் (புதியகண்ணோட்டம்)
அருளின்றி எதுவுமில்லை
அவனின்றிஅணுவும் அசையாது
இந்தப் பாறையின்மேல்
குடும்பம் என்றவீடு அசையாது
ஆழ்கடலின் முத்து ஆரம்
பாம்பு- நாகம்
நாகரெத்தினத்தின் கல்
ஒளியின் கல்
இங்கு சான்றோன் உதிப்பான்
இதுதாயின் உவமை
வீரனாக்குக.
இதுதந்தையின் கடமை
அவையத்து முந்தியிருப்பச் செயல்
வேல் வடித்துக் கொடு
களிறெறிந்துபெயர் -இது காளை
களிறு-ஐம்புலம்

**இப்படி உருவானார் சுவாமி ஜீவனாநந்தா**

வெற்றியின் இளைஞன்
வயது 20
இலண்டன் மெற்றிகுலேசன்
இளமை-ஐம்புலக் களிற்றை அடக்கக்
கற்றுக் கொண்டார்
கல்லடி மடத்துச்
சுவாமி கேட்டார்
எதிர்காலத்தில் என்னசெய்யப் போகிறாய்?
இளைஞனின் பதில்
'சுவாமி பெட்டிச் சாவிகிடைத்தால் மடங்கட்டுவேன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் கடினபயிற்சி
சுவாமியானார் துறவி முற்றுந்துறந்த முனிவர்
கல்வி கேள்வி அவர் தம் உடமைகள் என்போமா?
ஆளுமையின் உதிஉயர் சிறப்பு என்போமா?
பிறந்தமண்ணில் பணி தொடங்குகிறது
பணிவாழ்வில் இப்போ அப்பா யார்?
இறைவன் -இப்போஅவர் அப்பா மாற்றமுறாத அப்பா
அன்பே.....அப்பா தெய்வம்
தெய்வச் சாயலில் ஒருமகன் அப்பா மகன்

மடங் கட்டினார், மாணவர் இல்லங் கட்டினார்
ஆங்கே....மதிலில்லா அன்பு
வயிறார அப்பாவின் பிள்ளைகள்
அம்மாக்கள், அப்பாக்கள் இல்லாதோர்
உண்ண-
வயல்கள் வாங்கினார்
'பெட்டிச் சாவிகிடைத்தால் மடங் கட்டுவேன்'
பெட்டி ஏதோவெறுமைதான்
அதுவறுமையின் சின்னமில்லை
வாழ்வு- பிரட்மன் வீரக்கோன் G.A வந்தார்
பொறியியலாளர்-K.குணநாயகங்கள் உடன் வந்தார்கள்
பலபேர் இன்னும் வந்தார்கள்
உயரிய மாணவமாணவியர் உதித்தனர்.
சுவாமிஜீ அஜராத்மானந்தஜீ உதித்தார்
கல்லடி பெண்கள் விடுதி
காரைதீவு சாரதா இல்லம் உதயம்
சுவாமி விபுலானந்தரைப் போல..
எழுங்கள் -இது வேண்டுகோள்களுக்குள்
வேண்டுகொள்
இல்லை, இது சுவாமி
இல்லை
அப்பா சொன்னார்
கர்மம் பலசெய்
சுவாமி 'கர்மயோகி'ஆனார்
56 சதங்கள் பெரும் பணம் அவருக்கு
ஒருநாள் பிச்சை 56 சதம் தான்
அது அவருக்கு அப்பா தந்தது
நேர் காணலில் சுவாமி கூறியது
அது அவருக்கு மிகுந்த சந்தோசம்
பூரணனின் மகன். அதுஅப்பணத்தால்
முழுமை பெற்றது.
என்னே! மனம் அதுமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரால் மட்டக்களப்பு பெருமைகண்டது
'விபுலானந்தம்' பெருமை சேர்த்தது
பெருமைகள் மேலும் சேர்த்தது
ஜீவனாநந்தம்

அதுபெரிய ஒற்றுமையை
விதைகளை எறிந்தது
அவ்வித்துக்கள் விளைந்தன.
(ERO-Eastern Region Organization)
இனங்களுக்கிடையே ஒற்றுமைகள்
ஆல விருட்சங்கள்
சமயங்களிடையே சமரசங்கள்
அவை பெரு விருட்சங்கள்
கார்மேல் பாத்திமாக் கல்லூரிதன்
முதல் தம்மனையில்
வாணிக்கு விழாஎடுத்து
சுவாமிதான் முதன்மை விருந்தினர்
ஆண்டுதோறும் அவர்தான்
ஏன்?
பரிசளிப்பு விழாக்கள்
முனைவரின் பிறந்தநாள்
பிரியாவிடைநாள்
இங்கு முதன்மையானவர்களுள்
சுவாமிஜீ
சமயங்கள் சுவாமிக்கு மதில்களல்ல
சமயச் சொற்களும் அவருக்கு இருளல்ல
அவர் இன்னோர் மகன்,
ஸ்ரீ இராகிருஷ்ணரின் மகன்
அப்பா
ஞானப்பாலூட்டி அப்பா ஸ்ரீ ராமனையும்
சிவபெருமானையும்
வைணவ இராமனையும் பூஜை செய்யும் ஓர்
அந்தணர் குடும்பம்

வருமானம் ஏராளம்
பகவானிடம் பக்தி கொண்டது போலவே
ஏழைகளிடம் இரக்கம்
உதவிகள் ஏராளம்
ஏழைகளுககுத்தான்
பெயர் மாணிப்பராய் சட்டர் ஜீ
1775ம் ஆண்டு அவருக்கு ஓர் ஆண் மகவு
பெயர் சுதிராம் அவருக்கு ஒருமகன்
ஸ்ரீ ராமகிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1836ம் ஆண்டு பெப்ரவரி 17, கிழமை புதன்
சூரியன் உதிக்க 12 நிமிடங்கள் இருந்தன
சுதிராம் சந்திராதேவிக்கு மகனாக சிறியதொரு
கூரைவீட்டில் பிறந்தார்
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்
இயற் பெயர் கதாதரன்
அது பெரியஞானி
பிற்கால மகோன்னதர்
இந்த ஞானி நம் சுவாமிஜியின் அப்பா
தெய்வீகத் தன்மை
அவரின் அருமைப் புதல்வன்
நம் சுவாமிஜி.

### உயர்ந்த மனிதம்

கல்லடியில் உறங்குகிறது இப்போ
முன்பு
கல்லடி வந்தால் எனக்குச் சுவாமிஜீ
சற்றுப் பிரயாணம் தடை
சுவாமி ஜீயையும் சூழவுள்ள இயற்கையின்
அழகையும் அப்பாவையும் தரிசித்து
பாலங்கடப்பேன்
இப்போ
அந்த நினைவுகளுடன்
புதிய சுவாமி அவ்வழியில்
என்னையும் - வயதான
வித்தியாசமின்றி......
வேலிபோடாத வித்தியாசிரோமணி
உண்மைப் பக்தியின் பிரதிவிம்பம்
சுவாமிஜீ ஜீவனாநந்தா
நம்முடைய நிழல் போல
கையில் அமுதக் கலசத்துடன்
'நான் அநாமதேயன்
பெயரில்லை
பரம ஹம்சரும்
பரமனாகிய அப்பாவும்தான்
என்னை இயக்குபவர்கள்' (சுவாமிஜீ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நான் மறவேன்

தமயந்தி-தவராஜா (ஆசிரியை)
சாரதா இல்லப் பழைய மாணவி

இன்பமும் துன்பமும் இறைவன் தந்ததுவே
இளமையில் துன்பம் சூழ்ந்தவேளை
தைபிறந்தால் வழி பிறக்கும் என்றோர்
சுவைபடக்கூறி இருந்தனரே

வாடியோரைக் கண்டு வாழவைக்கத் -துணிந்த
குருகுலத்தில் அறிவை வளர்த்தேன்
அன்பு எனும் ஆருயிரானதாயுள்
நான் 1982 தை 18ல் சேர்ந்தேன்.

அன்றுதான் கவலைகுடிகொண்டது
அலைபாய்ந்த உள்ளத்தை
அரவணைத்து ஆசி கூறினார்-சுவாமிஜீ
சிரித்தேன் சிந்தித்தேன் சிறந்தேன்

நன்றாகவாழ வேண்டும் -என
இனிமையாக வாழ்த்திய சுவாமிஜீ
துயரம் சூழ்ந்த போதெல்லாம் -அந்த
வேதவாக்கு என் சிந்தையில்

கண்கள் கலங்கிய வேளையில்
கவலைமறக்க வைத்தநண்பர்கள்
கூடிச் சிரித்த நினைவுகள் இன்னும்
எனது எண்ணச் சிறையில்

அன்புதான் தரணியைஆளும்
உலகில் நிரந்தரமானதுஎதுவுமில்லை
உறவுகளின் நினைவுகள் இருந்தும்
உன்னத நிலையில் நட்புவைத்தேன்.

காலம் உருண்டோடிய வேளையில்
கால்வைத்த இடம் விட்டு கல்லடி சென்றோம்
புத்தான இல்லம் இனிமையான
நினைவுகள் என் உள்ளக்கிடக்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என்னை என்றும்
ஒரு நிறுவனம் போலநினைப்பேன்
கடமையை உன் தாய் போல்
கலையை என் தந்தைபோல்

கூட்டாக நாங்கள் செய்தவேலைகள்
மறப்பேனோ நான்-இல்லை
தத்துவங்கள் தந்த புனிதர்கள்
பூ வைத்து புனித பூசைசெய்வோம்

கலைவிழா என்றால் கவர்ச்சிதான்
என் முகத்தில் -பாரம்பரிய நிகழ்வில்
நான் பெற்றவெற்றிகள்
என்றும் பேரானந்தம்

மாஸ்டர் சிவலிங்கம் மாமா பயிற்றுவித்த
வில்லிசை, நாட்டுக்கூத்தில் பங்கேற்று- நடித்து
வண்ணச்சோலை சிறுவர் நிகழ்ச்சியில் வெளியாக
பாக்கியம் பெற்றேன்

பத்துமாதம் கருவறையில் -நான்
பத்துவருடம் புனித இல்லக் கோயிலில்
என்றும் நான் மறவேன்- என்
கண்ணின் கருமணிகளாக வாழ்ந்த குருஜீகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையால் உயர்ந்த சிகரம்

கவிஉள்ளம்
மண்டூர் கவிஞர் மு.சோமசுந்தரம்பிள்ளை

சேவையி லுயர்ந்த சேவை
ஸ்ரீராமக் கிருஷ்ண சேவை
தேவிசாரதை மாதாவின்
திருப்பணிக் கோயில் கூப்பத்
தேவரும் நெருங்கச் சற்றுச்
செகத்துளோர் வழிவிட்டேத்தும்
ஜீவனாநந்தன் சேவைச்
சாதனை செழிக்க மாதோ!

குருவாம் ராமக்கிருஷ்ணரருட்
கொள்கைக் காந்த இழுப்பினிலே
துரும்பாம் சொந்தச் சுகம் வீசித்
துடித்து பிணைந்த தொண்டாளன்
உருக்கொண்டாடும் சுவாமிஜீ
வனானந்தன் சேவைத் தீங்
கரும்பைச் சுவைத்த கவியாலென
கண்மா மணியை வாழ்த்தேனோ

ஊக்கத் துறுதிகுலையாமல்
உண்மை ராமக்கிருஷ்ணமகான்
ஆக்கப் பணிகள் புதுக்கவென
அல்லும் பகலும் உழைக்கும் அன்பு
தேவிக்கும் ஜீவனாநந்தா
தில்லை மண்டூர்க் கந்தனருள்
வாக்குப் பலிக்கப் பணிபுரியும்
வாய்மை மணியே வருகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கமனச் செம்மல்

கவிஞர் கா. சிவலிங்கம்
*சிவானந்த வித்தியாலய பழையமாணவன்*

தந்தை,தாய் தவமிருந்து தரணிக்கென்று
தந்தமகான் சுவாமி ஜீவனாநந்தர்
சிந்தைமகிழ்ந்தேசெய்த பணிகள்யாவும்
சிகரமெனத் திக்கெட்டுந் திகழுதம்மா

தங்கள் தாய் தந்தையரின் பிரிவுகண்டு
தளர்ந்த சிறார் மீதுவெகு பரிவு கொண்டு
தங்கமனச் செம்மல்பல வதிவிடங்கள்
தந்திட்டார் நிம்மதியாய் அவர்கள்வாழ

தந்தைக்குத் தந்தையாய்த் தாய்குத்தாயாய்
தாமிருந்து அன்போடு அரவணைத்து
நிந்தையெதுமில்லாது உணவினோடு
நற்கல்வி அமுதூட்டி உடையுமீந்தார்

தோணியாக வேயிருந்து வாழ்க்கைநீரில்
தத்தளித்த மக்கள் தமக் கபயமீந்தார்
ஏணியாக வேயிருந்து எளியோர் வாழ்வில்
ஏற்றமுமேதந்துஒளி ஏற்றிவைத்தார்

அவர்மீது பட்டதுவும் யார்கண் தானோ
அண்ணலவ ரமரருல கேகிடத்தான்
சிவபதமுமவரடைந்த செய்திமக்கள்
செவி யூடேசென்றிடி போல் வீழ்ந்தன்றோ

பொய்யான அவர்மெய்யுந் தீயில் வேக
பொன்மனத்தார் நல்லாவி இறையோடேக
மெய்யான புகழுடலோ மண்ணில் வாழும்
மாநிலமோ அவர்பெயரைக் கூறும் நாளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்களும் நினைவுத் தூறல்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவு ஸ்ரீ சாரதா பெண்கள் இல்லப் பொறுப்பாளர் பொன்னையா சிவயோகன் அவர்களுடன் ஒரு நேர்காணல்

ஸ்ரீ ராமகிருஷ்ண சங்க ஆசிரியரான காலஞ்சென்ற சீனித்தம்பி பொன்னையா ஆகியோரின் பிள்ளைகளான தையல்நாயகி, சிவசுந்தரம், சிவராமன், சிவநாதன் ஆகியோர் எனது உடன் பிறப்புக்களாவர்.

நானும் எனது தம்பியான சிவசுந்தரமும் 1951ம் ஆண்டில் கல்லடி சிவானந்த வித்தியாலயத்தில் கல்வியை மேற்கொள்ள தந்தையாரின் ஏற்பாட்டின்படி சுவாமி நடராஜானந்தா(முகாமையாளர்) அனுமதியுடன் கமலாலய விடுதியில் அனுமதி கிடைத்தது.

எங்கள் விடுதியை மேற்பார்வை செய்ய சீவரெத்தினம்(Brother) பிரம்மச்சாரி அவர்கள் இருந்தார்கள். நாங்கள் சென்ற அன்று இரவு உணவுக்குப் பின்னர் மாணவர்கள் ஒன்று கூடல் இடம் பெற்றது. அப்போது புதிய மாணவர்கள் அறிமுகம் செய்து வைக்கப் பட்டார்கள். விறதர் சீவரெத்தினம் அவர்கள் என்னை ஒரு பாட்டுப் பாடும்படி கூறினார்கள். நான் எழுந்து நின்று **'அம்மையே அப்பா'** என்ற தேவாரத்தை இசையோடு சிறப்பாக பாடினேன். நன்றாகப் பாடுகின்றாய் எனக்கூறி உட்காரச் சொன்னார்கள்.

1951 ஆண்டு டிசம்பர் மாதம் பிரம்மச்சாரி சீவரெத்தினம் அவர்கள் இந்தியா சென்றார்கள். இல்ல மேற்பார்வையாளராக 1952ல் சுவாமி சர்வாதீதானந்தாவும், திரு.சதானந்தா விறதரும் இருந்தார்கள். முகாமையாளராக கடமைபுரிந்த சுவாமிகள் மாற்றப் பட்டு 1953ல் சுவாமி கூடஸ்தானந்தா முகாமையாளரானார்கள். அதற்குப் பின்னர் மீண்டும் 1954ம் ஆண்டு சுவாமி நடராஜானந்தா இந்தியாவில் இருந்து வந்து முகாமையாளராக பொறுப்பேற்றார். அவர்களுக்கு உதவியாக சுவாமி ஔவையானந்தா 1956ம் ஆண்டு விடுதியையும் இல்ல மாணவர்களையும் கவனிக்கும் பொறுப்பாளராக கடமை புரிய வந்தார்கள். அவர் ஓர் சிறந்த நிர்வாகஸ்தர் ஆவார்கள். நான் அவர்களிடம் பழகி நல்ல மதிப்பையும் பெற்றேன். அவர் ஒரு **'Tip Top'** சுவாமிகள். அவர்களிடம் இருந்த நல்ல பொறுப்புக்கள் வாய்ந்த வேலைகளை என்னிடம் தருவார்கள். அதனால் நான் பொறுப் புணர்ச்சியைப் பெற்றேன். எப்பொழுதும் மிக மதிப்புடன் நடந்து கொண்டேன். அவர் மாணாக்கர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார்கள். நான் அவர்களுடன் பழகிய காலம் ஒரு சிறப்பான காலமாக இருந்தது.

1960ல் எனது G.C.E பரீட்சையை முடித்து காரைதீவு வீட்டில் தங்கி சுகமில்லாத தாயையும் தந்தையும் கவனிக்க வேண்டி இருந்தது. எனது தந்தை பொன்னையா(மாஸ்டர்) காரைதீவு பெண்கள் இல்லத்தை சமூகத் தொண்டு என்ற முறையில் மேற்பார்வை செய்து வந்தார்கள். இக்காலத்தில் நானும் தந்தையாருக்கு உதவியாக இருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1966ல் சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்கள் இந்தியாவிலிருந்து அவருடைய பயிற்சிக் காலத்தை முடித்து நடராஜானந்தா சுவாமி அவர்களுக்கு உதவிக்காக இங்கு வருகை தந்தார்கள். அப்போது அவர்களுக்கு கல்லடியில் பெரும் வரவேற்பு ஏற்பாடு செய்து சிறப்பான முறையில் வரவேற்றர்கள்.

1966ல் சுவாமி நடராஜானந்தாவுக்கு உடல் நிலை சுகமில்லாமல் கொழும்பு வெள்ள வத்தை மிஷனில் தங்கி இருந்தார்கள். எனது தந்தையாரும் நானும் சுவாமி அவர்களைப் பார்ப்பதற்கு கொழும்பு மிஷனுக்குச் சென்றோம். அங்கு சுவாமி அவ்யானந்தாஜீ அவர்களை சந்தித்து சுவாமி நடராஜானந்தா அவர்களை தரிசித்தோம். சுவாமிகள் எங்களை கண்டவுடன் வாருங்கள் மாஸ்டர் என்று அன்புடன் கூறினார்கள். நாங்கள் சென்று சுக செய்தியை விசாரித்து சுவாமி அவர்களுக்கு அருகில் அமர்ந்தோம். அப்போது அவர்கள் மிகவும் அமைதியாகப் பேசினார்கள். சுவாமிகள் என்னைப் பார்த்து தம்பி கல்லடிக்கு இங்கு எமது சுவாமிகள் (ஜீவனாநந்தஜீ) வந்துள்ளார் அவர் மிகவும் அனுபவத்துடன் வருகை தந்துள்ளார்கள். அவர்களுக்கு உங்களைப் போன்ற நல்லவர்கள் உதவினால் அவர்கள் எமது இல்ல வளர்ச்சியை மேற்கொள்ள முடியும் என்பதில் எதுவித தடையுமில்லை. என்று என்னிடம் கூறினார்கள். அவர் கூற்று எனது மனதில் நன்கு ஆழமாக பதிந்ததை நான் நன்கு உணர்ந்தேன்.

நாங்கள் கொழும்பில் இருந்து வருகை தந்த பின்னர் 1967ல் நடராஜானந்தா சுவாமி கள் சமாதி அடைந்தார்கள். நான் சுவாமி அவர்களின் இறுதி கிரிகைகளிலும் கலந்து கொண்டேன்.

1967ல் சுவாமி ஜீவனாநந்தஜீ அவர்கள் இல்லங்கள் அனைத்துக்கும் முகாமையாளராக நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றார்கள். அதன் பின்பு சுவாமி அவர்கள் காரைதீவு பெண்கள் இல்லத்திற்கு அடிக்கடி வருகை தருவார்கள். அப்பொழுது நான் அவரை சந்திக்கத் தவறுவதில்லை.

1967ல் எனது தாயார் இறந்து விட்டார்கள். அதன் பின்னர் வீட்டில் சில மாற்றங்கள் ஏற்பட்டது. அதனால் நானும் எனது தந்தையும் தம்பிமார்களும் இல்லத்திற்கு அரு காமையில் இருந்த வாடகை வீட்டில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தந்தையார் ஆசிரியர் தொழிலிருந்து ஓய்வு பெற்றார்கள் அவருடைய உடல் நிலையிலும் மாற்றம் ஏற்பட்டது.

1968ல் கல்லடி இல்ல மாணவர்களுக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தலைவரான சுவாமி வீரேஸ்வரானந்தஜீ மகராஜ் அவர்களால் வைக்கப்பட்டு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்கள் என்னை அங்கு வரும்படி கூறிக் கொண்டே இருந்தார்கள். அதே ஆண்டில் நான் கல்லடி மிஷனுக்குச் சென்று சுவாமி அவர்களுக்கு உதவியாக இருந்து செயற்பட ஆரம்பித்தேன்.

இக்கால கட்டத்தில் சுவாமிகளுடன் சேர்ந்து இல்ல கட்டட நிதிக்காக பணம் வசூலிக்கும் வேலைகளில் ஈடுபாடு செய்ய வேண்டி இருந்தது. மட்டக்களப்பில் காரி யாலயங்கள் மற்றும் அன்பர்களின் வீடுகளுக்குச் சென்று மாதாமாதம் பணம் பெறும் முறையை சுவாமி ஆரம்பித்து வைத்து, பணம் வசூலிக்கும் பொறுப்பை என்னிடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மாணவர்களிடமும் ஒப்படைத்தார்கள். இப்பொறுப்புள்ள வேலையை மனங் கோணாமல் குருதேவருக்கு செய்யும் தொண்டு என எண்ணி செய்து வந்தேன். சுவாமிகள் என்னுடன் மிக அன்பாகப் பழகி தம்பி தம்பி என்று ஊக்குவித்துக் கொண்டே இருப்பார்கள். அத்துடன் எங்களுக்கு நெருக்கமான அன்பர்களுடன் தொடர்பு கொண்டு பண உதவிக்கான ஏற்பாடுகளையும் செய்து கொண்டார்கள். இக்கால கட்டத்தில் இல்லக் கட்டடத்திற்குத் தேவையான பண உதவிகள் அன்பர்களிடம் இருந்து கிடைத்துக் கொண்டே இருந்தது. அத்துடன் மாணவர்களை பராமரிப்பதற்காக உறுகாமத்தில் காடு வெட்டி வயல் செய்கை வேலையும் நடைபெற்றது. இதற்குப் பொறுப்பாக திரு.அன்பன் நடராஜா மாஸ்டர் இருந்தார்கள். அக்கால கட்டத்தில் சுவாமிகளுடன் நான் உறுகாமத்தில் நடைபெறும் வேலைகளை கண்காணித்து வர வேண்டியதாகவும் இருந்தது.

1969ம் ஆண்டில் இருந்து எனக்கு உறுகாம வயல் கவனிக்க வேண்டியதாயிற்று. அங்கு வேளாண்மைச் செய்கை, பயிர்ச்செய்கை, சேனைச் செய்கை என்பன முன்னெடுக் கப்பட்டன. சுவாமிகளின் ஊக்கமும் அக்காலத்திலிருந்த மாணவர்களின் முயற்சியாலும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனுக்கு உதவும் அன்பர்களின் உதவியாலும் அரசினரின் ஏற் பாட் டுக்கமைய தனிக்குளம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு பெரும் உதவியாக திரு.மு.குணநாயகம்(எஞ்சினியர்) அவர்கள் பெரும் உதவியாக இருந்தார். அக்குளத் துக்கு இராமகிருஷ்ண உறுகாமக் குளம் என்று பெயரிடப்பட்டது. சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ் எங்களை ஊக்குவிப்பதற்காக உறுகாமத்துக்கு அடிக்கடி வந்து ஏற்பாடுகளை கவனிப்பார்கள். அக்கால கட்டத்தில் இருந்த அன்பர்கள், உதவியாளர்கள், மாணவர்கள் ஆகியோர் சேவைமனப்பாண்மையுடன் செயற்பட்டதனால் நல்ல வளர்ச்சியுடையதாக காணப்பட்டது. இதற்கு மேலாக மாட்டு பண்ணை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு நாற்பதுக்கு மேற்பட்ட நல்ல இன பசுமாடுகள் இருந்தன.

அன்பன் நடராஜா மாஸ்டர் அவர்களின் உடல் நிலை குன்றிய பின்னர் விவசாயப் பண்ணைப் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டதால் எனக்கு வேலைப் பளுக்கள் மிகவும் அதிகமாயிற்று. எப்படியானாலும் குருதேவர் சேவை என்பதால் எல்லாவற்றிலும் சேர்ந்து செயற்பட்டேன்.

அக்காலத்தில் வேளாண்மைச் செய்கை திருப்தியான முறையில் மாரிபோகம், முப்பது ஏக்கரும் சிறு போகச் செய்கையாக பதினேழு ஏக்கரும் செய்கை செய்யப்பட்டது. அக்காலத்தில் கரடியனாறு விவசாய விஸ்தரிப்பு நிலையத்தின் ஊடாக கமநல திணைக்களத் தில் இருந்து நல்ல இன நெல் விதைகளைப் பெற்று எமது பண்ணையில் செய்கை பண்ணி நல்ல விதை நெல்லை அரசாங்கத்திற்கு கொடுக்கும் ஒரு பண்ணையாகத் திகழ்ந்தது. இதற்கு விவசாய கமநல அதிகாரிகள் சுவாமிகளின் அரும்பெரும் சேவையை மதித்தும் பாராட்டியும் நடந்து கொண்டார்கள். இதற்கு மேலாக சுவாமிகள் அன்பர்கள், உத்தியோ கஸ்தர்கள், தொழிலாளர்கள் ஆகியோர்களின் அன்பையும் பண்பையும் மதிப்பவர்களாக விளங்கினார்கள்.

இக்கால கட்டத்தில் 1971ம் ஆண்டு நாங்கள் இருந்த உறுகாம வயலில் உள்ள கிணற்றில் தண்ணித் தட்டுப்பாடாக இருந்த வேளையில் மேலும் கிணற்றைத் தோண்டும் பணியில் இல்ல மாணவர்களுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். அன்று கல்லடியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாணவன் பெரிய சுவாமி ஜீவனாநந்தாஜீ கொடுத்ததாக தந்தி ஒன்றை தந்து 'உங்களை உடன் வரும்படி கூறினார்கள்'. என்ற செய்தியை தெரிவித்தான். நான் தந்தியைப் பார்த்தேன். (Send Sivayogan to Katharagama Ramakrishna Madam) சுவாமி சர்வாதீதானந்தா என்று இருந்ததைக் கவனித்தேன். அன்று 4.00 மணிக்கு உறுகாமத்திலிருந்து கல்லடி மாணவர் இல்லத்திற்குச் சென்றேன். மாலை 8.00மணியளவில் சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்கள் தமது அறையில் இருந்தார்கள் அப்போது நான் சென்றபோது என்ன தம்பி தந்தியைப் பார்த்தீர்களா? என்று வினவினார்கள். என்ன செய்வது சுவாமிகள் வரும்படி கூறியுள்ளதால் கதிர்காமத்துக்குச் செல்லுங்கள் என்றார்கள். நான் அடுத்த நாள் காலையில் காரைதீவுக்குச் சென்று தந்தையாரிடம் இதை தெரிவித்தேன். அவரும் சரி நாளை கதிர்காமம் செல்லவும் என்று கூறினார்கள். அன்று வெள்ளிக்கிழமை அடுத்த நாள் சனிக்கிழமை மட்டக்களப்பு கதிர்காம சேவை என்ற பஸ்ஸில் சென்று மாலை கதிர்காமம் அடைந்தேன். சுவாமி சர்வாதீதானந்தாவைப் பார்த்தேன். அப்போழுது அங்கு கதிர்காமத்தில் இல்ல மாணவன் திரு.பாக்கியராஜாவும் இருந்தார்கள். சுவாமி என்னிடம் இங்கு திரு.நடராஜா என்பவர் இல்லை அவரை கொழும்பு மிஷனுக்கு அனுப்பி விட்டேன். நீங்கள் இங்கு தான் இருக்க வேண்டும் என்று கூறினார்கள். நான் எதுவும் மறுக்காமல் ஏற்றுக் கொண்டேன். இக்கால காட்டத்தில்தான் இலங்கையில் சேகுரா(J.V.P) புரட்சி ஏற்பட்ட காலம் ஆகும். நான் சில நாட்கள்தான் கதிர்காம மடத்தில் இருப்பேன் என்று எண்ணி இருந்தேன். ஆனால் 1971ல் இருந்து 1976ம் ஆண்டு வரை கதிர்காமத்தில் இருந்து குருதேவர் சேவையை மேற்கொள்ள வாய்ப்பு அமையப் பெற்றது. எனக்கு முருகப் பெருமானின் அன்பர் களுக்கும் மற்றும் அடியார்களுக்கும் தொண்டு செய்யும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. பொதுவாக கதிர்காமக் கந்தன் ஆராதனையைத் தரிசிக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

நான் கல்லடியில் இருந்து கதிர்காமத்துக்குச் சென்றது சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர் களுக்கு ஒரு தாக்கமாக இருந்தது. அதை அவர் மறைமுகமாக என்ன செய்வது என்று சில அன்பர்களிடம் கூறி இருந்தார்கள். எல்லாம் எமது சேவை என்பதால் மனத்திருப்தியாக ஏற்றுக் கொண்டார்கள்.

1972ம் ஆண்டில் கல்லடி மாணவர் இல்ல புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. அன்றைய திறப்பு விழாவில் கலந்து கொள்ள சுவாமி சர்வாதீதானந்தாஜீ அவர்கள் கதிர்காமத்தில் இருந்து வந்து கலந்து கொண்டார்கள். எனக்கு சமூகமளிக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஏனெனில் கதிர்காம மடத்தில் உணவுப் பகுதியை நான் கவனிக்க வேண்டி இருந்தமையினால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதற்குப் பின்பு மாத முடிவில் இல்ல புதிய கட்டடத்தை தரிசிக்க வாய்ப்புப் பெற்றேன்.

1976ம் ஆண்டு இலங்கை அரசாங்க புனித நகர் பணிக்காக அன்னதானம் கொடுக்கும் பணியையும் மிஷன் சேவையையும் இடை நிறுத்தி கட்டடத்தை சுவீகரித்தமையினால் கதிர்காம சேவை முடிவுக்கு வந்தது. நானும் சுவாமி சர்வாதீதானந்தாவும் கல்லடி மாணவர் இல்லத்திற்கு மாற்றப்பட்டு வந்தோம் இக்காலத்தில் குருதேவர் உருவச்சிலை கதிகாமத்தில் இருந்து கல்லடி மாணவர் இல்ல பூசை அறைக்கு எடுத்து வரப்பட்டது. மீண்டும் எனது பணியை உறுகாம பண்ணையிலும் கல்லடியிலும் மேற்கொண்டு சுவாமி ஜீவனாநந்தஜீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும் உதவும் வாய்ப்பையும் பெற்றேன். இக்காலத்தில் காரைதீவு பெண்கள் இல்லத்திற்கும் அடிக்கடி வந்து சென்றேன்.

06.06.1978ம் ஆண்டில் எனது தந்தை சீ.பொன்னையா மாஸ்டர் அவர்கள் காலமானார்கள். அதற்குப் பின்னர் காரைதீவுப் பெண்கள் இல்லத்தை கவனிக்கும் பணியும் எனக்கு இருந்தது. நான் அடிக்கடி சுவாமிகளுடன் காரைதீவு பெண்கள் இல்லத்திற்கு வருகை தருவேன்.

1982ம் ஆண்டில் கல்லடி சாரதா பெண்கள் இல்ல புதிய கட்டடத்திற்கான கல் நாட்டப்பட்டது. பெண்கள் இல்ல கட்டட வேலைகளிலும் எனது பங்களிப்பு தேவைப்பட்டதால் சுவாமிகளின் வேண்டுதலின் படி அப்பணிகளை மேற்கொண்டேன். கல்லடியில் உள்ள அன்பர்களுடன் திரு.ராஜகோபாலுடன் சுவாமிகள் கலந்து ஆலோசித்து கட்டட வேலைகளை சுலபமாக மேற்கொள்ள அவருடைய அணுகுமுறைகள் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டட வேலைகளில் தடை ஏதும் இல்லாமல் சுமுகமாக நடைபெற்று முடிந்தது. 1985ம் ஆண்டு பெண்களுக்கான இல்லக்கட்டடம் திறக்கப்பட்டு ஆனைப் பந்தியில் இருந்த இல்ல மாணவிகள் கல்லடிக்கு மாற்றப்பட்டார்கள். இல்ல திறப்பு விழா சிறப்பாக அமைய நான் சுவாமிகளுக்கு உறுதுணையாக இருந்தேன்.

1990ம் ஆண்டில் எமது உறுகாமப் பகுதியில் யுத்த நடவடிக்கை ஏற்பட்டதால் வயல் செய்கை முற்று முழுதாக பாதிக்கப்பட்டு எமது நடவடிக்கை நிறுத்தப்பட்டது. அங்கு தொடர்ந்து வயல் செய்கை மேற்கொள்ள முடியாமையினால் ராமகிருஷ்ண மிஷன் உறுகாமப் பண்ணை மூடப்பட்டது. அதனால் நான் கல்லடி ராமகிருஷ்ண மிஷனுக்கு முழுமையாக பணி புரிய வந்தேன்.

1991ம் ஆண்டு 8ம்மாதம் 22ஆந் திகதி காரைதீவு பெண்கள் இல்லத்திற்கு சுவாமி ஆத்மகனானந்தாஜீ அவர்களால் சிறப்பான முறையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

1991ம் ஆண்டில் நானும் திரு.க.பத்மநாதன்(ஐயா) திரு.கைலாயபிள்ளை, தங்கவடிவேல், ராமையா மற்றும் போரதீவைச் சேர்ந்த மாணவனும் இந்தியாவிற்குப் புனித யாத்திரை செய்ய சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்கள் ஏற்பாடு செய்து தந்தார்கள். இதன் பிரகாரம் நாங்கள் இப்புனித யாத்திரையில் ஸ்ரீ ராமகிருஷ்ண புனித தலங்கள் மற்றும் குருதேவர், அன்னை இடம், வேலூர் மடம் வடநாடு, ரிஸிக்கேசம், டெல்கி, ஆக்ரா என்பனவும் மற்றும் தமிழ் நாட்டில் உள்ள முக்கிய வழிபாட்டுத் தலங்களையும் தரிசிக்கும் வாய்ப்பும் புண்ணிய தீர்த்தங்களில் நீராடும் வாய்ப்பும் கிடைக்கப்பெற்றது. எங்கள் யாத்திரை சிறப்பாக அமைய சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்கள் எங்களுக்காக நல்ல ஏற்பாடுகளை செய்வதற்கான கடிதங்களை இந்தியாவில் உள்ள மிஷன் மடத்துக்கு முன் கூட்டியே அறிவித்து ஏற்பாடுகளை செய்தமையால் எதுவித சிரமமும் இல்லாமல் எங்கள் யாத்திரை சிறப்பாக நடந்தேறியது. இதற்கு முக்கிய காரணம் சுவாமிகளே. சுவாமிஜீ அவர்களின் செயற்பாடுகளில் எவருக்கு என்ன வகையில் உதவலாம் என்பதை எடுத்துக் காட்டும் விடயமாக இப்புனித யாத்தரை விளக்குகின்றது. பிறருக்கு உதவும் சேவை மனப்பான்மை சுபாவம் படைத்த துறவியும் அவர்கள் என்பது வெள்ளிமலை.

இதன் பின்னர் காரைதீவு பெண்கள் இல்ல கட்டட வேலை ஆரம்பிக்கப்பட வேண்டியதாக இருந்தது. இக்கால கட்டத்தில் காரைதீவு கல்முனைப் பகுதியில் இனக்கலவரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டு அம்பாறை மாவட்டத்திலும் பிற பகுதிகளிலும் உள்ள தமிழர்கள் அகதிகளாக காரைதீவு கனகரெட்ணம் விளையாட்டரங்கில் அமர்த்தப்பட்டார்கள். இக்காலத்தில் அவர்களுக்கு தொழில் வாய்ப்பு இல்லாமல் இருந்தது. அயல் கிராமங்களில் சென்று மேசன் மற்றும் கூலி வேலைகள் செய்ய முடியாத காரணத்தால் அவர்களுக்கு உதவும் வகையில் ராமகிருஷ்ண மிஷன் பெண்கள் இல்ல கட்டட வேலையை மிஷன் நேரடிப் பார்வையில் என்னை அமர்த்தி உதவிக்காக திரு.குணநாயகம்(எஞ்சினியர்) அவர்களை ஏற்பாடு செய்து சிறப்பாக கட்டட வேலைகளை செய்து முடிக்க சுவாமிஜீ அவர்கள் எல்லா ஆலோசனைகளையும் ஏற்பாடுகளையும் செய்து வைத்தார்கள் . இதன் பிரகாரம் கட்டட வேலைகளுக்கு எதுவித தாமதமும் இல்லாமல் இனிது முடிவு பெற்றது.

1994ம் ஆண்டு மேமாதம் 27ம் திகதி ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பொது காரியதரிசி சுவாமி ஆத்மஸ்தானந்தாஜீ அவர்களால் காரைதீவு பெண்கள் இல்லக் கட்டடம் மிகவும் விமர்சையாக திறந்து வைக்கப்பட்டு அன்னதானமும் காரைதீவு மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வைபவம் சுவாமிகளுக்கும் எமது கிராம மக்களுக்கும் பெரு மதிப்பையும் சிறப்பையும் தந்த செயலாகும். இவை யாவும் சுவாமிஜீ அவர்களின் தன்னலமற்ற சிறப்புச் சேவைகள் உச்ச நிலைக்குச் சென்றது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

17.01.1997ம் ஆண்டு சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ் ஏற்பாட்டில் சுவாமி ரங்கனாநந்தாஜீ மகராஜ் கொழும்புக்கு வருகை தந்த பொழுது அவர்களிடம் எனக்கு மந்திர தீட்சை பெறும் வாய்ப்பும் அதன் மூலம் என் ஆன்மீக விருத்தியும் உயர்ந்தமை சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்களையே சாரும். எப்பொழுதும் எம் அடியவர்களுக்கு மிஷன் அன்பர்களுக்கும் மிகச் சிறப்பாக விளங்கினார்கள்.

சுவாமிஜீ அவர்களின் இறுதிக் காலத்தில் இந்தியா வேலூர்மட தலமை இடமான குருதேவர் ஆலயத்திற்கு சென்று வர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக இருந்தார்கள். அது நடைபெறாமையினால் ஏதோ ஒரு புண்ணிய தலத்திற்கு செல்ல வேண்டும் என்ற ஏற்பாட்டில் கதிர்காமத்திற்குச் சென்று தரிசிக்க எண்ணினார்கள் .அதற்கமைய நானும் சுவாமி ஞானமயானந்தாஜீ அவர்களும் செந்தூரன் உதயன் உட்பட கதிர்காம யாத்திரையை மேற்கொண்டோம். சுவாமிகள் கதிர்காமம் சென்று திரும்பி மட்டக்களப்புக்கு வரும் வழியில் காரைதீவு பெண்கள் இல்லத்திற்கு வந்து மதிய உணவை உண்டு இளைப் பாறிச் சென்றார்கள். இதுதான் சுவாமி ஜீ அவர்களின் இறுதி வரவாக அமைந்தது.

சுவாமிஜீ அவர்களின் இறுதிக் காலத்திற்கு முன்னர் 01.02.2006ம் ஆண்டு சுவாமி அஜராத்மானந்தாஜீ அவர்கள் இந்தியாவிற்கு நாப்பூரில் ஆலய திறப்பு விழாவிற்கு செல்ல வேண்டி இருந்தமையினால் அவர் எமது வண்டியில் செல்லும் போது என்னையும் சுவாமிஜீ அவர்களுடன் கொழும்புக்குச் செல்லுமாறு சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ் அவர்கள் என்னை பணித்தார்கள். அதற்கமைவாக நான் சென்றேன். அன்று மாலை சுவாமி ஜீவனாநந்தாஜீ அவர்கள் மட்டக்களப்பு G.V வைத்தியசாலையில் அனுமதித்ததாக செய்தி கிடைத்தது. அதே இரவு சுவாமி ஜீ அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சில வார்த்தைகள் என்னிடம் பேசினார்கள். நான் அவர்களுடைய சுக செய்தியை வினவிய பின்னர் சுவாமிகள் தம்பி நீங்கள் கொழும்பில் இருந்து வந்து காரைதீவிற்கு உடன் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம். கல்லடியில் ஒரு வாரத்திற்கு தங்க வேண்டும் எனக் கூறினார். அடுத்த நாள் காலை 03.02.2006 கொழும்பில் இருந்து வந்து சுவாமிகளை தரிசித்து சுக செய்திகளையும் அறிந்து கொண்டேன். அவர்கள் நன்றாக இருந்தார்கள். 04.02.2006 அன்று காலையில் நானும் சுவாமி ஞானமயானந்தாஜீ மகராஜ் அவர்களும் மயிலம்பாவழி கருணை இல்லத்திற்கு அன்றைய தினம் நடக்க இருந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்றோம். அன்று மாலை 7.00மணிக்கு சுவாமி ஜீ அவர்களை வைத்தியசாலைக்கு சென்று பார்ப்பதற்காக நானும் திரு.க.பத்மநாதன் ஐயாவும் எண்ணியிருந்தோம். ஆனால் அது நடைபெறவில்லை. G.V வைத்தியசாலைக்கு விரைந்து இறுதியாக தீபாராதனை காட்டி கங்கா புனித நீரையும் தெளித்து பிரேதத்தை கல்லடி மாணவர் இல்லத்திற்கு எடுத்து வர ஏற்பாடு செய்தோம். இவற்றுக்குப் பின்னர் நடைபெற்றவை யாவும் அறிந்ததே. சுவாமிகள் ஆத்மா குருதேவரின் பூந்தோட்டத்தில் எதுவித கஷ்டமும் இல்லாமல் அமைந் துள்ளது என்பது யாவரும் அறிவதே.

*நோயுற் றளராம நொந்துமனம் வாடாமற்*
*பாயிற் கிடவாமற் பாவியேன்- காயத்தை*
*ஓர் நொடிக்கு ளீக்கியெனை ஒன்போரூரையா நின்*
*சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து*
*ஸ்ரீ ராமகிருஷ்ண தேவா*

என்பதற்கு அமைவாக ஜீவனாநந்தா சுவாமிகள் ஆத்மா இறுதியாக புனிதமாக அடைய வேண்டிய இடம் சென்றுள்ளதை நாங்கள் உணரக்கூடியதாக அமைந்தது பெரும் பேறு எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வுபெற்ற மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதகர் இளையதம்பி அரியநாயகம் அவர்களுடனான நேர்காணல்

**தங்களுக்கு சுவாமியுடனான தொடர்பு முதன்முதல் எவ்வாறு எப்போது ஏற்பட்டது?**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டநான் அப்போது இலங்கை முழுவதும் நடமாடும் சேவையில் (Mobile Service)ஈடுபட்டிருந்த போது 1973,1974 களில் இரு தடவை மட்டக்களப்பிற்கு வந்திருந்தேன். அவ்வாறு வந்த போது தெய்வாதீனமாக கல்லடி ராமகிருஷ்ண மிஷனுக்கும் செல்லும் பேறுகிடைக்கப்பெற்றது. அங்கிருந்த சுவாமிகளின் மீது எனக்கேற்பட்ட ஈர்ப்பு மிக விசித்திரமானது என்றே சொல்லவேண்டும். அவரது விசித்திரமான அணுகுமுறை (Way of Approach is entirely different from others) அவரை ஒருமுறை சந்தித்தவரை மறுமுறையும் சுவாமிகளைச் சந்திக்க வேண்டும் என்ற மனோ நிலையைத் தோற்றுவித்துவிடும். இதற்குமேலும் வளம் சேர்ப்பது போல் மட்டக்களப்பில் நிலவிய இந்து மதச்சூழல், பாடசாலை வசதிகள் என்பனவும் சேர்ந்து எனக்குரிய நிரந்தர வசிப்பிடமாக மட்டக்களப்பினைத் தேர்ந்தெடுக்க வைத்தது. குறிப்பாக சுவாமிகளின் பிரசன்னமே இத்தகைய தீர்க்கமான முடிவெடுக்க காரணமாயிற்று. இதன்படி 1980 தைமாதம் முதல் மட்டக்களப்பிற்கு வந்து மகளை 5ஆம் வகுப்பில் வின்சன்ற் பெண்கள் பாடசாலையிலும் மகனை 02 ஆம் வகுப்பில் மத்தியகல்லூரியிலும் சேர்த்து வாழ்வின் புதிய அத்தியாயத்தைத் தொடக்கினேன்.

குடிவந்ததன் பின்னர் சுவாமிகளைச் சந்தித்து என்னால் ஆகவேண்டிய பணிகள் ஏதும் உண்டோ என வினவினேன். அதற்கு சுவாமிகள் மட்டக்களப்பின் புளியந்தீவுப் பகுதியில் நிதிசேர்ப்பதில் உதவுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க அக்காலத்தில் ரூ.2.00 சேர்த்து புள்ளடியிடும் அட்டைகள் தந்து இல்லத்திலிருந்து தம்பி வரதராஜனையும் உதவிக் குத்தந்தார்.

அன்றிலிருந்து எனக்குத் தெரிந்தவர்களிடமிருந்தெல்லாம் பணத்தைச் சேகரித்து வழங்கலானேன். குறிப்பாக வைத்தியசாலை உத்தியோகத்தர்களிடமிருந்து சம்பள தினத் தன்று சம்பளக்கொடுப்பனவு அறையின் வாயிற்கதவடியிலிருந்து ரூ.2.00 வசூலித்தது இன்றும் ஞாபகம்.

சுவாமிகளிடம் ஒருநாள்கூறினேன் 'சுவாமி நாம் வசூலிக்கும் இந்த ரூ.2.00 மிகச் சிறியது' என்று. சுவாமிகள் கூறினார் பாருங்கள் Mr. அரியநாயகம் இந்த இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கப்பட்டது வசதிபடைத்தவர்கள் தந்த ஆயிரங்களால் மட்டுமல்ல இப்பிரதேச ஏழைகள் மனமுவந்து தந்த சிறுசிறு பணத்தினால்தான். இங்கு அவர்களது தொகையைப் பார்க்கக் கூடாது அவர்களது மனமே முக்கியம் என்றார். வயதுபோன தாய்மார் தாம் மிகவும் கஸ்ரப்பட்டு உழைத்து தமது முந்தானையில் முடிந்து வைத்திருக்கும் ஒரு ரூபாயைக் கூட இப்பெரும்பணிக்கு மனமுவந்து தந்ததனால் தான் இன்று இவ்வில்லங்கள் வானளாவ உயர்ந்து நிற்கின்றன. இவ்வில்லங்கள் என்றென்றும் இம்மக்களுக்கே உரியனவேயன்றி இராமகிருஷ்ண மிஷனுக்கல்ல என்றார்.

இதைவிட அதிசயம் சேமிக்கும் ஒவ்வொரு 2.00க்கும் தனித்தனி பற்றுச்சீட்டு வழங்குவது. சுவாமிகளிடம் கேட்டேன் தாங்கள் எப்போது இவ்வேலையெல்லாம் செய்கிறீர்கள் என்று. சுவாமிகள் கூறினார் தினமும் 3.00 மணிக்கெல்லாம் எழுந்துவிடுவேன் அவ்வாறு எழுந்தால்தான் 4.15.க்கு பிள்ளைகளை எழுப்பி நானும் இவ்வேலைகளைச் செய்துமுடிக்கலாம் என்றார். பெற்றுக்கொள்ளப்படும் ஒவ்வொரு சதத்திற்கும் கணக்கு எழுதப்பட வேண்டும். பற்றுச்சீட்டும் வழங்கப்பட வேண்டும். இது ராமகிருஷ்ண மிஷனின் விதிமுறை என்றார். மேலும் இதுதான் எங்கள் வேலை இதற்கேன்றே நாங்கள் அர்ப் பணிக்கப்பட்டவர்கள். ஆனால் உங்களைப் போன்ற இல்லறத்தவர்கள் இப்பணியில் ஈடுபடுவதே மிகவும் பெரியது என்றார்.

எனக்கும் நாடெங்கணும் நண்பர்கள். அவர்களில் யாராவது மட்டக்களப்பிற்கு வந்தால் நான் தவறாமல் இவர்களை சுவாமிகளிடம் அழைத்துக் சென்று அறிமுகப்படுத்தி விடுவேன். அவர்களும் அன்றிலிருந்து சுவாமிகளின் பக்தர்களாகிவிடுவதோடு நன்கொடை களும் வழங்கத் தவறுவதில்லை. இதனையும் சுவாமிகள் பாராட்டிக்கூறுவார். Mr. அரியநாயகம் நீங்கள் செய்வதுதான் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பிடித்த சேவை நாம் மட்டுமல்ல நமக்குத் தெரிந்தவர்களையும் பகவத்சேவையில் ஈடுபடுத்துவதே மிகச் சிறந்த சேவை என்பார்.

**சுவாமிகளிடம் தங்களை வெகுவாகக் கவர்ந்த பண்புகள் ?**

**தன் பிள்ளைகளைப் போன்றே நேசிக்கும் பாங்கு:** சுவாமிகளுக்கு மிஷன் பக்தர்கள் எப் போதும் மிஷனுக்கு வரவேண்டும் ஓரிரு நாட்கள் ஒருவரைக் காணவில்லையென்றால் ரெலிபோன் பண்ணி கேட்பார் எங்கே உங்களைக் காணவில்லையென்று. இல்லாவிட்டால் வருவோர் போவோரிடமெல்லாம் கேட்கத் தொடங்கிவிடுவார் எங்கே அவரைக் காண வில்லையென்று. பின்னர் அவர்கள் நம்மிடம் கூறுவார்கள் உங்களைச் சுவாமிகள் தேடு கின்றாரென்று. இவ்வாறு ஒவ்வொருவரிடமும் தனித்தனியான அன்பு சுவாமிகளுக்கு.

சுவாமிகள் சில சந்தர்ப்பங்களில் தொலைபேசியில் அழைப்பார். சில சந்தர்ப்பங்களில் சாப்பிடுவதற்கு கைவைக்கும் போது கூட அழைப்புவரும் உடனே புறப்பட்டு விடுவேன். பசியும் தெரியாது சுவாமிகளைக் கண்டு வேண்டியதைச் செய்த பின்பே மறுவேலை. அந்தளவிற்கு அவரது ஆகர்ஷணசக்தி வேலைசெய்யும் இவ்வனுபவம் எனக்கு மட்டுமல்ல அன்பர்கள் அனைவருக்கும் இதேபாணிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனக்குறை தீர்க்கும் மருந்து**

'சுவாமிகளிடம் என்னை ஈர்த்த மிகமுக்கியமான சக்தி இது தான். நான் வைத்தியசாலையில் கடமை புரிவதிலோ சரி அதற்கு வெளியிலோ சரி பலவித பிரச்சனைகள் தோன்றும் போது கடைப்பிடிக்கும் ஒரே சிகிச்சை இது தான். உடனே வெளிக்கிட்டு சுவாமிகளிடம் செல்வேன் சுவாமிகளின் பாதத்தில் விழுந்து வணங்கியதும் சுவாமிகள் உரையாடத் தொடங்குவார். சுவாமிகளின் உரையாடலில் எங்காவது ஓரிடத்தில் எனது பிரச்சனைக்கான தீர்வு காணப்படும் கடவுளை நான் கண்டதில்லை ஆனால் கடவுளாக இருந்து என்னை வழிநடத்தியவர் சுவாமிகளே'. (என்று கண்கலங்குகிறார் அரியநாயகம் ஐயா) இதுவே சுவாமிகளிடம் என்னை ஈடுபடவைத்த மிக முக்கியமான விடயம் எனலாம். இந்த நிலை சுவாமிகள் இருக்கும் வரை தொடர்ந்து காணப்பட்டது. இன்றும் சுவாமிகளின் படம் வைத்து வணங்குவதால் எத்தகைய பிரச்சனையும் என்னைப் பாதிப்பது இல்லை.

**உண்மையான துறவி**

நானும் என் வாழ்வில் பல சமயப்பெரியார்களைக் கண்டிருக்கின்றேன். ஆனால் சுவாமி களைப் போன்று உண்மையான துறவியை இதுவரை சந்திக்கவில்லை.

ஒரு முறை சுவாமிகளுடன் கொழும்பிலுள்ள சில கடைகளில் நிதி சேகரிப்பில் ஈடுபடும் போது கடைக்காரர்கள் சுவாமிகளிடம் தொகை குறிப்பிடாத வெற்று காசோலை களை (Blank Cheques) ஒப்பமிட்டு வழங்கினர். அதனை மறுத்த சுவாமிகள் எமக்கு இத்தேவைக்கு இவ்வளவு மட்டுமே தேவை தயவு செய்து அத்தொகையை மட்டும் எழுதித்தாருங்கள் அது போதும் என்றார். அப்போது நான் ஆச்சரியப்பட்டேன். சுவாமிகளுக்கு எத்தனையோ தேவைகளிருந்தும் எவ்வாறு இப்படி செயற்பட முடிகின்றது பணத்தில் பற்றில்லாத சுவாமிகளின் பாங்கினை அன்று உணரமுடிந்தது.

ஒருமுறை சுவாமிகளின் அறையிலிருந்து பணம் களவாடப்பட்டு விட்டது. திருடர் களையும் பொலிசார் பிடித்துவிட்டனர். இப்போது போலீஸ் அதிகாரி உட்பட திருடர்களும் மிஷனில் காணப்படுகின்றனர். அங்குள்ளவர்களுக்கு Cool Drink கொண்டுவரப்பட்டதும் சுவாமிகள் கொண்டுவந்தவரை அழைத்து 'முதலில் வாகனத்தில் பிடித்து வைக்கப் பட்டுள்ளவர்களுக்கு கொடுங்கள் பாவம் அவர்கள் பிடிக்கப்பட்டதிலிருந்து எதுவும் கிடைத்திருக்காது'. என்று கூறியதைக்கேட்டதும் பொலீஸ் அதிகாரிக்கே வியப்பு. இத்தனைக்கும் அவர்கள் சுவாமிகள் திருடப்பட்டதாகக் கூறிய தொகையிலும் ரூ.5000/= குறைத்தே திருடியதாக ஒப்புக்கொண்டிருந்தனர். மேலும் இன்ஸ்பெக்ரரிடம் சுவாமிகள் கூறினார் 'இவர்களை மேலும் அடிக்காதீர்கள் பாவம் சற்று எச்சரித்துவிட்டு அனுப்புங்கள்' என்றார். பகைவனையும் பகவானின் பக்தனாகப் பார்க்கும் இந்தப் பண்பு பற்றற்ற துறவியைவிட வேறுயாருக்கு வரும்?

இன்னொரு சந்தர்ப்பம் சுவாமிகள் சிகிச்சைக்காக இந்தியா செல்லத் தயாராகிக் கொண்டிருக்கின்றார். பலரும் வந்து பார்த்துவிட்டுச் செல்லும் அதேவேளை சுவாமிகளின் சேவைகளை வெகுவாகப் புகழ்ந்து கூறிக்கொண்டுமிருந்தனர். நாமென்றால் அப்போது உச்சி குளிர்ந்து உயரப்பறந்திருப்போம். நானும் சுவாமிகளுக்கு முன்னால் அமர்ந்துகொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளையே உற்று நோக்கிக்கொண்டிருக்கின்றேன். அத்தனை புகழ்ச்சியிலும் இம்மியளவும் சலனப்படாத நிர்ச்சலனமான துறவியின் முகத்தினை அக்கணம் தரிசிக்கும் பாக்கியத்தை பெற்றேன்.

நானும் YMHA அன்பர்களும் சேர்ந்து சுவாமிகளது 60வது பிறந்த நாளை சிறு விழாவாகக் கொண்டாட எண்ணி சுவாமிகளிடம் சென்று கேட்டோம். சுவாமிகள் மறுத்துவிட்டார். எனினும் எமக்கு அதில் உடன்பாடில்லை என்பதை உணரந்து சுவாமிகள் கூறினார். நான் உங்களுக்கு கதையொன்று கூறுகின்றேன் என்று கூறலானார். எங்களுக்கு சந்நியாசம் வழங்கும் போது கங்கையில் நீராடி நிர்வாணமாகவே குருவிடம் சென்று அவர் தரும் ஆடையை அணிந்து கொண்ட பின்னர் ஒருவர் இறந்ததும் அவ்வுடலுக்குச் செய்யப்படும் பிண்டம் கரைத்தல், பிதிர்க்கடமைகள் யாவும் எமக்கு நாமே செய்வோம். அதாவது அன்றிலிருந்து அந்த உடல் அழிக்கப்பட்டு புதிய பிறப்பு எடுக்கின்றோம். இப்புதிய உடல் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சேவைக்கே அர்ப்பணிக்கப்பட்டது. இதற்கு தாய், தந்தை, பிறப்பு, இறப்பு என்று எதுவுமில்லை என்றார். இவ்விளக்கத்தினைக் கேட்ட நாங்களும் சுவாமிகளின் தூய்மையை மாசுபடுத்தவிரும்பாது மன்னிப்புக்கேட்டு விடை பெற்றோம்.

**‘தாயினும் சாலப்பரிந்து...................’**

பிள்ளைகளின் ஒழுக்கம் பண்பாடு விடயத்தில் சுவாமிஜீ மிகவும் கண்டிப்பானவர்.ஆனால் அதையும்விட அன்பானவர். இல்லக் குழந்தைகளுக்கு தாயாயும் தந்தையாயும் விளங்கினார்.

தற்போது பொன்னையா செல்வராசா என்று அழைக்கப்படும் செல்லா தனது ஒன்றரை வயதில் இல்லத்தில் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தினால் ஒப்படைக்கப்பட்டான். அப்போது அவனது உடலெங்கும் சொறியும் சிரங்கும். அதுமட்டுமன்றி சின்ன deformity யும் உண்டு. ஆனால் சுவாமிகளோ வேனில்(Van) அவனைத் தனது மடிமீது இருத்திக்கொண்டு வந்து பெரியாஸ்பத்திரியின் குழந்தை (Pediatrician) வைத்திய நிபுணரிடம் காட்டிச் சென்றதை அன்று வைத்தியர்கள் அனைவரும் பார்த்து வியப்புற்றிருந்தனர்.

சற்று மனோநிலை குன்றியவனாயும் சேர்க்கப்பட்ட செல்லாவை வேறு எவரிடமும் காட்டாத அன்பையும் பாசத்தையும் காட்டிய அன்புத் தாயாய் சுவாமிகள் செயற்பட்டார்.

மேலும் ஒருநாள் சுவாமிகள் அலுவலக வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். செல்லாவிற்கு சுவாமிகளின் நிலமை தெரியாமல் மெதுவாகச் சென்று சுவாமிகளின் வயிற்றில் ஒரு கிள்ளுகிள்ளிவிட்டு சற்று அப்பால் சென்று விடுகின்றான். அவ்வளவு வேலையிலும் சுவாமிகளுக்கு கோபமோ ஆத்திரமோ வரவில்லை. இவன் என்னை விட்டு வேறிடம் செல்கிறானில்லை எனக்கு Body Guard இவன் தான் என்று கூறுகின்ற தாயன்பு சுவாமிகளைத் தவிர வேறுயாருக்கு வரும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுவாமிகள் சமாதியெய்துவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்**

சுவாமிகள் சமாதியெய்துவதற்குச் சிலதினங்களிற்கு முன்னர் எனதுமகள், மருமகன் சகிதம் சுவாமிகளைப் பார்க்கச் சென்றிருந்தோம். படுக்கையிலிருந்து எழும்பமுடியாத நிலை. ஆனாலும் நன்கு பெயர் சொல்லி அழைத்து 'Mr.அரியநாயகம் இன்று நான் உமக்கு ஒருபடம் தரப்போகின்றேன் இது மிகமுக்கியமான படம். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தான் இறப்பதற்கு முன்னர் கடைசியாக பக்தர்களுக்குக் காட்சிதந்த நிலை இதுதான்' என்று கூறித்தந்தார். சுவாமிகளுடன் பழகிய இந்த 25 ஆண்டுகளில் இதுவரை தராத படத்தினை சுவாமிகள் தந்ததின் மர்மம் அடுத்த 03 நாட்களில் சுவாமிகள் சமாதியுற்ற போது தான் எனக்குப் பொறி தட்டியது.

**சமாதியின்போது**

சுவாமிகளின் இறுதித் தினமன்று பெரிய பிரபலங்களெல்லாம் சுவாமிகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள் சுவாமி அஜராத்மானந்தா என்னையும் பேசுமாறு கூற நான் சற்று அந்தரப்படுகின்றேன். ஆனாலும் 'சுவாமிகளைப் பற்றி நீங்கள் என்னிடம் கூறியவற்றை மட்டும் கூறுங்கள் அது போதும்' என்றார். நானும் கூறி வழிபட்டேன். இவ்வாறாக சுவாமிகளின் வாழ்வும் வாக்கும் அன்றும் இன்றும் என்றென்றும் என்னை வழிப்படுத்தி நெறிப்படுத்தி வருகின்றது என்பதே இறுதியாகச் சொல்லக்கூடியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் மா. இராஜகோபால் அவர்களுடனான நேர்காணல்

**மிஷனுக்கு வரவு**

1969-விஜயதசமியன்று, சுவாமிகளுடன் ஒன்றாகப் படித்த காரைதீவைச் சேர்ந்த திருவாளர் திருநாவுக்கரசு (வித்தியராஜாவின் அப்பா) அவர்கள் நான் கல்முனையில் கல்வி கற்று G.C.E(O/L) சித்திபெற்றிருக்கும்போது, சுவாமிகளுக்கு உதவிபுரிய ஒரு ஆள் தேவையென்று கேட்டதற்கினங்க இங்கு பணிபுரிய வந்தேன். அப்போது வயது 19.

சிவபுரியில் சுவாமி இருந்தார். ஞாயிறன்று விஜயதசமி, ஞாயிறு சமய பாடசாலை ஆண்டுவிழா நடைபெற்றது. 1ம் ஆண்டு தொடக்கம் 5ம் ஆண்டு வரையான (சுமார் 40பிள்ளைகள்) பிள்ளைகளை காலை முதல் மாலை வரை பார்த்து வழி நடத்தும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது.

மேலும் அப்போது இந்த ஆண்கள் இல்லம் அத்திவாரம் மட்டும் போடப்பட்ட நிலையிலிருந்தது. அன்பன் நடராஜா அவர்களுடன் சேர்ந்து அப்பணியிலும் முழுமையாக ஈடுபட்டேன். பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பியதும் கட்டடவேலை மேற்பார்வையில் ஈடுபட்டேன். நடராஜா மாஸ்டர் பொருட்கள் கொள்வனவு போன்ற வேலைகளில் மேற்பார்வை செய்தனர் (1969-1972)

பின்னர் சிலகாலம் (3வருடங்கள்) அன்பன் நடராஜா, மற்றும் பொறியிலாளர் குணநாயகம் ஐயாஅவர்களுடன் சேர்ந்து ஙூகம் வயிலில் பணிபுரியப் பணிக்கப்பட்டேன். அப்போது பிரதானமாக ஸ்ரீ ராமகிருஷ்ண குளம் நிர்மாணப்பணி நடந்து கொண்டிருந்தது. பின்னர் எனது படிப்புத் தேவையைக் கருதி சுவாமிகளின் அனுமதி பெற்று மீண்டும் மிஷனுக்கு வந்து அம்பாறை தொழிநுட்பக் கல்லூரியில் சனி, ஞாயிறு கல்வியில் ஈடுபட்டு **'விவசாயமுகாமைத்துவம்'** எனும் விடயத்தைக் கற்றுமுடித்தேன்.

நிதிசேகரிப்பிலும் ஈடுபட்டேன். எனது சொந்தமுயற்சியின் பேரில் கல்முனைப் பகுதியில் ஈடுபட்டேன். இம்முயற்சியை ஒரு சவாலாகவே நான் மேற்கொண்டேன். 25ம் திகதியில் அலுவலகங்களிலும் 18ம், 19ம் திகதிகளில் பஜாதிக்கும் சென்று நிதிசேகரிப்பிலும் ஈடுபட்டேன்.

**ஸ்ரீ சாரதா இல்ல நிர்மாணம்**

காணிதிருத்தல் முதல் (1980-1983வரை) கட்டடநிர்மாணம் வரை முழுப்பொறுப்பும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்காலத்தில் அன்பன் நடராஜா மறைந்து விட்டிருந்த படியால் முழுப் பொறுப்பும் என்னிடமே ஒப்படைக்கப்பட்டது. அதனை முழுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்த பின்னர் மீண்டும் இல்லமாணவர்களை மேற்பார்வை செய்யும் பணியில் ஈடுபட்டேன்.

### ஞாயிறு சமய பாடசாலை

இக்காலப்பகுதியில் ஞாயிற்றுக் கிழமைதோறும் இடம்பெறும் ஞாயிறு சமய பாடசாலை சம்பந்தமான முழுப் பொறுப்பையும் செயலாளராக இருந்து நானே மேற்கொள்ளப் பணிக்கப்பட்டேன். துரைராஜசிங்கம் சேர், முழு ஒத்துழைப்புத் தந்திருந்தார்.

### விவேகானந்தபுரம் –மாதிரிக்கிராமம்

27வீடு, கிணறு, மலசல கூடம் என்பவற்றுடன் கோயில், பாலர் பாடசாலை, விளையாட்டு மைதானம், என்பனவும் 6மாத செயற்றிட்டமாக நிறைவேற்றுவதற்கு வேலை மேற்பார்வை யாளராகக் கடமையாற்றினேன். சிறுசிறு திருத்த வேலைகள். குறிப்பாக சிவபுரி திருத்தம். மணிமண்டபம். சாரதா இல்லப் படிப்பறை நிர்மாணப்பணிகளும் என்னால் மேற்பார்வை செய்யப்பட்டது.

### இந்தியா விஜயம்

ஒரு தடவை சுவாமிகள் கண் சத்திரசிகிச்சையின் (1980களில்) பொருட்டு இந்தியா சென்ற போது உதவிக்குச் சென்றேன். இப்பயணம் சிறியது. எனினும் சுவாமிகளுடன் சில முக்கிய இடங்களிற்கு சென்று திரும்பினேன்.

2வது தடவையும் சுவாமிகள் சிகிச்சைக்குச் சென்றபோது நானும் சென்றேன். இப் பயணம் சுமார் 6 மாதகாலம். இதன் போது குருக்ஷேத்திரத்திற்குச் செல்லும் வழியில் சிறுவாகன விபத்து சுவாமிகளுக்குச் சேதமேதுமில்லை. ஆனால் எனக்கு மூக்கில் அடிபட்டுக் காயம் ஏற்பட்டது. சுவாமிகளோ என்னை உடனிருந்து கவனித்தார். இது என்னால் மறக்கமுடியாத ஓரனுபவம்.

சுவாமிகளின் சக சந்நியாசிகளின் இடங்களிற்குச் செல்லும் போது அங்கெல்லாம் சுவாமிகளிற்கு மிகுந்தமரியாதையும் உபசரிப்பும் கிடைக்கும். அதெல்லாம் எனக்கும் கிடைத் தது பெரும் பேறு. மேலும் இக்கோவிலிருந்து என்னை விமானம் மூலம் காசிக்கு அனுப்பிவைத்தார். இப்பாக்கியம் மறக்கமுடியாதது. யாருக்கும் கிடைக்காதது. மீண்டும் இலங்கை வந்து இல்லத்தில் கடமையேற்றேன்.

சுவாமி அஜராத்மானந்தரின் காலத்திலும் தொடர்ந்து பணியாற்றினேன். குறிப்பாக களஞ்சியப் பொறுப்பில் ஈடுபட்டேன். இன்றுவரை குருமஹராஜ் எனக்கிட்ட பணியைச் செய்துவருகிறேன்.

### சுவாமிகளின் அருங்குணம்

நம்பிக்கை:- அசைக்கமுடியாத நம்பிக்கை,உண்மையானஅன்பு. முழுமையாக பொறுப் பளிப்பு,எந்தப் பணியை எனக்கு வழங்கும்போதும் முழுப் பொறுப்புடனும், நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடனும் வழங்குவார். நானும் சுவாமிகளின் நம்பிக்கை வீண்போகாதவாறு முழுமனதுடன் பணியாற்றினேன்.

அதுமட்டுமன்றி குருமஹராஜின் ஆசிர்வாதமே நான் இன்று வரையும் இவ்விடத்தை விட்டுச் செல்லாமைக்கு காரணம். **'இந்த கூரையின் கீழ் பணியாற்றுபவர்கள் என்னால் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள்'** என்ற குருமஹராஜின் வாக்கே காரணமாகும். அரச உத்தியோகம் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோதும் நான் இங்கிருந்து செல்லா மைக்கு இதுவும் ஒரு காரணம்.

குருமஹராஜ் எனக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை. இப்போது நல்ல மனைவி, அன்பான குழந்தை என்று இன்பமாய் வாழ குருதேவரின் ஆசி எனக்குத் துணையாயிற்று. சுவாமிகள் தந்த பணத்தைக் கொண்டு கல்லடியில் ஒருவளவு வாங்கி சிறுவீடும் இருந்தது. சுனாமியின் போது பாதிக்கப்பட்டது. பின்னர் சுனாமி வீட்டுத்திட்டத்தின் கீழ் சுவாமிகள் ஒரு வீடும் கட்டித்தந்தார்.

- நீங்கள் கடவுளின் குழந்தைகள் அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள் புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள்.
- நம்பிக்கை நம்பிக்கை நம்மிடத்தில் நம்பிக்கை, நம்பிக்கை நம்பிக்கை கடவுளிடத்தில் நம்பிக்கை, இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும்.

-சுவாமி விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் செல்வநாயம் அவர்களுடனான நேர்காணல்

### சுவாமி ஜீவனாநந்தா மட்டக்களப்பு இல்லத்திற்கு வந்தபோது எனது உள்ளத்தில் எழுந்தது

சுவாமி நடராஜானந்தாஜீ கடுமையாக சுகயீனமுற்று இருந்தபோது சுவாமி ஜீவனாநந்தாஜீயை மட்டக்களப்பிற்கு அனுப்புமாறு பேலூர் மடத்திற்கு கடிதம் அனுப்பினார்கள். தற்காலிகமாக ஒரு மாதத்திற்கு நாட்டறம் பள்ளியிலிருந்து சுவாமிகள் மட்டக்களப்புக்கு வந்திருந்தார். எனினும் அப்போது சுவாமி நடராஜானந்தா வைத்தியசாலையில். இல்லத்தில் குழந்தை களைப் பார்த்துக் கொண்டு விநாயகமூர்த்தி அண்ணன் இருந்தார்கள். நிதிநிலைமையும் பற்றாக்குறையாயும் காணப்பட்டது.

மட்டக்களப்பிற்கு சேவையாற்றுவதற்கு எமது பிரதேசத்தைச் சேர்ந்தஒருவர் சுவாமி களாக வந்துள்ளார் என்ற திருப்திஏற்பட்டது. பூரிப்புஏற்பட்டது.

### சுவாமிகளுடன் இல்ல அலுவல்களில் ஈடுபாடு

அன்றாடம் கணக்குகளை ஒழுங்காக சுவாமிகள் பதிவார். ஆண்கள் இல்லக்கணக்கு, சாரதா பெண்கள் இல்லகணக்கு, ஆச்சிரமக் கணக்கு, உறுகாமம் கணக்கு என்று தனித்தனிக் கணக்குகள் பேணப்பட்டன. அப்போது அக்கணக்கு வேலைகளில் முன்னாள் மட்டக்களப்பு ப.நொ.கூ.சங்கப் பொதுமுகாமையாளர் திரு.எஸ்.தில்லைநாத அண்ணனும் நானும் சுவாமி களுக்கு உதவிகள் புரிந்தோம். ஆங்கிலத்தில் நேர்த்தியாக எழுதுவார்கள் சுவாமிகள். கோவைகளைப் பெயரிட்டு அதற்குரியலாச்சினுள் வைப்பதன் மூலம் தேவைப்படும் போது இலகுவாக அதனைப் பெறவழி செய்வார். கணக்குகள் ஏதும் பதிவு செய்யப்படத் தவறினால் அதனை இரவு முழுவதும் யோசித்து அதிகாலை 4.00 மணிக்கெல்லாம் கடிதம், கணக்குகள் எழுத அலுவலகத்திற்கு வந்துவிடுவார்.

### சுவாமிகள் பிள்ளைகளுடன் நடந்தவிதம்

படிப்பு, உடுப்பு. சமையல். தோட்டவேலை என்று ஒவ்வொரு செயற்பாடுகளையும் பிரித்து இல்லத்தின் பெரிய மாணவர்களுக்குப் பொறுப்புக் கொடுத்து செயற்படுத்துவார். அரசாங்கத்தில் எப்படி மந்திரிசபையோஅதன்படியே இங்கும் துறைசார்ந்து பணியாற்றப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று வலது குறைந்தோர், அனாதரவானோர் சிறுவர் நன்நடத்தை அதிகாரிகளூடாக இல்லத்தில் சேர்க்கப்படுவர். இவர்களை சுவாமிகள் தனது பிள்ளைகளாகவே நினைத்து பேணிவருவார்.

இதில் குறிப்பிடத்தக்க செல்லா எனப்படும் செல்வராசா என்பவர் சுமார் 2 வயதில் சேர்க்கப்பட்டார். சிங்களம் மட்டுமே தெரியும். சுவாமிகள் தனது மடியில் அமர்த்தி தனக்குத் தெரிந்த சிங்களத்தில் பேசுவார்.

சுவாமிகள் சிறுபராயத்தில் குடுகுடும்பை சாத்திரியிடம் சாத்திரம் கேட்டபோது நீ எதிர்காலத்தில் துறவியாவாய் என்றாராம். இதன் அடிப்படையும் சுவாமிகள் துறவு பெறக் காரணமாய் இருந்திருக்கலாம். குழந்தைகள் எவரையும் அநாதை எனக்கூறக்கூடாது என்றும் அவர்கள் குருதேவரைத் தந்தையாகவும், அன்னையாரைத் தாயாகவும் கொள்ளும் பாக்கியம் பெற்றவர்கள் என்பார்.

உறுதுணையாளர். தில்லைநாதண்ணன், அன்பர் க. நடராஜா, சிவயோகண்ணன், ஜெயராஜா, பின்னாளில் இராஜகோபால், மண்டூர்பத்மநாதன் அண்ணன், தங்கவடிவேல், நமசிவாயம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சுவாமிகள் நிதிசேகரிப்பில் மிகவும் கடுமையானவர். 5/- போன்ற பெரிய தொகைகள் போடக்கூடாது என்பார். ரூபா 2/-, ரூபா1/- போதுமானது. ஏனெனில் சிறிய தொகையாய் இருந்தால் அவர்களது குடும்பங் களைப் பெரிதும் பாதிக்காது என்பார். சேவை அடிப்படையிலேயே இவர்களின் உதவி அமைந்தது.

'ஜீவசேவையே சிவபூசை',நீ பணித்த செய்கையினைச் செய்வேன் என்பதே தாரக மந்திரமாகக் கொண்டு சேவை புரிந்தார். புதிதாக சந்நியாசிகள் மட்டக்களப்பிற்கு வருகை தரும்போது கல்லடி உப்போடை மணிக்கூட்டுச் சந்தியிலிருந்து மேளதாளங்களுடன் வர வேற்கப்பட்டு உபசரிக்கப்படுவதோடு, ஆசிவழங்கல் என்பன இடம்பெறும்.

இராமகிருஷ்ண மிஷன் பழைய மாணவர்களது ஒத்துழைப்புடன் மண்டூர், காரைதீவு, அக்கரைப்பற்று, களுவாஞ்சிக்குடி, களுதாவளை, குருக்கள்மடம், ஆரையம்பதி, சித்தாண்டி, வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களில் இராமகிருஷ்ண ஜெயந்திகள், முத்திருவர் ஊர்வலம், பொதுக்கூட்டம் , ஆன்மீக புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் என்பனவும் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகளை முன்னின்று ஆரம்பித்து செயற்படுத்திமுடிப்பது பழையமாணவர்களே.

நடராஜானந்தா காலத்தில் சுவாமிகளது தகப்பனார் ரூ100,000/- (அப்போது மிகப் பெரியதொகை) காசாகக் கொடுத்து ஜீவரெத்தினத்தை இல்லத்தில் சேர்த்தார். ஆங்கில ஆசிரியரானார். சுவாமிகளுக்கு சந்நியாசதீட்சை சுவாமி விரஜானந்தரால் வழங்கப் பட்டது.

நாட்டறம்பள்ளி, சேலம், ஊட்டி ஆகிய இடங்களில் பணியாற்றினார். சுவாமி நிக்ஷ்கமானந்தா நாட்டறப்பள்ளியில் தலைவராயிருந்த போது சுவாமிகள் நிதிசேகரிப்பில் ஈடுபட்டார். அங்குபெற்ற பயிற்சியையே சுவாமிகள் இங்கு பயன்படுத்தி இந்த இல்லங் களைக் கட்டியெழுப்பினார். சுவாமிகள் நிதிசேகரிப்பில் காட்டிய ஆர்வத்தை மெச்சி 2மாதம் தலயாத்திரைக்கு ஏற்பாடுசெய்து கொடுத்தாராம். மேலும் ஒருசந்தர்ப்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஷ்கமானந்தர் இலங்கைக்கு வந்திருந்தார். அப்போது சுவாமிகள் அவரை நன்கு வரவேற்று உபசரித்தார். சுவாமி பிரேமாத்மானந்தா, சுவாமிசர்வாதிதானந்தா அவர்களு டனும் சுவாமி பணியாற்றினார்.

**உறுகாமம் காணி**

26 ஏக்கரைப் பொறுப்பேற்றபொழுது அது வன இலாகாவுக்குரியது. காட்டினைத் துப்பரவு செய்வதற்கு குணநாயகம், அன்பர் நடராஜா, சிவயோகண்ணன், ஆகியோரையும் நடேசன், தம்பிராஜா அண்ணன் ஆகியோரையும் இல்லத்தின் பெரிய மாணவர்களையும் ஈடுபடுத்தினர் இதன் போது என்ற பட்டினிஒழிப்புச் சபையூடாக, ஒரு ரக்ரர், பசு மாடுகள்(மாட்டுப்பண்ணை), நீர்ப்பம்பி வசதி, போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன.

அத்தோடு இராமகிருஷ்ண குளம் என்ற ஒரு தனியான குளமும் எமக்கு பொறியிலாளர் குணநாயகம் ஐயாவின் உறுதிதுணையினால் நீர்ப்பாசனத் திணைக்களத்திலிருந்து பெற்றுத் தரப்பட்டது.

சிறுபோகம் 15ஏக்கர் செய்யலாம். பிரச்சினைகாரணமாக சிலகாலம் செய்கை பண்ணப்படாது குத்தகைக்கு விடப்பட்டது. தற்போது மீண்டும் செய்கை பண்ணுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

**நிதி [மாதாந்தம் சேகரிப்பு]**

ஒவ்வொரு மாதமும் ஒரு தினம் ஒரு பிரதேசத்திற்கு ஒதுக்கப்பட்டு அங்கு சென்று சிறு தொகையை மாதாந்தம் வசூலிப்போம். இராமகிருஷ்ண மிஷன் அன்பர்கள், பக்தர்கள், பழையமாணவர்கள் ஆகிய எல்லோரும் இந்நிதிசேகரிப்பில் ஈடுபடுவோம். இவ்வாறு சேகரித்த நிதியினாலேயே இன்று இந்த இல்லங்கள் கட்டியெழுப்பப்பட்டன.

நிதியன்பளிப்பு எடுக்கும் ஒவ்வொரு சிறுதொகைக்கும் தனித்தனி பற்றுச்சீட்டு உண்டு. யாராவது 5/- தந்தால் மறுத்து விடுவார் நீங்கள் 2/- தந்தால் போதும். ஆனால் மாதாமாதம் 2/- தரவேண்டும் என்பார்.

சுவாமிகள் அன்பர்கள், பக்தர்கள், நிதிஉதவி நல்குபவர்களுக்கு கடிதம் எழுதுவது மிகவும் அலாதியானது. குடும்பமாயின் அக்குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் பெயர் குறிப்பிட்டு நலம் விசாரிப்பார். அவர்களது பிரச்சினை, வேலை, நோய், மற்றும் இன்னோரன்ன காரணிகளையும் குறிப்பிட்டு நலம் விசாரிப்பார். இதனால் சுவாமிகளுறவும் அவர்களுக்கு ஒரு அன்பான குடும்பம் போன்றது. சுவாமிகளின் இப்பண்பேஅவர்களை சுவாமிகள் பால் ஈர்த்தெடுத்தது. அவர்கள் தங்களால் முடிந்தமட்டும் உதவிபுரிந்தனர்.

**சந்தானம் ஐயா**

திரு.வி.கணபதிப்பிள்ளை ஆசிரியர், தியாகராஜா சேர், காசுபதிநடராஜா, அன்பர் நடராஜா, திரு.தில்லைநாதண்ணன், நமசிவாயம், சாம்பசிவம்ஐயா, தங்கவடிவேல், ஜெயராஜா ஆகியோரும் சுவாமிகளுக்கு பக்கபலமாய் இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பத்மநாதன் சேர்**

கொட்டாஞ்சேனையில் ஆங்கில ஆசிரியர், பின்னர் நைஜீரியாவில் ஆங்கில ஆசிரியர், பின்னர் இலங்கை வர முன்னர் இங்கு இராமகிருஷ்ண மிஷனுக்கு வந்து சேவை செய்ய சுவாமிகளிடன் அனுமதி கேட்டுவந்தார். கடினஉழைப்பு, தொடர்ச்சியான வேலை, சுறு சுறுப்பு, மிகுந்த நேர்த்தி, சுவாமிகளுக்கு அலுவலக விடயம் பிள்ளைகளைப் பார்ப்பதில் வலதுகரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவிய சிற்பக்கலை நிபுணர்
## காசுபதி கிருஷ்ணபிள்ளை அவர்களுடனான நேர்காணல்

*'சிற்பக்கடலுக்குள் சிறப்புப்பணிக்காக மூழ்கி*
*முக்குளித்த வித்தகக் கலைஞன்*
*ஓவியக்கலையின் உச்சத்தில் நின்றாலும்*
*தலைக்கனம் காட்டாத எம் கிராமத்துஓவியன்*
*சிலைகட்கு உயிரூட்டிய அதிசய சிற்பாச்சாரி...........'*

என்று தொடர்கிறது சிற்பியின் புகழை விதந்துரைக்கும் கோட்டைக் கல்லாறு மகா வித்தியாலயத்தினால் வழங்கப்பட்ட பாராட்டுப்பத்திரம்.

ஆம், இந்த அதிசயசிற்பியின் அபாரதிறமைக்கு முன்னால் எமது ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஆன்மீகத் துறவிகளின் ஆசியும் வழிகாட்டலுமே அடிநாதமாய் இருந்ததை அண்ணன் திரு.பாக்கியராசாஅவர்கள் கூறக்கேட்டதும் அது பற்றிய மேலதிக தகவல்களைப் பெறவேண்டி அவரது வீட்டிற்குச் சென்றோம். சிற்பியின் வீட்டிற்குச்சென்று அங்கு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் சிலைகளின் அமைப்பையும் உயிரோட்டத்தையும் கண்டு வியந்து நின்றோம். பின்னர் கலைநயத்துடன் கட்டப்பட்டு பூர்த்தியாகிக் கொண்டிருக்கும் அவரது வீட்டின்முன் வராந்தாவிலமர்ந்து உரையாடலானோம்.

**தங்களுக்கு சுவாமியுடனான தொடர்பு முதன்முதல் எவ்வாறு எப்போது ஏற்பட்டது?**

எனது தொடர்பு சுவாமி நடராஜானந்தாவுடன் தொடங்குகின்றது. நான் அக்காலத்தில் சிவாநத்தா வித்தியாலய மாணவன். சிவானந்தா விடுதியில் மாணவனாக இருந்தபோது சுவாமி நடராஜானந்தா பொறுப்பாளர், ஜீவரெட்ணம் விறதர் விடுதி மேற் பார்வையாளர்.

அங்கிருந்து கல்விகற்று வெளியேறிய பின்னர் தொழில்தேடும் படலம் ஆரம்பமானது. அப்போது எனது நண்பரும் உறவினருமான கு. சச்சிதாநந்தம் அவர்கள் கூறினார் என்னைச் சுவாமி நடராஜானந்தாவைச் சந்திக்கும் படியும் அவர் ஏதாவது வழி கூறுவார் என்றும்.

யார் இந்த S. சச்சிதாநந்தம்? பாக்கியராசாஅண்ணன் கூறுகின்றார். அப்போது சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த புலமைப்பரிசில் ஒன்று வழங்கப்பட்டு வந்தது. இதில் க.பொ. தா சாதாரணதரத்தில் 08 பாடங்களும் சித்திபெற்று சைவசமயத்தில் விசேட சித்தியும் பெறும் மாணவருக்கு தங்கப்பதக்கமும் உயர்தரம் படிக்க பணமும் வழங்கப்படும். தற்போது கனடாவில் வசிக்கும் எஸ்.பி.சச்சிதானந்தத்திற்கு அப்போது இந்த புலமைப் பரிசில் கிடைத்திருந்தது. அவரே இவருக்கு இவ்வாறு ஆலோசனை கூறியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் அவரைக்கூட்டிக் கொண்டு சுவாமி நடராஜானந்தாவைச் சந்தித்தேன். உண்மையில் நான் அவருடன் சென்றபோது சுவாமிகள் நான் அங்கிருந்து படித்ததை மறந்திருக்கக் கூடும் என்பதால் தான். ஆனால் அங்கு சென்றதும் சுவாமிகள் என்னை அடையாளம் கண்டு கொண்டார் எனது தோளில்த்தட்டி 'நீ எனது பிள்ளைதானே, இவனுக்கு எதற்கு அறிமுகம்' என்றார். பின்னர் எனது பிரச்சனையைக் கூறியதும் சரிசரி இங்கு இரு சந்தர்ப்பம் வரும் போது பார்ப்போம் என்றார்.அப்போது சுவாமிகள் சற்று நோய்வாய்ப்பட்டிருந்தார். அதே நேரம் சுவாமி ஜீவனாநந்தா துறவுப்பட்டம் ஏற்று மட்டக்களப்பு வந்திருந்தார். அப்போது சுவாமி ஜீவனாநந்தாவிடம் சுவாமி நடராஜானந்தா கூறினார் இவனுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று. அதற்கு சுவாமிகளும் 'ஓம் செய்வோமே' என்றார்.

இதனைத் தொடர்ந்து நான் சுவாமிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டு சிவபுரியிலேயே வசிக்கலானேன்.

## சுவாமி நடராஜானந்தாவின் ஞானப்பார்வை

நான் பாடசாலையில் படிக்கும் போது நன்றாக சித்திரம் வரைவேன். இந்தக்கலை என்னோடு தொடர்ந்திருந்தது. ஒருநாள் சுவாமி நடராஜானந்தாவின் படத்தை வரைந்து அவரிடம் காட்டினேன். அதனைப் பார்த்ததுதான்தாமதம் சுவாமிகள் மிகுந்த சந்தோசத்துடன் என்னைக்கட்டித் தழுவினார். மிகுந்த ஆச்சரியமடைந்தார். வெகுவாகப் புகழ்ந்தார்.அது மட்டுமே அன்று நடந்தது.

சுவாமிகளின் ஞானக்கண் வேலைசெய்திருக்க வேண்டும். என்னிடம் காணப்பட்ட ஒரு சிறுதிறமையின் ஆழத்தைச் சுவாமிகள் புரிந்திருக்க வேண்டும். சுவாமி விவேகானந்தர் சொல்லியிருந்தார். 'ஒவ்வொருவரிடத்திலுமுள்ள ஆற்றலை வெளிக்கொணர்வதே உண்மையான கல்வியாகும்' இந்த உண்மையை சுவாமிகளின் நடவடிக்கைகள் பிரதிபலித்தன. எனது எதிர்காலத்தை தனது ஆத்மீகஞானத்தால் அளந்துவிட்டார் என்றே நினைக்கின்றேன்.

*தந்தை மகற்காற்றும் உதவி அவயத்து*
*முந்தியிருப்பச்செயல் - திருக்குறள்*

பின்பு ஒருநாள் இந்தியாவிலிருந்து வந்த அன்பர் ஒருவரிடம் சுவாமிகள் என்னை அறிமுகம் செய்து இவரை இந்தியாவிற்கு அனுப்பி ஓவியம் சிற்பக்கலை படிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டதும் அவரும் மறுபேச்சின்றி ஏற்றுக்கொண்டார். பின்னர் அப்போது மட்டக்களப்பில் பிரபல நகைத்தொழில் புரியும் திருவாளர் வேதாரணியம் அவர்களுடன் இந்தியா புறப்பட ஏற்பாடாயிற்று.

## இந்தியாவில் கல்வி

இந்தியாவில் சென்னையிலுள்ள பாலக்காடு என்னுமிடத்திலுள்ள சிற்பக்கலை நிலையத்தில்ச் சேர்ந்து கலை பயின்றேன். எனது ஆச்சாரியாரின் பெயர் பாலு என்பது. போரதீவு காளிகோயிலுக்கு சிற்பவேலை செய்யவென்று வந்து இனப்பிரச்சினையின் போது சுடப்பட்டு இறந்த ஆச்சாரிபாண்டியனும் என் கூடக்கலை பயின்றவரே. அவர் இங்கிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அடிக்கடி என்னிடம் வந்து சென்றார். பின்னர் கற்று முடிந்ததும் நான் நாடு திரும்பி விட்டேன்.

சிற்பம் வடித்தல், கோயில் கட்டடக்கலை ஆகியவற்றில் போதிய தேர்ச்சியுடனும் அனுபவத்துடனும் இன்று இங்கு எனது தொழிலை வெகுசிறப்பாகச் செய்கின்றேன். நான் மற்றவர்களைப் போன்று கல்வி கற்றுத் தொழில் புரியாவிட்டாலும் சுவாமிகளால் எனக்கென வகுத்தளிக்கப்பட்ட தொழிலாக இதனைக் கருதி மிகுந்த பெருமையுடனும் ஆர்வத்துடனும் தொழில் செய்கின்றேன்.போதிய வருமானமும் கிடைக்கின்றது.எனது உழைப்பிற்குக் கூலிபெறும் போதெல்லாம் சுவாமிகள் இருவலையும் நினைத்துக் கொள்வேன் கலாபூஷண விருது 1998ல் கிடைத்தது. மேலும் பாராட்டுகள், பொன்னாடைகள் போதியளவு கிடைக்கப் பெற்றுள்ளன. அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் சுவாமிகளை நினைந்து அழுததுமுண்டு.

இன்று எனது இக்கலையை எனது இரு பிள்ளைகளும் என்னிலும் சிறப்பாகப் பயின்று தொழில் புரிகின்றார்கள்.

'என்னிடமிருந்த ஓவியசிற்பத் திறன் எனும் சிறுபொறியை தனது ஞானக்கண்ணால் கண்டு அப்பொறியைப் பெருந்தீயாக்கிய அவ்விருமகான்களுடைய உருவங்களையும் சிலையாக்கிய தன் மூலம் நான் கற்றகலைக்கு பெருமை சேர்த்ததாக எண்ணி எண்ணி உருகுகின்றேன்'.

*'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை*
*எந்நோற்றான் கொல் எனும் சொல்'* - *திருக்குறள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “வரம்பை உயர்த்தி வரம் பெற்றேன்”

### இராமகிருஷ்ண குருகுலப் பழைய மாணவர் நடேசன் அவர்களுடனான நேர்காணல்

உழவால் உடலை வருத்தி மிஷனுக்கு தன் உணர்வுப் பொலியை பொலிய வைத்தவர் நடேசன். இவரை தரிசனத்திலே தரிசிக்க சென்றோம். சேவையாளர்கள் கண்ணிருந்தும் குருடராய் வாழும் உலகில் நெல்மணிகளை காத்துதந்த நடேசன் இன்று விழிப்புலனற்ற சிறார்களை கண்ணின் மணியாக எண்ணி சேவை செய்கிறார். இவர் சுவாமி நடராஜானந் தரது காலத்தில் மிஷனுக்கு 1965ல் வந்தவர். பண்டிதர் பூபாலபிள்ளை, அன்பர் நடராஜா போன்றோரது அனுசரணையோடு இல்லத்தில் சேர்க்கப்பட்டார். தரிசனத்திற்குள் நுழையும் போது வாங்க வாங்க என்று நடேசனே எம்மை வரவேற்று இருக்கை ஈர்ந்தார். உறுகாம வயலுக்கு நாம் சுவாமியோடு செல்லும்போதெல்லாம் எப்படி அரவணைத்து வரவேற் பாரோ அதே பண்பாடு மாறாதது கண்டு ஆனந்தமே. மிஷனின் இல்லக் கட்டுக்கோப்பினில் விளைந்தவரல்லவா நடேசன். வளைந்து கொடுக்கும் பண்பாளரான நடேசனிடம் பெரிய சுவாமியோடு எவ்வளவு காலம் பழகியுள்ளீர்கள் எனக்கேட்ட போது சுவாமி நடராஜானந்தாஜீயின் காலம் முதல் பெரிய சுவாமியைதெரியும். அவர்தான் எம்மை பார்த்துக் கொள்ளும் பிரம்மச்சாரியாக அப்போது இருந்தார். அவர் அப்பொழுதே எமக்குரிய ஒழுக்கம், கடமை, படிப்பு விடயத்தில் மிக கண்டிப்பாக இருந்தார். எனக் கெல்லாம் அவரைக் கண்டால் பயம்தான். ஆனால் மிக அன்பானவர். அவரை சிறிது காலத்தின்பின் ஜீவனாநந்த சுவாமியாக கண்டேன்.

சுவாமியின் முதற்சந்திப்பு எப்படி இருந்தது. அதையேன் கேக்கிறீங்க சுவாமியாக வந்த அன்று பிள்ளைகலெல்லாம் முத்துக்குமார்(சுவாமி அஜராத்மானந்தஜீ), சூரியகுமார் போன்றோரும் நின்றனர். வரிசையாக வந்து சுவாமியை வணங்கும் போது என்னைக் கண்டதுமே கச்சையை எலி கொண்டு போயிற்றா இருக்கா நடேசன் என்றதுமே எல்லாரும் சிரித்தோம். அந்த காலத்தில் லீவு நாட்களில் வேலை செய்யும் போது கச்சையோடுதான் நிற்போம். அது ஒரு கால இல்ல வாழ்வு மனசு மாறா சந்தோசம் அதிலும் என் பேரை மறக்காது இருந்ததே நான் செய்த பாக்கியம்.

**இளவயது நினைவில் நீங்காத சம்பவம் உண்டா?**

**நடேசன்:–** (கண்களை துடைத்தபடி) நான் பல மாணவருடன் சேர்ந்து திரிவதுண்டு. எங்களை ‘மந்தைக்கூட்டம், ஒருநாளும் ஒன்றையொன்று விலகாது’ என்பார். ஒருநாள் கூட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பேர் குற்றம் செய்தனர். குற்ற விசாரணையில் குழுவிலே சம்பந்தப்படாத எனக்கும் அடி விழுந்துட்டு; சிவபுரிக் குளத்தை மாறி மாறி ஓடினேன். அந்த உடம்போடு சுவாமியும் ஓடி ஓடி அடேய் வெட்டுக் காட்டிரியா வேண்டுவாய் என தந்தார்; நல்லா வேண்டினேன். சுவாமி அணைத்தபடி டேய் நடேசா நீ இங்க இருக்கக்கூடாது நீயும் போடா பெட்டியை தூக்கிக் கொண்டு என்று கூறியதுதான் தாமதம் சுவாமி என்று கதறினேன் கதறியபடியே காலில் விழுந்து கட்டிப்பிடித்து சுவாமி நான் எங்கே போக உங்களைத் தவிர எனக்கு யாருள்ளார். அம்மாவும் நீங்க அப்பாவும் நீங்க எல்லாமே நீங்கதானே உண்மையாக நான் ஏது பிழையும் செய்யல்ல அடியுங்க அடியுங்க ஆனால் என்னை போகச் சொல்லாதீங்க என அழுதேன்.

சுவாமி என் தோழைப்பிடித்து உயர்த்தினார். தப்பான கூட்டம் தடியடி தரும் என்றார். கோபம் தணிந்த அன்றைய அன்பு, அன்றிலிருந்து அவரது இறுதி மூச்சுவரை என்மேல் இருந்தது.

**இறுதி வரை என்று கூறுகிறீர்கள் சுவாமியின் இறுதிக்காலத்தில் நீங்கள் அருகில் இருந்தீர்களா?**

**நடேசன்:-** மிஷனின் தொண்டில் ஒரு அங்கமே தரிசணம் என்பது என் எண்ணம் மிஷனுக் கும் தரிசனத்துக்கும் இடையில் தூரம்பெரிதில்லையே, அதனால் சுவாமியின் கட்டளைப்படி அடிக்கடி சுவாமிஜீயை வந்து பார்ப்பேன். கொஸ்பிரலில் சுவாமி படுத்துள்ளார் நான் அவரைப்பார்க்கப் போனேன் வெளியே நின்றவர் ஒருவர் போங்க கதை கொடுக்கா திங்க என்று சொல்லியபடி பின்னே வந்தார். என்னைக் கண்டதுமே சுவாமிஜீயே (அழத் தொடங்கி விட்டார்) டேய் நடேசா வாடா வாடா என்று கையால் என்னைப் பிடித்து டேய் டேய் படுக்கையிலும் நான் போவனென்றாடா நினைச்சு நினைச்சழுகிறாய் குருதேவருக்கு இன்னும் கொஞ்சம் பணி இருக்கிடா என்றவர் மறுநாள் சமாதியாகிவிட்டார். எனக்கூறிய நடேசனின் அழுகையை நிறுத்த நெடுநேரமானது. சூரியனும் தன் கடமை முடித்து போய்விட்டார். இருள் நிலத்தைக்கவ்விக் கொண்டது. சுவாமியும் கடன் செய்துபோய் விட்டார் எம்வாழ்விலும் இருள் மூழ்கிவிட்டது.

**உங்களொடு சுவாமி பழகும் போது எத்தகைய உணர்வுடன் வாழ்ந்தீர்கள்?**

**நடேசன்:-** நான் குருதேவரைப் பார்க்கவில்லை அன்னையை காணவில்லை. ஆனால் இருவரையும் ஜீவனாநந்தரிடத்தில் அப்பாவும் அம்மாவுமாகக் கண்டேன். இல்லப் பிள்ளைகளிடையே பல பிரச்சினைகளின் போது பல முறை பிள்ளைகளுக்காக உறவுகள் வருவார்கள் சுவாமிஜீயிடம் பல கேள்விகளை விடுவார்கள் அப்போதெல்லாம் இவனை (நடேசனை) நான் என்ன செய்தாலும் கேட்பாரில்லை பிள்ளையை குரு தேவரிடமே கொடுத்தவிட்டோம் எனும் உணர்வோடு இல்லை. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பிள்ளை என்ற உணர்வோடுதான் வருகிறீர்கள். இங்குள்ள பிள்ளைகள் எல்லாம் குரு தேவரின் பிள்ளைகள் நீதாண்டா என் பிள்ளை என்று கூறுவதை இனியார் கூறுவார். அந்த அளவிற்கு இல்லத்தில் வளர்ந்த பிள்ளைகள் ஒவ்வொருவருடைய குண இயல்பு அறிந்து ஸ்ரீராமகிருஷ்ணருக்குத்தான் செய்யும் ஒப்பற்ற பூசை என்ற உள்ளுணர்வோடு கண்ணிமை காப்பது போல் காத்து வளர்த்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்ணிமை போல் வளர்த்தவர் என்று கூறினீர்கள் உங்கள் வாழ்வில் ஏதேனும் சம்பவம் ஞாபகத்தில் உண்டா?**

**நடேசன்:-** ஞாபகம் என்று நீங்கள் கூறும் போதுதான் என் நிலையை நான் உணர்கிறேன். உண்மையில் 1974ல் எனக்கு மூளைக்காச்சல் வந்தது. அதன் பின் எனக்கு ஞாபகசக்தி, படிக்கும் திறன், எதையும் விளங்காத தன்மை ஏற்பட்டது. ஆனால் குருதேவர் அருள் பெரிய சுவாமியின் அன்பான அணைப்பு என்னை இன்று இந்தளவு வாழ வைத்துள்ளது. மூளைக் காச்சலால் நான் பலநாள் ஆஸ்பத்திரியில் இருந்தேன். என்னை அங்கு சேர்த்த நாளிலிருந்து சுகமாகி வரும்வரை தினமும் மதியம், மாலை இரு வேளையும் சுவாமி வருவார். தன்கையால் உணவு ஊட்டியது, நீர்பருக்குவது மட்டுமல்ல ஒரு நாள் இரவு நோயின் கொடூரம் என்னைக் கட்டிலில் இருந்து கீழ் விழுத்திவிட்டது தலையடிபட்டது. வலக்கை தூக்க முடியாது, நாக்கு இழுத்துவிட்டது, பேச முடியாத நிலை இதைக்கண்ட சுவாமி என்னைக் கண்டால் சிரிப்பானே. என்ன செய்ய வேண்டுமென்பானே என்ன நடந்தது என்று பெலத்து கத்தியபடி நமசிவாய அண்ணருடன் வெளியே விரைந்து சென்ற சுவாமிஜீ வைத்திய நிபுணர்களுடன் கலந்து பேசி என்னைக் கவனிக்க ஏற்பாடு செய்தார். அன்றைய நாளிலிருந்து நான் நன்றாக பராமரிக்கப்பட்டேன். உடல் தேறி மிஷனுக்கு வந்தேன். அங்கு நோயாளிகள் தங்கும் அறையில் இருக்கும்போது சுவாமிஜீயும் மற்றவர்களும் எனக்குச் செய்த சேவையை என்னால் மறக்க முடியாது. என்னைத் தாங்கிப் பிடித்து கூட்டிச் சென்று குளிப்பாட்டியதை எந்த பிறவியிலும் நினைக்க நினைக்க அழுகை தான். கதைக்க முடியாத நான் பேச்சிழந்து விட்டேனோ என கலங்கி வாழும்போது ஒரு நாள் சுவாமி குருதேவரை நினை அவருன்னை பேசவைப்பார். ஓம் ஸ்ரீராமகிருஷ்ணா என்றும் ஓம் ஹ்ரீம் ஹ்ருதம் த்வமசலோ என்று சொல்லு என எனக்கு மந்திரம் சொல்லித் தந்தார். நாளாந்தம் மெல்ல மெல்ல சொன்னேன். இந்தளவு இன்று பேசுகிறேன் இது சுவாமி ஜீவானநந்தா எனக்கீந்த வரம்.

**கல்வியில் நீங்கள் கவனம் செலுத்தவில்லையா?**

**நடேசன்:-** இளவயதில் சுவாமி நடராஜானந்தா காலத்தில் என்னப்பா நடேசன் அஞ்சாம் பிள்ளையாக வந்திருக்கிறீயே இன்னும் படிபடி என்று சொல்லுமளவுக்கு நான் இருந் தேன். மூளைக்காச்சலின் பின் என்தரம் குறைந்தவிட்டது ஆனாலும் க.பொ.த சாதாரணம் வரை படித்துள்ளேன். இந்த காலகட்டத்தில் தான் உறுகாமம் வயலை சுவாமியேற்றிருந்தார். பலரை சிவயோகமண்ணனுக்கு உதவியாக விடுவதற்கு சுவாமி கேட்டுப்பார்த்தார் அப்போது அவ்வேலையினை செய்ய யாரும்விரும்பவில்லை. ஒரு நாள் நானாகவே சுவாமிஜியிம் வயலுக்கு நான் நிரந்தரமாக இருக்க விரும்புகிறேன் என்றேன். அளவற்ற ஆனந்தமடைந்த சுவாமி நீயா வந்தது எனக்கு சந்தோசம்தான் ஆனால் உன்னை விடுவதற்கு எனக்கு முடியவில்லை உன் உடல்நிலை ஒத்து வருமா என்று யோசிக்கிறேன் சுவாமிஜீ நீங்கள் எனக்கு துணையாக உள்ள போது சிவயோகமண்ணனின் அரவணைப்பு இருக்கும் போது என் உடலைப்பற்றி நான் கவலைப்படவில்லை காலையில் அண்ணனோடு போகப்போகிறேன் என்றேன். சுவாமிஜீ மௌனமாக இருந்தார். அடுத்தநாள் காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவயோகமண்ணருடன் புறப்பட்டு உறுகாமம் சென்றேன். அன்று முதல் 23வருடங்களுக்கு மேலா எனது வயல் என்ற உணர்வுடன் தம்பிராசா அண்ணரும் நானும் பாடுபட்டு உழைத்தோம் உழைப்புக்கான விளைவும் கண்டேன் பலமுறை சுவாமிஜீ நீதாண்டா குருதேவர் தந்த என் பிள்ளை என்பார். எனக்கு எது விருப்பமோ அவற்றை வேண்டி வரும் சுவாமிஜீ மற்றவர்க்கு கொடுப்பதில் இரண்டு மடங்கு கூடுதலாகவே தருவதை இப்பொழுது நினைக்கின்றேன். விஷேடகவனிப்பு என்று எண்ணாதீர்கள் நான் செய்த நல்வினையின் பயனே ஜீவனாநந்தரின் பாதநிழல்.

**வயல் வேலையின் போது சுவாமிஜீயின் பங்கு எப்படி இருந்தது?**

**நடேசன்:-** அதிகாலை 4மணிக்கு பஸ் ஏறி வருவார் சில வேளைகளில் அனேகமாக மாலை பட்டவுடன் கரடியனாறுவரை நடந்தே சென்றமை அவரது கர்மயோகப்பணிகளில் உச்சம் எனலாம். வெட்டு நடக்கும்போது போடி மார் போல குடையினைப்பிடித்தபடி நிற்கவில்லை. வெட்டிய கதிர்களை பரவுவது. கட்டுக்கட்டும்போது கயிறு பிடிப்பதும் வெட்டுக்காரருக்கு தண்ணீர் கொடுப்பதும் எம்மை வேலை செய்ய ஊக்கமளித்தது, தொழிலாளர்களின் உள்ளம் கோணாமல் நடந்தார். ஒவ்வொரு வேலையையும் ராம கிருஷ்ணா ராமகிருஷ்ணா என்றே அர்ப்பணித்ததை மறக்க முடியுமா?

**உறுகாம வயலில் போர்வைத்து சூடடித்த உங்களை இலங்கையின் போர்க்காலம் ஏதாவது பாதிப்பை தந்ததா?**

**நடேசன்:-** நான் அது பற்றி சொல்ல நினைக்கும் போதே நீங்களாக கேட்டது மிக்க மகிழ்ச்சி.

ஒரு நாள் வயல் பகுதியை ஆமியும் விஷேட அதிரடிப்படையும் சூழ்ந்து கொண்டனர். நான் மட்டுமே அன்று எம்வயலில் இருந்தேன். எமது வயலில் இருந்தே நாலாபக்கமும் படைகளை சோதனைக்கு சுற்றி வளைக்க அனுப்பப்பட்டனர். சுவாமி சுவாமி குருதேவா குருதேவா என்று என் மனம் குமுறியது. நடப்பது நடக்கட்டும் என்றிருந்த வேளை என்னைக் கூப்பிட்டு இரண்டுகைகளையும் பின்னுக்குக் கட்டி பெரிய றக்கில் ஏற்றப் பட்டேன். வயலுக்கு காலையில் வந்த தம்பிராசா மறிபட்டு வயலுக்கு மதியத்தின்பின் வந்து நான் பிடிபட்டதை அறிந்து சுவாமிஜியிடம் செய்தி கூறப்பட்டது. சுவாமிஜீ துடியாய் துடித்தாராம். ஐயோ பாவம் என்பிள்ளையை என்ன செய்வார்களோ எங்கே கொண்டு போனார்களோ அடிப்பார்களோ அவன் சுகயீனப்பட்டவன் தாங்கமாட்டானே குருதேவா குருதேவா எனக் கலங்கினாராம். உடனே உரியவர்களோடு தொடர்பு கொண்டு நான் இருக்கும் இடத்தை அறிந்து கொண்டார் நான் இருக்கிறேன் என்ற செய்தி அறியும் வரை ஒரு சொட்டுத்தண்ணீர்கூட பருகவில்லையென்றால் என்மீது ஜீவனாநந்தர் வைத்த கருணை எதென்று சொல்வேன். வானோலிமூலம் சுவாமி என்பெயர்கூறி செய்தி சொன்னாரென்பது பாதர் சந்திரா மூலம் பின் அறிந்த கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்பு என்ன நடந்தது?**

**நடேசன்:-** பிறகென்ன விடுவிக்கப்பட்டு மிஷனுக்கு வந்து நான்கு நாட்களில் மஞ்சக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டேன். பயம் படைகளின் கொடூரமும் நோயாளனாக்கியது தொண்டர் தங்கவடிவேல், ஜெகநாதண்ணர் இருவரும் என்னை டாக்டர் அமரசிங்கம் அவர்களிடம் கொண்டு சென்றனர். எனது நிலை படுமோசமெனவும் தான் வைத்தியம் செய்ய இயலாது பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லுமாறு கூறிவிட்டார். நோயின் இறுதிக்கட்டம் எனக் கூறியபோது செய்வதறியாது திகைத்த தங்கவடிவேல் அண்ணன் எனக்கு ஆறுதல் சொல்லி விட்டு சுவாமிஜீயை அழைத்து வந்தார் வரும் போது கையில் சிறிய பொட்டகம். எல்லா வருத்தமும் உனக்குத்தானாடா வரனும் குருதேவா என்று ராமகிருஷ்ணா என்றும் பலமுறை கூறி பொட்டகத்தை விரித்து விபூதியை என் நெற்றி யிலும் உடல் முழவதும் பூசினார். நீங்களே மருந்து கொடுங்கள் அவனுக்கு ஒன்றும் நடவாது. முழுக்க முழுக்க அவனுக்கு நானே பொறுப்பு அவனுக்கு தாய்தந்தையும் நானே என்றார் இது கேட்டு வருத்த நிலையிலும் சுவாமிஜி என்று கதறினேன் என்தலை தடவி பயப்படாதே உனக்கு ஒன்றும் வராது என்று கூறினார். வருத்தத்தில் உச்ச நிலை மாறும்வரை இரண்டு நாட்கள் என்கட்டிலருகில் இருந்தாரென்றால் பாருங்களேன். இப்படி இப்போ யார் இருப்பார் சந்திர மண்டலத்திலிருந்து ஜீனாநந்தா போல ஒரு சாமி இங்கு வரமுடியாது சுவாமி ஜீகளாலேயே வாழ்ந்தேன் வாழ்கிறேன். இது சத்தியம்.

**தரிசனத்தில் கடமையில் நீங்கள் சேர்ந்தது எப்படி?**

நாட்டின் குழப்பநிலை வயலில் வாழ முடியாது மிஷனில் வந்து தொண்டாற்றினேன் என்னை தரிசனத்திற்கு சேவை செய்ய அழைத்தனர் சுவாமிஜி பதில் எதையும் சொல்ல வில்லை பலமுறை தரிசன பேச்செடுக்கும் போதெல்லாம் வேறு எதையோ பேசி என்னை திசை திருப்பும் சுவாமியிடம் ஒரு நாள் இரவு தரிசணம் செல்ல அனுமதி தரமாட்டீர்களா என்றேன். நான் உன்னை இங்கிருந்து போ என்று சொல்லமாட்டேன் என்றதும் விழுந்து கும்பிட்டுக் கேட்க முனைந்தேன் பாதத்தை தர மறுத்து திரும்பி அவரது சன்னியாச குருவின் படத்தை நோக்கி கும்பிட்டபடிநின்றது என்னை அழவைத்தது. எப்படியடா நடேசா உன்னை அனுப்புவது என்னிலும் மேலாக உணவுக்காக மிஷனுக்கு உழைத்தவன் நீ, உன்னை போ என்று சொல்ல என்னால் முடியாது என்றார். அருகில் நின்ற தத்பாஷானந்தாஜீ கூறினார். மன்னிக்க வேண்டும் சுவாமிஜீ தரிசனத்தில் இருப்பதும் நம் பிள்ளைகள்தானே, இங்குள்ளவர்களும் நம்பிள்ளைகள்தான் இங்கு நடேசன் 36வருடம் சேவையாற்றியுள்ளான் அங்கு அவன் சிறிது காலம் சேவைபுரியட்டுமே என்றார். ஜீவனாநந்தர் சொன்னார் சுவாமி நீங்கள் லேசாக சொல்லி விட்டீர்கள் இவன் தன்னையே மிஷனுக்கு ஈந்த பிள்ளை பல இன்னல்பட்டும் அசையாத மனவுணர்வோடு தொண்டாற்றி யவன் இவனுக்கென்று யாரும் இல்லை இவனை நான் போ என்று அனுப்பினால் குருதேவர் என்று தன் தலையிலே இரண்டு கைகளையும் வைத்தபடி அங்கு சென்றாலும் இரவில் இங்கு வந்த சாப்பிட்டு போ, வாரமொருமுறை என்னோடு இருந்து சாப்பிட வேண்டுமென வெறுப்பான மன நிலையோடு ஒத்துக்கொண்டு சுவாமிகள் உன் கழுத்தில் கட்டிய காசிக்கயிறு அறுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதா என்று கேட்டார். அது எப்பவோ அறுந்து போயிற்று என்றேன். உண்மையில் அந்தக் கயிறு சுவாமி கட்டிய அடுத்தநாள் என்னுயிரை ஆமியிடம் இருந்து காத்ததை நான் மறக்க முடியுமா?

**சுவாமிஜீயின் சமாதியின் பின் நீங்கள் எப்படி உள்ளீர்கள்?**

அதை எப்படி சொல்வதுதென்று புரியவில்லை மிஷனுக்கு செவ்வாய், வெள்ளி போவேன். குருதேவரை வணங்குவேன். நட்டமரங்களும் கூட்டிப்பெருக்கிய இடங்களுமே என்னை நன்றியோடு பார்த்தன. இப்போதுதான் நான் கடற்கரையிலுள்ள ஒற்றைபனையாக உள்ளேன். நான் மாத்திரம் அல்ல தரிசனப் பிள்ளைகளும் ஆயிரம் சுவாமிகள் வந்தாலும் எம்மை பார்க்க சுவாமி ஜீவனாநந்தாஜீ போல் இனியொருவர் இங்கு வரமாட்டார் சுவாமியை எம்மால் பார்க்க முடியாவிடினும் அவரது புனிதமான கரம் எம்மை தடவி வளர்த்ததை யார் உணர்வார் என்றே கூறுகிறார்கள்.

**மாணவரில்ல வாழ்வில் உங்களுக்கு பிடித்தது என்ன?**

மிஷன் வாழ்க்கை எதுதான் பிடிக்காது எல்லாமே அங்கு வாழும் மாணவரின் எதிர் காலத்தை மையமாக கொண்டது. என்பது என் அசையாத நம்பிக்கை. காலை எழும்புவதி லிருந்து இரவு சகனாவவது சொல்லி முடியும்வரை ஒவ்வொரு நிகழ்வும் எமது எதிர்கால வாழ்க்கைக்கான படிமுறை. அதுமட்டுமல்ல அங்கிருக்கும் போது பல இடங்களில் இருந்து வந்தவர்களின் கிராமியப் பண்பாடு ஒருகுடைக்குகீழ் நடனமாடுவது பேரானந்தம். மிஷனில் நடக்கும் ஜெயந்தி விழாக்களை பழைய மாணவர்களே முன்னின்று நடத்துவர். இந்த வேளையில் வாழ்வோடு வாழ்ந்துவரும் இணைந்து செயற்படும் தன்மையைக்கண்டு இந்த இணைப்பு எந்தக் காலத்திலும் இருக்கவேண்டும் குருதேவா என கண்கலங்கும் சுவாமி ஜீவனாநந்தர் இன்று எம்மிடை இல்லையே.

**நடேசன் நீங்கள் மிகப் பாக்கியசாலி, உங்களை குருதேவர் அருளோடு ஜீவனாநந்த மகராஜ் எந்த வேளையிலும் அருகிலிருந்து காப்பார். பெரிய சுவாமி உங்களுக்குரைத்த ஏதாவது அறிவுரை, ஞாபகம் உண்டா?**

**நடேசன்:-** அடிக்கடி எனக்கு சுவாமிஜீ இரண்டு விடயங்களை சொல்வதுண்டு. அந்த இரண்டையும் இப்போதும் நினைப்பதுண்டு ஒன்று, நில்-சீறு-கடிக்காதே. இரண்டாவது, வரம்பினை உயர்த்திக் கட்டடா நடேசா வரம் தருவாள் இந்த மண்ணவள் சீராய்.

முதலில் சொன்னதை தரிசன வாழ்வில் நிஜமாய் கண்டேன். இங்கு இருக்கும் ஒரு பையன் என்னை அடித்ததாக குற்றம் சுமத்தினான். நிர்வாகம் அதனை நம்பி விசாரனை செய்தது. நானும் சுவாமி சொன்ன நில்லு சீறு கடிக்காதே என்றதை கூறி பையனை திருத்தக் கூறினேன். இன்றும் இதை ரவிசேர் ஜீவனாநந்தர் சொன்னதை வாழ்வில் கடைப்பிடியென்பார். இப்படி எத்தனையோ விடயங்களை வேடிக்கையோடு சொல்லும் சுவாமி கூறிய வரம்பை உயர்த்தி வயலில் வளம் கண்டது போல் சிரத்தையெனும் வரம்பை உயர்த்தி வரம் பெற்று வாழ்கிறேன் வாழும்வரை ஜீவனாநந்தமே என் ஜீவன்.

நன்றி நடேசன் உங்களின் குருபக்தி என்றும் உங்களை காக்கும். வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியநிபுணர் தெட்சணாமூர்த்தி சுந்தரேசன் அவர்களுடனான நேர்காணல்

**தங்களுக்கு சுவாமியுடனான தொடர்பு முதன்முதல் எவ்வாறு, எப்போது ஏற்பட்டது?**

உண்மையில் எனது தொடர்பு குடும்பரீதியானது. எனது பாட்டா (அப்பப்பா) குமாரசாமி ஓவசீயர், பெரியப்பா சாமித்தம்பி மாஸ்ரர், அப்பா தெட்சணாமூர்த்தி ஆகியோர் மூலமானது. எனது சிறுபராயம் முதல் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனுடன் குடும்பத் தொடர்புண்டு.

எனது தனிப்பட்ட தொடர்பு 4 வயதில் வித்தியாரம்பத்துடன் ஆரம்பமானது. சுவாமி களே (ஜீவனாநந்தஜீ) ஏடு தொடக்கினார். அப்போது மாம்பழம் தந்தார். பெரிய புத்தகம் ஒன்றை எனது தலை மேல் தூக்கி வைத்ததாக ஞாபகம்.

அடுத்து எனது 9ஆம் வகுப்புக்களில் இந்தியா சென்றிருந்த போது ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னையார் மற்றும் சுவாமிஜீ பற்றிஅதிகம் வாசிக்கக்கிடைத்தது. அதன் பின்னர் மிஷனுடனான எனது ஈடுபாடும் அதிகமானது.

க.பொ.த(உ.த) ற்குப் பின்னர் சுவாமிகளுடனான நெருக்கம் அதிகமானது. மிஷன் நிர்வாக வேலைகளில் ஈடுபட்டேன், கணக்கீட்டு (Accounts) வேலைகள், புத்தக அலுமாரியை சுவாமிகளுடன் சேர்ந்து அடுக்குதல், கடிதங்கள் எழுதுதல், புத்தகக் கண்காட்சிகள், விற்பனைகளின் போதெல்லாம் காசாளராக (Cashier) கடமை புரிவேன்.

**சுவாமிகளிடம் தங்களை வெகுவாகக் கவர்ந்த பண்புகள் ?**

குழந்தைத்தனம்: சுவாமிகள் மிகுந்த குழந்தைத்தனம் உடையவர். பெரியவரோ சிறியவரோ எவரிடமும் சிறிய விடயங்களில் கூட ஆலோசனை கேட்பார். தனக்கு எதுவுமே தெரியாது என்பது போலத்தான் நடப்பார் குழந்தைகளைப் போன்றே தான் விரும்புபவர்கள் எப்போதும் தன்னிடம் வரவேண்டும் எனவிரும்புவார். சிறுவயது முதல் பெரியவன் ஆனது வரை மிஷனுக்கு நாங்கள் வரவேண்டுமென்று கூறுவார். ஏதாவது சாட்டுச்சொல்லி சுந்தரேசனை வரச்சொல்லுங்கள் என்பார். சில சந்தர்ப்பங்களில் நான் அவசரப்பட்டு சென்று பார்த்தால் அங்கு அப்படி முக்கிய வேலை எதுவும் இருக்காது அப்போது உணர்ந்து கொள்வேன் சுவாமிகள் என்னைப் பார்க்கவே அவ்வாறு அழைத்தார் என்று. நான் அறிந்தவரை என்னிடம் மட்டுமல்ல எல்லோரிடமும் சுவாமிகள் இவ்வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஒவ்வொரு சிறு முயற்சியையும் திறமையையும் வெகுவாக மதிக்கும் பண்பு

எனது கையெழுத்து அழகானது. 'உனது கையெழுத்தைப் போலவே உனது தலையெழுத்தும் இருக்கும்' என்பார்.

நான் மருத்துவத்துறைக்குத் தேர்வு செய்யப்பட்ட பின்னர் மிஷனில் கணக்குப்பகுதி வேலைகளில் உதவிசெய்யும் வேளையில் மிஷனுக்குவரும் பெரியவர்களிடமெல்லாம் இவர் டாக்டருக்குப் படிக்கப்போகின்றார் இங்கு இப்போது கணக்குப்பகுதி வேலைகளில் உதவிசெய்கின்றார். என்று என்னைப்பற்றிக் கூறிமிகுந்த பெருமைப்படுவார். இதேபோல் ஒவ்வொருவரிடமும் காணப்படும் சிறிய திறமையைக்கூட பெரிதாகமதித்துப் பேசுவார். யாரையும் மனம் புண்படப் பேசியது கிடையாது.

சிறுபிரச்சனை காரணமாக நான் சிலகாலம் மிஷனில் ஒரு அறைக்குள்ளேயே தனித்திருக்கவேண்டியேற்பட்டது. அதனையும் சுவாமிகள் பெரிதாகக் கூறி பெரியதவம் புரிந்ததாக மற்றவர்களிடம் கூறக்கேள்விப்பட்டேன்.

ஒருமுறை சுவாமிஜீ இருதய சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நானும் எனது மனைவியும் அவருக்கு உணவு கொண்டு செல்வதும் கவனித்துக் கொள்வதும் வழக்கம். அப்போது ஒருநாள் நான் Chief Cardiologist இடம் 'இவர் எனது தந்தை போன்றவர் நன்றாகக் கவனிக்க வேண்டும் சேர்' என்று கூறியதை அறையினுள்ளிருந்த சுவாமிஜீ கேட்டிருக்க வேண்டும். பின்னர் சிலகாலம் அவ்விடயத்தையே பலரிடமும் பெரிதாகக் கூறிக்கொண்டிருந்தார்.

வைத்தியத்துறையைப் பொறுத்தவரை மிகச்சிறந்த சிகிச்சை பெறுநர் (Patient). வைத்திய நிபுணர் விவேகாநந்தராசா சொல்வதே வேதவாக்கு. வைத்திய விடயத்தில் அவரே எல்லாம். முழுமையாக நம்புவார். இக்காலத்தில் வைத்தியர்களிடம் ஆயிரம் கேள்விகள் கேட்பார்கள். ஆனால் சுவாமிகள் அவ்வாறல்ல.

### நான் மூளையால் வேலை செய்வதில்லை இதயத்தால் மட்டுமே வேலை செய்கின்றேன்

சுவாமிகள் எந்த விடயத்தையும் தத்துவ ரீதியாகவோ அன்றி தர்க்கரீதியாகவோ கையாள்வதில்லை. இதயத்தினூடாகவே அணுகுவார். ஒருவருக்கு ஒரு சிறு துன்பமானாலும் கண் கலங்கிவிடுவார்.ஒருமுறை சுவாமி இராஜேஸ்வரானந்தாவிற்கும் இராணுவத்தினருக்குமிடையே இடம் பெற்ற சம்பவம் தொடர்பில் சுவாமிகள் மிகவும் மனம்வருந்தி கண்கலங்கி அழுதார். அறிவு பூர்வமான பதில்களை எந்த விடயத்திலும் எதிர்பார்க்க முடியாது. சாதாரணமாக அன்பு, பாசம் கொண்ட ஒரு பக்குவநிலையையே அவரிடம் காண முடிந்தது.

அப்போதிருந்த பயங்கரமான சூழலையும் இராணுவக் கெடுபிடிகளையுமிட்டு மிகவருந்துவார். துப்பாக்கிச்சூடுகள் பற்றிய சம்பவங்களையிட்டு கண்கலங்கி அழுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இல்லத்தில் சுவாமிஜீ

பிள்ளைகளின் ஒழுக்கம், பண்பாட்டு விடயத்தில் சுவாமிஜீ மிகவும் கண்டிப்பானவர். ஆனால் அதையும்விட அன்பானவர். இல்லக்குழந்தைகளுக்கு தாயாயும் தந்தையாயும் விளங்கினார்.

சுவாமிகளின் தாயன்பிற்குச் சிறந்ததோர் உதாரணம் செல்லா. சிறுகுழந்தையாய் அதேவேளை சற்று மனோநிலை குன்றியவனாயும் சேர்க்கப்பட்ட செல்லாவை வேறு எவரிடமும் காட்டாத அன்பையும் பாசத்தையும் காட்டி இன்று செல்லா தனது வேலைகளை மட்டுமன்றி பிறரால் பணிக்கப்படும் சில வரையறைக்குட்பட்ட வேலைகளையும் கூட தனிச்சிறப்புடன் செய்வதற்கு சுவாமிகளின் தாய்மைப் பண்பே காரணம். இத்தகைய பாரபட்சமற்ற தாயன்பையே இன்றைய உளவியல் மருத்துவமும் இத்தகைய இல்லங்களில் எதிர்பார்க்கின்றது.

### பழமை பேணும் பண்பும் உதவி செய்தவர்களை மறக்காத பண்பும்

சுவாமிகள் எப்போதும் பழமையை விரும்புபவர். சுவாமி விபுலாநந்தர் வாழ்ந்த சிவபுரியின் தன்மையையும் அமைப்பையும் மாறாது பேணுவதில் எப்போதும் அக்கறையுடனிருந்தார். அது மட்டுமல்ல ஒருவரை ஒருதரம் பார்த்தால் பின்பு மறக்கவேமாட்டார். மிஷனின் வளர்ச்சிக்கு உதவிய பழையவர்களை மட்டுமல்ல அவர்களது பிள்ளைகளையும், பேரப் பிள்ளைகளையும் கூட மதித்துப்போற்றுவார்.

### விருந்தோம்பல்

விருந்தோம்பலில் சுவாமிகளை வெல்ல யாருமில்லையென்றே சொல்லலாம். மிஷனுக்கு யார் வந்தாலும் முதலில் தேனீர் வரும். பின்னர் சாப்பிட்டுவிட்டுப் போகச்சொல்வார். இந்த உயரிய பண்பினாலேயே கவரப்பட்டு பிற்காலத்தில் மிஷனுக்கு நன்கொடைகளை வாரி வழங்கியவர்கள், இன்றும் வழங்கிக்கொண்டிருப்பவர்கள் அதிகம். வருபவர்கள் யாரானாலும் சுவாமிகளின் விருந்தோம்பலினாலும் பணிவான பேச்சினாலும் கவரப்பட்டு சுவாமிக்கு அடிமையாகி விடுவர்.

ஜயந்தி தினங்கள் எமக்கெல்லாம் கொண்டாட்டதினம் அன்று மிஷன் கிட்டத்தட்ட ஒரு திருமணவீடு போன்றிருக்கும். பழைய மாணவர்களும் இல்லமாணவர்களும் சேர்ந்து இல்லத்தைவெகுவாக அலங்கரித்து அகண்ட நாம பஜனையும், ஹோமமும், ஆரத்தியும் நடக்கும்.

பின்னர் சுவாமிகள் பொங்கல் பிரசாதம் தருவார். மிஷன் பொங்கலுக்கு ஈடாக வேறெங்கும் பொங்கல் கிடையாது. வாழை இலையில் பொதிசெய்யப்பட்ட அதன் சுவையே தனி.

### சிவானந்த தேசிய பாடசாலை

சிவானந்த பாடசாலையில் நாம் படித்த காலம் முதல் நடைபெறும் எந்த விழாவிற்கும் சுவாமிகளே ஆசியுரை வழங்குவார். சுவாமிகளின் பேச்சு தனிச்சிறப்பானது. ஆடம்பர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானதாக இல்லாவிட்டாலும் மிகுந்த ஆழமானது. கேட்டுக்கொண்டேயிருக்கலாம். இந்நடைமுறை சிவானந்தாவிற்கு மட்டுமுரியதல்ல, விவேகாநந்தா பெண்கள் பாடசாலைக்கும் இதுவே நடைமுறை இப்பாடசாலைகளிரண்டும் சுவாமிகளின் இரண்டு கண்கள் போன்றே சுவாமிகளின் ஆலோசனைகளும் அனுமதியும் இன்றி எந்த முடிவுகளும் எட்டப்படுவதில்லை.

### குருபக்தியும் பணிவும்

சுவாமிகள் தமது குருநாதர் சுவாமி விரஜானந்தரைப் பற்றி அடிக்கடி பேசுவார்.அவர் நுளம்புக்கடியையும் பொருட்படுத்தாது மணிக்கணக்காய் தியானத்திலிருப்பார் என்பார். சுவாமி விரஜானந்தர் எழுதிய நூலொன்றையும் எனக்குப் பரிசாகத் தந்தார்.

ஒரு முறை சுவாமி சித்பவாநந்தர் இலங்கை வந்திருந்த போது அவரது ஆடைகளைக் கொடியில் காயவிட்டிருந்தாராம். இவ்வாடைகள் காய்ந்ததும் சுவாமி ஜீவனாநந்தா அவற்றை எடுக்கச்சென்றிருந்தார். இதனைக்கண்ட சித்பவானந்தர் ஓடிச்சென்று தன் ஆடைகளை எடுத்துவிட்டு சுவாமியைப் பேசினாராம் எனக்கும் கை கால் உண்டுதானே என்று. இதனைக்கூறி அவரைப் புகழ்ந்து பேசுவார். சுவாமி சிவானந்தரையும் அவரது நூல்களையும் எனக்கும் வெகுவாகப் பிடிக்கும்.

சுவாமி ஆத்மகணானந்தா கொழும்பிலிருந்து வந்ததும் சுவாமிகள் அவரைக் கவனிப்பதிலும் வேண்டியவற்றை செய்து கொடுப்பதிலும் மிகுந்த ஈடுபாடு காட்டுவார். இவர் வயதில் சிறியவர் ஆனாலும் எமக்குப் பெரியவர் என்பார்.அத்தகைய பணிவும் கருணையும் உள்ளவர்.

ஒருமுறை சுவாமி இராஜேஸ்வரானந்தா எனக்கு புத்தகமொன்று அனுப்பியிருந்தார். நான் அதனை வாங்கிப் பார்த்துவிட்டு சுவாமிக்கு காசு கொடுக்கவேண்டும் என்று கூறியதும் சுவாமி ஜீவனாநந்தா என்னைக் கோபமாகப்பார்த்து பெரியவர்கள் தருவது அன்பினால்; அதற்கு விலைமதிப்பில்லை என்றார்.

### என்றென்றும் மறக்கவொண்ணா சுவாமி இராஜேஸ்வரானந்தா

சுவாமி ஜீவனாநத்தா காலத்திலே எம்மால் மறக்கமுடியாதவர் சுவாமி இராஜேஸ்வரானந்தா. மிகவும் நெருக்கமானஅன்பினை நான் அவரிடம் அனுபவித்தேன். எனக்கு காயத்ரி மந்திரோபதேசம் செய்து வைத்த குருவும் சுவாமிகளே.

சமயரீதியான சந்தேகங்களை அவ்வப்போது சுவாமிகளுடன் நான் கலந்துரையாடுவேன். எப்போதும் பிறர் நலனில் அக்கறையும், ஈடுபாடும் கொண்டவர்.

சுவாமி ஜீவனாநந்தா போன்றே அடிக்கடி நாங்கள் மிஷனுக்கு வரவேண்டும் என்று விரும்புபவர். அப்போது எங்கள் வீட்டில் பசு இருந்தது. நான் தினமும் சுவாமிகளுக்கு தயிர் கொண்டு கொடுப்பேன். தயிரை சாட்டாக வைத்து நான் தினமும் மிஷனுக்கு வரவேண்டும் என சுவாமிகள் எதிர்பார்ப்பார். அத்தனை அன்பு சுவாமிகளுக்கு.

இனிமையான சுபாவம் , சந்தோசமான புன்னகை, நேர்மை, அன்பு, குழந்தைத்தனம் எந்த விடயத்திலும் புதிதாகச் சிந்தித்து (Creative )செயற்படுகின்ற விசேட ஆற்றலுள்ளவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Spiritual Energy). சுவாமிகளது பஜனைக்கென்றே தனியான பக்தர் குழாமுண்டு. அத்தனை இனிமையாகப் பாடும் திறன் சுவாமிகளது.

தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொருவரது முன்னேற்றத்திலும் அக்கறையுடன் செயற்படுவார்.எனக்கும் ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற வேண்டும் என்பதற்காக ஆங்கிலப் புத்தகங்கள் தருவார். ஆன்மீகக் கவர்ச்சியுள்ள சுவாமிஜீ. சுவாமி விவேகானந்தர் தேடிய இளைஞர்கள் உன் போன்றவர்கள் தான் என்பார்.சுவாமிகள் நடந்தால் நாம் ஓடவேண்டும் அவ்வளவு வேகமானநடை.

சுவாமி ஜீவனாநந்தா இல்லாதபோது சிலகாலம் மட்டக்களப்பு இல்லத்தை சுவாமிகள் தனித்தே நிர்வகித்தார். இக்காலம் கலைஞர்களுக்கெல்லாம் பொற்காலம் எனலாம். சாம்பசிவம் ஐயா, சிவலிங்கம் மாமா என்று பலர்.

**சுவாமி ஆத்மகணாநந்தா**

எப்போதும் பிறர்க்கு உதவவேண்டும் என்ற சுபாவத்தோடு செயற்படுபவர். எங்காவது எவரையாவது பிடித்து மேலதிகமாக உதவி செய்யவே முயற்சி செய்வார்.

யாவரையும் கவர்ந்திழுக்கின்ற பேச்சு வன்மையும் அதே போன்று இனிமையாக பஜனை பாடும் திறனும் கொண்டவர். சுவாமிகளின் பேச்சிற்கென்றே பக்தர் குழாமொன்றுண்டு. கொழும்பு மிஷனுக்குப் போனால் சாப்பிடாமல் போகவிடமாட்டார்.

ஒரு சமயம் எனது தாயார் அவசரமாக இந்தியா போகவேண்டிய தேவை. சுவாமிகளே மிகுந்த சிரமப்பட்டு ஒரே நாளில் விசா பெற்றுத்தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எல்லாம் எனக்கு ஜீவனாநந்தா சுவாமிகளே"

## பொ.செல்வராஜாவுடனான (செல்லா) நேர்காணல்

'அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஒம்புவான் இல்'

என்ற வள்ளுவரின் கூற்று ஜீவனாநந்த மகராஜின் வாழ்விற்கு சான்று. திருமகளின் கடாட்சம் சுவாமிகளின் அகமகிழ் பணிக்கு ஆதாரம். துறவியாக வாழ்ந்தாலும் அவர் வாழ்வே அறப்பணிதான். அவர்தம் அறப்பணிக்கு அன்பெனும் அகத்துறுப்பு ஜவாதாரமாய் இருந்ததை அறிந்தவர் அறிவார்.

'புறத்துறுப்பெல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பின்பிலவர்க்கு'

என்ற குறளை நம் ஜீவனாநந்தர் அடிக்கடி நினைவு கொண்டு பேசுவார். பேசுவது தோடு நிற்காது பேச்சினை மூச்சாக எடுத்து வாழ்ந்தவர் என்பதற்கு செல்லா வாழ்வியல் ஒரு எடுத்துக்காட்டு.

சூரியன் கதிர்களால் வீரியம் காட்ட வெளித் திருக்கும் தருணம் கண்ணெதிரே சுமப்பின் சுகத்தில் செல்லா, என்ன செல்லா நல்ல வேலை போல என்றேன். ஒற்றைச் சில் வண்டியை உருட்டியபடியே ஆமண்ணே எப்படி என்றான். அதிருக்கட்டும் நீங்க எங்கே போறது என்றென்னைக் கேட்டு வழக்கமான விட்டார்த்த சிரிப்புத்தான்.

செல்லாவைப் பார்க்கத்தான் வந்தன் ஆனால்..... என்று முடிக்கும் முன்னம், முதலில் வேலை முடிப்பமென்று பாரவண்டியை தூக்கிச் செலுத்த முற்பட்டான். கொஞ்சம் பொறு செல்லா என்ற என் வார்த்தை முடிய முன்னே இல்லண்ணே நேரத்துக்கு கொடுக்கனும் நேரத்துக்கு நான் போகனும் இப்ப இங்க நம்ம சாமியா செல்லா என்று தலைதடவ என்றவனின் முகம் ஜீவனாநந்தாவையே தேடுகிறது என்பதை காட்டிற்று. செல்லா என்னோடு பேசி பேசிப் போகலாம்தானே என்று கூறி, வந்த கருமத்தை முடிக்க எண்ணி னேன். அதற்கென்ன வாங்க வாங்க கதைச்சு கதைச்சு போவம் என்றே வண்டியை தள்ளிய செல்லாவிடம்,

இங்கு எப்போ எப்படி வந்தீங்க, என்று சொல்ல முடியுமா? எல்லோரும் எப்படி வந்தாங்க, எப்படி போறாங்க என்பதல்ல முக்கியம் எப்படி இங்கு வாழ்ந்தாங்க என்பதுதான் முக்கியம் என்ற செல்லாவின் தத்துவ சிந்தனை என்னை ஒருகணம் உலுப்பி விட்டது. செல்லா பேசுகிறானா அன்றி அவனுள் இருந்து ஜீவனாநந்தா பேசுகிறாரா என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத் தோன்றியது. என்னண்ண யோசிக்கிறீங்க என செல்லா கேட்டபோது யான் தெளிவடைந்தேன்.

இந்த வாழ்க்கை எதற்காக, இதன் இறுதி தேடல் என்ன? உடல் எரிந்து விட்டால் முற்றிலுமாக எல்லாம் அழிந்து விட்டதா, பிண்டம் சுமந்த ஆயிரம் ஆயிரம் நினைவுகள் இறப்பிற்கு பின் எங்கே சென்றடையும். போன்ற எண்ணற்ற கேள்விகள் அன்று கதாதரனை குடைந்ததல்லவா, உடல் ஒரு பிச்சைப் பாத்திரம். ஜீவனை வாங்கி சிறிது காலம் பூமியில் வாழ்ந்து விட்டுப் போகும். அதற்கு சாதி, மதம், படித்தவன் என்ற எந்த அடையாளமும் இல்லை. அன்புதான் நிரந்தரம். அந்த அன்பையே ஜீவன் தேடும் என்று பிற்காலத்தில் குருதேவர் சொன்ன அமுதமொழி செல்லாவின் வாழ்வில் உண்மை உண்மை உண்மை.

அண்ணே யான் களுபோவில என்ற இடத்திலுள்ள கொஸ்பிரலில் இருந்து மூன்றுபேருடன் வந்தேன். ஒருவர் பொலிஸ் என்பது தெரியும். பெரிய சாமி என்னைக் கண்டதுமே தன்னுடலோடு கட்டி அணைத்துக் கொண்டார். கடைசிவரை அந்த அணைப்பை விடவில்லை அதுதான் ஜீவனாநந்தா என்ற அவனின் நமட்டுச் சிரிப்பு அவனது ஏக்கத்தைப் பிரதிபலித்தது.

வந்த நேரத்திலிருந்து என்னை விட்டு பிரியும் வரை பெரிய சுவாமி ஒரு நாளாவது என் தலை தடவி பேசாதநாள் இல்லை, இன்று என் தலை தடவ யாருள்ளார் அதனால் நான் கெப் அடித்துள்ளேன். எப்படி வடிவாயிருக்கா.....க்......க் நான் நல்லாயிருக்கு நல்லாயிருக்கு என்று சிரித்தேன் அவனும் உரக்க சிரித்து இதற்குள் ஒரு முசுப்பாத்தி என்னண்டா அண்ணா வந்த அன்றைய நாளில் தமிழே தெரியாது சிங்களம் தான் பேசுவேன் சுவாமியின் சிங்களப் பேச்சு எனக்கு சிரிப்பு வரும். சுவாமி ஒரு நாள் செ ான்னார் எனக்கு செல்லாதான் சிங்கள வாத்தியாரென்று அப்ப நானும் பெரியாள் என்று நினைச்சன். அதோடு பெரிய சுவாமி யான் சொல்வதற்கெல்லாம் ஹரி ஹரி கொந்தாய் கொந்தாய் என்பார். என்ன சாமி எல்லாத்திற்கும் ஹரி ஹரி என்கிறீங்க என்றேன் அதற்கு சுவாமி அந்த ஹரிதானே உன்னை என்னட்டை விட்டார். என்பதை என்னுடைய பிற்கால வாழ்வில் கேட்டுப் புரிந்த கொண்டேன். தமிழே தெரியாத என்னை இன்று இந்தளவுக்கு பேசவைத்தவர் சுவாமிதான். ஐந்து பிஸ்கட் தந்தா அ, ஆ சொல்லி நிறுத்துவேன். பின் ஐந்து பிஸ்கட் வேண்டித்தான் மற்றைய எழுத்துக்களை சொல்வேன். எனக்கென்றே பிஸ்கட் பெட்டி, சொக்கலட் பெட்டி அவர் வேண்டி வைத்தார். அவரே பெரிய சுவாமி அவரை நினைக்காத நேரமில்லை என்று தொடர்ந்து பேசினான் செல்லா? சுவாமிஜீ லீவு காலத்தில் மாணவர்களிடையே அமுதமொழிகளையும் வேயுறு தோளி பதிகத்தையும் போற்றிப் பாட்டையும் பாடமாக்க வைப்பது வழக்கம். எனக்கும் எழுதி தந்து பரமலிங்கம் அண்ணனையும் சொல்லிக் கொடுக்க வைத்தார். அப்போது சுவாமியிடம் நான் கேட்டது என்ன தெரியுமா சொல்லு சொல்லு என்றேன். பாடமாக்கி தந்தா என்ன தருவீங்க சுவாமிஜீ என்றபோது செல்லாவுக்கு என்ன தேவையோ அதை கேட்கும் போதெல்லாம் தருவேன். என்று சொல்லியதுமல்லாமல் வாழும்வரை யான் கேட்கும் பொழுதெல்லாம் கேட்டதை கொடுத்தவர் சுவாமிஜீ என கண்கலங்கிய செல்லா குரல் தள தளக்க .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுவதற்கு வெட்கப்படாதீங்க, எதுவாக இருந்தாலும் ஆலயம் சென்று வாய்விட்டு அழுது இறைவனிடம் சொல்லுங்கள் பாரம் நீங்கும் சஞ்சலம் இன்றி நிம்மதியாகத் தூங்குவீங்கள். நீ உலகத்தில் வாழ்ந்திருக்கும் வரையில் பிறர் உன்னிடம் அச்சமும் மரியாதையும் கொள்ளும்படி நட ஒருவருக்கும் தீங்கு செய்யாதே பிறரால் தீங்கு வராத படியும் காத்துக் கொள் என்ற இரண்டு குருதேவர் அமுதமொழிகளையே என்னால் கஸ்டரப்பட்டு சொல்ல முடிந்தது. இவற்றையான் கூறக்கேட்டதும் சுவாமி கட்டியணைத்த பெரிமிதமாக சிரித்து குருதேவர் உன்னைக் காப்பார் காப்பார் என்று கூறியதை இதை என்னால் என்றும் மறக்க முடியாது என்று சொன்னான் செல்லா. என்னால் சுவாமிஜீ ஒருநாள் முழுக்க சாப்பிடாமல் பதை பதைத்து திரிந்தது போல் இன்றெனக்காக ஏங்க யாரண்ணன் என பரிதாப சிந்தனையோடு, என்ன நடந்தது தெரியுமா எனக் கேட்ட அவன் இவைகளை கொண்டு கொடுத்து விடனும் என்று வண்டிலை வேகமாகச் செலுத்தி அன்னை மனையுள் புகுந்தான். அவன் மீண்டும் வரும்வரை வீதியோர மரநிழலில் சுவாமி ஜீவனாநந்தரின் ஜீவ தயையினை குருதேவர் ஏழைக் குழந்தைகள் பால் காட்டிய பரிவின் பக்குவத்தை எந்தளவிற்கு தன் வாழ்வில் கடைப்பிடித்துள்ளார் என சிந்தனை செய்தேன். அவர் என் போன்ற எத்தனை பேரை தலை தடவி தட்டிக் கொடுத்து தாய் தந்தையாகி தோழனாகி வழிகாட்டும் சற்குருவாக மிளிந்த அந்த மகாத்மாவின் திருவடி துணையல்லவா நம்மை வாழவைக்கிறது. பெருமிதத்தில் ஆழ்ந்தேன். செல்லா செல்லா என்று அழைத்து அவனை ஆரத்தழுவ அன்னையாசிதான் வாழ்நாலெல்லாம் அவனுக்கு தொண்டனாக்க அல்லவா வாழ்ந்தவர் நம் பெரிய சுவாமி. செல்லா ஒவ்வொரு நுனிப்பொழுதும் கவனித்து அவனையும் இல்ல மாணவர்களின் கடமை உணர்வை கற்பிக்க மாணவர்க்குள்ளேயே இரண்டு மாதத்திற்கு ஒருவராக நியமித்து செல்லாவின் வாழ்வியலுக்கு உரமிட்டவர் மட்டுமல்ல, எம்மை போன்றவர் உதவும் கரங்களாக, ஜீவர்களுக்காக உழைக்கும் மனிதராக சேவையின் அடித்தளத்தை மட்டும் எதிர்காலத்தில் நன்மைக்காக வாழவைத்தவர். என்றால் மிகையாகாது.

உள்ளே சென்ற செல்லாவின், வில்வண்டிச் சத்தம் கேட்கிறது. செல்லா வருகிறான் ங்.......ங்....... அண்ணே நிக்கிறீங்களா வழக்கமான கையசைப்புடன் நெருங்க வந்தவனிடம் சொல்லுங்க செல்லா மிச்சத்தை யென்றேன். அவன் றெக்மாறி ஓடுகிறான். அவனது வார்த்தைகளின் அபகுரல்களை சரிப்படுத்தி ஆரோகணப்படுத்தி மீட்டத்தொடங்கினேன். இதய வீணையை, வந்தது தெரியும் போவது எங்கே எனம் பாடல் ஒலியை பலசரக்குக் கடைக்குள்ளிருந்த தென்னேஎனம்' கொட்டியது. செல்லா தொடர்கிறான் நான் சுவாமிஜின் கட்டிலுக்கு மேலேறி குதித்து கொண்டிருந்தேன். அவ்வேளை எனக்குத் தந்த கச்சான் உடைத்த கோதுகள் கட்டிலின் கீழ் நிலமெல்லாம் பரவியது அந்த வேளை அங்கு வந்த சுவாமிஜி இது என்ன வேலை செல்லா இறங்கு இறங்கு என்றேசியபடி என்கையை பிடித் திறக்கி ஏசியவர் என்னையும் அந்தநேர அன்போடு கவனித்த வேந்தன் அண்ணனையும் அழைத்து ஒரு அடி போட்டார். அடிவேண்டியவர் என்னை அழைத்துப் போய் விட்டார். நான் திரும்பவும் சுவாமிஜியின் அறைக்குள் வந்து அவர் உறங்கும் கட்டிலின் கீழ் ஒளித்துக் கொண்டேன். ஒளிக்கப் போன நான் நித்திரையாகிவிட்டேன். காலை உணவிற்குத் தேடுகிறார்கள். செய்தி சுவாமிக்கு சென்றதும் மிஷன் ஏரியா, மணிமண்டப பகுதி எங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடல் நடக்கிறது சுவாமி மதியமாகியும் என்னைக் காணவில்லையென தாமும் பல விடங்களுக்கு சென்று வேறு பலரையும் விட்டு தேடினார். காலை மதியம் உணவில்லை. செல்லா எங்கே செல்லா எங்கே மிஷனில் உள்ள அனைவரது தேடுகைக்குள்ளும் பெரிய சுவாமி ஸ்றையின் மண்டபத்துள் மதியம் 1 1/2 மணிக்கு கண்ணை மூடி தியானிக்க அமந்தவர் மாலை 4 1/2 மணிவரை அப்படியே இருந்தாராம். சுவாமி அப்படி நெடுநேரம் இருந்த ஒரு நாளென பெரியவர்கள் கூறக்கேட்டு எனக்காக இப்படியொருவர் காத்துக் கிடந்ததை எண்ணும் போதெல்லாம் பெரிய சுவாமியை மீண்டும் காண்பேனா காண்பேனா என்தலை தடவி செல்லா செல்லா எனும் சத்தம் என்னை வாழ்த்துமா என்றுதான் ஏங்குகின்றேன் என்றான். பிறகு என்ன நடந்தது எனக் கேட்ட போது பிறகென்ன 4 1/2 மணிக்கு சுவாமியின் அறையைக் கூட்டச்சென்றவர் கட்டிலுக்கடியில் நான் கிடப்பதைக் கண்டு சுவாமியிடம் சொல்ல சுவாமி வந்து எழுப்பிச் சிரித்தவிதம் இருக்கே அதை எப்படி என்னால் சொல்ல முடியும் எனக்கண்ணீர் விட்டவனிடம் உன்னைப்பாட சொல்லுவாரே சுவாமி அந்த வேளையில் நீ பாடும் அன்னையார் பாடலை பாடு எனக்கேட்ட போது அந்தப் பாட்டெல்லாம் நினைவில் இல்லை இப்பநான் காலையிலும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் சுவாமியை நினைத்து தனியே பாடும் பாட்டென்று பாடினான் செல்லா.

குருதேவா குருதேவா
ஸ்ரீராமகிருஷ்ண குருதேவா

செல்லா அழுவது காணவில்லையோ
எல்லாம் நீயே குருதேவா
(குரு)
ஜீவனாநந்தம் இல்லாமல்
கவலையால் செல்லா அழுகின்றேன்.
எல்லாம் எனக்கு ஜீவனாநந்தா
என்பதை குருதேவர் அறியீரோ
(குரு)
படியாப் பிள்ளை யானப்பா
துடியாய் துடிப்பதை பாரப்பா
எப்படி வாழ்வது குருதேவா
இப்பவே அனுப்புங்க குருதேவா
(குரு)
நாளும் குருதேவ் திருநாமம்
சொல்லு செல்லா எனஎன்னை
வாழும் வகையை செய்தவரை
எல்லா நேரமும் தேடுகிறேன்
(குரு)

எங்கள் சுவாமிஜீ ஜீவனாநந்தா
எங்கள் சுவாமிஜீ பெரிய சுவாமிஜீ
தாயைப் போல பிள்ளை என்மேல்
அன்பு காட்டினீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் போல என்தனுக்கு
ஒருவரில்லையே
சாப்பிட்டியா சாப்பிட்டியா
என்று கேட்பீங்க
கூப்பிட்டென் தலைதடவ
யாருமில்லையே
சின்ன வயதில் நான் வந்து
வாழும் நாளெல்லாம்
அன்பு தந்து ரொபியும் தந்து
சிரித்து மகிழ்வீரே
உங்கள் முகம் காண எனக்கு
ஆசை சுவாமிஜீ
எங்கும் எனக்கு செல்லா என்றே
சத்தம் கேட்குது
என்று வருவீர் எப்போ வருவீர்
எங்கள் சுவாமிஜீ
என்றுமுங்கள் கட்டில் அடியை
நினைத்து அழுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபரிக்கமுடியாத உறவு
# சுவாமி ஜீவனாநந்தஜீ மகராஜ்

*வைத்திய திலகம் Dr. V. விவேகானந்தராஜாவின் மனப்பதிவிலிருந்து*

சுவாமி ஜீவனாநந்தஜீ பற்றிய முதல் அறிமுகம் 1955 ஜனவரி 1இல் ஏற்படுகின்றது. எனினும் 1955இல் மிஷனுக்கு நான் சென்றபோது சுவாமியை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. காரணம் சுவாமிஜீ அவ்வேளை இந்தியா சென்றிருந்தார்.

சில வருடங்களின் பின் இலங்கை வந்த சுவாமிஜீ மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனைப் பொறுப்பேற்கும் நிலையிலும் என்னால் அவரை நேரடியாகத் தொடர்பு கொள்ளமுடியவில்லை. படிப்பு மற்றும் தொழில் நிமிர்த்தமாக வெளியிடங்களுக்குச் செல்லவேண்டியிருந்தமையே இவ்விடைவெளிக்கான காரணமாயிற்று.

இவ்வாறான நிலையில் 1981இல் சுவாமியினுடனான நேரடித் தொடர்பு கிட்டுகின்றது. எனது திருமணபந்தத்துக்கான ஒழுங்கமைப்பில் முக்கியமாகும் சுவாமியினது தொடர்பு 1982இல் சுவாமி சுகயீனமுற்றிருந்தபோது நான் நேரடியாகச் சென்று பார்த்து உரிய மருத்துவ ஆலோசனைகளை வழங்குவதுடன் நெருக்கமாகின்றது.

அன்றிலிருந்து அவர் சமாதியடையும் தருணம் வரை இறுக்கம் பெற்றிருந்த சுவாமிக்கும் எனக்குமான உறவில் மற்றும் ஊடாட்டங்களில் அடித்தளமாக வைத்தியமே காணப்பட்டது. எனினும் இதையும் தாண்டி பல நிலைகளில் அவருக்கும் எனக்குமிடையிலிருந்த ஆத்மாத்த உறவு, தொடர்பு வரையறை தாண்டியது, விபரிக்க முடியாதது.

எந்தவொரு செயற்பாடுகளின்போதும், இறுக்கங்களின், இடர்பாடுகளின்போதும் சுவாமிஜீயிடம் ஆலோசனை பெறும் என்னிடம் சுவாமிஜியும் வரையறை தவிர்த்து அளாவளாவுவதும் அக்கறை கொள்வதும் இந்த நெருக்கத்தை உணர்த்தும்.

எப்போது எங்கே போவதென்றாலும் சுவாமிஜிடம் விடைபெற்றே செல்வது எனக்கு வழக்கம். ஒருமுறை ஏதோ நிலையில் அவரிடம் சொல்லாமல் சென்றுவிட்டேன். திரும்பிவரும் வரை நெருக்கமான பலரிடம் என்னை விசாரித்த சுவாமிஜீ அவரைப் சந்திக்கும் போது 'You made me to search you' என்றுசொன்ன அந்தத்தொனி இன்னும் என்னுள் உறைக்கிறது. அவர் என்னிலும், என்னைப் போன்ற பலரிலும் ஒவ்வொருகணமும் அக்கறையும் அன்பும் கொண்டிருந்தார். சுவாமிஜீயும் மன இறுக்கங்கள், கஸ்ரங்களின் போது என்னுடனும் தனது கஷ்ரங்களை பரிமாறிக்கொள்வது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷன் மாணவர்களது ஆரோக்கியத்திலும் கல்வி நடவடிக்கையிலும் கரிசனை கொண்டு உறவாடும் சுவாமிஜீ, ஒருசமயம் மிஷனில் துரதிஷ்டவசமாக ஏற்பட்ட களவு நிகழ்வின் போது மனஉளைச்சலுக்கு உட்பட்டிருந்தார். சம்பவத்தை அறிந்து உடன் மிஷனுக்கு விரைந்த என்னிடம் 'நான் அசம்பாவிதம் தொடர்பாக கலந்துரையாட எண்ணிய இருவருள் நீங்களும் ஒருவர்' என்று சொன்னது ஞாபகத்துக்கு வருகிறது. இது அவர் என்மீது வைத்திருந்த நம்பிக்கையும் அன்பையும் காட்டுகின்றது.

எனது வைத்தியசேவையைக் கௌரவித்து 'வைத்தியதிலகம்' என்ற பட்டம் சூட்டிய விழாவில் பங்கேற்று ஆசிவழங்கிப் பேசிய சுவாமி, தனது பேச்சின் போது ஆனந்தத்தில் சொற்கள் இழந்து அங்கலாய்த்ததும் அதைவெளிப்படையாக தானே கூறியதும் என் மீதான ஆழமான அன்பினையே தெளிவாக்குகின்றது.

வைத்தியர் என்ற நிலையில் சுவாமிஜீ ஒரு உண்மையான Patient ஆக விளங்கினார். என்னில் முழு நம்பிக்கை உடையவராக இருந்தார். என்னிடமே தனக்கான வைத்திய ஆலோசனைகளைப் பெறுவார். தவிர்க்கமுடியாததாக வேறு சில வைத்தியர்களிடம் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டபோதும் கூட அது தொடர் பாகவும் என்னிடம் ஆலோசனைபெற்றுக் கொள்வது இந்நம்பிக்கையை வெளிப்படுத்தும்.

எனது G.V வைத்தியசாலையை ஆசி வழங்கி ஆரம்பித்து வைத்த சுவாமிஜீ நான் அவரைச் சந்திக்கும் தருணங்களிலெல்லாம் வைத்தியசாலை பற்றி விசாரிக்கத் தவறிய தில்லை. அவரது கடைசி மூச்சு புறப்படும் வரை G.Vயிலேயே வைத்திய ஆலோசனை பெறவேண்டும் என்றிருந்தது எமது பாக்கியம்.

மாணவரில்லச் சிறார்களது முன்னேற்றத்துக்காக அயராது உழைத்த சுவாமிஜீ ஆரம்ப கட்டத்தில் இல்லத்தின் பொருளாதாரதேவையை பூர்த்திசெய்யும் முகமாகவும் மிகுந்த சிரமப்பட்டார். மிஷனைக் கட்டியெழுப்புவதில் கண்ணும் கருத்துமாயிருந்தார். எனக்கு நன்கு தெரியும் அதிகாலையிலேயே புறப்படும் சுவாமி ஒவ்வொரு சூட்டுக்களரியாகச் சென்று நெற்சேகரிப்பது. இவ்வாறு ஆரம்பம் முதல் பொருளாதார நடவடிக்கைகளில் கரிசனையாக செயற்பட்ட சுவாமிஜீ தனது இறுதிக் காலத்தில் பணம் பற்றிப்பேசும்போது 'இப்போ பணம் எனக்குத் தேவையில்லை, நல்ல உள்ளங்கள்தான் தேவைப்படுகின்றன' என்பார்.

இப்படியாக அயராது உழைத்த ஓர் அரிய உன்னத மகான் இனியும் நமக்குக் கிடைப்பது பகற் கனவுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமத்துக் கதை

## குருகுலப் பழைய மாணவர் பாக்கியராஜாவின் பகிர்விலிருந்து

ஜீவனானந்தம் என்ற மலரில் ஜீவனாநந்த மகராஜ் அவர்களின் வாழ்க்கை வரலாறும் அதனையொட்டியதுமான இராமகிருஷ்ண மிஷன் வரலாறும் செயற்பாடுகளாக குறிப் பிடப்படுகின்றன. குறிப்பாக ஈழத்தில் இராமகிருஷ்ண மிஷனுடைய கிளைகளும் கிளைகளுடாக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளும், முன்னெடுத்தவர்கள் பற்றியதான வரலாறும் தெளிவாக உள்ளது. ஆனால் இதுவரையும் நாம் பெரிதும் அறியாததும். அறியப்பட வேண்டியதுமான ஒருவரது, ஒரு இயக்கத்தினுடைய சேவை இல்லப் பழைய மாணவர் ஒருவரது பகிர்வு மூலம் தெரிய தெரியவந்துள்ளமை சிறப்பு.

சுவாமி சர்வாதீதானந்தா சிவானந்தாவில் கல்வி கற்றவர். சுவாமி விபுலானந்தர் உள்ள முதலாவது குழுப் படத்தில் உள்ள கைலாசபிள்ளையே இவர். எந்தக் காலகட்டத்தில் சந்நியாசத்துக்குப் போனார் என்று தெரியாது. 1952ல் இலங்கை வருகை தந்து சிவபுரியில் 2 மாதம் இருந்து விட்டு கதிர்காமம் சென்று விட்டார். இவர் திருகோணமலை, தம்பலகாமத்தைச் சேர்ந்தவர். சிவானந்தாவில் கல்வி கற்று துறவியானவர். இவர் பற்றி நூலிலோ, வேறு இடத்திலோ பெரிதாக எதுவும் கூறப்படவில்லை. இவர் கர்திகாம மடத்தை நிர்வகித்த ஒரே ஒரு சுவாமிஜீ. ஆரம்பம் முதல் இலங்கை அரசு கைப்பற்றும்வரை நிர்வகித்து வந்தார். சுகயீனம் காரணமாக ஒருகிழமை கொழும்பு சென்றிருந்தார். பின் சுவாமி ஔவையானந்தர் வந்தார் அவரோடு சுவாமி விருபாக்ஷானந்தாவும் வந்திருந்தார். பின்னர், சுவாமி பிரேமானந்தாஜீயின் அறிவுறுத்தலின் பெயரிலும் சுவாமி ஜீவனாநந்தா அவரோடு வைத்திருந்த நெருக்கம் காரணமாகவும் கல்லடிக்கு வந்தார். இங்கேயே காலமானார். இவரை சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜை எரித்த இடத்திலே எரித்தார்கள்.

சுவாமி ஜீவனாநந்தா பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு கதிர்காமம் வருவார் வந்தவுடனே சுவாமிக்கு (சர்வாதீதானந்தா) நல்ல சந்தோசம் அவர் தன்னுடைய பெற்ற பிள்ளைகளைப் போல் இருந்து சாப்பாடு கொடுப்பார். அவரிடம் என்ன இருக்கின்றதோ ஒன்றையும் வைத்திருக்கமாட்டார். அப்படி இருக்கின்ற (யாத்திரிகர் கொடுக்கின்ற பொருட்களை) எல்லாவற்றையும் பிள்ளைகளுக்கு கொடுப்பார். பிள்ளைகளோடு சரியான விருப்பம், சுவாமிஜீயுடனும் (ஜீவனாநந்தாவுடன்) விருப்பம். சுவாமிகளுக்கு பற்று இல்லாவிட்டாலும் இவரிடம் உள்ள எல்லாவற்றையும் பிள்ளைகளுக்கே கொடுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய துவாய், வேட்டி இருந்தாலும் கொடுப்பார். எப்பிள்ளைகள் வருமென்று பார்த்திருந்து கொடுப்பார்.

உண்மையில் நினைவுகூரத்தக்க சுவாமி. நம்முடைய நாட்டு சுவாமி விபுலானந்தா. நடராஜானந்தா, சுவாமியை நினைவு கூறினார்கள். இருவரும் நம்முடைய மாதா. இவர்கள் பெற்றெடுத்த சுவாமி தம்பலகாமத்தில் பிறந்து வளர்ந்து மிஷனோடு சேர்ந்து கதிர்காமத்தில் வளர்ந்து பெரிய சேவையைச் செய்தவர். ஏனென்றால் உலகத்திலே இருக்கின்ற பக்தர்கள், கதிர்காமத்துக்கு வருகின்ற இந்துக்கள் அவரைக்கண்டு ஆசி பெற்றுத்தான் செல்வார்கள். கதிர்காம மடம் இருக்கும் வரைக்கும் இவரை மறக்க முடியாது. இவரோடு சேர்ந்த பணிதான் அது. இராமகிருஷ்ண மிஷனுக்கு இலங்கையில் 3 கிளைகள் இருந்தன. 1-கொழும்புக்கிளை, 2-மட்டக்களப்புக்கிளை கல்லடி, 3-கதிர்காமக்கிளை. இப்போது இருப்பவர் களுக்கு கல்லடி, கொழும்பு கிளைகளைத்தான் தெரியும் . கதிர்காம மடத்தைத் தெரியாது. இந்த மிஷனது சேவையும் சர்வாதீதானந்தா சுவாமியினது சேவையும் நினைவு படுத்தப்பட வேண்டியவை.

இந்த மடத்தில் இருந்தவர்களுக்கு ஏதாவது சுகயீனம் ஏற்பட்டால் அம்பாந் தோட்டை வைத்தியசாலைக்குப் போவோம். அங்கு டொக்டர்ஸ், மிஷன் ஆட்களென்றால் நல்லா கவனிப்பார்கள். ஏனென்றால் மிஷனது இணைப்பு அங்கிருந்த அரச நிறுவனமோ, ஏனைய நிறுவனமோ நம்பிக்கை. எல்லாவற்றுடனும் நேர்த்தியாயிருந்தது. இரவு பூசைக்கு வந்து மடத்துக்கு வந்து கதைக்காமல் செல்ல மாட்டார்கள். ஏனென்றால் மிஷன் அவ்வாறான ஈர்ப்பு சக்தி கொண்டது. அதாவது சாப்பாடு மட்டுமல்ல சுவாமியின் நடவடிக்கைகள் எல்லோருக்கும் பிடிக்கும். எந்தத் திணைக்களத்தார்களும் மிஷனை நம்பி, வாங்க என்று தான் சொல்லு வாங்க சுகயீனம் என்றாலும் டொக்டர்ஸ் வருவாங்க பாப்பாங்கள்.

**அன்னதானம்**

காலையில் 5.30 மணிவரை தேனீர் கொடுப்போம். 6.00-7.00 மணிவரை காலைச் சாப்பாடு, 10.00-11.00 மணிவரை மோர், லெமன்யூஸ் கொடுப்போம், 11.30-2.30 மணிவரை பகல் சாப்பாடு கொடுப்போம். பிறகு பின்னேரம் 4.00-5.30 மணிவரை தேனீர் கொடுப்போம். 6மணி நேரம் மட்டும்தான் ஓய்வு. திருவிழா மிஷன் கடப்பால் போனபிறகு 6.30 இரவுச் சாப்பாடு கொடுக்கத் தொடங்கி 10.30 மணிவரை போகும் அதுக்கு பிறகு தான் சாமியோ மற்றவர்களோ சாப்பிட்டு ஓய்வு எடுப்பார்கள். 15நாள் திருவிழாவும் நடைபெறும். ஆடி நாளே சூடுதானே 2 நாளிலே தொண்டையெல்லாம் கட்டி போடும் சுவாமி தொடக்கம் எல்லோருக்கும் அதே பிரச்சினை தான்.

மற்றது நிர்வாகத்தை கவனிக்க இராமகிருஷ்ண மட குழு இருக்கும். நவரெட்ணம் ஐயா மேல் தனய சிங்கம் (உதவியாளர்) நீதிமன்ற பதிவாளராகவும் இருந்தவர். இன்னும் ஆட்களைச் சேர்த்துக் கொண்டு வருவார் இந்த நிர்வாகத்தை அவர்கள்தான் நிர்வகிப்பார்கள். அத்துடன் புத்தக விற்பனைகளும் போட்டார்கள். இரண்டு நாளைக்கு ஒரு தடவை திருவிழாக் காலத்தில் லொறிகள் வரும் உள்ளே கொண்டு வர அந்த நேரம் பெமிஷன் எடுத்து வைத்தால் ஆற்றுக்கங்கால டெக்டர்ல கொண்டு வர பொமிஷன் தருவான் மற்றது மலசலகூடப்பிரச்சினைகள், மற்றது இலைகளை அப்புறப்படுத்தும் வேலைகள் எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷனில் எந்த நேரமும் துப்பரவாக இருக்கும். உடனுக்குடன் பந்தி முடிய துப்பரவு செய்வது. இங்கு தொண்டாற்றிய பத்மநாதன் கொழும்பு சென்றுவிட்டார்.. குடும்பப் பொறுப்பு களால் அவரது சகோதரர்களுடன் சென்று விட்டார். பின்னர் சிவயோக அண்ணன் வந்தவர். 77ஆம் ஆண்டு மிஷனை எடுக்க போவது தெரிந்து விட்டது. நகர அபிவிருத்தி திணைக் களத்தால் பிரகடப்படுத்தினார்கள். கங்கைக்கு 5.கிலோமீற்றர் சு ற்றளவில் எல்லாம் அழிக்கப் படும் என்று. அதில் 21 மடம் இருந்தது. சின்ன சின்ன மடங்கள் அவர்கள் நிர்வகிக்கின்ற தன்மையில் இல்லை, மடங்கள் மடங்களோடு இருந்தன. குறிப்பாக அப்பாசாமி மடம். தெய்வானை அம்மாள் கோயில் மடம். சதையம்மாள் மடம், துரையப்பா மடம், மார்க்கண்டு மடம் (K.V.சுப்பிரமணி -அப்பா), செட்டிமடம் என 21 மடம் இருந்தன. மெயின் இராமகிருஷ்ண மடம் தான். கதிர்காம கோயிலிலிருந்து 35மீற்றருக்கு பக்கத்தில் இருந்தது.

பெரிய அண்டா 2 இருக்கும். அதற்கு நாகம் பூசி இருக்கும் கொழும்பிலிருந்து 125 சமையல் காரர்கள் வருவாங்க. அங்கே முழுக்க இந்தியரகள் தான். சம்பளம் கொடுத்து த்தான் சமைக்கிறது. முனியாண்டி தலைமையில் ஒவ்வொரு பகுதியாக பிரிப்பார்கள். கறி-ஒரு குழு, டீக்கு ஒரு பாட்டி, இட்டலி ஒரு குழு, சேர்ந்து ஒவ்வொரு கறிக்கும் ஒரு குழு. மரக்கறிகள் சாக்கு சாக்காக வரும். வட்டக்காய், கோவா, பருப்பு, உருளை, கத்தரிக்காய், ஓலைப்பாய்களை வைத்து வெட்டுவாங்க அரிந்து தருவாங்கள். பெரிய அண்டாவில் சமைப்பது கதைத்துக் கொண்டே இருக்க முடிந்து விடும். சோறு வடிக்கிறவர்கள் 20-25 பிரம்பு கூடையில் சோற்றை வடிப்பார்கள். மண்டபத்திற்குள் பாய்போட்டு மேல் தடிப்பான சீலை போட்டு பெரிய மண் குவியல் மாதிரி குவிப்பார்கள். அது நல்லா அவிய பெரிய வெண்கல அகப்பை கொண்டு தட்டினால் மல்லிகைப்பூ போல உதிரும். வாளியால் எடுப்பார்கள். உண்மையில் நான் வாழ்க்கையில் அப்படியான அன்னதானத்தைக் கண்ட தில்லை.

பெரிய அளவிலான சமையல் அதாவது இதிகாச காலத்தில் சொல்லுவார்கள் வீமனுக்கு இப்படி ஒரு படையல் சமைத்து கொடுத்தார்கள் என்று. இங்கே தான் பார்த்தேன். அப்படிப் பிரமாண்டமானது. திருவிழா காலத்தில் 5 மூடை, 2கிடாரம் இருந்தது. வைத்தால் எடுக்கிறதில்லை. வாளியாலே அள்ளி எடுப்பார்கள் திரும்பி சோப்போட்டு கழுவிவிட்டு அரிசி திரும்பவும் போட்டு சமைப்பார்கள். சாதாரண நாள் சமைக்க 6 சமையல் காரர்கள் தான். குழுவுக்கு முனியாண்டிதான் ஆரம்பம் தொடக்கம் முடியும் வரை மலைசாமி, பெருமாள், ராமையா, சுப்பையா சமைத்து 3 நேரமும் பூட்டிய றொலி வைத்து பகிர்வார்கள் மெசினை விட வேகமாக சேவ் பண்ணுவார்கள் எந்த கூட்டத்தையும் சமாளிக்க கூடியவர்கள்.

சாப்பாட்டில் புளிக்கறி, கூட்டுக்கறி, சாம்பார். ரசம், இட்லி, பால்சோறு, சாம்பாறு, உப்புமா, என்பன முக்கியமாகும். இந்த மடத்தை யாரும் குறை கூறியதில்லை. இது ஒரு அன்னச் சரித்திரம் இங்கு வருபவர்கள் வயிறு நிறைந்த திருப்தி கண்டே செல்வர்ரகள். இதனால் எவரும் குறை கூறவில்லை மிஷனில் இன, மத, சாதி, பாகுபாடுகள் இல்லாது செயப்பட்டு வந்தது. கதிர்காமம் வரும் பக்தர்கள் தாம் கேட்டவரங்களை பெற்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த தடவை வந்து இந்த மடத்தில்தான் அன்னதானம் வழங்குவது வழக்கம். இங்கு பிச்சைக்காரர்கள் 100-150பேர் வந்து சாப்பிட்டு செல்வது வழக்கம்.

உற்சவ காலத்தில் கொழும்பில் சாமான் சேகரித்து வருவோம் ஒரு மாதத்திற்கு முதல் விறகுகள் வாங்கிச் சேகரிப்போம். அங்கு 6அடுப்பு, 1952ம் ஆண்டு மூட்டப்பட்ட தீ அரசு அணைக்கும் வரை அணையவில்லை (1977) எப்போதும் எரிந்து கொண்டே இருக்கும் அண்டாவில் ஏதாவது, நீராவது போட்டு இருக்கும். 24 மணிநேரமும் எரியும். வீரக் கொள்ளிகளைப் போட்டு எரிப்பார்கள். சாணமும் புற்று மண்ணும் சேர்ந்து மெழுகு செய்யப்பட்ட அடுப்பு எரியும் போது சூடாகவே இருக்கும். அதாவது இது ஒரு தனி விசேடம் ஆகும். திருவண்ணாமலையில் எரியும் விளக்கு போல் மிஷனில் மூட்டப்பட்ட நெருப்பு தனது சேவை மூடியும் வரை அணைவதில்லை. இராமகிஷ்ண கிளை சார்பாக இதன் பொறுப்பை ஏற்று இருந்தவர். சுவாமி சர்வாதீதனந்தா அவர்களே

**திருவிழா கால நடமுறை**

காலை 4.30 பூசை முடிய 5.00-6.30மணி வரை தேனீர் கொடுப்பார்கள். 8.30 மணிக்கு காலை சாப்பாடு. செல்லக் கதிர்காமம் அங்கு சென்று வருபவர்களுக்கு தண்ணீர் பந்தல் 9.30 மணிக்கு ஆரம்பம். மோர், லெமன்யூஸ் கொடுப்பார்கள்.

கதிர்காம பூசை 3 நேரம் நடைபெறும். பூசை. காலை 4.30-6.00மணி, மதியம் 10.30, இராபூசை 6.00மணி இது ஒவ்வொரு நாளும். சனி காலை 4.30மணிக்க இருக்காது. திருமுழுக்கு என்று சொல்கிற திருவிழா சித்திரை கார்த்திகை. மகோற்சவம் ஆடிமாதம் 15ம் நாளில் கன்னிக்கால் வெட்டி ஒருத்தருக்கும் தெரியாத காட்டுக்குள் போய் அதை வெட்டி 2 கம்பு பூசை பண்ணிக்கொண்டுவாற. முதல் 12 நாளைக்கும் ஒவ்வொரு திருவிழா கடைசி 3 நாளும் திருவிழா, வழக்கமான நேரத்தில் தொடங்கி பின் 1 மணித்தி யாலத்தின் பின் அடுத்த திருவிழா, 14ம் நாள் இரவு சூரன்கோட்டை விகாரை அதற்கு போய்வரும் 15ம் நாள் 8.30 தொடக்கம் கடைசி திருவிழா. விடியற்காலை திருவிழாத் தீர்த்தம் ஆட சூழப்பத்து கொத்தால் மறைத்து முருகனைக் கொண்டு வருவார்கள் கப்புகனார் சூழ வருவார்கள் பின்னால் பனியாள் பொலிஸ், வள்ளியம்மாள் கோயிலுக்குள் போய் வள்ளியம்மாளை தூக்கி எடுத்து கங்கையில் தீர்த்தம் ஆட போகும்.

**கதிர்காமத்து மட கட்டட அமைப்பு**

பெரிய மண்டபம் 150-200 பேர் தூங்க முடியும் உள்ளேயும் விராந்தை வெளியிலும் விராந்தை மேற்கு பக்கம் எங்சின். ஸ்ரீபன் என்பவர்கள்தான் இருந்தார்கள். பின்னால் பெரிய மண்டபம் 300சாப்பாடு போட முடியும். 50ம் ஆண்டு கட்டடம் அப்பா சாமி மடத்தில் தான். 2 வருடத்தில் புதிய கட்டடம் முடிவுற்று திறப்பு விழா நிஸ்கமானந்தா செய்தார். 1952 சிலகாலம் இருந்தார். மடத்தை நிருவகிக்க குழு நியமிக்கப்பட்டு பிரேமாத்மானந்தாவைத் தலைவராக கொண்டு நவரெட்ணம் (மேல் நீதிமன்ற பதிவாளர்) செயலாளராகவும் 15 பேர் கொண்ட குழு இதனை இயக்கி வந்தது. மடத்தில் இருப்போரிடம் பணம் அறவிடப்படவில்லை. அவர்கள் விரும்பி ஏதாவது நன்கொடையாக வழங்கும் போது பெற்றுக் கொண்டதே தவிர பணம் பெறுவதில்லை. திருவிழா கால அன்னதானத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கு பெரிய செட்டியாரிடம் கொழும்பில் பொருட்களை சேகரிப்பதாகவும் வாழை இலை தொடக்கம் அத்தனை மரக்கறியும் 2 நாளைக்கு ஒரு முறை அனுப்பி வைக்கப்படும். பொருட்களை சேகரிக்க செயற்குழு அங்கத்தவர்களும் முனியாண்டியும் போவது வழக்கம். திருவிழா காலங்களில் வரும் பெரியார்களிடம் முனியாண்டிய நாம் பொருள் சேகரிக்க விடுவோம் என பகிடியாகக் கூறுவது வழக்கம். அவ்வாறான அறிமுகங்களைக் கொண்டே பொருட்களை சேகரிப்பதும் காலையில், இங்குள்ளவர்கள் 4 மணிக்கு எழுந்து வேலைகளை ஆரம்பிப்பர். சுவாமியும் கூட ஆலயத்தில் 4 மணிக்கு அன்று தொடக்கம் இன்றுவரை பூசை ஆரம்ப மணி அடிப்பது வழக்கம் சுவாமிஜி அவர்கள் குருமகராஜியை வழிபடுவதால் 'லொக்கர்' என ஒரு அறை தனியாக வரும் ஆண்களுக்கு வழங்கப்படுவது வழக்கம். சுவாமி ஜெபம் பண்ணுவார். காலையில் குந்திய சுவாமி வீடு செல்பவர்கள் கொடுக்கும் அன்பளிப்பை பெற்று ஆசி வழங்கி பற்று சீட்டுகளை வழங்கும்வரை. கோயிலைப் பார்த்த வண்ணம் தின்னையில் அமர்ந்திருப்பார். பின்னர் அறைகளில் எத்தனை பேர் இருப்பார்கள் என்பதையும் பார்த்து அவர்களுக்குரிய சாப்பாட்டை அளவாகக் கொடுப்பார். எப்போதும் காணாமல் வந்ததில்லை. இராமகிருஷ்ண மிஷனில் இருந்து சென்றவர்கள் 3 பேர் சுவாமியோடு 4 பேர் அங்குள்ள வேலைகளைக் கவனிப்பதற்கு ஒவ்வொரு வேலைக்கும் ஆட்கள் இருப்பார்கள் அவர்களை மேற்பார்வை செய்வது காவளாளிகள் இருவர் கரோலிஸ், பியதாஸ என்பவர்கள். இரவு பகலாக காவல் செய்தனர்.

காலையில் எழும்பி மணியோடர். போஸ்டர் ஒடர்கள் கிடைத்ததின் ரிசிட் கொடுத்து விட்டு செல்வார். மிஷனிலிருந்து எந்த வேலைக்காக எங்கு சென்றாலும் உடனேயே முடித்துக் கொடுப்பார்கள் சுவாமிகள் ஒவ்வொரு அறைகளிலும் யார் இருக்கிறார்கள் என்று பார்ப்பார்கள்.மலைக்கு போனவர்கள் வந்து சாப்பிட்ட பின்னரே உண்பது வழக்கம்.

மாநகர சபை கரத்தையிலேயே தான் ஆரம்பத்தில் குப்பைகளைக் கொண்டு செ ல்வார்கள் சுவாமி ஒவ்வொரு பகுதியாகச் சென்று தூய்மையாக இருக்கிறதா? என்று பார்ப்பார். குசினி முதல் மலசலகூடம் வரை மேற்பார்வை செய்வது வழக்கம். ஒரு இடத்தில் யாராவது இருந்து சென்ற அடையாளம் தெரியாதவண்ணம் துப்பரவு செய்வது வழக்கம்.

கதிர்காம மடம் நிறுவ உத்தேசிக்கப்பட்ட ஆண்டு 1950 ஆண்டு அறிந்தளவில் தியாமகராமையிலிருந்து கதிர்காமம் வரை காட்டு றோட் ஒற்றையடிப் பாதைதான் எல்லோரும் வாகனத்தில் வந்து தியாமகராயில் இறங்கி கரத்தை பிடித்து கதிர்காமம் வருவது வழக்கம். திருவிழா காலத்தில் அதிக சனம் ஒன்று இரண்டு குடிகள் தான் ஆதிவாசிகளுடன் வாழ்ந்து வந்ததாகவும் கூறப்பட்டது. கிழக்கு பகுதி ஆட்கள் புத்தளம் போய் புத்தளத்திலிருந்து ஒரு காட்டு பாதை அதில் கதிர்காமத்துக்கு பக்கத்தால போற றோட்தான் அது தெய்வானை அம்மன் கோயிலுக்கும் மடத்துக்கும் இடையில் போறது தான் அது பாதை யாத்திரை ஆட்கள் தான் சென்று இரண்டு பேர் கேள்வியுற்ற அளவில் தமது சொத்துக்களை எழுதி கொடுத்துவிட்டே போவதாகவும் திரும்பி வந்தால்தான் உண்மை என எண்ணி சென்றார்கள். அங்கு சென்று தங்கி இருந்தவார்களும் உண்டு. இவ்வாறு வரும் அடியவர்களுக்கு தங்குமிட வசதி. உணவு என்பவற்றை வழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று எண்ணி மிஷன் இவ்வாறான மடத்தை நிறுவ உத்தேசித்தது. நினைவு சின்னத்தில் சுவாமியின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் அந்தவேளை கொழும்பு இராம கிருஷ்ண மிஷனில் நிஸ்கமானந்தர் நிர்வாகப் பொறுப்பாளராகவிருந்தார்.

யாத்திரையாக வருகின்ற சமய அடியவர்களை கொண்டு சமய பிரசங்கங்களை நடாத்துவதும் பணிகளில் ஒன்று, பஜனைகள் இடம்பெறும். எல்லா மொழி இனமக்களும் கலந்து கொள்வார்கள். காலையில் சுப்பிரபாதம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, போன்ற பாடல்கள் பாடுவது வழக்கம். வருவோர் இது ஆலயமா எனுமளவிற்கு தூய்மை யாக வைத்திருப்பர். சுவாமியின் பழக்க வழக்கங்களில் ஒவ்வொரு அடியவரது நலன் விசாரிப்பது அவர்களுக்குரிய வழிவகைகளை கூறுவது போன்ற அன்னியோன்ய செயற் பாடுகளிலும் ஈடுபடுவதும் முக்கியமானது. இந்திய அடியார்கள் இந்த மடத்துக்கு வந்து செல்லும்போதும் ஆலயத்தைவிட அவர்கள் கதிர்காமத்தில் எங்களுடைய மடத்தில் ஒரு ஈர்ப்பு உண்டு என கூறுவதைப் பிறகுநாமும் உணர்ந்தோம்.

முடிவாக

59ல்மிஷனுக்கு போனேன் அங்கே நான் இருக்கிற காலத்தில் சுவாமி நடராஜானந்தர் இருந்தார். சுவாமி ஔவையானந்தாவும் இருந்தார் சுவாமி நடராஜானந்தா பாடசாலைப் பொறுப்பாக இருந்தார். காலையில் போனால் பின்னேரம் தான் வருவார். அக்கறைப் பற்றிலையும் பாடசாலை இருந்தது. வளங்கள் குறைவு. ரெட்டைதட்டு வஸ்சில் மேல் கழற்றி விட்டு கீழ மட்டும் தான் ஓடும். எஞ்சின் கவர் பண்ணாத பஸ் எஞ்சின்கவர் பண்ணா வெப்பம் கூட, 1 மணித்தியாலம் நின்றுதான் போகும். சிவபுரிதான் கடேசி இடம் அதற்கு அங்கால எந்த தெருக்குடியிருப்பும் இருக்கல்ல. சிவபுரி சிவாலயத்துக்கு சுவாமிமார்க்கு கடமையாற்ற ஒருவருடத்துக்கு இரண்டுபேர் நியமிப்பாங்க. இந்த மடத்தில் உண்மையில் ஒரு குழுவேலையாக எல்லோரும் இணைந்து செயற்படுவது வழக்கம். சுவாமி தன்னுடைய வேலைகளை தாமாகவே ஆற்றுவது எல்லோருடைய நலனிலும் அக்கறை காட்டுவது ஏழை, பணக்காரன் என்ன ஆண் பெண் என்ற பாகுபாடு இன்றி தன்னுடைய சேவையில் முறைப்படி ஆற்றிவருவார். அத் தொண்டில் ஆரம்பத்தில் ஈடுபட்ட நான் பின்னர் கதிர்காமத்து மடத்திற்கு அனுப்பப்பட்டேன். அங்கு என் அனுபவம் அலாதியானது. அரசு மடத்தை பொறுப்பேற்றதும் ஒரு மனிதனுடைய வாழ்க்கை முடிவுறுவது போல இந்த மிஷனது சேவையும் நிறைவு பெற்று விட்டது எனலாம்.

மிஷனது வரலாற்றில் செயற்பாட்டுப் பதிவில் கதிகாமத்துக் கிளை(மடம்) கவனிப் பிற்குரியது. அதில் சுவாமி சர்வாதீதானந்தாஜியின் இடம் மிகுந்த கவனிப்பிற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “அன்பும் ஆதரவும் அவர் அடையாளம்”

### செல்வராசா–நடேசமூர்த்தியினுடனான நேர்காணல்

ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாஜீயுடன் நெருக்கமான ஈடுபாட்டை வைத்திருந்தவரும், இராமகிருஷ்ண மிஷன் பொருளாதார வேலைகளின்போது கைகொடுத்த, கைகொடுத்து வரும் தொண்டர்கள், நலன்விரும்பிகளுள் ஒருவருமான செல்வராஜா-நடேசமூர்த்தியின் மனப்பதிவிலிருந்து...

இருவகைகளில் சுவாமிஜீக்கும் எனக்குமான தொடர்பு நிலைத்திருந்தது. ஒன்று இராமகிருஷ்ண மிஷன் குருகுல வளர்ச்சியில் இயன்ற பங்களிப்பை வழங்கிடும் விருப்பில் எமது ‘சோமசுந்தரம் Stores செங்கலடி’ ஊடாக ஏற்பட்ட உறவு, மற்றது மாமாங்கம் திருத்தொண்டர் சபையினூடான உறவு.

இருநிலைகளினூடாகவும் சுவாமிஜியினுடன் பழகக்கிடைத்த வாய்ப்பு மகிழ்வானது. அன்பும் ஆசியும் எமக்கு ஆறுதலைத் தந்தன. மிஷனுக்கான பொருளாதார தேவைகளின் போது எம்மால் இயன்ற பங்களிப்பை விருப்புடன் வழங்க, ஈடுபாடு காட்டத்தக்கதாய் அவரும் எம்மை ஒரு சக குழந்தையாய் பயணியாகவே பார்த்தார், உபசரித்தார், வழி நடத்தினார்.

மாமாங்கேஸ்வரர் திருத்தொண்டர் சபையின் முன்னேற்றத்துக்கு அறிவுரை கூறும் சுவாமிஜீ எப்படியோ எமது அழைப்புக்களுக்கு செவிமடுத்து நிகழ்வுகளுக்கு வந்து விடுவார். அவரை அழைத்து வருவது (Car இல்) எனது வழக்கமாக இருந்தது. எப்போதும் சபையின் செயற்பாடுகள் பற்றி விசாரிக்கும் அவர் ஆலோசனைகளும் கூறத் தவற மாட்டார். அவரிருக்கும்போது மிஷனுடனான நெருக்கம், ஆதரவு அதிகமாகவே இருந்தது. வரவர குறைந்து வருவதாகவே தெரியுது.

அவரது ஆதரிப்பு எப்படியோ எமது மனச்சிக்கல்களை எல்லோரதும், எல்லாவற்றினதும் முன்னேற்றத்தில் அக்கறை, ஆதரவு கொண்ட சுவாமிஜீ என்றும் நினைவிலிருப்பார் என்பது உறுதி.

**நேர்காணல்களில் பங்கெடுத்தோர்:**

**திரு. க. மதிவண்ணன்**
**சிவஸ்ரீ சாம்பசிவம்**
**திரு. சிவானந்தராஜா**
**திரு. த. விவானந்தராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழற்படங்களும் நினைவுச் சின்னங்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தின் வளர்ச்சிப் பாதை



மட்டுநகரில் மாணவரில்லம் ஆரம்பமாகிய சிவானந்த வித்தியாலய மண்டபம் - 1929



ஆரம்ப காலத்தில் மட்டுநகரில் ஆஸ்ரமப் பணிகள் நடந்த விவேகானந்த மண்டபம் - 1928



06.06.1926 இல் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில் மாணவரில்லம் ஆரம்பிக்கப்பட்ட வெள்ளிக்கிழமை மடத்தின் முகப்பு.
இவ் இல்லம் 26.11.1929 முதல் மட்டக்களப்பில் இயங்கத் தொடங்கியது.




1931.05.12இல் ஆரம்பிக்கப்பட்ட "சிவாலயம்" என்ற மாணவரில்லம்



1972.05.27இல் ஆரம்பிக்கப்பட்ட மாணவரில்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த துறவிகளின் வருகை



சுவாமி விபுலானந்தர், சுவாமி அவினாசானந்தர்
சுவாமி யதீஸ்வரானந்தர், சுவாமி அசங்கானந்தர் (1932)



ஸ்ரீமத் சுவாமி வீரேஸ்வரானந்தஜியை கட்டுநாயக்க
விமான நிலையத்தில் வரவேற்றல் (10-05.1968)



ஸ்ரீமத் சுவாமி வீரேஸ்வரானந்தஜியை ஊர்வலமாக
அழைத்து வருதல் (11.05.1968)



ஸ்ரீமத் சுவாமி வீரேஸ்வரானந்தஜிக்கு
[ராமகிருஷ்ண சங்கத்தின் 10வது தலைவர்]
மட்டக்களப்பு மாநகரசபையில் வழங்கப்பட்ட வரவேற்பு



சுவாமி வீரேஸ்வரானந்தஜி
புதிய மாணவர் இல்லத்திற்கு
அடிக்கல் நாட்டுதல் (11.05.1968)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முந்த துறவிகளின் வருகை



மாநகரசபையில் வழங்கிய வரவேற்புக்கு பதிலளிக்கும்
ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தஜீ மகராஜ் (11.12.1977)
(13வது தலைவர், ராமகிருஷ்ண சங்கம்)



மாநகரசபையில் வழங்கிய வரவேற்புக்கு பதிலளிக்கும்
ஸ்ரீமத் சுவாமி தபஸ்யானந்தஜீ மகராஜ் (09.06.1977)
(தலைவர், சென்னை ராமகிருஷ்ண மடம்)



ஸ்ரீமத் சுவாமி கம்பீரானந்தஜீ மகராஜ்
(பொதுக் காரியதரிசி, ராமகிருஷ்ண சங்கம்)
வருகை 28.07.1969



ஸ்ரீமத் சுவாமி பூதேசானந்தஜீ மகராஜ்
(12வது தலைவர், ராமகிருஷ்ண சங்கம்)
வருகை 02.10.1980



ஸ்ரீமத் சுவாமி கஹனானந்தஜீ மகராஜ்
(உப தலைவர், ராமகிருஷ்ண சங்கம்)
வருகை 15.03.1992



ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானந்தஜீ மகராஜ்
(உப தலைவர், ராமகிருஷ்ண சங்கம்)
வருகை 27.05.1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருகுலங்களும் அதன் உட்கட்டமைப்புக்களும்



1934இல் அமைக்கப்பெற்ற
பிரார்த்தனை
மண்டபம்



சாரதா இல்லத்தில் அமைந்துள்ள
அன்னை சாரதை கோயில்



ஆரம்பகாலக் கோயில்
கயிலையிலிருந்து
கொண்டுவரப்பெற்ற சிவலிங்கம்



மட்டக்களப்பு ஆஸ்ரமம், மாணவர் இல்லம்




மட்டக்களப்பு சாரதா மகளிர் இல்லம்



காரைதீவு சாரதா சிறுமியர் இல்லம்




1941இல் அமைக்கப்பெற்ற சிவபுரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருகுலங்களும் அதன் உட்கட்டமைப்புக்களும்



மாணவரில்ல படிப்பு மண்டபம்




சாரதா மகளிரில்ல படிப்பு மண்டபம்



புனரமைக்கப்பெற்ற சிவபுரி



விபுலானந்தர் ஞாபகார்த்த மண்டபம் - 1963



ஆச்சார்ய மந்திர்
1941



விவேகானந்த பவன் - சாதுக்கள் இல்லம்
02.10.1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவரில்லத்தின்
## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆலயமும் மாணவர்களும்



மாணவர்களால் அலங்கரிக்கப்பட்டு ஜொலிக்கும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் ஆலயம்



மாலைப் பிரார்த்தனைக்குத் தயாராக...



சுவாமிஜி உடன் இணைந்து பஜனையில்...




மாலைப் பிரார்த்தனை முடிந்ததும் கசடறக் கற்கும் முயற்சியில்..




மாலை தொடுக்கும் பணியில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்கள் தோட்டப் பயிற்சியில்



உணவுப் பயிர்ச் செய்கையில்...



உணவுப் பயிர்ச் செய்கையில்...



ஆன்மீக சூழலை உருவாக்கும் பணியில்...



நந்தவனத்தில் ஆனந்தமாக...



பூத்துக் குலுங்கும் பூந்தோட்டம்



செழிப்புமிகு ரோஜா மலர்வனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பு நிர்மாணப் பயிற்சிகளில் மாணவர்கள்



காலையில் யோகப்பயிற்சி



மாலையில் விளையாட்டுப் பயிற்சி



புதைந்துகிடக்கும் ஆற்றலை
வெளிப்படுத்தும் முயற்சி



பாரம்பரியங்களைப் பேணும்
முயற்சி



ஆன்மீகக் கருத்துக்களை வாரியிறைக்கும் பணி



ஆன்மீக, பண்பாட்டு வளர்ச்சிப் பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதா மகளிர் இல்லம்



தாய்மையின் பீடமான அன்னை



தாய்மையின் பீடமான அன்னை



தாய்மையின் பீடமான அன்னை



புதிய மகளிர் இல்லத்திற்கு அடிக்கல் நாட்டுதல்
ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தஜி (02.06.1982)



மகளிர் இல்லத்தில் புதிய கட்டடத்திற்கு
கால்கோள் நாட்டுவிழா – ஊர்வலம்



புதிய மகளிரில்லத் திறப்பு விழா
ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தஜி
03.06.1985





ஸ்ரீமத் சுவாமி பிரபானந்தஜி, உப–காரியதரிசி, ராமகிருஷ்ண சங்கம்
கலாச்சார மண்டபத் திறப்பு விழா (03.12.1993).
உடன் இருப்பவர் திருமலை–மட்டுநகர் ஆயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீக, கல்விப் பயிற்சிகளில் மாணவியர்




பிரார்த்தனைக்குத் தயாராக...



நாளாந்த பஜனையில்...



தையற் பயிற்சியில்...



படிக்கும் மண்டபத்தில்...



மாலை கட்டும் பணியில்...



தொழிற் பயிற்சியில்...



இசைப் பயிற்சியில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் குறிக்கோளை அடைய அயராது உழைக்கும் மாணவியர்



பாடசாலை செல்லத் தயாராக...



மாலையில் விளையாட்டு



பூந்தோட்டத்தைப் பேணும் பணியில்...



ஆன்மீக சூழலை உருவாக்கும் பணியில்...



ஆன்மீகக் கருத்துக்களை எடுத்தியம்பும் பணியில்...



ஆன்மீக, கலை கலாச்சார வளர்ச்சிப் பணியில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிக்களச் செயற்பாடுகளில் மாணவியர்



கணினிப் பயிற்சியில்...



இல்ல விழாவில்...







மாணவியர் ஆக்கிய கோலங்கள் சில







வெற்றி முரசு முழங்கிய மாணவியர்களுடன் அவர்கள் வென்றெடுத்த நற்சான்றிதழ்கள், பரிசுகள், கேடயங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவு சிறுமியர் இல்லம்





31.01.1937 இல் ஆரம்பிக்கப்பெற்ற
சிறுமியர் இல்லம்

ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தஜி
புதிய இல்லத்திற்கு அடிக்கல் நாட்டுதல்
(22.08.1991)



ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானந்தஜி
பொதுக்காரியதரிசி, ராமகிருஷ்ண சங்கம்
புதிய இல்லத் திறப்பு விழா



ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானந்தஜி
புதிய இல்லத் திறப்பு விழா
(27.05.1994)



காலையில் உடற்பயிற்சி



காலையில் படிப்பு



பாடசாலை செல்லத் தயாராக...



மாலையில் விளையாட்டு



புத்தாடை பூண்டு புதுவருடத்தை
வரவேற்கும் மாணவியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சாரதா பாலர் பாடசாலை




இறையருள் பெற்று
முன்னேறத் துடிக்கும் குழந்தை



இசைக்குழு அணிவகுத்து
சுவாமிஜிக்களை வரவேற்கிறது



குழந்தைகளின்
கைப்பணிக் கண்காட்சி



கடமையில் கண்ணாயிருக்கும்
சாரணரைத் தட்டிக்கொடுக்கும்
ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தஜி



ஆசிரியர்களுடன்
பாலர்பாடசாலைக் குழந்தைகள்



விவேகானந்தபுர பாலர்
பாடசாலையுடன் இணைந்து
செய்த கைப்பணிக் கண்காட்சி



ஸ்ரீமத் சுவாமி
ஆத்மகனானந்தஜியுடன்




சுவாமிஜிக்களின் வரவால்
மகிழ்ந்திருக்கும் மழலைகள்




ஆன்மீக உடைதரித்து
அணிசெய்யும் மழலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மாணவரில்லம்



1932இல் முதற்குழு மாணவர்களுடன்
சுவாமி விபுலானந்தஜி, சுவாமி சுந்தரானந்தஜி



யோகாசனம் செய்யும் மாணவர்கள்
1932



யோகாசனம் செய்யும் மாணவர்கள்
1960களில்



மாணவரில்ல திறப்பு விழா - 27.05.1972
சுவாமி பிரேமாத்மானந்தஜி
அருகில் சுவாமி சர்வாதீதானந்தர்



மாணவரில்லத் திறப்புவிழா தினத்தில் ஹோமம்
வளர்ப்பவர் சுவாமி விருபாக்ஷானந்தஜி



மாணவரில்லத் திறப்புவிழா - மாலை நிகழ்ச்சி
27.05.1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு இ.கி.மி.மாணவரில்ல
புதிய கட்டடத்திறப்புவிழா
நிகழ்வில் இடம்பெறும் ஹோமம்,
ஆராதனை நிகழ்வு.



மாணவரில்ல திறப்பு விழா
மாலை நிகழ்வில் உரையாற்றும்
ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாஜீ மகராஜ்



மட்டக்களப்பு இ.கி.மி.மாணவரில்ல
புதிய கட்டடத்திறப்புவிழா



அடியவர்களுக்கு ஆசிவழங்கும் சுவாமி
அவ்வையானந்தாஜீமகராஜ்,
சுவாமி ஜிவனாநந்தஜீ மகராஜ்,
சுவாமி ஆத்மகனாநந்தாஜீ மகராஜ்



கொழும்பு சாரதாசமிர்த்தி
அங்கத்தவர்களுடன் சுவாமிஜீ



கட்டடத்திறப்பு விழாவின் போது









மாணவரில்லத்துக்கு விஜயம் செய்துள்ள முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் பிரமுகர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆராதனையில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீமத் சுவாமி ,
கதிர்காமத்து இராமகிருஷ்ண மடம்.



மாணவரில்லத்தில் குழுமியிருக்கும் பிரமுகர்கள்
இடமிருந்து வலமாக இராசதுரை(முன்னாள் MP)
K.கணபதிப்பிள்ளை(F.R.G.S. சிவானந்த
வித்தியாலய முன்னால் அதிபர்),டட்லி சேனநாயக்கா
(முன்னாள் பிரதமர்), ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தாஜீ
மகராஜ், ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தாஜீ மகராஜ்,
திரு.செல்வநாயகம்(தமிழரசுக்கட்சி, முன்னாள்
தலைவர்), கந்தசாமி (முன்னால் ஆசிரியர்.
சிவானந்த வித்தியாலயம்).




மட்டக்களப்பு இ.கி.மிஷன் மாணவரில்ல
புதிய கட்டடத்தில் பிரதிஷ்டை
செய்வதற்கான திருமூவரது திருவுருவப்
படங்களைத் தாங்கிய ஊர்வலம்.



யோகா செய்யும் மாணவர்கள்



கதிர்காமத்து இராமகிருஷ்ண மடத்தில்
தொண்டர்கள், ஸ்ரீமத் சுவாமி சர்வாதீதானந்தாஜீ
மகராஜுடன்.









கதிர்காமத்து இராமகிருஷ்ண மடத்தில் தொண்டர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரில்ல பொன்விழா நிகழ்வுகள்
## 1926–1976



கொடியேற்றத்துடன் நிகழ்வுகள் ஆரம்பம்
06.06.1976



அரசடியிலிருந்து நகரமண்டபத்தை நோக்கிச் செல்லத் தயாராகும் பேரணி



ஆனைப்பந்தியிலிருந்து நகரமண்டபத்தை நோக்கிச் செல்லும் பேரணி



இந்துக் கல்லூரியிலிருந்து வந்த பேரணியும் இணைந்து செல்லும் காட்சி



மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழியும் விழா மண்டபம்



வந்தவர்களை வரவேற்கும் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜி




சமயப் பெரியார்கள் கூடியிருக்க இனிதே தொடரும் நிகழ்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவளவிழா நிகழ்வுகள்

## நிவாரணப் பணிகள்



சமயச் சடங்குகளுடன் பவளவிழா
நிகழ்ச்சிகள் ஆரம்பம்
06-06-2000



ஆரோக்கிய வாழ்விற்கான
வழிகாட்டல் வழங்கப்படுகிறது
இடம்: வாகரை



இலவச மருத்துவ முகாமில்
பயன்பெறத் திரண்ட மக்களில்
ஒரு பகுதியினர் (வாகரை)



நோயாளர் பரீட்சிக்கப்படுகின்றார்
இடம்: வாகரை



நோயாளர் பரீட்சிக்கப்படுகின்றார்
இடம்: வாகரை



வெள்ள நிவாரணப் பணி
இடம்: சித்தாண்டி

## ஆளுமைவிருத்திச் செயலமர்வுகள்



ஆளுமைவிருத்திச் செயலமர்வை
மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பவர்
ஸ்ரீமான் ந. கிருஷ்ணமூர்த்திஜீ



களுதாவளை
மகா வித்தியாலயத்தில்
22-11-2000



விபுலானந்தர் மண்டபத்தில்
ஆசிரிய பயிலுநர்களுக்கு
24-11-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவளவிழா நிகழ்வுகள்

### ஆளுமைவிருத்திச் செயலமர்வுகள்





கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரத் தொண்டர் ஸ்ரீமான் ந. கிருஷ்ணமூர்த்திஜி அவர்கள் நடாத்திய 6 ஆளுமைவிருத்திச் செயலமர்வுகளில் 39 பாடசாலைகளைச் சேர்ந்த 413 மாணவர்கள் பங்குபற்றினர்.
(20.11.2000 - 25.11.2000)

### ஆன்மீக புத்தகக் கண்காட்சிகள்





களுதாவளையில் சமய நிகழ்வுகளுடன் ஆரம்பமாகும் புத்தகக் கண்காட்சி.
15 பாடசாலைகளைச் சேர்ந்த 14,000 மாணவர்கள் கண்காட்சியைக் கண்டு பயனடைந்தனர்.
16.03.2001 - 17.03.2001





செங்கலடி மத்திய கல்லூரியில் நடந்த ஆன்மீக புத்தகக் கண்காட்சி.
10 பாடசாலைகளைச் சேர்ந்த 9,000 மாணவர்கள் கண்காட்சியைக் கண்டு பயனடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவளவிழா நிகழ்வுகள்

## பண்பாட்டு நிகழ்ச்சிகள்




பண்பாட்டரங்கு நிகழ்ச்சிகளை நடாத்த வருகை தந்திருந்த
ஸ்ரீமத் சுவாமி யுக்தாத்மானந்தஜீ, ராமகிருஷ்ண மிஷன், மைசூர்



களுதாவளையில் கண்ணப்பர் நாடகம்



பண்பாட்டரங்கில் சபையோர்





பண்பாட்டரங்கில் மாணவர்களின் பண்பாட்டு நிகழ்ச்சிகள்

நான்கு பாடசாலைகளில் நடந்த பண்பாட்டு அரங்குகளில் சுமார் 600 மேல் வகுப்பு மாணவர்களும்,
300 ஆசிரியர்களும் பங்குபற்றி பயனடைந்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலை
## (ஆரம்பம் : 1963 விஜயதசமி தினம்)
## ஆண்டுவிழா நிகழ்ச்சிகள் ௨௦௦௦



விழாக்கொண்டாடும் மகிழ்ச்சிப் பூரிப்பில்
மாணவச் செல்வங்கள்



ஸ்ரீமான் ந. கிருஷ்ணமூர்த்திஜி
பிரதம விருந்தினர் உரை





மாணவர்களின் ஆடல் பாடல்கள்







மாணவர்களின் ஆடல் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணப் பணிகள்



மாந்தீவு நோயாளர்களுக்கு
உணவளித்தல்



அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு
இலவச சீருடை வழங்கல்



வெள்ள நிவாரணப் பொருட்கள்
வழங்கப்படுவதற்குத் தயாராக உள்ளது.



வெள்ள நிவாரணம் பெறக்
காத்திருக்கும் மக்கள்



மாணவர்களுக்கு இலவச அப்பியாசப்
புத்தகங்கள் வழங்கல்



வெள்ள நிவாரணப்பணி
20.11.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கை விஜய, சிகாகோ சொற்பொழிவு நூற்றாண்டு விழாக்கள்












இலங்கை விஜய நூற்றாண்டு விழா
ஞாபகார்த்த முத்திரை வெளியீடு முதல் நாள் உறை



ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜீ மகராஜ்,
சிகாகோ சொற்பொழிவு நூற்றாண்டு விழா



பௌத்த பிரதிநிதி



கிறிஸ்தவ பிரதிநிதி



இஸ்லாமிய பிரதிநிதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விழாக்கள்

## ராமகிருஷ்ண மிஷன் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் - 1997





ராமகிருஷ்ண மிஷன் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் ஆரம்ப ஊர்வலம் ~ 01.05.1997

## இதர விழாக்கள்



ஸ்ரீமத் சுவாமி ஸ்ரீதரானந்தஜி (சிக்காகோ சொற்பொழிவு நூற்றாண்டு விழாவின் போது)



தாழங்குடா ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ள திருவுருவப் படங்கள்



புனரமைக்கப்பெற்ற சிவபுரியை திறந்து வைக்கும் ஸ்ரீமத் சுவாமி ராஜேஸ்வரானந்தஜி

## ஆன்மீக புத்தகக் கண்காட்சி






மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள் கூறும் ஆன்மீகக் கதைகளை ஆர்வத்துடன் கேட்கும் மாணவர்கள்.....

ஆன்மீக புத்தக் கண்காட்சியை கண்டு பயனுறும் மாணவர்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தபுரம்

சுவாமி விவேகானந்தரின்
இலங்கை விஜய
நூற்றாண்டு ஞாபகார்த்த
மாதிரிக் கிராமம்.
அங்குரார்ப்பணம் :
04.05.1997



ஒவ்வொன்றும் தனியான
கிணறு, மலசல கூடம்,
சிறு வளவு போன்ற
வசதிகளைக் கொண்ட
27 வீடுகளை உடையது
இந்த மாதிரிக் கிராமம்.




திட்டம் நிறைவேற அயராது
உழைத்த சுவாமிஜிக்களும்
மற்றும் பிரமுகர்களும்



ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி மகராஜ்
குடிமனைகளை திறந்து வைத்து
மக்களிடம் கையளிக்கிறார்



சுவாமிஜியின் பெயரால்
பாலர் பாடசாலை கிடைத்த
மகிழ்வுடன் மழலைகள்



வீர இளைஞர்களின் பாரம்பரிய
கலை, கலாச்சார நிகழ்வுகள்



குழந்தைகள் விளையாட்டுப் பூங்கா



ஆலய மைதானத்தில்
கூடியிருக்கும் மக்கள்



பாலர் பாடசாலை



சனசமூக நிலையம்




புதிய பாதைகளுடன் கூடிய வீடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்ல மாணவர்களும், அவர்களின் பங்களிப்பும்




ஸ்ரீமத் சுவாமி நடராஜனந்தாஜீ
மகராஜுடன் குருகுலத்து மாணவிகள்



ஸ்ரீமத் சுவாமி அபிஷானந்தாஜீ
மகராஜுடன் குருகுலத்து மாணவர்கள்





மாணவரில்ல கனிட்ட மாணவர்கள் - 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மாணவரில்ல சிரேஷ்ட மாணவர்கள் - 1986




மாணவரில்ல கனிஷ்ட மாணவர்கள் -1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரகா மகளிர் இல்ல மாணவிகள்-1986






காரைதீவு சாரகா மகளிர் இல்ல மாணவிகள்-1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதா மகளிர் இல்ல மாணவிகள்-1987






காரைதீவு சாரதா மகளிர் இல்ல மாணவிகள்-1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மாணவரில்ல சிரேஷ்ட மாணவர்கள் - 1987



மாணவரில்ல கனிஷ்ட மாணவர்கள் -1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மாணவரில்ல சிரேஷ்ட மாணவர்கள் - 1989



மாணவரில்ல மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாரதா மகளிர் இல்ல மாணவிகள்-1989



காரைதீவு சாரதா மகளிர் இல்ல மாணவிகள்-1989



காரைதீவு சாரதா மகளிர் இல்ல மாணவிகள்-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் இல்ல மேலாளர்கள்



சுவாமி விபுலானந்தர்
(1926-29, 1933-39)



நான் இயந்திரம் - நீ இயந்திரி



சுவாமி கூடஸ்தானந்தர்
(1930-32, 1953-54)



சுவாமி சுந்தரானந்தர்
(1932-1933)



சுவாமி நிஷ்காமானந்தர்
(1939-1942)



சுவாமி ரிதஜானந்தர்
(1942-1945)



சுவாமி ரிஷிகேசானந்தர்
(1945-1946)



சுவாமி நடராஜானந்தர்
(1946-53, 1954-67)



சுவாமி கேதாரேஸ்வரானந்தர்
(உதவியாளர்: 1935-38)



சுவாமி அஜயானந்தர்
(உதவியாளர்: 1956-63)



சுவாமி ஜீவனானந்தர்
(13.3.1967 - 1.7.1990)
(30.05.1991-04.02.2006)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Ramakrishna Kurukula Past Pupils' Association Members-2012








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A letter from Swami Vipulananda**



PRABUDDHA BHARATA
A MONTHLY JOURNAL
(STARTED IN 1896)

TEL. OFFICE : LOHAGHAT

EDITORIAL OFFICE :
P.O. MAYAVATI
Via LOHAGHAT
Dt. ALMORA (INDIA)

No. 4

1st January 1940

To Kailasam

அன்புள்ள கைலாசம் அறிவது,

இன்று [illegible] நாளை

பிரபுத்த பாரதப் பத்திரிகைக் கடமையை இன்று முதல்
[illegible]
ஆரம்பிக்கிறேன். [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] பெரியவர்களுக்குச் சேவை [illegible]
[illegible]
[illegible]


உன்னுடைய

அன்பான கடிதங்கள் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அன்புள்ள விபுலாநந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Swami Jeevanananda Birth certificate



Registration B 35

උප්පැන්න ලේකම් පොත

பிறப்புப் பதிவுப் புத்தகம்

REGISTER OF BIRTHS

Births and Deaths Registration Ordinance (Cap. 94)

Province :

District :

Division :

No. 2439

| | |
|---|---|
| 1. Date and Place of Birth | |
| 2. Name | |
| 3. Sex | |
| 4. Name and Surname of Father | |
| 5. Name and Maiden Name of Mother, and Race | |
| 6. Rank or Profession and Race, of Father | |
| 7. Were Parents Married ? | |
| 8. Name in full and Residence of Informant and in what capacity he gives information | |
| 9. Informant's Signature | |
| 10. When Registered | 1925 |
| 11. Signature of Registrar | |
| 12. Name if added or altered after Registration of Birth | |
| 13. Date of addition or alteration and Registrar-General's or Provincial or Assistant Provincial Registrar's Signature | Date 3/4/90 Additional District Registrar |

4 - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரில்லத்து மேலாளர்களும்
# மன்றத்து நிர்வாகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Swamis-in-charge of the Ashrama and the Managers of the Students' Home, Batticaloa

| FROM | To | SWAMIS | |
|---|---|---|---|
| 1926 | 1929 | Swamis Vipulanandaji, Ananadanandaji. | |
| | | Assistant: Br. Sivadas (Later Swami Paripurnananda) | |
| 1930 | 1932 | Brahmachari Avyakta Chaitanya (Later Swami Kutasthananda) | |
| 1932 | 1933 | Swami Sundarananda. | Assistant ;Swami Paripurnanada |
| 1933 | 1939 | Swami Vipulananda. | Assistant ; Swami Kethareswarananda |
| 1939 | 1942 | Swami Nishkamananda | |
| 1942 | 1945 | Swami Ritajananda | |
| 1945 | 1946 | Swami Hrishikeshananda | |
| 1946 | 1953 | Swami Natarajananda | Assistant; Swami Sarvatitananda (1952) |
| 1953 | 1954 | Swami Kutasthananda | Assistant Swami Sarvatitananda |
| 1954 | 1967 | Swami Natarajananda | Assistant; Swami Sarvatitananda (1956)<br>Swami Avyayananda (1956-1963)<br>Swami Jivanananda (1966-1967) |
| 1967 | 1990 | Swami Jivanananda | Assistant: Swami Rajeswarananda (1988-1990) |
| 1990 | 1991 | Swami Rajeswarananda (Acting for Swami Jivanananda) | |
| 1991 | 2006 | Swami Jivanananda | Assistant: Swami Ajaratmananda (1992-2006)<br>Swami Tadbhashananda (1999-2006)<br>Swami Gnanamayananda (2005-2006) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 2006 | 2010 | Swami Ajaratmananda | Assistant: Swami Tadbhasananda (2006-2008)<br>Swami Gnanamayananda (2006-2010)<br>Swami Mathruganananda (2008)<br>Swami Jogirajananda (2009-2010) |
| 2010 | 2011 | Swami Gnanamayananda | Assistant: Swami Jokirajananda (2010-2011) |
| 2012 | todate | Swami Kapaleeshananda | Assistant: Swami Jokirajananda (2012-to date) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஷ்ண குருகுல பழைய மாணவர் மன்றம், மட்டக்களப்பு

நிர்வாகக்குழு

ஆரம்பகாலம்:- 1986-1994

தலைவர் :- சி.வினாயகமூர்த்தி.
செயலாளர் :- கே.வரதராஜன்.
பொருளாளர் :- எஸ்.சூரியகுமார்.

1994-2005

தலைவர் :- சி.வினாயகமூர்த்தி.
செயலாளர் :- பி.சோமசுந்தரம்.
பொருளாளர் :- எஸ்.சூரியகுமார்.

2005-2010

தலைவர் :- க.மதிவண்ணன்.
செயலாளர் :- து.பிரதீபன்.
பொருளாளர் :- சி.மதுசூதனன்.

2011ல் இருந்து

தலைவர் :- க.மதிவண்ணன்.
உபதலைவர் :-சி.யசோதரன்.
செயலாளர் :- சி.கோவிந்தன்
உப செயலாளர் :- பிரான்சிஸ்-மகேந்திரன்.
பொருளாளர் :- எஸ்.அருள்ஞானேஸ்வரி.

நிருவாக உறுப்பினர்கள்-

1. கே.வினாயகமூர்த்தி.
2. பி.ராமலிங்கம்.
3. பி.சோமசுந்தரம்.
4. ரி.லோகேஸ்வரன்.
5. சி.மதுசூதனன்
6. கே.ஜே.பாக்கியராஜா.
7. கே.ஜெகேஸ்வரன்.
8. கே.வராதராஜன்.
9. எஸ்.நல்லரெத்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

திரு. க. மதிவண்ணன்

திரு. த. விவானந்தராசா

திரு. து. பிரதீபன்

திருமதி. தவதர்சினி சுரேஷ்குமார்

சிவஸ்ரீ. த. சாம்பசிவம்.

திரு. இ. விஜயகுமார்

திரு. க. வரதராஜன்

திருமதி. அருள்ஞானேஸ்வரி சண்முகராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிப் பூக்கள் காணிக்கை

அரவணைப்பதில் தாயாகவும், ஆதரிப்பதில் பெரு விருட்சமாகவும், இல்லறத்தார்க்குப் பெரு விருந்தாகவும், ஈகைக்கு இலக்கணமாகவும் எம்மிடையே வாழ்ந்த ஒப்பற்ற துறவி ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்தஜீ மஹராஜ் அவர்களை வெவ்வேறு கோணங்களில் கண்டோரின் மனப்பதிவுகளைத் துலாம்பரமாகக் காட்டும் இவ் வரலாற்று ஆவணம் வெளியிடு வதற்கெனத் திட்டமிடப்பட்ட காலத்தையும் கடந்து வெளிவருவது இறை செயலேயாகும்.

அன்பர்களின் அனுபவப் பகிர்வு தொடர்பான இந்நூலில், சுவாமிகள் தொடர்பான சில விடயங்கள் பல அன்பர்களால் தொட்டுக்காட்டப்படும் நிலையில் அவர்கள் ஒவ்வொரு வரும் குறிப்பிடும் காலங்களிடையே முரண்பாடுகள் காணப்படுவது தவிர்க்க இயலாத தாகின்றது. எனினும் அவற்றிடையே ஒரு பொதுத் தொடர்பிருப்பதையும் கவனிக்க.

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பிருந்தே சுவாமி ஜீவனாநந்தஜீ மஹராஜ் அவர்கள் தொடர்பான அனுபவப் பகிர்வுகளும், ஆக்கங்களும் திரட்டப்பட்டதால் அந்நீண்டகாலப் பகுதிக்குள் ஆக்கங்கள் தந்தோரில் சிலரும், ஆக்கங்களில் குறிப்பிடப்படுவோரில் சிலரும் இறைபதமெய்தியதுடன், சிலர் பதவி நிலைகளில் உயர்ந்தும், சிலரது பணிநிலையங்கள் வேறுபட்டும் காணப்படுவது ஆக்கங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வாசகர்கள் அவ்வப்போது அதை உணர்ந்து கொள்வார்களாக.

ஆரவாரமற்று சிறிதுகாலம் உறங்கிக் கிடந்த இந்த நூல் வெளியீட்டுப்பணி உத்வேகத் துடன் எழுச்சிபெற்று இன்று கைகூடுவதற்கு பங்காற்றிய பங்காளர் பலராவர். இவ்வகையில் 'ஜீவனாநந்தம்' எனும் பெயரில் வெளிவரும் இச்சிறப்பு மலருக்கு ஆசிச்செய்திகள் தந்துதவிய பெருந்தகைகளையும், மிஷனின் அணுக்கத் தொண்டர்களாக சுவாமிகளுடன் பழகியதால் ஏற்பட்ட அனுபவப் பகிர்வுகளை எழுத்துவடிவில் தந்துதவிய அன்பர் களையும், சிறப்பு ஆக்கங்கள் சமர்ப்பித்து மலரைச் சிறப்பித்த பெரியோர்களையும் மலர்க்குழுவின் சார்பில் நினைந்து எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின் றோம்.

மன்றத்தின் மூத்த உறுப்பினர்களாக இருந்து மலர்வெளியீட்டுப் பணியின் தொடர் செயற்பாடுகளுக்கு அவ்வப்போது உரமளித்த சகோதரர்களான திரு.க.மதிவண்ணன், திரு.க.வினாயகமூர்த்தி, திரு.ஸ்ரீசிவானந்தராஜா ஆகியோருக்கு எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அவ்வப்போது ஆக்கங்களையும் அனுபவப் பகிர்வுகளையும் அச்சுப் பதிப்புச் செய்து வடிவம் கொடுத்த எங்கள் சகோதரிகள் திருமதி.தவதர்சினி-சுரேஷ்குமார், செல்வி.தீபா, ஆகியோருக்கும், அட்டைப் புகைப்படங்களை வடிவமைப்புச் செய்து உதவிய தம்பி இராமையா-விஜயகுமார் அவர்களுக்கும், கட்டுரைகளைத் திருத்தம் செய்து உதவிய தேசகீர்த்தி து.பிரதீபன் அவர்களுக்கும், புத்தகப்பணியை ஒட்டுமொத்தமாகக் கையேற்று தம்பணியாகவே கருதிச் செயற்பட்ட திரு.த.விவானந்தராசா அவர்களுக்கும், மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலரை உரிய நேரத்தில் சிறப்புற அச்சிட்டு எமது வெளியீட்டிற்கு ஒத்துழைத்த குமரன் புத்தக இல்லத்தினருக்கும் குருவருளும், இறையருளும் வேண்டிப் பிரார்த்தித்து நன்றி கூறுகின்றோம்.

மேலும் ஆரவாரமற்று அமைதியாய்ப் பெய்து அனேக நறுமலர்களை மலரவைக்கும் பனிபோல் அவ்வப்போது மனந்தளராது இயங்கி இப்பணியை ஓங்கவைத்ததுடன் இப்பணிக்கு வேண்டிய நிதியுதவிகளையும் தாராளமாகத் தந்துதவிய அன்புச் சகோதரர்கள் அனைவருக்கும் எமது நன்றிப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை ஸ்ரீசாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய மும்மணிகளினதும் பேரருள் நம் அனைவருள்ளும் கலந்து, நம் உணர்வை ஓங்கச் செய்வதாகுக.

மலர்க்குழு சார்பில்
**தேசமான்ய கண. வரதராஜன் J.P**
இராமகிருஷ்ண குருகுல பழைய மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரில்லப் பாடல்

ஆக்கம்:-பண்டிதர் வி.சி.கந்தையா

பல்லவி

அருளமுதம்நிறை ஸ்ரீராம கிருஷ்ண
அண்ணலை என்றென்றும் வாழ்த்துவமே (அருளமுதம்)

அநுபல்லவி

பெருநிலை ஞானி பரமஹம்சர்
பேரொளி சாரதை அன்னை அவர்
திருவுறு தீரவி வேகானந்தர்
சேர்ந்ததோர் குருமகராசரவர்
வாழ்க, வாழ்க, வாழ்க.
குருதேவர் திருவடி வாழ்க. (அருளமுதம்)

சரணம்

மலரினில் நறுமணமாகி உயர்
மணிகளில் நிறைந்திடு பேரொளியாய்
உயிரினுக்குள்ளுறை உயிராகி அதன்
உள்ளொளிர் பேருணர்வது வாகி
பலமத சங்கமம் ஒன்றான
பரம்பொருள் ஒன்றெனப் பகர் பெரியோய்
இலகிடுமாணவர் இல்லமுறைந் (து)
எமைவளர் நின்பதம் வாழ்த்துகின்றோம்
வாழ்க, வாழ்க, வாழ்க.
குருதேவர் திருவடி வாழ்க. (அருளமுதம்)

மாணவரில்லப் பெருங்கோயில்
வந்துறை தவமே வாழ்த்துகின்றோம்
ஆணவம் தீமை அவை அகற்றி
அருளொளி வளர்த்தோய் வாழ்த்துகின்றோம்
தீனருக் கருளொடு செம்மை அறம்
சேர்த்திடு திருவே வாழ்த்துகின்றோம்
மாணுடை அறிவு கல்வி பொறை
வளருக எமக்கென வாழ்த்துகின்றோம்.
வாழ்க, வாழ்க, வாழ்க.
குருதேவர் திருவடி வாழ்க. (அருளமுதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடலையில் எழுந்திடு பெருங்கழகம்
சூழ்ந்த நம் மாணவர் வாழ்நிலையம்
திருவுறை நிலைஎன எழிலோங்கத்
திரண்டுள பெரியோர் வாழ்வுறுக
இடமுற எமை வளர் பெருந்துறவோர்
ஏற்றெமை மதிபுகழ் நல்லாசார்
பெருநலமுறை எமை வாழ்த்துகின்றார்
பேரருளாளனே வாழ்த்துகின்றோம்
வாழ்க, வாழ்க, வாழ்க.
குருதேவர் திருவடி வாழ்க. (அருளமுதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் பெரிய அறிவாளியுமல்ல,
பெரிய திறமைகளும் எனக்கில்லை,
ஆனால் பணித்த பணிகளைச்
செய்து முடிக்கின்ற
பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின்
வேலைக்காரன் மட்டுமே!

Printed by Kumaran Press (Pvt) Ltd

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org